வெளியீடு 27-9-2005

Issued 27-9-2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 13, 2005—தொகுதி 83

Wednesday the 13th April, 2005—Volume 83

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Assembly Secretariat, Chennai - 600 009

V2 11, 31 ' 805
P05.83
18 62 81

[Price Rs. 3.00

574
21.2.06

13–4–2005

## உள்ளடக்கம்

பக்கங்கள்

ஆளுநரும் அமைச்சரவையும் — v-ix

Governor and Council of Ministers — xi-xiv

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் — xv-xvii

பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) — xix-xxix

**1. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—** — 1

**2. இரங்கற் குறிப்பு—**

முன்னாள் உறுப்பினர் மறைவு — 1-2

**3. வினாக்கள்–விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் — 2-52

(ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 15 முதல் 18 வரை) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) — 52,163-623

(இ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 19) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) — 52,624-705

**4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 53

**5. அரசினர் தனித் தீர்மானம்—**

திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோருதல் — 54-57, 69-70,71

பக்கங்கள்

**6. விதி 110-ன்கீழ் அறிக்கை—**

விவசாயிகள், நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் பயன்பெறும் வட்டி குறைப்புத் திட்டம் — மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை — 57-64

**7. கவன ஈர்ப்பு—**

(அ) சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் புறவழிச் சாலை அமைத்தல் — 64-66

(ஆ) புதுக்கோட்டை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியை மாவட்டச் சிறைச்சாலையாக மாற்றுதல் — 66-68

(இ) சேது சமுத்திரத் திட்டம் — இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தடையாணையை நீக்குதல் — 68,70-73

(ஈ) நீலகிரி மாவட்டம், கேத்தி ஊராட்சி, ஹாலன் நகர மக்களுக்குப் பாதை வசதி அளித்தல் — 74-77

(உ) கன்னியாகுமரி, கலிங்கராஜபுரம், கயிறு மற்றும் கயிறு பாய் சிறுதொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் — 77-81

(ஊ) சுமார் ரூ.14 கோடி மதிப்புள்ள சந்தன மரத்தூள்—செம்மரக் கட்டைகள் மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தால் கைப்பற்றப்பட்டது — 81-84

(எ) எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் சாலை — மதுரகாளியம்மன் கோயில் வரை தார்ச் சாலையைப் புதுப்பிக்கக் கோருதல் — 84-87

(ஏ) விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று, அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 79 வரை) (இணைப்பாகச் சேர்க்கப்பட்டுள்ளது) — 81,706-775



பக்கங்கள்

**8. அரசினர் தீர்மானங்கள்—**

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் — 88

(ஆ) பேரவை விதி 25(1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல் — 158

**9. அறிவிப்பு—**

தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.) — 89

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—**

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 89-93

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 89,91,92

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 89-91

(ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 93-95

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 93,94,95

திரு. சி. ஞானசேகரன் — 93-94

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 96-117

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் — 96,99,100-101, 102103,104,105, 106,108,110, 111,112,113, 114-115,117

திரு. கு. பிச்சாண்டி — 96-97,98,99, 100,101-102

திரு. ஜி.கே. மணி — 102-104,106, 115,116

திரு. க. பாரமலை — 106-108

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 108-111,112

பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005—தொடர்ச்சி

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 97-98,110, 112,113 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 112-113,114 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 114 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 115 |

(ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005
(உ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 — 117-147

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் | 117,118,120-121, 122,128,143-144, 145,147 |
| திரு. ப. ரங்கநாதன் | 118-120 |
| *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 124,126, 129-130,131-132, 135,137, 140-141 |
| *திரு. எஸ். ஜி. வினாயகமூர்த்தி | 126-127,129, 132-133 |
| திரு. கே. மகேந்திரன் | 133-135 |
| திரு. ஐ. கணேசன் | 135-138 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 136 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 138-139 |
| திரு. எச். ராஜா | 139-140 |

11. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்— 147-158

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 159-161


18528
சென்னை-600 009
...லகம்



D
V211,31605
P05.83

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

**4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல்.

**5. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:**

உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு, புள்ளியியல் மற்றும் கூட்டுறவு.

**6. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

**7. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

**8. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

**9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.



**10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியி..., கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

**11. போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்-பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு.

**12. தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

**13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

**14. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

**15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:**

கால்நடை பராமரிப்பு.

**16. வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

**17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

**18. கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டோர் மற்றும் வணிக வரிகள்.

**19. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

**20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

**21. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:**

மீன்வளம்.

**22. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.



**23. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:**

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு

**24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:**

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

**25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

- - -

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Selvi J Jayalalithaa:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare.

2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** .. **The Hon. Thiru O. Panneerselvam:**

   Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of Corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports.

3. **Minister for Finance** .. **The Hon. Thiru C. Ponnaiyan:**

   Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies.

4. **Minister for Law and Information Technology** .. **The Hon. Thiru D. Jayakumar:**

   Law, Courts and Information Technology.

5. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru Pollachi V. Jayaraman:**

   Food, Civil Supplies, Consumer Protection, Price Control, Statistics and Co-operation.

6. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru P.C. Ramasamy:**

Hindu Religious and Charitable Endowments.

7. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. P. Vijayalakshmi Palanisamy:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

8. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

9. **Minister for Rural Industries** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries and Khadi & Village Industries Board.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport and Electricity** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Electricity and Non-conventional Energy Development.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Agriculture** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

14. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Education and Commercial Taxes** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees, Evacuees and Commercial Taxes.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Labour** .. **The Hon. Thiru P. Annavi:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

- - -



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாஸ்னபுமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. அ. அன்வர் ராஜா

திருமதி சி. எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

முனைவர் செ.கு. தமிழரசன்

### செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

# 2-2-2005 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. சு. பாலசந்தர், பி.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே.எஸ். சந்திரசேகர், பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. ஆறுமுகம், பி.எஸ்ஸி. | - சார்புச் செயலாளர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. அ. நவாப்ஜான், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |

# பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | .. பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செவ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
50. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
51. கணேசன், திரு. வி. .. மங்களூர் (செ.வ.)
52. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
53. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
54. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
55. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
56. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
57. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
58. கருப்பண்ன், திரு. கே.சி. .. பவானி
59. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
60. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
61. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
62. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
63. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
64. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
65. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2

| | | |
|---|---|---|
| 66. | காளிமுத்து, டாக்டர் கா. | .. திருமங்கலம் |
| 67. | கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. | .. அரூர் (செ.வ.) |
| 68. | கிருஷ்ணன், திரு. ஆர். | .. அந்தியூர் (செ.வ.) |
| 69. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. கிள்ளியூர் |
| 70. | குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. | .. ஆண்டிமடம் |
| 71. | கோதண்டராமன், திரு. ஜி. | .. முகையூர் |
| 72. | கோபிநாத், திரு. கே. | .. ஓசூர் |
| 73. | கோவிந்தசாமி, டாக்டர் ஆர். | .. விருத்தாசலம் |
| 74. | கோவிந்தராஜ், திரு. வெ. | .. கிருஷ்ணகிரி |
| 75. | கோவை தங்கம், திரு. | .. வால்பாறை (செ.வ.) |
| 76. | சக்திவேல் முருகன், திரு. எம். | .. அம்பாசமுத்திரம் |
| 77. | சக்ரபாணி, திரு. ஆர். | .. ஒட்டன்சத்திரம் |
| 78. | சசிகலா, திருமதி ஆர். | .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 79. | சண்முகநாதன், திரு. எஸ்.பி. | .. ஸ்ரீவைகுண்டம் |
| 80. | சண்முகம், திரு. சி. | .. பூந்தமல்லி |
| 81. | சண்முகம், திரு. சி.வி. | .. திண்டிவனம் |
| 82. | சண்முகவேலு, திரு. சி. | .. உடுமலைப்பேட்டை |
| 83. | சந்தானம், திரு. லா. | .. உசிலம்பட்டி |
| 84. | சந்திரசேகரன், திரு. எம்.எஸ். | .. இராணிப்பேட்டை |
| 85. | சந்திரமோகன், திரு. நா. | .. சீர்காழி (செ.வ.) |
| 86. | சந்திரன், திரு. வீ. | .. சிவகங்கை |
| 87. | சம்பத், திரு. எம்.சி. | .. நெல்லிக்குப்பம் |
| 88. | சரவணன், திரு. துரை. கி. | .. சிதம்பரம் |
| 89. | சரோஜா, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆவா.) |



| | | |
|---|---|---|
| 90. | சாமி, திரு. ஆர். | .. மேலூர் |
| 91. | சாமிநாதன், திரு. மு.பெ. | .. வெள்ளக்கோவில் |
| 92. | சிதம்பரம், திரு. ப. | .. பவானிசாகர் |
| 93. | சிவகாமி, திருமதி வி. | .. தாராபுரம் (செ.வ.) |
| 94. | சிவசாமி, திரு. கே.கே. | .. அருப்புக்கோட்டை |
| 95. | சிவசாமி, திரு. சி. | .. திருப்பூர் |
| 96. | சிவசுப்பிரமணியன், திரு. டி.என். | .. கரூர் |
| 97. | சிவபுண்ணியம், திரு. வை. | .. மன்னார்குடி |
| 98. | சிவபெருமாள், திரு. அ. | .. ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 99. | சிவராஜ், திரு. சு. | .. ரிஷிவந்தியம் |
| 100. | சின்னசாமி, திரு. மா. | .. பழனி (செ.வ.) |
| 101. | சீனிவேல், திரு. எஸ்.எம். | .. திருப்பரங்குன்றம் |
| 102. | சுதர்சனம், திரு. டி. | .. திருவள்ளூர் |
| 103. | சுந்தரம், திரு. பி.ஆர். | .. ராசிபுரம் |
| 104. | சுந்தராம்பாள், திருமதி செ. | .. மேட்டூர் |
| 105. | சுப்பிரமணியன், திரு. வீ. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 106. | சுப்பையா பாண்டியன், திரு. எம். | .. கடையநல்லூர் |
| 107. | சூரியகலா, திருமதி சி.எம். | .. குடியாத்தம் |
| 108. | செம்மலை, திரு. செ. | .. ஓமலூர் |
| 109. | செல்லையா, திரு. வி.ஏ. | .. மருங்காபுரி |
| 110. | செல்வம், திரு. எஸ்.கே. | .. வீரபாண்டி |
| 111. | செல்வராஜ், திரு. ஏ.கே. | .. மேட்டுப்பாளையம் |
| 112. | செல்வி முருகேசன், திருமதி | .. காங்கேயம் |
| 113. | சேகரன், திரு. கே.என். | .. திருவெறும்பூர் |

114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், முனைவர் செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி.. பேராவூரணி
128. துரைமுருகன், திரு. .. காட்பாடி
129. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
130. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
131. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
132. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
133. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
134. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
135. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
136. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு



137. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
138. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
139. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
140. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
141. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
142. பச்சைமால், திரு. கே.டி. .. குளச்சல்
143. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
144. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
145. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
146. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
147. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
148. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
149. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
150. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
151. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
152. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
153. பாப்பாசுந்தரம், திரு. அ. .. குளித்தலை
154. பாரமலை, திரு. சு. .. மானாமதுரை (செ.வ.)
155. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்

158. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
159. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
160. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
161. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
162. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
163. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
164. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
165. பூவராகமூர்த்தி, திரு. ஏ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
166. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திகுளம்
167. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி
168. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. டி.பி. .. சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
174. மஹேஸ்வரி, திருமதி எ.எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
176. மணி, திரு. டி. .. விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி .. முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



181. மில்லர், திரு. அ. .. கூடலூர்
182. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
193. ராதாரவி, திரு. .. சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. .. மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்

| | | |
|---|---|---|
| 204. | லட்சுமணன், திரு. வி.கே. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 205. | லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. | அரவக்குறிச்சி |
| 206. | வடிவேல், திரு. ஆர். | வாணியம்பாடி |
| 207. | வளர்மதி, திருமதி பா. | ஆலந்தூர் |
| 208. | வளர்மதி ஜெபராஜ், திருமதி | மதுரை மேற்கு |
| 209. | வள்ளல் பெருமான், டாக்டர் பி. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 210. | வாசுதேவன், திரு. பெ. | மதுராந்தகம் |
| 211. | விசுவநாதன், திரு. இரா. | நத்தம் |
| 212. | வில்வநாதன், திரு. இரா. | சோளிங்கர் |
| 213. | வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. | பூங்கா நகர் |
| 214. | விஜயபாஸ்கர், டாக்டர் சி. | புதுக்கோட்டை |
| 215. | விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. | பனமரத்துப்பட்டி |
| 216. | வீரபாண்டியன், திரு. ஜெக. | மயிலாடுதுறை |
| 217. | வெங்கடாசலம், திரு. அ. | ஆலங்குடி |
| 218. | வெங்கடாஜலம், திரு. செ. | சேலம்-1 |
| 219. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | வேதாரண்யம் |
| 220. | வேலு, திரு. எ.வ. | தண்டராம்பட்டு |
| 221. | வேலுசாமி, திரு. செ.ம. | பல்லடம் |
| 222. | வேல் முருகன், திரு. தி. | பண்ருட்டி |
| 223. | வைதியலிங்கம், திரு. மீ.அ. | தாம்பரம் |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | ஒரத்தநாடு |
| 225. | ஜீவானந்தம், திரு. இரா. | நாகப்பட்டினம் |
| 226. | ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | ஆரணி |



| | | |
|---|---|---|
| 227. | ஜெயக்குமார், திரு. கு. | நாமக்கல் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | இராயபுரம் |
| 229. | ஜெயலலிதா, செல்வி ஜெ | ஆண்டிப்பட்டி |
| 230. | ஸ்டாலின், திரு. மு.க. | ஆயிரம் விளக்கு |
| 231. | ஹக்கீம், திரு. எம்.ஏ. | மதுரை மத்தி |
| 232. | ஹேமச்சந்திரன், திரு. ஜே. | திருவட்டாறு |
| 233. | (வெற்றிடம்) | காஞ்சிபுரம் |
| 234. | (வெற்றிடம்) | கும்மிடிப்பூண்டி |
| 235. | சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | (நியமனம்) |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | |
|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

- - -

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 31, தாரண — திருவள்ளுவர் ஆண்டு 2036

## 2005 ஏப்ரல் 13, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஒல்வது அறிவது அறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாதது இல்"

செய்யக்கூடிய செயலைக் குறித்து, ஒருவர் அறிய வேண்டியவற்றையெல்லாம் அறிந்து, அவற்றிலே தம் முழுக் கவனத்தையும் செலுத்தி, மேற்கொண்டு முயலுபவருக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை.

## 1. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கற் குறிப்பு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். என்ன இது? கொஞ்சம்கூட விவரம் தெரியாமல் இருக்கிறீர்கள்!

## 2. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை முன்னாள் உறுப்பினர் திரு. எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள், 11–4–2005 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம்.பி. சுப்பிரமணியம் அவர்கள் சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952 முதல் 1957 வரை மற்றும் 1957 முதல் 1962

வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார். மேலும், 1983 முதல் 1986 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)*

## 3. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 341, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**341—**

### கால்நடை மருத்துவமனை

***53924—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, தேவஸ்தானம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, தேவஸ்தானம் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும்





குறைவாக உள்ளதாலும், இதன் அருகில் 1 கி.மீ. தூரத்தில் ஜாப்ராபாத் கால்நடை கிளை நிலையமும், 4 கி.மீ. தூரத்தில் வாணியம்பாடி கால்நடை மருத்துவமனையும், 6 கி.மீ. தூரத்தில் வடசேரி கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், தற்போது கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், தேவஸ்தானம் கிராமத்தில் நேரடியாக புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை என்பதைக் கனிவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழிப்பேரலை சுனாமி இயற்கைச் சீற்றத்தால், நொந்திட்ட நெஞ்சங்கள் தந்திட்ட கடமையினை, செவ்வனே செய்திட்ட செந்தமிழ் அன்னையே நீவிர் அமர்ந்து இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், கால்நடைகளுடைய வசதிக்காக, கால்நடை மருந்தக நிலையங்களில், ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் உள்ள கால்நடைகளின் வசதிக்காக, கடந்த ஆண்டு 306 கால்நடைக் கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தி, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது. எனவே, எனது பேரணாம்பட்டு தொகுதியில் உள்ள வடசேரி கால்நடை மருந்தகத்தை, அனைத்து வசதிகளுடன் கூடிய கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய நான் விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனையாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் கால்நடை மருந்தகங்களைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையில், வடசேரி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

[2005 ஏப்ரல் 13

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அம்மா அவர்களிடம் ஆலோசனை பெற்று, சிறப்பான முறையிலே பணியாற்றி வருகிறார்கள். பல்வேறு பருவ காலங்களில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் பரவுகின்றன. மாடுகளுக்கு வெக்கை நோய் அடைப்பான், ஆடுகளுக்கு ஆட்டம்மை துள்ளுமாரி, நாய்களுக்கு வெறி நாய்க்கடி—distemper, கோழிகளுக்குக் கோழிக் காய்ச்சல், கோழி அம்மை போன்ற நோய்கள் பரவுகின்றன. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைச் செல்வங்களுக்கு அடைப்பான் நோய் வருவதால் கிராமப்புற மக்களுக்கு பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. ஆகவே என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில், குறிப்பாக வேலூர் மாவட்டத்தில் கால்நடைகளை பாதிக்கும் அடைப்பான் நோய்க்கு நடப்பாண்டில் தடுப்பூசி போடப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் அடைப்பான் நோயினைக் கட்டுப்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு 19.11 இலட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இவ்வாண்டு 115.85 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதியிலும் நடப்பாண்டில் கால்நடைகளுக்கு அடைப்பான் நோய்க்கு தடுப்பூசி போடப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கபிலர்மலை தொகுதியில் வேலூர் கால்நடை மருத்துவமனைக்கு சுமார் 27 இலட்சம் ரூபாயிலும், பரமத்தி கால்நடை கிளை மருத்துவமனைக்கு சுமார் 25 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டடம் மற்றும் தளவாடச் சாமான்கள், கெல்லிஸ் ஆகியவை கட்டுவதற்காக மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சரிடம் கோரிக்கை வைத்திருந்தேன். அவர்கள் அதை நபார்டு திட்டத்திலே ஏற்று இந்த ஆண்டு கட்டிக் கொடுக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முழுவதும் சுமார் 300 கால்நடை மருத்துவமனைகளுக்கு நபார்டு வங்கித் திட்டத்தின்கீழ் அனுமதி



2005 ஏப்ரல் 13]

அளித்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு, இந்தப் பணி எப்போது ஆரம்பித்து, எப்போது முடிவுபெறும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையின் மருத்துவ நிலையக் கட்டடம் மற்றும் உபகரணங்கள் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 60 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இப்பணிகள் இவ்வாண்டு மே மாதத்தில் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். தென்னரசு.

**திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு தொகுதியில் முத்தம்பாளையம் கிளை நிலையத்தை மருந்தகமாக உயர்த்திக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அதேபோல பெரியசேமூர் கிளை நிலையத்தை மருந்தகமாக உயர்த்திக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் உறுதி தந்திருக்கிறார்கள்; அதற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கந்தம்பாளையம் ரகுபதிநாயக்கன்பாளையம் ஆகிய பகுதிகளில் பகுதிநேர கிளை நிலையமாவது தொடங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவுடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த ஆண்டு, அவருடைய முத்தம்பாளையத்தில் உள்ள கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியின்படியும், அம்மா அவர்களுடைய ஆலோசனையின்படியும், வழிகாட்டுதலின்படியும் அவர்களுக்கு உடனடியாக அந்தக் கிளை நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்திக் கொடுத்துள்ளோம். அதைப்போலவே இந்த கந்தம்பாளையம் மற்றும் அவர் கேட்டுள்ள கிராமங்களுக்கு எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டில் கால்நடை கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளார்கள். ஆகவே அந்த

வகையிலே அங்கே கருவூட்டல் கிளை நிலையம் ஒன்று அமைத்துக்கொடுக்க அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. வில்வநாதன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் கால்நடைகள் அனைத்தும் நல்ல முறையிலே பராமரிக்கப்பட்டு வருகின்றன. கால்நடை மருந்தகங்கள் அனைத்தும் தரம் உயர்த்தப்பட்டு, கால்நடைகள் நலன் பெறுகின்ற வகையிலே அனைத்து மருந்தகங்களும் தரம் உயர்த்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. இருந்தாலும் கிராமப்புறங்களிலே 8 கிலோ மீட்டருக்கு ஒரு இடத்திலேதான் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என்ற விதியைத் தளர்த்தி கிராமப்புறங்களிலே கால்நடை மருந்தகங்கள் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். இதைப்போல பல்வேறு மாமன்ற உறுப்பினர்களும் இந்த வினாவைக் கேட்டுள்ளார்கள். ஆகவே, இந்த நிதியாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே சொல்லி, இந்த 8 கிலோ மீட்டர் தூரத்தை, 5 கிலோ மீட்டர் தூரமாக மாற்றுவதற்குண்டான வழிவகைகளைச் செய்து கொடுத்து, மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆணையின் பேரில், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அம்மா அவர்களுடைய அரசு பரிசிலிக்கும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. இராஜரெத்தினம்.

**திரு. ப. இராஜரெத்தினம்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி, பெரம்பலூர் ஒன்றியத்திலே, கீழக்கணவாய், தம்புரான்பட்டி,



ரெங்கநாதபுரம் ஆகிய பகுதிகளிலே, மிக அதிகமாக உள்ள கால்நடைகளினுடைய எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு புதிதாக பகுதி நேரக் கால்நடைக் கிளை நிலையத்தை ரெங்கநாதபுரத்திலே தொடங்க முன்வருவாரா, ஆவன செய்வாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியவாறு, ரெங்கநாதபுரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே அனுமதியைப் பெற்று, அவருடைய ஊருக்கு மட்டுமல்ல, மற்ற மாமன்ற உறுப்பினர்களும் கேட்டுள்ளவாறு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் கேட்டுள்ளவாறு, அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரிலும், அம்மா அவர்களுடைய அனுமதியின் பேரிலும், நிச்சயமாக கால்நடைக் கிளை நிலையங்கள் தொடங்க, இந்த நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப, பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 342, திரு. ராதாரவி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**342—**

**பயிற்சிப் பள்ளி**

***31515—திரு. ராதாரவி:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை குதிரை ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி மாணவர்கள் பயிற்சி செய்வதற்காக கிண்டி பூங்காவைப் பயன்படுத்தியதை வன இலாகாவினர் தடை செய்துள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) வன உயிரின (பாதுகாப்புச்) சட்டம் 1972–க்கு எதிராக உள்ளதால், அரசால் அனுமதி அளிக்க இயலாது.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளி என்பது, ஜவஹர்லால் நேரு அவர்களால் 14–4–1959–ல் திறக்கப்பட்டது. முதலில் Guindy Park Reserve Forest ஆக இருந்தபோதும், பிறகு, Guindy Park, National Park under Wild Life Protection Act ஆக ஆனபோதும், ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு மேலாக இது நடந்து கொண்டிருக்கிறது. அதேபோல, 1976 ஆம் ஆண்டு தடை செய்தார்கள். 1983 ஆம் ஆண்டில் G.O. போட்டு உத்தரவு தந்துள்ளார்கள். அந்த அடிப்படையில் உத்தரவுதர அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்ற ஆணைப்படி, தேசிய பூங்கா, சரணாலயம் போன்ற பகுதிகளில் எந்தவிதமான நடவடிக்கையும் இருக்கக் கூடாது என்று தீர்ப்புக் கூறியிருக்கின்றது. அதன்படி, இங்கே இதற்கு அனுமதி கொடுக்க இயலாது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி, நீங்கள் குதிரை ஓட்டுவீர்களா? (சிரிப்பு)

**திரு. ராதாரவி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிற்சிப் பள்ளியானது மாணவர்களுக்கு மட்டுமல்ல—குதிரை சவாரி கற்றுக் கொடுக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல—Chennai Mounted Police Branch–ஐ சேர்ந்தவர்களுக்கு Dressage, Jumps போன்ற நல்ல Training–ஐக் கொடுக்கக்கூடிய பயிற்சிப் பள்ளி இது. அதனால், உச்ச நீதிமன்றத்தில் இப்படி ஒரு தடையைப் போட்டிருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை அணுகி, பரிசீலித்து, நல்ல முடிவினைச் சொல்வார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதங்களைத் தொட்டு என்னுடைய நன்றியைத்



2005 ஏப்ரல் 13]

தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்கிணங்க இதுபோன்ற வனப் பகுதிகளை இன்று பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கிறது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். இது, புதிதாக யாராவது ஒரு வனப் பகுதிக்கு உள்ளே புகுந்து, ஒரு ஆக்கிரமிப்பைச் செய்து, அதைப் பயன்படுத்துவார் என்று சொன்னால்தான், அப்படிப்பட்ட உத்தரவுகள் அமலுக்கு வருமேயொழிய, ஏற்கெனவே, தீர்ப்பு வருவதற்குப் பல்லாண்டு காலத்திற்கு முன்பேயிருந்து அது பழக்கத்திற்கு வந்து, அந்த இடத்திலே பயிற்சிகள் நடந்திருக்குமேயானால், அதை எந்த உச்ச நீதிமன்றமும் தடுப்பதில்லை. சொல்லப்போனால், அந்த வாகனங்களிலேயிருந்து ஏதாவது புகை போன்றவையெல்லாம் வந்து, மாசு ஏற்படுத்துமேயானால், அது வனத்தைப் பாதிக்கும். ஆனால், குதிரை எந்த மாசையும், அந்த இடத்தில் உற்பத்தி செய்யப் போவதில்லை. அது கெடுக்கப்போவதுமில்லை. அது, வனத்திற்கு இன்னும் கொஞ்சம் அழகூட்டுமே தவிர, அது வனத்தை எந்தவகையிலும் கெடுக்காது என்கிற காரணத்தினாலே, அமைச்சரே, இந்தத் துறையின்மூலமாக, அதற்கான அனுமதியை வழங்கலாம். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அதற்கு ஒரு தடையாக இல்லவே இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதைப் பரிசீலித்து மீண்டும் இந்தப் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு, அந்த இடத்தில் குதிரை ஓட்டுகின்ற பயிற்சியை நடத்துவதற்குத் தொடர்ந்து அனுமதியை அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–15

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குதிரை சவாரி செய்வதால், அங்கே இருக்கின்ற விலங்குகள், உணவு உண்ணும் நேரத்தில், பாதிப்புக்குள்ளாகின்றன. மேலும், நோய்கள் ஏற்படுவதற்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும், உச்ச நீதிமன்றமானது, சரணாலயம், தேசிய பூங்காக்களில், ஒரு புல் பூண்டை பிடுங்குவதற்குக்கூட அனுமதி கொடுப்பதற்கு இப்போது தயாராக இல்லை. கடுமையான ஆணையைப்

பிறப்பித்திருக்கிறது. அதனால், உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெறவேண்டும். அதற்குத்தான், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, சட்டத்திற்குட்பட்டு, உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுத்தான் இந்தப் பயிற்சிக்கு அனுமதி கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 343, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**343—**

## கலைக் கல்லூரி

***10450—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டையில், அரசினர் ஆண்கள் கலைக் கல்லூரி அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராணிப்பேட்டையில், கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேலூர் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 35 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அங்கே வசிக்கின்றார்கள். இந்த மாவட்டத்தில் சுமார் 240 மேல்நிலைப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றின்மூலமாக, ஆண்டுதோறும், பிளஸ் டூ படிக்கின்ற மாணவ, மாணவியரின் எண்ணிக்கையில், சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் தேர்வில் கலந்துகொள்கிறார்கள். சுமார் 18 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் தேர்வு பெறுகின்றார்கள். அவ்வாறு தேர்வு பெறுகின்றவர்களில் மாணவர்களின் எண்ணிக்கை மாத்திரம், 14 ஆயிரத்திற்கு மேற்பட்டு இருக்கிறது. இந்தத் தேர்ச்சி பெற்ற 14 ஆயிரம்



மாணவர்களில், கிட்டத்தட்ட 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள், பொறியியல் கல்லூரிகளிலே சேருகின்ற வாய்ப்பு இருக்கிறது. அப்படி மீதமிருக்கின்ற வெற்றி பெற்ற 7 ஆயிரம் மாணவர்கள், கலைக் கல்லூரிகளில்தான் சேர வேண்டிய நிலைமைகள் அங்கே இருக்கின்றன. இந்த மாவட்டத்தில், ஆண்கள் கலைக் கல்லூரியாக தனியார் கலைக் கல்லூரிகள், அரசினர் கலைக் கல்லூரிகள் என்று இப்படி 6 கலைக் கல்லூரிகள் அங்கே இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றின்மூலமாக, சுமார் 3 ஆயிரம் மாணவர்கள் சேர்கின்ற நிலைமை அங்கே இருந்து கொண்டிருக்கிறது. மீதமிருக்கின்ற 4 ஆயிரம் மாணவர்கள், கலைக் கல்லூரியில் சேர வேண்டுமென்று சொன்னால், வெளி மாவட்டத்திலே இருக்கின்ற கலைக் கல்லூரியிலே சேருவதற்கு அவர்களுக்குப் போதிய வசதி இல்லாத சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், இராணிப்பேட்டை தொகுதியிலே இருக்கின்ற, தொழிலாளர் குடும்பங்களின் மாணவர்கள் எல்லாம், வெளியிலே சென்று சேர முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தினால், இராணிப்பேட்டை தொகுதியில், அரசினர் கலைக் கல்லூரி அமைப்பதற்கு அரசு மறு பரிசீலனை செய்யுமா; ஆவன செய்யுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைக் கல்லூரிகள் ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல்கலைக்கழகங்கள், தங்களுடைய உறுப்புக் கல்லூரிகளாக, பல்கலைக்கழகங்களே ஆரம்பித்துக் கொள்ளலாம் என்ற அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அதனால், இராணிப்பேட்டை பகுதியிலே, அந்தத் தேவையின் அடிப்படையிலே, கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்றால், அந்தப் பல்கலைக்கழகங்கள், கல்லூரி ஆரம்பிப்பதற்கு முன்மொழிவு தந்தால், அரசு அதுபற்றிச் சிந்திக்கும். அதேபோன்று, வேலூர் மாவட்டத்திலே, 6 கலைக் கல்லூரிகள்தான் இருக்கின்றன என்று சொன்னார்; அது தவறு. 3 அரசுக் கல்லூரிகளும், 7 அரசு உதவிபெறும் கல்லூரிகளும், 10 சுயநிதிக் கல்லூரிகளும் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், சுயநிதி அடிப்படையிலே யாராவது கல்லூரி திறப்பதற்கு முன்வந்தால், அரசு அதை ஆராய்ந்து அனுமதி வழங்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இராஜசேகர். (குறுக்கீடு) திரு. சந்திரசேகரன், கேளுங்கள்.

[2005 ஏப்ரல் 13

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்கள் கலைக் கல்லூரிகள் 4 இருக்கின்றன; மொத்தம் 10 கலைக் கல்லூரிகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் அறிவேன். நான் கேட்பதெல்லாம், பல்கலைக்கழகங்கள்தான் ஆவன செய்ய வேண்டுமென்று சொன்னால், இன்றைக்குப் பொது மக்கள் எல்லாம் நம்மிடம்தான் கோரிக்கையினை வைக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பல்கலைக்கழகத்திற்கு, மீண்டும் அங்கு கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அறிவுரை வழங்குவார்களா; அதற்கு வழிவகைகள் செய்ய அரசு விதி இருக்கிறதா என்பதை நான் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–20

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்றால், தேவையிருப்பின் அந்தப் பல்கலைக்கழகம் அரசுக்கு முன்மொழிவு தந்தால், அதை ஆராய்ந்து அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராஜசேகர்.

**திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் ஒரு கலைக் கல்லூரி தொடங்கப்பட வேண்டுமென்றால், அந்தந்தப் பல்கலைக்கழகங்கள்தான் முடிவு செய்ய வேண்டுமென்று கூறியிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் அப்படி பல்கலைக்கழகங்கள், அந்தந்தப் பகுதிக்குட்பட்ட பல்கலைக்கழகங்களால், அரசு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டும் என்று அரசுக்கு இதுவரை பரிந்துரைகள் அனுப்பப்பட்டுள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையின் அடிப்படையிலே அந்தப் பகுதியிலே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று பல்கலைக்கழகங்கள் பரிந்துரை செய்தால், அரசு அதைப் பற்றி சிந்தித்து செயல்படுத்தியிருக்கிறது. குறிப்பாக, ஆண்டிப்பட்டியிலே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று அந்தப் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்த பிறகு, அதற்கு அரசு நிதி உதவி வழங்கியிருக்கின்றது.



2005 ஏப்ரல் 13]

அதேபோன்று, சாத்தான்குளத்திலே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று அந்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அரசுக்குப் பரிந்துரை செய்ததன் பேரில் அரசு நிதியுதவி வழங்கியிருக்கின்றது. அதேபோன்று, கூடலூரிலே ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று பாரதியார் பல்கலைக்கழகம் பரிந்துரை செய்ததன் பேரிலே அரசு நிதியுதவி வழங்கியிருக்கின்றது. அதேபோன்று மற்ற பல்கலைக்கழகங்கள் தேவையின் அடிப்படையிலே அந்தப் பகுதியிலே அவசியம் ஒரு கலைக் கல்லூரி ஆரம்பிக்க வேண்டுமென்று அரசுக்கு முன்மொழிவு செய்தால் அதை அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் ஏழை எளிய மாணவர்கள் இளங்கலை அறிவியல் கல்வி மற்றும் முதுகலை அறிவியல் கல்வி படிக்க அரசு கல்லூரிக்கு செல்ல வேண்டும் என்று சொன்னால், புதுக்கோட்டை மற்றும் தஞ்சாவூர் பகுதிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அங்கே உள்ள அந்த அரசு கல்லூரிகளிலே போதிய இடம் இல்லாததால், மிக அதிகமான மாணவர்கள் இதிலே பாதிக்கப்படுகின்றார்கள். எனவே, அதுபோன்ற புதுக்கோட்டை, தஞ்சாவூர் அரசு கல்லூரிகளிலே கூடுதல் இடங்கள் ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர் சொல்லி விட்டார்கள். பல்கலைக்கழகம் பரிந்துரை செய்தால், அதற்குப் பிறகு அரசு பரிசீலிக்கும் என்று சொல்லிவிட்டார்கள். திரு. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நான் பேசியபோதுகூட இந்த மாதிரி கல்வித் தரத்திலே பின்தங்கி இருக்கக்கூடிய பகுதிகளுக்கு இது போன்ற கல்லூரியைத் தொடங்கி, அந்தக் கல்வி வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் கிடைக்குமா என்றுகூட மாண்புமிகு அமைச்சரிடத்திலே வினா எழுப்பினேன். பல்கலைக்கழகங்கள் இதற்கு முன்மொழிவுகள் கொடுத்தால்தான் இது திறக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது சாத்தான்குளம் தேர்தலிலேகூட அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தவறல்ல. அங்கே ஒரு கல்லூரி வேண்டும் என்று சொன்னார்கள். ஆக ஒரு பல்கலைக்கழகம்...

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை என்ன அறிவித்தாலும், பல்கலைக்கழகம் பரிந்துரை செய்ய வேண்டும். முன்மொழிவு அனுப்ப வேண்டும். (குறுக்கீடு) நடைமுறையைச் சொல்கிறார்கள் அவர்கள். திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகம்தான் முன்மொழிவு அனுப்ப வேண்டும் என்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தினார்கள். அதிலேயிருந்து நாங்கள் மாறுபடவில்லை. ஆனால், இராணிப்பேட்டை பகுதியிலே அங்கே ஆண்கள் கலைக் கல்லூரி ஏதுமில்லை என்ற கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சந்திரசேகரன் அவர்கள் வலியிறுத்தி, அங்கே தேவைப்படுகிறது என்று சொல்கிற காரணத்தினாலே, அரசே — ஏன் என்று சொன்னால், இதுபோன்ற கருத்துருக்களை—முன்மொழிவைப் பெறலாம் என்றுகூட அந்தப் பல்கலைக்கழகத்தினை வலியுறுத்தி, அங்கே ஒரு அரசு கலைக் கல்லூரி வேண்டும்— ஏனென்றால், பொதுவாக அரசு கலைக் கல்லூரி தொடங்க வேண்டும் என்கிற பாலிசியே இப்போது இல்லை. அரசாங்கம் நிறுத்தி வைத்திருக்கிறது. இது உங்கள் கொள்கையிலேயிருந்து கொஞ்சம் வேறுபட்டுச் செல்கிற காரணத்தினாலே, எந்தவொரு பல்கலைக்கழகமும் அவர்களாகவே ஒரு முன்மொழிவினை ஆரம்பிக்கமாட்டார்கள். ஆகவே ஒரு அரசு கலைக் கல்லூரி அனுப்ப வேண்டும் என்று சொன்னால், அரசேதான் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு தேவையை வலியுறுத்தி, அந்த இடத்திலே நீங்கள் முன்மொழிவை அனுப்புங்கள் என்று கேட்கலாம். ஏனென்றால் பல்கல்கலைக்கழமே உங்களிடம் தான் grant வாங்கி நடக்கிறது. ஆகவே நீங்களே ஏன் அதைச் செய்யக் கூடாது? அப்போது, சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதைப் பரிந்துரை செய்தால், அது நடைபெறாதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 344, திரு. ஆர். சாமி, மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்.

**344—**

## நூலகக் கட்டடம்

***40577—திரு. ஆர். சாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) மேலூர் நகரிலுள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மேலூரிலே நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே நூலகம் அமைப்பதற்கான கேள்வி. இதேபோல பல இடங்களிலே இருக்கிறது. மன்னார்குடியிலே 60 ஆண்டுகள் பழமை வாய்ந்த நூலகம் செயல்படுகிறது. ஆனால் வாடகைக் கட்டடத்திலே செயல்படுகிறது. பல ஆண்டுகளாக அந்தக் கோரிக்கையை வைத்திருக்கிறேன். இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்து நூலகத்திற்குக் கட்டடம் கட்டித் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் கட்டுவதற்குச் சொந்தமாக இடம் கொடுக்கப்பட்டிருந்தால், அங்கே நூலக நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு கண்டிப்பாக அரசு முன்வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி.

முற்பகல் 10–25

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குன்னூர் தொகுதி, உபதலை ஊராட்சி, வள்ளுவர் நகரில் நூலகக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து சென்ற ஆண்டு நிதி ஒதுக்கினேன், இதுவரை கட்டடம் கட்டவில்லை. அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகின்றேன்.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கொடுத்த பணத்தில் இன்னும் நூலகம் கட்டவில்லை என்று சொல்லியிருக்கின்றார். அதைக் கண்டிப்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. இளவழகன்.

**திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் போன்ற வட்ட அளவில் உள்ள பெரிய நூலகங்களுக்கு வந்து செல்லும் வாசகர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், இந்த வட்ட அளவில் உள்ள நூலகங்களைக் கணினிமயமாக்க ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இந்த மாவட்ட நூலகங்களைக் கணினிமயமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்தக் கட்டமாக கண்டிப்பாக அந்த வட்டார அளவிலே இருக்கின்ற நூலகங்களுக்கும் கணினிமயமாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கம் வளர்த்த மதுரை என்று சொல்லுவார்கள். அந்தச் சங்கத் தமிழ் வளர்த்த மதுரையிலே, மதுரை தமிழ்ச் சங்கம் என்று சொல்லி 4-வது தமிழ்ச் சங்கத்தை வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தொடங்கினார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் தெரியும். ஏற்கெனவே தென் மதுரையிலேயிருந்த தமிழ்ச் சங்கம் அழிந்ததற்குப் பின்னால் குமரி ஆற்றங்கரையிலேயிருந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன வேண்டும்? அதை மட்டும் கேளுங்கள்.

**திரு. கு. அன்பழகன்:** அந்த கபாலபுரம் அழிந்ததற்குப் பின்னால், அதற்குப் பின்னாலே இருக்கக்கூடிய இன்றைய மதுரையில், தமிழ்ச் சங்கத்தை வளர்த்தார்கள் என்ற வரலாறு இருக்கிறது. அதற்குப் பின்னாலே—பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னாலே வள்ளல் பாண்டித்துரைத் தேவர் அவர்கள், கம்பராமாயணமும், திருக்குறளும்



2005 ஏப்ரல் 13]

மதுரையிலே கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக மதுரை தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகனுக்கு என்ன செய்ய வேண்டும்?

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தமிழ்ச் சங்கத்திற்கு நம்முடைய மதிப்பீட்டுக் குழு அங்கே சென்று அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, தமிழ்ச் சங்கத்தினுடைய நூலகத்தைப் பார்வையிட்டு, நூலகத்திற்காக 5 இலட்சம் ரூபாயும், அங்கே இருக்கிற ஓலைச் சுவடிகளை நவீனப்படுத்துவதற்காக, பாதுகாப்பதற்காக 5 இலட்சம் ரூபாயும் ஒதுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தது. அதைக் கொடுத்திருக்கிறார்களா? அப்படி கொடுக்கவில்லையென்று சொன்னால் இப்பொழுது பரிசீலனை செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பழமைவாய்ந்த நூலகங்கள், குறிப்பாக தஞ்சாவூரில் இருக்கின்ற நூலகம், அதேபோன்று, மதுரையிலே இருக்கின்ற இந்த ஓலைச் சாவடிகளில் பதிப்பேடுகளை எடுப்பதற்காக அந்த ஆய்வுப் பணிகளைச் செய்வதற்கு மானியம் வழங்கவேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட கடந்த வாரம் ஒரு ஆலோசனைக் கூட்டத்தை இங்கே கூட்டியிருந்தார்கள். அதன்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரமணீதரன். (குறுக்கீடு) திரு. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் தந்தை என்று சொல்லக்கூடிய திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் பிறந்த ஊர் சீர்காழி தொகுதியாகும். அந்த சீர்காழி தொகுதியிலே பிறந்த திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் நூலகத் துறைக்கு ஒரு சிறந்த கோட்பாடாக, கோலன் classification என்ற ஒரு கோட்பாட்டை உருவாக்கி, அதன்மூலம் நூலகத் துறைக்கு பெரிய ஒரு சாதனைபுரிந்த அந்த நூலகத் தந்தை திரு. எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்கள் இருக்கின்ற அந்த இடத்திலே இதுநாள் வரையில் அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற நூலகம் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. அங்கு சொந்த நூலகக் கட்டடம்

கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்றால், அந்த நூலகத்திற்குத் தேவையான 5 சென்டோ, அதற்கு மேற்பட்ட இடத்தை அந்த நூலகத்திற்கு வாங்கிக் கொடுப்பார்களேயானால் கண்டிப்பாக அதற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகங்கள் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கினாலும்கூட மாநகராட்சியிடமிருந்தோ அல்லது பொதுப் பணித் துறையிடமிருந்தோ காலி மனைகளைப் பெறுவதிலே சிரமங்கள் இருப்பதை நான் அனுபவித்து வருகின்றேன். அதை நிவர்த்தி செய்து கொடுப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் துறையைப் பொறுத்த அளவிலே, நூலகத் துறைக்கு இடத்தைக் கொடுத்து, பத்திரம் கிரயம் செய்து கொடுக்கப்பட்டால்தான் நூலகக் கட்டடம் கட்டிக்கொடுக்கப்படுமே தவிர, கிரயம் செய்து கொடுக்கப்படாத இடத்திலே நிதி ஒதுக்கினால், அதற்கு நூலகத் துறை ஒன்றும் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விளக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத்திற்குக் கட்டடங்கள் கட்டுவது சம்பந்தமாக நம்முடைய கோவை மாவட்டத்திலே இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 60 நூலகங்களுக்குப் அனுமதி கொடுத்து, இப்போது தொடங்கப்பட்டு, நடைபெற்று வருகின்றது. என்னுடைய





உடுமலைப்பேட்டை தொகுதியைப் பொறுத்தவரை, 19 நூலகங்களுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கு enter-upon permission அனுப்பப்பட்டு, N.O.C. அனுப்பப்பட்டுள்ளது. அதற்குப் போதிய இடங்களும் உள்ளன. கோவை மாவட்டத்திலே நூலகக் கட்டடம் கட்டுவதற்கு போதிய நிதியாதாரம் உள்ளது. இதைக் கருத்திலே எடுத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடங்களில் நூலகக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப்போல, அந்த நூலகங்களுக்கு இடம் கொடுக்கப்பட்டிருந்தால், கண்டிப்பாக அந்த இடங்களிலே கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி வளர்மதி ஜெபராஜ்.

**திருமதி வளர்மதி ஜெபராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மேற்கு தொகுதியில் செல்லூரில் ஒரு நூலகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. அந்தப் பகுதி மக்களுடைய வேண்டுகோளுக்கிணங்க இரண்டு வருட காலத்திற்கு முன்பாக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டிக்கொடுக்கப்பட்டதற்குப் பிறகும்கூட அந்த வாடகைக் கட்டடத்திலேயிருந்து, இன்னும் Library–ஐ சொந்தக் கட்டடத்திற்கு மாற்றவில்லை. நானும் பல தடவை அதிகாரிகளிடத்திலே சொல்லிவிட்டேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதன் மீது நடவடிக்கை எடுத்து, அந்த வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற Library–ஐ சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டப்பட்டிருக்கிற கட்டடத்திற்கு இடமாறுதல் செய்வாரா என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து கட்டப்பட்ட அந்தக் கட்டடம் இன்னும் திறக்கப்படவில்லை என்று சொன்னார். கண்டிப்பாக அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவசுப்பிரமணியன்.

[*2005 ஏப்ரல் 13*

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் மாவட்ட நூலகம் அமைப்பதற்காக கரூர் நகராட்சியிலே நிலம் ஒதுக்கியுள்ளார்கள். அதை எடுத்து, அதிலே மாவட்ட நூலகம் அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்திலே அந்த மாவட்ட நூலகம் கட்டுவதற்கு கண்டிப்பாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவைக்குள் நுழைந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வருக, வருக.

**திரு. எச்.எம். ராஜு:** மக்கள், நூலகத்தை அதிக அளவிலே உபயோகிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் மக்களுக்கு விழிப்புணர்ச்சி அதிக அளவிலே வந்திருக்கிறது. நிலங்கள் எல்லாம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, நிலம் கொடுக்கும் ஒவ்வொரு பகுதி மக்களுக்கும் புதிதாக நூலகங்களைக் கட்டித் தருவாரா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நூலகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஆயிரம் மக்கள் தொகை இருக்கின்ற ஒரு கிராமத்திலே ஊர்ப்புற பகுதி நேர நூலகமும், 5,000 மக்கள் தொகை இருக்கின்ற கிராமத்திற்கு, ஓர் ஊர்ப்புற நூலகமும் திறப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. அதற்குச் சொந்தக் கட்டடம் இல்லையென்றால் வாடகைக் கட்டடம் கொடுத்தாலும்; ரூபாய் 1,000 வீதத்திலே இரண்டு புரவலர்களும்; ரூபாய் 20 ஒரு சந்தாதாரருக்கு என்ற முறையிலே 200 சந்தாதாரர்களையும் சேர்த்துக் கொடுத்தால்; 2,000 ரூபாய்க்கு தளவாடச் சாமான்களை அந்த நூலகத்திற்குக் கொடுத்தால், அரசு கண்டிப்பாக, உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடங்களில் நூலகம் ஆரம்பிப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*2005 ஏப்ரல் 13*]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன்.

**திரு. எஸ்.எ.எம். உசேன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி, திருவல்லிக்கேணி பகுதியில் பார்த்தசாரதி திருக்கோயில் அமைந்துள்ள பகுதியில் ஒரு நூலகம் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாக கேட்டு வருகின்றார்கள். அந்தப் பகுதியில் நூலகம் அமைப்பதற்கு நிதியாதாரம் தேவையென்றாலும் என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்க நான் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அந்தப் பகுதியில் நூலகம் அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை உங்கள் மூலமாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் சொந்தமாக இடம் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், ஒரு வாடகைக் கட்டடத்தைக் கொடுக்க வேண்டும். வாடகை இல்லாமல், இலவசமாகக் கட்டடத்தைக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் ஒரு சந்தாதாரர் 20 ரூபாய் என்று 200 பேரைச் சேர்க்க வேண்டும். இரண்டு புரவலர்களைச் சேர்க்க வேண்டும். 2,000 ரூபாய்க்கான தளவாடச் சாமான்களைக் கொடுத்தால், கண்டிப்பாக அங்கே நூலகம் ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

*முற்பகல் 10–35*

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி ஒரு வளர்ந்து வருகின்ற பெரிய நகரம். அந்த நகரில் நூலகம் கட்டுவதற்காக அரசு நிலம் கையகப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 5 வருடங்களுக்கு மேலாகின்றது. ஆகையால் அந்த நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அரசு நூலகங்களுக்கு படிப்படியாக சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் அடிப்படையிலே கோவில்பட்டியில் இருக்கின்ற நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு படிப்படியாக அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன்

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட மைய நூலகத்திற்கு மாண்புமிகு அமைச்சராக மாண்புமிகு செம்மலை அவர்கள் இருந்த காலத்தில் ஒரு ஜெனரேட்டர் வைக்கப்படுதற்கான பரிந்துரை செய்யப்பட்டது. இதுவரையிலும் அது நிறுவப்படவில்லை. ஆகவே, அது நிறுவப்படுவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல அதன்படி ஏதாவது முன்மொழிவுகள் வரப்பெற்றிருந்தால் கண்டிப்பாக அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் கோட்டப்பட்டி என்கின்ற ஒரு கிராமத்திலும், அதேபோன்று சக்கிலிப்பட்டி என்கின்ற ஒரு கிராமத்திலும் புதிதாக நூலகம் தொடங்குகின்ற வாய்ப்பினை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதையெல்லாம் எழுதிக் கொடுங்கள். வினா எண் 345, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**345—**

**மானியம்**

***16339—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் கூட்டுறவுச் சங்கங்கள் மத்திய கூட்டுறவு வங்கியில் வாங்கும் கடனுக்கு வசூலிக்கப்படும் 12% வட்டியில் அரசு மானியமாக வழங்கும் 3% வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) திருநெல்வேலி சரகத்தில் உள்ள எட்டயபுரம் பகுதி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு மானியமாக வழங்கும் 3 சதவீத வட்டி மானியத் தொகை ரூ.7,55,580 அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எட்டயபுரம் பகுதியிலே இயங்குகின்ற கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு வட்டி மானிய தொகையாக 7 லட்சத்திற்கு மேலாக வழங்கியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அதேபோல கூட்டுறவு நெசவாளர் சங்கங்களுக்கு மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகளால் வழங்கப்படுகின்ற காசு கடனுடைய வட்டி என்பது கொஞ்சம் அதிகமாக இருக்கின்றது. அதுவும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்கின்ற அந்தத் துணிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற அந்தக் கடன் நிலுவைத் தொகை மிகவும் காலதாமதமாக வழங்குவதன் காரணமாக அந்த காசு கடன்களுக்கு அதிகமான வட்டி நெசவாளர் சங்கங்கள் மூலம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகையால் கொள்முதல் செய்யப்பட்ட அந்தத் துணிகளுக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தினால் உடனுக்குடனாக அந்த நிலுவைத் தொகையை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1998 ஆம் ஆண்டு முதல் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டி மானியத் தொகையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு 27 கோடியே 50 இலட்சம் ரூபாயை ஒதுக்கித் தந்தார்கள். அதன்மூலமாக அந்தந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த வட்டி மானியத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கக்கூடிய காசு கடனுக்கு 11 சதவிகித வட்டி கொடுத்துக் கொண்டிருந்தன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினால் இன்றையதினம் வாங்கக்கூடிய அந்தக் காசு கடனுக்கு வட்டி 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இங்கே மற்றொரு கேள்வியை எழுப்பினார்கள். கோ–ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யக்கூடிய அந்தத் துணிகளுக்கு உடனடியாக அவர்களுக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுக்க

[2005 ஏப்ரல் 13

வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினாலே கொள்முதல் செய்யப்படுகின்ற துணிகளுக்கு எல்லாம் உடனடியாக அவர்களுக்குப் பணம் செலுத்தப்படுகிறது என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன்

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ–ஆப்டெக்ஸ் நிறுவனங்களால் வழங்கப்படுகின்ற மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கின்ற அந்தத் தொகையானது மிகவும் காலம் தாழ்த்தி — நிர்வாகச் சீர்கேடு காரணமாக காலம் தாழ்த்தி — வரவு வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதை உடனுக்குடன் வரவு வைக்க வேண்டிய ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அதைத்தான் நான் தெரிவித்தேன். கடந்த கால ஆட்சியிலே அதுபோல ஒரு நிலைமை இருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கின்றபோது Co-optex மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டிய நிலுவைத் தொகை அதிகமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையினாலே இன்றைக்கு அது வெகுவாகக் குறைக்கப்பட்டு சுமார் 6 கோடி ரூபாய்க்குதான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதுபோல் நிலுவையில் இருக்கிறது என்று சொன்னால், உடனடியாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையை ஏற்று வெகு விரைவிலே கொடுப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் மூலமாக நெசவாளர்கள் சங்கங்கள் பெறுகிறபோது 12 சதவீதம் வட்டியைச் செலுத்தி, அதற்குப் பின்னால் அந்தப் பயனாளிகள் ஏழை நெசவாளர்கள், அதைப் பயன்படுத்துகிறார்கள்.



2005 ஏப்ரல் 13]

Nationalised Banks, அதாவது தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளிலே 9 சதவீதத்துக்குப் பல திட்டங்களுக்கு இப்போது பணம் வட்டிக்குக் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். எனவே, இதை நெசவாளர்கள் அமைச்சகம் நேரடியாக தேசிய உடைமையாக்கப்பட்ட வங்கிகளைத் தொடர்பு கொண்டு, 9 சதவீதத்துக்கு நேரடியாக அந்த நெசவாளர்கள் சங்கத்திற்குப் பெற்று தந்து, அதிலே இந்த அரசாங்கம் 3 சதவீதம் மானியம் கொடுத்தால், நேரடியாக அந்த ஏழை நெசவாளிகளுக்கு 6 சதவீதத்திலே வட்டிக்குப் பணம் கிடைக்கும். எனவே, அப்படியொரு திட்டத்திற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இது இப்போது தோன்றிய கருத்து. ஆனால், எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்பு இந்தத் துறையை ஆய்வு செய்தபோது, இதுபோலவே நெசவாளர்கள் சங்கங்கள் வாங்கக்கூடிய காசுக் கடனுக்கு 11 சதவீதம், 11.5 சதவீதம் வட்டியைக் கொடுத்துவிட்டு, மீண்டும் அவர்களுக்கு வட்டியும், மானியமுமாக 3 சதவீதம் கொடுப்பதைவிட, அதை உடனடியாகக் குறைக்க வேண்டும் என்று ஆய்வு செய்து, இப்போது கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கக்கூடிய அந்தக் கடனுக்கு 9 சதவீதம்தான் வட்டி பெறப்படுகின்றது.

அதுமட்டுமல்ல, இப்போது நம்முடைய கூட்டுறவு வங்கி service charge–ஆக 3 சதவீதம் வட்டியைப் பெறுகிறது. அதைக்கூட தாயுள்ளத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த service charge–ஐக்கூட குறைக்க வேண்டும் என்று இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன். (குறுக்கிடு)

**திரு. எ.வ. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு clarification...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Clarification எல்லாம் கிடையாது. கேள்விக்குப் பதில் வந்துவிட்டது, அவ்வளவுதான். உட்காருங்கள்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் நெசவாளர்கள், பட்டு கூட்டுறவு நெசவுத் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நான் சென்ற ஆண்டுகூட மாண்புமிகு அமைச்சரிடத்திலே ஒரு கேள்வி கேட்டேன்.

[2005 ஏப்ரல் 13

நெசவாளர்கள் 10 ஆண்டு காலமாக தனியாரிடத்திலே நெய்கின்றவர்களுக்குக் கூலி உயர்வு தரவேண்டும் என்று கேட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் வரை சென்று மாண்புமிகு அம்மா அவர்கள்கூட மதுரையிலேயிருந்து ஆரணி தொகுதியிலே என்னைப் பேசச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். அவ்வாறு தனியார் கூலியை உயர்த்தித் தரவேண்டும் என்று கேட்டும், இதுவரையிலும் உயர்த்தித் தரவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுகின்ற நெசவாளர்களுக்குத்தான் கூலி உயர்த்தித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனியாரிடத்திலே நெய்கின்ற, முதலாளிகளிடத்திலேயிருந்து கூலி உயர்வைப் பெற்றுத் தர இந்த அரசு முன்வருமா? அம்மாவின் அரசு அவசியம் இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்பதற்காகக் கேட்டு, இதைச் செய்து தருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய கோரிக்கை, கடந்த ஓர் ஆண்டிற்கு முன்பாக என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அங்கே இருக்கக்கூடிய Master Weavers என்று சொல்லக்கூடிய அந்தத் தனியார் நெசவாளர்களை எல்லாம் அழைத்து, பேச்சுவார்த்தை நடத்தி 10 சதவீதம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடு)

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி கேட்கட்டும். (குறுக்கீடு) இல்லை, திரு. ஜெமினி, உங்களுக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** எனது அரூர் தொகுதியில் ஊத்தங்கரை என்னும் இடத்தில் தருமபுரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை ஒன்று



2005 ஏப்ரல் 13]

மறைந்த முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலத்திலே தொடங்கப்பட்டது. இப்போது அந்த மில் நலிவுற்ற நிலையிலே இருக்கிறது. மூன்று மாதங்களாக அந்த ஊழியர்கள் சம்பளம் பெறாமல் இருக்கிறார்கள். தற்போதுதான் அமைச்சர் அவர்கள் அந்த மில்லுக்குப் பஞ்சும், 50 இலட்சம் ரூபாய் நிதியும் கொடுத்து, இப்போது இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனாலும், சம்பளம் பெறமுடியாமல், அந்தத் தொழிலாளிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த நலிவுற்ற ஆலைக்கு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்கி, அந்த ஆலை தொடர்ந்து நடைபெற ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்தங்கரையில் இருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவு நூற்பாலைக்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, 50 இலட்சம் ரூபாய் சிறப்பு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கோரிக்கையை ஏற்று, இன்னும் பல்வேறு வகையிலே அந்த நூற்பாலைக்கு அதிகமான நிதி வெகு விரைவில் ஒதுக்கித் தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 346, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**346—**

## மகப்பேறு மருத்துவமனைக் கட்டடம்

***73159—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12–வது வட்டம், T.H. சாலையில் செயல்படும் மகப்பேறு மருத்துவமனைக் கட்டடம் புதுப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 12–வது வட்டம், T.H. சாலையில் எண் 471–ல் டாக்டர் வி.ஆர். நகர் என்னும் நல்வாழ்வு

மையம் செயல்பட்டு வருகின்றது. இது பழுதடைந்த நிலையிலுள்ள பழைய கட்டடம். இதனால் இங்கு வரும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆபத்து ஏதும் ஏற்படாமலிருக்க, அருகிலுள்ள மருந்தகத்துக்கு மாற்றப்பட்டு தற்காலிகமாக அங்கு இயங்கி வருகின்றது. இம்மருந்தகத்தில் இடப் பற்றாக்குறை இருப்பதாலும், பிரசவ வார்டு மற்றும் நல்வாழ்வு நிலையம் இயங்குவதற்குரிய போதிய வசதியில்லாததாலும், பழைய கட்டடம் இடிக்கப்பட்டு, புது கட்டடம் கட்டுவதற்கான திட்டம் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆர்.கே. நகர் தொகுதி, 12-வது வட்டம், டாக்டர் விஜயராகவலு மருத்துவமனை, வறுமைக் கோட்டிற்குக்கீழே வசிக்கும் மக்கள் பயன்படுத்தும் பிரசவ வார்டுடன்கூடிய நல்வாழ்வு மையமாகும். இது 50 ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு செயல்பட்டு வந்தது. இந்தப் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு, புதிய கட்டடம் கட்டித் தருவதாக அறிவித்தமைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், கர்ப்பிணிப் பெண்கள் மாதாந்திர பரிசோதனை மற்றும் மகப்பேறு போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் மருத்துவமனை என்பதால், தற்போது இயங்கும் இடத்தில் போதிய இடவசதி இல்லை என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, அருள்கூர்ந்து விரைவாக இந்தக் கட்டடத்தைக் கட்ட வேண்டிய அவசியத்தைக் கருத்திலேகொண்டு, எவ்வளவு காலத்திற்குள், எவ்வளவு செலவில் இந்தக் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டடமானது ரூ.10 இலட்சம் மதிப்பிலே கூடியவிரைவிலே கட்டி முடிக்கப்படும். குறைந்தபட்சம் 6 மாதங்களுக்குள் கட்டி முடிப்பதற்குண்டான வழிவகைகளைச் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது இரண்டு அடுக்கு கட்டடங்களாகக் கட்டப்பட வேண்டும். இன்னும் கூடுதலாக நிதியினை இதற்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இதுபோன்ற நல்வாழ்வு மையங்கள், மருந்தகங்கள், பழைய கட்டடங்களுக்குப் பதிலாக கடந்த





4 ஆண்டு கால ஆட்சியிலே எத்தனை புதிய கட்டடங்களாகக் கட்டப்பட்டுள்ளன? எவ்வளவு செலவில் எத்தனைக் கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன? புதிய மருந்தகங்கள், நல்வாழ்வு மையங்கள் எத்தனை புதிதாகக் கட்டப்பட்டுள்ளன? அவற்றிற்குப் போதிய மருத்துவர்கள், உதவியாளர்கள் உள்ளார்களா என்பதை பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இடத்திலே இரண்டு அடுக்குமாடிக் கட்டடம் கட்டவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டார். அது பரிசீலிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த ஆட்சிப் பொறுப்பை அம்மா அவர்கள் ஏற்றதற்குப்பிறகு, எத்தனை நல்வாழ்வு மையங்கள் புதிதாகக் கட்டப்பட்டன என்று கேட்டார். 7 நல்வாழ்வு மையங்கள், சுமார் ரூ. 75.26 இலட்சத்திலே கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. அவை பயன்பாட்டிலே இருக்கின்றன. மேலும் பழுதடைந்தவற்றிற்கு கடந்த 4 ஆண்டு காலமாக ரூ.246.02 இலட்சம் செலவிலே— அந்தப் பகுதிகளிலே, நமது மாநகராட்சிப் பகுதி அனைத்திலும் பழுதடைந்த நல்வாழ்வு மையங்கள்—இன்றையதினம் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. போதிய மருத்துவர்கள் இருக்கின்றார்களா என்று கேட்டார். மருத்துவப் பணியிடங்கள் 10 காலியாக உள்ளன. அதற்கான நேர்முகத் தேர்வானது வருகின்ற 18-4-2005 அன்று நடைபெறவிருக்கிறது. அதன்மூலமாக காலியாக இருக்கின்ற மருத்துவர் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக தெரிவித்து அமைகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. சிதம்பரம்.

முற்பகல் 10-50

**திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான பவானிசாகர் தொகுதியில் தெங்குமரஹடா என்ற இடத்திலே மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். மகப்பேறு காலத்திலே, அவர்களை அங்கிருந்து பவானிசாகருக்குக் கொண்டு வருவதற்கோ அல்லது சத்தியமங்கலத்திற்குக் கொண்டு வருவதற்கோ மிகவும் சிரமப்படுகிறார்கள். குழந்தைப் பிரசவத்திற்காக

அவர்களைத் தொட்டிலில் கட்டி, கொண்டுவருகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெங்குமரஹடாவிலே ஒரு மகப்பேறு மருத்துவமனை அமைத்துத்தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் கேட்டால், அதற்கு அவர் பதில் அளிப்பார் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 347, டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்.

**347—**

## நீச்சல் குளம்

***74730—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள நீச்சல் குளத்தை திறக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நீச்சல்குளம் கட்டும் பணிக்கு மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களால் 1–9–2003 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. நீச்சல் குள கட்டுமானப் பணி 8–11–2003 அன்று தொடங்கப்பட்டது. கடந்த ஆண்டு, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களால் இம்மாமன்றத்தில் நீச்சல் குளம் கட்டுவதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.55 இலட்சம் ஆகும். புதுக்கோட்டையில் நீச்சல் குளக் கட்டுமானப் பணி தற்போதைய நிலை, மின் இணைப்பு, குழாய் இணைப்புப் பணிகள் மற்றும் டைல்ஸ் ஒட்டும் பணி மட்டுமே நிலுவையில் உள்ளன. இந்தப் பணிகள் வருகிற ஜூன் மாதம் முதல் வாரத்தில் முடிவடைந்துவிடும். மாண்புமிகு இதய தெய்வம்





அம்மா அவர்களின் ஆசியோடு ஜூன் மாதத்தில் புதுக்கோட்டை நீச்சல் குளம் திறந்து வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதுக்கோட்டைக்கு எத்தனையோ சாதனைகளை இந்தக் கழகத்தினுடைய அரசில் செய்திருக்கிறார்கள். அதிலே, மிக முக்கியமான சாதனையாக, ரூ.55 இலட்சம் செலவிலே இந்த நீச்சல் குளத்தையும் கொடுத்திருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியையும் அதிலே கொடுக்கப்பட்டிருந்த காரணத்தினாலே, அந்தப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும் என்பதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். ஜூன் மாதத்திலே, அது திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்த மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அம்மா அவர்களுடைய சாதனைகள் புதுக்கோட்டையில் நிறைய நடந்திருப்பதற்காக, அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில், தேனியில் புதிதாக உருவாகி வரும், தேனி மாவட்ட விளையாட்டு அரங்கிற்கு ரூபாய் ஒரு கோடியை அனுமதித்ததற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு தேனி மாவட்ட மக்கள் சார்பில் நன்றியினைக் கூறிக்கொள்கின்றேன். மேலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மேலும், இந்த விளையாட்டு அரங்கத்திற்கு, பாராளுமன்ற மேலவை உறுப்பினர் நிதியிலிருந்து, அன்புச் சகோதரர், திரு. டி.டி.வி. தினகரன் அவர்கள் ரூபாய் 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். தற்சமயம், பணி நிறைவடைகின்ற சூழ்நிலையில் உள்ளது.

[2005 ஏப்ரல் 13

ஆகவே, மாவட்ட மக்களின் கோரிக்கையான விளையாட்டு அரங்கத்தில் நீச்சல் குளம் அமைப்பதற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில், இந்த ஆண்டு தேனியில் நீச்சல் குளம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.கே. செல்வராஜ்.

**திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காரமடை சிறப்பு சிற்றூராட்சியிலே ஒரு Indoor Stadium கட்டுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அரசுக்கு முன்மொழிவு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டில், அந்த Stadium கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, எண்ணற்ற இடங்களில் Indoor Stadium அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆண்டு முதல், மத்திய அரசிலிருந்து வழங்கப்படும் 50 சதவிகித மானியத் தொகை வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், இனிமேல் வரக்கூடிய காலங்களில், தமிழக அரசே, மத்திய அரசை எதிர்பார்க்காமல் அனைத்துச் செலவுகளையும் செய்ய வேண்டுமென்று கூறியுள்ளது. அதனால், தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில், வருகிற காலங்களில் நம்முடைய மேட்டுப்பாளையம் சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசிலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில், அண்ணா stadium-த்தில் நீச்சல் குளம் ஒன்றுள்ளது. இங்கு அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. விபத்துகள் என்றால்,



2005 ஏப்ரல் 13]

நீச்சல் பயிற்சிக்குச் செல்லும் சிறுவர்கள் நீரிலே மூழ்கி இறந்துவிடுகின்ற நிகழ்வு அங்கு அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. உரிய பயிற்சியாளர்களை நியமனம் செய்து, விழிப்புடன் கண்காணித்து இந்த உயிர்ப் பலியைத் தடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் நீச்சல் குளத்தில் நடந்த தவறுகளுக்கு, சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களை suspend செய்து, இப்போது அந்தத் தவறுகள் நடக்காதவண்ணம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 348, திரு. டி.கே. இராஜா, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**348—**

## விட்டுமனைப் பட்டா

***42126—திரு. டி.கே. இராஜா:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் அம்பேத்கர் நகர், பெரியார் நகர், கலைஞர் நகர், ராஜீவ்காந்தி நகர் ஆகிய இடங்களில் வாழ்ந்து வரும் ஏழை மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, திருப்பத்தூர் நகரில் மாண்புமிகு உறுப்பினர் கோரிய பகுதிகளில் வீட்டுமனைப் பட்டா வழங்க சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2005 ஏப்ரல் 13*

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகரிலே அம்பேத்கர் நகர், பெரியார் நகர், கலைஞர் நகர், ராஜீவ் காந்தி நகர் மற்றும் ஏனைய பகுதிகளிலே முப்பது, நாற்பது ஆண்டு காலமாக, அங்கு ஏழை மக்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் பட்டா வேண்டுமென்று பல்வேறு அரசிடம் கோரிக்கை மனுவாகக் கொடுத்து வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த இடம் அரசாங்கத்திற்குப் பயனற்ற இடமாக இருக்கிறது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் அரசாங்கத்திற்குப் பயன் இல்லாத இடங்களிலே பட்டா வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்த மக்களுக்குப் பட்டா வழங்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற அந்தப் பகுதி திருப்பத்தூர் நகரம், நகர அளவை எண் 2/1, மற்றும் 2/2 சுடுகாடு புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி தற்போது பொதுமக்கள் அங்கே ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து திருப்பத்தூர் வட்டாட்சியர் கோரிக்கையின்மீது நெடுஞ்சாலைத் துறையின் கருத்து கோரப்பட்டது. பட்டா கோரும் இடம் சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை மற்றும் ஓகேனக்கல், பெண்ணாகரம், தருமபுரி, திருப்பத்தூர் சாலை ஆகிய சாலைகள் சந்திக்கும் இடமாக உள்ளதாகவும், சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற கருத்துரு அளித்துள்ளதாகவும் அதேசமயம் சாலையை அகலப்படுத்த இடம் தேவைப்படும் என்றும் இரு மாநில சாலைகள் சந்திக்கும் இடம் என்பதால் போக்குவரத்தைக் கட்டுப்படுத்த நடுவில் போக்குவரத்துத் தீவு கட்ட இடம் தேவைப்படும் என்றும் திருப்பத்தூர் நெடுஞ்சாலைத் துறை உதவிக் கோட்டப் பொறியாளர் தெரிவித்துள்ளார். வருங்காலத்தில் சாலைகள் அகலப்படுத்த இடம் தேவைப்படுவதால் மேற்கண்ட இரு சாலைகளும் தேசிய நெடுஞ்சாலைகளாக மாற்றப்படும்போது வீட்டுமனைப் பட்டா வழங்குவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும் மேற்படி நகரில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது. இருப்பினும் மேற்படி நகரில் வசிப்பவர்களுக்கு மாற்று ஏற்பாடாக வேறு உரிய இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல என்னுடைய நகரத்திலே புதுப்பேட்டை ரோடு, சி.கே.சி. நகர், ஜார்ஜ் பேட்டை, வல்லக் கால்வாய், சிவராஜபேட்டை, இந்திரா நகர், வேலன் நகர் இந்தப் பகுதிகளில் எல்லாம் முப்பது, நாற்பது ஆண்டு காலமாக சுமார் 3,000 வீடுகள் கட்டிக் குடியிருந்து வருகிறார்கள். இவர்களும் பட்டா வேண்டுமென்று நீண்ட காலமாக கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து நீண்ட காலமாக வாழ்கின்ற அந்த ஏழை மக்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



*2005 ஏப்ரல் 13]*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய மற்றொரு கோரிக்கையினை இங்கு அரசுக்குத் தெரிவித்து இருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருப்பத்தூர் பகுதியிலே இருக்கக்கூடிய இந்த இடம் எல்லாம் தேசிய நெடுஞ்சாலை வரக்கூடிய ஒரு இடமாக இருக்கிற காரணத்தினாலே இப்போது பட்டா வழங்க இயலாத நிலை என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக நகரப் பகுதிகளிலே பல ஆண்டுகளாக வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுக்கு அரசு இதுவரை பட்டாவே – அவர் புறம்போக்கு இடத்திலே பல ஆண்டுகளாக வீடு கட்டிக் கொண்டிருந்தாலும் – கொடுக்கவில்லை. காரணம் அதற்கான கிரயத் தொகை அதிகமாக இருக்கிறது என்று சொல்லியும் அதனாலே அவர்கள் தகுதிபடைத்தவர்களாக இருந்தாலும்கூட கொடுக்காத ஒரு சூழல் இருக்கிறது. தேசிய நெடுஞ்சாலை என்று வருகிறபோது Central Act–படி அவர்கள் தனிப்பட்ட பட்டா இடத்தில் இருக்கக்கூடிய வீடுகளையெல்லாம்கூட இடித்துவிட்டு அவர்கள் ரோடு போடுகிற ஒரு உரிமை இந்தச் சட்டத்திலே இருக்கிற காரணத்தினாலே இப்போது பட்டா கொடுத்துவிட்டாலும்கூட தேசிய நெடுஞ்சாலை வருகிறபோது அந்த இடத்தை தாராளமாக அந்த மத்திய அரசு Central Act-படி எடுத்துக்கொள்ளப்போகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் பல ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருக்கிற இவர்களுக்கு கருணை அடிப்படையிலே பட்டாவைக் கொடுப்பதற்கு ஆவன செய்வாரா என்றும் நகரப் பகுதிகளிலே வாழ்கிறவர்களுக்கும் கொடுத்துவிட்டு பிறகு வேண்டுமானால் விஸ்தரிக்கிறபோது எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 13

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட திருப்பத்தூர் நகரில் செல்கின்ற அந்தச் சாலையை, தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இருக்கின்றது. பரிசீலனையில் இருக்கின்ற ஒரு இடத்திற்கு தற்போது பட்டா வழங்கினால், அங்கு வீடுகள் கட்ட அவர்களுக்குப் பெரும் செலவு ஏற்படும். பிற்காலத்தில் எடுக்கின்றபோது அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படும். இதைத் தவிர்க்கும்பொருட்டுதான், தற்போது அந்தப் பகுதியில் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோல, நகர்ப்புறங்களிலும் சரி, கிராமப்புறங்களிலும் சரி, எண்ணற்ற ஏழை மக்கள் பல ஆண்டுகளாக வீடுகளைக் கட்டிக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்க வேண்டும் என்பது பற்றி பல நேரங்களிலே இந்த அவையிலேயே வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நெடுஞ்சாலைக்கோ, மற்ற போக்குவரத்துக்கோ இடையூறு இல்லாத இடங்களாக இருப்பின், அவற்றைப் பரிசீலனை செய்து, பட்டா வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இப்போதுகூடச் சொல்கின்றபோது, அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்கப்படும் என்கின்ற ஓர் அறிவிப்பைக்கூடச் செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கையிலே, தற்போது பல்வேறு இடங்களிலே, எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், 20, 30 ஆண்டுகளாகக் குடியிருந்தவர்களுடைய வீடுகள் இடிக்கப்பட்டு, அவர்களெல்லாம், காலையிலே வேலைக்குச் சென்றுவிட்டு, மாலையிலே வீடு திரும்புகின்ற நேரத்திலே அவர்களுடைய வீடுகள் இல்லாமல் இந்தச் சுனாமி அலையிலே அடித்துச் செல்லப்பட்டதுபோல, இடிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழல் இருக்கிறது. கடந்தவாரம்கூட, சிவகாசி நகரிலே, எந்தவிதமான இடையூறும் இல்லாத ஒரு தனிப்பட்ட பகுதியிலேயிருந்த 40 வீடுகள் இடிக்கப்பட்டிருக்கின்றன. இப்படி இடிக்கப்படுவதற்கு முன்னால் அவர்களுக்கு காலவரையறையாவது கொடுத்து, அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்து, இடிப்பதற்குண்டான சூழ்நிலையை ஏற்படுத்துவார்களா; அப்படி இடிக்கப்பட்ட இடம்,



2005 ஏப்ரல் 13]

எந்தவிதத்திலும் இடையூறு இல்லாத இடம் என்கின்ற காரணத்தினால், அவர்களுக்கே பட்டா தருவதற்கும் அரசு முன்வருமா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இந்தமாதிரி ஆக்கிரமிப்பில் இருப்பவர்களுக்கு, முறைப்படியான அறிவிப்பை, அவர்களுக்கு 15 தினங்களுக்கு முன்பாகவே கொடுத்து, அதற்குப் பின்னர்தான் அவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இந்தமாதிரிப் பாதித்த பகுதிகளில், சில பகுதிகள் கடந்த சில தினங்களாக, மதுரை கிளையினுடைய உயர்நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஆக்கிரமிப்பு செய்துள்ள பகுதிகளில் அகற்றப்படுகின்ற ஒரு சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கின்றது. அவர்களுக்கு மாற்று ஏற்பாடாக உரிய இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 349, திரு. என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**349—**

**கால்வாயைத் தூர் வாருதல்**

***42178—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்குத் தொகுதி, சொட்டதட்டிக் கால்வாயைத் தூர்வாரி சுத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) சொட்டதட்டிக் கால்வாயில் தூர்வாரும் பணிகள் தற்சமயம் மேற்கொள்வதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 ஏப்ரல் 13

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை கிழக்குத் தொகுதியில் இருக்கக்கூடிய அந்தக் கால்வாய், அதுபோன்ற மற்றக் கால்வாய்களெல்லாம், கால்வாயாகவும் இல்லாமல், சாலையாகவும் இல்லாமல் இருக்கிற காரணத்தினால், அடிக்கடி கழிவுநீர் தேங்கி, அந்த வட்டார மக்களுக்குப் பெரிய துன்பம் விளைவிப்பதாக அமைந்திருக்கிறது. தற்போது வாய்ப்பில்லை என்றாலும், எதிர்வரும் காலத்தில் பரிசீலிக்கப்படும் என்கிற உறுதியினையாவது அமைச்சர் அவர்கள் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய சொட்டதட்டிக் கால்வாய், வைகை ஆற்றின் வலது கரையில், குருவிக்காரன் கால்வாய் ஓடுபாலத்தின் மேற்புறத்திலிருந்து பிரிகிறது. இதன்மூலம், ஐராவதநல்லூர், சொட்டதட்டிக் கண்மாய்கள் நீரைப் பெறுகின்றன. இதன் நீளம் 3,900 மீட்டர். இதன் நேரடிப் பாசனப் பரப்பு 38.81 ஏக்கர். கண்மாய்களின் பாசனப் பரப்பு 620.82 ஏக்கர். சொட்டதட்டிக் கால்வாய் பிரியும் இடத்தில் ஆற்றின் தரைமட்டம் மிகவும் பள்ளமாக இருக்கின்றது. இதன் கண்மாய்களில் ஒன்றான ஐராவதநல்லூர் கண்மாயின் நீர்ப்பிடிப்பு, பட்டா நிலங்களாக மாற்றப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சொட்டதட்டிக் கால்வாயில் 2001–2002 ஆம் ஆண்டில் 3.90 கிலோ மீட்டர் நீளத்திற்கு 9.80 இலட்சம் ரூபாய் மதிப்பில் தூர்வாரும் பணிகள் நடைபெற்றுள்ளன. கால்வாய்கள் அல்லது கண்மாய்கள் தூர்வாரும் பணிகள் ஏற்கெனவே நடைபெற்றிருந்தால், அதிலிருந்து 5 வருடம் பூர்த்தியான பின்னர்தான் மீண்டும் அவற்றில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பது நடைமுறையில் இருந்து வருகிறது. இருப்பினும், இக்கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் தற்சமயம் மேற்கொள்வதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவசியம் இருப்பின் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கின்ற பிரதான பாசன வாய்க்கால்களைத் தூர் வாருவதற்கு இடையூறாக இருக்கின்ற



2005 ஏப்ரல் 13]

ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி, தூர் வாருவதற்கு இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதோடு; சென்னை மாநகரத்திலே இருப்பது போன்று இந்த ஆற்றோரங்களிலே தூர்வாருவதற்கு இடையூறாக இருக்கின்ற குடியிருப்புப் பகுதிகளை எல்லாம் அகற்றி அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அடுக்குமாடிக் குடியிருப்புகளையெல்லாம் கட்டிக்கொடுக்கும் அந்தத் திட்டம் போல் அனைத்துப் பகுதிகளிலும் அந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரத்து வாய்க்கால்களில் தூர்வாரும்போது இடையில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றியபின்புதான் அங்கே தூர் வாருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் நீண்ட நெடிய காலங்களாக, வீடுகளை அமைத்து குடியிருப்போருக்கு மாற்று இடமாக வீட்டுமனைப் பட்டா வழங்க, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியில் பாதிப்பு என்று கூறுவார்களேயானால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பாளையங்கோட்டை தொகுதியிலே பாபநாசம் அணையிலிருந்து, பாளையங்காலுக்கு விவசாயத்திற்கு நீர் வருகின்ற நேரத்தில், அங்கு அந்தக் கால்வாய் தூர் வாரப்பட்டாலும்கூட, அந்தக் கால்வாயின் இருபுறங்களிலும் பெரும்பான்மையான இடங்களில் குடியிருப்புகள் இருக்கின்ற காரணத்தினால், அங்கிருந்து கழிவுகள் வருகின்ற காரணத்தால், செடி–கொடிகள் எல்லாம் பாசிப்பிடித்து படர்ந்து விடுகிறது. ஆகவே, கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்றடைவதற்கு அடிக்கடி பிரச்சினை வருகின்ற காரணத்தினால், அதைக் கான்கிரீட் கால்வாயாக மாற்றிக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில், அங்குள்ள உள்ளாட்சி அமைப்புகளிடம் கழிவுநீர்க் கால்வாய் தனியாக அமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அறிவுறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 ஏப்ரல் 13

அந்தப் பகுதியில் கான்கிரீட் தளம் அமைப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கின்றார்கள். அவர்கள் அதனை எழுத்துப்பூர்வமாகக் கொடுப்பார்களேயானால், அந்தப் பணி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ.கு.சி. அன்பழகன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழனுடைய பொற்கால ஆட்சிக்கு இணையாக, ஏரிக் குளங்கள், கால்வாய்கள், தூர்எடுத்தும், கரைகளைப் பலப்படுத்தியும், மழைநீர் சேகரிப்புத் திட்டங்களைப் போல பல நடவடிக்கைகளை எடுத்து தமிழகத்தில் நிலத்தடி நீரைப் பாதுகாத்து வரும், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, அதுபோல புதியதாக ஏரிக் கால்வாய்கள், ஏரி, குளம், குட்டைகள் அமைக்க ஏதேனும் திட்டம் உள்ளனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 351, திரு. லா. சந்தானம், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**351—**

## நியாய விலைக் கடை கட்டடம்

***3059—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி ஊராட்சி, வின்னக்குடி பகுதிக்கு நிரந்தர நியாய விலைக் கடை கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி பகுதியிலுள்ள நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் தற்சமயம் வழிவகை செய்யப்படவில்லை என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.



2005 ஏப்ரல் 13]

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இந்த நியாய விலைக் கடை என்பது மிகவும் அத்தியாவசியமான ஒன்றாக இருக்கிறது. ஆயிரம் குடும்ப அட்டைகளுக்கு மேலாக இருக்கின்ற இடம். தற்சமயம் இல்லையென்றாலும் வருகின்ற காலத்திலேயாவது பரிசீலனை செய்து அதற்கு ஒரு நியாய விலைக் கடை அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி நியாய விலைக் கடை, வாலாந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 490 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான முன்மொழிவு மதுரை மண்டல இணைப் பதிவாளரால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதி நெறிமுறைகளின்படி ஒதுக்க வழிவகை இல்லையெனவும், தற்சமயம் ஊராட்சி நிதி மற்றும் ஊராட்சி ஒன்றிய பொது நிதி ஆகியவற்றில் போதிய நிதி வசதியில்லாததால், மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர வழிவகையில்லையெனவும், பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியில் ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில், மேற்படி நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும், மதுரை மாவட்ட வளர்ச்சி முகமை, திட்ட அலுவலர் தெரிவித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யாத நிலையில், குறவருடி பஞ்சாயத்து, வின்னக்குடி பகுதிக்கு நிரந்தர நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டித் தர வழிவகை ஏதுமில்லையென்றும் எதிர்காலத்தில் நிதியாதாரங்கள் பெருகும்போது அது குறித்து ஆய்வு செய்யப்படும் என்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நியாய விலைக் கடை என்பது அனைத்து மக்களும் பயன்பெறக்கூடிய ஒரு கடையாக அமைந்திருக்கிறது. எனவே, இதனை சட்டமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து கட்டிக்கொள்ளலாம் என்று பல்வேறு மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்குரிய பரிந்துரையைச் செய்தாலும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிலே

*[2005 ஏப்ரல் 13*

இடமில்லையென்று தெரிவித்ததை அமைச்சர் அவர்களே, இங்கே குறிப்பிட்டார்கள். வருகின்ற காலத்திலாவது, அதனுடைய முக்கிய நிலையை அறிந்து, அந்தந்த மாவட்டங்களிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நியாய விலைக் கடைகளைக் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கினால், அதற்கு அனுமதி வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விடுபட்ட கேள்வி, வினா எண் 350, திரு. எஸ்.எம். சீனிவேல், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**350—**

## கால்வாய் இணைப்பு

***71907—திரு. எஸ்.எம். சீனிவேல்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வைகைப் பிரிவிலிருந்து வரும் நிலையூர் கால்வாயை முல்லைப் பெரியார் பாசனத்துடன் ஒருபோக சாகுபடிக்கு பதிவுக் கால்வாயாக இணைப்பதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** அம்மாவின் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதிக்கு உட்பட்ட நிலையூர் சேனல் கால்வாய், சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நஞ்சை நிலங்களாக உள்ள விவசாய நிலங்களுக்குப் பாசன வசதி



*2005 ஏப்ரல் 13]*

செய்து தருகிறது. இக்கால்வாயில் விவசாயம் செய்யக்கூடிய சுமார் 2 இலட்சம் விவசாயிகள் ஒரு போகம் சாகுபடி செய்வதற்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் முதல் கால்வாயாக வைகையில் பாசனம் பெறக்கூடிய இந்த நிலையூர் சேனல் கால்வாய் முல்லை–பெரியாரோடு இணைக்கப்பட்டால் சுமார் 2 இலட்சம் விவசாயிகள் நல்லமுறையிலே பயன்பெற்று, விவசாயம் செய்யக்கூடிய ஒரு நிலைமையிலே இருப்பார்கள் என்பதனை அறிந்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த 9 ஆயிரம் ஏக்கரையும் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இந்த 9 ஆயிரம் ஏக்கரையும்

முல்லை–பெரியாரோடு இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதி, வடபழஞ்சி கிராமம், முத்துப்பட்டி கிராமம், மனப்பட்டி கிராமம், சுந்தரராஜபுரம் கிராமம், வெள்ளைப்பாறைப்பட்டி, கரடிப்பட்டி, ஆலம்பட்டி, மேலகீழ்க்குடி, கீழக்கீழ்குடி, தட்டானூர் போன்ற கிராமங்களுக்கு மாண்புமிகு தாய்உள்ளம் கொண்ட அம்மாவினுடைய ஆணைக்கிணங்க அம்மா அவர்களின் ஆசியோடு, புதிய கால்வாய் வெட்டுவதற்கு 1,13,20,000/– ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் புதிய கால்வாய் இந்த ஆண்டு தொடங்கப்படுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவரின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அன்போடு அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற நிலையூர் கால்வாய்க்கு வைகை ஆற்றிலிருந்து நிலையூர் படுகை அணை மூலமாக வைகை பங்கீட்டு நீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், நிலையூர் கால்வாய் வைகை பழைய ஆயக்கட்டுக்கு பாத்தியப்பட்டது. பெரியார் பாசன நீரைக் கொண்டு பாசனம் செய்யக்கூடிய பகுதி தனியாக இருக்கின்றது. பெரியார் பாசனப் பகுதிக்குப் பெரியார் பங்கீட்டு நீர் தற்பொழுது பற்றாக்குறையாகவே இருக்கிறது. மேலும் தற்போது பெரியாறு அணையின் முழு கொள்ளளவு நீர் மட்டம் 152 அடியிலிருந்து 136 அடியாகக் குறைக்கப்பட்டு இருப்பதால், பாசன நீர் பற்றாக்குறை மேலும் பெருகியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் பெரியார் பங்கீட்டு நீரிலிருந்து வைகை ஆயக்கட்டு நிலையூர் பாசனக் கால்வாய்ப் பகுதிகளுக்கு நீர்

வழங்குவது என்பதும், பெரியார் பாசனப் பகுதியாக மாற்றுவது என்பதும் இயலாத ஒன்றாகும். அவ்வாறு செய்தால், பெரியார் பாசன விவசாயிகளிடமிருந்து எதிர்ப்புகள் உருவாகும். சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளும் உருவாகும். எனவே, இக்கோரிக்கை சாத்தியமானது அல்ல என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் பிரதானக் கால்வாயிலிருந்து பல்வேறு கிராமங்களுக்கு புதிய கால்வாய் வெட்டுவதற்காக இங்கு கோரி இருக்கின்றார்கள். மதுரை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவருக்கு அவருடைய ஒத்திசைவு கேட்கப்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவருடைய ஒத்திசைவு கிடைக்கப் பெற்றவுடன் அரசு அப்பணியை எடுத்துக்கொள்ளும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 352, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**352—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

***18601—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் கிராமத்தில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வினா எண் 353, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.





**353—**

## மறுவாழ்வு இல்லங்கள்

***14961—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு இல்லங்கள் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் ஊனமுற்றவர்கள், ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு இல்லம் புதிதாகத் திறப்பது குறித்து அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

முற்பகல் 11–15

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஊனமுற்றவர்கள் உணவுக்குக்கூட வழி இல்லாமல் அவதிப்படக்கூடிய நேரம். எவ்விதத் தொழிலும் அவர்கள் செய்ய முடியாத நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், தனக்கு வாரிசு இல்லாதவர்கள் வயதான காலத்திலே அவர்கள் உணவுக்கும்கூட வழி இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அவல நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இப்படி வாழ்நாள் முழுவதும் உழைத்துவிட்டு, வயதான காலத்திலே உழைக்க முடியாமல், சாப்பாட்டுக்கு வழி இல்லாத நிலை இருக்கிறது. சிலருக்கு வாரிசுகள் இருந்தாலும்கூட, அந்த வாரிசுகள் வெளி மாநிலங்களுக்குச் சென்று வருடக் கணக்கிலே பிழைப்பைத் தேடி அலைந்து கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஊரில் அவர்களுடைய பெற்றோர்கள் உணவுக்கு வழியில்லாது இருக்கக்கூடிய

இந்தச் சூழ்நிலையில் இப்படி ஊனமுற்றவர்களும், ஆதரவற்றவர்களும் வாழ்வதற்காக மறுவாழ்வு இல்லங்கள் பல்வேறு நிலைகளிலே தொடங்கப்பட்டு வரக்கூடிய இந்தச் சூழ்நிலையில் மிகப் பின்தங்கிய பகுதியான பெண்ணாகரம் தொகுதியிலே ஒரு மறுவாழ்வு இல்லம் தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், தற்சமயம் செல்லியம்பட்டி மற்றும் பர்கூர் ஆகிய இடங்களில் தொழுநோயால் ஊனமுற்றோரைக் கொண்ட அரசு மறுவாழ்வு இல்லங்கள், இரண்டு இயங்கி வருகின்றன. தற்சமயம் செல்லியம்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் 220 பேரும், பர்கூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் 223 இல்லவாசிகளும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேற்காணும் இல்லங்களில் தற்போது குறைவாக இல்லவாசிகள் உள்ளமையால் தருமபுரி மாவட்டத்தில், பெண்ணாகரம் தொகுதியில் புதிதாக அரசு மறுவாழ்வு இல்லம் திறக்கும் தருவாயில் அரசு இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோயாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், ஆதரவற்றவர்கள் வாழ்வதற்காக, அவர்கள் பிழைப்பிற்காக மறுவாழ்வு இல்லங்கள் தொடங்குவதற்கு அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பகுதியிலே தொடங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இதுபோன்ற ஆதரவற்றோர், முதியவர்களுக்கு அரசு சார்பாகவும் மற்றும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமும் ஆதரவற்ற முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தனியார் தொண்டு நிறுவனங்கள், இதுபோன்ற ஆதரவற்ற முதியோர்களுக்கு தொண்டு நிறுவனங்கள் ஆரம்பிப்பதற்கு முன் வந்தால், அதற்கு ஒருசில நிபந்தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இந்தத் தனியார் தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற இல்லங்கள் ஆரம்பிப்பதற்கு முன்வந்தால் அரசு நிச்சயம் உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 354, திரு. எஸ். மகாலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.



**354—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

***38525—திரு. எஸ். மகாலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம், தெக்கலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் நடப்பாண்டில் அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) திருப்பூர் வட்டம், அவினாசி ஊராட்சி ஒன்றியம், தெக்கலூர் கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய எண்ணங்கள், புதுப்புது ஆராய்ச்சிகள், கால வேகத்தை ஒட்டிய கருத்து மாற்றங்கள் என மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சிந்தனை எனும் பூங்காவினில் தென்றலென வீசி தெளிவும் தெம்பும் பிறந்திட வழி அமைப்போம், நல்லவர்கள் வாரீர்! வாரீர்! இதுவே நமது வேலை என பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின்பால் அக்கறை கொண்டு, நடப்பு நிதியாண்டில் ரூ.597.15 கோடி மதிப்பீட்டில் உலக வங்கி நிதியுதவி பெற்று தமிழ்நாட்டில் சுகாதாரப் பணிகள் திட்டத்திற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதுவரை இல்லாத பெரு முயற்சியாக 29 மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளையும், 241 வட்ட மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளையும் உள்ளடக்கிய மொத்தம் 270 இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள். இது இந்தியாவிலேயே ஒரு முதன்மையான முன்னோடித் திட்டமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய அவினாசி தொகுதி, தெக்கலூர் ஊராட்சியில் சுமார் 7,500–க்கும் மேற்பட்ட மக்கள்

[2005 ஏப்ரல் 13

வசித்து வருகிறார்கள். அங்கு, கர்ப்பிணிப் பெண்கள், பேறுகால தாய்மார்கள், பிரசவ வலி ஏற்பட்டாலோ அல்லது பொது மக்களுக்கு திடீர் தலைவலி, காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட்டாலோ அதிக தொலைவில் உள்ள கோயம்புத்தூர் அல்லது திருப்பூர் செல்ல வேண்டியிருப்பதால் தெக்கலூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த தெக்கலூர் ஊராட்சியினுடைய மக்கள்தொகை 969. அதுமட்டுமல்லாமல், நம்பியான்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் 9 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. அவினாசி அரசு மருத்துவமனை 9 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–20

**திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்துக்கேற்ப நல்ல கருத்தை அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 355, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**355—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

***54251—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஊராட்சி ஒன்றியம், காரைமேடு கிராமத்தில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, காரைமேடு ஊராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் சுமார் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உடல்நிலை சரியில்லாத நேரத்தில் சுமார் 8 கி.மீ. தூரத்தில் உள்ள சீர்காழிக்குத்தான் வரவேண்டிய சிரமமான சூழ்நிலை உள்ளது. எனவே, மேற்கண்ட காரைமேடு ஊராட்சியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கிட அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த ஊராட்சியிலே மக்கள் தொகை 3,981 ஆக இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைமேடு ஊராட்சியிலே உள்ள மக்கள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உள்ள மக்கள் எல்லாம் மருத்துவ சிகிச்சைக்கு சீர்காழிக்கு வரவேண்டிய சூழ்நிலைதான் உள்ளது. மருத்துவத் துறைக்குப் பல நன்மைகளைச் செய்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே காரைமேடு ஊராட்சிக்கு ஒரு நடமாடும் மருத்துவ ஊர்தி வசதியை இந்த ஆண்டே செய்து கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே இதுவரையிலும் இல்லாத அளவுக்கு மலையும்,

[2005 ஏப்ரல் 13

மலைசார்ந்த இடங்களுக்கும், அதேபோல் நோயாளிகள் எளிதிலே செல்ல முடியாத அளவுக்கு இருக்கக்கூடிய கிராமப் பகுதிகளுக்கும் 45 Mobile Medical Units- நடமாடும் மருத்துவமனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய மேலான பார்வைக்கு உங்களுடைய கோரிக்கையை எடுத்துச்சென்று, வருகின்ற நிதியாண்டிலே நிதிநிலைமைக்கேற்ப அரசு ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய ஆலோசனை பெற்று அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஒப்பந்த அடிப்படையிலே மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு அவை தற்போது சிறப்பாகச் செயல்படுகின்றன. அதுபோல ஊராட்சி ஒன்றியங்கள் சார்பாகத் தொடங்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் எல்லாம் தற்போது மருத்துவர்கள் இல்லாமல் செயல்படாமல் இருக்கின்றன. ஆகவே ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களிலும் ஒப்பந்த அடிப்படையிலே மருத்துவர்களை நியமிக்க மாண்புமிகு அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்டு இருக்கக்கூடிய மருத்துவமனைகள்—dispensaries-அத்தனையும் ஊரக வளர்ச்சித் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன. ஊரக வளர்ச்சித் துறையில் தற்சமயம் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோனையைப் பெற்று அவற்றை சுகாதாரத் துறையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆலோசனையைப் பெற்று, வருகின்ற ஆண்டிலே நிதிநிலைமைக்கேற்ப சுகாதாரத் துறையில் எடுப்பதற்கும், அதேபோன்று அங்கே மருத்துவர்களை நியமிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். கனிதா சம்பத்.



2005 ஏப்ரல் 13]

**திருமதி எஸ். கனிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருப்போரூர் தொகுதியில் மறைமலைநகர் பேரூராட்சியாக இருந்ததை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் நகராட்சியாக தரம் உயர்த்தியுள்ளார்கள். அதற்கு அம்மாவுக்கு என் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அப்பகுதியில் சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றார்கள். அதனால் ஏழை எளிய மக்களின் நலனைக் கருதி, அங்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தரப்படுமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–25

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் தரத்தை உயர்த்தியது மட்டுமல்லாமல், மருத்துவமனைகளின் தரத்தையும் உயர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மக்கள் தொகையின் அடிப்படையிலே அந்தந்த இடங்களிலே ஆய்வு செய்து சுகாதாரத் துறைக்கு ஒரு உத்தரவிட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது, தற்பொழுது கூடுதலாக அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தேவைப்படுகின்றன என்று ஒரு அறிக்கை வந்திருக்கின்றது. அதையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, வருகின்ற நிதியாண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று அதற்கும் அரசினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. கணேசன்.

**திரு. வி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மேல்நிலை ஆரம்ப சுகாதார நிலையங்களில் அரசு, 6, 7–க்கு மேற்பட்ட மருத்துவர்களை நியமித்திருக்கின்றது. ஆனால் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒரு டாக்டருக்கு மேல் அங்கே பணிபுரிவதில்லை. இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? குறிப்பாக, மங்களூர் சட்டமன்றத் தொகுதியிலே அமைந்துள்ள Upgraded Primary Health Centre மங்களூரில் அமைக்கப்பட்டுள்ள அந்த சுகாதார நிலையத்தில் ஒரு மருத்துவர் மட்டுமே பணிபுரிகின்றார். அங்கே ஆறு மருத்துவர்கள் பணியாற்றவேண்டும்.

ஆனால் ஒருவர் மட்டுமே இருக்கின்றார். அவர்கூட நிரந்தரமாக பணியாற்றுவதில்லை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகின்றேன். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே தமிழகத்திலே இருக்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதேபோல் மாவட்ட மருத்துவமனைகள், ஆகியவற்றில் மருத்துவர்களை நியமிக்கவேண்டுமென்பதற்காக இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2,322 மருத்துவர்களை நியமிக்க வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே இப்போது இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்களை நியமிப்பதற்காக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றோம். இன்னும் குறைந்தது 20 நாட்களுக்குள்ளாக எந்தெந்த மருத்துவமனைகளில் மருத்துவர்கள் சேரவில்லையோ, அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கும் உத்தரவு இடப்பட்டிருக்கின்றது. ஆகவே உங்களுடைய அந்தத் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் ஒருவர்தான் இருப்பதாகச் சொன்னீர்கள். அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அந்த மருத்துவர் பணியில் அமராவிட்டால் அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள்

## (பட்டியல்கள் 15 முதல் 18 வரை) @

## (இ) உடுக்குறியிடாத வினாக்கள்

## (பட்டியல் 19) @@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

---

@ 163 முதல் 623 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@@ 624 முதல் 705 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.





# 4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

## தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker Sir, I oppose the introduction of the Bill.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2005 ஏப்ரல் 13

## 5. அரசினர் தனித் தீர்மானம்

### திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தனித் தீர்மானம். திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம் ஒன்றைக் கீழ்க்கண்டவாறு பேரவையில் முன்மொழிகின்றேன்:

**திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோரும் தீர்மானம்:**

"தெய்வப் புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்ட இறவாத இலக்கியமாகிய திருக்குறள், இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக அறிவிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை விழைகின்றது.

எழிலார்ந்த இலக்கிய வடிவம், ஆழ்ந்த கருத்துகள், அறத்தை, நீதியை விளக்கும் அற்புதம், உலகளாவிய பார்வை ஆகியவற்றால் உலக இலக்கியத்தில் தன்னேரில்லாத தனி இடத்தைப் பெற்றது திருக்குறள்.

மானுடப் பண்புகளை விளக்கி, மனித குலத்திற்கு மாபெரும் அறநூலாய் விளங்கும் மகத்தான நூல் திருக்குறள். காலத்தை வென்று நிற்கும் ஞானக் களஞ்சியமாய் ஞாலத்தில் உயர்ந்து நிற்பது திருக்குறள். புனித நூலாம் பைபிளுக்கு அடுத்தபடியாக, உலக அளவில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தனிப்பெரும் சிறப்பு திருக்குறளுக்கே உரியது.

மக்களாட்சித் தத்துவம், அரசியல், ஆட்சி அமைப்பு ஆகியவற்றைப் பற்றிய அடிப்படைக் கொள்கைகளோடு, இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள இணையற்ற கோட்பாடுகளாகிய சமயம் சாராத தன்மை, சமூக நீதி ஆகியவற்றைப் பற்றியும், அரிய பல கருத்துகளைத் தன்னகத்தே கொண்ட திருநூல் திருக்குறள். தொன்மை வாய்ந்த நமது மரபையும், புதுமை வாய்ந்த குடியாட்சிக் கோட்பாடுகளையும் கொண்டது திருக்குறள்.



2005 ஏப்ரல் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முற்பகல் 11–30

மானுடத்தின் விழுமிய பண்புகளை, அது அறம் சார்ந்ததாயினும் சரி, உலகியல் சார்ந்ததாயினும் சரி, அவற்றை உலகளாவிய அளவில் எடுத்து இயம்பும் சமயம் சாராத ஓர் உன்னத நூல் திருக்குறளைத் தவிர, வேறு ஒன்று இன்னும் எழுதப்படவில்லை என்பதே உண்மையாகும். சாதி மத பேதங்களுக்கு அப்பாற்பட்டு, சகல மனிதருக்கும் பொது நீதியை உரைக்கும் திருமறை திருக்குறளாகும். இந்தியக் குடியாட்சியின் சமயம் சாராத இயல்புக்கு ஏற்ற ஒரே நூல் திருக்குறள்தான்.

சங்க காலமாகிய கி.மு. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட தொன்மை வாய்ந்ததாயினும், இன்றைய நவீன குடியாட்சித் தத்துவங்களுக்கு ஏற்ற முறையில் அரசியல் தத்துவத்தை விளக்கும் திருக்குறள், இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியம் என்னும் சிறப்பைப் பெறுவதற்கு முற்றும் தகுதி வாய்ந்தது. அன்பு, அருள், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், விருந்தோம்பல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவு நிலைமை, பயனில சொல்லாமை, ஈகை, புகழ், வாய்மை, கொல்லாமை, இறைமாட்சி, கல்வி, பெரியாரைத் துணைகோடல், செங்கோன்மை, கண்ணோட்டம், ஊக்கம் உடைமை, ஆள்வினை உடைமை, சொல் வன்மை, அவை அஞ்சாமை, பொருள் செயல் வகை, மருந்து, குடிமை, மானம், பெருமை, சான்றாண்மை, உழவு, ஒழுக்கம், நட்பு போன்றவை பற்றிய காலத்தால் அழியாத கருத்துகளை ஞாலத்திற்குத் தந்திருக்கும் நன்னூல் திருக்குறள். இவ்வாறு, உலகைத் தழுவும் அகலப் பார்வையைக் கொண்டிருந்தபோதிலும், ஆழமான கருத்துகளை மிகச் சிறிய வடிவான குறள் வெண்பா வடிவில் திருவள்ளுவப் பெருமான் வடித்திருக்கும் திறம் எண்ணி எண்ணி வியக்கத்தக்கது.

ஒவ்வொரு திருக்குறள் மட்டும் அன்றி, அந்தக் குறளின் ஒவ்வொரு சீரும் செதுக்கி வடிவமைக்கப்பட்ட சிறப்பை உடையது. எக்காலத்திற்கும் பொதுவான கருத்துகளை இயம்பும் நூல் என்பதால், தற்காலத்திலும் ஒவ்வொரு மனிதனும் பின்பற்ற வேண்டிய உன்னத நூல் என்று திருக்குறள் ஒன்றை மட்டுமே நாம் சொல்ல இயலும்.

இத்தகைய இணையற்ற சிறப்புகளைப் பெற்றிருக்கும் ஈடற்ற திருமறையாகிய திருக்குறளை, இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்பது, இந்தப் பேரவையில் உள்ள ஒவ்வொருவருடைய விருப்பமும் ஆகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 13

எனவே, உலகச் சிந்தனையின் மணிமுடியாகவும், தமிழ் மொழியின் தலையாய அணிகலனாகவும் விளங்கும் வான்புகழ் கொண்ட திருக்குறளை, இந்தியத் திருநாட்டின் தேசிய இலக்கியமாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும் என்று இப்பேரவை பெரிதும் விழைகிறது.

திருக்குறளைத் தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று, பல ஆண்டுகளாக தமிழ்ச் சான்றோர்களும், அறிஞர் பெருமக்களும் வலியுறுத்தி வந்த வேண்டுகோளுக்கிணங்க, 16–9–2004 அன்று, மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அளித்திட்ட கோரிக்கை மனுவை ஒட்டி, உலகப் பொதுமறையாகவும், தேசியத் திருமறையாகவும் விளங்கும் திருக்குறளை, தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று இப்பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒருமனதாக நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழியப்பெற்ற அரசினர் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை.

தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

(குறுக்கீடு) பேராசிரியர் அவர்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** எதிர்க் கட்சிகள் சார்பாக ஒரு கருத்தைச் சொல்லக்கூட வாய்ப்பு இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்பதுதான். தங்களுடைய, தாங்கள் கொடுத்த அந்தத் திருத்தம் சேர்க்கப்பட்டுவிட்டது. அதனாலே வேறு ஏதும் இல்லையென்று நினைத்தேன் நான்.



2005 ஏப்ரல் 13]

**பேராசிரியர் க. அன்பழகன்:** அதை அந்த மாதிரி நீங்கள் announce பண்ணிவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் கொடுத்த திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. பேராசிரியர் அவர்கள் கொடுத்த திருத்தம் சேர்க்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத் தனி நபர் தீர்மானத்தைத் தொடர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதை வேறு நேரங்களில் பேசுங்கள்.

## 6. விதி 110–ன்கீழ் அறிக்கை

### விவசாயிகள், நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் பயன்பெறும் வட்டி குறைப்புத் திட்டம்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் வளத்திற்கும், கிராம மக்களின் வாழ்க்கை நலத்திற்கும் அடிப்படையாக வேளாண் தொழில் அமைந்துள்ளது. வாழுகின்ற மனிதருக்கெல்லாம் உணவு அளித்து உயிர் அளிக்கும் வேளாண் தொழிலை வெல்லும் தொழில் வேறு எதுவும் இல்லை என்பதே இந்த உலகம் கண்ட நடைமுறை. அதனால்தான் வள்ளுவப் பெருமானும்

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்று கூறியிருக்கிறார். அதுமட்டுமல்ல, உழவு செய்கின்றவர்கள் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள், அவர்கள் ஏனையோரைத் தாங்குகின்றனர் என்று வேளாண் தொழில் செய்வோரை உயர்த்திக் கூறுகிறார் வள்ளுவர்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 13

முற்பகல் 11–35

இப்படி இவ்வுலகின் ஏனையோர் அனைவரையும் தாங்குகின்ற விவசாயிகளை, துன்பம் அணுகாது தாங்குகின்ற அரசாக எனது அரசு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த நான்கு ஆண்டுகளாக விவசாயிகள் நலன் காக்கவும், அவர்களது வாழ்க்கை வளம் பெறவும் எனது அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இந்த உண்மையைத் தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டும்.

2001 ஆம் ஆண்டில் நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், 30–6–2000 அன்றைய தேதியில், தவணை கடந்து, நிலுவையாக இருந்த கடன்களைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு, அவர்கள் பெற்ற கடன்கள் மீதான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்ய உத்தரவிட்டு இதற்காக 310.51 கோடி ரூபாய் அனுமதித்து நான் ஆணையிட்டேன்.

2002–2003 ஆம் ஆண்டில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவிடும் வகையில், அவர்கள் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற பயிர்க் கடன்களின் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்து, இதற்காக 61.05 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன்.

2002–2003 ஆம் ஆண்டு குறுவையில் விவசாயிகள் பெற்ற குறுகிய கால (Short Term) பயிர்க் கடன்களை, நடுத்தர காலக் (Medium Term) கடன்களாக மாற்றுவதற்காக, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு Tamil Nadu State Apex Co-operative Bank–ற்கு எனது அரசு 20 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கியது.

மேலும், நீலகிரி மாவட்டத் தேயிலை விவசாயிகள் பெற்ற நீண்ட காலக் கடன்கள்மீது, 31–12–2003 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த தவணை கடந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, அதற்கென என்னுடைய அரசு 1.80 கோடி ரூபாய் வழங்கியது.

கடும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 2003–2004 ஆம் ஆண்டில் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து பெற்ற குறுகிய காலக் கடன்கள் மீதான வட்டித் தொகை 62 கோடி ரூபாயை என்னுடைய அரசு தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.



2005 ஏப்ரல் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

1999 ஆம் ஆண்டிற்கு முன்னர் மாற்றி அமைக்கப்பட்டு 31–3–2004 அன்றைய தேதியில் நிலுவையில் இருந்த உறுப்பினர்களின் நடுத்தரக் கால மாற்றுக் கடன்–Medium Term Conversion Loan – மற்றும் நடுத்தரக் கால மறு மாற்றுக் கடன் — Medium Term Conversion Rephasement Loan— ஆகிய கடன்களை, வட்டி இல்லாத் தொகுப்புக் கடனாக – Blocked Loan Amount – ஆக மாற்றி என்னுடைய அரசு உத்தரவிட்டது. இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட நாளிலிருந்து, இரண்டு ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு விவசாயிகள் அடுத்த 5 ஆண்டுகளில் கடன்களைத் திருப்பிச் செலுத்தவும் வகை செய்யப்பட்டது. இத்திட்டத்திற்காக என்னுடைய அரசு 68.95 கோடி ரூபாய் வழங்கி ஆணையிட்டது.

இவ்வாறாக, கடந்த 4 ஆண்டுகளில், விவசாயிகளுக்குக் கடன்களைத் தள்ளிவைப்பதற்கும், தீர்வு செய்வதற்கும், வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்யவும்; பல்வேறு சலுகைகளை அறிவித்து, அதற்கென மொத்தம் 524.31 கோடி ரூபாய் அனுமதித்து நான் உத்தரவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முந்தைய தி.மு.க. அரசு, 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்களில், 7 சதவீத வட்டி ஊக்குவிப்பு திட்டம் — Interest Incentive Scheme — ஒன்றை அறிவித்தது. ஆனால், அவ்வாறு திட்டம் அறிவிக்கப்பட்டதே தவிர, அதற்கென நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. என்னுடைய அரசுதான், இதற்காகவும் 34.24 கோடி ரூபாயைக் கூட்டுறவு வங்கிகளுக்கு அனுமதித்து உத்தரவிட்டது.

மேலும், இந்தியாவிலேயே முதன்முறையாக, என்னுடைய அரசுதான் பயிர்க் கடன்கள் மீதான வட்டியை 12 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைத்து ஆணையிட்டது.

மேலும், வறட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள், கூட்டுறவு வங்கிகளில் பெற்ற பயிர்க் கடன் வசூல் செய்வதை வறட்சி ஆண்டுகளில் நிறுத்திவைத்து அவர்களுக்கு என்னுடைய அரசு நிவாரணம் வழங்கியுள்ளது.

கூட்டுறவு வங்கிகள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்தித்து வருகின்றபோதிலும், 2004–2005 ஆம் ஆண்டில், 1,064 கோடி ரூபாய் அளவிற்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது, முந்தைய ஆண்டில், அதாவது, 2003–2004 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் அளவைவிட 73 சதவீதம் அதிகமாகும்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 13

முற்பகல் 11–40

மேலும், என்னுடைய அரசு 31–3–2004 அன்று நிலுவையாக இருந்த பயிர்க் கடன் மற்றும் அதன் மீதான வட்டியை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தும் கடனாக மாற்றி அமைத்து, அதில் முதல் இரண்டு ஆண்டுகளுக்குக் கடனைக் கட்ட வேண்டியது இல்லை என்றும், அடுத்த மூன்று ஆண்டுகளில் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இதன்படி, 2,598 கோடி ரூபாய் அளவில் நிலுவையில் இருந்த கடன் மற்றும் வட்டியை 5 ஆண்டு காலக் கடனாக மாற்றி அமைக்க வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, மாற்றி அமைக்கப்பட்ட கடனுக்கான வட்டியையும் என்னுடைய அரசு 12 சதவீதத்திலிருந்து 9 சதவீதமாகக் குறைத்து உத்தரவிட்டது. இதனால், லட்சக்கணக்கான விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர்.

உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்தின்போது பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர்கள் பலர் விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்தனர். கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டு துன்பத்திற்கு ஆளான விவசாயிகள் வாழ்க்கை வளம் பெற்றிட வேண்டும்; அவர்களது துயரம் துடைக்கப்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் எனது அரசு இவ்வளவு சலுகைகளையும் அவர்களுக்கு வழங்கி உள்ளது. இதற்கு மேலும் பயிர்க் கடன்கள்மீது நிவாரணம் அளிக்க வேண்டும் எனில் அதற்கு மத்திய அரசு மற்றும் நபார்டு வங்கியின் ஆதரவு இருந்தால்தான் முடியும். இவ்வாறு நிவாரணம் வழங்குவதற்கு, மத்திய அரசும், நபார்டு வங்கியும் அனுமதி வழங்குவதோடு மட்டும் நில்லாமல் நிதி உதவியும் அளிக்க வேண்டும். ஏனென்றால் மாநில அரசால் மட்டுமே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க இயலாது.

இதுவரை வழங்கப்பட்ட கடன் நிவாரணங்களில் பெரும்பாலானவை குறுகிய கால பயிர்க் கடன் பெற்ற விவசாயப் பெருமக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இதேபோன்று, தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிளிடமிருந்து Primary Co-operative Agriculture and Rural Development Bank–களிடமிருந்து நீண்ட காலக் கடன் Long Term Loan பெற்ற விவசாயப் பெருமக்களுக்கும்; தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் Primary Agriculture Co-operative Bank–களில், நடுத்தரக் கடன் Medium Term Loan— பெற்ற விவசாய பெருமக்களுக்கும்; நகரக் கூட்டுறவு



2005 ஏப்ரல் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வங்கிகளில் Urban Co-operative Bank–களில், கடன் பெற்றவர்களுக்கும் சலுகைகள் வழங்கிட நான் தற்போது முடிவு எடுத்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த மூன்று ஆண்டுகளில் மாநிலத்தில் நிலவிய கடுமையான வறட்சியினைக் கருத்தில்கொண்டு, 31–3–2004 அன்றைய தேதியில் விவசாயிகளால் திருப்பிச் செலுத்தப்படாத நீண்ட காலக் கடன் பாக்கியை மாற்றி அமைக்கும் திட்டம் ஒன்றை நபார்டு வங்கி அறிவித்துள்ளது. ஆனால், நபார்டு வங்கிக்கு தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையினை மாற்றி அமைக்க இதுவரை நபார்டு வங்கி முன் வரவில்லை. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்று தவணை பாக்கி வைத்துள்ள விவசாயிகளுக்கும், ஏனைய கடன்தாரர்களுக்கும் நிவாரணம் அளிப்பதை மேலும் தாமதப்படுத்த முடியாது என்பதால் அவர்கள் பயன்பெறும் வகையில், "ஒரு முறை கடன் தீர்வுத் திட்டம்" என்னும் புதிய திட்டம் ஒன்றை –One Time Settlement Scheme–ஐ செயல்படுத்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்படி, சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் 31–3–2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக Non Performing Assets–ஆக நிலுவையிலுள்ள அசல் மற்றும் வட்டியினைச் செலுத்துவோருக்கு 31–3–2001 அன்றுள்ள அபராத வட்டி 1–4–2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான வட்டி, (Interest) கூடுதல் வட்டி (Interest on overdues) மற்றும் அபராத வட்டி (Penal interest) ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் மூலம் 1,78,550 சிறு மற்றும் குறு விவசாயிகள் 145.90 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நீண்ட காலப் பண்ணைக் கடன் Long Term Farm Sector Loan பெற்ற பெரிய விவசாயிகளைப் பொறுத்தவரையில் 31–3–2001 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையிலுள்ள அசல், வட்டி மற்றும் 1–4–2001 முதல் செலுத்தும் தேதி வரை உள்ள வட்டியில் 50 சதவீதம் செலுத்துவோருக்கு 31–3–2001 அன்று நிலுவையில் இருந்த அபராத வட்டியும் 1–4–2001 முதல் செலுத்தும் தேதி வரைக்கான

வட்டியில் 50 சதவீதமும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–45

இதன்மூலம், 57,430 பெரிய விவசாயிகள் 92.12 கோடி ரூபாய் அளவுக்கு வட்டிச் சலுகை பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இதர பண்ணை சாரா – Non Farm Sector – கடன்தாரர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் 31–3–2003 அன்று செயல் இழந்த சொத்துகளாக நிலுவையிலுள்ள அசலையும், செலுத்தும் தேதி வரையிலான மொத்த வட்டியினையும் செலுத்தினால், 31–3–2003 அன்று நிலுவையிலுள்ள அபராத வட்டி, அதன் பின்னர் விதிக்கப்படும் கூடுதல் வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியவை முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் 17,990 கடன்தாரர்கள் 42.28 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஒரு முறை கடன் தீர்வுத் திட்டத்தின் மூலம் – One Time Settlement Scheme மூலம் விவசாயிகள் மற்றும் இதர கடன்தாரர்கள் மொத்தம் 2,53,970 பேர் பயனடைவார்கள். இவர்களுக்கு 280.30 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்தின்கீழ் கடன்தாரர்கள் தாம் செலுத்த வேண்டிய தொகையை ஒரே தவணையில் செலுத்தலாம் அல்லது அதில் குறைந்தபட்சம் 25 சதவீதத் தொகையை மூன்று மாதத்திற்குள் செலுத்தி மீதமுள்ள தொகையினை அடுத்த ஆறு மாதத்திற்குள் உரிய வட்டியுடன் செலுத்தலாம்.

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை ஓரளவு ஈடுகட்டும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கு –Tamil Nadu Co-operative State Agriculture and Rural Development Bank–ற்கு 15 கோடி ரூபாய் அனுமதித்து நான் ஆணை பிறப்பித்துள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் – Primary Agriculture Co-operative Banks – விவசாயிகளுக்கு நடுத்தரக் காலக் கடன்கள் வழங்குகின்றன. இக்கடன்கள் கறவை மாடுகள் வாங்குதல், டிராக்டர்





மற்றும் விவசாய உபகரணங்கள் வாங்குதல், கோழி வளர்த்தல், பட்டுப் பூச்சி வளர்த்தல், பழத் தோட்டம் அமைத்தல் போன்ற விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படுகின்றன. இக்கடன்களை வழக்கமாக மூன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்குள் கடன்தாரர்கள் திருப்பிச் செலுத்த வேண்டும். தமிழகத்தில் தொடர்ந்து நிலவிய வறட்சியினால் விவசாயிகளால் இந்தக் கடன்களை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்த இயலவில்லை. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 31–3–2004 அன்றைய தேதியில் 356.01 கோடி ரூபாய் அளவுக்கு நடுத்தரக் காலக் கடன் நிலுவையில் உள்ளது. இந்தக் கடனையும் நபார்டு வங்கியின் வழிமுறையின்படி முதல் 2 ஆண்டுகளுக்குக் கடன் தவணை ஒத்திவைப்பு அளித்து, அடுத்த மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய கடனாக மாற்ற நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மட்டுமல்லாது நகர்ப்புறங்களில் வாழும் நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்களும் பயன்பெறக்கூடிய வட்டிக் குறைப்புத் திட்டத்தையும் இந்தப் பேரவைக்கு அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

என்னுடைய தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு, 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் அறிவிக்கப்பட்டு, நகரக் கூட்டுறவு வங்கிகளில் – Urban Co-operative Bank–களில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் நெசவாளர்கள், சிறு வியாபாரிகள் மற்றும் கைவினைஞர்கள் உள்ளிட்ட மொத்தம் 13,612 பயனாளிகள் 3.21 கோடி ரூபாய் அளவிற்கு ஏற்கெனவே வட்டிச் சலுகை பெற்றுள்ளனர். மேலும், நகரக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதங்கள் 1–2–2003 முதல் குறைக்கப்பட்டுள்ளன. நகரக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள நெசவாளர்கள் மற்றும் இதர பயனாளிகள் ஏற்கெனவே பெற்ற தங்களது பழைய கடன்களுக்குத் தற்போதைய குறைந்த வட்டி வீதமே விதிக்கப்பட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்தார்கள். இதனைப் பரிவுடன் பரிசீலனை செய்து நடப்பு வட்டி வீதத்திலேயே 1–4–2001 முதல் வட்டி வீதத்தை மாற்றி அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் நிலுவையிலுள்ள அனைத்துக் கடன்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்தின்கீழ் பயனடைய விரும்புவோர் 3 மாத காலத்திற்குள் 25 சதவீத கடன் நிலுவையைச் செலுத்தி வங்கியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். மீதமுள்ள தொகையை அடுத்த

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2005 ஏப்ரல் 13

ஆறு மாத காலத்திற்குள் முழுமையாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்மூலம் 98,481 கடன் பெற்றவர்கள் 11.10 கோடி ரூபாய் அளவிற்கு வட்டிச் சலுகையைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது நான் அறிவித்துள்ள பல்வேறு சலுகைகள், கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றுள்ள விவசாயப் பெருமக்கள், நெசவாளர்கள் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினரின் சுமையை வெகுவாகக் குறைத்து, அவர்கள் தங்களது கடன்களை எளிதில் திருப்பிச் செலுத்த, உற்ற உதவியாக அமையும். அவர்களது தேவை அறிந்து நான் அறிவித்துள்ள இந்தச் சலுகைகளை, அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–50

## 7. கவன ஈர்ப்பு

### (அ) சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயிலுக்குப் புறவழிச் சாலை அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோயிலில் புறவழிச் சாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

### அறிக்கை

சட்டமன்ற உறுப்பினர் திரு. நா. சந்திரமோகன் அவர்கள் புறவழிச் சாலை அமைக்கக் கோரும் பகுதியானது கும்பகோணம்–சீர்காழி (மாநில நெடுஞ்சாலை) சாலையில் கி.மீ. 48/2–ல் பிரிந்து அதே சாலையில் கி.மீ. 50/4–ல் சேருகின்ற சாலைப் பகுதியாகும். இப்பகுதியில் அமைந்துள்ள வைத்தீஸ்வரன் கோயில் இந்துக்களின் முக்கிய புண்ணிய தலமாகும். விசேட காலங்களில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. எனவே, இங்கு புறவழிச் சாலை அமைப்பது அவசியமாகும். சுமார் 6.00 கி.மீ. நீளமுள்ள சாலையினை நில எடுப்பு, பாலம் உட்பட புதிதாக அமைப்பதற்குத் தோராயமாக ரூ.3.00 கோடி தேவைப்படும். தற்போது இப்பணி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்டம் எதிலும் இடம் பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சந்திரமோகன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அதில் குறிப்பாக, புறவழிச் சாலை அமைப்பது அவசியம் என்றும், தற்போது இப்பணி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள திட்டத்தில் ஏதும் இடம் பெறவில்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் உள்ள வைத்தீஸ்வரன் கோயில், மிகவும் பிரசித்தி பெற்ற நவக்கிரக ஸ்தலங்களில் ஒன்றான செவ்வாய் ஸ்தலம் ஆகும். இங்கு அருள்மிகு முத்து குமாரஸ்வாமி, தையல்நாயகி அம்மன், நோய்களையெல்லாம் தீர்த்து வைக்கும் வைத்தியநாத சுவாமி போன்ற திருக்கோயிகள் உள்ளன. ஒவ்வொரு மாதமும் கிருத்திகைத் திருவிழா சிறப்பாக நடைபெறும். இத்திருக்கோயிலுக்கு இந்தியாவில் இருந்தும், பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளி நாடுகளிலிருந்தும், சுற்றுலாப் பயணிகளும், பக்தர்களும் அதிக அளவிலே வந்து செல்கின்றனர். சீர்காழியில் இருந்து மயிலாடுதுறை செல்லும் மாநில நெடுஞ்சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது. இந்தச் சாலை மிகவும் குறுகிய வளைவுகளைக் கொண்ட நெருக்கடியான சாலை ஆகும். (குறுக்கீடுகள்) கேள்வியாகத்தான் வருகிறது. கேள்வியாகத்தான் வருகிறது. இச்சாலையில் தினமும் 8,800 வாகனங்கள் வைத்தீஸ்வரன் கோயிலைக் கடந்து செல்கின்றன. இவ்வூருக்கு அருகில் உள்ள தலைஞாயிறு சர்க்கரை ஆலைக்கு, கரும்பு ஏற்றிச் செல்லும் டிராக்டர்கள் மற்றும் லாரிகள் தேங்கி நின்று போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்துவதனால் அடிக்கடி விபத்துகள் நடந்து உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. இதன்

[திரு. நா. சந்திரமோகன்] [2005 ஏப்ரல் 13

அவசர அவசியம் கருதி, நடப்பு நிதியாண்டில் வைத்தீஸ்வரன் கோயிலில், ஒரு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்தீஸ்வரன் கோயிலினுடைய புறவழிச் சாலையின் அவசியம் பற்றி இங்கு விரிவாக எடுத்துக் கூறினார்கள். வரும் காலங்களில் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய ஆணையினைப் பெற்று முன்னுரிமை அடிப்படையில் இப்பணியை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (ஆ) புதுக்கோட்டை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியை மாவட்டச் சிறைச்சாலையாக மாற்றுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத் தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் உள்ள இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியை மாவட்டச் சிறைச்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### அறிக்கை

தற்போதைய புதுக்கோட்டையில் உள்ள இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியின் மொத்த நிலப் பரப்பளவு 23.45 ஏக்கர் ஆகும். இதில் பிரதான சிறை 2.96 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது. மேலும் இவ்வளாகத்தில் 40 சிறைவாசிகளை அடைப்பாகக் கொண்ட கிளைச்



2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சிறையும் உள்ளது. ஆகவே, இச்சிறைப் பள்ளியை மாவட்டச் சிறையாக மாற்றி அமைக்கப் போதுமான இடவசதி இங்கு உள்ளது. இச்சிறைப் பள்ளியின் மொத்த அடைப்பு எண்ணிக்கை 405 ஆகும். ஆனால், தற்போதைய அடைப்பு எண்ணிக்கை 6 (ஆறு) மட்டுமே.

2. ஆகவே, தற்போதைய புதுக்கோட்டை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியைப் பராமரித்து வரும் ஊழியர்களைக் கொண்டே இச்சிறைப் பள்ளியை மாவட்டச் சிறையாக மாற்றியும், அதே வளாகத்தில் இயங்கி வரும் கிளைச் சிறையை, இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியாக மாற்றியமைக்கவும் கூடுதல் சிறைத் துறை இயக்குநர் தற்போது அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. எனவே, இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். கேட்கின்ற அத்தனை கோரிக்கைகளையும் நிறைவேற்றுகின்ற அரசாக "கேட்டால் கிடைக்கும், தட்டினால் திறக்கும்" என்பதை அடிப்படைத் தாரக மந்திரமாக வைத்து சிறப்பாகச் செயல்பட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்களினுடைய நல்லாட்சியிலே, மாவட்டச் சிறையாக மாற்றுகின்ற செயற்குறிப்பு பெறப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்து இருக்கின்ற அமைச்சர் அவர்களுக்கு, மாவட்ட மக்கள் சார்பிலே என்னுடைய நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். புதுக்கோட்டை பார்ஸ்டல் பள்ளியிலே இப்போது 6 கைதிகள் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று விவர அறிக்கையிலே இருக்கின்றது. ஆனால் புதுக்கோட்டை, திருச்சி சென்ட்ரல் ஜெயிலிலே ஏறத்தாழ 2,700 கைதிகள் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதிலே புதுக்கோட்டை மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மட்டுமே 700 கைதிகள் அங்கே இருக்கிறார்கள்.

ஆகையினாலே இங்கே புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள எல்லாக் கைதிகளையுமே இதுபோன்ற புதுக்கோட்டை சிறையிலே அடைக்கின்றபோது அரசினுடைய நிர்வாகச் செலவும் குறைகின்றது, பொதுமக்களுக்கும் மிகுந்த சிரமங்கள் குறைகின்றன. ஆகையினாலே இதை உடனடியாகப் பரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நடப்பு ஆண்டிலேயே ஆணை வழங்கி அதைப் பொது ஜெயிலாகச் செயல்படுத்த முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2005 ஏப்ரல் 13

முற்பகல் 11–55

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கோட்டையில் இருக்கின்ற இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியினை மாவட்டச் சிறையாக மாற்றுவது குறித்து இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவருடைய கோரிக்கை நிறைவேறுவதற்கு பக்கத்தில் இருக்கின்ற, திருச்சி மாவட்டத்தையும், தஞ்சாவூர் மாவட்டத்தையும் துணைக்கு அழைத்து இங்கு அவர் சில கருத்துகளையும் சொல்லியிருக்கின்றார். புதுக்கோட்டையில் இருக்கின்ற இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியினுடைய மொத்த நிலப் பரப்பு 23.45 ஏக்கர் ஆகும். இதில் ஏற்கெனவே இருக்கின்ற அந்தப் பிரதான சிறை 2.96 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. மேலும் இந்த வளாகத்தில் 40 சிறைவாசிகளை அடைப்பதற்கு ஏதுவாக ஒரு கிளைச் சிறையும் இருக்கின்றது. இந்த வளாகத்தில் இருக்கின்ற--ஏற்கெனவே இருக்கின்ற--இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியில் இருக்கின்ற பணியாளர்களைக் கொண்டே அதனை மாவட்டச் சிறையாக மாற்றுவதற்கு அரசினுடைய ஆய்வில், இந்தச் செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, அதே வளாகத்தில் இயங்கிவரும் கிளைச் சிறையை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியாக மாற்றியமைக்கவும், தற்போது அந்த இளங்குற்றவாளிகள் சிறையினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று மாவட்டச் சிறையாக மாற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

## (இ) சேது சமுத்திரத் திட்டம் – இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் விட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தடையாணையை நீக்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. அன்வர் ராஜா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. அ. அன்வர் ராஜா. (குறுக்கீடு)



2005 ஏப்ரல் 13]

## 5. அரசினர் தனித் தீர்மானம்–தொடர்ச்சி

### திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோருதல்–தொடர்ச்சி

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருக்குறள் பற்றி படித்த அந்தத் தீர்மானத்தில் எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் கொடுத்த ஒரு திருத்தத்தை ஏற்றுக்கொண்டேன் என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால், பத்திரிகையாளர்களும், மற்றவர்களும் அது என்ன திருத்தம் என்று கேட்கிறார்கள். அருள்கூர்ந்து நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள், பேராசிரியர் என்ன திருத்தம் கொடுத்தார், அதை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார் என்பதை விளக்கிச் சொன்னால் உறுப்பினர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. சேர்த்துப் படித்துவிட்டார்கள். சேர்த்துப் படித்து, (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** சரி. என்ன சொன்னார், என்ன word, என்ன sentence என்று பத்திரிகைகளுக்குத் தெரியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு தீர்மானம் வரையப்பட்டு அதன் நகல் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தது. நான் இந்த அவைக்கு வந்த பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார் அதையும் இணைக்க வேண்டும் என்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அதனால் நான் அந்தத் தீர்மானத்தை வாசிக்கும்போது அதையும் இணைத்து சேர்த்து படித்தேன். பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படும் நகல்கள் இனிமேல் திருத்தப்பட்டு புதிய நகல்கள் கொடுக்கப்படும்.

**திரு. துரைமுருகன்:** திருத்தத்தை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி. எனக்கு உள்ளபடியே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கொடுத்ததை ஏற்றுக்கொண்டீர்கள் என்பது பெருமைதான். ஆனால் அவர் என்ன திருத்தம் சொன்னார் என்று கேட்கிறார்கள். என்ன word -ஆ அல்லது sentence –ஆ என்று தெரியாது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கொடுத்த திருத்தத்தைப் பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்காக நான் அனுப்பிவிட்டேன். தற்போது என்னிடத்தில் இல்லை. தீர்மானத்தை வாசிக்கின்றபோது நான் வாசித்தேன்.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா தமிழ்ச் சான்றோருடைய வேண்டுகோளுக்கிணங்க என்றுதான் கொடுத்திருந்தார்கள். பொதுவாகக் கொடுத்திருந்தார்கள். அது சேர்க்கப்பட்டுவிட்டது. திரு. அன்வர் ராஜா. (குறுக்கீடு) இல்லை. இதிலே இனிமேல் விவாதம் வேண்டாம். திரு. அன்வர் ராஜா. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, இல்லை. நீங்கள் தனியார் தீர்மானம் கொடுத்திருந்தீர்கள். அதற்கு விதிமுறை இருக்கிறது. தனியார் தீர்மானம் என்பதற்கு விதிமுறை இருக்கிறது.

## 7. கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

### (இ) சேது சமுத்திரத் திட்டம் – இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் விட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தடையாணையை நீக்குதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேது சமுத்திரத் திட்டத்தின் காரணமாக இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதில் உள்ள தடை ஆணையை நீக்க வேண்டிய அவசியம் குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**அறிக்கை**

சேது சமுத்திரத் திட்டத்தினை அமல்படுத்த இராமநாதபுரம் மற்றும் இராமேஸ்வரம் ஆகிய வட்டங்களில், அரசு ஆணை (நிலை) எண் 812, வருவாய்த் துறை, நாள் 16–3–1964–ன்படி, இராமநாதபுரம் வட்டத்தில் 5,877.80 ஏக்கர் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம், 19,124.24 ஏக்கர் பல்வேறு இதர அரசு புறம்போக்கு நிலம் மற்றும் இராமேஸ்வரம் வட்டத்தில் 4,798.32 ஏக்கர் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலம் மற்றும் 7,891.94 ஏக்கர் பல்வேறு இதர அரசு புறம்போக்கு நிலம் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.



2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

சேது சமுத்திரத் திட்டத்தின் இறுதி வடிவமாக சர்வதேச கடல் எல்லைக்கு அருகே 3 கடல் மைல் தூரத்தில் ஆடம் பாலம் வழியாகச் செல்லும் திட்டம் செயல்படுத்தத் தேவைப்படும் நிலத்தினைத் தவிர பாக்கியுள்ள நிலத்தினைத் தடையாணையிலிருந்து நீக்கவும், சேது சமுத்திரத் திட்டத்தினைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் இடம் குறித்து தூத்துக்குடி துறைமுகத் தலைவருடன் நடத்தப்பட்ட கலந்தாய்வின்போது இவ்விடமானது பாம்பன் பாலத்திற்கு அப்பால் தனுஷ்கோடி வரை இராமேஸ்வரம் வட்டத்தில் உள்ள அரசு புறம்போக்கு 850.7 ஹெக்டேர் நிலமும், இராமநாதபுரம் வட்டத்தில் மண்டபம் அருகே தடைக்குட்பட்ட இடத்தில் அரசு புறம்போக்கு சுமார் 5 ஹெக்டேர் நிலமும் சேது சமுத்திரத் திட்டச் செயல்பாட்டிற்குப் போதுமானது எனவும், இராமநாதபுரம் வட்டத்தில் எஞ்சிய நிலங்களை சேது சமுத்திரத் திட்டத் தடையாணையிலிருந்து விலக்களிக்க நடவடிக்கை எடுக்கலாம் என்ற தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகத் தலைவரின் கருத்தினை ஏற்று சேது சமுத்திரத் திட்டத்திற்குத் தேவைப்படும் நிலம் போக எஞ்சிய நிலங்களைத் தடையாணையிலிருந்து நீக்கி பட்டா வழங்கலாம் என்ற இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் இது குறித்த அரசாணை வெளியிடப்படும். (குறுக்கீடு)

## 5. அரசினர் தனித் தீர்மானம்—தொடர்ச்சி

### திருக்குறளை இந்தியாவின் தேசிய இலக்கியமாக அறிவிக்கக் கோருதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, தனி நபர் தீர்மானம் கொடுப்பதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. எத்தனை நாட்களுக்கு முன்னால் கொடுக்க வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அந்த விதிமுறைகளை நீங்கள் பின்பற்றவில்லை, அதனால்தான் அது மறுக்கப்பட்டது. வேறு காரணம் ஒன்றும் இல்லை. என்ன கொடுத்திருக்கிறீர்கள் என்பது அல்ல. உட்காருங்கள். அதுதான் நீங்கள் அப்போதே கேட்டீர்கள், பதில் சொல்லிவிட்டேனே.

[2005 ஏப்ரல் 13

நண்பகல் 12–00

## 7. கவன ஈர்ப்பு–தொடர்ச்சி

### (இ) சேது சமுத்திரத் திட்டம் – இராமேஸ்வரம் மற்றும் இராமநாதபுரம் வட்டங்களில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தடையாணையை நீக்குதல்–தொடர்ச்சி

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய பிரதான தொழில், மீன்பிடித் தொழில்தான். மீனவர்களுக்கு டீசலுக்கான விற்பனை வரியை இரத்து செய்து, கிட்டத்தட்ட கோமா நிலையிலிருந்த மீனவர்களுடைய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்துப் பெருமக்கள், கிறிஸ்தவப் பெருமக்கள், இஸ்லாமியர்கள் போன்ற அனைத்துச் சமுதாய மக்களும் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். இவர்களுடைய வழிபாட்டு முறை வெவ்வேறாக இருந்தாலும், அனைத்துச் சமுதாய மக்களும் இன்று ஏற்றி, போற்றி தினமும் வழிபடுகின்ற காவல் தெய்வமாக டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

டீசலுக்கான விற்பனை வரியை இரத்து செய்யாமல் இருந்திருப்பார்களேயானால், நிச்சயமாக மீனவர்கள் அந்தத் தொழிலிலிருந்து வேறு தொழிலுக்குச் சென்றிருக்க வேண்டிய நிலைமை கண்டிப்பாக ஏற்பட்டிருக்கும் என்று மீனவப் பெருமக்கள் அனைவரும் ஒருமித்த கருத்தோடு இருக்கின்றனர். ஆனால், அப்படிப்பட்ட மீனவர்கள், தாங்கள் வாழ்கின்ற இடத்தில், குடிசை போட்டு வாழ்கின்ற இடத்திற்குரிய பட்டாக்களை வழங்க வேண்டுமென்று, நீண்ட நெடுங்காலமாகக் கோரிக்கை வைத்திருந்தனர்.

சேது சமுத்திரத் திட்டம் அமல்படுத்தப்படவிருப்பதால், அதற்கான ஒரு தடையாணை 1964–லே போடப்பட்டிருந்தது. இன்று அந்தத் திட்டம், கடல் பகுதியில், அதாவது, ஆடம்ஸ் சாலைப் பகுதியிலே நிறைவேற்றப்படுவதாக இந்த விவர அறிக்கையிலே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே,



2005 ஏப்ரல் 13] [திரு. அ. அன்வர் ராஜா]

அது தவிர மீதி இருக்கின்ற நிலப் பகுதிகளில், அவர்களுக்குப் பட்டா வழங்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் கருத்துருவைத் தந்திருக்கிறார்கள். அந்தக் கருத்துருவின் அடிப்படையில், அரசு இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் என்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பில் என்னுடைய இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புவது, 1964–லே புயல் ஏற்பட்டபோது, தனுஷ்கோடியிலிருந்து இடம் பெயர்ந்து இராமேஸ்வரத்தில் வந்து பாம்பனில், தங்கச்சிமடத்தில் குடியேறினார்கள். அப்படிக் குடியேறிய அந்த மக்கள், அரசுப் புறம்போக்கு நிலத்திலும் குடியேறியிருக்கிறார்கள். இரயில்வே துறைக்குச் சொந்தமான இடத்திலும் குடிசைபோட்டு வாழ்கிறார்கள். அதேபோல, வனத் துறைக்குச் சொந்தமான இடத்திலும் குடிசைபோட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

உதாரணமாக தங்கச்சிமடம் ஊராட்சியில், நான்குபனை என்ற ஒரு கிராமம், முழுமையாக வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அங்கு கண்டறிந்து, அதற்கேற்றவாறு அந்த மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து பரிசீலிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. அன்வர் ராஜா.

**திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2005 ஏப்ரல் 13

## (ஈ) நீலகிரி மாவட்டம், கேத்தி ஊராட்சி, ஹாலன் நகர மக்களுக்குப் பாதை வசதி அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி *55–ன்கீழ்* அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், கேத்தி ஊராட்சிக்குட்பட்ட ஹாலன் நகர மக்களுக்குப் பாதை வசதி செய்து தர வேண்டிய அவசியம்" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### அறிக்கை

*நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், கேத்தி கிராமத்தில் சுமார் 218 ஏக்கர் நிலப் பரப்பளவில் "செயின்ட் ஜார்ஜ் ஹோம்" என்கின்ற ஆங்கிலோ–இந்தியக் கல்வி நிறுவனம் 1914 முதல் இயங்கி வருகின்றது. இந்தப் பள்ளியின் அருகே உள்ள ஹாலன் நகர் (*Halan Nagar*) என்ற பகுதியில் சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்படி ஹாலன் நகருக்கு, இப்பள்ளிக்குச் சொந்தமான நிலத்தின் வழியாகப் பாதை ஒன்று செல்கின்றது. மேற்படி கல்வி நிறுவனத்தின் வாகனங்கள் தவிர, இப்பாதையில் சென்று வரும் பிற வாகனங்களிடம், இக்கல்வி நிறுவனம் சுங்கக் கட்டணம் (*Toll*) வசூலித்து வந்தது. இவ்வாறு முறையான அனுமதி பெறாமல் சுங்கக் கட்டணம் வசூலிப்பது அப்பகுதி மக்களால் எதிர்க்கப்பட்டதால், குன்னூர் கோட்ட வருவாய் அலுவலர், குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 133–ன்கீழ், மேற்படி சுங்கம் வசூலிக்கத் தடை செய்து உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து, பள்ளி நிருவாகம், அப்பாதையை வாகனங்கள் செல்லாதவாறு மூடியதுடன், இது தொடர்பாகக் காவல் நிலையத்தில் புகார் செய்ததுடன், உதகை சார்நிலை நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தது. இதுகுறித்து கேத்தி காவல் நிலையத்தில் விசாரணை நடைபெற்று*



2005 ஏப்ரல் 13] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

*வருகின்றது. அதேபோல, மேற்படி நிலத்தின் உரிமை குறித்து சார்நிலை நீதிமன்ற வழக்கும் நிலுவையில் உள்ளது.*

*பிரஸ்தாப வழிப் பாதையை நீலகிரி மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலருடன் சேர்ந்து புலத் தணிக்கை செய்துள்ளார். மேற்படி சாலை புல எண்கள் 729, 727, 726, 725, 723, 720 மற்றும் 997 வழியாக, புல எண் 972–ல் உள்ள ஹாலன் நகருக்குச் செல்கிறது. இப்புல எண்களில் புல எண் 972 மட்டும் கிராம நத்தம் என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. பிற புல எண்கள் அனைத்தும் பள்ளிக்குச் சொந்தமான பட்டா நிலங்கள் ஆகும். ஹாலன் நகரைச் சார்ந்த மக்கள் தங்கள் கிராமத்திற்குச் சென்று வர, தற்போது பள்ளிக்குச் சொந்தமான 1½ கிலோ மீட்டர் நீளமுள்ள ஜல்லி ரோடு மற்றும் 282 மீட்டர் நீளமுள்ள மண்பாதையையும் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி ஹாலன் நகர் மக்களுக்கு, அவர்களுடைய கிராமத்திற்குச் செல்வதற்கு வேறு பாதை ஏதுமில்லை.*

*சூழ்நிலையின் தன்மையைக் கருத்தில்கொண்டு, இப்பகுதியில் காவல் துறையின் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பள்ளி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. பிரஸ்தாப பாதையைப் பொது மக்கள் பயன்படுத்த பள்ளி நிருவாகம் இசைவு தெரிவிக்காதபட்சத்தில், மேற்படி கேத்தி கிராமம் புல எண்கள் 729, 727, 726, 725, 723 மற்றும் 720 ஆகியவற்றில் சுமார் 0.49 ஏக்கர் மற்றும் புல எண் 997–ல் சுமார் 0.37 ஏக்கர் ஆக 0.86 ஏக்கர் நிலத்தை, சம்பந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்திடம் கோரிக்கையினைப் பெற்று, நில எடுப்புச் சட்டம், 1894–ன்கீழ் கையகப்படுத்தி பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தொவித்துள்ளார்.*

*எனினும், இப்பிரச்சினைக்கு சுமூகத் தீர்வு காணும்பொருட்டு, பள்ளி நிருவாகத்திடம் மாவட்ட நிருவாகம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், குன்னூர் தாலுகாவிலுள்ள கேத்தி சிறப்பு நிலை ஊராட்சிக்குட்பட்ட ஹாலன் நகர், 1970 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, அங்கே நமது அரசினால் கொடுக்கப்பட்ட மனைப் பட்டாக்களில் 125 ஆதிதிராவிட மக்கள் வீடு கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எள்ள நல்லி, கேத்தி, உள்ளாட, முக்கட்டி உட்பட்ட சுமார் 350–க்கும் மேற்பட்ட—

[திரு. எச்.எம். ராஜு] [2005 ஏப்ரல் 13

விவசாயக் குடிமக்கள், அந்தப் பாதையை சுமார் 300 ஆண்டுகளாக உபயோகித்து வந்தார்கள். சுங்க வரி வசூல் செய்த அந்தப் பள்ளி நிர்வாகத்தைப் பொதுமக்கள் போராட்டம் நடத்தியதினால், மாவட்ட நிர்வாகம் அதற்கு அந்தச் சுங்க வரியை நிறுத்திவிட்டது. சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அந்தப் பள்ளி 5,000 ரூபாய் வைப்பு நிதி வைக்க வேண்டும், deposit தர வேண்டுமென்று, கடந்த 10 நாட்களாக விவசாயிகளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நான் கொடுத்த பணத்தால் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்தக் கட்டுமானப் பணிகள் எல்லாம் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. பள்ளிக் குழந்தைகள், முதியோர்கள், கர்ப்பிணிப் பெண்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். புல எண் 972 நமது அரசுக்குச் சொந்தமானது. 282 மீட்டர் நீளமுள்ள மண் பாதை, புல எண் 972-ல் இருக்கிறது. அந்தப் புல எண்ணுக்கும் அந்தப் பள்ளி நிர்வாகத்திற்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. வேறு பாதையும் அந்த நகர்ப் பகுதி மக்களுக்குச் செல்வதற்கு இல்லை. ஆகவே, நமது அரசு போர்க்கால அடிப்படையில் பொது மக்கள் நடப்பதற்கும், விவசாயிகள் தங்கள் பொருட்களை எடுத்துச் செல்வதற்கும், பொருட்களை எடுத்து வருவதற்கும், உதவும் வகையில் இச்சாலையை ஏற்படுத்தித் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 12–05

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண பள்ளி நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. பிரஸ்தாப பாதையைப் பொது மக்கள் பயன்படுத்த பள்ளி நிர்வாகம் இசைவு தெரிவிக்காதபட்சத்தில் மேற்படி கேத்தி கிராமம், புல எண்கள் 729, 727, 726, 725, 723 மற்றும் 720 ஆகியவற்றில் சுமார் 0.49 ஏக்கர் மற்றும் புல எண் 997-ல் சுமார் 0.37 ஏக்கராக 0.86 ஏக்கர் நிலத்தைச் சம்பந்தப்பட்ட கிராம பஞ்சாயத்திடம் கோரிக்கையைப் பெற்று நில எடுப்புச் சட்டம், 1894-ன்கீழ் கையகப்படுத்தி, பாதை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு மரியாதைத் தராத



2005 ஏப்ரல் 13] [திரு. எச்.எம். ராஜு]

பள்ளி நிர்வாகத்தின்மேல் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். இப்போது மீண்டும் 5,000 ரூபாய் வைப்பு நிதி என்று அவர்கள் கேட்பதினால், புல எண்கள் 770, 723, 725, 726, 727, 729 ஆகிய புல எண்களில் சுமார் 75 சென்ட் பூமியையும் மீதமுள்ள 997 புல எண்ணில் சுமார் 75 சென்ட் பூமியையும் நில எடுப்புச் சட்டம், 1894-ன்கீழ் நமது அரசு உடனடியாகக் கையகப்படுத்தி, கேள்விக்குரிய இந்த முக்கியமான சாலையை அமைத்துக்கொடுத்து அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து ஹாலன் நகர் மக்களுக்கு உதவ முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே பேச்சுவார்த்தை நடக்கிறது என்று சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதிலைச் சொல்லியிருக்கின்றேன். அவர்கள் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டு வரவில்லை என்றால், நில எடுப்புச் சட்டம் 1894-ன்கீழ் நிலத்தை கையகப்படுத்தி, பாதையை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### (உ) கன்னியாகுமரி, கலிங்கராஜபுரம், கயிறு மற்றும் கயிறு பாய் சிறுதொழில் நிறுவனத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. டி. மணி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கலிங்கராஜபுரம் பகுதியில் 'கயிறு மற்றும் கயிறு பாய்' சிறு தொழில் நிறுவனம் மூடப்பட்டதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திருமதி பா. வளர்மதி] [2005 ஏப்ரல் 13

## அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கலிங்கராஜபுரத்தில் கலிங்கராஜபுரம் அரிஜன கயிறு தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கமும், ஏழுதேசம் அரிஜன கயிறு மற்றும் கயிறு பாய் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் ஒன்றுக்கொன்று எதிர் எதிரே ஒரே இடத்தில் செயல்பட்டு வந்தன.

இவ்விரண்டில் ஏழுதேசம் அரிஜன கயிறு மற்றும் கயிறு பாய் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயலாற்றி வந்தது. கலிங்கராஜபுரம் அரிஜன கயிறு தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் கயிறு பின்னுதல் தொழிலை மட்டும் செய்து சிறிய அளவில் செயல்பட்டு வந்தது.

ஏழுதேசம் அரிஜன கயிறு மற்றும் கயிறு பாய் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் சிறப்பான செயல்பாட்டின் பலன் அருகில் இருந்த கலிங்கராஜபுரம் அரிஜன கயிறு தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், ஒன்றின் உற்பத்திப் பொருள் மற்றொன்றின் உற்பத்திக்கு மூலப்பொருளாக இருந்தமையாலும் இரண்டு சங்கங்களின் உறுப்பினர்களும் அரிஜன இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தமையாலும் நிர்வாக நலன் கருதி இரண்டு சங்கங்களையும் இணைத்து 23–11–1993 அன்று ஒரே சங்கமாக ஏழுதேசம் ஆதிதிராவிடர் கயிறு தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

இச்சங்கத்தில் கயிறு நார் மிதியடிகளும், கயிறு பாய்களும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன. சமீப ஆண்டுகளாகக் கயிறு தறிகளில் வேலை செய்ய உறுப்பினர்கள் முன்வரவில்லை. இருப்பினும் ஒரு கயிறு தறியில் கயிறு நார் மிதியடிகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

இந்தச் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பளிக்கும் நோக்கத்துடன் இந்தச் சங்கம் ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் (Integrated Coir Development Programme) கொண்டு வரப்பட்டு, மாநில மற்றும் மத்திய அரசுகளின் முறையே பங்கு மூலதனம் மற்றும் மானிய உதவியுடன் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு தென்னை நார் முழு அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, கயிறு தொழிலாளர்கள் தென்னை நார் உற்பத்தியில் ஈடுபட்டு பயன்பெற்று வருகின்றனர்.



2005 ஏப்ரல் 13]

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தந்திருக்கின்ற அந்த அறிக்கை பூராவும் படித்துப் பார்த்தால், அந்த அறிக்கையிலே சில முரண்பாடுகள் இருக்கின்றன. ஏனென்றால், என்னுடைய ஞாபகம் மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் இங்கே முதலமைச்சராக இருந்த காலத்தில் அதற்கு ஒரு இடத்தை தேர்வு செய்து, கட்டடத்தைக் கட்டி, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு வாய்ப்பை ஒரு தொழிலை உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டது அந்தத் தொழிற்சாலை. ஆனால், அது 2 ஆண்டுகளுக்கு முன்னாலே மூடிப்போய் இருக்கிறது. ஆனால், பதிலில் என்ன தந்திருக்கிறார்கள் என்று சொன்னால், பக்கத்திலே இன்னொரு விதமான தொழிற்சாலை அங்கேயிருக்கின்ற காரணத்தினால், அதிலே உற்பத்தி ஆகின்ற இந்தப் பொருட்கள் பூராவும் விற்பனை செய்வதிலே ஏற்படுகின்ற தேக்கம் இதெல்லாம் ஒரு காரணமாக சொல்லப்படுகின்றது. ஆகவே, நான் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த factory முழுமையாக கயிறு பாய், கயிறு இவற்றை உற்பத்தி செய்கின்ற factory உற்பத்தி செய்கின்ற அந்தப் பொருட்களை நம்முடைய மாநிலத்தில் நம்முடைய அரசின் தேவைகளுக்காககூட பயன்படுத்தலாம். இப்பொழுது சட்டமன்றத்திலே நாம் நடக்கக்கூடிய இந்தப் பாய் வரையிலும் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அதிலிருந்து நாம் வாங்குகிறோமா அப்படி வாங்கினால் மட்டும்தான் அந்தத் தொழிலைப் பாதுகாத்துக்கொள்ள முடியும், அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தர முடியும். பொதுவாக நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற சூழ்நிலை தனியாரிடத்திலே போகின்றோம். ஆக, அந்த நிலையை மாற்றி அந்தத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வாழ்வு தரக்கூடிய அளவில் 300 குடும்பங்கள்–ஆதிதிராவிட குடும்பங்கள்—அங்கே குடியிருக்கின்றார்கள். அவர்களுக்கு சாதாரண வேலை என்பது தென்னங்கீற்றை வேய்கின்ற ...

பிற்பகல் 12–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி ஒரு கேள்வி கேளுங்கள்.

**திரு. டி. மணி:** ஒரு வேலைதான் இருந்து வருகின்றது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு ஒரு மறுவாழ்வு தருகின்ற நிலையில் அந்த factory–ஐ மீண்டும் திறந்து அந்தக் கயிறு, கயிறு பாய் இவற்றை உற்பத்தி செய்கின்ற நிலையை உருவாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலிங்கராஜபுரம் ஆதிதிராவிட கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், ஏழுதேசம் ஆதிதிராவிட கயிறு மற்றும் கயிறு பாய் தயாரிக்கின்ற தொழில் கூட்டுறவுச் சங்கம், 2 சங்கத்திலேயும் 6 தறிகளில் 18 தொழிலாளர்கள் தற்போது பணிபுரிகிறார்கள். இந்த 2 சங்கங்களுமே சேர்ந்து மகாசபையைக் கூட்டி தீர்மானங்கள் போட்டுத்தான் அந்த கலிங்கராஜபுரம் ஆதிதிராவிட கயிறு தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இணைக்கப்பட்டிருக்கிறது. இணைக்கப்பட்டதற்குப் பிறகு 30–லிருந்து 35 நபர்கள் வரைக்கும் இந்தத் தொழிலிலே ஆர்வத்தோடு பங்குபெற்று இப்போது பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போல நட்டத்திலே இயங்கிக்கொண்டு வந்த இந்தச் சங்கம், தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் பேரிலே இந்த மாதம் மட்டும் கிட்டத்தட்ட 11 ஆயிரத்தை நிகர இலாபமாக பெற்றிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய கேரள மாநிலத்திற்கும், நம்முடைய தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் அவர்களுடைய முயற்சியின் பேரிலே தயாரித்திருக்கின்ற பொருட்களைக் கொண்டுபோய் விற்பனை செய்து அதன்மூலம் இலாபத்தை ஈட்டியிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற அந்த விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆனால், அது மீண்டும் சிறப்பாக செயல்படுவதற்கு, அந்த ஆதிதிராவிட மக்களுக்கு அந்த வட்டாரத்தில் இருக்கின்ற–ஏற்கெனவே நான் சொன்னதுமாதிரி— இந்த factory–யிலே இன்னும் விரிவுபடுத்தி, இந்த 300 குடும்பங்களில் இருந்தும் 300 பேர்களுக்கு நாம் வேலைவாய்ப்பு தரக்கூடிய அளவிலே இதை ஒரு புனரமைப்பு செய்வதற்குரிய ஏற்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் மிகைப்படுத்திச் சொல்கிறார். தற்போது இணைக்கப்பட்டிருக்கிற சங்கத்திலேயே 30–லேயிருந்து 33 தொழிலாளர்கள்தான் பணிபுரிகிறார்கள். இப்போதும் அவர்கள் இந்தத் தொழிலுக்கு வருவதற்கு விருப்பப்பட்டு வருவார்களேயானால், பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குக்கூட சங்கம்



தயாராக இருக்கிறது. ஆண் தொழிலாளர்கள் 15, 20 பேர்களுக்குக்கூட வேலை தருவதற்கு சங்கத்திலே வேலைவாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்தத் தொழில் சம்பந்தமாக அவர்கள் வருவதற்கு விரும்பாத காரணத்தால் இப்போதே தென்னை நார்ப் பிரிவில் ஒரு shift–ல் 12 தொழிலாளர்களும், கயிறு பாய் தயாரிக்கின்ற 6 தறிகளிலே ஒரு தறியில் 3 தொழிலாளர்கள் மட்டும்தான், ஆக மொத்தம் 18 தொழிலாளர்கள்தான் இப்போது வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். மேன்மேலும் நல்ல முறையிலே இந்தச் சங்கம் செயல்படுவதற்குக் காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்பேரிலே நம்முடைய தமிழக அரசினுடைய பங்கு 4 இலட்சத்து 12 ஆயிரம் வழங்கப்பட்டு, கயிறு வாரிய மானியம் 3 இலட்சத்து 22 ஆயிரம் வழங்கப்பட்டு, தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் மூலம் கடன் 8 இலட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டு, உறுப்பினர்களின் மூலதனம் 90 ஆயிரம் வழங்கப்பட்டு, 16 இலட்சத்து 49 ஆயிரத்தில் தொழிற்கூடம் 4 இலட்சம், தென்னை நார் தயாரிக்கும் இயந்திரங்கள் 7 இலட்சத்து 44 ஆயிரம், இதரச் செலவினங்கள் 5 இலட்சத்து 5 ஆயிரம், ஆக 16 இலட்சத்து 49 ஆயிரம் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்பேரிலே இந்தச் சங்கத்திற்கு தரப்பட்டு இன்றைக்கு இலாபம் ஈட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

### (ஊ) சுமார் ரூ.14 கோடி மதிப்புள்ள சந்தன மரத்தூள் – செம்மரக் கட்டைகள் மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தால் கைப்பற்றப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சந்தன மரத்திற்கு அடுத்தபடியாக மதிப்புமிக்க செம்மரம் ரூபாய் 10 கோடி மதிப்புள்ளவை சமீபத்தில் வனத் துறையினரால் கைப்பற்றப்பட்டது குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2005 ஏப்ரல் 13

## அறிக்கை

சென்னையில் தாம்பரத்தில் உள்ள ஏற்றுமதி வணிக வளாகத்தில் (MEPZ / SEZ) இந்தியா சேல்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்திற்கு 71 மெட்ரிக் டன் சந்தனக் கட்டைகளை வைத்திருப்பதற்கான உரிமம் செங்கல்பட்டு மாவட்ட வன அலுவலரால் (2003–2004 ஆம் ஆண்டு) வழங்கப்பட்டுள்ளது. ஆனால், 2004–2005 ஆம் ஆண்டிற்கு அந்நிறுவனத்தால் உரிமம் புதுப்பிக்கப்படாமல் இருந்ததால் 18–4–2004, 17–8–2004 மற்றும் 12–10–2004 ஆகிய தேதிகளில் கடிதங்கள் வாயிலாக உரிமம் புதுப்பிக்கக் கோரி நினைவூட்டப்பட்டது. உரிமம் புதுப்பிக்காமல் சந்தன மர இருப்பு வைத்திருந்ததற்கு விளக்கமும் கோரப்பட்டது.

மேற்படி நிறுவனம் 13 மெட்ரிக் டன் சந்தன மரப் பவுடர் மற்றும் செம்மரப் பவுடர் ஏற்றுமதி செய்வதற்கு 10–12–2004–ல் அனுமதிக்கப்பட்டிருந்தது. இதற்கிடையில் மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் சோதனை செய்ததில் இரண்டு கன்டெய்னர்களில் ஒன்றில் 2.585 மெட்ரிக் டன் சந்தன மரத்தூளுடன் 9.007 மெட்ரிக் டன் செம்மரக் கட்டைகளும், மற்றொன்றில் 11.129 மெட்ரிக் டன் செம்மரக் கட்டைகளும், 1.830 மெட்ரிக் டன் சந்தன மரத் தூளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக திரு. செல்வராஜ் என்பவருக்கு சொந்தமான கம்பெனிகளும் வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகத்தால் சோதனை மேற்கொள்ளப்பட்டு, 20 மெட்ரிக் டன் செம்மரக் கட்டைகளை ஏற்றுமதி செய்வது கண்டுபிடிக்கப்பட்டு கையகப்படுத்தப்பட்டது. மேற்படி வகையில் மொத்தம் 40.136 மெட்ரிக் டன் எடையுள்ள செம்மரக் கட்டைகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி இரு குற்றங்கள் தொடர்பாக இந்தியா சேல்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனர் திரு. தாயூப்ஹாரூன் மற்றும் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் 18-12-2004 அன்று வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகத்தால் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் தாம்பரம் MEPZ / SEZ வளாகத்தில் கதவு எண் ஏ–19/20 பகுதி இரண்டில் உள்ள இந்தியா சேல்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் வளாகம் தாம்பரம் வனச் சரகரால் 25–12–2004 ஆம் நாள் தணிக்கையிடப்பட்டு நிறுவனத்தினரின் இருப்புக் கணக்கு ஆவணங்கள் கோரப்பட்டதில் உரிய கால அவகாசம் அளிக்கப்பட்டது. ஆனால் உரிய கால அவகாசத்தில் அது தொடர்பான ஆவணங்கள்



2005 ஏப்ரல் 13] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

வனத் துறையினரிடம் அளிக்கப்படாததாலும், மேற்கண்ட சந்தனக் கட்டைகளுக்கான உரிமம் 2004–2005 ஆம் வருடத்திற்கு புதுப்பிக்கப்படாததாலும் அந்நிறுவனத்தினர் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை மேற்கொள்ள செங்கல்பட்டு மாவட்ட வன அலுவலரால், தாம்பரம் சரக அலுவலருக்கு அறிவுறுத்தியதன்பேரில் தாம்பரம் நீதித் துறை நடுவர் அவர்களிடமிருந்து நிறுவனத்தினை சோதனை செய்ய சோதனை ஆணை (Search Warrant) பெறப்பட்டு 12–1–2005 முதல் 24–1–2005 ஆம் தேதி முடிய பதிமூன்று நாட்கள் சோதனை நடைபெற்றது. இச்சோதனையில் கைப்பற்றப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவு 124.069 மெட்ரிக் டன் ஆகும். இதனுடைய மதிப்பு ரூபாய் 14,74,97,792/– ஆகும்.

மேற்கண்ட சந்தனக் கட்டைகளை கைப்பற்றி தாம்பரம் நீதிமன்ற நடுவர் அவர்களிடம் தாம்பரம் வனச் சரக அலுவலரால் அறிக்கை செய்யப்பட்டது. அவை திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கில் பாதுகாப்பாக வைக்க எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாம்பரம் வனச் சரகத்தில் சந்தன மரக் குற்ற வழக்கு STOR No.1/2005 பதிவு செய்யப்பட்டு புலனாய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

பிற்பகல் 12–15

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் தாயூப்ஹாரூன் மற்றும் செல்லா என்ற செல்வராஜ் ஆகியோர் 18-12-2004 அன்று கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அதனுடைய தொடர் நடவடிக்கையாக, தாம்பரம் நீதிமன்ற நடுவர் மன்றத்தில் சோதனை ஆணை பெறப்பட்டு, 24–1–2005 ஆம் நாளன்று சுமார் 15 கோடி மதிப்புள்ள 124.069 மெட்ரிக் டன் கைப்பற்றப்பட்டு, அரசின் பாதுகாப்பில் சந்தன மரமும், செம்மரக் கட்டைகளும் வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவித்துள்ளார்கள். மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகத்தால் கைது செய்யப்பட்டு காவலில் உள்ள இந்தக் குற்றவாளிகளை செங்கல்பட்டு மாவட்ட வன அலுவலர் விசாரணைக்கு நீதிமன்றக் காவலில் எடுத்து விசாரிப்பதற்கு முன்வருவார்களா? மேலும் இவர்களுக்குத் தொடர்புடைய சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று அம்பத்தூரில் இயங்கி வருவதாக அறிகிறோம். அதன்மீதும் சோதனையிட்டு, ஏதாவது முறைகேடுகள் நடக்கின்றனவா என்பதைக் கண்டறிய அமைச்சர்

அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகள் சிறையிலிருந்து, நீதிமன்றக் காவலில் இருந்து எடுக்கப்பட்டு, இப்போது அவர்கள் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய, அம்பத்தூரில் இருக்கின்ற அந்தச் சந்தன ஆலையை சோதனையிட்டு, தவறுகள் நடந்திருக்குமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறுகள் யார் செய்தாலும், அதற்குண்டான தண்டனையைப் பெற்றுத் தருவதில் உறுதியான அரசாகச் செயல்படும் அரசு நீதி தேவதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு என்பதற்கு எடுத்துக்காட்டான சான்று இந்தச் சான்று. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தப் பிரச்சினையில் தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.

### (ஏ) எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் சாலை – மதுரகாளியம்மன் கோயில் வரை தார்ச் சாலையைப் புதுப்பிக்கக் கோருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஐ. கணேசன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் சாலை முதல் மதுரகாளியம்மன் கோயில் வரை உள்ள 1/2 கிலோமீட்டர் தார்ச் சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. ஆகவே, அந்தத் தார்ச் சாலையைப் புதுப்பித்து போக்குவரத்திற்கு உதவுவதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கான விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மேற்படி சாலையைத் தார்ச் சாலையாக்கி பத்து வருடங்கள் ஆகின்றன. தற்பொழுது தார்ப் பரப்பு முழுவதும் பழுதாகியுள்ளது. இச்சாலையினை ஓரடுக்கு ஜல்லி பரத்தல் செய்து தார்ச் சாலை அமைக்கத் தோராயமாக ரூ.7.50 இலட்சம் தேவைப்படும். இச்சாலையினைச் சீர் செய்ய போதிய நிதி இல்லாமையால் எந்தத் திட்டத்திலும் சேர்க்கப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு பெற்று மேற்படி பணி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வைத்த விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். அந்த விவர அறிக்கையிலே தற்பொழுது உள்ளாட்சியிலே அதைச் சீர்செய்வதற்குப் போதிய நிதி இல்லை. அதை உங்களுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு வேதனையான அறிக்கையை வைத்திருப்பதைக் கண்டு உள்ளபடியே நான் வேதனையடைகிறேன். உள்ளாட்சியிலே மட்டும் இந்த ஆண்டு 1,936 கோடியே 30 இலட்சத்து 33 ஆயிரம் ரூபாய் மூலதனக் கணக்கில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்ன வேண்டுமென்று கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** அதுதான். இல்லை, இவ்வளவு கோடி ரூபாயை உள்ளாட்சித் துறைக்கு வாங்கி, ஒரு சாதாரண 1/2 கிலோ மீட்டர்தான். அந்த மதுரகாளியம்மன் கோயில் என்பது எங்கள் பகுதியிலே மிகப் பெரிய, பிரசித்திப் பெற்ற கோயில். அந்தக் கோயிலுக்கு 1/2 கிலோ மீட்டருக்கு சாலை இல்லை, அதைப் புதுப்பித்துத் தாருங்கள் என்று ஒரு கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன். அதற்கு அரசிடம் பணமில்லை, உங்கள் நிதியிலிருந்து போட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது . . .

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்னவென்று கேளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** என்னுடைய நிதி. உங்களைப் பார்த்துப் பேச வேண்டுமென்று சொல்கிறீர்கள். பிறகு அங்கே பார்த்துப் பேசுங்கள் என்று சொல்கிறீர்கள். என்னதான் சொல்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. கேள்வியைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** கேள்விதான் சொல்கிறேன். அந்த 1/2 கிலோ மீட்டர் நீளத்திற்கு 7.50 இலட்ச ரூபாயை தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்குங்கள் என்று சொல்கிறீர்கள். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதி, நீங்கள் கணக்கெடுத்துப் பாருங்கள். என்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதி அத்தனையுமே பள்ளிக்கூடத்திற்கு மட்டுந்தான், வருங்கால சமுதாயத்தை அறிவுள்ள சமுதாயமாக மாற்றுவதற்கு மட்டுந்தான் ஒதுக்கியிருக்கிறேனே தவிர (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், என்ன கேள்வி என்று சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சரிடம் என்ன கேள்வி என்று சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இதுபோன்ற பாதைகளுக்கு ஒதுக்கவில்லை. ஆகவே, இந்தப் பாதையினுடைய முக்கியத்துவத்தை அமைச்சர் உணர்ந்து இந்தப் பாதையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–20*

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய ஆதங்கம் புரிகிறது. மாண்புமிகு தளி சட்டமன்ற உறுப்பினர் திரு. முரளிதரன் அவர்கள் சாலை வசதி மேம்படுத்த வேண்டுமென்று கேட்டவுடன், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த தளி தொகுதிக்குச் சென்று பார்வையிட்ட காரணத்தினால் அங்கே 20 கோடி ரூபாயை அறிவித்திருக்கின்றார்கள். மேலும், அவர் அருகிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணியினுடைய தொகுதியிலே மாண்புமிகு இதய தெய்வம்





புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 40 ஆண்டுகாலத்திற்கு முன்பாகவிருந்த சாலையை, அந்தச் சாலையை ...

**திரு. ஐ. கணேசன்:** அதையெல்லாம் ஏன் சொல்லவேண்டும். நான் கேட்ட ரோடுக்கு பதில் சொல்லட்டும். நான் முதலில் கேட்ட கேள்வி ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும் அவர். (குறுக்கீடு) முடிக்கட்டும். அவர் பேசி முடிக்கட்டும். பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** 8 கோடியே 5 இலட்சம் செலவில் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்ணாகரத்திற்கு அருகேயிருந்து போரூர் இடத்திலிருந்து கேரட்டி செல்கின்ற சாலையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்து 70 கி.மீ. சுற்றிச் செல்கின்ற சாலையை 24 கி.மீ.-லே செல்கின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி தமிழகத்தினுடைய மக்களுடைய தேவையை அறிந்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்படுகின்ற இந்த நேரத்திலே, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்ற உறுப்பினர் நிதியை எடுத்துக்கொண்டால் விரைவிலே செய்யலாம் என்ற நோக்கத்தோடுதான் சொல்லப்பட்டிருந்தது. இருப்பினும் அவர் கேட்கின்ற அந்த 1/2 கி.மீ. சாலையை கூடியவிரைவிலே ஒரு மாத காலத்திலே அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசானது முனைப்போடு செயல்பட்டு அந்தப் பணியை நிறைவேற்றுமென்பதைத் தெரிவித்து அமர்கிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஐ. கணேசன்:** பேச அனுமதிக்க வேண்டுமில்லையா அம்மா? நானாக எழுந்து பேசிவிட முடியுமா? நீங்கள் கூப்பிடவில்லை. என்ன, சொல்லட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், சொல்லுங்கள். நன்றி சொல்ல வேண்டுமா? சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதி அமைச்சர் அவர்கள் ஒரு மாத காலத்திலே போட்டுக் கொடுக்கப்படும் என்று உத்தரவாதம் இந்த அவையிலே கூறியதன்பொருட்டு அவருக்கும், இந்த அரசுக்கும் என்னுடைய நன்றி.

### (ஏ) விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு (1 முதல் 79 வரை)@

## 8. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"சட்டமன்றப் பேரவை விதி 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005) இன்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"*

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 706 முதல் 775 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளன.





## 9. அறிவிப்பு

### தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005). மாண்புமிகு நிதியமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2005)ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுக்கு அடிப்படையாக இருக்கிற அறிவிப்பு இங்கே வந்த நேரத்தில் இதுசம்பந்தமாக மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் சில கருத்துகளை இங்கே எடுத்து வைத்தார்கள். இன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது இந்தச் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கோ அல்லது அரசு ஊழியர்களுக்கோ, மற்றுமுள்ளவர்களுக்கோ ஊதிய உயர்வு

---

@ 13-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2005 ஏப்ரல் 13

கொடுப்பது என்ற பொறுப்பு அல்லது அதற்கான உரிமை அரசுக்கு இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்தச் சட்டப் பேரவையிலே இருக்கின்ற எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல நேரடியாக அல்லாமல் மற்ற முறையிலேகூட ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், இன்று இந்த அரசின் கீழே பணியாற்றிக் கொண்டிருக்கிற அரசு ஊழியர்கள், அதேபோன்று பல்வேறு துறைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள், நான்கூட இந்த அவையிலே சொன்னேன், அரசு இரப்பர் கழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளிகளுக்கு 13 மாத காலம், 35 மாத காலம், 13 ரூபாய் வைத்து அவர்கள் உண்மையிலேயே உழைத்து அரசுக்கு இலாபத்தை ஏற்படுத்திக் கொடுத்ததற்குப் பிறகும் அவர்களுக்கு அந்தக் குடிசிகை கொடுக்கப்படவில்லை. இப்படி எல்லாம் இருக்கிற நேரத்திலே, அதற்கும் மேலே 10,000–க்கும் அதிகமான சாலைப் பணியாளர்கள் இன்றைக்கு . . .

*பிற்பகல் 12–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. ஹேமச்சந்திரன், இந்தச் சட்டமுன்வடிவின் மேலே உங்கள் கருத்தை ஏதாவது சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆமாம். Time கொடுங்கள். சட்டமுன்வடிவிற்குள்ள விஷயம்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உலகத்திலே இருப்பவற்றை எல்லாம் கொண்டு வந்து பேசினீர்கள் என்றால் பேச முடியாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை. அது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மறுபடியும் அவற்றையெல்லாம் பேச முடியாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, இல்லை, நான் ஒரு minute–லே பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இல்லை. நீங்கள் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** சட்டமுன்வடிவின்மீதுதான் பேசுகிறேன்.



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அதிலே சுருக்கமாக உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்படிப்பட்ட மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு, இன்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருந்தால், மக்கள் அதை ஒரு நல்ல taste–லே எடுத்திருப்பார்கள். ஆனால், இன்று வெளியே மக்கள் என்ன பேசிக்கொண்டிருக்கிறார்கள்? இப்படிப்பட்ட ஏராளமான மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் அவர்களுடைய ஊதியத்தை உயர்த்திக் கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எனக்கு இருக்கிற வேண்டுகோள் அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இருக்கிற வேண்டுகோள், இப்படிப்பட்ட உழைப்பாளி மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்கு அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுப்பதற்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படாமல், அரசு இரப்பர் தோட்டத் தொழிலாளிகளுக்குக் கொடுக்க வேண்டிய குடிசிகை போன்ற விஷயங்கள், நம்முடைய போக்குவரத்துத் துறை தொழிலாளிகள், மின்சாரத் துறை தொழிலாளிகள், இவர்களுக்கு எல்லாம் ஊதிய உயர்வு (மணியடிக்கப்பெற்றது) ஊதிய உயர்வுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், இவை இந்தச் சட்டமுன்வடிவில் கிடையாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஊதிய உயர்வு அவர்களுக்கும் கொடுப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கருத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 8/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஆ) தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2005). மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த பன்னிரண்டாவது நிதிக் குழு, நிதி வழங்கு கால அளவிற்கான கடன் நிவாரணத் திட்டத்தின் பயனைப் பெறும்பொருட்டு 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தினை திருத்துவதெனக் கருதப்பட்டுள்ளது என்று நோக்க, காரண விளக்க உரையை இந்தச் சட்டமுன்வடிவிலே கொடுத்திருக்கிறார்கள்.

---

@ 12-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதனால் என்ன பயன் உண்மையிலேயே உருவாகிறது, எதற்காக இந்தச் சட்டம் வருகிறது என்பதைக் கொஞ்சம் தெளிவாக, ஏனென்றால் எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை, இதை உண்மையிலேயே செய்துதான் தீரவேண்டுமா என்பதை எல்லாம் கொஞ்சம் அவைக்கு விளக்கவேண்டும் என்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், இதற்குக் கருத்து சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** யாரும் பேசவில்லையா? Is anybody else addressing?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. வேறு யாரும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரைக்கும் மைய அரசு Debt Relief Scheme ஒன்றை தற்போது அறிவித்திருப்பதை மாண்புமிகு அவையும், மாண்புமிகு உறுப்பினர்களும், அறிவார்கள். அதை நடைமுறைப்படுத்துகிறபோது எத்தகைய நிதி நிருவாகத்தை மாநிலம் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக fiscal responsibility legislation ஏற்கெனவே இருப்பதை, எத்தகைய ஓர் இலக்கை அரசு எய்த வேண்டும், நிர்வாகம் அடையவேண்டும் என்பதற்காக மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும். இது கட்டாயமான ஒன்று. இப்படிப்பட்ட இலக்குகளை அடைய வேண்டும் என்பதுதான் amendment–லே கூறப்பட்டிருக்கிறது. அந்த இலக்குகளை எய்துவதற்கு இந்தச் சட்டத் திருத்தம் இன்றியமையாத ஒன்றாக இருக்கிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.





சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2005 ஏப்ரல் 13

## (இ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2005), மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2005)*[@] *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. கு. பிச்சாண்டி. (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, இருங்கள், திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தொடர்ந்து ஐந்தாவது முறையாக இந்த நீட்டிப்பு வழங்குவதற்காக இந்த மன்றத்திலே இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அதனுடைய உறுப்பினர்கள், அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால்தான், கூட்டுறவுத் துறையிலே அந்த உறுப்பினர்களுக்கு நல்ல முறையிலே கடன்களை வழங்கக்கூடிய சூழ்நிலை இருக்கும். தமிழ்நாட்டிலேதான் முதன்முதலில் திருவூரிலே இந்தக் கூட்டுறவு இயக்கம் தொடங்கப்பட்டு, ஒரு ஜனநாயகத் தொட்டிலாக ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டு காலமாக, இந்தச் சட்டம் மீண்டும் மீண்டும் நீட்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தலைவர் கலைஞர் அவர்கள், 1991–லே முதலமைச்சராக இருந்த நேரத்திலே, கூட்டுறவுத் தேர்தலை நடத்தினார்கள். அதை நீங்கள் மீண்டும் கலைத்தீர்கள். அதேபோல, 1996–லே கூட்டுறவுத் தேர்தலை நடத்தினார்கள். அதை மீண்டும் நீங்கள் கலைத்தீர்கள். (குறுக்கீடு)

@ 12-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் தவறானத் தகவலைத் தருகின்றார்கள். 1991–லே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் முதலமைச்சர்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–லே நாங்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று, 1991–லே நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கலைத்தீர்கள். ஆக, உங்கள் ஆட்சிக் காலத்திலே கூட்டுறவுத் தேர்தல்களே நடத்தப்படாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இது எதற்காக? ஜனநாயக முறையிலே இந்தத் தேர்தல்கள் நடத்தப்பட்டால்தான், அந்த உறுப்பினர்கள் ஆங்காங்கே கடன்களைப் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகும். அண்மையிலேகூட, தஞ்சாவூர் மாவட்டத்திலே விவசாயிகளுக்குக் கடன்கள் கிடைக்கவில்லை என்று அங்கே உறுப்பினர்கள் எல்லாம் போராடக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அந்த உறுப்பினர்களால் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால், இந்த நிலை இருந்திருக்காது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இது ஒரு ஜனநாயகப் படுகொலையாக இருக்கிறது. மனமிருந்தால், மார்க்கமுண்டு. ஒவ்வொரு ஆண்டும் வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால், இன்றைக்கு நான்கு ஆண்டுக் காலத்திற்கும் மேலாக ஆகிறது. 45 நாட்களில்கூட இன்றைக்குக் கொலை வழக்குகள் முடிந்து, தீர்ப்புகள் சொல்லப்படுகின்ற விரைவு நீதிமன்றங்கள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த வழக்கு நீண்ட காலமாக இழுத்தடிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்து, இந்தத் தேர்தலை நடத்துவது ஒரு ஜனநாயகக் கடமையாக இருக்கும் என்று கருதி, தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்பதை நான் தெரிவித்து, இந்த கால நீட்டிப்புக்கு என்னுடைய கண்டனத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பிச்சாண்டி அவர்கள் பேசுகிறபோது, ஜனநாயகப் படுகொலை என்று சொன்னார். கூட்டுறவு அமைப்புகளுக்கு ஜனநாயகரீதியாக உங்கள் காலத்தில் தேர்தலை நடத்தினீர்கள். ஆனால், போட்டியிடுவதற்கு ஒரேயொரு வேட்பு மனுவை மட்டும் தந்து, மற்றவர்கள் எல்லாம் தேர்தலில்

பங்கெடுக்கமுடியாத ஒரு சூழல் உருவான வரலாற்று உண்மை உங்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகப் படுகொலை கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது. அப்படி கூட்டுறவுச் சங்கங்களை உங்களுடைய இயக்கத்தினர் பிடித்தபிறகு, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் கபளீகரம் செய்யப்பட்ட வரலாற்று உண்மையும் உங்களுக்குத் தெரியும், விசாரணைகள் நடந்து கொண்டிருக்கின்றன, நீதிமன்றத்திலே. தேர்தலை உடனே நடத்த வேண்டும் என்றுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் விரும்பினார்கள். ஆனால், அது யாரோ, வெளியிலே பத்திரிகைகளில் வந்த செய்தியை எல்லாம், உங்களுக்கு வேண்டியவர்களே நீதிமன்றத்திற்குச் சென்று, அந்தப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடாது என்ற நிலையைக் கொண்டு வந்தீர்கள். போலி உறுப்பினர்களை, இலட்சக்கணக்கான பேரை நீங்கள் சேர்த்த காரணத்தால், இஷ்டம்போல கூட்டுறவுப் பணத்தை எப்படி வேண்டுமென்றாலும் கையாடலாம், தவறு செய்யலாம் என்ற ஒரு நிலையை அந்தக் காலத்தில் உருவாக்கினீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் களைவதற்கு, நிர்வாகத் தூய்மைக்கு அம்மா முயற்சி செய்தார். நீதிமன்றம் தடையாணை விதித்தது. இப்படிப்பட்ட சூழல் உருவான காரணத்தால்தான், தேர்தலை உடனடியாக நடத்தமுடியாத ஒரு சூழல் உருவான உண்மையும் உங்களுக்குத் தெரியும். தெரிந்தே இதை நீங்கள் பேசக்கூடாது.

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே பதிலைத்தான் மூன்று ஆண்டுகளாக, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொல்லிவருகிறார். இன்றைக்குத் தேர்தலிலே புதிய உறுப்பினர்களைச் சேர்த்துதான் தேர்தல் நடத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே தவிர பழைய உறுப்பினர்களை வைத்து தேர்தலை நடத்தலாம் என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஆனால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய உறுப்பினர்களை மட்டும் வைத்து கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தினால், கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்ற இடமே தெரியாத மாநிலம், தமிழகம் என்ற அவப் பெயர் தமிழகத்திற்கு வந்துவிடும். (மேசையைத் தட்டும் ஒலி)





**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழைய உறுப்பினர்களை வைத்துத் தேர்தல் நடத்தவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர், திரு. பிச்சாண்டி அவர்கள் சொல்கின்றார்கள். நீங்களே வைத்துக்கொண்ட உறுப்பினர்கள்தான் பழைய உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். உதாரணத்திற்காக, தமிழ்நாட்டில், பெரியகுளத்தில் இருக்கின்ற கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில், என் பெயரே அங்கு நீக்கப்பட்டிருக்கின்றது. இந்தமாதிரிதான் தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனை கூட்டுறவுச் சங்கங்களிலும் உங்களுக்கு வேண்டியவர்களை வைத்துக்கொண்டு வேண்டாதவர்களை நீக்கிவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பழைய உறுப்பினர்கள் பட்டியலை அப்படியே நீங்கள் வைத்துக்கொண்டு அதன்படி தேர்தல் நடத்தவேண்டுமென்று, இன்றைக்கு நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறீர்கள். அது தவறு என்றுதான் நாங்கள் வழக்காடிக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அமைச்சர் அவர்கள் அவருடைய விளக்கத்தைத் தந்தார்கள். இப்போது நீங்கள், அப்படிப் போலியான உறுப்பினர்களைச் சேர்ப்பதை எதிர்த்துதான் நீதிமன்றத்திலே வழக்குத் தொடுத்து, தடையாணை பெற்றிருக்கிறீர்கள் என்பதுதான் உண்மையான நிலைமை என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு, இங்கே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, அவர்கள் ஏதோ இன்றைக்குக் கூட்டுறவிலே, ஜனநாயக முறையிலே தலைவர்கள் இல்லாத நிலையிலே, தனி அதிகாரிகள் மூலம் நாங்கள் அதைச் சீரமைத்திருக்கிறோம் என்று இங்கே முதலமைச்சர் அவர்கள்கூட பல அறிவிப்புகளை இன்றைக்கு வெளியிட்டார்கள். ஆனால், இன்றைக்குக் கடன் வழங்குகின்ற அளவுகள் எல்லாக் கூட்டுறவுத் துறையிலேயும் குறைந்திருக்கின்றன என்பதுதான் இருக்கின்ற உண்மை. ஆகவே அப்படி . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட்டுறவுத் துறையினுடைய ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறார். சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்குத் தேர்தல் நடைபெற்றபோது, எங்களுடைய அப்போதைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த, திரு. சுந்தரம் அவர்கள் வேட்புமனு தாக்கல்

செய்ய முயற்சித்தபோது, அவர் பல்லையே உடைத்தவர்கள் உங்களுடைய கட்சியின் அமைச்சராக அப்போது இருந்தவர் என்பதைக் கூறி, எப்போதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிலே வருகிறதோ, அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் உடனடியாக முதலில் கூட்டுறவிலே மூக்கை நுழைப்பது என்பது, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டுறவுக் கொள்கையின் தத்துவம் என்பது காகங்கள் கூடி இரையைத் தின்பது போல (மேசையைத் தட்டும் ஒலி) ஆகாயத்திலே வட்டமிட்டுக் கொண்டிருக்கிற காகம், கீழே குனிந்து ஓர் இரையைப் பார்த்துவிட்டால் ஒன்றாக கா, கா, காவென்று கூடி எல்லா காகங்களையும் கூட்டி, இரையைத் தின்பதைப்போல. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கூட்டுறவுத் தத்துவம் என்பது, எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடையை தத்துவம் என்பது, 'மேகங்கள் கூடி நாட்டுக்கு மழையைப் பெய்விப்பதைப்போல்' என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஏற்படுத்தியிருக்கிற சுனாமியைச் சரிசெய்ததற்குப் பிறகு, நிச்சயமாக ஜனநாயகரீதியாக அந்தந்த அமைப்புகளுக்கு யார் யார் தலைவர்களாக வரவேண்டுமோ, யார் யார் தலைவர்களாக வந்தால் கூட்டுறவு அமைப்புகள் சீர்பெற்று செழித்து வளருமோ, அப்படிப்பட்ட நேரத்தில் மக்கள் பயன்பெறத்தக்கவகையிலே தேர்தலை நாங்கள் கண்டிப்பாக நடத்துவோம், நீங்கள் கூட்டுறவைப் பற்றிக் கவலைப்படுவது என்பதுதான் எங்களுக்கு இங்கே வேதனையாக இருக்கிறது என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி, பேசுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் உறுப்பினர்களைச் சேர்த்து தேர்தல் நடத்துவதற்குள்ளாக ஆட்சிக் காலமே முடியக்கூடிய சூழ்நிலை வந்துவிட்டது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே . . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிச்சம் மீதி இருப்பதையும் சுருட்டிக்கொண்டு போவதற்கு அவர்கள் அவசரப்படுகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான், கூட்டுறவுச் சங்கத்

V2I1,31'805 805.83





தேர்தல்கள் நடத்தப்பெற்றன. நேற்றைக்குக்கூட, செல்வி பாலபாரதி அவர்கள் கூட்டுறவுச் சங்க தனி அலுவலர்கள் உள்ள பல இடங்களிலே ஏற்பட்ட அந்த மோசடிகள் எல்லாம் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்று பேசியிருக்கிறார். ஆகவே, இது காங்கிரஸ் ஆளுகின்ற காலத்திலேயிருந்து, பல்வேறு நிலைகளிலே ஆங்காங்கே நடைபெறுகின்ற அந்த முறைகேடுகள், அவை விசாரிக்கப்பட்டு . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இங்கே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி (குறுக்கீடு) திரு. பிச்சாண்டி, பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2001 ஆம் ஆண்டு கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைமீது மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர், திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசிய பேச்சின் குறிப்பை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். "நான்கூட இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எங்களுடைய கற்பகம் சூப்பர் மார்க்கெட்டினுடைய தலைவர் ரூ.12 கோடி கொள்ளையடித்து இருக்கிறார் என்று இந்த அவையிலே பேசி அவரை மட்டும் பதவியிலிருந்து எடுத்துவிட்டார்கள். அந்த ஆட்சியிலே எடுத்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளர் பதவியிலேயிருந்தும் எடுத்துவிட்டார்கள். ஆனால் இன்று வரையிலும் சரி அவரை, அவர்களுடைய ஆட்களை arrest செய்யவில்லை. நீங்கள் மாறி வந்திருக்கிறீர்கள். நீங்களாவது இதுவரைக்கும் அவரை arrest செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று பார்த்தால் அதுவும் இல்லை. இப்படியே நீங்கள் வைத்திருந்தீர்கள் என்று சொன்னால் அதற்கு தேர்தல் நடத்தி என்ன பிரயோஜனம். அந்த Society–யே போய்விட்டது. இன்றைக்கு மூடிவிட்டார்கள். No.1 in India, No.1 in India. Karpagam Super Market has been closed. Why? Actually who is the responsible person for the closure of the shop?" என்கின்ற கேள்வியை அன்றைக்கு மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். இன்றைக்கு அந்தக் கூட்டுறவுச் சங்கமானது நல்ல முறையிலே திருத்தியமைக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு எட்டு இலட்சம் ரூபாய் இலாபத்தை ஈட்டத்தக்க அளவுக்கு அந்தக் கற்பகம் கூட்டுறவுச் சங்கமானது இதய தெய்வம் அம்மா அவர்களுடைய சீரிய வழிகாட்டுதலிலே சிறப்பாக வளர்ந்தோங்கி வந்திருக்கிறது என்பதற்கு



186281

[திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்][2005 ஏப்ரல் 13

மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களே சாட்சி என்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, இந்தச் சட்டமுன்வடிவிலே உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** கருத்தைத்தான் சொன்னேன். அவர்கள்தான் ஏதோ சொல்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவு Society–லே தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவர்களைப் பதவியிலிருந்து நீக்கி இருக்கிறார்கள். ஆகவே தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதில் நாங்கள் தயங்கவில்லை. ஜனநாயக முறையிலே தேர்தலை நடத்த வேண்டுமென்றுதான் எங்களுடைய கோரிக்கையாகச் சொல்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்க்கிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தொடக்க நிலை கூட்டுறவுச் சங்கங்கள் மைய மற்றும் உச்ச நிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தனி அதிகாரிகளினுடைய பதவிக் காலத்தை, ஓராண்டுக் காலம் நீட்டிக்கிற வகையிலே இந்தச் சட்டமுன்வடிவில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறதைப் பார்த்தால் மக்களாட்சியினுடைய மகத்தான தத்துவத்தைச் சிதைக்கிற வகையிலே இங்கு சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஒரு நிருவாகம் சரியாக இயங்க வேண்டுமென்று சொன்னால், அங்கே மக்கள் பிரதிநிதிகள் கட்டாயம் இருக்க வேண்டும். மக்கள் பிரதிநிதிகளே இல்லாமல், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஆட்சிக் காலம் முழுவதும் காலம் கழித்துவிடலாம் என்ற நிலையிலே, இந்தத் தனி அலுவலர்களுடைய பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்று சொல்வார்கள். 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி ஜனநாயகரீதியாகச் சொல்லுகின்ற நேரத்திலே, பேரறிஞர் அண்ணா



2005 ஏப்ரல் 13] [திரு. ஜி.கே. மணி]

அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 'ஜனநாயகத்திற்கு அடிப்படைத் தேவை கலந்துரையாடல்; விவாதம், கருத்துப் பரிமாற்றம்; தமிழர் நெறி, கூடி வாழ்தல்; கேடு செய்தல் அல்ல, தமிழர் முறை, கருத்தறிந்து காரியமாற்றுதல்; கத்தி முனையில் கட்டளை பிறப்பிப்பது அல்ல' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், இங்கே தெளிவாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தவகையில் இங்கே கூடி வாழக்கூடிய, ஜனநாயகரீதியாக இயங்கக்கூடிய நிலைமையிலுள்ள இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலே நடத்தாமல், இந்த ஆட்சிக் காலம் முழுவதும் காலம் கழித்துவிட்டு மீண்டும் எப்பொழுது தேர்தல் நடத்தப் போகிறீர்கள் என்ற கேள்விக்குறிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இப்பொழுது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஏராளமாக மூடப்பட்டிருக்கின்றன. இப்படி மூடப்பட்டதற்கு அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாததே காரணம் என்று நான் குறை சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, பணம் இல்லையென்றாலும் மக்கள் பிரதிநிதிகள் இருந்திருப்பார்கள் என்று சொன்னால், அந்த நிருவாகம் சரியாக இயங்கி இருக்கும். மக்களுக்குச் சென்றடைய வேண்டிய நன்மைகள் முறையாகச் சென்றடைந்திருக்கும். ஆகவே, இந்தவகையிலே கூட்டுறவுச் சங்கங்களினுடைய தேர்தலை நடத்தாமல், நீதிமன்றம் என்ற காரணத்தைக் காட்டி, இங்கே காலத்தைக் கடத்துவது சரியானதாக இருக்காது. ஆகவே, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்தாத காரணத்தால், இந்தப் பதவிக் காலத்தை நீட்டிப்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கடுமையாக ஆட்சேபித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், செப்டம்பர் 13, வியாழக்கிழமை அன்று, இதே மானியத்தின்மீது பேசிய பேச்சினை இங்கே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்: "அதற்கு உதராணத்தைச் சொல்கிறேன். கடந்த நிர்வாகக் குழுவிலே இருந்த தலைவர்கள், பணி நியமனம் செய்தார்கள். அந்தப் பணி நியமனம் செய்துவிட்டு, நிரந்தரம் என்று சொல்லி, இன்னும் அவர்கள் சம்பளத்திலே arrears என்று சொல்லி, ஒவ்வொரு பணியாளரிடமிருந்தும் ரூபாய் ஐம்பதாயிரம், ரூபாய் ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் என்று பெற்று, பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் பணியாளர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதித் தொகையை எல்லாம் தலைவர்களாக இருந்தவர்களே எடுத்துக்கொண்டார்கள். இது வரலாறு,

உண்மை." இப்படிப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், அன்றைக்கு இப்படிக் குறிப்பிட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த அன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களைப் பற்றி. இவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்து, இவர்களையெல்லாம் வைக்க வேண்டிய இடத்திலே வைக்க வேண்டாமா? அதற்குரிய கால அவகாசம் வேண்டாமா என்கின்ற கேள்வியைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

*பிற்பகல் 12–45*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றம், தவறு நடந்திருக்கிறது என்ற காரணத்தினாலே, தேர்தலை நடத்தாமல், இப்போது என்ன முறைகேடு நடந்து கொண்டிருக்கிறது என்பதை மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலை நடத்தாமலே அந்த அதிகாரிகளை, தனி அதிகாரிகளை வைத்துக்கொண்டு, தனக்கு வேண்டியவர்களுக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்து கொண்டு, எப்படியெல்லாம் சுருட்டலாம் என்ற நிலை இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கடந்த காலத்தைவிட இப்போது பல மடங்கு சுருட்டல், ஊழல் நடந்து கொண்டிருக்கிறதேதவிர, அங்கொன்றும் ஜனநாயகம் தழைக்கவில்லை; நிலைநாட்டப்படவில்லை.

***மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களெல்லாம், 1991 ஆம் ஆண்டு முதல் 1996 வரை, சுமார் 881 கூட்டுறவுச் சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, இலாபத்திலே இயங்கி வந்தன. பிறகு 1996–ல் இருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்து, தேர்தல் என்ற போர்வையிலே, தேர்தலை நடத்தாமல், அங்கே வன்முறைகளை நடத்தி, அங்கே நிர்வாகக் குழு பொறுப்புக்கு வந்ததனால், 881 கூட்டுறவுச் சங்கங்கள், இலாபத்திலே இயங்கி வந்த சங்கங்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, 320 கூட்டுறவுச் சங்கங்களாகக் குறைக்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பல்வேறு நல்ல நடவடிக்கைகளை எடுத்ததனால், இன்றைக்கு 600–க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)





**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்கள், 1991 முதல் 1996–க்குப்பின், முதலமைச்சர் பொறுப்பைவிட்டுச் செல்கின்ற நேரத்திலே, மாநிலத்திலேயிருந்த 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நல்ல முறையிலே இலாபத்திலே இயங்கிக் கொண்டிருந்தன. அதற்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுடைய பணிக் காலம் முடிந்து, 2001 ஆம் ஆண்டு அம்மா அவர்கள் பொறுப்பேற்ற நேரத்திலே, 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே, 17 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அன்றையதினம் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது, நட்டத்திலே இருந்தன. அவற்றிலெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாவட்டச் செயலாளர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஒன்றியச் செயலாளர்கள் போன்றவர்கள், அந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுடைய தலைவர்களாக இருந்து அன்றைக்குப் பணியாற்றினார்கள். 2001 ஆம் ஆண்டு, அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, நட்டத்திலேயிருந்த 17 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இன்றைக்கு மாற்றியமைக்கப்பட்டு, 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே, கடந்த மார்ச் 31 ஆம் தேதி கணக்கு முடிந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ 17 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்தை அடையக்கூடிய ஒரு சூழ்நிலையில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையிலே, மாநிலம் முழுவதும் இருக்கின்ற 4,500 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே—திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்கள் பொறுப்பிலே இருந்தபோது, 3,500 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அன்றைக்கு நட்டத்தை அடைந்து, மூடுகின்ற சூழ்நிலையிலே இருந்தன—இன்றைக்கு நான்கு ஆண்டுக் காலத்திலே, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய சிறந்த சீரிய வழிகாட்டுதலின்படி, ஏறத்தாழ 3000 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் புத்துயிர் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) சிறப்பான நிலையை அடைந்துகொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) 1000–க்கும் மேற்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், நல்ல இலாபத்திலே இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலையில், கடந்த 4 ஆண்டுக் காலத்திலே, அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி இயங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கும், இந்தியாவிலேயே, கடந்த நான்காண்டுக் காலத்திலே, நம்முடைய அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலின்படி கூட்டுறவுத் துறையிலே முன்னோடியாக இருக்கிற

[திரு. பொள்ளாச்சி சி. ஜெயராமன்] [2005 ஏப்ரல் 13

மாநிலமாக இருப்பது, தமிழகம் என்று சொல்வதிலே நான் பெருமைப்பட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை. (குறுக்கீடு) திரு. மணி, முடித்துவிட்டீர்கள் அல்லவா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன. மூடிக்கொண்டிருக்கிற நிலை. அதைப்போல, கும்பகோணம், தருமபுரி உட்பட, 6 மாவட்ட மத்தியக் கூட்டுறவுச் சங்கங்களுடைய நிலை என்ன? அங்கே மோசமான நிலை. இது யாருடைய காலத்திலே? இந்த ஆட்சிக் காலத்திலே.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் காலத்திலே? சேர்ந்திருக்கிற கூட்டணிக்குத் தகுந்தாற்போன்று, சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல், நாவை மாற்றிக்கொண்டு பேசக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) யாருடைய காலத்தில், யார் தலைவர்களாக இருந்தபொழுது, அவை நஷ்டத்தை அடைந்தன? எங்களுடைய அம்மா அவர்கள், முதலமைச்சர் பதவியைவிட்டுப் போகிறபொழுது, 1996–லே, 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்திலே இயங்கின. 2001 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் பதவியிலேயிருந்து விலகுகிற நேரத்திலே, 17 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் நட்டத்திலே இருந்தன. மெத்தப்படித்தவர். இவ்வளவையும் தெரிந்து வைத்துக்கொண்டு, எதற்காக, சந்தர்ப்பவாதத்திற்காக இப்படிப் பேசுகிறார் என்பது எனக்குத் தெரியவில்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அம்மா அவர்களுடைய தலைமையிலே இன்றைக்குக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பான முறையிலே புத்துயிர் பெற்று, புத்துணர்ச்சி பெற்று, வரலாறு காணாத புரட்சியினை எதிர்காலத்திலே படைக்க இருக்கிறது என்கின்ற உண்மையைச் சொல்லி, அமர்கின்றேன்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு இயக்கம் மனித சமுதாயத்தினுடைய ஒவ்வொரு பிரிவிலும் தொடர்புகொண்ட இயக்கம். குறிப்பாக விவசாயிகளுடைய வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற இயக்கம். ஆரம்ப



2005 ஏப்ரல் 13] [திரு. க. பாரமலை]

காலத்திலே அதைப் பற்றிச் சொல்வார்கள், "Co-operation is the golden via media between socialism and capitalism" என்று. அப்படிப்பட்ட, பொருளாதாரத்திலே ஒரு நல்லுறவோடு இருக்கிற இயக்கம். அந்த இயக்கம் கொஞ்சம் கொஞ்சமாக வலுவிழந்து, அந்த இயக்கம் தோற்றுப் போய் விடுமோ என்று நினைக்கக்கூடிய அளவிற்குப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஒரு கூட்டுறவு சொசைட்டி இருக்குமானால், அந்த ஊரிலே கூட்டத்தைப் போட்டு விவசாயிகள் கடன் பெறுகின்ற நேரத்தில் உரிய நேரத்தில் கடனை வழங்கி விவசாயத்தைச் செய்து, அறுவடை நேரத்திலே, ஒரே நேரத்திலே அறுவடை செய்த பொருளை விற்கவேண்டும் என்று சொன்னால், விலை குறைந்துவிடும். ஆகவே, sales society என்று வைத்து, அவர்களுக்கு advance கொடுத்துவிட்டு விலை ஏறுகிறபோது அதை விற்று, அவர்களுக்குப் பணத்தைக் கொடுப்பார்கள். அப்படி ஒவ்வொரு நிலையிலும் உதவியாக இருப்பது கூட்டுறவு இயக்கம் என்றுதான் சொல்வார்கள். 'All for each, each for all' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட இயக்கம் இன்று வலுவிழந்து போய்க் கொண்டிருக்கிறது.

இன்று ஐந்தாவது முறையாக நாம் இந்த நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதில் அதாவது, கூட்டுறவு இயக்கத்திற்கு அதிகாரிகளை நீடித்து நாம் இப்போது பில் கொண்டு வந்திருக்கிறோம். நான் கேட்டுக்கொள்வது இது இப்படியே போய்க் கொண்டிருந்தால், ஒரு முடிவே இருக்காது. அம்மா அவர்கள் இப்போது அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இன்னின்ன வகையிலே விவசாயிகளுக்குக் கடன்களை, வட்டியைத் தள்ளியிருக்கிறோம்; கூடுதல் வட்டியைத் தள்ளியிருக்கிறோம்; நடுத்தரக் கடன்களை, நீண்ட காலக் கடன்களாக, அல்லது Short term loan -ஐ medium term loan-ஆக மாற்றிக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நல்ல உதவி. ஆனால், இந்த சொசைட்டி, கூட்டுறவு இயக்கங்கள் கடன் வழங்குகின்ற தகுதியை இழந்துவிட்ட பின்னாலே, அல்லது கடன்களை வாங்குகின்ற தகுதியை இழந்துவிட்ட பின்னாலே, அவர்கள் மீண்டும் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க இயலாது. கடன்களைத் தள்ளி வைத்தீர்கள். நிச்சயமாகக் கொடுப்பதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். ஆனாலும், கூட்டுறவு இயக்கத்தில் மீண்டும் கடன் பெற இயலாது. கடன் கொடுக்கின்ற சொசைட்டி நலிவடைந்து போய்க்கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை நீடித்தால், விவசாயிகள் கடன் வாங்குகிறபோது தனி நபர்களிடம்தான் கடனை வாங்கித் தீர வேண்டும். தனி நபர்களிடம் கடன் வாங்குகிறபோது, இப்போதெல்லாம் இருக்கிற சட்டத்தைப் பயன்படுத்தி, வெளியிலிருந்து வாங்க பயந்து

[திரு. க. பாரமலை] [2005 ஏப்ரல் 13

கொண்டு, நிலங்களைக் கிரயம் பெற்றுக்கொண்டுதான் கடன் கொடுக்கின்றார்கள். இந்த நிலை நீடித்தால், மீண்டும் ஒரு ஜமீன்தாரி முறை உருவாகக்கூடிய அபாயம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை வராமல், தேர்தல் நடத்தினாலும்கூட, இந்தக் கூட்டுறவு இயக்கம் முழுமையாகப் பயன்படுமா என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது இது சம்பந்தமான நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்காக, ஒரு உயர்மட்டக் குழுவை நியமித்து, இந்தத் தேர்தலை நடத்துவது மட்டுமல்லாமல், நடத்திய பின்னாலும் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறுவதற்கு என்ன வழி என்பதைக் கண்டறிந்து அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, அதை அமல்நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இந்தச் சட்டத்தின்படி 2005 ஆம் ஆண்டு வரை அந்த அதிகாரிகளுடைய பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தாலும்கூட இடையிலே தேர்தல் நடத்துவதற்குத் தடையில்லை; அதை நடத்துவதற்குரிய எல்லா முயற்சிகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். *(குறுக்கீடு)* திரு. வை. சிவபுண்ணியம் ... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கூட்டுறவுக்கு எப்போதெல்லாம் சலுகைகளை அறிவித்தார்களோ அப்பொழுதெல்லாம் அதற்குரிய தொகையை மாநில அரசின் சார்பாக கூட்டுறவு நிறுவனங்களுக்கு அப்போதைக்கப்போது வழங்கியிருக்கிறார்கள் என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் ... *(குறுக்கீடு)*

**திரு. க. பாரமலை:** ஒரு நிமிடம். உண்மையான கூட்டுறவு இயக்கம் என்று சொன்னால் அரசாங்கத்திடம் பணம் பெறாமலேயே நடக்கக்கூடியது; அதனுடைய தத்துவமே அதுதான். ஆகையினாலே அந்த இயக்கங்கள் நலிவுற, நலிவுற அரசுப் பணத்தை போட்டுப் போட்டு நடத்திக் கொண்டிருந்தால், நிச்சயமாக அந்தக் கூட்டுறவு இயக்கம் வெற்றி பெறாது என்பதை மனதிலே கொண்டு, இதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

*பிற்பகல் 12–55*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002–லே இந்த அரசு, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்துவதாக அறிவித்தது. ஆனால், இப்போது அமைச்சரவர்கள், இந்தச் சட்டத்தினுடைய நோக்கக் காரணங்களிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், "தேர்தல் நடத்த முடியாத ஒரு நிலை, நீதிமன்றத்திலே வழக்கு இருந்து கொண்டிருப்பதன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது" என்கிறார். இது பல காலங்களாக, பல நாட்களாக சொல்லிக் கொண்டிருக்கிற ஒரு பதில். நான் என்ன கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றால், நீதிமன்றங்களிலேயே அரசு விரைவாக நவடிக்கைகள் எடுத்து இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முனைப்பை ஏற்படுத்தவில்லை என்று நாங்கள் கருதுகிறோம். அந்த முறையிலே ஒன்று, நடவடிக்கைகள் எடுத்து தேர்தலை நடத்தி இருக்க வேண்டும். தேர்தல் நடத்தப்படாததன் காரணமாக, இன்று கூட்டுறவுச் சங்கங்களிலே சில பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவந்திருக்கிறேன். அதிலே சில விஷயங்களை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே நீங்கள் தேர்தலை நடத்துவதையோ, நடத்தாததையோ பொறுத்த அளவிலே, அதனை நடத்த வேண்டுமென்றுதான் உங்களிடம் வேண்டுகோள் வைக்க முடியுமே தவிர, நடத்த வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது. ஆனால், அரசு என்ற முறையிலே கூட்டுறவுச் சங்கங்களை சரியான முறையிலே, மக்களுக்குப் பயனுள்ள முறையிலே செயல்படுத்துவதற்குத் தகுந்த அளவிலே ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசால் முடியும். ஆனால், இன்று பல சங்கங்களிலே அந்த முறையிலே நடவடிக்கைகள் இல்லை. Registrar of Co-operative Societies-இனுடைய ஒப்புதலைப் பெற்று, ஒப்பந்தங்கள் போட்டு, சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஊழியர்களுக்கு இன்றைக்குச் சம்பளம் குறைக்கப்பட்டிருக்கிறது. அதனால், அந்த ஆட்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. Registrar-இடம் முறையிட்டால் எந்தப் பிரயோஜனமும் இல்லாத நிலை ஏற்படுகிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2005 ஏப்ரல் 13

அதேபோன்று, இந்தத் தொழிலாளர்களுடைய, கூட்டுறவுச் சங்கங்களின் தொழிலாளர்களுடைய சம்பளத்திலேயிருந்து, கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொடுக்கப்பட வேண்டிய பணத்தைப் பிடிக்கிறார்கள். ஆனால் அந்தப் பணம் அந்தச் சங்கங்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ** ஆகவே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், (மணியடிக்கப்பெற்றது) இதை நான் குற்றச்சாட்டுக்காக சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சட்டமுன்வடிவின் மீது சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆகவே, இப்படிப்பட்ட ** என்பது இன்றைக்கு ஏற்படுகிறது. அதேபோன்று இந்தத் தேர்தலைப் பொறுத்த அளவிலே . . .

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரத்தோடு குற்றச்சாட்டைத் தரவேண்டும். ஆதாரத்தோடு கொடுங்கள், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன் (குறுக்கீடு) இதுபோன்ற குற்றச்சாட்டுகள் இருக்குமானால் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரம் இல்லாத ஒரு குற்றச்சாட்டை இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறார். அந்தக் குற்றம் யார் செய்தது என்பதைச் சொல்லட்டும். (குறுக்கீடு) இப்பொழுது சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 400 கோடி ரூபாய் மூலதனத்தோடு மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற வங்கிதான் போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய கூட்டுறவு வங்கி. ** ஏதேனும் குற்றச்சாட்டுகள் இருக்குமானால் அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரப்பூர்வமாக மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே எழுதிக் கொடுக்கவேண்டுமேயல்லாமல், இப்படிப் பொத்தாம் பொதுவாக இங்கே ஒரு குற்றச்சாட்டைப் பதிவு செய்யக்கூடாது என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின்மீது உங்கள் கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நான் தெளிவாகச் சொன்னேன், நான் குற்றச்சாட்டாக இதைச் சொல்லவில்லை. நான் ஒரு தகவலாகச் சொன்னேன். நான் அந்தத் தகவலை, மாண்புமிகு அமைச்சரிடம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** நீங்கள் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** தயவுசெய்து எதை, எப்படி, என்ன என்று விவரமாக இங்கே சொல்ல வேண்டும். அதை எப்போதும் போல பேசிவிட்டுப் போகக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தக் குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. ஏதாவது ஆதாரம் இருந்தால் அமைச்சரிடத்திலே எழுதிக் கொடுங்கள். அல்லது முதல்வர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுங்கள். இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்கள் கட்சியினுடைய கருத்துகளைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** 2 நிமிடத்திலே முடித்துவிடுகிறேன். அதாவது, எனக்குக் கொடுக்கப்பட்ட தகவல் என்று நான் சொன்னேன். அந்தத் தகவல் எழுத்து மூலமாகவே இருக்கிறது. அந்தக் கடிதத்தையே அந்தத் தகவல் எழுத்து மூலமாகவே இருக்கிறது. அந்தக் கடிதத்தையே நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கொடுத்துவிடுகிறேன். அதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபனையே இல்லை. நான் அதை ஒரு குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குவது என்று மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் முடிவு எடுத்தால் எனக்கு அதிலே மாறுபாடு இல்லை. நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால், கூட்டுறவுச் சங்கங்களிலே தேர்தல் நடத்தப்படாததன் காரணமாக ஏற்பட்டிருக்கிற ஒரு விளைவு, low paid servants-க்கு சம்பளம் உயர்த்தப்படாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலித்து, low paid employees-க்குக் கொஞ்சம் ஊதிய உயர்வு கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுடைய service conditions-ஐக் கூட்டுறவுச்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2005 ஏப்ரல் 13

சங்கங்களிலே இருக்கிற தனி அதிகாரிகள், தங்களுடைய விருப்பு வெறுப்புக்குத் தகுந்த அளவிலே பயன்படுத்துகிற முறைக்கு விடாமல், அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

பிற்பகல் 1–00

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுத் தேர்தலை நடத்துவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுவதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன்.

குறிப்பாக, இங்கே பல செய்திகள் விவாதிக்கப்படுகின்றன. நான் அதனுள்ளே செல்ல விரும்பவில்லை. எப்படியிருந்தாலும் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் இப்போது பொதுவான வேண்டுகோள். ஆகவே, தேர்தல் நடத்தப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிவதற்குப் பதிலாக, நிறுத்தப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து, இந்தச் சட்டமுன்வடிவு மேற்கொள்ளப்பட இருக்கிறது. குறிப்பாக, நீதிமன்றத்திலே இருக்கிற பிரச்சினையைப் பற்றி இங்கே சொல்லப்படுகிறது. இருந்தாலும், 2001 ஆம் ஆண்டிலே சொல்லப்பட்ட அடிப்படையில், இந்தத் தேர்தலை இடைப்பட்ட காலங்களில் நடத்துவதற்கு என்ன தடை ஏற்பட்டது என்பதுதான் என்னுடைய கேள்வி. சென்ற ஆட்சி, முந்தைய ஆட்சி என்ற வழக்கங்கள், விமர்சனங்கள் இங்கே நடைபெற்றாலும்கூட, இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலே ஏன் கூட்டுறவுத் தேர்தலை நடத்தவில்லை என்பது எங்களுடைய கேள்வி. பொதுவான நிலையிலே பார்த்தால் (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் விளக்கம் பலமுறை அனைவராலும் தரப்பட்டிருக்கிறது. புதிய உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்; போலி உறுப்பினர்களை நீக்க வேண்டும்; இதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய ஆணை வேண்டும்; இதுதான் காலதாமதத்திற்குக் காரணம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கின்ற இந்தப் பிரச்சினையைப் பற்றிகூட நான் நேற்றைய தினம் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னேன். போலி உறுப்பினர்களைத் தடுக்க வேண்டுமானால், அதற்குரிய ஒரு முயற்சியை நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய



2005 ஏப்ரல் 13] [திரு. வை. சிவபுண்ணியம்]

பணிவான கருத்து. நான் சொல்வது என்னவென்றால், உறுப்பினர்கள் ஏராளமான பேர், 10 ரூபாய் 60 காசு என்று என்னமோ கட்டி சேர்ந்து விடுகிறார்கள். ஆனால், விதிமுறைகளை வைத்து உறுப்பினர் என்றால், அவர் கடன் பெற்றவராக இருப்பதற்குரிய தகுதி உடையவராக இருந்தால், அல்லது மூன்று ஆண்டுக் காலம் கடன் பெற்றிருந்தால், ஏதாவது ஒரு norms அதிலே வைத்து, அவர்கள் உறுப்பினர்கள் என்ற ஒரு கொள்கை நிலையை அரசு எடுக்குமானால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வராது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றம் தெளிவாகக் கூறியிருக்கிறது. புதிய உறுப்பினர்களைச் சேர்த்தாலும்கூட, அவர்கள் தேர்தலில் வாக்களிக்க முடியாது என்ற ஒரு நிலையும் இருக்கிறது. எனவேதான், உயர் நீதிமன்றத்தினுடைய ஆணை வேண்டப்படுகிறது. அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எது எப்படியிருந்தாலும், கூட்டுறவுத் துறையைப் பற்றி நான் பேசுகிறபோது 75 சதவிகிதம் நலிவடைந்து கொண்டிருக்கிறது என்று பொதுவாகவே ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகவே, இப்படி நலிவடைந்து கொண்டிருப்பதைச் சரி செய்வதற்கு உரிய முயற்சி எதுவென்றால், கூட்டுறவு அமைப்பு என்றாலே அது தேர்ந்தெடுக்கப்பட்ட . . .

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75 சதவிகிதம் நலிவடைந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார். இன்றைக்குத் தமிழகத்திலேயே பொது மக்களுடைய பணம் அதிக அளவிலே deposit ஆகியிருப்பது, தமிழகத்தினுடைய கூட்டுறவு வங்கிகளிலேதான். 15 ஆயிரம் கோடி ரூபாய் பணத்தை மக்கள், நன்மதிப்பு கொண்டு, தமிழகத்திலே கூட்டுறவு வங்கிகளிலேதான் இன்றைக்கு அதிக அளவிலே deposit செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே சிறந்த வங்கியாக, தமிழகத்தினுடைய மாநிலக் கூட்டுறவு வங்கியானது விளங்கிக்கொண்டிருக்கிறது. அந்த ஒரு வங்கியிலே மட்டும் ஏறத்தாழ 3,000 கோடி ரூபாய் பொது மக்கள் deposit இருக்கிறது என்பதனைக் கூறி, அதேபோன்று, சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே 1,200 கோடி ரூபாய்க்குமேல், பொது மக்களுடைய deposit பணம் இருக்கிறது. ஆக, கூட்டுறவு வங்கிகள் நலிந்து கொண்டிருக்கின்றன என்று, 75 சதவிகிதம் நலிந்து கொண்டிருக்கின்றன என்பதெல்லாம் கடந்த கால ஆட்சியிலே. இப்போது கூட்டுறவுத் துறையானது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா

[திரு. பொள்ளாச்சி சி. ஜெயராமன்] [2005 ஏப்ரல் 13

அவர்களுடைய வழிகாட்டுதலின் பேரிலே சிறந்த முறையிலே, சீரிய முறையிலே, சிறப்பான முறையிலே வளர்ந்து கொண்டு இருக்கிறது என்கின்ற பதிலைச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகள் நலிவு அடையவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு நன்றி. அப்படியானால் விவசாயிகளுடைய கோரிக்கைகளை ஏற்று நடைமுறைப்படுத்தி இருக்கலாமே?

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு பேசிய மரியாதைக்குரிய உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள்கூட இந்தப் பிரச்சினையைக் குறிப்பிட்டு கூட்டுறவு வங்கிகள் நலிவடைந்து இருப்பதால் கடன் கொடுக்க முடியவில்லை, விவசாயிகளுக்கு என்றார். ஒரு விவரத்தை மட்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். *2004–2005* ஆம் ஆண்டில் மட்டும் கூட்டுறவு வங்கிகள் *1,064* கோடி ரூபாய் அளவிற்குப் பயிர்க் கடன் வழங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இது இலாபத்தில் செயல்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்கள். ஆனால், பொதுவான நிலையிலே இருந்து பார்த்தால், இந்தக் கூட்டுறவு அமைப்புகள் மூலமாக விவசாயக் கடன் பெறுகின்றவர்களுக்கும், இந்தப் பிரச்சினைகள் தொடர்ந்து இருக்கின்றன. அதேபோல, கூட்டுறவு அமைப்புகள் மூலமாக, வீடு கட்டும் சங்கத்திலே கடன் பெற்றவர்களுக்கும் பிரச்சினை இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், வீடு கட்டும் சங்கத்தில் இருக்கக்கூடிய அந்த அதிகாரிகளோ, அலுவலர்களோகூட அவர்கள் மாதா மாதம் சம்பளத்தைப் பெறுவதற்காக மட்டுமே வசூல் செய்ய வேண்டிய அவல நிலைக்கு ஆளாகி இருக்கிறார்கள். அப்படியானால், இதிலே இருக்கிற இந்த ஏற்றத்தாழ்வுகளும், அதிலே இருக்கிற முரண்பாடுகளும் என்ன என்பதை நீங்கள் தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். எது எப்படியிருந்தாலும் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், கால அவகாசம் நீடிப்பது என்பது பொருத்தம் இல்லை என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.



2005 ஏப்ரல் 13]

*பிற்பகல் 1–05*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தலையும் விரைவில் நடத்துவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதனை ஏற்று, இந்த அரசு எத்தனையோ சாதனைகளைப் படைத்திருக்கின்றது. இந்தத் தேர்தலையும் நடத்தி ஒரு சாதனையும் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அப்போதைக்கப்போது குறிப்பிட்ட கருத்துகளுக்கு நான் அப்போதைக்கப்போதே பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும், இந்தியாவிலேயே எந்த ஒரு தலைவருக்கும் ஜனநாயகத்தின்மீது இருக்கிற அக்கறையைக் காட்டிலும், எங்களுடைய தலைவி புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மிக அதிக அளவிலே அக்கறையும் நம்பிக்கையும் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த ஒரு அச்சப்பாடான சூழ்நிலையிலேகூட எங்களுடைய அம்மா அவர்கள் தேர்தலைக் கண்டு பயப்படுகிறவர் அல்லர். ஆனால் அந்தத் தேர்தலானது முறையாக, மக்களுக்குப் பயன்படத்தக்க வகையிலே செயல்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய எண்ணம் என்பதனை இந்த நேரத்திலே சொல்லி, நான் அவ்வப்போது சொன்ன விளக்கங்களையே என்னுடைய பதிலுரையாக ஏற்றுக்கொண்டு, எதிர்காலத்தில் மிக விரைவில் இதய தெய்வம் அம்மா அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தலை உரிய முறைப்படி, மக்களுக்குப் பயன்பெறத்தக்க வகையில் உண்மையான கூட்டுறவாளர்களே அந்தக் கூட்டுறவிலே பங்கேற்கத்தக்க வகையில், தேர்தலானது நடத்தப்படும் என்கின்ற உறுதியோடு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற வேண்டுமென்று கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் ... (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நெறிமுறைக்கு மாறாக இந்த ஆட்சிக் காலம் முழுவதும்

[திரு. ஜி.கே. மணி] [2005 ஏப்ரல் 13

தேர்தலே நடத்தாமல், தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2005) மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2005)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

---

@ 5-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது

[2005 ஏப்ரல் 13

## (உ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவையும் சேர்த்தே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். அடுத்த சட்டமுன்வடிவையும் சொல்லிவிடுங்கள். 2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2005) மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2005)@@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டம் IV/1919, இந்தச் சட்டத்தில் உட்பட்ட 53–வது பிரிவினை மேலும் திருத்துவதற்காக இங்கே மன்றத்திலே வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்தச் சட்டத்தை முன்மொழிந்தபொழுதே, ஆரம்ப நிலையிலேயே மாண்புமிகு உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து, அதனுடைய தொடர்ச்சியாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் என்னுடைய கருத்துகளை, எதிர்த்துப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின் நோக்க, காரண, விளக்க உரையில், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணிக் களத்தில் தற்போது செலவிடும் நேரத்தைவிட அதிக நேரத்தைச் செலவிடும் வகையில் குறைந்தது மூன்று மாதங்களுக்கொருமுறையாவது மன்றத்தின் கூட்டங்களைக் கூட்டுவது போதுமானதாக இருக்கும் என்று கருதியது என்று அதிகாரிகள், இந்த நோக்க, காரண, விளக்கவுரையைத் தயாரித்துக் கொடுத்துள்ளார்கள் என்றே தோன்றுகின்றது.

---

@@ 11-4-2005 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது



2005 ஏப்ரல் 13] [திரு. ப. ரங்கநாதன்]

பிற்பகல் 1–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1996 ஆம் ஆண்டு நடந்த மாநகராட்சி மன்றத் தேர்தலில், உள்ளாட்சி மன்றத் தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மேயராகப் போட்டியிட்டு வெற்றி பெற்ற மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், ஐந்தாண்டுகள் பதவி வகித்தபோது, மாதம் ஒரு முறை என்று வருடத்திற்கு 12 நாட்களும், பட்ஜெட், வரவு செலவுத் திட்டம் கொடுக்கின்ற நேரத்தில் 3 நாட்களும் விவாதத்திற்கு ஒதுக்கி, 15 நாட்கள் மன்றக் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. அதற்கு முன்பு 1973 வரையிலே அப்பொழுது இருந்த சட்டத்தில் வாரத்திற்கு ஒரு முறை என்று சுமார் வருடத்திற்கு 50 நாட்கள், 55 நாட்கள் சென்னை மாநகராட்சியினுடைய கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால், நீங்கள் 4 ஆண்டுகளில் இந்த மாநகராட்சிச் சட்டத்தின் முதன்மைச் சட்டம் 1919–ல் உள்ளடக்கிய Municipal சட்டங்களில் பல திருத்தங்களைக் கொண்டு வந்தீர்கள். உதாரணமாக சிலவற்றை மட்டும் நான் இங்கே குறிப்பிட விழைகின்றேன். அதாவது ஒருவருக்கு ஒரு பதவி என்ற சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். அதன் அடிப்படையில் மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுடைய பதவி பறிக்கப்பட்டது. அதற்கு அடுத்து 84 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த மாநகராட்சி அரசு தொடர்பான... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மசோதாவை ஒட்டிப் பேசட்டும். அதை ஒட்டிப் பேசவில்லை. அது relevant இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** Corporation சம்பந்தமாகத்தான் பேசுகின்றார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாநகராட்சி சம்பந்தமாக என்றால் மாநகராட்சி சம்பந்தமான எல்லாவற்றையும் பேச முடியாது. இந்தச் சட்டமுன்வடிவின்மீது என்ன கருத்து என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** நான் எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அதற்கு அடுத்து, சட்டம், சென்னை மாநகராட்சியினுடைய பிரதான சட்டம் 1919–ன்படி 84 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்த மாநகராட்சி, அரசு தொடர்பான ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ரங்கநாதன், பழைய சட்டங்களையெல்லாம் சொல்ல வேண்டியதில்லை. இந்தச் சட்டமுன்வடிவில் உங்களுடைய கருத்து என்ன என்பதை நீங்கள்

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

சொல்லுங்கள். அதாவது அந்தப் பட்டியலைப் போட ஆரம்பித்தால் எவ்வளவு நேரத்தில் பேசி முடிப்பது?

**திரு. ப. ரங்கநாதன்:** 53-லேதான் நான் வருகின்றேன். அதற்கு மேலே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவின்மீது உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இந்தச் சட்டமுன்வடிவில் 53-லேதான் நான் பேசுகின்றேன். அதாவது மாநகராட்சி, அரசு தொடர்பான கடிதப் போக்குவரத்துகளும் மேயர் மூலமாகத்தான் நடந்தன. அந்தச் சட்டத்தையும் விதி 32-ஐயும் திருத்தியுள்ளீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் பேசி விவாதிக்கப்பட்டு விட்டது. இந்தச் சட்டமுன்வடிவைப் பொறுத்தவரையில் உங்களுடைய கருத்து என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அதாவது வருடத்திற்கு 4 நாட்கள் என்று 3 மாதங்களுக்கு ஒரு முறை என்று இங்கே குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் சென்னை மாநகராட்சியில் 10 மண்டலங்கள் உள்ளன. வார்டு குழு மூலமாகத்தான் ஒரு பொருளை வார்டிலே வைத்து விவாதித்து, மாநகராட்சி மன்றத்திற்கு அனுப்புகின்றார்கள். அப்பொழுது மாதம் ஒருமுறை நடந்தபோது, மக்களுடைய பணிகள் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, அந்த ஐந்தாண்டுகளில் மாதம் ஒருமுறை கூட்டம் நடத்தி, பல பணிகள் சிறப்பாக நடைபெற்றன. ஆனால், நீங்கள் இந்த 53 சட்ட விதியைத் திருத்துவதால், 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடினால் போதும் என்று சொல்வதால், எப்படிப் பணிகள் நடைபெறும் என்பதை மாண்புமிகு ... (குறுக்கீடு)

பிற்பகல் 1-15

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் மாமன்றக் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று இதில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கடந்த காலத்திலே கூட்டங்கள் அதிகமாகக் கூட்டப்பட்டன என்று கூறிக்கொண்டிருந்தார். கூட்டங்கள் கூட்டப்பட்டுவிட்டால் மட்டும் சென்னை மாநகராட்சிக்குச் சிறப்பு செய்ய அவர்களால் இயலவில்லை.



2005 ஏப்ரல் 13] [திரு. கே. பி. அன்பழகன்]

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், இந்த நான்கு ஆண்டுக் காலத்திலே என்ன பணிகள் நடந்திருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள்.

சாலைகள், உட்புறச் சாலைகள், சிமென்ட் கான்கிரீட் சாலைகள், மழைநீர் வடிகால் கால்வாய், நடைபாதைகள், மக்கள் பிரதிநிதி தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகள், திட்டப் பணிகள், கட்டடத் துறை (குறுக்கீடு) திடக் கழிவு அகற்றுதல் (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** பசுமைமிகு சென்னை, திறந்தவெளிப் பூங்காக்கள், இப்படிப் பல்வேறு பணிகளை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்திருக்கிறார்கள். இன்றைய நிலை என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். முன்பு ஆணையாளர் அவர்களுக்கு ரூ. 2 இலட்சமாக பணிகளைச் செய்வதற்கு வரையறுக்கப்பட்டிருந்த அதிகார வரம்பு, இன்றையதினம் ரூ. 35 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது. நிலைக் குழுக்களுக்கு ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 15 இலட்சமாக இருந்தது, இன்றையதினம் ரூ.35 இலட்சத்திலிருந்து ரூ. 40 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. வரி விதிப்பு நிலைக் குழுவுக்கு ரூ.15 இலட்சத்திலிருந்து ரூ.20 இலட்சம்வரை இருந்தது ரூ.40 இலட்சம் முதல் ரூ.45 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் மாமன்றத்திற்கு ரூ.20 இலட்சம் முதல் ரூ.50 இலட்சமாக இருந்தது ரூ.45 இலட்சத்திலிருந்து ரூ.50 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது. ஆகவே, அதற்குமேல் ரூ.50 இலட்சத்திற்குமேல்தான் அரசுக்கு வருகிறது. ஆகவே, எந்தவிதச் சூழ்நிலையிலுமே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பணிகளிலே முடக்கம் இல்லை என்று சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** பணிகளிலே முடக்கம் இல்லாமல், வெகு விரைவாக பணிகள் நடக்கின்ற வகையிலே மாமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுக்கள் மூலமாக அந்தத் திட்டப் பணிகளை மேற்கொண்டு செயல்படுவதற்கு எந்தத் தடையும் இல்லை. ரூ.45 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரை உள்ள பணிகளுக்கு மட்டும்தான் மாமன்றத்தினுடைய அங்கீகாரம் வாங்க இருக்கிறது. ஆகவே அதில் அதிகப்படியான பணிகள் அந்த இடைப்பட்ட பணிகள் வராத காரணத்தினால் மாமன்றத்தை மூன்று மாதத்திற்குள் கூட்டலாம்; ஒரு

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 ஏப்ரல் 13

மாதத்திற்குள் கூட்டலாம்; இரண்டு மாதத்திற்குள் கூட்டலாம். (குறுக்கீடு) சிறப்புக் கூட்டமாக இருந்தால் நான்கு நாட்களுக்குள் கூட்டலாம் என்று இருக்கின்ற கருத்தின் காரணமாக இந்தப் பணிகள் செம்மையாக நடக்கிற காரணத்தினால்தான் இன்றையதினம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டலாம் என்று இருக்கிறதே தவிர, மூன்று மாதங்களுக்கு ஒரு முறைதான் கூட்டுகிறோம் என்று அதில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் சொல்லுங்கள். (குறுக்கீடு) அமைச்சர் விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்திற்காக இங்கே ஒரு கருத்தை முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன். 1991–96–ல் "எழில்மிகு சென்னை 2000" என்ற திட்டத்தின்மூலம் ஐந்தாண்டுக் காலத்திலே சென்னைக்கு சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, மின்சார வசதி என்ற எல்லா வசதிகளும் 1991–96–லே ஐந்தாண்டுக் காலம் கிடைக்கப்பெற்றன. அந்த ஐந்தாண்டுக் காலத்திலே, அன்றைக்குச் சென்னை மாநகராட்சிக்குத் தமிழ்நாடு முழுவதும், உள்ளாட்சிக்குத் தேர்தல் நடத்தப்படவில்லை. (குறுக்கீடு) தொன்றுதொட்டுதான். (குறுக்கீடு) தொன்றுதொட்டுதான். தொன்றுதொட்டுதான் நடந்து வருகிறது. (குறுக்கீடு) தொன்றுதொட்டு நடந்து வருகிறது. ஆனால், அதன்பிறகு, 1996 ஆம் ஆண்டு, உங்களுடைய ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் அன்றைக்கு மேயராக இருந்த காலத்தில் சென்னையினுடைய நிலைமை என்ன? சிங்காரச் சென்னை என்று சொல்லி, சீக்காளி சென்னையாக, காலரா சென்னையாக, வாந்திபேதி சென்னையாகத்தான் அன்றைக்கு ஐந்தாண்டுக் காலம் இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு) இல்லை, அமைச்சர் பதில் சொல்லட்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சாலைகள் மோசம். குடிநீர் இல்லை. தெரு விளக்கு இல்லை. சென்னை மாநகராட்சியினுடைய நிதி நிலைமை ஒரு தீர்வு காண முடியாத அளவிற்கு அந்த ஐந்தாண்டுக் காலத்திலே மாநகராட்சியினுடைய நிதி நிர்வாகம் மிகுந்த அளவிற்குச் சீர்கெட்டது. இதுதான் அந்த ஐந்தாண்டுக் காலத்திலே மாதம் ஒரு முறை கூட்டம் நடத்தி நீங்கள் சாதித்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு) திரு. ஸ்டாலின்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, 1991–லிருந்து 1996 வரையில் சிறப்பான வகையிலே காரியங்கள் ஆற்றியதாகச் சொல்லி, பிறகு 1996–லிருந்து 2001 வரையிலே எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னார். இதுகுறித்து தனியாக விவாதம் நடத்துவதற்கு அவர் தயாரா? 2001 வரையில் – 1996–லிருந்து 2001 வரையிலே நடைபெற்றிருக்கக்கூடிய திட்டங்களையெல்லாம் நான் பட்டியலிட்டு இங்கே காட்டுவதற்குத் தயாராக இருக்கிறேன், நம்முடைய சபாநாயகர் நேரம் கொடுத்தால். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடு)

பிற்பகல் 1–20

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கின்றேன். (குறுக்கீடு) நான் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் விடுக்கின்ற அந்த சவாலை நாங்கள் எதிர்கொள்கிறோம். எப்போது எந்தத் தேதியிலே அவர் அந்தப் போட்டியை வைக்கிறார்கள் என்று சொல்லுங்கள். நாங்கள் வந்து கலந்துகொள்கின்றோம் என்று சொல்லுகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதைத் தனிக் கச்சேரியாக வைத்துக்கொள்வோம். திரு. ஆற்காடு வீராசாமி. அதைத் தனி விவாதமாக வைத்துக்கொள்ளலாம். திரு. ஆற்காடு வீராசாமி அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** சபாநாயகர் அனுமதித்தால் இப்போதே நாங்கள் தயார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நிறைவு நாள். அதற்கு வாய்ப்பு வருகின்ற நேரத்திலே, வேறு ஒரு சந்தர்ப்பத்திலே வைத்துக்கொள்ளலாம். திரு. ஆற்காடு வீராசாமி. (குறுக்கீடுகள்)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரும், மேயரும் அவர்கள் என்றைக்கும் விவாதிக்கத் தயார் என்கிறார்கள். அதை நீங்கள் முடிவு செய்யுங்கள். ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்லும்போது 3 மாதத்திற்கு ஒரு முறை தேர்தல் என்று சட்டத் திருத்தம் கொண்டு வரவில்லை என்று சொன்னார்.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தேர்தல் இல்லை, கூட்டம். மாநகராட்சிக் கூட்டம்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** சரி, கூட்டம். ஆனால் இந்தச் சட்டத்திலே 3-வது பிரிவில் ஒன்று, இரண்டாம் விதியில் "ஒவ்வொரு மாதம்" எனும் சொற்றொடருக்குப் பதிலாக "ஒவ்வொரு மூன்று மாதங்கள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்". அப்படித்தான் அதில் வருகிறது. ஆக 3 மாதங்களுக்கு ஒரு கூட்டம்தான். ஏற்கெனவே மாதம் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இப்போது 3 மாதத்திற்கு ஒரு கூட்டம் என்று வருகின்ற காரணத்தால் -அங்கே சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய- இப்போது இருப்பது ஆளும்கட்சியினுடைய துணை மேயர்தான். எனவே ஒவ்வொரு மாதமும் கூட்டம் நடந்தால் . . .

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவு எளிதில் யாருக்கும் புரியும். 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டினால் போதும் என்பதுதான் அந்தப் பிரிவின் அர்த்தம். அந்தத் திருத்தத்தின் அர்த்தம். அதனால் 3 மாதங்களுக்கு ஒரு முறை அல்லாமல் ஒரு மாதத்திற்கு ஒரு முறையோ அல்லது எப்போது அவசரக் கூட்டம் தேவைப்படுகிறதோ அப்போதோ கூட்டக்கூடாது என்று அர்த்தம் அல்ல. எப்போது விரும்பினாலும் அவசரக் கூட்டத்தைக் கூட்டலாம். ஆனால் பொதுவாக 3 மாதங்களுக்கு ஒரு முறை கூட்டினால் போதும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை, 3 மாதத்திற்கு ஒரு முறை கூட்டினால் போதும் என்று சொன்னால் 3 மாதத்திற்கு ஒரு முறைதான் கூட்டுவார்கள். அதனால்தான் இதை நாங்கள் இந்த நேரத்திலே எதிர்த்துக் கொண்டிருக்கிறோம். எனவே மாதத்திற்கு ஒரு முறை கூட்டுவதே, அது போதுமானதாக இல்லை என்பதுதான் ஒட்டுமொத்தக் கருத்து. எனவே தயவுகூர்ந்து, அரசு இதைப் பரிசீலனை செய்து இதைத் திரும்பப்பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடித்துவிடுங்கள். திரு. ரங்கநாதன், முடித்துவிடுங்கள்.



2005 ஏப்ரல் 13]

**திரு. இ. புகழேந்தி:** இல்லை, இல்லை, ஒரு முக்கியமான கருத்து. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாங்கள் தயார் என்று சொன்னார். அதற்கு எங்களுடைய மாண்புமிகு உறுப்பினர் தயார் என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியாகிவிட்டது. பேசி முடித்தாகி விட்டது. திரு. வினாயகமூர்த்தி. (குறுக்கீடு) திரு. வினாயகமூர்த்தி.

**திரு. இ. புகழேந்தி:** அமைச்சர் சொன்னதை ஏற்றுக்கொண்டு அவர் தயார் என்று சொன்னார். அது பதிவாகவில்லை. அது வரவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். திரு. வினாயகமூர்த்தி. (குறுக்கீடு) முடியுங்கள். முடியுங்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. உங்கள் கட்சியின் சார்பாகக் கருத்தை திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் சொல்லிவிட்டார்கள். கடைசி வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** இல்லை, இல்லை, சொல்கிறேன். சொல்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, என்ன இப்போது நீங்கள் சொல்லப்போகிறீர்கள்?

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை. அமைச்சர் சொன்னதை நான் ஏற்றுக்கொண்டு அதற்கு எந்த நேரத்திலும் தயார் என்று . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் பதில் சொல்லிவிட்டேன். இன்னொரு சந்தர்ப்பத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று நானும் சொல்லிவிட்டேன்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கு நான் தயார் என்று சொன்னேன். அது பதிவாக வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களும் தயார் என்று சொல்லி விட்டார்கள். இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம் அதை.

[2005 ஏப்ரல் 13

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது மாண்புமிகு உறுப்பினர் தளபதி ஸ்டாலின் அவர்கள் கூறியதுபோல எங்களுடைய கோரிக்கை எல்லாம் மாதம் ஒரு முறை கூட்டம் நடத்த வேண்டும் என்பதுதான். அதை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தினால் போதும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதே தவிர, இடைப்பட்ட காலத்தில் நடத்தக் கூடாது என்று இல்லை. ஆகவே, எப்போது விரும்பினாலும் அவசரக் கூட்டத்தை நடத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடித்துவிட்டீர்கள். அதுதான் கருத்தைச் சொல்லி முடித்துவிட்டீர்கள். திரு. வினாயகமூர்த்தி.

***திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடருடைய இறுதி நாளான இன்றைக்கு இப்படி ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு இங்கே சவால் விட்டுப் பேசுகின்ற அளவுக்கு இந்த அவை சூடாகி இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் என்னுடைய கருத்துகளை தெரிவிக்க விழைகிறேன். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலே ஓரளவுக்கு அனுபவம் பெற்றவன் என்கின்ற அளவிலே இந்தச் சட்டத் திருத்தம் அவசியம்தானா, தேவைதானா என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தேன்.

*பிற்பகல் 1–25*

இன்றைக்கு மட்டுமல்ல; எந்தக் காலத்திலும் எந்தச் சூழ்நிலைக்கும் தேவையற்ற ஒரு சட்டத் திருத்தம் என்பதை நான் உணர்ந்து பார்க்கின்றேன். ஆகவே, நான் அன்போடும், மிகுந்த கனிவோடும் இந்த ஆட்சியைக் கேட்டுக்கொள்வேன், தேவையற்ற ஒரு சட்டத்தை இந்த அவையிலே முன்மாதிரியாக கொண்டுவந்து நிறைவேற்றவேண்டாமென்று அன்போடு கேட்டுக்கொள்வேன். இங்கே அமைச்சரும், முதலமைச்சர் அவர்களும் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கின்றார்கள். அதிலே 3 மாதங்களுக்கு ஒருமுறையாகிலும் என்பதற்கு, 3 மாதத்திற்கு ஒருமுறைதான் என்பது அர்த்தம் அல்ல.



2005 ஏப்ரல் 13] [திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி]

இது தேவையானால், இடையிலேகூட கூட்டிக்கொள்ளலாம் என்கின்ற அளவிலே அவர்கள் இங்கே கருத்து சொன்னார்கள். நான் மிக்கப் பணிவோடு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன், கூட்டங்களைக் கூட்டுவதற்கான விதி உள்ளாட்சி அமைப்புகள் அத்தனைக்கும் ஒரே நிலையில் இருப்பதாகத்தான் நான் எண்ணிப் பார்க்கின்றேன். அது கிராமப் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, ஊராட்சி ஒன்றியமானாலும் சரி, நகராட்சியானாலும் சரி, மாநகராட்சியானாலும் இன்றைக்கு இருக்கின்ற சட்டம், மாதத்திற்கு ஒருமுறை கூட்டவேண்டுமென்பதுதான் சட்டமாக இருக்கின்றது.

இத்தனை அமைப்புகளுக்கும், இந்த ஒரே பொது விதியிருக்கின்ற நேரத்தில், சென்னை மாநகராட்சிக்கு இப்படியொரு திருத்தச் சட்டத்தை கொண்டுவரவேண்டிய அவசியம் என்ன வந்தது என்பது என்னுடைய கேள்வி. (மேசையைத் தட்டும் ஒலி) மாதம் ஒருமுறை கூட்டம் கூட்டுவதனாலே, இந்த ஆட்சிக்கு என்ன சங்கடம் வந்திருக்கின்றது, யார் அப்படிப்பட்ட புகாரைக் கொடுத்திருக்கின்றார்கள் என்பது என்னுடைய கேள்வி. 553 கோடி ரூபாய் வருவாயுள்ள ஒரு மாநகராட்சியிலே, இந்தியாவிலேயே முதன்மை மாநகராட்சியாக இருக்கின்ற இந்த மாநகராட்சியிலே, மாதம் ஒருமுறை கூட்டம் என்பதற்கு ஆகின்ற செலவே, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் கொடுக்கின்ற 500 ரூபாய் படி. இதற்காக வரவு–செலவுத் திட்டத்திலே ஒதுக்கீடு செய்கின்ற தொகையே, மொத்தத்திலேயே 10,00,000 ரூபாய்தான். 553 கோடி ரூபாய் வருவாயுள்ள மாநகராட்சியில், மாநகராட்சி உறுப்பினர்கள் கூடிப் பேசுவதனாலே என்ன கேடு வந்திருக்கிறது? இதை நான் கேட்டுப் பார்க்க ஆசைப்படுகின்றேன்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு இருக்கின்ற மாண்பே, அங்கே உள்ளேயிருக்கின்ற அவரவர்களுடைய பிரதேசத்திலே, பகுதியிலே இருக்கின்ற அமைப்புகளைப் பற்றி, நிர்வாகத்தைப் பற்றி, அடிப்படை சுகாதார வசதிகளைப் பற்றி, சாலைகளைப் பற்றி, ஆரம்பப் பாடசாலைகளைப் பற்றி, ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பற்றி, தெரு விளக்குகளைப் பற்றி, சாக்கடையைப் பற்றி, குடிநீரைப் பற்றிப் பேசுவதற்குரிய வாய்ப்பு அந்த ஒரு தினத்தில்தான் அவர்களுக்குக் கிடைக்கின்றது. அதைப் பேசி நிவாரணம் தேடுவதற்காக கூடுகின்ற கூட்டத்தை, கிராமப் பஞ்சாயத்திற்கு இருக்கின்ற உரிமைகூட, சென்னை மாநகராட்சிக்குத் தேவையில்லை என்கின்ற முடிவிற்கு இந்த ஆட்சி ஏன் வந்தது என்ற கேள்வியை நான் கேட்க ஆசைப்படுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மாமன்றம் கூடுகின்றபொழுதுதான் தங்களுடைய பகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகளெல்லாம் மாமன்றத்தின் வாயிலாக கேட்டறியப்பட்டு, அங்கே நிறைவேற்றப்படுகின்றன என்று கூறிக்கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு நிலைக் குழுவின் சார்பாகவும், அந்தந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்காக, அவ்வப்பொழுது அந்தப் பகுதியினுடைய மாமன்ற உறுப்பினர்கள், அந்த நிலைக் குழுவின் மூலமாக தங்களுடைய பகுதிக்கு என்ன பணிகள் தேவையென்பதைக் கண்டறிந்து, உடனுக்குடன் அந்தப் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்குண்டான வாய்ப்பினையும் இன்றையதினத்திலே மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்திருந்த அதிகார வரம்பை அதிகப்படுத்தி, அந்தப் பணிகள் சென்னை மாநகராட்சியிலே வேகமாக நடைபெறவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் அதிகார வரம்பை உயர்த்திக்கொடுத்து, அந்த நிலைக் குழுக்கள் மூலமாக பணிகள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கின்றேன்.

**திரு. ப. ரங்கநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிலைக் குழுவிலே விவாதிக்கப்பட்டு முடிவு செய்கிறார்கள் என்று சொல்லுகிறார். அவர்கள் முடிவு செய்தால்கூட, மாநகராட்சிக்கு வந்து ஒப்புதல் பெற்றால்தான் அந்தப் பணியை மேற்கொள்ள முடியும். எனவேதான் — தமிழ்நாட்டிலே 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. சென்னைக்கு மட்டும் 3 மாதத்திற்கு ஒருமுறை ஒரு கூட்டம் கூட்டுவது என்று சொன்னால் — மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட சொல்லுகிறார், தேவைப்பட்டால் கூட்டிக்கொள்ளலாம் என்று. இப்போது என்ன அவசரம் வந்தது? உண்மையிலேயே சொல்கிறேன். 155 வட்டங்களைப் பற்றிப் பேசி அங்கேயிருக்கக்கூடிய குறைகளைப் போக்க வேண்டுமென்று சொன்னால், மாதம் ஒரு முறை கூட்டம் கூட்டினால்தான் அந்தக் குறைகளைப் போக்க முடியும். அரசு அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. வினாயகமூர்த்தி, பேசி முடித்துவிடுங்கள்.



2005 ஏப்ரல் 13]

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமான கேள்வி கேட்டார். ஆறு மாநகராட்சிகள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் இல்லாமல் இதற்கு மாத்திரம் கொண்டு வருகிறீர்களே என்று கேட்டார். எல்லாவற்றிற்கும் எழுந்து பதில் சொல்கிற மந்திரி இதற்கும் எழுந்து பதில் சொல்லட்டும். ஏன் சென்னைக்கு மட்டும் கொண்டு வருகிறீர்கள்? அதாவது என்னவென்று கேட்டால் மாநகராட்சியிலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்களுடைய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** அதற்கு சொல்லட்டும் பதிலை என்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தவறான பதிலைக் கொடுக்கின்றார்கள் என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். நிலைக் குழுக்களுக்கும், மன்றத்தினுடைய கூட்டங்களுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதுகின்றேன். நிலைக் குழுக்கள் பரிசீலனை செய்கின்ற விஷயம் வேறு. மாநகராட்சி மன்றக் கூட்டத்திலே 'Zero Hour' என்று ஒன்று இருக்கின்றது. அந்த 'Zero Hour'–லே ஏறக்குறைய 2 மணி நேரம் பொது விஷயங்களைப் பற்றித்தான் பேசுகின்றார்கள். அப்படிப்பட்ட விஷயங்களை நிலைக் குழுக்களிலே பேச முடியாது என்பது நான் அறிந்த உண்மை. அந்த நிலையிலே மன்றக் கூட்டங்களை மாதம் ஒரு முறை கூட்டுவதினாலே என்ன தவறு நேர்ந்துவிட்டது? அதுதான் என்னுடைய கேள்வி. அதனாலே யாருக்கு என்ன சங்கடம் வந்திருக்கின்றது? அதைத் தடுக்க வேண்டுமென்கிற உணர்வு இந்த ஆட்சிக்கு ஏன் வந்திருக்கின்றது? அதைத்தான் நான் மிக முக்கியமாக, அழுத்தமாகக் கேட்க ஆசைப்படுகின்றேன். அதோடு, இங்கே அதிகாரிகள் வேலை பார்ப்பதற்கு நேரம் வேண்டுமென்றெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். அந்த விவகாரத்திற்குச் சென்றால், அது வேறு விவாதமாக ஆகிவிட முடியும். ஒன்றைச் சொல்கின்றேன். சென்னை மாநகராட்சியில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன ... (குறுக்கீடு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் அவர்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்தக் கூட்டம் கூட்டினால் போதும் என்ற இந்தத் திருத்தம் கொண்டு வருவதற்கு என்ன அவசியம் நேர்ந்தது,

என்ன காரணம் என்று கேட்டார். Statement of objects and reasons, இதிலேயே முக்கியமான காரணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. "The Standing Committees which meet every month, accord its approval for most of the important issues. Hence, the Government felt that it will be sufficient, if the Council meetings are convened at least once in every three months, so that the officers of the Corporation of Chennai will spend more time in field than is being done now."

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடினால் என்னென்ன பணிகள் செய்ய வேண்டுமோ, களப் பணியில் அதிகாரிகள் அதிக நேரம் செலவிடுவதற்கு நிறைய அவகாசம் கிடைக்கும் என்பதுதான் முக்கியமான காரணம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், இப்போது சென்னை மாநகராட்சியில் எதிர்க் கட்சியாக விளங்குகின்ற முக்கியமான கட்சியினுடைய செயல்பாடுகளால், நடவடிக்கைகளால் மாநகராட்சிக் கூட்டம் கூடுகின்றபோதெல்லாம், மாமன்றம் கூடுகின்றபோதெல்லாம் ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெறுவதற்குப் பதிலாக, அங்கே ரகளைதான் நடக்கிறது. அடித்துக்கொள்கிறார்கள், பிடித்துக்கொள்கிறார்கள். ஒரே களேபரமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அடித்துக்கொள்வதற்கும், பிடித்துக்கொள்வதற்கும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூடினால் போதுமென்று கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாயகமூர்த்தி, ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இல்லை, இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே சென்னை மாநகராட்சியில் நடைபெறக்கூடிய கூட்டங்களில் எதிர்க் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் அடிதடி ரகளையிலே ஈடுபடுகிறார்கள் என்ற கருத்தைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அடிதடி நடப்பது உண்மைதான். ஆனால், அதற்கு முழு காரணமாக இருக்கக்கூடியவர் அங்கே இருக்கக்கூடிய துணை மேயர்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் காரணம் என்பது வேறு. வினாயகமூர்த்தி ஒரு நிமிடத்தில் சொல்லி முடியுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** முதலமைச்சர் சொல்கிறார் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. யார் காரணம் என்ற அந்த விவாதத்திலே போக வேண்டாம்.





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியிலே மட்டும் முறைகேடுகள் நடப்பதாகவும், மன்றக் கூட்டங்கள் முறையாக நடைபெறவில்லையென்றும் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடுகள்) சரி, சத்தம், ரகளை நடைபெறுகிறது. அதைத்தான் முறைகேடு என்கிறோம். ரகளை (குறுக்கீடுகள்) எல்லாம் ஒன்றுதான். (குறுக்கீடுகள்) ரகளை என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முறைகேடு என்பது வேறு. ரகளை என்பது வேறு.

பிற்பகல் 1–35

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ரகளை, அதாவது மன்றம் எப்படி நடைபெற வேண்டுமோ அப்படி நடைபெறவில்லை என்று நான் பொருள்கொள்கிறேன். அப்படி என்று சொன்னால், அந்த மன்றத்தையே கலைத்துவிட வேண்டியதுதானே? ஏன் அந்த மன்றத்தை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஏன் அந்த மன்றம் வேண்டுமென்கிறீர்கள்? அந்த மன்றத்தைக் கலைத்துவிடுங்கள். மன்றம் இருந்தால் முழு அதிகாரத்தோடு அது செயல்பட வேண்டும். ஏனென்று சொன்னால், நிலைக் குழுக்களாலே சில காரியங்களைச் செய்ய முடியாது. ஒருவர் ஓய்வு பெறுகிறார் என்று சொன்னால், அங்கே மன்றத்தின் அங்கீகாரம் இருந்தால்தான் ஓய்வுகாலப் பலன்களைப் பெற முடியும் என்று சட்டம் கூறுகிறது. அந்த ஓய்வுகாலப் பலன்களை எப்படிப் பெறுவார்கள்? மாதாமாதம் கூடினால்தான் ஓய்வுகாலப் பலன்கள் அவர்களுக்குக் கிடைக்கும். எனவே, அது சரியான காரணமாகாது. 6 மாநகராட்சிகள் இருக்கின்றன. தமிழகத்திலே பல்வேறு நகராட்சிகள் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விடுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இத்தனைக்கும் பொருந்தாத ஒரு சட்டத்தை இங்கே மட்டும் கொண்டு வருவது சரியில்லை. எனவே ...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 மாநகராட்சிகளில் கொண்டு வராமல், சென்னை மாநகராட்சியில் மட்டும் ஏன் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிறீர்கள் என்று மரியாதைக்குரிய உறுப்பினர் கேட்டார். இந்தச் சட்டத் திருத்தம் என்பது Chennai City Municipal Corporation Act, 1919 என்பதைத் திருத்துவதற்காக. சென்னை மாநகராட்சிக்கு என்று

தனிச் சட்டம் இருக்கின்றது. தனி Act இருக்கிறது. மேலும் அதிகாரங்கள் குறைக்கப்படுவதாக, இங்கே மரியாதைக்குரிய உறுப்பினர் குறிப்பிட்டார். அது உண்மையல்ல. மாநகராட்சிக்கு உள்ள அதிகாரங்களில், மாமன்றத்திற்கு உரிய அதிகாரங்களில், எந்த அதிகாரமும் இப்போது குறைக்கப்படவில்லை. ஆனால், உண்மை சொல்லவேண்டுமென்றால், ஏற்கெனவே பேசிய ஓர் உறுப்பினர் சொன்னார்: முன்பெல்லாம் வாரத்திற்கு ஒரு முறை, இந்த மாமன்றம் கூடும். அப்போதெல்லாம் கண்ணியமான முறையில் நடந்தது. உண்மையான, ஆக்கப்பூர்வமான பணிகள் நடைபெற்றன. ஆனால், இப்போது இந்த மாநகராட்சியின் மாமன்றம் கூடுகிறபோதெல்லாம், தொலைக்காட்சிகளிலும், பத்திரிகைகளிலும் பார்க்கும்போது, அருவெறுப்பாக இருக்கிறது; கேவலமாக இருக்கிறது; அசிங்கமாக இருக்கிறது. எப்போது பார்த்தாலும், அடிதடி ரகளை (மேசையைத் தட்டும் ஒலி) நாற்காலிகளை எடுத்து வீசுவதும், பெஞ்சின் மேல் ஓடுவதும், ஒருவரையொருவர் அடித்துக்கொள்வதும், தாக்குவதும் இப்படியான செய்திகள் வருகின்றபோது, சென்னை என்பது இந்த மாநிலத்தின் தலைநகரமாகும். ஆக, சென்னை மாநகராட்சியின் மாமன்றத்தில் இப்படிப்பட்ட கேவலமான சம்பவங்கள் நடைபெறுகின்றன என்று ஊருக்கும், உலகத்திற்கும் தெரிகின்றபோது, மிகவும் அவமானமாக இருக்கிறது. அதற்காகத்தான் நிலைமை சீராகும்வரை இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, மூன்று மாதத்திற்கு ஒரு முறை, இந்த ரகளை நடந்தால் போதும் என்று கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முடித்துவிடுங்கள்; (குறுக்கீடுகள்) வேறு யார் பேசவேண்டும்? (குறுக்கீடு) முடியுங்கள், முடியுங்கள். (குறுக்கீடு) முடியுங்கள். என்ன கருத்து என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) வேறு யார் பேசவேண்டும்?

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் சொல்லி இருக்கின்ற விளக்கம், சென்னை மாநகராட்சியிலே ரகளை நடக்கின்றது. அதற்காகவே இந்தத் தனிச் சட்டம் என்று சொல்கிறபோது, இம்மாதிரி ரகளை என்பது, சென்னை மாநகராட்சியில் மட்டுமல்ல, எல்லா மாநகராட்சிகளிலும் நடக்கின்றது. நகராட்சிகளிலும் நடக்கின்றது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தமானது, சென்னை மாநகராட்சியைப் பற்றியது மட்டும்தான். ஆகவே, மற்ற உள்ளாட்சி அமைப்புகளைப் பற்றி இங்கே பேச வேண்டிய அவசியம் இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதில் உங்கள் கருத்தைச் சொல்லி முடியுங்கள், என்ன என்பதை.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** என்னுடைய கருத்தெல்லாம், இது ஒரு தவறான சட்டம். இந்தச் சட்டத் திருத்தம் தேவையற்றது; நியாயமற்றது; இதைத் திரும்பப் பெறவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டத் திருத்தத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, நாங்கள் ஆரம்ப நிலையிலேயே எங்களது எதிர்ப்பினைத் தெரிவித்தோம். இன்றைக்கு மாநகராட்சி அலுவலர்கள் களப் பணிக் காலத்தில் தற்போது செலவிடும் நேரத்தைவிட அதிகமான நேரத்தை செலவிடும் வகையில் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது மன்றத்தின் கூட்டங்களைக் கூட்டுவது போதுமானதாக இருக்கும் என்று கருதியது என்று, நோக்கக் காரண விளக்க உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மட்டும் என்று இல்லை, தேவையேற்பட்டால் இடைப்பட்ட காலங்களிலும் கூட்டலாம் என்று முதலிலே விளக்கம் அளித்தார்கள். இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சென்னை மாமன்றத்திலே நடைபெறக்கூடிய விரும்பத்தகாத சில சம்பவங்களால், 3 மாதங்களுக்கு ஒருமுறை இந்தத் தகராறு நடந்தால் போதும் என்று சொல்லியிருப்பதிலிருந்து, 3 மாதங்களுக்கு ஒருமுறைதான் கூட்டவேண்டும் என்ற உண்மையை இங்கே ஒத்துக்கொண்டதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை, சென்னை மாமன்றம் என்பது ஒரு வரலாற்றுப் பாரம்பரியமிக்க மாமன்றமாக இருந்து வருகிறது. ஏற்கெனவே பேசிய உறுப்பினர்கள் எல்லாம், 1977–க்கு முன்பு இருந்த நிலையைச் சுட்டிக்காட்டினார்கள். இப்போது மாதம் ஒருமுறை மன்றக் கூட்டம் நடைபெறவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். தேவை ஏற்பட்டால் இடையிலே கூட்டங்கள் கூட்டலாம் என்று சொன்னாலும்கூட, நடைமுறையில் இருக்கக்கூடிய

[திரு. கே. மகேந்திரன்] [2005 ஏப்ரல் 13

பிரச்சினை என்பது 6 மாதங்களுக்கு முன்பாக சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்ற கோரிக்கை எதிர்க்கட்சிகளால் வைக்கப்பட்டபோது, அந்தக் கோரிக்கைகள் என்பது நிராகரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்திற்குச் சென்று சிறப்புக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்ற உத்தரவைப் பெறக்கூடிய நிலைமைதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் கவனப்படுத்த விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–40*

அதேபோன்று, இங்கே அதிகாரப் பகிர்வுகள் சம்பந்தமாகச் சொல்லும்போது, 2003 ஆம் ஆண்டுக்கு முன்பு திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு, மாநகராட்சியினுடைய ஆணையர் அதிகபட்சமாக 2 இலட்ச ரூபாய் செலவு செய்யலாம் என்று விதி இருந்தது. நிலைக் குழுக்களுக்கு 10 இலட்சத்திலிருந்து 15 இலட்ச ரூபாய், 15 இலட்சத்திலிருந்து 20 இலட்ச ரூபாய் என்று இருந்தது. இப்போது அது திருத்தி அமைக்கப்பட்டு, மாநகராட்சியினுடைய ஆணையருக்கு, 35 இலட்ச ரூபாய் வரை திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றால், இது மாமன்றத்தினுடைய, சென்னை மாநகராட்சியினுடைய மன்ற உறுப்பினர்களது உரிமையைப் பறிக்கக்கூடியதாக அமையாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால் மக்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய மாமன்ற உறுப்பினர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவில் உங்களுடைய கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** தங்களது பிரச்சினைகளை, தங்களது வட்டத்தினுடைய பிரச்சினைகளை மன்றத்திலே எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு அவர்களுக்குக் குறைக்கப்படுகிறது. ஆகவே, இந்தச் சட்டத்தை, சட்டமுன்வடிவை நிறுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்வதோடு, நேற்றையதினம்கூட, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சென்னை மாமன்றத்தினுடைய கூட்டம் ஜனநாயகப் பூர்வமாக நடைபெற வேண்டும்; மக்கள் பிரச்சினைகளை விவாதிக்கக்கூடிய மன்றமாக சென்னை மாநகர மன்றம் செயல்பட வேண்டும் என்ற ஓர் ஆர்ப்பாட்டத்தை நாங்கள் நடத்தியிருக்கிறோம். மக்களது அடிப்படை பிரச்சினைகளை, மக்களது பிரச்சினைகளை நேரடியாக விவாதிக்கக்கூடிய மன்றமாக சென்னை மாமன்றம் இருக்கக்கூடிய காரணத்தினால், மக்கள் சந்திக்கக்கூடிய எந்த ஒரு பிரச்சினையையும் தீர்க்கக்கூடிய அதிகாரம் மாமன்றத்திற்கு இருக்கக்கூடிய காரணத்தினால், மாதம் ஒரு முறை இந்த மன்றக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வலியுறுத்துவதோடு, இந்தச் சட்டம் அத்தனை எதிர்க் கட்சிகளாலும் எதிர்க்கப்படக்கூடிய காரணத்தினால், இதை Select Committee-க்காவது அனுப்ப வேண்டுமென்ற வேண்டுகோளை (மணியடிக்கப்பெற்றது) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முன்வைத்து அமைகிறேன்.



2005 ஏப்ரல் 13] [திரு. கே. மகேந்திரன்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தச் சட்டத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் ஆரம்ப நிலையிலேயே கடுமையாக எதிர்த்தோம். தற்பொழுதும், இந்த மாமன்றத்தின் மூலமாக இந்தச் சட்டத்தை ஆய்விலே எடுத்துக்கொண்டு வாதம் நடக்கும்போதும் எங்களுடைய கட்சியின் சார்பாகத் தெரிவிப்பது, இதுபோல ஒரு ஜனநாயகப் படுகொலை தமிழகத்திலே இனிமேல் நடக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய மிக ஆணித்தரமான வாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக இப்படி ஜனநாயகப் படுகொலை என்றெல்லாம் சொல்லக்கூடாது. காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. என்ன என்று உங்கள் கட்சியின் சார்பாகக் கருத்தைச் சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** ஜனநாயகத்தின் அடிப்படைத் தேவையே கலந்து உரையாடுதல், ஜனநாயகத்தின் அடிப்படைத் தேவை கலந்து உரையாடுதல், வாதம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுகூட சென்னை மாநகராட்சியின் மாமன்றக் கூட்டம் நடைபெறுகிறது. மாலை பத்திரிகைகளைப் பார்த்தால், தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்த்தால், ஜனநாயக முறையில் எவ்வளவு அமைதியாக அவர்கள் மக்கள் பிரச்சினைகளைப் பேசி விவாதித்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியவரும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், பேசி முடியுங்கள். உங்களுடைய கருத்து என்ன என்று சொல்லி முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சி மன்றத்தைப் பற்றிச் சொன்னது, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியில் நடப்பது என்ன என்பதை அறியாத ஒருவராக, இந்த அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் கணேசன் இருக்கக்கூடாது. வழக்கமாக என்ன நடக்கிறதோ அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. திரு. கணேசன், உங்களுடைய கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட 2001 அக்டோபரிலிருந்து தொடர்ச்சியாக பார்த்தீர்கள் என்றால், பத்திரிகையில் வெளி வந்திருக்கிறது இந்தச் செய்தி. அதைத்தான் அம்மா அவர்கள் சொன்னார்கள்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பட்ஜெட் கூட்டத்தின்போது மிக நல்லமுறையில் அமைதியாகத்தான் நடந்தது. எப்போதாவது சில நேரங்களில் தகராறு நடப்பது உண்மைதான். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக மாதம் ஒருமுறை என்பதை 3 மாதமாக ஆக்கினால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் அதனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கு, அந்த வார்டிலே செய்யக்கூடிய பணிகள் பாதிக்கப்படும். அரசாங்கம் இதை ஒரு கௌரவப் பிரச்சினையாகப் பார்க்காமல், மறுபரிசீலனை செய்து இதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–45*

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன், உரையை முடியுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நான் இப்போதுதான் ஆரம்பித்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சென்னை மாநகராட்சி குறித்து முதல்வருக்கு, இந்த அரசுக்கு ஒரு கசப்பான உணர்வு இருக்கிறது என்பதை நாங்கள் உணருகிறோம். அந்தக் கசப்பான உணர்வின் காரணமாகத்தான், இந்த மாநகராட்சிக்கு, 3 மாதங்களுக்கு ஒருமுறை கூட்டினால் போதும் என்று இங்கே...



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் சொல்வதை நான் ஆட்சேபிக்கிறேன், மறுக்கிறேன். **அதையும் மறுக்கிறேன்.

அதைப்போலவே, இந்த மாமன்றம் என்றாலே, மாநகராட்சியின் மாமன்றம் என்றாலே, என் பெயரைச் சொல்லி முதல்வருக்கு ஏதோ கசப்பான உணர்வு என்கிறார். அப்படியெல்லாம் எதுவும் இல்லை. ** கசப்பான உணர்வும் கிடையாது. பொதுவாக, மாநகராட்சியின் மாமன்றக் கூட்டங்களில் எப்படிப்பட்ட அமளி நடக்கின்றது என்பதைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கின்றன. எல்லோருக்கும் தெரிந்த விஷயத்தைத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கணேசன் உங்களுடைய கட்சியின் சார்பாக என்ன கருத்து என்பதை வலியுறுத்திச் சொல்லுங்கள், அவ்வளவுதான். ஏற்கெனவே உள்ளதைச் சொல்லியிருக்கிறார்கள். உங்களுடைய கருத்து என்ன, அதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லவே மாட்டேன் என்கிறாரே!

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே நான் பேசும்போது ஒவ்வொரு முறையும் குறுக்கிட்டு, நான் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதற்கு ஒரு உள்நோக்கம் கற்பிக்கப்படுவதுபோல ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள்தான் சொன்னீர்கள். (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை. நான் ஆரம்பிக்கும்போதே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன? பெரிய கொடுமையாக இருக்கிறதே! (சிரிப்பு)

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை. நான் ஒன்றுமே சொல்லப் போகவில்லை. அங்கே தகராறு நடக்கிறது, கலாட்டா நடக்கிறது அப்படியென்று முதலமைச்சர் வாயாலேயே பலமுறை இந்த மன்றத்திலேயே சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களுடைய கருத்தை நீங்கள் சொல்லுங்கள். இதிலே விவாதம் செய்வதற்கு நேரம் இல்லை. நீங்கள், என்ன கருத்து என்பதைச் சொல்லுங்கள், சட்டமுன்வடிவின்மீது. இதிலே, உங்களுடைய கட்சியினுடைய கருத்து என்ன என்பதைச் சொல்லுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஐ. கணேசன்:** சரி. இந்த மன்றத்திலே, முதலமைச்சர், பலமுறை அங்கே கலாட்டா நடக்கிறது என்று பதிவு செய்திருக்கிறார்கள். அந்த மாநகராட்சி மன்றத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் கலைத்துவிட்டு (மேசையைத் தட்டும் ஒலி) மறு தேர்தல் நடத்த முன் வருவார்களா என்பதைக் கேட்கிறேன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகளுக்கான இந்தச் சட்டமுன்வடிவுகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் எதிர்க்கிறேன், இரண்டு சட்டமுன்வடிவுகளையும். காரணம், பஞ்சாயத்து ராஜ், நகர்பாலிகா சட்டத்திற்கு விரோதமாக இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளும் இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஒன்று, ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தேர்தலை ஒத்தி வைப்பதும், அதற்குட்பட்ட சில ஊராட்சிகளுக்கான தேர்தலை ஒத்தி வைப்பதற்கான காரணம் சொல்லப்படுகிறது, ஏற்காடு சம்பந்தப்பட்ட விஷயங்களிலே. அதிலே சொல்லப்படுகிற காரணம், 2001 ஆம் ஆண்டு ஜனத்தொகையின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு செய்வதற்குரிய கால அவகாசத்தின் காரணத்தினால், ஒத்தி வைக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், இப்போது 4 வருடங்கள் கடந்துவிட்டன. இதற்குள்ளாக இந்த இட ஒதுக்கீட்டைச் செய்யவே முடியவில்லையா அரசாங்கத்தால்? இந்த இடைப்பட்ட காலத்திலே எத்தனையோ முறை அந்த இட ஒதுக்கீட்டைச் செய்து அதற்குரிய தேர்தலை நடத்தியிருக்கலாமே? அதற்கு ஒரு சட்டமுன்வடிவு தேவையே இல்லை. நடத்தாதது தவறு. அதை நடத்தியிருக்க வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவு இப்போது தேவையற்றதாகவே இருக்கிறது.

அதைப்போல, மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே, இங்கே சொல்லப்படுகிற காரணம் என்பது, தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், குறைந்தது 3 மாதங்களுக்கு ஒரு முறையாவது மன்றத்துக் கூட்டங்களைக் கூட்டுவதற்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறோம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால், மாதம் ஒரு முறை கூட்டுவதைத் தேவையற்றதாக ஆக்குவதற்காகவே ஒரு சட்டமுன்வடிவு வருகிறது. ஆகவே, இந்த 3 மாதங்களுக்கு — இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிற விளக்கம் என்பது, அங்கே நடைபெறுகிற அமளிகளும் பல பிரச்சினைகளும் காரணமாக இருக்கின்றன; இது





நாட்டுக்குத் தெரிய வேண்டாம் என்று சொல்கிறார். மாதம் ஒரு முறை தெரிய வேண்டாம் என்றால், 3 மாதங்களுக்கு--ஒருமுறை சேர்த்துத் தெரிந்துகொள்ளலாமா? அப்போது தெரியாமல் போய்விடுமா அது? இது பொருத்தமானதாக இல்லை. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதில் திருப்திகரமானதாக, போதுமானதாக, பொருத்தமானதாக இல்லை என்பது என்னுடைய பணிவான கருத்து. ஏன் என்றால், இந்தக் கால அவகாசத்தை நீட்டிப்பது என்பது, இங்கே சென்னை மாநகராட்சியிலே நடைபெறுகிற பிரச்சினைகளுக்குரிய விஷயங்களைப் பார்த்தால், அது அரசியல் காரணங்களாக இருக்குமோ என்ற அச்சமும், சந்தேகமும் ஏற்படுவதற்குரிய வாய்ப்புகள் அதிலே இருப்பதாக நான் கருதுகிறேன். ஆகவே, இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் Select Committee–க்கு அனுப்ப வேண்டுமென்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா.

*பிற்பகல் 1–50*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சரின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்ற இந்த இரண்டு சட்டத் திருத்த மசோதாக்களையும் பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கிறது. ஏனென்றால், ஏற்காடு ஒன்றியத்தைப் பொறுத்தவரை இட ஒதுக்கீட்டினை அந்தக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக, அந்தக் கருத்துரையிலே முடிவு எடுத்து நடத்தி இருக்க முடியும். அதேபோல, சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, ஒரு மாதத்திற்கு ஒருமுறை என்று இருப்பது, mandatory-- குறைந்தபட்சம் 3 மாதத்திற்கு ஒருமுறை என்று சொன்னால், அது recommendatory-ஆக மாறுகிறது, மாதம் ஒரு முறைகூட நடத்தலாம் என்று. என்றைக்கு recommendatory-ஆக மாறுகிறதோ, அது நடக்காது. ஏனென்றால், Presiding Officers meeting-லே தமிழ்நாடு மாதிரி பெரிய மாநிலத்திற்கு 100 நாட்களாவது கூட்டம் நடத்த வேண்டுமென்று recommendatory-ஆக இருக்கிறதனாலே அவ்வாறு நடத்துகிறதில்லை. ஒரு வாரத்திற்கு Budget session நடத்தியிருக்கிறோம். ஆகவே, இது கட்டாயமாக மாதம் ஒருமுறை இருக்க வேண்டும் என்பதை மாற்றக் கூடாது. மேலும், இது தவறான முன்னுதாரணமாகிவிடும். நாளைக்கு ஒவ்வொரு மாநகராட்சிக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும், இந்தமாதிரியாக அதனுடைய கூட்டம் நடத்துகின்ற காலத்தைக் குறைக்கின்ற ஒரு முன்மாதிரியாக அமைந்துவிடும். மக்கள் பிரச்சினைகளை மக்கள் மன்றங்கள் அடிக்கடி

[திரு. எச். ராஜா] [2005 ஏப்ரல் 13

கூடி விவாதித்து முடிவு எடுப்பதுதான் சரியான ஜனநாயமாக இருக்கும். எனவே, ஜனநாயகத்தின் அடித்தளத்திற்கே ஆட்டம் கொடுக்கின்ற ஒரு சட்டத் திருத்தமாக இருக்கின்ற காரணத்தினால், இந்தச் சட்டத் திருத்தத்தை பாரதிய ஜனதா கட்சி எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடந்ததிலேயிருந்து, இந்த மன்ற உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேயராக வந்ததிலேயிருந்து, இந்த மாநகராட்சியைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின்வசத்திலிருந்து எடுத்துவிட வேண்டும் என்பதற்குச் சில திட்டங்களைக் கொண்டு வந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** இல்லை, எதற்கு இவ்வளவு பீடிகை போடுகிறீர்கள்? என்ன சொல்லுங்கள்?

**திரு. துரைமுருகன்:** ஸ்டாலின் அவர்களை அந்தப் பதவியிலிருந்து இறக்கினார்கள். பிறகு ஒரு துணைத் தலைவரை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, என்ன கருத்து என்பதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேயரைப் பதவி இறக்கம் செய்தது நீதிமன்றம். இந்த அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், திரு. சிவபுண்ணியம் அவர்கள் பேசுகின்றபோது, ஏதோ அரசியல் காரணங்களுக்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படுவதாக இங்கே தெரிவித்தார். மாமன்றத்தில் அமளி நடப்பதை நான் குறிப்பிட்டதை வைத்துக் கொண்டு, அந்த ஒரே காரணத்திற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுவதுபோல் ஒரு மாயத் தோற்றத்தை திரு. சிவபுண்ணியம் அவர்கள் இங்கே ஏற்படுத்தப் பார்த்தார். நோக்கக் காரண விளக்க உரையிலேயே உண்மையான காரணத்தை, முக்கியமான காரணத்தை கொடுத்திருக்கிறோம். அதை நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஒவ்வொரு மாதமும் கூடுகிற நிலைக் குழுக்களானவை மிக முக்கியமான செயற்பாடுகள் பலவற்றுக்கும் தமது ஏற்பளிப்பினை வழங்குகிறது. எனவே, அரசானது, சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணிக் களத்தில் தற்போது செலவிடும் நேரத்தைவிட அதிக நேரத்தைச்



2005 ஏப்ரல் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

செலவிடும் வகையில், குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது மன்றத்தின் கூட்டங்களைக் கூட்டுவது போதுமானதாக இருக்கும் எனக் கருதியது என்று Statement of objects and reasons-லேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகாரிகளுக்குக் களப் பணியில் செலவிடுவதற்கு அதிக நேரம் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தம் முக்கியமாகக் கொண்டு வரப்படுகிறது.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, துணை மேயர் அவர்களை வைத்துக் கொண்டு மாநகராட்சியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அங்கேயும் திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் எங்களுடைய தோழமைக் கட்சிகள் எல்லாம் எதிர்க் கட்சிகளாக இருக்கின்றன. அதுகூட பொறுக்க முடியாமல் அங்கே ஒரு கலவரம் நடப்பதைப் பற்றி முதலமைச்சர் சொன்னார். சரி அப்படியானால் மாநகராட்சியைக் கலைத்து விடுங்கள் என்று யோசனை சொன்னோம். அதையும் ஏற்கவில்லை. கடைசியிலே எதிர்க் கட்சிகளே இல்லாமல் ஒரு மாநகராட்சியை **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அப்படியெல்லாம் முறைகேடாகச் சொல்லக் கூடாது. ** என்று இப்படியெல்லாம் பேசுவது முறையானதல்ல; முறையானதல்ல. அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை உங்களுடைய கருத்து என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) கருத்தைச் சொல்லிவிட்டு வெளியே போங்கள்.

**திரு. துரைமுருகன்:** என்னுடைய கருத்து இதுதான். ஜனநாயகத்தைப் படுகொலை செய்கிறது இந்த அரசு; அதற்கு நாங்கள் துணைபோக விரும்பவில்லை; எனவே, நாங்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2005 ஏப்ரல் 13

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே நாங்கள் எதிர்த்திருக்கிறோம். இந்தச் சட்டமுன்வடிவை நிச்சயமாக அரசாங்கம் நிறைவேற்றாது என நாங்கள் திடமாக நம்பினோம். அதையும் மீறி இப்பொழுது நிறைவேற்றுகிறார்கள். நிறைவேற்றுவதற்குச் சொல்லப்படுகின்ற காரணங்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய காரணங்களாக இல்லை. நிச்சயமாக மன்றம் நடத்த முடியாமல் இருந்தால், அதைக் கலைக்கலாம். அதில் தவறில்லை. ஆனால், களப் பணி என்று சேர்த்துச் சொல்கிறார்கள். களப் பணி என்று சொன்னால், சென்னை மாநகராட்சியை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள், முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை, இல்லை, சொல்லுகிறேன். அந்த விளக்கத்திற்குத்தான் பதில் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஒன்று வெளிநடப்பு என்று சொன்னால், வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடுகள்) வெளிநடப்பு என்று சொன்னால், வெளிநடப்புச் செய்யுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சென்னை மாநகராட்சியில் மட்டும்தான் களப் பணியா? மற்ற மாநகராட்சிகளில் இருக்கிற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் பேசினீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். அமைச்சர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** விளக்கம் சொல்லவில்லை. விளக்கம் சொல்லாததனாலேதான் சொல்கிறேன். விளக்கம் சொல்லவில்லை. முடிக்கப் போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: விளக்கம் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் வெளிநடப்புச் செய்வதானால் செய்யுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) வெளிநடப்புச் செய்வதானால் செய்யுங்கள், இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மறுபடியும், மறுபடியும் அதே கருத்தைப் பேசிக் கொண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.



2005 ஏப்ரல் 13]

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஜனநாயகப் படுகொலையைக் கண்டித்து, காங்கிரஸ் கட்சி சார்பாக வெளிநடப்புச் செய்கிறோம்.

*(காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 1–55*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றித் தெள்ளத்தெளிவாக அவைக்கு எடுத்துரைத்திருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன் அவர்கள், ஆணையாளர் அவர்களுக்கு அதிகார வரம்பு அதிகப்படுத்தியிருப்பதாகக் கூறினார். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த சென்னை மாநகராட்சியில் பல்வேறு பணிகளை, மக்களுடைய அடிப்படைப் பணிகளையெல்லாம் மேற்கொண்டு, இன்றையதினத்திலே இந்த சென்னை மாநகராட்சியை ஒரு சிறந்த மாநகராட்சியாக உயர்த்தியிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல மாமன்றக் கூட்டத்திற்கு . . . (குறுக்கீடு)

*(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*(இந்தியக் கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என் அனுமதி இல்லாமல் பேசக்கூடாது. அமைச்சர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** ரூ.45 இலட்சத்திற்கும், ரூ.50 இலட்சத்திற்கும் இடைப்பட்ட அந்த முன்மொழிவுகள்தான் அங்கே வரவிருக்கின்றன. மாமன்றத்திற்குச் செல்கின்ற வகையிலே

[திரு. கே. பி. அன்பழகன்] [2005 ஏப்ரல் 13

மேற்கொள்கின்ற பணிகளானது அதிகமாகச் செல்வதில்லை. நிலைக் குழுக்கள் மூலமாகவே பல்வேறு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. மேலும், ஏற்காட்டில் நடக்கவிருக்கின்ற தேர்தலானது, இன்றைய தினத்திலே சாதாரண தேர்தல்...

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

2001 மக்கள்தொகை அடிப்படையிலேதான் அந்தத் தேர்தலானது நடத்தப்படும். அங்கே வருவாய் கிராமவாரியாக கணக்கெடுப்பு விவரம் இருக்கிறது. அங்கே ஊராட்சிகள்வாரியாக அந்தக் கணக்கெடுப்பு கிடைக்கப்பட்டவுடன், அந்தப் பகுதியிலே தேர்தல் நடத்தப்படும். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றித்தர வேண்டுமெனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.



2005 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2005 ஏப்ரல் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த சட்டமுன்வடிவு. 2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2005). மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2005 ஏப்ரல் 13]

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 11. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பேரவையின் 10-வது கூட்டத் தொடரின் முதல் கூட்டம், 2005 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாள் மேதகு ஆளுநர் அவர்கள் உரையுடன் தொடங்கி, பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாள் வரை நடைபெற்றது. அக் கூட்டத் தொடரின் இரண்டாவது கூட்டம், 2005 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் மாண்புமிகு நிதியமைச்சரால் வரவு செலவுத் திட்டம் அளிக்கப்பட்டபோது தொடங்கி, இன்று (13-4-2005) வரை நடைபெற்று வருகிறது.

இந்தக் கூட்டத் தொடரில்,

பேரவை கூடிய மொத்த நாட்கள் — 35 நாட்கள்

(ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)

மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் — 4 நாட்கள்

அவைக் கூட்டம் நடைபெற்ற நேரம் — 132 மணி 35 நிமிடம்
(பிற்பகல் 1-30 மணி வரை)

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

(மேதகு ஆளுநர் அவர்கள் 31-1-2005 அன்று பேரவையில் உரையாற்றினார்கள்)

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

| | |
|---|---|
| நடைபெற்ற மொத்த நாட்கள் | — 4 நாட்கள் |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | — 16 பேர் |
| உரையாற்றிய நேரம் 9 மணி 55 நிமிடம் | |
| அதில் ஆளுங்கட்சியினர் 2 பேர், பேசிய நேரம் | — 1 மணி 32 நிமிடம் |
| இதர கட்சியினர் 14 பேர், பேசிய நேரம் | — 8 மணி 23 நிமிடம் |
| மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் | —48 நிமிடம் |

**நிதி அலுவல்கள்—**

2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 2-3-2005 அன்று பேரவைக்கு அளிக்கப்பட்டது.

| | |
|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | — 6 நாட்கள் |

பிற்பகல் 2-00

| | |
|---|---|
| பங்கேற்ற உறுப்பினர்கள் | — 22 பேர் |
| உரையாற்றிய நேரம் | — 15 மணி 14 நிமிடம் |
| இதில் ஆளுங்கட்சியினர் 4 பேர், பேசிய நேரம் | — 3 மணி 32 நிமிடம் |
| இதர கட்சியினர் 18 பேர், பேசிய நேரம் | — 11 மணி 42 நிமிடம் |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் | — 1 மணி 22 நிமிடம் |



2005 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

**மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம்—**

மொத்தமுள்ள 49 மானியக் கோரிக்கைகளில் 48 மானியக் கோரிக்கைகள் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன. ஒரு மானியக் கோரிக்கை கில்லட்டின் செய்யப்பெற்றது.

| | |
|---|---|
| விவாதம் நடைபெற்ற நாட்கள் | — 21 |
| மாலையிலும் விவாதம் நடைபெற்ற நாட்கள் | — 3 |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | — 85 பேர் (120 தடவைகள்) |
| உரையாற்றிய நேரம் (குறுக்கீடுகள் உட்பட) | —38 மணி 51 நிமிடம் |
| அதில் ஆளுங்கட்சியினர் 24 பேர், பேசிய நேரம் | — 8 மணி 04 நிமிடம் |
| இதர கட்சியினர் 96 பேர், பேசிய நேரம் | — 30 மணி 47 நிமிடம் |
| மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம் | — 19 மணி 54 நிமிடம் |
| மாண்புமிகு முதலமைச்சர் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதில் அளித்த நேரம் | — 1 மணி 35 நிமிடம் |

**வெட்டுத் தீர்மானங்கள்—**

| | |
|---|---|
| வரப்பெற்றவை | — 7,529 |
| அனுமதிக்கப்பெற்று அச்சிடப்பெற்றவை | — 7,098 |
| அவையில் மொழியப்பெற்றவை | — 967 |

**வினாக்கள்-விடைகள்—**

| | |
|---|---|
| 1-8-2004 முதல் 8-4-2005 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | — 21,617 |
| அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | — 92 |

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பெற்றவை | — | 14,015 |
| உடுக்குறியிட்டவை | — | 1,501 |
| உடுக்குறியிடாதவை | — | 4,929 |
| குறுகிய கால வினாக்கள் | — | 115 |

**அனுமதிக்கப்பெற்ற வினாக்களைத் தொடுத்தவர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—**

1. திரு. கோவை தங்கம்
2. திரு. ப. அரசன்
3. திரு. ஐ. கணேசன்
4. திரு. நா. சந்திரமோகன்
5. திரு. கே. ஆறுமுகம்

**உடுக்குறியிட்ட வினாக்கள்—**

| | | |
|---|---|---|
| அவையில் விடையளிக்கப்பட்டவை | — | 226 |
| மொத்த துணை வினாக்கள் | — | 612 |
| வினாக்கள்—விடைகள் எடுத்துக்கொள்ளப் பெற்ற நாட்கள் | — | 18 நாட்கள் |
| வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள் | — | 14 நாட்கள் |
| நீட்டிக்கப்பட்ட நேரம் | — | 1 மணி 3 நிமிடம் |

**உடுக்குறியிடாத வினாக்கள்—**

| | | |
|---|---|---|
| அவைமுன் வைக்கப்பெற்றவை | — | 1,022 |
| உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் | — | 780 |



2005 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

**கவன ஈர்ப்புகள்—**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | — | 895 |
| கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை | — | 373 |
| அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை | — | 43 |
| இன்றையதினம் அவைமுன் வைக்கப்பெற்றவை | — | 79 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பெற்றவை — 8**

**விதி 110—ன்கீழ் அமைச்சர்களின் அறிக்கைகள்—**

| | | |
|---|---|---|
| மொத்தம் அளிக்கப்பெற்றவை | — | 22 |
| மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை | — | 20 |
| தன் துறைகள் தொடர்பான விவாதங்களுக்குப்பின் பதிலுரை அளித்த நிகழ்வுகள் அல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் மாண்புமிகு முதலமைச்சர் உரையாற்றிய நேர்வுகள் | — | 342 (மேசையைத் தட்டும் ஒலி) |
| அவர்கள் உரையாற்றிய நேரம் | — | 4 மணி 27 நிமிடம் |

**உறுப்பினர்களுடைய வருகை—**

**வருகைப் பதிவேட்டில் உறுப்பினர்கள் கையொப்பமிட்டதை அடிப்படையாகக் கொண்டு, 31—1—2005 முதல் இன்று வரை**

அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் வருமாறு—

1. திரு. பி.எஸ். அருள்
2. திருமதி வி. அழகம்மாள்
3. திரு. ஆ.கு.சி. அன்பழகன்
4. திரு. கு. அன்பழகன்
5. திரு. அ. அன்வர் ராஜா
6. திரு. த. ஆறுமுகம்

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் வருமாறு—தொடர்ச்சி

7. திரு. ஆஸ்டின்
8. திரு. சி. இராசேந்திரன்
9. திரு. ந. இராமு
10. திரு. மா. இராஜசேகர்
11. திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்
12. திரு. பி.ஜி. இராஜேந்திரன்
13. திரு. வெ. ஏழுமலை
14. திரு. ந. கணபதி
15. டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி
16. திருமதி கு. கலாவதி
17. செல்வி சி. கனகதாரா
18. திருமதி எஸ். கனிதா சம்பத்
19. திரு. ஜி. கோதண்டராமன்
20. திரு. வெ. கோவிந்தராஜ்
21. திருமதி ஆர். சசிகலா
22. திரு. எஸ்.பி. சண்முகநாதன்
23. திரு. லா. சந்தானம்
24. திரு. நா. சந்திரமோகன்
25. திரு. வீ. சந்திரன்
26. திரு. எம்.சி. சம்பத்
27. திருமதி இரா. சரோஜா
28. திரு. கே.கே. சிவசாமி



2005 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் வருமாறு—தொடர்ச்சி

29. திரு. அ. சிவபெருமாள்
30. திருமதி செ. சுந்தராம்பாள்
31. திரு. வீ. சுப்பிரமணியன்
32. திருமதி சி.எம். சூரியகலா
33. திரு. செ. செம்மலை
34. திரு. பி.கே. சேகர்பாபு
35. திரு. கே.ஜி.பி. ஞானமூர்த்தி
36. திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
37. முனைவர் செ.கு. தமிழரசன்
38. டாக்டர் மு. தம்பிதுரை
39. திரு. ப. தனபால்
40. திரு. செ. தாமோதரன்
41. திரு. கே.எஸ். தென்னரசு
42. திரு. வது. நடராசன்
43. திரு. அ. நடராஜன்
44. திரு. பி.கே.டி. நடராஜன்
45. திரு. பி.எம். நரசிம்மன்
46. திரு. ப. நீலகண்டன்
47. திருமதி கே. பவானி கருணாகரன்
48. திரு. கே.எஸ். பழனிசாமி
49. திரு. பெ. பழனியப்பன்
50. திரு. அ. பாப்பாசுந்தரம்

[பேரவைத் தலைவர்] [2005 ஏப்ரல் 13

அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களுடைய பெயர்கள் வருமாறு—தொடர்ச்சி

51. திரு. கே.கே. பாலசுப்ரமணியன்
52. திரு. எஸ்.எம். பாலன்
53. திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்
54. திரு. ஏ. பூவராகமூர்த்தி
55. திரு. டி.பி. பொன்னம்பலம்
56. திரு. எஸ். மகாலிங்கம்
57. திருமதி மல்லிகா சின்னசாமி
58. திரு. எஸ். மாணிக்கராஜ்
59. திரு. ஆகு. முருகேசன்
60. திரு. பா. மோகன்
61. திருமதி எஸ். ராஜம்மாள்
62. திரு. வி.ஆர். ராஜாங்கம்
63. திரு. என். ரங்கநாதன்
64. திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்
65. திருமதி வளர்மதி ஜெபராஜ்
66. திரு. இரா. வில்வநாதன்
67. திரு. செ. வெங்கடாஜலம்
68. திரு. இரா. ஜீவானந்தம்
69. திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்
70. திரு. எம்.ஏ. உறக்கீம்.

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள் மொத்தம் 16,516 பேர்.



2005 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 2–05

நம்முடைய சட்டப் பேரவையில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடர் இன்று நிறைவு பெறுகிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களின் உள்ளார்ந்த விருப்பத்தின்படி, வழிகாட்டுதலின்படி, வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை உருவாக்கி வழங்கிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியின் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள அத்தனை பேருமே நன் முத்துக்கள் என்பதை நிலைநாட்டும் வகையில், தங்கள் மானியக் கோரிக்கைள்மூலம் தங்களுடைய துறையைச் செழுமைப்படுத்தவும், தமிழக மக்களின் வாழ்வை மேம்படுத்தவும் கருத்துகளை வழங்கிய அமைச்சர் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை நிகழ்ச்சிகளை நடத்துவதில் எனக்குத் துணை நின்ற என் சகோதரர், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் வரகூர் அருணாசலம் அவர்களுக்கும், எப்போதும் எனக்கு உற்ற துணை புரிந்த பேரவை முன்னவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா தம்பி நரசிம்மன் அவர்களுக்கும், பேரவைச் செயலாளர் சகோதரர் திரு. இராசாராமன் அவர்களுக்கும், எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கொறடாக்களுக்கும் என் நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன். பேரவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற உழைத்த சட்டப் பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றி.

தமிழக ஜனநாயக அமைப்பின் சிகரமான இந்த மாமன்றம், பாரம்பரியப் பெருமையையும் சிறப்பையும் கொண்டது. சட்டப் பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரங்களைக் கணக்குப் பார்ப்பதைவிட அந்த அதிகாரங்களுக்குப் பேரவை உறுப்பினர்களாகிய நீங்களும், உங்களைத் தேர்ந்தெடுத்த மக்களும்தான் ஊற்றுக் கால்கள் என்பதை எப்போதும் நான் மறப்பதில்லை. சட்டப் பேரவைத் தலைவர் என்பவர் சாம்பாரில் கரைந்த உப்பைப்போல் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். உப்பு இருக்க வேண்டும்; ஆனால் அதிகமாக தன்னைக் காட்டிக் கொண்டால் சாம்பாரின் சுவை கெட்டுவிடும். பேரவைத் தலைவர் கண்டித்தார்; பேரவைத் தலைவர் எச்சரித்தார்; பேரவைத் தலைவர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கினார்; பேரவைத் தலைவர் அவையைவிட்டு வெளியேற்றினார் என்பவை நான் விரும்பாத

செய்திகளாக இருந்தாலும், சில சூழல்களில் தவிர்க்க இயலாமல் நான் முறையாகக் கடமையாற்ற நேரிட்டுவிடுகிறது.

எதிர்க் கட்சி உறுப்பினர்களால், சில வேளைகளில் நான் தொந்தரவுக்கு உள்ளானேன் என்று கூற விரும்பவில்லை. ஏனெனில், மக்களாட்சி அமைப்பில் அத்தகைய நிலைகள் இயல்பானவை என்பதால் 'தொந்தரவுக்குள்ளே தோழி, சுகம் கண்டேன்' என்ற பாவேந்தரின் பாட்டு வரிகளை என் மனப் புண்ணுக்கு ஒற்றடமாகத் தந்து கொள்கிறேன். "மக்களது கருத்துகளைப் பொறுமையோடு கேட்டு, பொறுப்புணர்ச்சியோடு பரிகாரம் தேடித் தரும் ஆட்சி, ஆலெனத் தழைத்திடும்" என்பது அறிஞர் அண்ணாவின் வாசகம்.

மற்ற கூட்டத் தொடர்களைவிட இந்தக் கூட்டத் தொடருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு. வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தொடர்ந்து, 'பொன் குடத்திற்குப் பொட்டு வைத்தாற்போல்' தமிழக மக்களின் வாழ்வை உயர்த்த பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை 110–வது விதியின்கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கியது போற்றுதலுக்குரியது.

திருக்குறளை தேசிய நூலாக அங்கீகரிக்கவேண்டுமெனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானத்தை இங்கே கொண்டுவந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பாராட்டுவது என்ன! புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக வருவார்; இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவார் என்று தெரிந்து, திருவள்ளுவரே பாராட்டியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) மிக எளிமையான திருக்குறள்:

"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, வள்ளுவரே பாராட்டிய மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததற்கு நான் பெரிதும் வணங்குகிறேன்.

இல்லாமையும் கல்லாமையும்தான் தமிழக மக்களின் தலைவிதி என்றால், அந்தத் தலைவிதியை மாற்றியமைத்த விதி, 110–வது விதி. (மேசையைத் தட்டும் ஒலி) 110–வது விதியின்கீழ் பல்வேறு சலுகைகளை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு, இன்று இந்திய தேசிய நூலாக அங்கீகரிக்க வேண்டுமென்று தீர்மானித்துள்ள





குறளில் 110–வது எண்ணுள்ள திருக்குறளை மறவாமல், தமிழக மக்கள் நன்றி செலுத்துவார்கள் என்பதிலே ஐயமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

110–வது திருக்குறள். போய் திருக்குறள் புத்தகத்திலே புரட்டிப் பாருங்கள். 110–வது திருக்குறள்—

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

நித்தம் நித்தம் அவைக்கு வந்திருந்து சலிக்காமல் அமர்ந்து, அமைச்சர்களோ, ஆளுங்கட்சி உறுப்பினர்களோ, எதிர்க் கட்சிகளின் தலைவர்களோ, உறுப்பினர்களோ பேசுவதை, எழுத்து எழுத்தாகக் கவனித்து, உரிய பதில்களைத் தந்து, வைக்கின்ற கோரிக்கைகளை நிறைவேற்றி, இந்தப் பேரவைக்குப் பெருமை சேர்த்த, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பிற்பகல் 2–10

அவர்களது திறமையும், பல்துறை அறிவாற்றலும், கடும் உழைப்பும், பலரைப் போலவே என்னையும் வியக்க வைக்கிறது. சந்தம் தவறாமல் செந்தமிழை உச்சரிக்கும் பாங்கும், ஆங்கிலத்திலே அரும் புலமையும், வடபுலத்து மொழிகளிலும், திராவிடத்தின் அனைத்து மொழிகளிலும் இயல்பாகப் பேசும் சிறப்பையும் அவர்கள் ஆர்வத்தாலும், முயற்சியாலும், பயிற்சியாலும் பெற்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்து மக்களுக்காக, தன்னை மெழுகுவர்த்தியாக்கிக் கொண்ட தியாகத் திருவிளக்காம் அம்மா அவர்களின் ஆற்றல் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், எதிர்காலத்தில், இந்தியத் திருநாட்டிற்கே பயன்படும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது உள்ளுணர்விலே எப்போதும் எனக்கு அழுத்தமான நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையால் சொல்கிறேன். அரசியலில் பகைவர்களும் நண்பர்களாகலாம்; இன்றுள்ள சூழ்நிலை வேறு வடிவம் கொள்ளலாம்; முரண்பாடுகள் சமன்பாடுகளாகலாம்; சமன்பாடுகள் உடன்பாடுகளாகலாம்; காலம் மாறும்; சரித்திரத்தின் சக்கரங்கள்

சுழலும்; இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள், இந்தியாவின் பிரதமர் பீடத்தில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அமரப் போவது உறுதி, உறுதி, உறுதி என்பதைக் கூறி, தமிழ்ப் புத்தாண்டு வணக்கங்களை இதய தெய்வம் அம்மா அவர்களுக்குக் கூறி, புத்தாண்டு வாழ்த்துகளை அமைச்சர் பெருமக்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் கூறி, மீண்டும் ஒருசேர உங்களைச் சந்திக்க தவம் கிடக்கிறேன் என்று கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை விதி 25 (1)-ன்கீழ் பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம். நன்றி.

பின்னர், பேரவை பிற்பகல் 2-12 மணிக்கு, மீண்டும் கூடும்நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.





## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

115. 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறையின் 4–1–2005 ஆம் நாளிட்ட 4 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 320 (5)-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

116. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 17/1961) 125 (2) (a) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

117. 2003–2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் இருபத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

118. 1999–2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

119. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

120. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் தணிக்கை அறிக்கை. [1998 ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 14/1998) 34 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

121. 1997–1998 ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

[2005 ஏப்ரல் 13

*122. 1998–1999* ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

*123. 1999–2000* ஆம் ஆண்டிற்கான மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் மாவட்டவாரியான தணிக்கை அறிக்கை. [1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 39/1987) 18 (6) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*250.* செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – சுற்றுலா மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

*251.* செய்தி மற்றும் சுற்றுலாத் துறை – செய்தி மற்றும் விளம்பரம் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2005–2006. (தமிழ்)

*252. 2003–2004* ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு – ஆண்டு ஆய்வு அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

*253. 2003–2004* ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

*254. 31–3–2005* அன்று உள்ளவாறு 2001, 2002, 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில் ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்த விவர அறிக்கை. (தமிழ்)

*255.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).



2005 ஏப்ரல் 13]

*256.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினாறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

*257.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினேழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

*258.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பதினெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 180 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள் உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது).

*259.* உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல் (பத்தொன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 122 வரை)

*260.* தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் அனுமதிக்கப்பெற்ற கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளின் மீது பெறப்பட்ட அறிக்கைகளின் பட்டியல் வரிசை எண்கள் 1 முதல் 79 வரை

# இணைப்பு – I

*(52 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பெற்ற உடுக்குறியிட்ட வினாக்கள் *

## (பட்டியல்கள் 15 முதல் 18 வரை)

## பட்டியல் 15

**1—**

### அழகர் அணை

**வினா எண் 580—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர், செண்பகத்தோப்பில் அழகர் அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

---

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

[2005 ஏப்ரல் 13

**2—**

## தண்டனையைக் குறைத்தல்

**வினா எண் 945— திரு. ப. இளவழகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆயுள் தண்டனை பெற்று சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வரும் கைதிகள் 8 ஆண்டுகள் தண்டனையைக் கழித்திருந்தால், விடுதலை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

8 ஆண்டுகள் சிறையில் ஆயுள் தண்டனையைக் கழித்த சிறைவாசிகளை விடுதலை செய்ய விதிமுறைகள் ஏதும் இல்லை. மேலும், 8 ஆண்டுகள் தண்டனை கழித்த சிறைவாசிகளை விடுதலை செய்வது குறித்த செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

**3—**

## சுற்றுலா மாளிகை

**வினா எண் 1023—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில், சத்துவாச்சாரியில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் சுற்றுலா மாளிகை கட்டும் திட்டம் ஏதும் இல்லை. வேலூர்



2005 ஏப்ரல் 13]

மாவட்ட ஆட்சித் தலைவர் குடியிருப்புக்கு அடுத்தாற்போல் ஒரு சுற்றுலா மாளிகை வேலூரில் ஏற்கெனவே உள்ளது.

**4—**

## சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்

**வினா எண் 1475—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை தொகுதியில் இதுவரை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் அமைக்கப்படவில்லையாதலால், உடனடியாக அலுவலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எங்கு, எப்போது, எவ்வளவு காலத்திற்குள் அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கபிலர்மலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினரிடம் *15–5–2002–ல்* ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**5—**

## பழுதுபார்க்கும் பணி

**வினா எண் 1991—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டத்திலுள்ள கிளைச் சிறைச்சாலைகளைப் பழுதுபார்த்து விரிவுபடுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் கிளைச் சிறைகளின் கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளதால், பழுது நீக்கம் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், அங்கீகரிக்கப்பட்ட இடவசதி மற்றும் சராசரி அடைப்பு ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இக்கிளை சிறைகளை விரிவுபடுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

**6—**

**சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்**

**வினா எண் 2361—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் எப்போது கட்டி முடிக்கப்படும்?*

*(ஆ) அது சட்டமன்ற உறுப்பினரிடம் எப்போது ஒப்படைக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம் 31–7–2001–ல் கட்டி முடிக்கப்பட்டு, 22–8–2001–ல் சட்டமன்ற உறுப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

**7—**

**சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்**

**வினா எண் 2893— திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

*(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இதுவரை கட்டப்படவில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதிக்கான சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அலுவலகம் கட்டி முடிக்கப்பட்டு தொகுதி உறுப்பினரிடம் 18–6–2003–ல் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

**8—**

**நிலையூர் கால்வாய் விரிவாக்கத் திட்டம்**

**வினா எண் 3625—திரு. க. பாரமலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை மாவட்டம், நிலையூரிலிருந்து விருதுநகர் மாவட்டம், கம்பிக்குடி செல்லும் நிலையூர் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டத்தில் சிவகங்கை மாவட்டம், எருக்களைவெள்ளூர் கிராமம் சேர்க்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நிலையூர் கால்வாய் விஸ்தரிப்புத் திட்டத்தில் சிவகங்கை மாவட்டம், எருக்களைவெள்ளூர் கிராமம் சேர்க்கப்பட்டு வடுகன்குளம் கண்மாய்மூலம் அங்கு தண்ணீர் நிரப்பப்பட்டு வருகின்றது.*

[2005 ஏப்ரல் 13

9—

## சாலையைச் செப்பனிடல்

**வினா எண் 3146—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகேயுள்ள கப்பட்டி சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இச்சாலையில் கி.மீ. 0/0 – 1/0 வரையுள்ள பகுதிகள் 2003–2004 ஆம் ஆண்டு பேருந்து வழித்தடங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், கி.மீ. 1/0 – 3/0 வரையிலான பகுதிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.*

10—

## அணை கட்டுதல்

**வினா எண் 6077—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன்வலசை, பாசன வாய்க்கால்களுக்கு அணை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குப்பத்தேவன்வலசை பாசன வாய்க்கால்களுக்கு அணை கட்டித்தர செயற்குறிப்பு ஏதுமில்லை.*



2005 ஏப்ரல் 13]

11—

## அணை அமைத்தல்

**வினா எண் 6576—திரு. எஸ்.எம். பாலன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) லால்குடி தொகுதி, டி. வளவனூர், வடக்கு அய்யன் வாய்க்காலின் குறுக்கே தேக்க அணை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

12—

## விவசாய நிலங்கள் ஆர்ஜிதம்

**வினா எண் 6670—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அரசு விவசாய நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது, குறைந்தபட்சம் நில உரிமையாளரிடம் எவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என நிர்ணயம் செய்துள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*தற்போதுள்ள நிலையின்படி நில எடுப்புச் சட்டம் 1894–னைப் பொறுத்தவரையில், நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது குறைந்தபட்சம் நில உரிமையாளரிடம் எவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என்ற நிர்ணயம் எதுவும் இல்லை.*

**13—**

### ஏரியை பலப்படுத்தல்

**வினா எண் 7488—திருமதி ஆர். சசிகலா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, பஞ்சப்பட்டி ஏரியைத் தூர்வாரி, கரையைப் பலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாசனத் தொகுப்பிற்கு உட்பட்ட மற்றும் உட்படாத ஏரிகள் தூர்வாரும் திட்டத்தின்கீழ், பஞ்சப்பட்டி ஏரி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது.

**14—**

### சுற்றுலா மாளிகை

**வினா எண் 7994—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்தர்வக்கோட்டையில் பொதுப் பணித் துறையின் சுற்றுலா மாளிகை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கந்தர்வக்கோட்டையில் பொதுப் பணித் துறையின் மூலம் சுற்றுலா மாளிகை அமைக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.



**15—**

### உதவி செயற் பொறியாளர் அலுவலகம்

**வினா எண் 7996—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியில் இருக்கும் உதவி செயற் பொறியாளர் அலுவலகத்தை புதுக்கோட்டைக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டம் இயங்கி வருவதால், அறந்தாங்கியில் இருக்கும் செயற் பொறியாளர் அலுவலகத்தை, அதாவது கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) உபகோட்டத்தை புதுக்கோட்டைக்கு மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**16—**

### பட்டா வழங்குதல்

**வினா எண் 7998—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2–வது தொகுதி, கள்ளக்குறிச்சி பேரூராட்சி, 15–வது வார்டு, கோவிந்தராஜாபட்டினம் பகுதியில் பல ஆண்டுகளாக வசித்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

[2005 ஏப்ரல் 13

17—

## கால்வாய் பணிகள்

**வினா எண் 8009—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாடிப்பட்டி ஒன்றியம், திருவாலவாயநல்லூரில் உலக வங்கி உதவியுடன் அமைக்கப்பட்ட நேரடிக் கால்வாய் வேலை, கடந்த இரண்டு ஆண்டுகளாக முற்றுப்பெறாமல் இருப்பதை முடித்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

திருவாலவாயநல்லூர் கண்மாய்க்கு புறவழி வாய்க்கால் கட்ட குளம் கண்மாயின் நீர்ப்பிடிப்பில் வெட்டப்பட்டது. இருப்பினும், அவ்வாய்க்காலை உபயோகப்படுத்த முடியாமல் இருந்ததால் மேற்சொன்ன இடத்தில் தற்போது உள்ள சிறிய வாய்க்காலை சைஃபன் (syphon) செய்து ஒரு குறுக்குக் கட்டுமானம் கட்டி புறவழி வாய்க்கால் நீர், தங்குதடையின்றிச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பணி முழுமையாக முடிக்கப்பட்டுவிட்டது.

18—

## காவலர் குடியிருப்பு

**வினா எண் 8121—திரு. பே.ப. காமராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் சிறைத் துறையில் பணிபுரியும் காவலர்களுக்குக் காவலர் குடியிருப்பு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது ஓமலூர் கிளைச் சிறைப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு கட்ட அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

19—

## சாஸ்தா கோயில் அணைக்கட்டு

**வினா எண் 8204—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம், தேவஸ்தானத்தில் சாஸ்தா கோயில் அணைக்கட்டை உடனடியாகக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், நகரியாற்றின் குறுக்கே சாஸ்தா கோயில் அணை 31-3-2004-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

20—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 8841—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் புறம்போக்குப் பகுதிகளான பஞ்சந்தாங்கி ஏரி, கே.பி. கரடு ஆகிய இடங்களில் குடியிருக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மேற்படி நிலங்கள் பட்டா வழங்கத் தடை செய்யப்பட்ட வகை நிலங்கள் என்பதால் பட்டா வழங்க இயலாது.

**21—**

## குடகனாறு அணையைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 9486—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர், குடகனாறு அணை பழுதுபார்க்கும் பணியைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

வேடசந்தூர், குடகனாறு அணை பழுதுபார்க்கும் பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன.

**22—**

## அண்ணா விருந்தினர் விடுதி

**வினா எண் 9740—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகாரில் உள்ள அண்ணா விருந்தினர் விடுதியைச் சுற்றிலும் இரும்பு முள்வேலி மற்றும் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு ஆண்டில் பணிகள் மேற்கொள்ளப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியால், அரசு தற்போது நடப்பு ஆண்டில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள இயலாது. ஆயினும், அரசின் நிதிநிலை முன்னேற்றத்திற்குப் பின்னர் இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**23—**

## அகலப் பாதை அமைத்தல்

**வினா எண் 9827—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு–ஆரணி இணைக்கும் ஒருவழிப்பாதையை மாற்றி, அகலப் பாதையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆற்காடு முதல் ஆரணி வரை இணைக்கும் ஒருவழிப்பாதைச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றி அமைக்கும் பணி பரிசீலனையில் உள்ளது.

**24—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 9933—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல்நத்தம் ஊராட்சி, ஜி.கே.எம். நகர், காமராஜ்பேட்டையில் வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஞ்சல்நத்தம் ஊராட்சி, ஜி.கே.எம். நகர், காமராஜ்பேட்டையில் வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரும் இடம் புல எண் 80/பி தீர்வை ஏற்படாத தரிசு நிலமாகும். எனவே, இதனை நில மாறுதல் செய்த பின்னரே வீட்டுமனைப் பட்டா வழங்க இயலும்.

**25—**

**சாஸ்தா கோயில் அணைக்கட்டு**

**வினா எண் 13117—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம், தேவஸ்தானத்தில் சாஸ்தா கோயில் அணைக்கட்டு கட்டும் வேலையை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், நகரியாற்றின் குறுக்கே சாஸ்தா கோயில் அணை 31-3-2004-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**26—**

**மதுபானக் கடைகள்**

**வினா எண் 14092—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் மதுபானக் கடைகள் ஏலம் போகாத இடங்களில் நிர்ணயத் தொகையைக் குறைத்து மறு ஏலம் விட அரசிடம் திட்டம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

29-11-2003 முதற்கொண்டு இம்மாநிலம் முழுவதும் மதுபான சில்லறை விற்பனையை, அரசுக்கு முழுவதும் சொந்த நிறுவனமான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் மேற்கொண்டுள்ளது. எனவே, மதுபானக் கடைகளுக்கு ஏலம் விடும் வினா எழவில்லை.

**27—**

**வாய்க்காலைச் சீர்செய்தல்**

**வினா எண் 16229—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் வாலிஓடை வாய்க்காலைத் தூர்வாரி சீர் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதுமில்லை

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**28—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 16858—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள இலுப்பைதோப்பு மக்களுக்கு உடனடியாகப் பட்டா வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரிலுள்ள இலுப்பைத்தோப்பு மக்கள் 72 நபர்களுக்கு 15–8–2002 அன்று சுதந்திர தின விழாவில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.*

**29—**

### சட்டமன்ற உறுப்பினர் அலுவலகப் பராமரிப்பு

**வினா எண் 17818—திரு. வி.கே. லட்சுமணன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதியில் அரசால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ள அலுவலகங்களுக்கு தண்ணீர் வரி, சொத்து வரி, மின்சாரக் கட்டணம், ஆண்டுப் பராமரிப்பு ஆகியவற்றை பொதுப் பணித் துறையின் மூலமாக செய்து கொடுக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகக் கட்டடங்களின் பராமரிப்புப் பணிகளுக்கு இந்த ஆண்டிற்கான (2003–2004) செலவினம் ரூ.23.40 இலட்சம், மாநில சட்டமன்ற கோரிக்கை எண் 1 என்ற தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கட்டி முடிக்கப்பட்ட தொகுதி அலுவலகக் கட்டடங்களுக்குத் தேவையான பராமரிப்புத் தொகையினை ஒதுக்கீடு செய்து, பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

**30—**

### தரைப் பாலம்

**வினா எண் 17980—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



2005 ஏப்ரல் 13]

*விருத்தாச்சலம் தொகுதியில் கருவேப்பிலங்குறிச்சிக்கு தென்புறம் உள்ள வெள்ளாற்றில் தரைப்பாலம் கட்ட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது.*

**31—**

### அரசு நிலம் விற்பனை

**வினா எண் 18098—திரு. சி. சண்முகம்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பூந்தமல்லி, காட்டுப்பாக்கத்தில் சர்வே எண் 118–ல் சுமார் 3.00 ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலத்தை தனியார் விற்பனை செய்ய முயற்சி செய்து வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இந்நேர்வில் குறிப்பிட்டுள்ள பிரஸ்தாப நிலத்தில் தற்போது ஆக்கிரமணங்கள் அனைத்தும் அகற்றப்பட்டுவிட்டன. இனி ஆக்கிரமணங்கள் எதுவும் மேற்கொள்ளாமல் கண்காணிக்குமாறு வட்டாட்சியருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

**32—**

### ஏரியைத் தூர்வாருதல்

**வினா எண் 18534—திருமதி ஆர். சசிகலா:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

(அ) கிருஷ்ணராயபுரம் வட்டம், சிலாயம் ஊராட்சியில் உள்ள ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவிரிப் பாசன மாவட்டங்களில் உள்ள கால்வாய்கள், குளங்கள் தூர் வாருதல் திட்டத்தின்கீழ் ரூ.3.31 இலட்சம் மதிப்பீட்டில் சிலாயம் ஏரி தூர் வாரப்பட்டுள்ளது.

**33—**

## சோத்துப்பாறை அணைத் திட்டம்

**வினா எண் 18560—திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோத்துப்பாறை அணைத் திட்டத்தில் ஆண்டிப்பட்டித் தொகுதியிலுள்ள எருமலைநாயக்கன்பட்டியிலிருந்து வத்தலக்குண்டு வரை விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**34—**

## கண்மாய் அமைத்தல்

**வினா எண் 18691—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, புதூர் ஒன்றியம், மாவலோடை பஞ்சாயத்தைச் சேர்ந்த சின்னூர் கிராமத்தில் புதிய கண்மாய் அமைத்திட அரசு முன்வருமா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதூர் ஒன்றியம், மாவலோடை பஞ்சாயத்தைச் சேர்ந்த சின்னூர் கிராமத்தில் புதிய கண்மாய் அமைப்பதற்கு நபார்டு வங்கி நிதியுதவித் திட்டத்தின்கீழ் ரூ.70.54 இலட்சத்தில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**35—**

## வால்பாறை சோலையார் அணை

**வினா எண் 18700—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சோலையார் அணையில் ஏற்கெனவே உள்ள படகினை உபயோகப்படுத்தி மக்கள் அணையைச் சுற்றிப் பார்க்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**36—**

## கால்வாய் மராமத்து

**வினா எண் 18809—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி தொகுதியில் கமுதக்குடிக்கு மேற்கே இலந்தைக்குளம் அருகில் கூத்தன் கால்வாயின் ஒரு பகுதி, அதாவது பாம்பூர் வரை கால்வாய் மராமத்துச் செய்யப்பட்டிருப்பதால், பாம்பூருக்கு அப்பாலும் இந்தக் கூத்தன் கால்வாய் மராமத்துச் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பொதுப் பணித் துறை கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் சீரமைக்க ஒருங்கிணைந்த நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டப் பணிகளில் கூத்தன் கால்வாயைத் தூர் வாரிச் சீரமைக்கும் பணியை ரூ.93.90 இலட்சம் மதிப்பீட்டில், ஹட்கோ நிதி உதவியுடன் செய்வதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

**37—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 18939—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் பட்டா கேட்டு விண்ணப்பித்தவர்களுக்குப் பட்டா கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சங்கராபுரம் தொகுதியில் உள்ள கிராமங்களில் 1999–2000 முதல் 31–10–2003 முடிய 827 பயனாளிகளுக்கு நில ஒப்படையும், 4241 பயனாளிகளுக்கு வீட்டுமனை ஒப்படையும் வழங்கப்பட்டுள்ளன.



**38—**

## சாலைகளைப் புதுப்பித்தல்

**வினா எண் 19753—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் தொகுதிக்குட்பட்ட இதர மாவட்டச் சாலைகளைப் புதுப்பிக்க அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளைப் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**39—**

## அணை கட்டுதல்

**வினா எண் 23422—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டும் பணி அனைத்தும் முடிவடைந்துவிட்டது.

40—

### சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 23678—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நெடுஞ்சாலைக் கோட்டத்தைச் சேர்ந்த வெஞ்சமடை கிராமச் சாலை கி.மீ. 0/0 – 1/4 வரை மிக பழுதடைந்துள்ளதால் அதைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

41—

### கொள்ளளவு திறனை மேம்படுத்துதல்

**வினா எண் 23779—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதியில் ஏரிகள், பாசன வாய்க்கால்கள் ஆகியவற்றை நவீனப்படுத்தி அவற்றின் கொள்ளளவுத் திறனை விவசாயிகள் ஒத்துழைப்புடன் மேம்படுத்த அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை தொகுதியில் உள்ள ஏரிகள் மற்றும் பாசன வாய்க்கால்களில் உலக வங்கி நிதி உதவியுடன் சமீபத்தில் புனரமைப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. ஏரிகள் மற்றும் பாசனக் கால்வாய்கள் ஆகியவற்றை விவசாயிகளின் ஒத்துழைப்புடன் நவீனப்படுத்தி, அவற்றின் கொள்ளளவுத் திறனை மேம்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.



42—

### கண்மாய் தூர் வாரும் பணி

**வினா எண் 24074—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கச்சைகட்டி கிராமத்தில் கருப்பணமணியக்காரன் கண்மாயைத் தூர் வார அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கருப்பணமணியக்காரன் கண்மாய் கடந்த 2001 ஆம் ஆண்டு ரூ.0.72 இலட்சத்திற்குத் தூர் வாரப்பட்டு, சிறப்பு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

43—

### பாலத்தைச் சீர் செய்தல்

**வினா எண் 24086—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதி, அலங்காநல்லூர் ஒன்றியம், கோடாங்கிபட்டி கிராமத்தில் உள்ள பாலத்தைச் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இப்பாலம் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

44—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 24709—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம். திருச்சுழி வட்டத்தில் மட்டும் கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் 145 நபர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

45—

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 26620—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொகுதி வாரியாக ஏழை விவசாயக் கூலிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு முழுவதிலும் வருவாய் நிலை ஆணை எண் 21-ன்படி எல்லா ஏழை வீடற்றவர்களுக்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கும் இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்களை அரசு வழங்கி வருகிறது. அதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் வீடற்ற ஏழை, எளியவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க ஓர் இலக்கு நிர்ணயம்



2005 ஏப்ரல் 13]

செய்கிறது. தொகுதி வாரியாக ஏழை விவசாயக் கூலிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தனிச் சிறப்புத் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அவர்கள் குடியிருக்க வீடு இல்லையெனில், அவர்களுக்கு வீட்டுமனை ஒப்படை கோரி சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகலாம்.

46—

## பாலம் கட்டுதல்

**வினா எண் 27473—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எஸ். கண்ணனூர் (சமயபுரம்) பேரூராட்சியில் பக்தர்களின் நலன் கருதி பெருவளை வாய்க்காலில் பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி நிலைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

47—

## பாசனக் குளம்

**வினா எண் 27571—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதியில் நம்பியாபுரத்தில் பாசனக் குளம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* விளாத்திக்குளம் தொகுதி, நம்பியாபுரத்தில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் ஏற்கெனவே ஒரு கண்மாய் பாசனத்திற்குப் பயன்பட்டு வருவதால், புதிதாக கண்மாய் அமைக்க வாய்ப்பு ஏதுமில்லை.

*(ஆ)* எழவில்லை.

**48—**

**கால்வாய் மராமத்து பணி**

**வினா எண் 27575—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விளாத்திக்குளம், பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான குளத்தின் மறுகால் கால்வாயை மராமத்து செய்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இத்திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படவுள்ள நீர்வள ஆதார அமைப்பு ஒருங்கிணைப்புத் திட்டம்-2-ல் தேர்வு செய்யப்பட்டுள்ளது. உலக வங்கியின் நிதி உதவி கிடைக்குமாயின் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

**49—**

**கண்மாய் அமைத்தல்**

**வினா எண் 27837—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

*(அ)* கோவில்பட்டி தொகுதி, துறையூரில் ஓடையை மறித்து பாசனக் கண்மாய் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நபார்டு வங்கி நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.29.41 இலட்சத்தில் கோவில்பட்டி தொகுதி, துறையூர் கிராமம் அருகே புதிய கண்மாய் (குளம்) அமைப்பதற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**50—**

**கண்மாய் பழுதுபார்க்கும் பணி**

**வினா எண் 27843—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* செமப்புதூர் பாசனக் கண்மாய் பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* அத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

*(இ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)*, *(ஆ)* மற்றும் *(இ)* செமப்புதூர் கண்மாய் ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது.

**51—**

**கண்மாய் பழுதுபார்க்கும் திட்டம்**

**வினா எண் 27844—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிளவிப்பட்டி பாசனக் கண்மாய் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி நிதியின்கீழ் கிளவிப்பட்டி கண்மாயில் மண்மேடுகள் அகற்றப்பட்டு, கரை முழுவதும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

**52—**

**கண்மாய் தூர்வாரும் பணி**

**வினா எண் 27894—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, தீத்தாம்பட்டி பாசனக் கண்மாய் தூர்வாரி மராமத்து செய்யப்படும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, தீத்தாம்பட்டி பாசனக் கண்மாய் தூர்வாரி மராமத்து செய்யும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

**வாய்க்கால் தூர்வாரும் பணி**

**வினா எண் 27936—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சீர்காழி தொகுதி, வடக்கு நிம்மேள கிராமத்தில் உள்ள லெட்சுமி வாய்க்காலைத் தூர் வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**54—**

**படித்துறை அமைத்தல்**

**வினா எண் 28229—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், இனாம் சமயபுரம் அய்யாளம்மன் கோவில் அருகில் பெருவளை வாய்க்கால் குறுக்கே அமைந்துள்ள பாலத்தை மராமத்து செய்து, பாலத்தின் இரு புறமும் படித்துறை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைக்கு ஏற்ப செயல்படுத்தப்படும்.

**55—**

**ஏரியை ஆழப்படுத்துதல்**

**வினா எண் 28230—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், திருக்கலையூரில் பாசன ஏரியை மேலும் ஆழப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், திருக்கலையூரில் பெரிய ஏரியைத் தரப்படுத்தி மேம்படுத்தும் பணி ரூ.12.00 இலட்சம் செலவினத்திலும், சின்ன ஏரி தூர் வாரும் பணி ரூ.2.53 இலட்சம் செலவினத்திலும் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**56—**

## புறவழிச் சாலை

**வினா எண் 28251—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதால், சீர்காழி நகரில் புறவழிச் சாலை (Bye Pass Road) அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சீர்காழி நகருக்கு புறவழிச் சாலை அமைக்கும் பணியானது உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. பணிகள் 2006 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளன.



**57—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 29100—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள நல்லகாத்து எஸ்டேட் அருகே சிறிய பாலம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**58—**

## வாய்க்காலை செப்பனிடுதல்

**வினா எண் 29802—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில் உள்ள குண்டாறு வாய்க்காலைத் தூர் எடுத்துச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதிநிலைக்கு ஏற்ப தூர் வாரப்படும்.

[2005 ஏப்ரல் 13

**59—**

## தடுப்பணை

**வினா எண் 29935—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் சில்நாயக்கன்பட்டி ஊத்து மலையில் தடுப்பணை கட்ட அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**60—**

## ஆதரவற்ற விதவைச் சான்றிதழ்

**வினா எண் 31582—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தையும் கணவனும் இறந்த பின்பு, ஆதரவற்ற நிலையில் உள்ள பெண்களுக்கு ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் தர அரசு காலதாமதம் செய்வது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடன் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற விதவைச் சான்று கோரும் இனங்களில், உரிய விசாரணை மேற்கொண்டு, மக்கள் சாசனத்தில்



2005 ஏப்ரல் 13]

குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் எந்தவிதப் புகாருக்கும் இடமின்றி சரியான நேர்வுகளில் ஆதரவற்ற விதவைச் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பாக உரிய அறிவுரைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

**61—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 31693—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள நொச்சிக்குப்பம் பகுதியில் பல ஆயிரக்கணக்கான மீனவ மக்கள் குடிசைகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இப்பகுதி ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

**62—**

## கிழக்குக் கடற்கரைச் சாலை பணி

**வினா எண் 32704—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிழக்குக் கடற்கரைச் சாலை (East Coast Road) இரண்டாம் கட்டப் பணிகளை இவ்வாண்டு எடுத்துச் செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*ஆம். கிழக்குக் கடற்கரைச் சாலை (இரண்டாம் கட்டப் பணிகள்) நாகப்பட்டினத்திலிருந்து தூத்துக்குடி வரை இருவழிச் சாலையாக அமைப்பதற்கான செயற்குறிப்பு, மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு மேல் நடவடிக்கையில் உள்ளது. பணிகள் 2004–2005 ஆம் ஆண்டு தொடங்கப்படவுள்ளன.*

**63—**

**கரையைச் சீரமைத்தல்**

**வினா எண் 32912—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு கிராமத்தில் நஞ்சை விளைநிலம் அருகிலுள்ள கடற்கரை உடைந்துள்ளதால், கரையைச் சீர்ப்படுத்தி உயர்த்தித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) திட்டம் ஏதுமில்லை.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**64—**

**பாசன வசதி**

**வினா எண் 33663—திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





*ஈரோடு மாவட்டம், கீழ்பவானி ஒற்றைப்படை மதகு பாசனப் பகுதிக்கு அணையில் இருந்து நீர் உடனடியாகத் திறந்துவிட அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*கீழ்பவானி வாய்க்காலில் 15-12-2002 முதல் 29-12-2002 வரை 14 நாட்களுக்கும், இரண்டாம் முறையாக 1-2-2003 முதல் 9-2-2003 முடிய 8 நாட்களுக்கும், மூன்றாம் முறையாக 6-3-2003 முதல் 20-3-2003 முடிய 14 நாட்களுக்கும் தண்ணீர் ஒற்றைப்படை மதகுப் பாசனப் பகுதிக்குத் திறந்து விடப்பட்டது.*

**65—**

**பாசன வசதி**

**வினா எண் 33672—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை, சோலையார் டேமிலிருந்து நேரடியாக திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் கொண்டுவர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சோலையார் டேமிலிருந்து நேரடியாக திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் கொண்டுவர அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.*

**66—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 34138—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஜெயங்கொண்டம் – செந்துறை – அரியலூர் இணைப்புச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) ஜெயங்கொண்டம் – செந்துறை – அரியலூர் இணைப்புச் சாலையினைச் செப்பனிடும் பணியானது உலக வங்கி நிதியுதவி பெறும் தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பணி 2006–ல் தொடங்கப்பட உள்ளது.*

**67—**

**குடியிருப்பு பட்டா**

**வினா எண் 34370—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் ஊராட்சி, நெப்பத்தூர் அம்பலகாரர் குடிசைவாழ் மக்களுக்குக் குடியிருப்புப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) குடிசைவாழ் மக்கள் குடியிருக்கும் நிலம் தனியார் பட்டா நிலமாகையால், அந்நிலத்தில் பட்டா வழங்க இயலாது.*



**68—**

**சாலையை அகலப்படுத்துதல்**

**வினா எண் 34485—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆரணி–ஆற்காடு சாலையை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.*

**69—**

**அணைக் கட்டுதல்**

**வினா எண் 35545—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி, ஆளப்பிறந்தான் அருகே வெள்ளாற்றில் அணைக்கட்டு கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*அறந்தாங்கி தொகுதி, ஆளப்பிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி பஞ்சாத்தி மற்றும் இதர கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்திட நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால், 23 கண்மாய்கள்மூலம் 1747.62 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றது.*

[2005 ஏப்ரல் 13

70—

### தூர்வாரும் பணி

**வினா எண் 35555—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பிசானத்தூர் கிராமம், பிசானத்தூர் பெரிய ஏரியை, குளங்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பிசானத்தூர் கிராமம், பிசானத்தூர் பெரிய ஏரி ரூ.2,31,834/- மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது.

71—

### பாசன வசதி

**வினா எண் 35774—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதியில் உள்ள ராஜா வாய்க்கால் கடைமடைப் பகுதிக்கு உடனடியாகத் தண்ணீர் விடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதியில் உள்ள ராஜா வாய்க்காலின் கடைமடைப் பகுதியின் பாசனத்திற்கு மேட்டூர் அணையின் நீர் இருப்பைப் பொறுத்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

72—

### கணினிமயமாக்குதல்

**வினா எண் 35966—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோயிலூர் நகரில் இயங்கி வருகின்ற வட்டாட்சியர் அலுவலகத்தைக் கணினிமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் நிதி உதவித் திட்டமான நிலப் பதிவுருக்களைக் கணினிமயமாக்கும் திட்டம் தமிழகத்தில் "தமிழ் நிலம்" என்று பெயரிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. அத்திட்டத்தின்கீழ், விழுப்புரம் மாவட்டம், திருக்கோயிலூர் வட்ட அலுவலகம் கணினிமயமாக்கப்பட்டு, நிலப் பதிவுருக்களான 'அ' பதிவேடு மற்றும் சிட்டா நகல்கள் 29-9-2003 முதல் மின்னணுவியல் தகவல் தொடர்புமூலம் கணினி நகல்களாக வழங்கப்பட்டு வருகின்றன.

73—

### புறவழிச் சாலை பணிகள்

**வினா எண் 35982—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராணிப்பேட்டை-தூத்துக்குடி வரை உலக வங்கி நிதியுதவிடன் அமைக்கப்பட உள்ள புறவழிச் சாலைப் பணிகளை விரைவில் செய்து முடித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இராணிப்பேட்டை—தூத்துக்குடி வரை உலக வங்கி நிதியுதவியுடன் சாலை அமைக்க முதல் கட்டப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் கோரப்பட்டு ஆய்வுகள் முடிக்கப்பட்டுள்ளன. உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றபின், 2004–2005–ல் பணி தொடங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டத்தில் உள்ள சாலைகளுக்கு ஆலோசகர்மூலம் வடிவமைப்பு தயாரிக்கப்படவுள்ளது.

**74—**

## சாலைகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 35983—திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உள்ள சாலைகளைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் விடுதி வளாகத்தில் உள்ள சாலைகள் அனைத்தும் செப்பனிடப்பட்டு சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**75—**

## கிராம அலுவலர் குடியிருப்பு

**வினா எண் 38717—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) கிராம அலுவலர்கள் அவர்கள் பணிபுரியும் கிராமங்களிலேயே கண்டிப்பாகக் குடியிருக்க அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராம நிர்வாக அலுவலராகப் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் அப்பணியில் இருக்கும்வரை சம்பந்தப்பட்ட பொறுப்பு கிராமங்களிலேயே குடியிருந்து பணியாற்ற வேண்டும் என கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பணி விதிகளிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**76—**

## இருவழிச் சாலை

**வினா எண் 38891—திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர்—அழகர்கோவில் மற்றும் மேலூர்—திருப்புவனம் செல்லும் குறுகிய ஒருவழிச் சாலைகளை இருவழிச் சாலைகளாக விரிவுபடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**77—**

## ஏரியை மேம்படுத்துதல்

**வினா எண் 39414—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சிங்காநல்லூர் தொகுதி, சின்னவேடம்பட்டி ஏரியை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**78—**

**சங்கனூர் பள்ளம்**

**வினா எண் 39416—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாநகரம், சங்கனூர் பள்ளத்தைத் தூர் எடுத்து, ஆழப்படுத்தி கரைகளில் கான்கிரீட் தளம் அமைத்து பலப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**79—**

**தூர்வாரும் பணி**

**வினா எண் 39438—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



முசிறி தொகுதி, சேந்தமாங்குடியிலிருந்து பிரிந்து அய்யாற்றில் சேரக்கூடிய கொடுந்துறை வாய்க்காலில் ஏவூர் முதல் கருப்பம்பட்டி வரை தூர்வார அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சேந்தமாங்குடியிலிருந்து பிரிந்து அய்யாற்றில் சேரக்கூடிய கொடுந்துறை வாய்க்காலில் ஏவூர் முதல் கருப்பம்பட்டி வரை உள்ள வாய்க்காலை முதலமைச்சர் அவர்களால் விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பயனடையும் விதத்தில் அறிவிக்கப்பட்ட வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ரூ.92,000/– மதிப்பீட்டில் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது.

**80—**

**பாசன வசதியை மேம்படுத்துதல்**

**வினா எண் 39487—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் உள்ள மலைப் பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரசின் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்பட உள்ளது.

**81—**

**வாய்க்காலைச் சீர்படுத்துதல்**

**வினா எண் 39629—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகராஜபுரம் ஊராட்சியிலுள்ள புதுமணியாற்றின் உட்பகுதி தில்லான் வாய்க்காலைச் சீர்படுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இவ்வாய்க்கால் 1998–99 ஆம் ஆண்டில் தூர்வாரப்பட்டுள்ளது. எனவே, தற்போது தூர்வாரும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**82—**

### வாய்க்காலைத் தூர்வாருதல்

**வினா எண் 39650—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, 23 ஆலங்காடு ஊராட்சி, "சி" பிரிவு 5 கி.மீ. செங்கழநீர் பாலி (காங்கேயன் வாய்க்கால்) கோடங்குடி சத்திரம், குடமுருட்டி பன்னக்காரன் கோட்டம் இளந்தோப்பு வரை செல்லும் வாய்க்காலைத் தூர் எடுத்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, 23 ஆலங்காடு ஊராட்சி, செங்கழநீர் பாலி (காங்கேயன் வாய்க்கால்) கோடங்குடி சத்திரம், குடமுருட்டி பன்னக்காரன் கோட்டம் இளந்தோப்பு வரை செல்லும் "சி" பிரிவு வாய்க்கால் தூர் எடுக்கும் பணிகள் 2003–2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. எனவே, தற்போது இவ்வாய்க்காலில் தூர் எடுக்க வேண்டியதில்லை.



**83—**

### புதிய கட்டடம்

**வினா எண் 39794—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டாட்சியர் அலுவலகம் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில் இயங்கி வருவதால், புதிய கட்டடம் கட்டும் திட்டம் எதுவும் அரசிடம் இல்லை.

**84—**

### ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 40349—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் வீராணம் வாய்க்கால் நீர்வழிப் பாதையில் ஆக்கிரமிப்பை அகற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, லஷ்மிநாராயணபுரம் கிராமத்தில் வீராணம் நீர்வழிப் பாதையில் உள்ள ஆக்கிரமிப்புகள் 18–9–2003 மற்றும் 19–9–2003 ஆகிய தேதிகளில் அகற்றப்பட்டுவிட்டன.

[2005 ஏப்ரல் 13

**85—**

**தூர்வாரும் பணி**

**வினா எண் 41724—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில் ஆனை மடுவு அணையில் தூர்வாரிச் சீர்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**86—**

**அணையைச் சீர்படுத்துதல்**

**வினா எண் 41725—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில் உள்ள கரியக்கோயில் அணையில் தூர் வாரிச் சீர்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழவில்லை.



2005 ஏப்ரல் 13]

**87—**

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 42188—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை தொகுதி, திருமணிமுத்தாறு ஆற்றைக் கடக்க நடுமேடு–பில்லூர் இடையே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, திருமணிமுத்தாறு ஆற்றைக் கடக்க நடுமேடு–பில்லூர் இடையே பாலம் அமைக்கும் திட்டம் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**88—**

**பாலம் கட்டுதல்**

**வினா எண் 42190—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை, நசப்பாளையம் இராஜா வாய்க்காலில் பாலம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ)* கபிலர்மலை, நசப்பாளையம் இராஜா வாய்க்காலில் பாலம் அமைப்பதற்கான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

89—

### தூர்வாரும் பணி

**வினா எண் 42530—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, பூதகுடி கிராமத்தில் உள்ள கண்மாய் தூர்வாரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முன்னுரிமை அடிப்படையில் வரும் நிதியாண்டில் இப்பணி மேற்கொள்ளப்படும்.

90—

### பாசன வசதி

**வினா எண் 42885—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் நகர், பள்ளி வழங்கால் வாய்க்கால் அருகிலுள்ள விவசாயப் பூமிக்குத் தொடர்ந்து தண்ணீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அணைகளில் உள்ள நீரிருப்பினைப் பொறுத்து, பள்ளி வழங்கால் பாசனத்திற்குட்பட்ட ஆயக்கட்டு பூமிகளுக்கு தண்ணீர் வழங்கப்பட்டது.



91—

### தங்கும் விடுதி

**வினா எண் 43129—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் Dam தங்கும் விடுதியில் அறைகள் குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) கூடுதல் அறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் Dam தங்கும் விடுதியில் உள்ள 3 அறைகள் போதுமானதாக உள்ளன. எனவே, மேற்கொண்டு அறைகள் கட்ட நடவடிக்கை தேவையில்லை.

92—

### வண்டல் மண்

**வினா எண் 43488—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, அமராவதி அணையின்மூலம் ஏராளமான ஏக்கரில் கரும்பு, நெல் சாகுபடி செய்கின்றனர். அணையில் தேங்கும் வண்டல் மண்ணை விவசாயிகளின் நிலங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

[2005 ஏப்ரல் 13

93—

## மண் அரிப்பு

**வினா எண் 43489—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, அமராவதி அணை, சங்கராம நல்லூர் நீர்ப்பிடிப்புப் பகுதியில் தடுப்பணை கட்டி, மண் அரிப்பைத் தடுக்க அரசு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

94—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 43495—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் சுற்றுலா வளாகத்தில் உள்ள அண்ணா விருந்தினர் மாளிகையைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.



2005 ஏப்ரல் 13]

(ஆ) தற்போதுள்ள நிதி நெருக்கடியால், தற்போது பணிகளை மேற்கொள்ள இயலாது. ஆயினும், அரசின் நிதிநிலை முன்னேற்றத்திற்குப் பின்னர் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

95—

## பட்டா வழங்குதல்

**வினா எண் 43556—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம், அம்பேத்கர் நகர், இராஜீவ் காந்தி நகர், பொன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதி மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் நகரம், அம்பேத்கர் நகர், இராஜீவ் காந்தி நகர், பொன்னியம்மன் கோயில் தெரு ஆகிய பகுதிகள் ஏரிப் புறம்போக்கு என வகைபாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்புறம்போக்கு நிலங்களில் வசிக்கும் மக்களுக்குப் பட்டா வழங்க சாத்தியமில்லை.

96—

## தூர்வாரும் பணி

**வினா எண் 45626—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சியில் கோடங்குடி வாய்க்கால், தத்தங்குடி வாய்க்கால் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சியில், கோடங்குடி வாய்க்கால், தத்தங்குடி வாய்க்கால், பிசிடி வாய்க்கால்கள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் தூர்வாரும் பணி 2003-2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுவிட்டது.*

**97—**

## வாய்க்காலைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 46209—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதி, கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியிலுள்ள இடையாத்திமங்களம் ஏரியின் வரத்து வாய்க்காலைப் பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*கல்லணைக் கால்வாய் பாசனப் பகுதியில் உள்ள இடையாத்திமங்களம் ஏரியின் வரத்து வாய்க்கால் தூர்வாரி பழுதுபார்க்கப்பட்டுவிட்டது.*

**98—**

## தடுப்பு அணை

**வினா எண் 46220—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சி, காங்கேயம் வாய்க்காலின் குறுக்கே தடுப்பணை கட்டித் தர அரசு முன்வருமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வடகால் ஊராட்சி, காங்கேயம் வாய்க்காலில் தற்போது பாசனம் தடையின்றி நடைபெற்று வருகிறது. எனவே, இவ்வாய்க்காலின் குறுக்கே தடுப்பணை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.*

**99—**

## வாய்க்கால் சீரமைத்தல்

**வினா எண் 46227—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சேந்தங்குடி ஊராட்சியிலுள்ள "ஏ" சானல் பொறை வாய்க்கால் தூர்வாரிச் சீரமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி, சேத்தங்குடி ஊராட்சியிலுள்ள "ஏ" சானல் பொறை வாய்க்கால் தூர்வாரும் பணியை ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறின் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.*

**100—**

## அணை உடைப்பைச் சீரமைத்தல்

**வினா எண் 48595—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

பட்டுக்கோட்டை அருகே நசவினி ஆற்று அணை உடைப்பைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

ஆம்.

**101—**

## நீர்த்தேக்கம்

**வினா எண் 48691—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், டி. பெருமாபாளையம் ஊராட்சியில் உள்ள திருமணிமுத்தாறில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**102—**

## தூர்வாரும் பணி

**வினா எண் 48770—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, பேரூரில் ஏரி தூர் எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதியில் உள்ள பேரூர் ஏரி ரூ.14.5 இலட்சம் செலவில் தூர் வாரி புனரமைக்கப்பட்டுள்ளது.

**103—**

## அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 48981—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் புதிதாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் வருங்காலத்தில் நிதிநிலையைப் பொறுத்து கட்டப்படும். நிதிநிலை சம்பந்தப்பட்ட நேர்வுகளில் கால அளவினை அறுதியிட்டுக் கூற இயலாது.

**104—**

## சிறைச் சாலை

**வினா எண் 49015—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள கிளைச் சிறைச்சாலையை மாவட்ட சிறைச்சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி கிளைச் சிறையினை மாவட்ட சிறையாக உயர்த்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**105—**

**பயிற்சிப் பள்ளி**

**வினா எண் 49711—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் தலைநகரில் சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தலைநகரில் தற்போது கிளைச் சிறை இயங்கி வருகிறது. நாகப்பட்டினத்தில் காவலர் பயிற்சிப் பள்ளி அமைக்க போதிய வசதிகள் இல்லை. வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் முழுமையான வசதிகள் இருப்பதால் காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது நாகப்பட்டினம் தலைநகரில் சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி அமைத்தல் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**106—**

**நீர்க் கசிவைச் சரிசெய்தல்**

**வினா எண் 50277—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) வால்பாறை தொகுதியில் உள்ள ஆழியார் நகர் வாய்க்காலில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள நீர்க் கசிவை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வால்பாறை தொகுதியிலுள்ள ஆழியார் நகர் வாய்க்காலில் ஆங்காங்கே ஏற்பட்ட கசிவுகளைச் சரி செய்யும் பணி இரண்டாம் கட்ட நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உலக வங்கி நிதியுதவி பெற்றபின் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**107—**

**மடை பாசனம்**

**வினா எண் 50845—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை Parambikulam Aliyar Project பாசனத்தில் ஒரு மடை விட்டு ஒரு மடை பாசனம் 1,000 ஏக்கர் (ஒரு சுழற்சி) முடிவடைந்துவிட்டதால், 500 ஏக்கருக்கான மடைப் பாசனம் இந்த ஆண்டு கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**108—**

**வட்ட அலுவலகம்**

**வினா எண் 51221—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் வருவாய் அலுவலகத்தை இரண்டாகப் பிரித்து முத்துப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு வட்ட அலுவலகம் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

இல்லை.

**109—**

## சார்நிலைக் கருவூலம்

**வினா எண் 12444—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை வட்டங்களில் சார்நிலைக் கருவூலம் இல்லை என்று அரசு கணக்கிட்டுள்ளது?

(ஆ) வரும் நிதியாண்டில் அங்கு சார்நிலைக் கருவூலம் ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

விவர அறிக்கை தனியே வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 203 சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் வட்டத் தலைமையிடமாக இல்லாத 20 இடங்களில், சார்நிலைக் கருவூலங்கள் செயல்பட்டு வருகின்றன. வட்டத் தலைமையிடங்களாக இருந்தபோதிலும், சார்நிலைக் கருவூலம் இல்லாமல் இருக்கும் இடங்களின் எண்ணிக்கை 23 ஆகும். ஒவ்வொரு இடத்திலும் ஒரு சார்நிலைக் கருவூலம், அதற்கு ஏற்ற வேலைப்பளு மற்றும் பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் எண்ணிக்கை, ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தீர்மானிக்கப்பட வேண்டும். இதனடிப்படையில், 23 இடங்கள் வட்டத் தலைமையிடமாக இருந்தபோதிலும், சார்நிலைக் கருவூலம் அமைக்கப்படாமல் இருந்து வருகிறது. சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டத் தலைமையிடத்தில் தற்போது இயங்கி வரும் சார்நிலைக் கருவூலங்களைப் பிரித்து, புதியதாக சார்நிலைக் கருவூலங்கள் அமைக்கும்போது, பழைய சார்நிலைக் கருவூலங்களில் வேலைப்பளு குறைவதோடு, புதிய சார்நிலைக் கருவூலங்களில் போதுமான வேலைப்பளு இருக்காது. அரசுத் துறைகளில் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க தடையாணை உள்ளதாலும், வங்கிசாரா சார்நிலைக் கருவூலங்கள் வங்கி சார்ந்த சார்நிலைக் கருவூலங்களாக மாற்றப்பட்டுள்ளதாலும், அனைத்து சார்நிலைக் கருவூலங்களில் கணினி மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாலும், சார்நிலைக் கருவூலங்களை அமைப்பதற்கு அதிகமான தொடர்ச் செலவினம் தேவைப்படுவதாலும், தற்போதைய நிதிப் பற்றாக்குறையையும் கருத்தில்கொண்டு மேற்கண்ட 23 வட்டத் தலைமையிடங்களில் தற்போது சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.



2005 ஏப்ரல் 13]

(ஆ) இக்கேள்விக்கு விடை அளிக்கும் அவசியம் எழவில்லை.

**110—**

## வாக்காளர் பட்டியல்

**வினா எண் 50079—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கணினி மூலம் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் குளறுபடிகள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், திருத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம்.

**111—**

## உரிமம் வழங்குதல்

**வினா எண் 22540—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

இண்டர்நெட் ப்ரௌஸிங் சென்டர்களைக் கண்காணித்து உரிமம் வழங்கும் முறையை அமல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

இல்லை.

**112—**

### மென்பொருள் நகரம்

**வினா எண் 30630—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள மென்பொருள் நகரத்தின் செயல்பாடுகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

டைடல் பார்க் லிமிடெட் – நவீன தொழில்நுட்பத் திறன் மேம்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா, மென்பொருள் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்குத் தேவையான வசதிகளை அளிக்கும் ஒரு நிறுவனமாகும். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ), தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் (எல்காட்) ஆகிய நிறுவனங்களால் பல வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் உதவியுடன் கூட்டாக உருவாக்கப்பட்டுள்ளது. பன்னாட்டு மென்பொருள் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தம் பணிகளைத் தொடங்குவதற்காக ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் ஒருங்கிணைந்து செய்து தருவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். விரைந்து செயல்படுத்தும் அடிப்படையில் தொழில்நுட்ப வணிகவியலில் வெற்றி பெறுவதற்காக இத்திட்டம் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது.

ஹைதராபாத், பெங்களூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள இதேபோன்ற திட்டங்கள், மாநகரை விட்டு விலகி தொலைதூரத்தில்



2005 ஏப்ரல் 13]

உள்ளன. அவற்றைப்போல் அல்லாமல், டைடல் பூங்கா அமைந்துள்ள இடமான தரமணி, விற்பனைக்கு வலுவான அம்சங்களில் ஒன்றாக மாநகருக்குள் அமைந்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் அரசால் வழங்கப்பட்ட 2.5 ஏக்கர் பரப்பளவிலுள்ள துணை மின் நிலையங்களிலிருந்து 33 கே.வி. மின் அனுப்புகை கம்பித் தொடர் 2-ஐ டைடல் பூங்காவிற்கு தங்குதடையற்ற மின்சக்தியை வழங்குகிறது.

நவீன தொழில்நுட்பத் திறன் மேம்பட்ட தகவல் வசதிகளைக் கருத்தில் கொண்டு வி.எஸ்.என்.எல்., எஸ்.டி.பி.ஐ., பி.எஸ்.என்.எல்., (V.S.N.L., S.T.P.I., B.S.N.L.,) ஆகியவை தங்கள் செலவில் டைடல் பூங்காவில் தகவல் தொடர்பு வசதிகளைச் செய்து கொடுத்துள்ளன. STPI, டைடல் பூங்காவிற்கு அருகே தரைத்தகவல் நிலையத்தை அமைத்துள்ளது. பி.எஸ்.என்.எல்., நவீன தொழிழ்நுட்பத்திறன் மேம்பட்ட தொலைபேசி இணைப்பகத்தை டைடல் பூங்காவில் அமைத்துள்ளது. டைடல் பூங்காவில் ஒவ்வொரு தளத்திலும் உள்ள அலுவலக அறைகள்வரை, டைடல் பூங்காவில் உள்ள அனைத்துத் தகவல் தொடர்பு வசதிகள் ‘ஆப்டிக் பைபர் கேபிள்’களால் அமைந்ததாகும். மேற்கூறிய தகவல் தொடர்பு வசதிகள் அல்லாமல் பார்தி, ரிலையன்ஸ், டாடா டெலிசர்வீசஸ், பவர்கிரிட் கார்ப்பரேஷன் போன்ற தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் தங்களின் நவீன தகவல் தொடர்பு வசதிகளை இப்பூங்காவில் அமைத்துள்ளன.

மேலும், டைடல் நவீன தொழில்நுட்ப மேம்பட்ட குளிர்வசதி மற்றும் ‘தெர்மல் எனர்ஜி ஸ்டோரேஜ்’ வசதிகளை அமைத்து, அதன் செயல்பாட்டின் வாயிலாக குளிர்சாதனங்கள் இயக்கத்தின் செலவுகளைக் குறைத்துள்ளது. டைடல் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள ‘தெர்மல் எனர்ஜி ஸ்டோரேஜ் சிஸ்டம்’ உலகின் மூன்றாவது மிகப்பெரிய குளிர்சாதன வசதியமைப்பாகும்.

இப்பூங்காவின் செயல்பாடுகளும், பராமரிப்புகளும் டைடல் நிர்வாகத்தினால் வெளி ஒப்பந்ததாரர்களின் நியமனத்தின் வாயிலாக மிகச்சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன. அலுவலகப் பராமரிப்பு வசதியமைப்புகள், குளிர் வசதி மற்றும் இயந்திரக் காற்றோட்ட வசதிகள், மின் வசதிகள், நவீன கட்டடப் பராமரிப்பு வசதிகள், மின் தூக்கிகள், டீசல் ஜெனரேட்டர் வசதிகள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

டைடல் பூங்காவில் இடவசதியும், அதன் தொடர்புடைய அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் ஒருங்கிணைந்து மென்பொருள் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

[2005 ஏப்ரல் 13

இப்போது இங்குள்ள இடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டுவிட்டன. இவற்றில் 70 விழுக்காடு பன்னாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் மற்றும் 30 விழுக்காடு உள்நாட்டுத் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில் அமைந்துள்ள பல்வேறு நிறுவனங்களில் 12,000 நபர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். பன்னாட்டுத் தரத்திற்கு இணையாக இப்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து அடிப்படை வசதிகளால் டைடல் பூங்கா உலகளவிலான பெயரை ஈட்டியுள்ளது.

**113—**

## தகவல் தொழில்நுட்பப் பூங்கா

**வினா எண் 39012—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டைடல் பூங்காவிற்கு அருகில் இரண்டாவது தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

சென்னை, தரமணியில் டைடல் பூங்காவிற்கு அருகில் இரண்டாவது டைடல் பூங்கா அமைக்க, முதற்கட்டமாக சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பளவில் 6,00,000 சதுர அடியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**114—**

## தகவல் தொழில்நுட்ப மையம்

**வினா எண் 39013—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பெருநகரப்பகுதியை தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய முதல் அடுக்கு மையமாகவும், கோவை, மதுரை, திருச்சி போன்ற மாநகரங்களை இதற்குத் தக்க பக்கபலமாக இரண்டாம் அடுக்கு மையங்களாகவும் உருவாக்க, அரசு எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் யாவை?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### விவர அறிக்கை

சென்னைப் பெருநகரப் பகுதியை தகவல் தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய முதல் அடுக்கு மையமாகவும், கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, சேலம் போன்ற மாநகரங்களை இதற்குத் தக்க பக்கபலமாக இரண்டாம் அடுக்கு மையமாகவும் உருவாக்க அரசு எடுத்துவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் பின்வருமாறு:

உலக வங்கி, ஏபிஎன் ஆம்ரோ, ஸ்டாண்டர்டு சார்ட்டர்டு வங்கி, சிட்டி வங்கி ஆகியனவும் மற்றும் பிற உலக வங்கிகளும், நிதிநிறுவனங்களும் சென்னையில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டதுடன், சென்னையிலிருந்து ஆற்றும் செயல்பாடுகளைப் படிப்படியாகக் கூட்டி வருகின்றன. தங்களின் விரிவாக்கத் திட்டங்களுக்காக, நாட்டிலேயே தலையாய மூன்று தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களான டி.சி.எஸ்., இன்போசிஸ் மற்றும் விப்ரோ ஆகியவை சென்னையிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் அதிக அளவிலான ஏக்கர் நிலங்களை வளாகங்களாக எடுத்துள்ளனர். இது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தால் சாத்தியப்பட்ட பகுதிகளில் கூடுதலாக 25,000 வேலைவாய்ப்புகளை உருவாக்க வாய்ப்புள்ளது.

இந்தியாவின் முதல் தகவல் தொழில்நுட்பப் பூங்காவான எல்நெட் மென்பொருள் நகரம் (Elnet Software City) 1995 ஆம் ஆண்டு சென்னை தரமணியில் தொடங்கப்பட்டது. இப்பூங்கா 1,40,000 சதுர அடி பரப்பளவில் இரு பகுதிகளாக அமைந்துள்ளன. டைடல் பார்க் நிறுவனம் என்ற தகவல் தொழில்நுட்பப் பூங்காவை, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் (Tamil Nadu Industrial Development Corporation Ltd.) தமிழ்நாடு மின்னணு நிறுவனமும் (Electronics Corporation of Tamil Nadu Ltd.) இணைந்து வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள் உதவியுடன் சென்னையில் நிறுவியது. இதனுடைய நோக்கம் ஒருங்கிணைந்த பல வசதிகளை ஒரே கூரையின்கீழ் அமைத்து, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீட்டை இங்கே கொண்டு வருவதாகும்.

சோழிங்கநல்லூரில் அறிவுசார் நகரிய முதற்கட்டப் பணி எல்காட் நிறுவனத்தால் தொடங்கப்பட்டுள்ளது. இந்த அறிவுசார் நகரியம், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பன்னாட்டு வணிகப் பள்ளி, வீட்டுவசதி மற்றும் பொழுதுபோக்கு போன்றவற்றிற்கு இடவசதிகளை அளிக்கும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், அசென்டாஸ், சிங்கப்பூர் என்ற நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் 45 ஏக்கர் நிலப் பரப்பளவில், சென்னை, தரமணியில் இரண்டாவது டைடல் பார்க் நிறுவனம் தொடங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக சுமார் 5 ஏக்கர் நிலப் பரப்பளவில் 6,00,000 சதுர அடியில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா தொடங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

நமது மாநிலத்தில் 44,000 கி.மீ. தொலைவுக்குண்டான கண்ணாடி இழை வழித் தடங்கள் (Optic Fibre Cable) பதிக்கப்பட்டுள்ளன. மேலும், சிங்கப்பூருக்கு இந்தியாவிலிருந்து பன்னாட்டுக்கு உண்டான i-2-i இணைப்பை 8.4 டெராபிட் / ஒரு வினாடிக்கு என்ற வேகத்தில் பெற்றுள்ளது. மேலும், தற்போது வி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு அரசு 5.12 டெராபிட் / ஒரு வினாடிக்கு என்ற இணைப்பைப் பெற ஒப்புதல் அளித்துள்ளது. இது 2005 ஆம் ஆண்டில் முடிவடையும்.

இரண்டாம் நிலை நகரங்களை முன்னேற்றுவிக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில், 29.8 ஏக்கர் நிலம் எல்காட் நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனம் கோயம்புத்தூர் தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் பணி தொடங்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பப் பகுதியில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும் பொருட்டு கோயம்புத்தூரிலுள்ள பாரதியார் பல்கலைக்கழகத்தில், பாரதியார் பல்கலைக்கழக எல்காட் நகரம் (BU-ELCOT City) பணி தொடங்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப வளாகங்களுக்காக தமிழ்நாட்டில் மூன்றாம் நிலை நகரமான ஓசூரின் உள்ளாற்றலை (Potential) மதிப்பீடு செய்ய ஒரு ஆராய்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**115—**

## ஊரகச் சேவை திட்டம்

**வினா எண் 51137—திரு. கா.தி. இளையகன்னு:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஏற்காடு தொகுதியில் இணையம் வழி ஊரகச் சேவை (Rural Access to Services through Internet—RASI) திட்டம் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதியில் இணையம் வழி ஊரகச் சேவை திட்டம் 12-10-2004 முதல் செயற்படுத்தப்பட்டுள்ளது.

**116—**

## உணவு தானியம்

**வினா எண் 418—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு தமிழகத்துக்கு வழங்க வேண்டிய உணவு தானியத்தை வழங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு டன் உணவு தானியத்தை மத்திய அரசு வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசால் மாதம் ஒன்றுக்கு, வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள குடும்பங்களுக்கு 1,45,196 மெட்ரிக் டன் அரிசியும், வறுமைக்கோட்டிற்குமேல் உள்ள குடும்பங்களுக்கு 3,05,665 மெட்ரிக் டன் அரிசியும், அந்தியோதயா அன்னயோஜன திட்டத்தின்கீழ் 25,002 மெட்ரிக் டன் அரிசியும், மற்ற நலத் திட்டங்களுக்கு 26,819 மெட்ரிக் டன் அரிசியும் மாதந்தோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

117—

## கட்டட வசதி

**வினா எண் 779— திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், புள்ளனேரி பஞ்சாயத்து, மீனாட்சிப்பட்டிக்கு நிரந்தர நியாயவிலைக் கடை கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நியாயவிலைக் கடைக்கு கட்டடம் கட்ட தற்சமயம் அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், புள்ளனேரி ஊராட்சி, மீனாட்சிப்பட்டியில் உள்ள நியாயவிலைக் கடைக்குக் கட்டடம் கட்ட தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

118—

## நியாய விலைக் கடைக் கட்டடம்

**வினா எண் 3055—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி பஞ்சாயத்து, குறவருடி நியாய விலைக் கடை (ரேஷன் கடை) பஞ்சாயத்து அலுவலகத்தில் செயல்பட்டு வருவதை மாற்றி, தனியாக நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, செல்லம்பட்டி ஒன்றியம், குறவருடி நியாய விலைக் கடை, குறவருடி ஊராட்சி மன்ற அலுவலகக்



கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

119—

## கட்டட வசதி

**வினா எண் 4079—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குலமாணிக்கம் ஊராட்சியில் நியாய விலைக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், குலமாணிக்கம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு, திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 1,83,000/– நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, 1–6–2004 தேதி முதல் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

120—

## புதிய நியாய விலைக் கடைக் கட்டடம்

**வினா எண் 5508—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் கிராமத்தில் முந்தைய ஆட்சியில் கட்டப்பட்ட நியாய விலைக் கடை சரியான முறையில் கட்டப்படாமல், தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்குவதால் புதியதாக வேறு நியாய விலைக் கடை கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, மருங்கூர் ஊராட்சியில் பண்ருட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் பொறுப்பில் 28–3–2002 முதல் செயல்படும் மருங்கூர் முழு நேர நியாய விலைக் கடை, மருங்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வளாகத்திலேயே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 1999–2000 ஆண்டில் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி நியாய விலைக் கடைக்கு புதியதாக கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

**121—**

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

**வினா எண் 5999—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்வதைத் தவிர்த்து விவசாயிகளிடமிருந்து தேங்காயையே நேரடியாகக் கொள்முதல் செய்யும் முறையைக் கடைப்பிடிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்வதைத் தவிர்த்து, தேங்காயை நேரடியாகக் கொள்முதல் செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை. கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்வதும் ஜூலை 2002–ற்குப் பின் நிறுத்தப்பட்டுவிட்டது.





**122—**

## பணி வரன்முறை

**வினா எண் 6277—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் ஒப்பந்த அடிப்படையில் வேலைவாய்ப்புத் துறையின் பதிவு பெறப்படாதவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டதும், பின் அந்தப் பணி உறுதி செய்யப்பட்டதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மறுபரிசீலனை செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்படி, கூட்டுறவு நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்துகொள்ள வழிவகைகள் இல்லை. எனினும், பல்வேறு காலகட்டங்களில் ஒரு சில கூட்டுறவு நிறுவனங்களில் முந்தைய நிர்வாகக் குழுக்கள் சட்டம் மற்றும் விதிகளுக்கு முரணாக வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு பெறாதவர்களை தினக்கூலி அடிப்படையில் பணி நியமனம் செய்துவிட்டனர். 12–3–2001 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசாணை (நிலை) எண் 86–ல், 8–7–1980 முதல் 11–3–2001 வரையிலான காலத்தில் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களில் வேலைவாய்ப்பகம் மூலமன்றி முறையற்ற விதத்தில் நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியை வரன்முறை செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதை உயர் நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் மறுபரிசீலனை செய்யத் தேவையில்லை.

[2005 ஏப்ரல் 13

**123—**

### கட்டட வசதி

**வினா எண் 6829—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**124—**

### கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம்

**வினா எண் 6883—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர் சத்திரம், கருப்பூரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் கூட்டுறவு அங்காடிக்குச் சொந்தமாக கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, கொரநாட்டுக்கருப்பூர் சத்திரம், கருப்பூரில் 251 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாயவிலைக் கடை தனியார் கட்டடத்தில் வாடகையின்றிச் செயல்பட்டு வருகிறது. இந்தக் கடைக்கு தற்போது சொந்தக் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.



2005 ஏப்ரல் 13]

**125—**

### புதிய கட்டடம்

**வினா எண் 6916—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, உமாமகேஸ்வரம் ஊராட்சி, நடுவக்கரை கிராமத்தில் இயங்கி வரும் கிராம அங்காடிகளுக்கு ஒரு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, உமாமகேஸ்வரம் ஊராட்சியில் அம்பாசமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் உமாமகேஸ்வரம் நடுவக்கரை நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று கட்டடம் கட்ட வழிவகை இல்லை. மேலும், இதர நலத் திட்டங்களின் மூலம் நடுவக்கரை நியாய விலை கடைக்குக் கட்டடம் கட்டவும் வழிவகை இல்லை.

**126—**

### குடும்ப அட்டை

**வினா எண் 7720—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாராபுரம் தொகுதியில் குடும்ப அட்டை வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு எப்போது குடும்ப அட்டைகள் வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், தாராபுரம் தொகுதியில் குடும்ப அட்டை வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு விரைந்த ஆய்வுக்குப்பின்

தேவையான அனைத்துத் தகுதியுள்ள விண்ணப்பங்களுக்கு குடும்ப அட்டைகள் விரைவில் வழங்கப்படும்.

**127—**

**களம், கூடாரங்கள் அமைத்தல்**

**வினா எண் 7867—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதிக்குட்பட்ட மதுரை கிழக்கு, மதுரை மேற்கு ஒன்றியங்களில் உள்ளடக்கிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் நேரடிக் கொள்முதல் செய்யுமிடங்களில் களம் மற்றும் கூடாரங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மண்டலத்திலுள்ள வட்டாரக் கிடங்குகளில் (Taluk Godown) மட்டுமே நெல் கொள்முதல் செய்ய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. தனியாக நெல் கொள்முதல் நிலையங்கள் எதுவும் இம்மண்டலத்தில் இயங்கவில்லை. எனவே, சமயநல்லூர் தொகுதிக்குட்பட்ட மதுரை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியங்களில் நெல் கொள்முதல் செய்வதற்கு களம் மற்றும் கூடாரங்கள் அமைக்க சாத்தியமில்லை.

**128—**

**விவசாயிகளுக்குக் கடனுதவி**

**வினா எண் 9027—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட செந்துறை ஒன்றியம், சன்னாசிநல்லூர் கிராமத்திற்கு கூட்டுறவு வங்கியின்மூலம் விவசாயத்திற்கு ஆயில் எஞ்சின், மின் மோட்டார் போன்றவை கிடைக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிறுபாசனத் திட்டத்தில், விவசாயத்திற்கு ஆயில் எஞ்சின், மின்மோட்டார் போன்றவற்றிற்கு தேசிய வங்கி மறு நிதி உதவித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ஏற்கெனவே கடன் வழங்கப்பட்டு வருகிறது. சன்னாசிநல்லூர் கிராம விவசாயிகள், சம்பந்தப்பட்ட கூட்டுறவு வங்கிகளை அணுகி மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கான கடன் பெற்றுக்கொள்ளலாம்.

**129—**

**சம்பள உயர்வு**

**வினா எண் 9722—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த சம்பளத்தில் பணிபுரியும் கூட்டுறவு சிவில் சப்ளை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க அரசு வழிவகை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளம் 1-4-2000 முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நியாய விலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களின் சம்பளம் 1-1-1996 முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவர்களது சம்பளத்தை உயர்த்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

[2005 ஏப்ரல் 13

**130—**

## கட்டட வசதி

**வினா எண் 10956—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருத்துவக்குடி ஊராட்சி கிராமத்தில் கிராம அங்காடிக் கட்டட வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மருத்துவக்குடி ஊராட்சி கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடை, தனியாருக்குச் சொந்தமான வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**131—**

## கட்டடம் அமைத்தல்

**வினா எண் 11011—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மேலப்பாலையூர் ஊராட்சிக்கு அங்காடி கட்டடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், ஓகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டுப்பாட்டில் செயல்படும் மேலப்பாலையூர் நியாய விலைக் கடை 239 குடும்ப அட்டைகளுடன்



2005 ஏப்ரல் 13]

தனியார் கட்டடத்தில் வாடகை செலுத்தி செயல்பட்டு வருகிறது. மேலப்பாலையூர் நியாய விலைக் கடைக்கு அரசுத் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட தற்போது வழிவகை செய்யப்படவில்லை.

**132—**

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

**வினா எண் 13585—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், அரசே கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கொப்பரைத் தேங்காய் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்யும் கொப்பரைக்கு அதிகபட்ச விலை கிடைக்க ஏதுவாக, மத்திய அரசு 2001 ஆம் ஆண்டு ஆதார விலை திட்டத்தைக் கொண்டு வந்தது. தமிழ்நாட்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் தேசிய நிறுவனமான தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தில் முகவராக நியமிக்கப்பட்டது. கொப்பரைக் கொள்முதல் 20–12–2001 முதல் தொடங்கப்பட்டு தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்தின் அறிவுரைகளின்படி 31–3–2002 முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**133—**

## கொப்பரைத் தேங்காய் கொள்முதல்

**வினா எண் 13647—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள தென்னை விவசாயிகளை விலை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்ற மைய அரசின் 'நேபேட்' கொள்முதலை தமிழகத்தில் தொடங்கவும், இதர வசதிகளைச் செய்துதரவும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை இணையத்துடன் 'நேபேட்' இணைந்து, கொப்பரைக் கொள்முதல் செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**134—**

## கட்டட வசதி

**வினா எண் 13684—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி தொகுதி, சேரன்மகாதேவி பேரூராட்சி, கரிசூழ்ந்தமங்கலம் நியாய விலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் சொந்தக் கட்டடம் கட்ட அரசு உடனடியாக ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள கரிசூழ்ந்தமங்கலம் நியாய விலைக் கடைக்கு தற்சமயம் கட்டடம் கட்ட அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.



**135—**

## புதிய நியாய விலைக் கட்டடம்

**வினா எண் 17126—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், முத்தையம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், முத்தையம்பட்டி பகுதியில் 295 குடும்ப அட்டைகள் உள்ளன. முத்தையம்பட்டி பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததால், முத்தையம்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இலவசமாகக் கட்டட வசதி செய்து கொடுத்தால் பகுதிநேரக் கடை அமைக்கலாம்.

**136—**

## தனிச் சங்கம் உருவாக்குதல்

**வினா எண் 17312—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையை, கொங்கணாபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தனிச் சங்கமாக இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொங்கணாபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கொங்கணாபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 19–3–2001–ல் பதிவு செய்யப்பட்டது. சங்கம் பதிவு செய்யப்பட்டதிலிருந்து வணிகம் எதுவும் செய்யவில்லை. மேலும், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வணிகம் ஏதும் இச்சங்கம் செய்திடாததால், 21–11–2003–ல் இச்சங்கம் கலைக்கப்பட்டுள்ளது.

**137—**

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 17437—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, வேதராஜபுரத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், திருநகரி ஊராட்சி, நெப்பத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்மூலம், திருநகரி கிராமத்தில் ஒரு நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. திருநகரி கிராமத்திலிருந்து 1.4 கிலோ மீட்டர் தொலைவில், 151 குடும்ப அட்டைகளுடன் வேதராஜபுரம் பகுதி அமைந்துள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால், வேதராஜபுரத்தில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**138—**

**புதிய நியாய விலைக் கடை**

**வினா எண் 17520—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சியாளம் ஊராட்சியில் புதியதாக நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், சியாளம் ஊராட்சியில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்டப்படவில்லை. வாடகையின்றி அங்காடி நடத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் தற்போது சமுதாயக் கூடத்தில் அங்காடி இயங்கி வருகிறது.

**139—**

**உணவுப் பொருட்கள் விநியோகம்**

**வினா எண் 19339—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 5–வது வட்டத்திலுள்ள பாரதியார் கூட்டுறவுப் பண்டகசாலைமூலம் நான்கு கடைகளில் வழங்கப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவை அளவு குறைவாக உள்ளதால், மேற்கண்ட கூட்டுறவுப் பண்டகசாலையின் ஊழியர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 5-வது வட்டத்திலுள்ள பாரதியார் கூட்டுறவு பண்டகசாலைமூலம் நடத்தப்படும் நான்கு நியாய விலைக் கடைகளில் சில முறைகேடுகள் கண்டறியப்பட்டு, அதற்காக சம்பந்தப்பட்ட பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**140—**

### பயிர் இன்சூரன்ஸ்

**வினா எண் 22627—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டம், பிச்சாவரம் மற்றும் 16 கிராமங்களில் நெல் பயிரும் மணிலாவும் கடந்த 2-2-2002 முதல் 5-2-2002 வரை பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்டு, பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளதால், இப்பகுதி விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் ஆண்டு நெற்பயிர் பருவ காலத்திற்கு சிதம்பரம் வட்டத்தில் பயிர்க் காப்பீடுத் திட்டத்தின்கீழ் புவனகிரி மற்றும் குமராட்சி வட்டாரங்கள் மட்டுமே தேர்வு செய்யப்பட்டன. எனவே, பிச்சாவரம் மற்றும் அதனைச் சார்ந்த 16 கிராமங்கள் தேர்வு செய்யப்படாத காரணத்தினால், பயிர்க் காப்புறுதித் திட்டத்தின்கீழ் இன்சூரன்ஸ் தொகை ஏதும் வழங்க இயலவில்லை. இருப்பினும், 2-2-2002 முதல் 5-2-2002 வரை பெய்த மழையினால் பாதிக்கப்பட்ட பிச்சாவரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 16 கிராமங்களில் உள்ள விவசாயிகள் 1,314 பேருக்கு ரூ.5,65,623/- தொகை அரசு நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.



**141—**

### கடனுதவி

**வினா எண் 22907—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பி & சி ஆலை மூடப்பட்டுவிட்டதால், அந்தத் தொழிலாளர்கள் தங்களது கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடனுக்கு அசலையும், வட்டியையும் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் பி & சி ஆலைப் பணியாளர்கள் சங்கமே வட்டியைச் சரி செய்து கொள்ள அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பி & சி ஆலைப் பணியார்கள் அனைவரிடமிருந்தும் பிடித்தம் செய்துள்ள அசல் மற்றும் வட்டியை மேற்படி ஆலை நிருவாகம் பி. & சி. ஆலைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 14-5-2004 தேதி வரை ரூ.7,84,38,293.34 செலுத்தியுள்ளது. எனவே, பி & சி ஆலைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தில் வாங்கிய கடன் மற்றும் வட்டியை மீண்டும் செலுத்த வேண்டிய அவசியமில்லை.

**142—**

### நெல் கொள்முதல்

**வினா எண் 28463—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்வதைத் தமிழக அரசின் நிரந்தரக் கொள்கையாக அறிவித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஒவ்வொர் ஆண்டும் குறுவை, சம்பாப் பருவங்களில் மத்திய அரசின் "பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல்" (Decentralised Paddy Procurement Scheme) திட்டத்தின்கீழ் காவிரி டெல்டா மாவட்டங்களில் நெல் கொள்முதல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்மூலம் செயல்படுத்த அரசு முடிவு செய்து, அவ்வாறே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**143—**

## வைப்புத் தொகை

**வினா எண் 28673—திரு. ப. ஆண்டிவேல்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கிராமப்புறங்களிலுள்ள அனைத்துத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் வைப்புத் தொகை சேகரிக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* கிராமப்புறங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் சொந்த நிதி ஆதாரம் ரூ.15 லட்சம் உள்ள வங்கிகள் வைப்புத் தொகை சேகரிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

*(ஆ)* உடனடியாகச் சேகரிக்கலாம்.

**144—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 29620—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

*(அ)* முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், திருத்தலையூரில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* திருத்தலையூர் கிராமம், மண்பிரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் அமைந்துள்ளது. திருத்தலையூர் கிராமத்தின் மக்கட்தொகை 4,215 ஆகும். இக்கிராமத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பான 1,219.87 ஹெக்டேரில் 822.205 ஹெக்டேர் மட்டுமே சாகுபடி செய்வதற்கு ஏற்றதாக உள்ளது. ஏற்கெனவே திருத்தலையூர் கிராமத்தில் ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வந்து, நல்லமுறையில் செயல்படாமல் கலைக்கப்பட்டு விட்டது. அதன்பின்னரே, திருத்தலையூர் கிராமம், மண்பிரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் விவகார எல்லையில் சேர்க்கப்பட்டுள்ளது.

**145—**

## புதிய நியாய விலைக் கடைக் கட்டடம்

**வினா எண் 29651—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், செவந்திலிங்கபுரம் ஊராட்சி, செவந்திலிங்கபுரம் கிராமத்திற்குப் புதிய நியாய விலைக் கடைக் கட்டடம் ஒன்று கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* செவந்திலிங்கபுரம் கிராமத்திற்கு நியாய விலைக் கடை ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில், மாங்கரைப்பேட்டை

[2005 ஏப்ரல் 13

கிராமத்தில் அதிக எண்ணிக்கையில் குடும்ப அட்டைதாரர்கள் இருந்ததினால், அங்கு கிடைத்த இடவசதியைக் கொண்டு செவந்திலிங்கபுரம் என்ற பெயரில் மாங்கரைப்பேட்டையில் முழுநேரக் கடை 254 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. செவந்திலிங்கபுரம் கிராமத்தில் எஞ்சிய குடும்ப அட்டைதாரர்கள் குறைவாக இருந்ததினால், 361 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் உமையாள்புரம் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நியாய விலைக் கடைகளும் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு நியாய விலைக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசின் தற்போதைய திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**146—**

## குடும்ப அட்டை

**வினா எண் 30627—திரு. ப. அரசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்ப அட்டைகள் பலபேருக்குக் கிடைக்கவில்லையென்றும், மீண்டும் குடும்ப அட்டை வழங்க வேண்டுமென்றும் பொதுமக்கள் பலர் மனு செய்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) இதுவரை குடும்ப அட்டை பெறாத குடும்பங்கள், குடும்ப அட்டை பெற்றுக்கொள்ள 1–6–2004 முதல் 30–6–2004 வரை அருகிலுள்ள அங்கன்வாடி மையங்களிலோ/சத்துணவு மையங்களிலோ விண்ணப்பிக்கலாமென்றும், அவ்வாறு பெறப்படும் விண்ணப்பங்கள் விரைந்த ஆய்வுக்குப்பின்னர் ஒரு குடும்ப அட்டை வழங்க அரசு வழிவகை செய்துள்ளது.



2005 ஏப்ரல் 13]

**147—**

## மானாமதுரை நகரக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 31605—திரு. க. பாரமலை:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கியைக் கலைக்க ரிசர்வ் வங்கி ஆணை வழங்கியிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவ்வாறு கலைக்கப்படுவதைத் தடுத்து, அவ்வங்கி மீண்டும் செயல்பட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். இந்திய ரிசர்வ் வங்கியின் (மத்திய அலுவலகம், மும்பை) கடிதம் எண் யூ.பி.டி/சிஓ/பிஎஸ்டி/(IV)/ஆர்.எல்.ஆர். 4/12–3–0682/2002–103, நாள் 17–9–2002–ல் மானாமதுரை நகரக் கூட்டுறவு வங்கியைக் கலைத்திட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்திய ரிசர்வ் வங்கி வகுத்துள்ள நெறிமுறைகளை அவ்வங்கி கடைபிடிக்க இயலாத நிலையில், தொடர்ந்து வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது. எனினும், பொதுமக்களுக்கு பொதுவான சேவைகளை அளித்திடும் பொருட்டு இவ்வங்கி, மானாமதுரை நகரக் கூட்டுறவுக் கடன் சங்கமாக 19–12–2002 அன்றுமுதல் மாற்றப்பட்டுள்ளது.

**148—**

## மினி சூப்பர் மார்க்கெட்

**வினா எண் 33799—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வரும் நிதியாண்டில் எத்தனை நியாய விலைக் கடைகளை மினி சூப்பர் மார்க்கெட்டுகளாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் அனைத்து நியாய விலைக் கடைகளிலும் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்து வருவதால், நியாய விலைக் கடைகளை சூப்பர் மார்க்கெட்டுகளாக மாற்றுவதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

**149—**

**ஊட்டி தேயிலை**

**வினா எண் 37716அ—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டி தேயிலையை சென்னை மற்றும் தமிழகமெங்கும் உள்ள நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்தில் சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோரின் துயரைத் துடைக்கவும், அவர்கள் பயிரிடும் தேயிலைக்கு நல்ல விற்பனை மற்றும் விலை கிடைக்கவும் அரசாணை எண் 259 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20–7–2001-ன்படி ஊட்டி தேயிலையினை கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அனைத்து நியாய விலைக் கடைகள் மூலம் ஆகஸ்டு 2001 முதல் விற்பனை செய்ய அரசு ஆணையிட்டது. பொது விநியோக திட்டத்தின்கீழ், தேயிலை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை நல்ல முறையில் நடந்து வருகிறது.

**150—**

**மருந்து விற்பனை நிலையம்**

**வினா எண் 39076—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் பொன்னி சிறப்பு அங்காடி சார்பாக எடப்பாடியில் ஒரு மருந்து விற்பனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், பொன்னி கூட்டுறவு சிறப்பங்காடி சார்பாக எடப்பாடியில் மருந்து விற்பனை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

**151—**

**அரசு மாத இதழ்**

**வினா எண் 39524அ—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு என்ற பெயரில் தமிழிலும், ஆங்கிலத்திலும் அரசு மாத இதழ்களை மேம்படுத்துவதற்கான உத்தேசம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால் நியமிக்கப்பட்டுள்ள ஆசிரியர் குழுவின் அறிவுரையின்படி, கூட்டுறவு இதழ்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் மேம்படுத்தத் தேவைப்படும்போது அவ்வப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**152—**

**கட்டட வசதி**

**வினா எண் 40862—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் நாயக்கர்பட்டி ஊராட்சி, சிவியர்குடிகாடு கிராமத்திற்கு நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் நாயக்கர்பட்டி ஊராட்சி, சிவியர்குடிகாடு கிராமத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போதைய அரசுத் திட்டங்களில் வழிவகை செய்யப்படவில்லை.

**153—**

## புதிய பகுதி நேர நியாய விலைக் கடை

**வினா எண் 42096—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை பேரூராட்சியிலுள்ள பாரதிபுரத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் உண்டா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டத்தைச் சேர்ந்த ஊத்தங்கரை பேரூராட்சியிலுள்ள ஊத்தங்கரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள தாய்க் கடை எண் 2-ல் உள்ள 502 குடும்ப அட்டைகளிலிருந்து 253 குடும்ப அட்டைகளைப் பிரித்து பாரதிபுரம் பகுதியில் 12-7-2000 முதல் பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**154—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 42595—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சி, மாரணி வாரியனேந்தல் கிராமத்தில் பொருட்கள் வழங்கும் நியாய விலைக் கடை ஒன்று அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், ஆலாத்தூர் ஊராட்சி, மாரணி வாரியனேந்தல் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்று ஏற்கெனவே செயல்படுகிறது. செட்டிகுளம் முழுநேர நியாய விலைக் கடையைத் தாய்க் கடையாகக் கொண்டு மாரணி வாரியனேந்தல் பகுதிநேரக் கடை செயல்படுகிறது.

**155—**

## நியாய விலைக் கடை தொடங்குதல்

**வினா எண் 42631—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரப்பள்ளி ஊராட்சி, வெட்டாத்தங்கரையில் ஒரு நியாய விலைக் கடை தொடங்க (மகேந்திரப்பள்ளியில் உள்ளதைப் பிரித்து) அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரப்பள்ளி ஊராட்சியில் மகேந்திரப்பள்ளி நியாய விலைக் கடை

436 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. தாய்க் கடையிலிருந்து 1.7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வெட்டாத்தங்கரையிலுள்ள 102 குடும்ப அட்டைகள் மகேந்திரப்பள்ளி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையே உள்ள தொலைவு குறைந்தது 2 கிலோ மீட்டர் இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் வெட்டாத்தங்கரையில் பகுதிநேரக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**156—**

## நெல் கொள்முதல்

**வினா எண் 42945—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் டி.என்.சி.எஸ்.சி. குடோனில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் டி.என்.சி.எஸ்.சி. குடோனில் விவசாயிகளிடமிருந்து அரசால் நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

**157—**

## தேயிலை விற்பனை

**வினா எண் 44048—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002–2003 ஆம் ஆண்டில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் எத்தனை டன் தேயிலை விற்பனை செய்யப்பட்டது?



(ஆ) விற்பனை செய்யப்பட்ட ஊட்டித் தேயிலையின் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2002–2003 ஆம் ஆண்டில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் 34.363 டன் ஊட்டித் தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) விற்பனை செய்யப்பட்ட ஊட்டித் தேயிலையின் மதிப்பு ரூ.30,92,670/– ஆகும்.

**158—**

## அத்தியாவசியப் பண்டங்கள்

**வினா எண் 44061—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் எத்தனை நியாய விலைக் கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் 31–7–2004 அன்று வரை 28,142 கடைகள் மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

**159—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 44234—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் மீனவர் வாழும் பகுதிக்கு நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம்பாளையம் மீனவர் வாழும் பகுதிக்கு மீனவர் சங்கத்தினரால் எப்.–006 நியாய விலைக் கடை 280 குடும்ப அட்டைகளுடன் முழு நேரக் கடையாக 1993 முதல் செயல்பட்டு வருகிறது.

**160—**

**நெல் கொள்முதல் நிலையம்**

**வினா எண் 46793—திரு. நா. சுந்திரமோகன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சப்பெருமாநல்லூரில் நேரடிக் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பச்சப்பெருமாநல்லூரில் நேரடிக் கொள்முதல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**161—**

**தனி அதிகாரி**

**வினா எண் 47073—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கியில் பணிபுரிந்த தனி அதிகாரி முறைகேடு செய்ததற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் திரு. ஆர். சுந்தரராஜு, கூட்டுறவு சார் பதிவாளர் 7–6–2003 அன்று 11–30 மணிக்கு வங்கி வளாகத்தில் இலஞ்சம் பெற்றதாகக் கைது செய்ததைத் தொடர்ந்து, 8–6–2003–ல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

**162—**

**கடன் தொகைகள்**

**வினா எண் 47082—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்பத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள கூட்டுறவு வங்கியில் கொடுத்துள்ள கடன் தொகைகளைத் திரும்பப் பெற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வசூல் பணிக்காக, சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்காகவும், தவணைத் தவறிய கடன்களை வசூலிக்கவும், இரு பணியாளர்கள் தனியாக நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், வசூல் பணிக்காக பணியாளர் குழு ஒன்று அமைக்கப்பட்டு வசூல் பணி நடைபெற்று வருகிறது. கடன்கள் வகைப்படுத்தப்பட்டு அனைத்துப் பணியாளர்களுக்கும் தனித் தனியாக குறியீடு நிர்ணயிக்கப்பட்டு வசூல் தொடர்பான திறனாய்வு மாதா மாதம் தனி அலுவலரால் கண்காணிப்பட்டு வருகிறது.

**163—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 51606—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், இலக்கம்பட்டி கிராமத்திற்குட்பட்ட நீதிபுரம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், இலக்கம்பட்டி கிராமத்திற்குட்பட்ட நீதிபுரம் பகுதியில் 246 குடும்ப அட்டைகள் உள்ளன. நீதிபுரம் குடும்ப அட்டைதாரர்கள் 2 கி.மீ. தொலைவு சென்று பெரியதண்டா நியாய விலைக் கடையில் அத்தியாவசிய பொருட்களைப் பெற்று வருகின்றனர். நீதிபுரம் பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க, போதுமான குடும்ப அட்டைகள் உள்ளபோதிலும் இலவசக் கட்டடம் கொடுக்க எவரும் முன்வராத நிலையில் பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**164—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 52875—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மூடப்பட்டதற்கான காரணம் என்ன?

(ஆ) அதனால் வேலை பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு மாற்று கூட்டுறவு அமைப்பில் வேலை வழங்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இவ்வங்கியானது தொடர்ந்து 5 வருடங்களாகச் செயலிழந்து, வங்கி தொடங்கப்பட்டதற்கான அடிப்படை நோக்கத்தைச் செயல்படுத்தத் தவறியதால் 18-1-1999-ல் வங்கி கலைக்கப்பட்டது.

(ஆ) 2 நபர்கள்.

(இ) இல்லை.

**165—**

## மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம்

**வினா எண் 53459—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் பேரூராட்சியில் ஒரு மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் புதிதாகத் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**166—**

**ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்**

**வினா எண் 54036—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் 11 மாவட்டங்களிலிருந்து மற்றைய தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் இன்னும் 14 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட வேண்டியுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் சில மாவட்டங்களைத் தெரிவு செய்து இத்திட்டத்தை அமல்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

**167—**

**பணம் வழங்குதல்**

**வினா எண் 54092—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி ஒன்றியம், தாதாபுரம் தொடக்க வேளாண்மை வங்கியில் பணம் டெபாசிட் செய்தவர்களுக்கு பணம் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆம்.

**168—**

**கூட்டுறவு வங்கிக்குத் தேர்தல்**

**வினா எண் 57803—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, அர்பன் கூட்டுறவு வங்கிக்கு முறையாகத் தேர்தல் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) உயர் நீதிமன்றத்திலுள்ள உறுப்பினர் சேர்க்கை குறித்த வழக்கில் இறுதித் தீர்ப்பு பெறப்பட்டவுடன் தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**169—**

**நியாய விலைக் கடைகள்**

**வினா எண் 57805—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள நீர்வீழ்ச்சி அருகிலும், மருத்துவமனைக்கு அருகிலும் நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், நீர்வீழ்ச்சி என்ற இடத்தில் தென்றல் மகளிர் சுய உதவிக் குழுவினர் *705* குடும்ப அட்டைகளைக் கொண்டு நியாய விலைக் கடையை செவ்வனே நடத்தி வருகின்றனர். நீர்வீழ்ச்சி அருகில் மற்றும் மருத்துவமனை அருகில் வசித்துவரும் மொத்தம் *70* குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், ஒரு பர்லாங் தொலைவில் நீர்வீழ்ச்சி என்ற இடத்தில் அஞ்சல் நிலையத்திற்கு எதிரிலுள்ள நியாய விலைக் கடையில் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகிறார்கள். எனவே, நீர்வீழ்ச்சிக்கு அருகிலும், மருத்துவமனைக்கு அருகிலும் நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

**170—**

### கடனுதவி

**வினா எண் 58123—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை அர்பன் கூட்டுறவு வங்கியில் வீட்டு மதிப்பை உயர்த்தி, போலிச் சான்றிதழ் கொடுத்து அதிகமான கடன் பெற்று திருப்பிச் செலுத்தாதவர்கள் மற்றும் போலிப் பட்டா கொடுத்து கடன் பெற்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை நகரக் கூட்டுறவு வங்கியில் வீட்டுவசதிக் கடன்கள் வழங்கப்பட்டதில் நடைபெற்ற முறைகேடுகள் குறித்து பொள்ளாச்சி



சரக துணைப் பதிவாளரால் சட்டப்பிரிவு 81-ன்கீழ் விரிவான விசாரணைக்கு ஆணையிடப்பட்டுள்ளது. கடன்களை வசூலிக்க தக்க சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**171—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 58819—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, உருளிக்கல் பகுதிக்கு நியாய விலைக் கடை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, உருளிக்கல் பகுதியில் மகளிர் முழுநேர நியாய விலைக் கடை, 670 குடும்ப அட்டைகளைக் கொண்டு செயல்பட்டு வருவதால் புதிதாக நியாய விலைக் கடை தொடங்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

**172—**

### தங்கத் தேர்

**வினா எண் 10357—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்குத் தங்கத் தேர் நிறுவும் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலுக்கு புதிதாகத் தங்கரதம் செய்ய, மேற்படி திருக்கோயிலின் அறங்காவலர் குழு தீர்மானம் இயற்றியுள்ளது. இதன் தொடர்ச்சியாக, பொதுமக்கள் பங்களிப்பு குறித்தும் மதிப்பீடுகள் தயாரிப்பது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**173—**

**திருப்பணிகள்**

**வினா எண் 20652—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக்கு அருகிலுள்ள திருமலை குமாரசாமி திருக்கோயிலில் நடைபெறும் திருப்பணிகளை விரைவுபடுத்தி, கும்பாபிஷேகம் நடத்திடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், தென்காசிக்கு அருகிலுள்ள பண்பொழி, திருமலை குமாரசாமி திருக்கோயிலில் நடைபெறும் திருப்பணி வேலைகள் முடிவடைந்து, 17–9–2003 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றது.

**174—**

**புதிய திருத்தேர்**

**வினா எண் 25609—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், திருக்கச்சூர் அருள்மிகு தியாகராஜர் சுவாமிகள் திருத்தேர் புதியதாகச் செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், திருக்கச்சூர் அருள்மிகு தியாகராஜர் சுவாமிகள் திருக்கோயில் திருப்பணி வேலைகள் தொடங்கப்பட உள்ளன. இத்திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டபின், மேற்படி ஆலயத்திற்குப் புதிதாக மரத்தேர் செய்யும் பணி மேற்கொள்ளப்படும்.

**175—**

**தேர் பழுதுபார்க்கும் பணி**

**வினா எண் 31629—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத் தேர் பழுதுபார்க்கும் பணிகள் எப்பொழுது தொடங்கும்?

(ஆ) ஆம் எனில்,. விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம், அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் திருத்தேர் திருப்பணி 12–2–2004 அன்று தொடங்கப்பட்டு தற்போது 35 சதவிகிதப் பணிகள் முடிவுற்றுள்ளன. ஏப்ரல் 2005–ல் பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

**176—**

### கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 34973—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஊராட்சி, அருள்மிகு வேதபுரீஸ்வரர் கோயிலைப் புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஊராட்சி, அருள்மிகு வேதபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குப் போதிய வருமானம் வராததாலும், நிதிவசதி இல்லாததாலும், இத்திருக்கோயில் திருப்பணியை உபயமாகச் செய்ய முன்வந்துள்ள வள்ளுவக்குடியைச் சேர்ந்த இருவர் மூலம் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**177—**

### ஆலயம் கட்டுதல்

**வினா எண் 47863—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரியகொப்பியம் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி ஆலயம் கட்டுவதற்கு அரசு நிதியுதவி செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, பண்ணங்குடி ஊராட்சி, பெரியகொப்பியம் ஆதிதிராவிடர் தெருவிலுள்ள கன்னிகாபரமேஸ்வரி



2005 ஏப்ரல் 13]

திருக்கோயிலைக் கட்டுவதற்கு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின்கீழ் இல்லாத ஆதிதிராவிடர்கள் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் வாழும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் ரூ.25,000/- நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

**178—**

### இசை விழா

**வினா எண் 47865—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் அவதரித்த திருஞானசம்பந்தருக்கு, சீர்காழியில் இசை விழா நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், சீர்காழி நகரில் அவதரித்த திருஞானசம்பந்தருக்கு சீர்காழியில் இசைவிழா நடத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

**179—**

### குளத்தினைச் செப்பனிடுதல்

**வினா எண் 48864—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள திருத்தானமுடையார் கோயிலின் குளத்தினை தூர்வாரிச் செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள அருள்மிகு தாளபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான திருக்குளத்தினை தூர் வார திருக்கோயிலில் நிதிவசதியில்லாததால், பரம்பரை அறங்காவலரால் உபயதாரர் மூலம் திருக்குளம் தூர்வாரி செப்பனிடப்பட்டுள்ளது.

**180—**

## புதிய தேர்

**வினா எண் 53628—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விளாத்திக்குளம், அருள்மிகு ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குச் சொந்தமான புதிய தேர் உருவாக்கும் பணி எப்போது முடிவடையும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், விளாத்திக்குளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலின் தேர்த் திருப்பணிகள் தொடங்கப்பட்டு தற்போது 35% விழுக்காடு பணிகள் முடிவுற்றுள்ளன. மீதப் பணிகள் ஏப்ரல் 2005-ல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**181—**

## ரோப் கார்

**வினா எண் 59633—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

பழனி மலைக் கோயிலுக்கு பக்தர்கள் விரைவாக மலைக்குச் செல்ல அமைக்கப்படும் "ரோப் கார்" எப்பொழுது முதல் செயல்படத் தொடங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள "ரோப் கார்" திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கடந்த 3-11-2004 ஆம் தேதியன்று தொடங்கி வைக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்காகச் செயல்பட்டு வருகிறது.

**182—**

## பொறியியல் கல்லூரி

**வினா எண் 60677—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வருமானத்திலிருந்து மகளிர்க்கான பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் வருமானத்திலிருந்து மகளிர்க்கான பொறியியல் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**183—**

## ஓய்வூதியம்

**வினா எண் 20353—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு ரேஷன் கடைகளில் அரிசி வழங்குவதுபோல், ஓய்வூதியமும் அந்தக் கடைகளின் மூலம் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) இதனால் அரசுக்கு பண அஞ்சல் மூலம் ஏற்படும் செலவு சிக்கனம் ஏற்படும் என்பதையும் அரசு அறியுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) முதியோர் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு ரேஷன் கடைகளில் அரிசி வழங்குவதுபோல், ஓய்வூதியமும் அந்தக் கடைகளின் மூலம் வழங்கப்பட நடவடிக்கை எடுப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**184—**

**உதவித் தொகையை உயர்த்துதல்**

**வினா எண் 20367—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசின் நிதிநிலைமைக்கேற்ப அவ்வப்போது உயர்த்தி வழங்கப்படும்.

**185—**

**உதவித் தொகை**

**வினா எண் 28136—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் இன்னும் முதியோர் ஓய்வூதியம் (ஓஏபி) உதவித் தொகை முழுமையாக சென்ற வருடம் வழங்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இரண்டு வருடத்திற்கும் சேர்த்து முதியோர் ஓய்வூதியம் (ஓஏபி) உதவித் தொகை வழங்க அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் 2002–2003 ஆம் ஆண்டில் முதியோர் உதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வரும் நபர்களின் எண்ணிக்கை 2826 ஆகும்.

(ஆ) முதியோர் ஓய்வூதியம் தகுதி பெற்ற அனைத்து நபர்களுக்கும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றமையால் இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) வினா எழாது.

**186—**

**சத்துணவு மையம்**

**வினா எண் 41945—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, நாப்பாக்கம் கிராமத்திலுள்ள அகத்தீஸ்வரமங்கலம் பகுதிக்கு சத்துணவு மையம் அமைக்க அரசு ஏற்பளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட நாப்பாக்கம் கிராமத்திலுள்ள அகத்தீஸ்வரமங்கலத்தில் ஊராட்சி ஒன்றியத்

[2005 ஏப்ரல் 13

தொடக்கப் பள்ளி ஏதுமில்லை. எனவே, சத்துணவு மையம் தொடங்க வாய்ப்புகள் இல்லை. மேலும், புதியதாக அங்கன்வாடி மையம் தொடங்க, மக்கட்தொகை குறைந்தது 1000 இருக்க வேண்டுமென்ற விதி உள்ளது. ஆனால் அகத்தீஸ்வரமங்கலத்தில் மக்கட்தொகை 500-க்கும் குறைவாக உள்ளது. எனவே, அங்கன்வாடி மையமும் தொடங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை. என்றாலும், தற்போது அகத்தீஸ்வரமங்கலத்திலுள்ள 2–4 வயது குழந்தைகளுக்கு, அருகிலுள்ள நரப்பாக்கம் அங்கன்வாடி மையத்திலிருந்து மதிய உணவு மற்றும் இணை உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**187—**

## முதியோர் இல்லம்

**வினா எண் 48650—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் அரசு முதியோர் இல்லம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூரில் அரசு முதியோர் இல்லம் அமைப்பது குறித்தான நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தனியார் தொண்டு நிறுவனங்கள், ஆதரவற்ற முதியோர் இல்லம் சீரிய முறையில் செயல்படுத்துமாயின், அரசு மூலம் முதியோர் இல்ல பராமரிப்பு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**188—**

## மாவட்ட மருத்துவமனையாக்குதல்

**வினா எண் 1932—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாக உயர்த்த அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வாலாஜா அரசு மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டதால், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாது.

**189—**

## குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

**வினா எண் 8621—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு எந்த இடத்தை வகிக்கிறது?

(ஆ) குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மைய அரசு மானியம் வழங்குகிறதா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதில், இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு கேரளாவுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

(ஆ) ஆம்.

(இ) குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மைய அரசு மானியம் வழங்குகிறது. 2000–2001 ஆம் ஆண்டு குடும்பக்

கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மைய அரசு ரூ.13,746.89 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டுக்கு ரூ.11,073.73 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. 2002–2003 ஆம் ஆண்டிற்கு ரூ.11,002.54 இலட்சம் மைய அரசு வழங்கியுள்ளது.

**190—**

## மருத்துவமனையாக்குதல்

**வினா எண் 14125—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கல்லிடைக்குறிச்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றியம், கல்லிடைக்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**191—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16210—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) காரைமேடு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்திற்கு 10 கி.மீ. தொலைவில் திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் சீர்காழி அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் மக்கள் தொகை மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கிடையே உள்ள தொலைவு ஆகியவற்றைக் கருதும்போது, இக்கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் எதுவுமில்லை. எனவே, காரைமேடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**192—**

## புற நோயாளிகள்

**வினா எண் 16955—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையில் (T.B. Hospital) தினசரி எவ்வளவு புற நோயாளிகள் வந்து செல்கிறார்கள்?

(ஆ) உள் நோயாளியாக இருந்து சிகிச்சை பெற்றுச் சென்றவர்கள் எவ்வளவு பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) பெருந்துறையில் உள்ள காசநோய் மருத்துவமனை அரசு மருத்துவமனை அல்ல. இந்தத் தனியார் மருத்துவமனைக்கு 150 புற நோயாளிகள் சிகிச்சை பெறுவதற்காக வருகிறார்கள்.

(ஆ) பெருந்துறையில் உள்ள காசநோய் மருத்துவமனை 210 படுக்கைகள் கொண்டதாகும். தினமும் சுமார் 25 காச நோயாளிகள் உள் நோயாளிகளாக இங்கு சிகிச்சை பெறுகிறார்கள்.

[2005 ஏப்ரல் 13

193—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 17236—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வாங்கப்பட்ட இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஊராட்சி ஒன்றியம், ஒட்டங்காடு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட வழங்கப்பட்ட இடத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

194—

### மகப்பேறு மருத்துவமனை

**வினா எண் 18661—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு ஒன்றியம், காதக்கிணறு ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு மருத்துவமனை திறக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், கள்ளந்திரி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட காதக்கிணறு



2005 ஏப்ரல் 13]

துணை சுகாதார நிலையம் ரூ.50,000 மதிப்பில் மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்சமயம் செயல்பட்டு வருகிறது.

195—

### புதிய கட்டடம்

**வினா எண் 18662—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மேற்கு ஒன்றியம், வயலூர் பஞ்சாயத்து பிள்ளையார்நத்தத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனைக் கட்டடம் இடிந்த நிலையில் உள்ளதால் அதற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு அரசு, நடப்பாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. எனவே, மதுரை மேற்கு ஒன்றியம், வயலூர் பஞ்சாயத்தில் உள்ள பிள்ளையார்நத்தம் மகப்பேறு மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

196—

### 'பி 3' வைட்டமின்

**வினா எண் 20740—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைட்டமின் 'பி' காம்ப்ளக்சில் 'பி3' என்று ஒன்று இருக்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆம். வைட்டமின் 'பி' காம்ப்ளக்சில் 'பி3' என்று ஒன்று உள்ளது.

[2005 ஏப்ரல் 13

**197—**

**தனி வார்டு**

**வினா எண் 23429—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனையில் குழந்தைகளுக்கான தனி வார்டு உருவாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி, அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு புதுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.12 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 28–12–2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**198—**

**மருந்துகள் வழங்குதல்**

**வினா எண் 27547—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001–2002 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி அரசு சித்த மருத்துவமனையில் இயங்கும் சித்த மருத்துவப் பிரிவிற்கு எவ்வளவு மதிப்புள்ள மருந்துகளை அரசு வழங்கியது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

2001–2002 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்திலுள்ள எடப்பாடி அரசு சித்த மருத்துவமனையில் ரூ.1,53,567/–க்கான (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பத்தி மூன்றாயிரத்து ஐந்நூற்று அறுபத்தேழு மட்டும்) மருந்துகளை அரசு வழங்கியுள்ளது.

**199—**

**ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 27879—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள பெத்தநாயக்கனூர் ஊராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையம், அரசுக் கட்டடத்தில் 10 அறைகளுடனும், இரு மருத்துவ அலுவலர்களுடனும் செயல்பட்டு

[2005 ஏப்ரல் 13

வருகிறது. இங்கு பயன்பெறும் வெளி மற்றும் உள் நோயாளிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தற்போதுள்ள வசதிகளே போதுமானதாகும். எனவே, இச்சுகாதார நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**200—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 29091—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைகாரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வேட்டைகாரன்புதூர் பேரூராட்சி, சேத்துமடையில் ஏற்கெனவே ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுவதால், மேலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 ஏப்ரல் 13]

## பட்டியல் 16

**1—**

### அரசு மருத்துவமனை

**வினா எண் 29685—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் ஆவுடையார்கோவில் வட்ட மருத்துவமனை செயல்படுவதால் அதே ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த மீமிசல் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**2—**

### வேலைவாய்ப்பு

**வினா எண் 29701—டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் எத்தனை ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன? அதில் படித்து பட்டம் பெற்ற மருத்துவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு ஏதேனும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் ஐந்து தனியார் சுயநிதி ஆயுர்வேத கல்லூரிகளில் ஆண்டுதோறும் தலா 30 மாணவர்கள் சேர்க்கையுடனும் மற்றும் ஒரு

[2005 ஏப்ரல் 13

ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி பல்கலைக்கழகத் தகுதியுடனும் இயங்கி வருகின்றன. ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிகளிலிருந்து படித்து பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு உரிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**3—**

## பகுதி நேர சுகாதார மையம்

**வினா எண் 29810—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுசத்திரம் ஒன்றியம் கதிராநல்லூரில் பகுதி நேர சுகாதார மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியம், கதிராநல்லூர் கிராமத்தில் பகுதி நேர சுகாதார மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**4—**

## மருத்துவர்களுக்குக் குடியிருப்பு

**வினா எண் 29842—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்கள் அங்கேயே தங்கிப் பணிபுரியும் வகையில் மருத்துவர்கள் தங்க கிராமங்களில் வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் உள்ள 1411 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 406 ஆரம்ப சுகாதார நிலையங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் உள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவர் குடியிருப்புக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, எஞ்சியுள்ள இடங்களில் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் திட்டம் தற்சமயம் இல்லை.

**5—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 30989—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் மோரிவாக்கம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், மோரிவாக்கம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**6—**

## மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 31406—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசின் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆண், பெண் மருத்துவர்கள் என இரு மருத்துவர்கள் நியமிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

இரண்டு மருத்துவர்கள் பணியிடங்கள் வழங்கப்பட்டு உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண் மருத்துவர் ஒருவரும் பெண் மருத்துவர் ஒருவரும் நியமிக்கும் முறை பின்பற்றப்பட்டு வருகிறது.

**7—**

**ஆரம்ப சுகாதார நிலையம்**

**வினா எண் 31648—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், புத்தாம்பூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புத்தாம்பூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**8—**

**நடமாடும் மருந்தகங்கள்**

**வினா எண் 32090—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் நடமாடும் மருந்தகங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் காடையாம்பட்டி, குள்ளத்தூர், பச்சைமலை, நாகலூர் மற்றும் அனுநாத்தும்மை ஆகிய ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்களில் நடமாடும் மருத்துவக் குழுக்கள் ஊர்தியுடன் செயல்பட்டு வருகின்றன.

**9—**

**சிறப்பு மருத்துவ முகாம்கள்**

**வினா எண் 32104—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நகர்ப்புற பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு நவீன மருத்துவ வசதிகள் அரசு மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் கிடைக்கின்றன. எனவே, எந்த ஒரு நகராட்சியிலும் / மாநகராட்சியிலும் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தும் கருத்துரு தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**10—**

**மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 33321—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) விளாத்திகுளம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) விளாத்திகுளம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) வினா எழாது.

**11—**

**கூடுதல் படுக்கை வசதி**

**வினா எண் 33401—திரு. மா. சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பழனி அரசு மருத்துவமனை 165 படுக்கை வசதிகளுடன் இயங்கி வருகிறது. உள் நோயாளிகள் தினம் சராசரியாக 110 நபர்கள் வருவதால் கூடுதல் படுக்கை வசதி ஏற்படுத்தும் அவசியம் தற்போது எழவில்லை.

**12—**

**ஸ்கேன் மையங்கள்**

**வினா எண் 34398—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) தமிழ்நாட்டில் பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் மீது நடவடிக்கை எடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் மீது, கருவுறுதலுக்கு முன் மற்றும் பிறப்பிற்கு முன் பாலினத்தை அறியும் தொழில்நுட்பச் (பாலினத் தேர்வு தடை) சட்டம் 1994-ன்கீழ் நடவடிக்கை எடுத்து பதிவு செய்யப்படாத 82 மையங்கள் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவற்றில் 24 மையங்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. 58 வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. மேலும் புதிய திருத்தப்பட்ட விதி மூலம் 4 பதிவு செய்யப்படாத ஸ்கேன் மையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனைத் தொகை வசூலிக்கப்பட்டது.

**13—**

**நவீன சுகாதார மையம்**

**வினா எண் 39479—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னவீரம்பட்டி ஊராட்சி, சேரன் நகர் பகுதியில் நவீன சுகாதார மையம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், சேரன் நகர் கிராமத்தில் புதிய சுகாதார மையம் அமைக்கும் திட்டம் இல்லை.

14—

## ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 40121—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், தெம்மாவூர் ஊராட்சி, தெம்மாவூரில் துணை ஆரம்ப சுகாதார நிலையத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், தெம்மாவூரில் துணை சுகாதார நிலையத்தை தேசிய குழந்தைகள் நலத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பழுதுபார்ப்புப் பணிகள் பொதுப் பணித் துறையினரால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. கிராம சுகாதார செவிலியர் துணை சுகாதார நிலையத்தின் கிராமத்தில் தங்கி பணிபுரிந்து வருகிறார்.

15—

## சுகாதார நிலையம்

**வினா எண் 41683—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம் தோரணம்பதியில் சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், தோரணம்பதி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

16—

## எட்டயபுரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 42343—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 36 படுக்கைகள் கொண்ட எட்டயபுரம் அரசு மருத்துவமனைக்கு நாளொன்றுக்கு சராசரியாக 26 உள்நோயாளிகளே வருவதால் இம்மருத்துவமனையை விரிவுபடுத்தும் அவசியம் எழவில்லை.

17—

## மருத்துவமனையைப் புதுப்பித்தல்

**வினா எண் 43390—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி பேரூராட்சியில் அமைந்துள்ள அரசு மருத்துவமனை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

[2005 ஏப்ரல் 13

(ஆ) ஆம் எனில், அதை புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி அரசு மருத்துவமனையின் (20 படுக்கைகள் கொண்ட) கட்டடம் பழுது பார்க்கும் பணி முடிவடைந்து ஒப்படைக்கப்படும் நிலையில் உள்ளது.

**18—**

## கட்டட வசதி

**வினா எண் 44181—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு புதிய வார்டுகளுக்கான கட்டடங்கள் கட்டித் தரும் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி அரசு அறிஞர் அண்ணா மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது ஏதும் இல்லை.

**19—**

## சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 46190—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருந்துப் பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்கு நாகப்பட்டினத்தில் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்தில் மருந்துப் பொருட்களை சேமித்து வைக்கும் கிடங்கு கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**20—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 48663—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, கட்டமரவாபாளையம் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கட்டமரவாபாளையம் கிராமத்தில், ஒலப்பாளையம் துணை சுகாதார நிலையம் சார்ந்த துணை சுகாதார நிலையம் செயல்படுகிறது. இந்தத் துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**21—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 49151—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், பெரியபட்டி ஊராட்சி, காஞ்சரம்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், பெரியபட்டி ஊராட்சி, காஞ்சரம்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் கட்டி முடிக்க உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் கட்டி முடிக்கப்படும்.

**22—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 49163—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, சிலம்பூர் கிராமம், ஸ்ரீராமன் ஊராட்சி மற்றும் சன்னாசிநல்லூர் ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம் சிலம்பூர் மற்றும் ஸ்ரீமான் கிராமங்கள், செந்துறை ஊராட்சி ஒன்றியம் சன்னாசிநல்லூர் கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



**23—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 49393—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**24—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 50830—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, இளங்காடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியம், இளங்காடு கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**25—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 51789—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி இராஜகல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், இராஜகல் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**26—**

### புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 53210—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரம் தொகுதி, வடக்கு இலந்தைக்குளம், வானாமுட்டி, அய்யனார்ஊத்து போன்ற ஊர்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கயத்தாறு ஊராட்சி ஒன்றியம், வடக்கு இலந்தைக்குளம், வானாமுட்டி மற்றும் அய்யனார்ஊத்து ஆகிய கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**27—**

### கூடுதல் படுக்கை வசதி

**வினா எண் 54020—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு மற்றும் கோட்டைப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு மற்றும் கோட்டைப்பட்டினம் ஆரம்ப சுகாதார நிலையங்களை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**28—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 54023—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், படநிலை ஊராட்சி, காடுவெட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**29—**

## துணை ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 59008—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கம்பலாபட்டி துணை ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், கம்பலாபட்டி கிராமத்தில் செயல்படும் துணை சுகாதார நிலையத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**30—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 59042—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், சின்னப்பம்பட்டி அருகில் உள்ள அக்கரைப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சின்னப்பம்பட்டி அருகிலுள்ள அக்கரைப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏதும் செயல்படவில்லை.



**31—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்குதல்

**வினா எண் 60897—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய மக்கள்தொகை எண்ணிக்கையைக் கொண்டு, ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதிய மக்கள்தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

## ஊதியம் வழங்குதல்

**வினா எண் 5804—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மாநில/மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனங்களின் பணியாளர்களுக்கு ஊதியம் நிலுவையில்லாது வழங்கப்பட்டுவிட்டதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

இந்தச் சம்மேளனங்கள் மிகவும் நிதி நெருக்கடியில் உள்ளன. இருப்பினும், மாதந்தோறும் பணியாளர்களுக்கு சம்பள முன்பணம் வழங்கப்படுகிறது. இந்தப் பணியாளர்களுக்கு நிலுவையில்லாது சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

33—

## தீப்பெட்டி உற்பத்தி

**வினா எண் 9819—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் அரசு அனுமதி பெறாமல் இயந்திரத்தைப் பயன்படுத்தி தீப்பெட்டி உற்பத்தி செய்வதால், 10 இலட்சம் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் நிலையை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், இதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* இயந்திரத்தைப் பயன்படுத்தி தீப்பெட்டி உற்பத்தி செய்வதை தடுக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் பரிந்துரைமீது நடவடிக்கை மேற்கொண்டு, மத்திய அரசு இயந்திரத்தால் செய்யப்படும் தீப்பெட்டிக்கு 16% தீர்வை (Duty) விதிப்பதாகவும், உரிமங்கள் வழங்கும் குழு இயந்திரமயமாக்கப்பட்ட மற்றும் பகுதி இயந்திரமயமாக்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு தொடர் உரிமம் வழங்கக் கூடாது எனத் தீர்மானித்துள்ளதாகவும் மத்திய அரசின் தொழிற்கொள்கை மற்றும் முன்னேற்றத் துறை (Industrial Policy and Promotion Department) தெரிவித்துள்ளது. மேலும் தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று சிறப்பு நேர்வாக தமிழ்நாட்டிற்குள் இயந்திர தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைக்க புதிதாக உரிமம் வழங்கப்படவில்லை எனவும் அத்துறை தெரிவித்துள்ளது.

34—

## கதர் துறை மூலம் புதிய அலகு

**வினா எண் 12459—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் கதர் துறை மூலமாக காலணிகள் மற்றும் தோல் பொருள்கள் தயாரிக்கும் அலகு ஒன்றை அரசு துவக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதுகுறித்த தகவலை அரசு அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* இவ்வினா எழவில்லை.

35—

## சம்பளம் வழங்குதல்

**வினா எண் 16374—திரு. டி. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கன்னியாகுமரி மாவட்ட பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனம் குழித்துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு கடந்த 36 மாதங்களாக சம்பளம் வழங்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* சம்மேளனம் மிகவும் நிதி நெருக்கடியில் உள்ளதால், பணியாளர்களுக்கு முழுமையான ஊதியம் வழங்க இயலாத நிலையில் சம்மேளனத்திற்கு வருகின்ற குறைந்தபட்ச வருவாயிலிருந்து பணியாளர்களுக்கு சம்பள முன்பணமாக ரூ.1,000/- வீதம் மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு, உற்பத்தி மற்றும் விற்பனையினை அதிகரித்து அதிக வருவாய் ஈட்ட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள சம்மேளன தனி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 13

**36—**

**பயிற்சி அளித்தல்**

**வினா எண் 18500—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் ஊதுவத்தி தொழில் செய்து வருபவர்களுக்கு விஞ்ஞான முறைப்படி பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமலுக்கு வரும்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**37—**

**ஊதுபத்தி கொள்முதல்**

**வினா எண் 18791—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதியில் ஊதுவத்தி உற்பத்தி அதிகம் உள்ளதால், அரசே மூலப் பொருட்களை கொடுத்து, ஊதுவத்திகளை கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நிதி நிலைமை சரியாக இல்லையாதலால், திருப்பத்தூர் தொகுதியில் ஊதுவத்தி உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்களை வாரியத்தின் மூலம் வழங்கி ஊதுவத்திகளை கொள்முதல் செய்ய இயலாத நிலையில் வாரியம் உள்ளது.

(ஆ) வினா எழவில்லை.



2005 ஏப்ரல் 13]

**38—**

**பயிற்சியாளர்கள்**

**வினா எண் 19638—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலத்திலுள்ள பட்டு நூற்பு பயிற்சி நிலையத்தில் எத்தனை பேர் தரமான பட்டு நூல் உற்பத்தி செய்வதற்கு பயிற்சி பெற்றுள்ளார்கள்?

(ஆ) அவர்களுக்கு என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன?

(இ) இந்த ஆண்டு பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலத்தில் உள்ள பட்டு நூற்பு பயிற்சி நிலையத்தில் சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன உதவியுடன் 54 நபர்களுக்கு 1999–2000, 2000–2001 மற்றும் 2002–2003 இல் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பட்டு நூற்பு தொழில் முனைவோர்களுக்கு பட்டுக்கூடு கொள்முதல் செய்வதிலிருந்து தரமான பட்டு நூல் உற்பத்தி செய்து அதிக லாபம் ஈட்டத் தேவையான அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

(இ) 2002–2003 ஆம் ஆண்டில் 4 பட்டு நூல் தொழில் முனைவோருக்கும் 11 நூற்பு தொழிலாளர்களுக்கும் "பட்டு 2000" திட்டத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. "பட்டு 2000" என்னும் இந்திய மற்றும் சுவிட்சர்லாந்து அரசுகளுடனான ஒப்பந்த உடன்படிக்கை முதிரா முதிர்வு (Pre-mature termination) அடைந்ததால், 31–3–2004-ல் இத்திட்டம் முடிவடைந்துவிட்டதால் 2003–2004 மற்றும் 2004–2005 ஆம் ஆண்டுகளில், பட்டு நூற்பு தொழில் முனைவோர்களுக்காக பயிற்சித் திட்டம் "பட்டு 2000" திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவில்லை.

[2005 ஏப்ரல் 13

**39—**

### தள்ளுபடி விற்பனை

**வினா எண் 22824—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கதர் துணிகளை மக்கள் விரும்பி வாங்குவதால், தள்ளுபடி விற்பனையை வருடம் முழுவதும் வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ)* 2000-2001 ஆம் ஆண்டு முதல் கதர் இரகங்களின் விற்பனை மீது ஆண்டு முழுவதற்கும் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டு வருகின்றது.

**40—**

### எரிவாயு

**வினா எண் 24547—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஜவ்வரிசி மற்றும் மாவு தொழிற்சாலை கழிவு நீரிலிருந்து எரிவாயு அதிக அளவில் கிடைக்க வாய்ப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதை சமையல் எரிவாயுவாகப் பயன்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ)* ஜவ்வரிசி மற்றும் மாவு தொழிற்சாலை கழிவு நீரிலிருந்து எரிவாயு அதிக அளவில் கிடைக்க வாய்ப்பு இல்லை.



2005 ஏப்ரல் 13]

*(ஆ)* கிழங்குமாவு மற்றும் ஜவ்வரிசி ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரிலிருந்து சிறு அளவில் தயாரிக்கப்படும் எரிவாயு மற்றும் மின்சக்தியை அவ்வாலைகள் தமது சொந்தத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்தி வருவதால், சமையல் எரிவாயுவாக வணிக ரீதியில் பயன்படுத்த தற்போதைய சூழலில் சாத்தியமில்லை.

**41—**

### கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 27857—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், மாக்கனூர் பகுதியில் பெருமளவில் கூடை மற்றும் மூங்கில் தயாரிப்புகள் அதிகம் நடைபெற்று வருவதால் இத்தயாரிப்பு கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தி விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், மாக்கனூர் பகுதியில் கூடை மற்றும் மூங்கில் தயாரிப்புகள் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க யாரும் இதுவரை முன்வராததால் அங்கு கூடை மற்றும் மூங்கில் தயாரிப்புகள் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**42—**

### காகிதம் தயாரிக்கும் அலகு

**வினா எண் 35080—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கண்ணாங்குளத்தில் இயங்கி வந்த காகிதம் தயாரிக்கும் அலகு கடந்த 10 ஆண்டுகளாக செயல்படாமல் உள்ளதை மீண்டும் இயக்குவதற்கு அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**43—**

## டான்சி நிறுவனம்

**வினா எண் 36426—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி இலாபத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) (1) தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி (திருத்த) சட்டம் 2001-ன்கீழ் டான்சி போன்ற பொதுத் துறை நிறுவனங்களுக்கு பத்து விழுக்காடுகளுக்கு மிகாமல் விலைச் சலுகை கொடுக்கப்பட்டுள்ளது.

(2) அச்சட்டத்தின் புதிய பிரிவு 16(dd)-ன்கீழ், சிறுதொழில் துறையினருக்கென ஒதுக்கப்பட்டுள்ள கைப்பம்புகள் மற்றும் அதன் பாகங்களை மாநிலத்திலுள்ள சிறுதொழில் துறையினரிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டுமென உத்தரவிடப்பட்டதால்—

(i) 2002–2003 ஆம் ஆண்டில் ரூ. 935.18 இலட்சங்களுக்கு கைப்பம்புகள் மற்றும் அதன் பாகங்களுக்கு டான்சிக்கு பணி ஆணைகள் கிடைத்தன. இது முந்தைய ஆண்டில் ரூ.470.88 இலட்சங்களைவிட அதிகமாகும்.

(ii) 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.980.43 இலட்சங்களுக்கு கைப்பம்புகள் மற்றும் அதன் பாகங்களுக்கு டான்சிக்கு பணி ஆணைகள் கிடைத்தன. வரும் ஆண்டுகளிலும் கைப்பம்புகள், அதன்



2005 ஏப்ரல் 13]

உதிரி பாகங்களுக்கு கிடைக்கும் பணி ஆணைகள் மேலும் அதிகரிக்கும் எனவும் அதன்மூலம் நிறுவனத்தின் செயல்பாடு மேம்படையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) அரசாணை நிலை எண் 15, சிறுதொழில் துறை, நாள் 18–3–2003–ல் கீழே குறிப்பிட்டுள்ள பொருட்களை டான்சியிடமிருந்து தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998–ன் விதி 16(C) கீழ் நேரிடையாக வாங்க வேண்டுமென கொள்முதல் ஆணை வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது.

| | அரசுத் துறை/அரசுத் துறை நிறுவனங்கள் | டான்சியிடமிருந்து வாங்கப்பட வேண்டிய பொருட்கள் |
|---|---|---|
| அ) | குடும்ப நலத் துறை | லைசால், சர்ஜிகல் ஸ்பிரிட், அறைகலன்கள் மற்றும் அச்சுப் பொருட்கள். |
| ஆ) | ஊரக வளர்ச்சித் துறை | கைப்பம்புகள் மற்றும் உதிரிப் பாகங்கள், இரும்புக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் |
| இ) | தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் | குழாய்கள் மற்றும் சிறப்பு பாகங்கள், கைப்பம்புகள் மற்றும் உதிரிப் பாகங்கள். |
| ஈ) | சென்னை மாநகராட்சி | பள்ளிக்கு வேண்டிய அறை கலன்கள், பேப்ரிகேஷன் ஒர்க்ஸ், மரக் காப்புகள், புஷ்கார்ட்ஸ், மின்கம்பங்கள், மின்தடை பெட்டிகள். |
| உ) | தமிழ்நாடு ஊட்டச் சத்துணவு திட்டத் துறை | இரும்பு சாமான்கள் மற்றும் அச்சுப் பொருட்கள். |
| ஊ) | சென்னைக் குடிநீர் வாரியம் | பம்புகளும் அதன் தொடர்பான உதிரி சாமான்கள், மின் சுருள் பொருட்கள். |
| எ) | பொதுப் பணித் துறை | இரும்பு மூடிகள் மற்றும் கட்டுமானப் பொருட்கள் |

(4) கல்வித் துறையின் வட்ட அமைப்பு மையங்கள் மற்றும் மதுரையில் அமைந்துள்ள உயர்நீதிமன்ற கிளை ஆகியவற்றிற்குத் தேவையான அறைகலன்கள் (Furniture) உற்பத்தி செய்துதர அரசு ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 13

44—

## பட்டு நூற்பு ஆலை

**வினா எண் 41512—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள அக்ரகாரம் கூட்டுறவு பட்டு நூற்பு ஆலையை அரசு அறிவித்துள்ள 15 அம்ச கொள்கை திட்டத்தில் மீண்டும் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியிலுள்ள அக்ரகாரம் கூட்டுறவு பட்டு நூற்பாலையை அரசு அறிவித்த 15 அம்ச திட்டத்தில் மீண்டும் திறப்பது குறித்து கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

45—

## தேனீ வளர்க்கும் தொழிற்சாலை

**வினா எண் 49974—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை மேல் பகுதியிலுள்ள வனத்தில் தேனீ வளர்க்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

வால்பாறை மேல் பகுதியிலுள்ள வனத்தில் தேனீ வளர்க்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2005 ஏப்ரல் 13]

46—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 50390—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு கதர் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பை அதிகமாக உருவாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கும்பகோணம் மற்றும் சேலம் பகுதிகளில் உள்ள 27 கதர் பட்டு உபகிளைகளில் 1500 நெசவாளர்கள் நெசவுப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். புதிய நெசவாளர்கள் சேர விருப்பம் தெரிவித்தால் அருகில் உள்ள கதர் பட்டு கிளைகளில் நெசவுப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்நிலையில் புதிதாக கதர் வாரியத்தின் மூலம் வேலைவாய்ப்பை அதிகமாக உருவாக்கிட திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

47—

## அட்டை பெட்டி தயாரிப்பு

**வினா எண் 50391—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையில் கதர் நிறுவனங்கள் மூலம் அட்டை பெட்டி தயாரிக்கும் தொழில்களை கூடுதலாக விரிவுபடுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**48—**

**கடனுதவி**

**வினா எண் 50397—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், கதர் வாரியம் கதர் கடைகள், சர்வோதயம் மூலம் கிராமங்களில் சிறு தொழில்கள் செய்யும் பெண்களுக்கு உதவி அல்லது கடனுதவி கிடைப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், கடனுதவி வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கிராமங்களில் சிறு தொழில்கள் செய்யும் பெண்களுக்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் நேரடியாக கடனுதவி வழங்குவதில்லை. இருப்பினும் சர்வோதய சங்கங்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள மகளிர் தாங்களாகவே முன்வந்து விளிம்புத் தொகைத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்று அதன்மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை கதரங்காடிகளில் விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக சிறு தொழில்கள் செய்யும் கிராமப் பெண்கள் பயனடைந்து வருகின்றனர்.

(ஆ) இல்லை.



2005 ஏப்ரல் 13]

**49—**

**விலை நிர்ணயம்**

**வினா எண் 50398—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மக்கள் விரும்பி வாங்கும் வகையில் கதர் துணிகளின் விலையை நிர்ணயிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மாநில அரசால் நேரடியாக, கதர் துணிகளின் விலை நிர்ணயம் செய்யப்படுவதில்லை. கதர் துணிகளின் விலையானது மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையக் குழு வழங்கும் வழிமுறைப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது. கதர் துணிகளின் விலை நிர்ணயம் செய்யப்படுவதற்கு முன் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கதர் நிறுவனங்களின் அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு குழுவானது கதர் கிராமத் தொழில் ஆணையத்தினால் அமைக்கப்பட்டு கூட்டம் நடத்தி விலை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக விவாதித்து முடிவு எடுக்கப்படுகிறது.

(ஆ) கதர் கிராமத் தொழில் ஆணையத்தால் 1-8-2004 முதல் கதர் மற்றும் பாலியஸ்டர் இரகங்களுக்கு புதிய விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**50—**

**கட்டட வசதி**

**வினா எண் 6725—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு ஆதிதிராவிடர் நலத் துறை துவக்கப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு ஆதிதிராவிடர் நல துவக்கப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அரசாணை (3ப) எண் 19, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 17–8–2004–ல் வெளியிடப்பட்டு கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

**51—**

**பள்ளி அமைத்தல்**

**வினா எண் 19104—திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதி, வீரபாண்டி கிராமத்தில் இயங்கி வரும் ஆரம்ப பாடசாலையில் படிக்கும் ஆதிதிராவிட மாணவர்களுக்கு தனியாக பள்ளி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அமல்படுத்தப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முகையூர் தொகுதி, வீரபாண்டி கிராமம், டாக்டர் அம்பேத்கர் குடியிருப்பில் பள்ளிக் கல்வித் துறையின் அரசாணை (நிலை) எண் 134, நாள் 23–8–2002-ன்படி, ஆதிதிராவிட மாணவர்களுக்கு எனத் தனியாக ஒரு தொடக்கப்பள்ளி துவக்கப்பட்டு மேற்படி பள்ளி 13–9–2002 முதல் இயங்கி வருகிறது.

**52—**

**ஆய்வகக் கட்டடம்**

**வினா எண் 32736—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம், கவரை அரசு ஆதிதிராவிடர் நலத் துறை மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வகக் கட்டடம் கட்ட அரசிடம் கருத்துரு உள்ளதா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஒன்றியம், கவரை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு ஆய்வகக் கட்டடம் கட்ட ரூ. 16.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து 7–9–2004 அன்று அரசாணை வெளியிடப்பட்டு கட்டடப் பணி நடைபெற்று வருகிறது.

**53—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 37327—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் உள்ள பெரிய தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிக் கொடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் உள்ள பெரிய தெருவில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு சமுதாயக் கூடம் கட்டித் தர முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**54—**

**மேல்நிலைப் பள்ளி**

**வினா எண் 43986—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) ஏற்காடு தொகுதி, கருமந்துறையிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதி கருமந்துறையிலுள்ள அரசு பழங்குடியினர் நல உயர்நிலைப் பள்ளி 23–8–2004 நாளிட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசாணை (நிலை) எண் 105 மூலம் மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

**55—**

## பேருந்து கட்டண சலுகை

**வினா எண் 5882—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சுயநிதி மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு முன்பு அறிவித்திருந்த ஐம்பது விழுக்காடு பேருந்து கட்டண சலுகை அரசால் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்ள சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு ஐம்பது விழுக்காடு பேருந்து கட்டண சலுகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**56—**

## பேருந்து வசதி

**வினா எண் 7576—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கந்தர்வகோட்டை கோமபுரம், கல்லுப்பட்டி, வினாலிபட்டி வழியாக நத்தமாடிப்பட்டி வரை செல்லும் பேருந்தை மொரட்டு, சோழகம்பட்டி வரை கூடுதலாக இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

கந்தர்வகோட்டை கோமபுரம், கல்லுப்பட்டி, வினாலிபட்டி வழியாக நத்தமாடிப்பட்டி வரை இயக்கப்பட்ட பேருந்து 1–12–2000 ஆம் தேதி முதல் சோழகம்பட்டி விலக்கு சாலை வழியாக கிள்ளுக்கோட்டைக்கு நீட்டித்து இயக்கப்பட்டு வருவதால், மொரட்டு, சோழகம்பட்டி வரை கூடுதலாக இயக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

**57—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 18061—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரிலிருந்து மதுரைக்கு அரசு போக்குவரத்துக் கழகத்திலிருந்து பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி நகரிலிருந்து மதுரைக்கு பொதுமக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே பேருந்து வசதி உள்ளதால்

[2005 ஏப்ரல் 13

கூடுதலாக பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**58—**

**பேருந்து வசதி**

**வினா எண் 19554—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருப்பத்தூரில் இருந்து கொரட்டி, தோரணம்பதி, கோட்டபதி, நத்தம் சுந்தரம் பள்ளி மத்தூர் வழியாக கிருஷ்ணகிரி செல்வதற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கொரட்டி, தோரணம்பதி, கோட்டபதி, சுந்தரம்பள்ளி ஆகிய கிராமங்களிலிருந்து திருப்பத்தூருக்கு போதுமான அளவு நகர் பேருந்து வசதிகள் உள்ளதால் அக்கிராமங்களிலிருந்து பயணிகள் கிருஷ்ணகிரி செல்வதற்கு திருப்பத்தூர் மற்றும் மத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து கிருஷ்ணகிரிக்கு நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் மூலம் இயக்கப்படுகிறது. வினாவில் கோரியுள்ள வழித்தடம் சுற்று வழித்தடமாகையால் நேரடி புறநகர் பேருந்து ஒன்றை இயக்கிடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**59—**

**பேருந்துகள் இயக்குதல்**

**வினா எண் 22886—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தூத்துக்குடியிலிருந்து விளாத்திகுளம் வழியாக மதுரைக்கு இரவு 10 மணிக்கு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தூத்துக்குடி—விளாத்திகுளம் நேர் வழித்தடத்தில் பின் இரவு நேரங்களில் தேவையான பேருந்து வசதிகள் இருப்பதால், தூத்துக்குடியிலிருந்து விளாத்திகுளம் வழியாக மதுரைக்கு சுற்று வழியில் இரவு 10–00 மணிக்கு பேருந்துகள் இயக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**60—**

**சிக்னல்கள் அமைத்தல்**

**வினா எண் 25396—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு பைபாஸ் சாலையில் காஞ்சிபுரம் சாலை சந்திப்பில் விபத்துக்கள் அதிகம் நடப்பதால் விபத்தினை தவிர்க்க சிக்னல்கள் பொருத்தும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு பைபாஸ் சாலையில் காஞ்சிபுரம் சாலை சந்திப்பில் சிக்னல்கள் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**61—**

**விமான நிலையத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 25449—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மீனம்பாக்கம் விமான நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மீனம்பாக்கம் விமான நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் குறித்து, இந்திய விமான நிலைய கட்டுப்பாட்டுக் குழுமமே (Airport Authority of India) நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) திட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

**62—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 30124—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி முருகாளி எஸ்டேட் உட்பகுதிக்கு பேருந்து விடப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, முருகாளி எஸ்டேட் உள்பகுதிக்கு செல்லும் சாலை பேருந்து இயக்கத்திற்கு ஏற்றவாறு இல்லாததால் அப்பகுதிக்கு பேருந்து இயக்கிட இயலாத நிலை உள்ளது.

**63—**

## பேருந்து வசதி

**வினா எண் 30753—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து கருப்புடையான்பட்டிக்கு பேருந்து வசதியை அரசு ஏற்படுத்தித் தருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து கருப்புடையான்பட்டிக்கு நேரடியாகப் பேருந்து வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**64—**

## புதிய பேருந்து வசதி

**வினா எண் 30840—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், மணவிடுதி பஞ்சாயத்து, மேலகம்மங்காடு பகுதிக்கு புதிய பேருந்து வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை ஒன்றியம், மணவிடுதி பஞ்சாயத்து, மேலகம்மங்காடு பகுதிக்கு புதிய பேருந்து வசதி அமைத்துத் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**65—**

## புதிய பேருந்து வசதி

**வினா எண் 30914—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை-மங்களத்துப்பட்டி வழித்தடத்தில் புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை ஒன்றியம், மங்களத்துப்பட்டி வழியாக பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்கள் நலன் கருதி இரு பேருந்துகள் மூலம் நான்கு தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்நடைகளே போதுமானதாகக் கருதப்படுவதால் புதுக்கோட்டை—மங்களத்துப்பட்டி வழித்தடத்தில் புதிய பேருந்து வசதி ஏற்படுத்தித் தரும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

## சிற்றுந்து வசதி

**வினா எண் 31170—திரு. ராதாரவி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை–ஜாபர்கான்பேட்டைக்கும், மாம்பலம் பேருந்து நிலையத்திற்கும், பார்சன் நகர் வளாகத்திற்கும் மாம்பலம் பேருந்து நிலையத்திற்கும் இடையே சிற்றுந்து வசதி ஏற்படுத்தித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசால் அனுமதிக்கப்பட்ட சிற்றுந்து திட்டம் சென்னை மாநகருக்குப் பொருந்தாது. எனவே, இவ்வழித்தடங்களில் சிற்றுந்துகள் இயக்க இயலாது.

**67—**

## போக்குவரத்து கிளை அலுவலகம்

**வினா எண் 33415—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறையில் போக்குவரத்து கிளை அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (கோயம்புத்தூர்) லிமிடெட், கோயம்புத்தூர்–ஆல் 1972 ஆம் ஆண்டு முதல் வால்பாறையில் கிளை அலுவலகம் தொடங்கப்பட்டு ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**68—**

## கனரக வாகனங்களைத் தடை செய்தல்

**வினா எண் 34015—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், பரமத்தி நகரில் காலை மாலை நேரங்களில் கனரக வாகனங்கள் நகருக்குள் வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், பரமத்தி நகரில் காலை மாலை நேரங்களில் கனரக வாகனங்கள் நகருக்குள் வருவது காவல் துறையால் தடுக்கப்பட்டு வருகிறது.

**69—**

## மினி பேருந்து இயக்குதல்

**வினா எண் 34413—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த எருக்கம்பட்டு கோட்டையூர் கிராமத்திற்கு மினி பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதியை சார்ந்த எருக்கம்பட்டு மற்றும் கோட்டையூர் கிராமத்தின் வழியாக சிற்றுந்து இயக்கக் கோரி, ஒருவர் மனு செய்துள்ளார். இம்மனு வட்டாரப் போக்குவரத்து அதிகாரி அவர்களால் நிராகரிக்கப்பட்டு, தற்போது மனுதாரர் சென்னை போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கின் தன்மையைப் பொறுத்து, சிற்றுந்து அனுமதிச்சீட்டு வழங்க ஆவன செய்யப்படும்.

(ஆ) மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் அனுமதி வழங்கப்பட்டால் சிற்றுந்து இயக்க ஆவன செய்யப்படும்.

**70—**

### பணிமனை

**வினா எண் 34570—திரு. க. பாரமலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்காக கட்டப்பட்ட பணிமனை பல ஆண்டுகளாக திறக்கப்படாமல் இருப்பதை விரைவில் திறக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை சிப்காட் வளாகத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்காக மார்ச் 2002-இல் பணிமனை கட்டப்பட்டு ஏப்ரல் 2002 முதல் தொடர்ந்து இயங்கி வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**71—**

### திருவள்ளுவர் பேருந்து நிலையம்

**வினா எண் 34576—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சியில் 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்ட திருவள்ளுவர் பேருந்து நிலையம் எப்பொழுது திறக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருச்சியில் 1984 ஆம் ஆண்டு கட்டப்பட்டு வந்த திருவள்ளுவர் பேருந்து நிலையம் திருச்சி அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கத்திற்கு பயன்படாத நிலையில் இத்திட்டம் கைவிடப்பட்டுவிட்டது.

**72—**

### மினி பேருந்து இயக்குதல்

**வினா எண் 34588—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த மலையாம்பட்டு மற்றும் அரவட்லா கிராமங்களுக்கு மினி பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரணாம்பட்டு தொகுதியைச் சார்ந்த மலையாம்பட்டு மற்றும் அரவட்லா பகுதியில் சிற்றுந்து இயக்க அனுமதி வழங்கக் கோரி சிலர் மனு செய்துள்ளனர். இம்மனுக்கள் வட்டாரப்

[2005 ஏப்ரல் 13

போக்குவரத்து அதிகாரி, வேலூர் அவர்களால் நிராகரிக்கப்பட்டன. இம்மனுதாரர்கள் அனுமதிச் சீட்டு வழங்கக் கோரி மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்துள்ளனர். இவ்வழக்கின் தன்மையைப் பொறுத்து மினி பேருந்து இயக்க ஆவன செய்யப்படும்.

**73—**

## புதிதாக பேருந்து இயக்குதல்

**வினா எண் 35848—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருக்கோவிலூர் நகரிலிருந்து திருவண்ணாமலை, சேத்பட், ஆரணி, வந்தவாசி வழியாக காஞ்சிபுரத்திற்கு புதிதாக அரசு பேருந்து இயக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* திருக்கோவிலூர் நகரிலிருந்து திருவண்ணாமலை, சேத்பட், ஆரணி, வந்தவாசி வழியாக காஞ்சிபுரத்திற்கு புதிதாக அரசு பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* கேள்விக்கு இடமில்லை.

**74—**

## புதிய பணிமனை

**வினா எண் 36128—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஆண்டிமடம் தொகுதிக்கு உட்பட்ட செந்துறையில் புதிய போக்குவரத்து பணிமனை அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)* ஆண்டிமடம் தொகுதிக்கு உட்பட்ட செந்துறையில் புதிய போக்குவரத்து பணிமனை அமைக்க தற்போதுள்ள அரசாணைகளின்படி வழிவகை இல்லை.

*(ஆ)* கேள்வி எழாது.

**75—**

## போக்குவரத்து விபத்துக்கள்

**வினா எண் 38030—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் போக்குவரத்து விபத்துக்கள் எத்தனை? உயிரிழப்புகள் எத்தனை?

*(ஆ)* விபத்துக்கள் நடைபெறாமல் தடுப்பதற்கு அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ)*

| வருடம் | மொத்த சாலை விபத்துக்களின் எண்ணிக்கை | சாலை விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 2001 | 51978 | 9571 |
| 2002 | 53503 | 9939 |

*(ஆ)* தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் விபத்து அதிகம் நடக்கும் பகுதிகள் அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அப்பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கிணறுகள், குளங்கள், குட்டைகள், கால்வாய்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு, தடுப்புச் சுவர் அமைக்கப்படுகிறது.

மேலும் நெடுஞ்சாலை சுற்றுக்காவல் பணியானது முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டு பணியாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. ராடார் துப்பாக்கி, மூச்சு சோதனைக் கருவி போன்ற மிக நவீன சாதனங்கள் பொருத்தப்பட்ட 80 புதிய வண்டிகள் நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரமும் சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மேலும் குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டுவோர் மற்றும் அதிவேகமாக வாகனங்களை ஓட்டுவோர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**76—**

**மினி பஸ்**

**வினா எண் 38354—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தனியார் மினி பஸ் எத்தனை இயக்கப்படுகின்றன?

(ஆ) 2003 ஆம் ஆண்டில் அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்போது 83 சிற்றுந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) பெர்மிட் கோரி புதிய விண்ணப்பங்கள் பெறப்படின் அவை விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

**77—**

**பேருந்து வசதி**

**வினா எண் 40811—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு–தாதிரெட்டிப்பள்ளி 24 வழித்தட பேருந்து நிறுத்தப்பட்டு மகிமண்டலம் வரை மட்டும் செல்வதை முன்பிருந்தவாறு மீண்டும் இயக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நகரத்தடம் 24 ஆற்காடு–தாதிரெட்டிப்பள்ளி என ஒரு போதும் இயக்கப்பட்டதில்லை. எனவே, அதனை மீண்டும் ஆற்காடு–தாதிரெடடிப்பள்ளி என இயக்குவதற்கு சாத்தியக்கூறு இல்லை.

**78—**

**கிளை அலுவலகம்**

**வினா எண் 43586, 43603—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் வட்டாரப் போக்குவரத்துத் துறையின் கிளை அலுவலகம் ஒன்றை அரசு ஏற்படுத்த முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் வாகனங்கள் குறைவாகவே உள்ளதால் புதிய போக்குவரத்து அலுவலகம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**79—**

**கணினிமயமாக்குதல்**

**வினா எண் 44279—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை கணினிமயமாக அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) போக்குவரத்துத் துறையில் இந்நிதியாண்டில் (2004-2005) இரண்டாம் கட்ட கணினிமயமாக்கும் பணி அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களிலும் மற்றும் அனைத்து பகுதி அலுவலகங்களிலும் தொடங்கப்படவுள்ளது. அப்போது நாமக்கல் மாவட்டத்திலுள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் அம்மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து போக்குவரத்துத் துறை பகுதி அலுவலகங்களும் கணினிமயமாக்கப்படும்.

**80—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 45984—திரு. ப. அரசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியிலிருந்து தொழுவங்காடு, சிட்டங்காடு, கரிசக்காடு, பரவாக்கோட்டை வழியாக மறமடக்கிக்கு கூடுதலாக பேருந்துகள் இயக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கியிலிருந்து தொழுவங்காடு, சிட்டங்காடு, கரிசக்காடு, பரவாக்கோட்டை வழியாக மறமடக்கிக்கு கூடுதலாக பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**81—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 47279—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் வாகனங்களால் ஏற்படும் புகையினால் மாசு ஏற்படுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரில் எவரேனும் தனியார் புகை சோதனை நிலையம் நடத்த முன்வந்து மனு செய்தால் அவ்வகை சோதனை நிலையம் அமைக்க இயலும்.

**82—**

## தானியங்கி கருவிகள்

**வினா எண் 49046—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் முக்கிய பகுதிகளான அரசு மருத்துவமனை, பன்னீர்செல்வம் பார்க், புதிய பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையம் பகுதிகளிலுள்ள போக்குவரத்து தானியங்கி கட்டுப்பாட்டு கருவிகளை இயக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஈரோடு நகரில் பன்னீர்செல்வம் பார்க், புதிய பேருந்து நிலையம் போன்ற முக்கிய சந்திப்புகளில் எச்சரிக்கை விளக்குகள் மற்றும் தானியங்கி விளக்குகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**83—**

**சிற்றுந்து**

**வினா எண் 49855—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், செம்பதனிருப்பு ஊராட்சியிலிருந்து சட்டநாதபுரம் ஊராட்சி வரை இயங்கி வரும் சிற்றுந்தை (Mini Bus) சீர்காழி புதிய பேருந்து நிலையம் வரை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், செம்பதனிருப்பு ஊராட்சியிலிருந்து சட்டநாதபுரம் ஊராட்சி வரை இயங்கும் மினி பேருந்தை சீர்காழி புதிய பேருந்து நிலையம் வரை தடம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்க தற்போது நடைமுறையிலுள்ள "நாட்டுடைமை பகுதி திட்டத்தில்" வழிகள் இல்லை.

**84—**

**சிற்றுந்து வசதி**

**வினா எண் 49856—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொண்டலிலிருந்து கொள்ளிடம் முக்கூட்டு வரை இயங்கிவரும் சிற்றுந்தை (Mini Bus) ஆதமங்களம் ஊராட்சியிலிருந்து கொண்டல் வழியாக சீர்காழி புதிய பேருந்து நிலையம் வரை இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மினிபேருந்து தடம் நீட்டிப்பு செய்து வழங்க தற்போது நடைமுறையில் உள்ள நாட்டுடைமை பகுதி திட்டத்தில் வழிகள் இல்லை. எனவே, மேற்கூறிய வழித்தடத்தில் இயக்கப்பட்டுவரும் மினி பேருந்துகளுக்கு தட நீட்டிப்பு வழங்க இயலாது.

**85—**

**சிற்றுந்து வசதி**

**வினா எண் 50575—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் சிற்றுந்து வசதி செய்து தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் 160 சிற்றுந்துகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டதன்மூலம் அனைத்து குக்கிராமங்களுக்கும் சிற்றுந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் பெர்மிட் கோரி மனுக்கள் வரப்பெறின் விதிகள் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்கப்படும்.

**86—**

**வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்**

**வினா எண் 51313—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடி வட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (R.T.O.) அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை.

**87—**

## சோதனை மையம்

**வினா எண் 51314—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் வாகனங்களின் புகை வெளியேற்றும் அளவை சோதனை செய்ய மாசுக் கட்டுப்பாடு சோதனை மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் வாகனங்களின் புகை வெளியேற்றும் அளவை சோதனை செய்வதற்கான சோதனை மையம் அமைப்பது குறித்த திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) விரைவில் தொடங்கப்படும்.

**88—**

## பேருந்து இயக்குதல்

**வினா எண் 52997—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

:



2005 ஏப்ரல் 13]

(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட ஆண்டிமடம்–தத்தூர்–கீழ்நெடுவாய்–நெட்டிலக்குறிச்சி–இறவாங்குடி வழியாக காட்டுமன்னார்குடி வரை அரசுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட ஆண்டிமடம்–தத்தூர்–கீழ்நெடுவாய்–நெட்டிலக்குறிச்சி–இறவாங்குடி வழியாக காட்டுமன்னார்குடி வரை பகுதி பகுதியாக பேருந்து வசதி பெற்றுள்ளது. மேலும், இவ்வழித்தடம் புதிய வழித்தடமாகும். புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**89—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 53284—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பிராட்வேயிலிருந்து தாம்பரம்–கூடுவாஞ்சேரி வழியாக சிங்கபெருமாள்கோவில் வரை மாநகர பேருந்துகள் இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சென்னை பிராட்வேயிலிருந்து தாம்பரம்–கூடுவாஞ்சேரி வழியாக சிங்கபெருமாள்கோவில் வரை மாநகர பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**90—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 53839—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலிருந்து சென்னை, திருநெல்வேலி, திருச்சி போன்ற மாவட்டங்களுக்குச் செல்ல பேருந்துகள்விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பயணிகள் கோயம்புத்தூர் மாவட்ட அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்தை பயன்படுத்தி பொள்ளாச்சி வந்து அதன் வழியாக சென்னை, திருநெல்வேலி, திருச்சி போன்ற ஊர்களுக்குச் செல்ல அரசு விரைவுப் பேருந்துகளை பயன்படுத்திக் கொள்கின்றனர். எனவே, மேற்கூறிய மாவட்டங்களுக்கு நேரடியாக பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**91—**

## கடல்சார் உயிரியல் தொழில்நுட்பப் பூங்கா

**வினா எண் 23787—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கடல்சார் வள ஆதாரங்களை பயன்படுத்தும் நோக்கோடு "டிட்கோ" நிறுவனம் சென்னைக்கு அருகே கடல்சார் உயிரி தொழில்நுட்பவியல் பூங்கா ஒன்றை அமைக்க அரசு எடுத்து வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

கடல்சார்ந்த உயிரியல் தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகப் பிரிவுகள் அமைய ஏதுவாக கடல்சார் உயிரியல்



தொழில்நுட்பப் பூங்கா ஒன்றினை தனியாருடன் இணைந்து கூட்டு முயற்சியில் அமைத்திட டிட்கோ நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. வரைவு திட்ட அறிக்கை மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், சாலவான்குப்பம் கிராமம் கடற்கரைப் பகுதியில் 100 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இதில் 40 ஏக்கர் உப்பு நிலத்தை குத்தகைக்குப் பெறவும் எஞ்சியுள்ள 60 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்தவும் டிட்கோ நிறுவனம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. தகுந்த தொழில் முனைவரை டிட்கோ நிறுவனம் கண்டறிந்து வருகிறது. தொழில் முனைவர் தேர்வுக்குப்பின் முதலீட்டிற்கான முடிவுகள் எடுக்கப்படும்.

**92—**

## பெரும் தொழில் ஆரம்பித்தல்

**வினா எண் 31680—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு அரசு சார்பில் பெரும் தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த தொழில்? எந்த மாவட்டத்தில் தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்த ஆண்டு அரசு சார்பில் பெரும்தொழில் ஆரம்பிக்கும் உத்தேசம் எதுவும் தற்போது இல்லை.

**93—**

## சிப்காட் விரிவாக்கம்

**வினா எண் 42217—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை சிப்காட் விரிவாக்கத் திட்டம் 2003–2004 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் இராணிப்பேட்டையில் தொழில் வளாகத்தை 1973 ஆம் ஆண்டு 729.78 ஏக்கர் நிலப்பரப்பிலும், முதற்கட்ட விரிவாக்கத்தை 1983 ஆம் ஆண்டு 133.13 ஏக்கர் நிலப்பரப்பிலும் உருவாக்கியது. இந்தத் தொழில் வளாகத்தில் நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. ஏற்கெனவே, இராணிப்பேட்டை தொழில் வளாகத்தில் 1997 ஆம் ஆண்டு மூன்றாவது கட்ட விரிவாக்கத்திற்காக 496.07 ஏக்கர் நிலப்பரப்பை கையகப்படுத்தியுள்ளது. தற்போது தேவையான அளவில் தொழில் முனைவோர்களிடமிருந்து நிலம் வேண்டி விண்ணப்பங்கள் இல்லாததால், இந்த விரிவாக்கத் திட்டத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் தொடங்கப்படவில்லை. தொழிற்சாலைகள் தொடங்க தொழில் முனைவோர்கள் ஆர்வம் காட்டினால், இந்த மூன்றாம் விரிவாக்கத் திட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் தொடங்கப்படும்.

**94—**

## சுண்ணாம்பு படிகங்கள்

**வினா எண் 50853—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் அருகில் ஏராளமான அளவில் சுண்ணாம்புப் படிகங்கள் புதைந்து இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஜெயங்கொண்டம் அருகில் சுண்ணாம்புப் படிகங்கள் ஏதும் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



**95—**

## இணை மின் உற்பத்தி நிலையம்

**வினா எண் 55923—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறு என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சக்கை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) என்.பி.கே.ஆர்.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு சக்கை மூலம் இணை மின் உற்பத்தி நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு ஏதும் இல்லை.

**96—**

## சிகப்பு கல் குவாரி

**வினா எண் 60908—திரு. ப. அரசன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் சிகப்பு கல் குவாரி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பனங்குடி, கீழப்பனையூர், பூவரசக்குடி, தெட்சினாபுரம், விராலிபட்டி, சவேரியார்பட்டி கிராமங்களில் பட்டா நிலங்களில் 21.51.0 ஹெக்டேர் பரப்பளவில் சிகப்புக் கல் எடுக்கும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

**97—**

**சிமெண்ட் களம்**

**வினா எண் 6898—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, ஏரகரம் கிராமத்து விவசாயிகளுக்கு சிமெண்ட் களம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2004–2005 ஆம் ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்றவாறு தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி, ஏரகரம் கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர் களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**98—**

**ஒருங்கிணைப்பு**

**வினா எண் 18612—திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறை (Agriculture) தோட்டக்கலை (Horticulture) மற்றும் விற்பனைத் துறைகளை (Marketing) ஒருங்கிணைத்து வட்டார அளவில் ஒரே துறைத் தலைமையின்கீழ் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



2005 ஏப்ரல் 13]

**99—**

**பருத்தி விதை ஆராய்ச்சி மையம்**

**வினா எண் 19588—திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் பருத்தி விதை ஆராய்ச்சி மையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தாலுகாவில் பருத்தி விதை ஆராய்ச்சி மையம் நிறுவ தற்போது உத்தேசம் ஏதுமில்லை.

**100—**

**ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளித்தல்**

**வினா எண் 19905—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயிகளுக்கு தரமான பயிரிடு பொருட்கள் கிடைப்பதை முறைப்படுத்தவும், தேவை அடிப்படையிலான ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிக்கவும் தகுந்த அமைப்பினை உருவாக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த அமைப்பின் தலைமையிடம் கோவையில் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2005 ஏப்ரல் 13

**101—**

## கட்டமைப்பு வசதிகள்

**வினா எண் 19906—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனை ஆகியவற்றிற்குப் போதிய கட்டமைப்பு வசதிகளை வழங்கிட அரசு எடுக்க உள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனை ஆகியன தொடர்பாக விவசாயிகளின் விளைபொருட்களை இருப்பு வைக்க கிட்டங்கி வசதி செய்து கொடுத்தல், பொருளீட்டுக் கடன் வழங்குதல், உலர்களங்கள் அமைத்தல், ஓய்வு அறை கட்டிக் கொடுத்தல், சுகாதார வசதி, இலவச மருத்துவ வசதி, உள்கட்டமைப்பு வசதிகள் வேளாண்மை விற்பனை குறித்த தகவல் மையங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற வசதிகள் விவசாயிகளுக்காக வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையால் அளிக்கப்பட்டு வருகின்றன.

**102—**

## தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

**வினா எண் 22919—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் எத்தனை நிறுவனங்களில் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்துள்ளது?

(ஆ) இதில் எத்தனை நிறுவனங்கள் இலாபத்தில் உள்ளன? எத்தனை நிறுவனங்கள் நட்டத்தில் உள்ளன?

(இ) நட்டத்திலுள்ள நிறுவனங்கள் இலாபத்தில் இயங்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட எட்டு நிறுவனங்களில் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்துள்ளது:

1. சதர்ன் பெஸ்டிசைட்ஸ் கார்ப்பரேசன் லிமிடெட்
2. டென்டெக் அக்ரோ கெமிக்கல்ஸ் லிமிடெட்
3. டச் ராமா அக்ரோ புட்ஸ் லிமிடெட்
4. இண்டஸ் புளோரா பேஸ் லிமிடெட்
5. சச்சின் புளோரிடெக் லிமிடெட்
6. போச்சிராஜு புளோரிடெக் லிமிடெட்
7. நெக்டர் பயோடெக் லிமிடெட்
8. சன்புளோசம் புளோரல் லிமிடெட்

(ஆ) மேற்காணும் நிறுவனங்களில் வரிசை எண் 4-ல் கண்டுள்ள நிறுவனத்தைத் தவிர ஏனைய நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன.

(இ) மேற்படி நிறுவனங்கள் யாவும் இணை/கூட்டுறவுத் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் (Associate Companies). ஆகவே நட்டத்தில் உள்ள அந்நிறுவனங்களை இலாபத்தில் இயக்க அரசளவில் நடவடிக்கை எடுக்கும் வினா எழவில்லை. இருப்பினும் மேற்படி நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகளைத் திரும்பப் பெற 'தாய்' நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**103—**

## குளிர்பதனக் கிடங்கு

**வினா எண் 25717—திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதியில் விவசாயிகள் பயனடையும் பொருட்டு ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்து நியாயமான கட்டணம் வசூலிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகாசி தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு ஒன்றியத்திலும் குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் அளவுக்கு விளைபொருட்கள் வரத்து இல்லை. எனவே, சிவகாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒவ்வொரு ஒன்றியத்திலும் குளிர்பதனக் கிடங்கு அமைக்க வாய்ப்பு இல்லை.

**104—**

## மஞ்சள் வணிக வளாகம்

**வினா எண் 28906—திரு. கே.எஸ். பழனிசாமி மற்றும் திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் மஞ்சள் வணிக வளாகம் இன்னும் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் ஆரம்பிக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை சிப்காட் வளாகத்தில் மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்கான நடவடிக்கை கைவிடப்பட்டு அதற்குப் பதிலாக ஈரோடு அருகில் உள்ள நசியனூர், வில்லரசம்பட்டி கிராமத்தில் ரூ.36.32 கோடி மொத்தச் செலவில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான அரசாணையும் வெளியிடப்பட்டுள்ளது.



**105—**

## மானியங்கள்

**வினா எண் 30043—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்களில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்துத் தகவல் ஏதாவது வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேளாண்மைத் துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானியங்களில் முறைகேடுகள் நடைபெற வாய்ப்பில்லை.

**106—**

## பயிர்களுக்குப் பாதிப்புகள்

**வினா எண் 30505—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன உரங்களால் பயிர்களுக்கு இதர பாதிப்புகள் ஏற்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பரிந்துரைக்கும் அளவைவிட அதிகமாகவோ/குறைவாகவோ இரசாயன உரங்கள் இடும்பொழுது பாதிப்புகள் ஏற்படுகின்றன.

[2005 ஏப்ரல் 13

**107—**

**விவசாயக் களம்**

**வினா எண் 30728—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாவைக்குளம் கிராமத்தில் விவசாயக் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்றவாறு கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் உள்ள பாவைக்குளம் கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**108—**

**குளிர்சாதன அறைகள்**

**வினா எண் 30946—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காய்கறிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உதவியாக மாவட்டந்தோறும் காய்கறிகளைப் பாதுகாக்க குளிர்சாதன அறைகள் கட்டித் தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை. தனியார் முனைவர் குளிர்பதனக் கிட்டங்கிகள் கட்ட முன்வந்தால் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை மூலம் உதவிகள் அளிக்கப்படும்.



2005 ஏப்ரல் 13]

**109—**

**ஊதிய விகிதம் நிர்ணயம்**

**வினா எண் 31950—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோலப்பன் குழு பரிந்துரைப்படி அரசு தோட்டக் கலைப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு ஊதிய விகிதம் எப்போது நிர்ணயம் செய்யப்படும்?

(ஆ) இதுவரை இந்தக் குழுவின் பரிந்துரையைச் செயல்படுத்தாததற்குக் காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) கோலப்பன் குழு பரிந்துரைப்படி அரசு தோட்டக் கலைப் பண்ணைத் தொழிலாளர்களுக்கு 1999 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முதல் ஆண் விவசாயத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ.54/-ம் பெண் விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.45/-ம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) பரிந்துரைகள் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால் இவ்வினா எழவில்லை.

**110—**

**அரசு சலுகைகள்**

**வினா எண் 31961—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் அனைத்துத் துறைப் பணியாளர்களைப்போல அரசு தோட்டக் கலைப் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் அரசு வழங்குகின்ற சலுகைகள் கிடைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கிடைக்கும்?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு தோட்டக் கலைப் பண்ணைத் தொழிலாளர்கள், அரசின் குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டத்தின்கீழ் வருவதால் இதர அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் தொழிலாளர்களுக்கு வழங்க வாய்ப்பில்லை.

**111—**

**தரிசு நில மேம்பாடு**

**வினா எண் 33387—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் 37-வது கோட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விரிவான தரிசு நிலத் திட்டம் மாநகராட்சி மற்றும் நகராட்சி எல்லைகளுக்குள் செயல்படுத்தப்படுவதில்லை. எனவே, சேலம் மாநகரில், 37-வது கோட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்த வாய்ப்பில்லை.

**112—**

**வேளாண் பள்ளி**

**வினா எண் 33944—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரத்தில் இயங்கி வந்த வேளாண் பள்ளி கடந்த சில ஆண்டுகளுக்கு முன் நிறுத்தப்பட்டதன் காரணம் என்ன?





2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரத்தில் இயங்கி வந்த வேளாண் பள்ளி அரசாணை எண் 566, வேளாண்மைத் (வேஉ.5) துறை நாள் 3-9-1992-ல் வழங்கிய ஆணைப்படி மூடப்பட்டது. அரசு மேல்நிலைப் பள்ளிகளிலேயே விவசாயப் பாடங்கள் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதாலும், வயல் விளக்க அலுவலர் பதவிக்கு நியமனம் செய்யப்படுவது முழுமையாக நிறுத்தப்பட்டுவிட்டதாலும், இந்தப் பயிற்சி மையங்கள் நிறுத்தப்பட்டன.

**113—**

**விதைப் பரிசோதனை நிலையம்**

**வினா எண் 34186— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் விதைப் பரிசோதனை நிலையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**114—**

**மண் ஆராய்ச்சி நிலையம்**

**வினா எண் 35852—திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் நகரில் மண் ஆராய்ச்சி நிலையம் துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூர் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில், கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஏற்கெனவே ஒரு மண் ஆய்வுக் கூடம் செயல்பட்டு வருகிறது. எனவே, தனியே ஒரு மண் ஆய்வுக் கூடம் ரிஷிவந்தியம் தொகுதி, திருக்கோவிலூரை தலைமையிடமாகக் கொண்டு துவக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**115—**

## குளம் அமைத்தல்

**வினா எண் 35854— திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பாப்பான்குளம் ஊராட்சியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள விவசாயத்திற்குரிய பண்ணை நிலத்தை, நீர்ப்பிடிப்பு மற்றும் பாசன வளத்திற்காக குளமாக அமைக்க அரசு விரைவில் முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பண்ணை நிலத்தில் ஒரு பகுதியைக் குளமாக மாற்றும் பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**116—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

**வினா எண் 36145—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடத்தில் ஏற்கெனவே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஒன்று செயல்பட்டு வருகிறது.

(ஆ) வினா எழவில்லை.

**117—**

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

**வினா எண் 36146—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) செந்துறையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைத்துத் தரும் சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**118—**

## நெற்களம்

**வினா எண் 36511—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, தாழம்பேடு கிராமத்தில் நெற்களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2004-2005 ஆம் ஆண்டில் நிதிநிலைக்கு ஏற்றவாறு செங்கற்பட்டு தொகுதியில், தாழம்பேடு கிராமத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**119—**

**சாலை வசதி**

**வினா எண் 37112—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பட்டமுடையான் செல்லப்பன் கோட்டை சாலையைக் கரும்புச் சாலைகள் திட்டத்தில் எடுத்துச் செய்யும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, பட்டமுடையான் செல்லப்பன் கோட்டை சாலை, அறந்தாங்கி நெடுஞ்சாலை உட்கோட்டத்தைச் சார்ந்த இதர மாவட்ட சாலையாகும். (Other District Roads) இது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ளது. எனவே, இச்சாலையைக் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் எடுத்துச் செப்பனிடும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**120—**

**நெய்வேலி காட்டாமணக்கு**

**வினா எண் 37910—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏரி, குளங்களில் நிரம்பியுள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏரி மற்றும் குளங்களில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அழிக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

**121—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 38375—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் பேரூராட்சியில் வேளாண்மைக் கல்லூரி புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.

**122—**

**பயிற்சி நிலையங்கள்**

**வினா எண் 40765—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மா, வாழை, முந்திரி, வீரிய ஒட்டுவகைக் காய்கறிகள், மூலிகைகள் மற்றும் வாசனைச் செடிகள், மலர்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் கோவை மாவட்டத்திலும், குறிப்பாக உடுமலையிலும், பயிற்சி நிலையங்கள் நிறுவ அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் விவசாயிகளுக்கு வேளாண்மையில் அனைத்துத் தொழில்நுட்பங்களிலும் உரிய பயிற்சி அளிக்கப்படுகிறது. கோவை

[2005 ஏப்ரல் 13

மாவட்டத்தில் உடுமலைப் பகுதியில் பயிற்சி நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏதும் தோட்டக் கலைத் துறையின் பரிசீலனையில் இல்லை.

**123—**

**வேளாண்மைக் கல்லூரி**

**வினா எண் 41008—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியில் வேளாண்மைக் கல்லூரி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**124—**

**நவீன தொழில்நுட்பம்**

**வினா எண் 41141—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியத்தில் தோட்டக் கலைப் பயிர் சாகுபடியில் நவீன தொழில்நுட்பத்தைப் பிரபலமடையச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோட்டக் கலை சாகுபடியில் நவீன தொழில்நுட்பம் 2000–2001 முதல் எடப்பாடி ஒன்றியத்தில் தீவிரப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தோட்டக் கலைத் துறை மூலம் தோட்டக் கலைப் பயிர்ச் சாகுபடியில் உள்ள நவீன



2005 ஏப்ரல் 13]

தொழில்நுட்பங்களைப் பிரபலமடையச் செய்து அவற்றை விவசாயிகள் கடைபிடித்து அதிக மகசூல் பெறவும், கூடுதல் வருவாய் ஈட்டவும், தோட்டக் கலை சுய உதவிக் குழுக்களை ஆரம்பித்து அதன்மூலம் குழுவில் உறுப்பினர்களாக உள்ள தோட்டக் கலை விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை எடுத்துக் கூறுவதுடன், தோட்டக் கலைத் திட்டங்களின் மூலம் இடுபொருட்களும் மானிய விலையில் வழங்கப்படுகின்றன.

**125—**

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்**

**வினா எண் 41302—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, வெள்ளிமலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சங்கராபுரம் தொகுதி, வெள்ளிமலையில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**126—**

**பயிற்சி முகாம்**

**வினா எண் 42568—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட விவசாயிகளுக்குப் புதிய விதைகளின் உபயோகத்தை அறிய பயிற்சி முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுத்து விளம்பரப்படுத்துமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். பயிற்சி நடத்துமுன் பயிற்சி பற்றி விவசாயிகள் அறிந்துகொள்ள பத்திரிகை மற்றும் அகில இந்திய வானொலிக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டு விளம்பரம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும்.

(ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி, ஆனைமலைப் பகுதிகளில் பெய்துள்ள நல்ல மழை காரணமாக, நெல் குறுவை சாகுபடி முழு வீச்சில் துவங்கியுள்ளதால், நெல் சாகுபடி மற்றும் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஜூலை 2004 முதல் வாரத்தில் நெல் விதை உற்பத்தி மற்றும் சான்று விதை உற்பத்தி நடைமுறைகள் பற்றிய பயிற்சியும், கோவை மாவட்டம், அவிநாசிப் பகுதியில் காய்கறி விதை உற்பத்தியாளர் மற்றும் சாகுபடியாளர்கள் பயன்பெறும் வகையில் காய்கறி விதை உற்பத்தி மற்றும் விதைச்சான்று நடைமுறைகள் பற்றிய பயிற்சி செப்டம்பர் 2004 முதல் வாரத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**127—**

## பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி

**வினா எண் 42571—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி விவசாயிகளுக்கு பயிர்ப் பாதுகாப்புப் பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

**128—**

## விதைகள் விற்பனை

**வினா எண் 42591—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மதுரை தனியார் விதைக் கடைகளில் சரியான முளைப்புத் திறன் இல்லாமலுள்ள நெல் மற்றும் காய்கறி விதைகள் விற்பதை அரசு அறியுமா?

(ஆ) இதுகுறித்துக் கடை உரிமையாளர்கள்மீது நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) முளைப்புத் திறன் தரக்குறைவு என அறியப்பட்ட அனைத்து விதைக் குவியல்களுக்கும் விற்பனை தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. 28.172 மெ. டன் விதைகளும், 0.038 மெ. டன் வெங்காய விதைகளும், விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதிலிருந்து தடை வழங்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட மேற்படி விதைகளின் மொத்த மதிப்பு ரூ.3.388 இலட்சம். தரக்குறைவான மேற்படி விதைகள் விநியோகம் மேற்கொண்டவர்மீது நீதிமன்றத்தில் விதைச் சட்டப்படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.

**129—**

## மானியம் வழங்குதல்

**வினா எண் 42607—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்புப் பயிர்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டு இருக்கும்போது அதற்கு மானியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறட்சியினால் பாதிக்கப்பட்ட கரும்புப் பயிர்களுக்கென மானியம் வழங்கும் பிரத்தியேகத் திட்டம் அரசிடம் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**130—**

**உரிமம் வழங்குதல்**

**வினா எண் 43576—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நெல் விதைகளை விற்பனை செய்ய தனி நபர்களுக்கு அரசு உரிமம் வழங்கியுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அந்நெல் விதைகளை அரசு பரிசோதனை செய்கிறதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். தமிழகத்தில் தனி நபர்/தனியார் நிறுவனங்களுக்கு பிப்ரவரி 2004 மாதம் முடிய 3,920 எண்கள் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) ஆம். தனியார் விற்பனை நிலையங்கள் விநியோகிக்கும் விதைக் குவியல்களிலிருந்து விதைத் தரம் உறுதி செய்ய விதை மாதிரிகள் எடுக்கப்படுகின்றன.*

**131—**

**உரப் பரிசோதனை நிலையம்**

**வினா எண் 43999—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உரப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*



2005 ஏப்ரல் 13]

**132—**

**கசிவுநீர்க் குட்டை**

**வினா எண் 47992—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சொரக்காயல்நத்தம் ஊராட்சியில் சர்வே எண் 45, 46-ல் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, சொரக்காயல்நத்தம் ஊராட்சியில் சர்வே எண் 45, 46-ல் கசிவுநீர்க் குட்டை அமைக்கும் பணிக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**133—**

**பயிர்கள் அபிவிருத்தித் திட்டம்**

**வினா எண் 51316—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2003-2004 ஆம் ஆண்டில், ஏற்காடு தொகுதியில் வணிக மலரியல், நறுமண சுவைப் பயிர்கள், காய்கறிகள், காளான், பழப் பயிர்கள், மூலிகைச் செடிகள், தோட்டக் கலைப் பயிர்கள் ஆகியவற்றின் அபிவிருத்தித் திட்டத்தைச் செயல்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டில், ஏற்காடு தொகுதியில் தோட்டக் கலை அபிவிருத்திக்காகப் பல்வேறு மாநில மற்றும் மத்திய*

[2005 ஏப்ரல் 13

சார்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மாநில அரசுத் திட்டங்களான ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் நலத் திட்டம் போன்ற திட்டங்களும், மாநில மற்றும் மைய அரசுகளிடையே நிதிப் பகிர்வுறும் திட்டங்களில் வணிக மலர் அபிவிருத்தித் திட்டம், பழங்கள் அபிவிருத்தித் திட்டம், நறுமணச் சுவைப் பயிர்கள் திட்டம், மூலிகை அபிவிருத்தித் திட்டங்கள் போன்றவை மேற்கண்ட தொகுதியில் செயல்படுத்தப்பட்டன. இத்திட்டங்களின் மூலம் விவசாயிகள் பெருமளவு பயனடைந்துள்ளனர்.

**134—**

**மூலிகைச் செடிகள் சாகுபடி**

**வினா எண் 51323—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஏற்காடு தொகுதியில் தோட்டக் கலை வளர்ச்சி இயக்கத்தின் மூலம் மூலிகைச் செடிகள் சாகுபடி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தோட்டக் கலையில் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு தோட்டக் கலை வளர்ச்சி இயக்கம் (Horticulture Development Mission) என்ற திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11–2–2004 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்திற்கென 2003–2004–ல் ரூபாய் இரண்டு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2004–2005–ல் இத்திட்டம் தோட்டக் கலைக் கொள்கையில் சேர்க்கப்பட்டு (Policy Note) இந்நிதியாண்டு முதல் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மாவட்ட அளவில் செயல்படுத்தத் தொடங்கும்போது ஏற்காடு தொகுதியில் மூலிகைச் சாகுபடி செய்வது குறித்துப் பரிசீலிக்கப்படும்.



2005 ஏப்ரல் 13]

**135—**

**உழவர் சந்தைகள்**

**வினா எண் 51595—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில் உழவர் சந்தைகளை அனைத்துப் பகுதிகளிலும் அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டத்தை உள்ளடக்கி 10 உழவர் சந்தைகள் செயல்பட்டு வந்தன. இதில் குமாரபாளையம் உழவர் சந்தையில் குறைவாகக் காய்கறி வரத்து மற்றும் விவசாயிகள் எண்ணிக்கை குறைவாக வந்தமையால் அச்சந்தை மூடப்பட்டது. எனவே, சேலம் மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உழவர் சந்தைகள் திறக்க வாய்ப்பில்லை.

*(ஆ)* எழாது.

**136—**

**டான்வா திட்டம்**

**வினா எண் 51627—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் டான்வா திட்டம் செயல்படுத்தப்பட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) டான்வா திட்டம் (TANWA – தமிழ்நாட்டில் வேளாண்மையில் பெண்கள்) 31-3-2003-ல் நிறைவு பெற்றுவிட்டது. இந்நிலையில், ஒட்டப்பிடாரம் தொகுதியில் டான்வா திட்டத்தைச் செயல்படுத்த வாய்ப்பில்லை.

(ஆ) டான்வா திட்டம் – நிலை 2, டென்மார்க் நாட்டு நிதியுதவியுடன் 1994 முதல் 2003 வரை தமிழநாட்டில் செயல்படுத்தப்பட்டபோது, ஒட்டப்பிடாரம் பகுதியில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**137—**

## ஆயில் இஞ்சின்

**வினா எண் 52120—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பண்ணைக் குட்டை வெட்டிய விவசாயிகளுக்கு மானியத்துடன் ஆயில் இஞ்சின் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**138—**

## பருத்தி பதப்படுத்தும் நிலையம்

**வினா எண் 52132—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பருத்தியைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில் பருத்தியைப் பதப்படுத்தும் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**139—**

## தர்பூசணி சாகுபடி

**வினா எண் 53352—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் தர்பூசணி சாகுபடியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் தர்பூசணி சாகுபடியை அதிகரிக்க தோட்டக் கலைத் துறை தொடர்ந்து படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) 2002–2003 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு தொகுதியில் திருக்கழுக்குன்றம் வட்டத்தில் 210 எக்டேர் பரப்பில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டது. 2003–2004 ஆம் ஆண்டு 220 எக்டேர் பரப்பில் தர்பூசணி சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டத்தில் 50 சத மானியத்தில் விதை 90 எக்டேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**140—**

## வேளாண்மைத் தகவல் மையம்

**வினா எண் 60743—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி, அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவில் ஆகிய இடங்களில் வேளாண்மைத் தகவல் மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் மணமேல்குடி, அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவில் ஆகிய இடங்களில் தற்சமயம் வேளாண்மைத் தகவல் மையம் தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**141—**

**கட்டட வசதி**

**வினா எண் 556—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சொந்தக் கட்டடம் கட்டும் சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

**142—**

**இலவச தையல் மிஷின்**

**வினா எண் 12841—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு நடப்பு நிதியாண்டில் இலவச தையல் மிஷின் வழங்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதியில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**143—**

**கட்டட வசதி**

**வினா எண் 18180—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி நகரில் சீர்மரபினர் மாணவர் விடுதிக்கு நிரந்தரக் கட்டட வசதி செய்து தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி சீர்மரபினர் மாணவர் விடுதிக்குக் கட்டடம் கட்டும் கருத்துரு தற்போது ஆய்வில் இல்லை.

**144—**

**விடுதிகள் அமைத்தல்**

**வினா எண் 18998—திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியிலுள்ள அறிஞர் அண்ணா கலைக் கல்லூரியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதியிலுள்ள அறிஞர் அண்ணா கலைக் கல்லூரி மாணவர்களுக்கென மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி ஏற்கெனவே இயங்கி வருகிறது.

*(ஆ)* கேள்வி எழாது.

**145—**

## உதவித் தொகை

**வினா எண் 21690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்வி பயில வழங்கப்படும் உதவித் தொகையை வருமான வரம்பே இல்லாது எல்லோருக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்வி பயில வழங்கப்படும் உதவித் தொகையை வருமான வரம்பே இல்லாது எல்லோருக்கும் வழங்கும் திட்டம் ஏதுமில்லை.

*(ஆ)* வினா எழாது.

**146—**

## மாணவியர் விடுதிக் கட்டடம்

**வினா எண் 22461—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

அறந்தாங்கி நகரில் மாணவியர் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதிக்குக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது ஆய்வில் இல்லை.

**147—**

## விடுதிக் கட்டடம்

**வினா எண் 23381—திரு. ப. அரசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, மேற்பனைக்காடு கிராமத்தில் பிற்படுத்தப்பட்டோர் விடுதிக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், மேற்பனைக்காட்டில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி எதுவும் இயங்கவில்லை. சீர்மரபினர் மாணவியர் விடுதி மட்டுமே இயங்கி வருகிறது. இவ்விடுதிக்கு 2004–2005–ல் ரூ.31.50 இலட்சம் செலவில் கட்டடம் கட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**148—**

## இலவச வீடுகள்

**வினா எண் 34454—திரு. மா. இராஜசேகர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராஜபாளையம் தொகுதியில் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதும் இத்துறையால் செயல்படுத்தப்படுவதில்லை.

**149—**

**இலவச விட்டுமனைப் பட்டா**

**வினா எண் 34726—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், விராலிப்பட்டி ஊராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், விராலிப்பட்டி ஊராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

**150—**

**மாணவர் விடுதிக் கட்டடம்**

**வினா எண் 36063—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆண்டிமடம் தொகுதியில் இடையக்குறிச்சி அரசு மேனிலைப் பள்ளி மாணவர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**151—**

**மாணவியர் விடுதி**

**வினா எண் 36067—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, தென்னூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

**152—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 36068—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ) ஆண்டிமடம் தொகுதி, வரதராசன்பேட்டையில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதி, வரதராசன்பேட்டையில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஏற்கெனவே இயங்கி வருவதால், புதிதாக விடுதி திறக்கும் அவசியம் எழவில்லை.*

**153—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 38424—திரு. ப. அரசன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அறந்தாங்கி தொகுதி கரூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் நல விடுதிக்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, கரூர் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்கு அரசுக் கட்டடம் கட்டுவது குறித்த கருத்துரு தற்போது அரசின் ஆய்வில் இல்லை.*

**154—**

**மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள்**

**வினா எண் 38791—திரு. எஸ். மகாலிங்கம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2005 ஏப்ரல் 13]

*(அ) அவிநாசி ஒன்றியம், சேவூர் அரசு மேனிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் நடப்பாண்டில் துவக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழாது.*

**155—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 39571—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சங்கராபுரம் தொகுதி, மூங்கில்துறைப்பட்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) கேள்வி எழாது.*

**156—**

**மாணவர் விடுதி**

**வினா எண் 42098—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடி ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாணவர் விடுதி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**157—**

**கடனுதவி**

**வினா எண் 60462—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வாரியத்தின் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு திருச்சி மாவட்டத்தில் கடன் வழங்க நிர்ணயித்த இலக்கு எவ்வளவு?

(ஆ) எத்தனை குழுக்களுக்கு எவ்வளவு நிதி கடனாக அரசு வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள தகுதி வாய்ந்த ஒவ்வொரு மகளிருக்கும் தலா ரூ.2,000/– வீதம் திருச்சி மாவட்டத்தில் கடன் வழங்க கீழ்க்கண்டவாறு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

இலக்கு

| ஆண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|
| 2003–2004 | 3500 | 70.00 |



2005 ஏப்ரல் 13]

(ஆ) தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் திருச்சி மாவட்டத்தில் 2003–2004 ஆம் ஆண்டில், 21 சுய உதவிக் குழுக்களுக்கு 199 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.3.98 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

**158—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 14450—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆடையூர் பக்கநாடு பகுதியில் நடைபெற்று வந்த கால்நடை மருத்துவமனை செயல்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

பார்வைக் கிளை நிலையங்கள் சரிவர இயங்காததினால் அவற்றினை தொடர்ந்து செயல்படுத்த தேவையில்லை என்ற கருத்தின் அடிப்படையில் தமிழகத்தில் செயல்பட்டு வந்த அனைத்து பார்வைக் கிளை நிலையங்களும் மூடப்பட்டன. அதன்படி ஆடையூர் பக்கநாடு பகுதிகளில் செயல்பட்டு வந்த பார்வைக் கிளை நிலையங்களும் மூடப்பட்டன. அதனை மீண்டும் செயல்படுத்த தற்போது வாய்ப்பில்லை.

**159—**

**கால்நடை மருத்துவமனைகள்**

**வினா எண் 21739—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வேம்பனேரி, புதுப்பாளையம், தாதாபுரம், பில்லுக்குறிச்சி, பக்கநாடு, ஆடையூர், கே.கே. நகர் ஆகிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வேம்பனேரி, புதுப்பாளையம், தாதாபுரம், பக்கநாடு, ஆடையூர், கே.கே.நகர் ஆகிய கிராமங்களிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை அறுதியிட்ட எண்ணிக்கைக்குக் குறைவாக இருப்பதாலும், பில்லுக்குறிச்சி கிராமத்தின் அருகில் 5 கி.மீ. தூரத்தில் பூலாம்பட்டி கால்நடை கிளை நிலையம் செயல்பட்டு வருவதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும் மேற்கண்ட கிராமங்களில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

*(ஆ)* எழாது.

**160—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 24212—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், அண்டக்குளத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம் அண்டக்குளம் கால்நடை கிளை நிலையம் தற்போது கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.



**161—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 25481—திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மருதகுளத்தில் கால்நடை மருத்துவமனை நிறுவிட அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, மருதகுளத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 2,451 ஆகும். மாநில திட்டக் குழுவால் புதிய கால்நடை கிளை நிலையங்கள் தோற்றுவிக்க விதிக்கப்பட்ட தடை ஆணை இன்னமும் அமலில் உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், தற்போது அரசின் நிதிநிலை நெருக்கடி காரணமாகவும் மருதகுளத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை நிறுவிட தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

**162—**

**பயிற்சி மையம்**

**வினா எண் 31634—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் வான்கோழி மற்றும் முயல் வளர்ப்பை ஊக்குவிக்க பண்ணைகள் ஏற்படுத்தி பயிற்சி மையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் வான்கோழிப் பிரிவுகள் அமைக்க அரசிடம் எவ்வித கருத்துருவும் இல்லை. முயல் வளர்ப்புப் பண்ணைகளை ஏற்படுத்த அரசுக்கு எவ்வித உத்தேசமும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

**163—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 34834—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் கால்நடை மருத்துவமனை கட்டடத்தை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் கால்நடை மருந்தகக் கட்டடம் ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பழுதுநீக்கம் செய்யப்பட்டது.

(ஆ) எழாது.

**164—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 35257—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) பவானிசாகர் தொகுதி, நம்பியூர் ஊராட்சி ஒன்றியம், ஆண்டிப்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பவானிசாகர் தொகுதி, ஆண்டிப்பாளையம் ஊராட்சியில் 10,000–க்கும் குறைவாக கால்நடைகள் உள்ளன. இதன் அருகில் 4 கி.மீ. தூரத்தில் சுண்டக்காம்பாளையம் கால்நடை மருந்தகமும், 7 கி.மீ. தூரத்தில் நம்பியூர் கால்நடை மருந்தகமும், 6 கி.மீ. தூரத்தில் வெட்டையம்பாளையம் கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருவதால் ஆண்டிப்பாளையம் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**165—**

**காணை நோய்**

**வினா எண் 36622—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வோராண்டும் கோடைக்காலங்களில் கால்நடைகளைத் தாக்கும் (ஆடு, மாடுகள்) காணை எனும் கொடிய நோயைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இலவசமாக தடுப்பூசிகள் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஒவ்வோராண்டும் கால்நடைகளைத் தாக்கும் காணை எனும் கொடிய நோயைத் தடுப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) கால்நடைகளுக்கு இலவசமாகத் தடுப்பூசி போடப்படுகிறது.

**166—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 36623—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பேரணாம்பட்டு பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* பேரணாம்பட்டு பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

*(ஆ)* எழாது.

**167—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 37544—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சங்கராபுரம் தொகுதி, தண்டலை, மாதவச்சேரி, நெடுமானூர் ஊராட்சிகளுக்கு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி கோட்டம், சங்கராபுரம் தொகுதி, தண்டலை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,628. இதன் அருகில் 7 கி.மீ. தூரத்தில் கள்ளக்குறிச்சி



கால்நடை பெருமருத்துவமனை உள்ளது. மாதவச்சேரி ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,651. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் அம்மாப்பேட்டை கால்நடை மருந்தகம் உள்ளது. நெடுமானூர் ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,597. இதன் அருகில் 3 கி.மீ. தூரத்தில் சோழப்பட்டு கால்நடை கிளை நிலையம் உள்ளது. இவை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் இப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் அரசு தற்போது துறையின்கீழ் உள்ள கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும் பின்னர் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. எனவே தண்டலை, மாதவச்சேரி, நெடுமானூர் ஊராட்சிகளில் புதிதாக நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை துவக்க தற்போது வாய்ப்பில்லை.

**168—**

**கோழித் தீவனத் தொழிற்சாலை**

**வினா எண் 38680—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் மீன் கழிவுகளிலிருந்து கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் மீன் கழிவுகளிலிருந்து கோழித் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**169—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 38686—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

அறந்தாங்கி தொகுதி, கரூர், காரக்கோட்டை, அம்பலவாணனேந்தல் ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தஞ்சை மாவட்டம், கரூர் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. காரக்கோட்டை, அம்பலவாணனேந்தல் ஆகிய கிராமங்களில் கால்நடை மருந்தகம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**170—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 41376—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், அத்திப்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகமாகவும், மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும், அத்திப்பாடி கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.



2005 ஏப்ரல் 13]

**171—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 41439—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், தாதிரெட்டிப்பள்ளி கிராமத்தில் 2003-2004 நிதி ஆண்டில் கால்நடை மருந்தகம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், தாதிரெட்டிப்பள்ளி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 2,782 மட்டுமே உள்ளதாலும், 4 கி.மீ. தூரத்தில் விண்ணம்பள்ளி மோட்டூர் கால்நடை கிளை நிலையம் உள்ளதாலும், தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதி நெருக்கடி காரணமாகவும் தாதிரெட்டிப்பள்ளியில் ஒரு கால்நடை மருந்தகம் துவக்க தற்போது வாய்ப்பில்லை.

**172—**

**கோழிப் பண்ணை உற்பத்தி**

**வினா எண் 41927—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001, 2001-2002 ஆம் ஆண்டுகளில் செங்கற்பட்டு வட்டம், காட்டுப்பாக்கத்திலுள்ள அரசு கோழிப் பண்ணையில் உற்பத்தி செய்த கறிக்கோழிகள் மதிப்பு எவ்வளவு?

(ஆ) முட்டைகளின் மதிப்பு எவ்வளவு?

(இ) இப்பண்ணையின் வருமானத்தை அதிகரிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் யாவை?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

| | | | |
|---|---|---|---|
| *(அ)* | *2000–2001* | – | *ரூ.1,79,863/–* |
| | *2001–2002* | – | *ரூ.1,80,218/–* |
| *(ஆ)* | *2000–2001* | – | *ரூ.6,37,953/–* |
| | *2001–2002* | – | *ரூ.4,70,062/–* |

*(இ) காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணை லாப நஷ்ட அடிப்படையில் இயங்காமல் மாதிரி பண்ணையாக விளங்கி வருகிறது. தற்போது கிரிராஜா கோழிகளும், வான் கோழிகளும் அதிக அளவில் வளர்க்கப்பட்டு, அவை பற்றி மக்களிடையே பிரபலப்படுத்தி அதன் மூலம் அவர்களது வருவாயை மேம்படுத்தும் பொருட்டு குஞ்சுகள் அரசு நிர்ணயித்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.*

**173—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 43033—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்துநாயக்கன்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்துநாயக்கன்பட்டியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.*



2005 ஏப்ரல் 13]

**174—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 43037—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோவில் ஒன்றியம், அண்டக்குளத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், அண்டக்குளம் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் உள்ளது. 10,000–த்திற்கும் மேல் கால்நடைகள் இருந்தால்தான் கால்நடை மருந்தகம் அமைக்க முடியும். அண்டக்குளம் கிராமத்தில் 5,592 கால்நடைகளே உள்ளதால், இக்கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த வகையில்லை.*

*(ஆ) எழாது.*

**175—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 46636—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*ஆரணி தொகுதி, பனையூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் தொடங்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, பனையூர் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக 3,141 மட்டுமே உள்ளது. இதன் அருகில் 7 கி.மீ. தூரத்தில் எஸ்.வி. நகரம் கால்நடை நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் மாம்பாக்கம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. இக்கால்நடை நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் சிகிச்சைப் பணிகள் இப்பகுதியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாகக் கருதப்படுகிறது. தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே தரம் உயர்த்தப்பட்டு வருவதாலும், அரசின் தற்போதைய நிதிநிலை நெருக்கடி காரணமாகவும், திருவண்ணாமலை மாவட்டம், பனையூர் கிராமத்தில் ஒரு கால்நடை மருந்தகம் தொடங்க வாய்ப்பில்லை.

**176—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 48961—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை மேற்கு ஒன்றியம், வைரவநத்தம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மதுரை மாவட்டம், மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம், வைரவநத்தம் கிராமத்தில் 10,000-க்கும் குறைவாக 2,055 கால்நடைகள் மட்டுமே உள்ளன. இதன் அருகில் 4 கி.மீ. தூரத்தில் சிறுவாலை கால்நடை கிளை நிலையமும், 8 கி.மீ. தூரத்தில் சமயநல்லூர் கால்நடை மருத்துவம்னையும் செயல்பட்டு வருகின்றன. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை



மருந்தகமாகவும், மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. வைரவநத்தம் கிராமத்தில் எந்த ஒரு கால்நடை நிலையமும் இல்லாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

**177—**

### கால்நடை மருத்துவக் கல்லூரி

**வினா எண் 48978—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

இல்லை.

**178—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 49118—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, சாலைப்பேட்டை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, சாலைப்பேட்டை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 105.

[2005 ஏப்ரல் 13

இதன் அருகில் 2 கி.மீ. தூரத்தில் ஏரிகுத்தி கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும் பின்னர் கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனவே, சாலைப்பேட்டை கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை.

**179—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 50042—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை தொகுதி, பள்ளப்பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை தொகுதி, பள்ளப்பாளையம் ஊராட்சியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், இதன் அருகில் 2 கி.மீ. தூரத்தில் போடிப்பாளையம், ஜல்லிப்பட்டி கால்நடை கிளை நிலையங்களும், 5 கி.மீ. தூரத்தில் தும்பலப்பட்டி கால்நடை கிளை நிலையமும், 4 கி.மீ. தூரத்தில் குறிச்சிக்கோட்டை கால்நடை மருந்தகமும், 8 கி.மீ. தூரத்தில் உடுமலைப்பேட்டை கால்நடை மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கால்நடை நிலையங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சிகிச்சைப் பணிகள் பள்ளப்பாளையம் ஊராட்சியில் உள்ள கால்நடைகளுக்குப் போதுமானதாக உள்ளது. மேலும் அரசு தற்போது துறையின்கீழ் உள்ள கால்நடை கிளை நிலையங்களை மட்டுமே தரம் உயர்த்தி வருவதால் பள்ளப்பாளையம் ஊராட்சியில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.



2005 ஏப்ரல் 13]

**180—**

**பசு மடம் தொடங்குதல்**

**வினா எண் 50093—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் பசுக்களைப் பாதுகாக்க பசு மடம் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) பசு மடங்கள் அரசால் தொடங்கப்படுவது இல்லை.

(ஆ) எழாது.

**181—**

**கால்நடை மருந்தகம்**

**வினா எண் 53301—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, சின்னதாமஸ் செருவு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், சின்னதாமஸ் செருவு கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,468. இதன் அருகில் 5 கி.மீ. தூரத்தில் ஏரிகுத்தி கால்நடை மருந்தகம் உள்ளது.

[2005 ஏப்ரல் 13

தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாகவும், கால்நடை மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. ஆதலால் சின்னதாமஸ் செருவு கிராமத்தில் நேரடியாக ஒரு புதிய கால்நடை மருந்தகம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

**182—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 55748—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலையில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியம், இடங்கணசாலையின் அருகில் 5 கி.மீ. தூரத்தில் காடையாம்பட்டி கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் வேம்படிதாளம் கால்நடை கிளை நிலையமும், 5 கி.மீ. தூரத்தில் பெருமாகவுண்டன்பட்டி கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருவதாலும், தற்போது அரசுத் துறையில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்களை கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாலும், இடங்கணசாலையில் தற்போது புதியதாக கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை.

**183—**

## புதிய கால்நடை மருத்துவமனை

**வினா எண் 57768—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

*(அ)* அறந்தாங்கி தொகுதி, நெய்வத்தளி மேற்கில் புதியதாக கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, நெய்வத்தளி மேற்கில் கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 1,977 ஆகும். இதன் அருகில் 7 கி.மீ. தூரத்தில் ஆவனத்தான் கோட்டை கால்நடை கிளை நிலையமும், 6 கி.மீ. தூரத்தில் கீரமங்கலம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. தற்போது துறையின்கீழ் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆதலால் நெய்வத்தளி மேற்கில் கிராமத்தில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது வாய்ப்பில்லை.

**184—**

## மெரினா கடற்கரைப் பகுதி

**வினா எண் 27180—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினா கடற்கரையை தூய்மைப் பகுதி என அரசு அறிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

சென்னை மாநகராட்சி மண்டலம் 6-ல் உள்ள மெரினா கடற்கரை ஏற்கெனவே தூய்மைப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

**185—**

### தார்ச் சாலை வசதி

**வினா எண் 35613—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஆண்டிமடம் தொகுதிக்குட்பட்ட ஆண்டிமடம் ஒன்றியம் அழகாபுரத்திலிருந்து திருக்கோணம் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆண்டிமடம் தொகுதியில் அழகாபுரம் கிராமத்திலிருந்து திருக்கோணம் கிராமத்திற்கு தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்ட திருக்கோணம் காப்பு வனத்தினுள் 3 கி.மீ. நீளத்திற்கு சாலை செல்கிறது. இச்சாலையின் ஒரு பகுதி கருங்கல் ஜல்லி போடப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதனை தார்ச் சாலையாக மாற்ற வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி மைய அரசின் முன் அனுமதி பெற வேண்டும்.*

**186—**

### உயிரியல் பூங்கா

**வினா எண் 43039—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டையில் உயிரியல் பூங்கா அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையில் உயிரியல் பூங்கா அமைப்பது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.*



2005 ஏப்ரல் 13]

**187—**

### மருத்துவமனையை சீரமைத்தல்

**வினா எண் 43141—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வால்பாறையில் பழுதடைந்து உபயோகமின்றி உள்ள சின்கோனா அரசு மருத்துவமனையை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், சின்கோனா அரசு மருத்துவமனை 31–8–1996 முதல் தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டு பின்னர் அதில் தக்க பராமரிப்புகள் மேற்கொள்ளப்பட்டு தேவையான மருத்துவர் மற்றும் மருத்துவப் பணியாளர்களுடனும், மருந்து மற்றும் மருத்துவ உபகரண வசதிகளுடனும் அப்பகுதியிலுள்ள தொழிலாளர்கள் அவர்களது குடும்பத்தினர் மற்றும் அருகிலுள்ள பொது மக்களுக்கும், மருத்துவ சேவையாற்றி வருகிறது.*

**188—**

### நஷ்டஈடு வழங்குதல்

**வினா எண் 47351—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் குடியிருக்கும் பகுதிகளில் யானைகள் புகுந்து வீட்டை இடித்துத் தள்ளிவிடுவதால் நஷ்டஈடு வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 205, சுற்றுச்சூழல்–வனத் துறை, நாள் 12–9–2000–ன்படி யானைகளால் ஏற்படும வீட்டுச் சேதத்திற்கு கீழ்க்கண்டவாறு நிவாரணம் வழங்க வழிவகை உள்ளது:–*

*(1) கான்கிரீட் வீடுகள் சேதத்திற்கு–ரூ.5,000/– அல்லது உண்மையான இழப்பு (இதில் எது குறைவோ அந்தத் தொகை)*

*(2) குடிசை மற்றும் சாதாரண வீடுகள் சேதத்திற்கு ரூ.5,000/– அல்லது உண்மையான இழப்பு (இதில் எது குறைவோ அந்தத் தொகை)*

**189—**

## பட்டா வழங்குதல்

**வினா எண் 47471—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சியிலுள்ள ஆர்.எப். புறம்போக்கு காடுகளில் விவசாயம் செய்யப்பட்டுவரும் நிலங்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சியிலுள்ள ஆர்.எப். புறம்போக்கு காடுகளில் விவசாயம் செய்யப்பட்டு வரும் நிலங்களுக்குப் பட்டா வழங்க வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி வன நிலத்தை பிற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய மைய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் உச்ச நீதிமன்ற ஆணை எண் டபிள்யு.பி. 202/95–ன்படி பட்டா வழங்க மற்றும் ஆக்கிரமிப்பு வரன்முறை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறப்பட்ட விதிமுறைகளின்படி, ஊராட்சியிலுள்ள காப்பு வனம் (ஆர்.எப்.) புறம்போக்கு காடுகளில் விவசாயம் செய்யப்பட்டுவரும் நிலங்களுக்குப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.*



2005 ஏப்ரல் 13]

*(ஆ) மேற்குறிப்பிட்ட பதிலின் அடிப்படையில் இவ்வினா எழவில்லை.*

**190—**

## வனத் துறை மூலம் வீடு கட்டுதல்

**வினா எண் 47485—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலைப்பேட்டை மலைவாழ் மக்கள் வாழும் கல்லாபுரம் இந்திரா குடியிருப்புப் பகுதியில் வனத் துறை மூலம் வீடு கட்டிக் கொடுத்த சான்று இது வரை வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் (3டி) எண் 4, ஆதிதிராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலத் துறை (பழங்குடியினர் மேம்பாடு) நாள் 21–2–2001–ன்படி, 2001–2002 ஆம் நிதியாண்டிற்கு ரூ. 24.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, கல்லாபுரம் இந்திரா குடியிருப்பு மலைவாழ் மக்களுக்கு 29 குடியிருப்புகள் (வீடுகள்) கட்டி முடிக்கப்பட்டு, 2002–2003–ல் மலைவாழ் மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.*

**191—**

## பயிற்சி வகுப்பு

**வினா எண் 47667—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

(அ) வனத் துறை அலுவலர்களுக்கு காட்டுத் தீக்கட்டுப்பாடு முறைகளைக் கற்க தனியாக பயிற்சி வகுப்பு அரசு நடத்துகிறதா?

(ஆ) அதற்கென அலுவலர்களை வேறு மாநிலங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு வனத் துறையில், கோவை தென் பிராந்திய வன சரகர் கல்லூரியில் வன சரக அலுவலர் மற்றும் வனவர்களும், வைகை தமிழ்நாடு வனக் கல்லூரியில் வனக் காப்பாளர் மற்றும் வனக் காவலர்களுக்கு முறையே ஆறு மாத கால பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு காட்டுத் தீக் கட்டுப்பாடு குறித்து பாடமாக அமைத்து பயிற்று வைக்கப்படுகிறது.

(ஆ) கோவை தென் பிராந்திய வன சரகர் கல்லூரியில் பயிற்சி பெறும் வன சரக அலுவலர்கள் கல்வி சுற்றுப் பயணமாக, டெல்லி, ஆந்திரா, கர்நாடகா, இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று காட்டுத் தீ தடுப்பு மற்றும் பாதுகாப்பு முறைகளை அறிந்து வருகிறார்கள்.

**192—**

## குடிநீர் மாசுபடுவதைத் தடுத்தல்

**வினா எண் 49379—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கட்டிநாயக்கன்பட்டி ஏரியில் உள்ள மாசு படிந்த நீர் இருப்பாளி கிராமத்திற்கு திருப்பிவிடப்படுவதால் குடிநீர் மாசுபடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கட்டிநாயக்கன்பட்டி ஏரியிலிருந்து கழிவுநீர் எதுவும் இருப்பாளி கிராமத்திற்கு வரவில்லை. அதனால் இருப்பாளி கிராமத்தில் குடிநீர் எதுவும் மாசடைய வாய்ப்பில்லை. மேலும், இருப்பாளி கிராமத்திற்கு காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**193—**

## பாதரச கழிவுகள்

**வினா எண் 50025—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் மருத்துவ உபகரணம் தயாரிக்கும் தனியார் நிறுவனத்தில் இருந்து வெளிப்படும் பாதரச கழிவுகள் வராக நதி, வைகை ஆற்றில் கலந்திருப்பதாக அரசுக்கு புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பாதரசம் கையாளப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு பெரும்பாலும் தொழிற்சாலை வளாகத்திற்குள்ளேயே இருப்பதால், பாதரசம் வெளியேறாமல் இருக்க தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் தொழிற்சாலை வளாகத்தில் அனைத்து வடிவில் உள்ள பாதரச கழிவையும் ஐக்கிய அமெரிக்க நாடுகள் பென்சில்வேனியா மாகாணத்தில் உள்ள திருவாளர்கள் பெத்திலஹேம் அப்பேரடஸ் கம்பெனிக்கு அனுப்ப வேண்டுமென முடிவெடுக்கப்பட்டு அதன்படி 2003 ஆம் ஆண்டு மே மாதம் 2,59,388 டன் பாதரசம் அடங்கிய கண்ணாடித் துண்டுகள், 28 டன் பாதரசம் அடங்கிய கசடுகள் மற்றும் 3 டன் பாதரசம் அனுப்பி வைக்கப்பட்டது.

194—

மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 50674—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு ஓரியண்டல் கெமிக்கல்ஸ் நிறுவனத்திலிருந்து வெளிவரும் திரவக் கழிவால் பாலாறு மற்றும் ஓழலூர் பகுதிகளில் நிலங்களும், நீரும் மாசு படுவதை அரசு அறியுமா?

(ஆ) இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) திருவாளர்கள் மோகன் புருவரீஸ் அண்டு டிஸ்டிலரிஸ் லிமிடெட் (முன்பு ஓரியன் கெமிக்கல்ஸ்) எரிசாராய தொழிற்சாலையின் கழிவுநீர் பாலாறு மற்றும் அருகில் உள்ள நீர் நிலைகளில் வெளியேற்றப்படுவதில்லை. எனவே, மேற்படி தொழிற்சாலை கழிவு நீரினால் பாலாறு மாசுபட வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

195—

வண்டலூர் உயிரியல் பூங்கா

**வினா எண் 50675—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் உயிரியல் பூங்காவில் எத்தனை வகையான உயிரினங்கள் உள்ளன?

(ஆ) அரிய உயிரினங்களைப் பாதுகாக்க அரசிடம் ஏதேனும் புதிய திட்டம் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் 170 வகை உயிரினங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 46 வகை பாலூட்டிகள், 68 வகை பறவைகள், 30 வகை ஊர்வன, 5 வகை நீர்–நில வாழ்வன மற்றும் 21 வகை மீன் இனங்கள் ஆகும்.

(ஆ) இந்திய வன உயிரினப் பாதுகாப்புச் சட்டத்தில் அட்டவணை–1 மற்றும் 2–ல் இடம்பெற்றுள்ள அழிந்துவரும் அரிய உயிரினங்கள் 44 வகையில், 435 விலங்குகளை இப்பூங்கா சிறப்பாகப் பராமரித்து வருகிறது.

196—

வன வளங்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 50765—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையிலுள்ள நிர்வாக முரண்பாடுகளைக் களையவும், வன வளங்களைப் பாதுகாக்கவும் தனி ஆணையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். அரசாணை (நிலை) எண் 50, சுற்றுச்சூழல்–வனத் துறை, நாள் 13–7–1997–ன்படி, வனத் துறையின் நிர்வாக முரண்பாடுகளைக் களையவும், வன வளங்களைப் பாதுகாக்கவும் தமிழ்நாடு வன ஆலோசனைக் குழு என்ற உயர் மட்ட ஆணையம் நிறுவப்பட்டு, அதன் பதவிக்காலம் 12–2–2000 உடன் முடிவடைந்தது. அதனை மீண்டும் அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**197—**

## வனப் பராமரிப்பு

**வினா எண் 50772—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வனத் துறையால் வழங்கப்படும் வனப் பராமரிப்பு உட்பட அனைத்து பணிகளையும் அங்குள்ள மலைவாழ் மக்களுக்கே வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2003–2004 ஆம் ஆண்டில் வனத் துறையால் மேற்கொள்ளப்படும் தோட்டம் எழுப்பும் பணிகளில் 3433 பழங்குடியின குடும்பங்கள் பயன் அடைந்துள்ளனர். மேலும், மேற்கூறிய திட்டங்களின் மூலம் பழங்குடியின மக்களுக்கு ரூ.183/– இலட்சம் செலவிடப்பட்டு, இதில் ஊதிய வகையில் மட்டும் பழங்குடியினருக்கு ரூ1,18,95,000/– வழங்கப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களிலும் தொடர்ந்து இதுபோன்று மலைவாழ் மக்கள் மூலம்தான் நலத் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**198—**

## மூலிகைப் பூங்கா

**வினா எண் 54703—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் வனத் துறை மூலம் வால்பாறை மூலிகைப் பூங்கா ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் மூலிகைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**199—**

## மரக்கன்றுகள் பராமரிப்பு

**வினா எண் 62861—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனத் துறை மூலம் நீர்நிலைகளின் கரைகளில் மரக்கன்றுகள் குறிப்பாக, பனை மரங்கள் நட்டு பராமரிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் வனத் துறை மூலம் நீர்நிலைகளின் கரைகளில் பனை மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கும் செயல் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**200—**

## மாசற்ற குடிநீர் வசதி

**வினா எண் 63835—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) மயிலாடுதுறை வட்டம், தலைஞாயிறிலுள்ள நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இருந்து வெளியேறும் கழிவுநீரால் குடிநீர் மாசு படுவதைத் தடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாளர்கள் நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் ஆலைக்குச் சொந்தமான நிலத்தில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதால் நீர்நிலைகளுடன் கழிவுநீர் கலப்பதற்கு வாய்ப்பில்லை.



2005 ஏப்ரல் 13]

## பட்டியல் 17

**1—**

### ஒப்பந்தப்புள்ளி

**வினா எண் 7635— திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பேலஸ் நகர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் 1.5 கோடி ரூபாய் வேலையை டெண்டர் (ஒப்பந்தப்புள்ளி) விடாமல் தனி நபர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் பேலஸ் நகர் கூட்டுறவு வீடுகட்டும் சங்கத்தின் முறைகேடுகள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும்பொருட்டு இலஞ்ச ஒழிப்புத் துறையினரால் சங்கத்தின் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2—**

### சமத்துவபுரம்

**வினா எண் 19830—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, நாகலாபுரத்திலுள்ள சமத்துவபுரத்தில் வீடுகள் வழங்கப்பட்டவர்களிடம் 10,000/- ரூபாயை கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கோருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களிடம் பணம் வசூலிக்காமலிருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) விளாத்திக்குளம் தொகுதி, நாகலாபுரத்திலுள்ள சமத்துவபுரத்தில் கட்டப்பட்ட 100 வீடுகள் உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதாக முந்தைய அரசால் தெரிவிக்கப்பட்டு உறுப்பினர்களின் பங்கீடாக தலா ரூ.10,000/- விளாத்திக்குளம் வட்ட கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் மூலமாக பயனீட்டாளர்களுக்குக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. எனவே, கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்மூலம் கடனாக வழங்கப்பட்ட தொகையினை பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருகிறது.*

**3—**

## மாற்று இடம்

**வினா எண் 27889—திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை மாநகரில் பூங்கா நகர் தொகுதியில் வால்டாக்ஸ் சாலை மற்றும் பல பகுதிகளில் சாலையோரம் வாழ்கின்ற மக்களுக்கு மாற்று இடம் கொடுக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*தற்போதைக்கு ஏதுமில்லை.*

**4—**

## கடனுதவி

**வினா எண் 30523—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*



*வால்பாறை தொகுதி, கெங்கமபாளையம் - பெத்தநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட பொள்ளாச்சி வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் வாங்கிய கடன் 7,000/- ரூபாய்க்கு வட்டி கட்ட முடியாத நிலையை நிவர்த்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் வழங்கிய கடன் மீதான வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கு அரசு அறிவித்த சலுகை காலக்கெடு 31-10-2004-ல் முடிவுற்ற நிலையில் தற்போது தள்ளுபடி செய்ய இயலாது.*

**5—**

## அடுக்குமாடிக் குடியிருப்புகள்

**வினா எண் 32726—திருமதி கே. பவானி கருணாகரன்:** *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு எஃகு உருக்காலைக்குச் சொந்தமான அடுக்குமாடிக் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்றுச் செயல்படுத்துமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

*(அ) சிறிய மற்றும் பெரிய நகரங்களில் ஏற்கெனவே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் விற்கப்படாமல் தேக்க நிலையில் உள்ளதால் தமிழ்நாடு எஃகு உருக்காலைக்குச் சொந்தமான அடுக்குமாடிக் குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஏற்றுச் செயல்படுத்த இயலாது.*

*(ஆ) எழவில்லை.*

[2005 ஏப்ரல் 13

6—

## நிர்வாக நகரம்

**வினா எண் 35658—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படவுள்ள நிருவாக நகரத்தின் பணிகளை எத்தனை ஆண்டுகளுக்குள் நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

சென்னை புறநகர்ப் பகுதியில் அமைக்கப்படவுள்ள நிருவாக நகரத்திற்குரிய விரிவுத் திட்ட அறிக்கை மற்றும் செய்யத்தக்கமைக்கான அறிக்கைகள் தயாரிக்கும் பணி ஆரம்ப கட்டத்திலேயே இருப்பதால் இத்தருணத்தில் இத்திட்டத்தினை நிறைவேற்றுவதற்கான காலவரையறையைக் கூற இயலாது.

7—

## கடன் வசதி

**வினா எண் 36918—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி எல்.என். புரத்தில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் வீடுகட்ட மனு செய்தவர்களுக்குக் கடன் வசதி அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் மூலம் பண்ருட்டி லட்சுமிநாராயணபுரத்தில் வீடு கட்ட கடன் கோரி



2005 ஏப்ரல் 13]

மனு செய்த தகுதியுடைய அனைவருக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

8—

## கூரை வீடுகள்

**வினா எண் 38676—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைத்துத்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை

9—

## நகர்ப்புற வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை

**வினா எண் 39336—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002-ல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நகர்ப்புற சங்கங்களின் மூலம் கட்டப்பட்ட வீடுகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

2001-2002-ல் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நகர்ப்புற சங்கங்களின் மூலம் 525 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கட்டப்பட்ட வீடுகளின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.11.14 கோடியாகும்.

10—

### கல்நார் கூரைகள்

**வினா எண் 41457—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் குடிசைப்பகுதி குடும்பங்களுக்கு கல்நார் தகடுகளாலான கூரைகள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயனாளிகள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தில் கல்நார் தகடுகளாலான கூரை வீடுகள் அமைப்பதற்குப் பதிலாக 150 சதுர அடி கட்டட பரப்பளவு கொண்ட கான்கிரீட் தளம் கொண்ட வீடுகள் ரூ.40,000/- செலவில் மைய அரசின் வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன.

11—

### குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 49045—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு நகரம், கருங்கல்பாளையம், அழகரசன் நகரிலுள்ள குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

குத்தகை விற்பனை ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனையின்படி ஒதுக்கீட்டாளரே குடியிருப்பை தக்க முறையில் பராமரிக்கவும், குடியிருக்கும்போது ஏற்படும் பழுதுகளை தாங்களே சரிசெய்து கொள்ளவேண்டும் என உள்ளதால் சம்பந்தப்பட்ட குடியிருப்புகளை அரசு செப்பனிட நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை.

12—

### கடனுதவி

**வினா எண் 52412—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின் வீடுகள் கட்ட கடன் பெறுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

13—

### கல்நார் வீடுகள்

**வினா எண் 60767—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) சென்னை மாநகரில் ஓலைக் குடிசைகளை மாற்றி தீப்பிடிக்காத கல்நார் வீடுகள் கட்டித்தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டில் (2004-2005) எத்தனை வீடுகள் கட்டப்பட உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

**14—**

**கலைக் கல்லூரி**

**வினா எண் 1324—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரத்தில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**15—**

**வால்பாறையில் கலைக் கல்லூரி**

**வினா எண் 1433—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) வால்பாறையில் மேல்பகுதியில் அரசு கலைக் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் அரசு கலைக் கல்லூரி துவங்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**16—**

**அரசு கலைக் கல்லூரி**

**வினா எண் 2716—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் பகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை. தேவையின் அடிப்படையில் நிதி நிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கும். தற்போதுள்ள நிதி நிலையில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் தொடங்க இயலாது. பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமை சீரானபின் சங்கராபுரம் பகுதியில் கலைக்கல்லூரி ஆரம்பிப்பது குறித்து பரிசீலிக்கப்படும். அங்கு சுயநிதி அடிப்படையில் கலைக்கல்லூரி தொடங்க தனியார் விண்ணப்பித்தால், அவ்விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

17—

## தொடக்கப் பள்ளி

**வினா எண் 2793—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன அள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர் கிராமத்திற்கு ஒன்றிய தொடக்கப் பள்ளி இல்லாமலிருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அத்திமரத்தூர் கிராமத்தில் அரசாணை எண் 134, நாள் 23-8-2002-ன்படி 2002-2003 கல்வியாண்டில் புதிய ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி திறக்கப்பட்டு, இப்பள்ளி 18-9-2002 முதல் நடைபெற்று வருகிறது.

18—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 2795—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்ட அள்ளி ஊராட்சி, இராமகொண்ட அள்ளி தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி இராமகொண்ட அள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை



நடுநிலைப் பள்ளியாக அரசாணை (நிலை) எண் 135, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ன்படி நிலை உயர்த்தப்பட்டுள்ளது. 18-9-2002 முதல் நடுநிலைப் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது.

19—

## கல்வி வாய்ப்பு

**வினா எண் 3646—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் திரு.வி.க. அரசு கலைக் கல்லூரியில் எல்லாப் பிரிவுகளிலும் ஆதிதிராவிட மாணவ மாணவிகள் அதிக எண்ணிக்கையில் கல்வி பயில வருவதால் மற்றவர்கள் கல்வி பயில அதிக வாய்ப்பு அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர், திரு.வி.க. அரசு கலைக் கல்லூரியில் உள்ள எல்லாப் பிரிவுகளிலும் உள்ள மொத்த அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் அரசின் இட ஒதுக்கீடு முறை பின்பற்றப்பட்டு ஆதிதிராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற வகுப்பைச் சார்ந்த மாணவ மாணவியர்கள் கல்லூரியில் சேர்ந்து கல்வி பயின்று வருகின்றனர்.

20—

## கலைக் கல்லூரி

**வினா எண் 3684—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியில் அரசு ஆடவர், பெண்டிர் கலைக் கல்லூரிகள் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தேவையின் அடிப்படையில், நிதி நிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் தொடங்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் தொடங்க இயலாது. சீர்காழியில் சுய நிதி அடிப்படையில் கலைக் கல்லூரி அமைக்கக் கோரும் விண்ணப்பங்களுக்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**21—**

**நூலகம்**

**வினா எண் 6874—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூரின் பகுதிநேர நூலகத்தை முழுநேர நூலகமாக மாற்றிட அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், சிவநாடானூர் கிராமத்தில் 16-6-2001 முதல் பகுதிநேர நூலகம் செயல்பட்டு வருகிறது. இப் பகுதிநேர நூலகம் காலை 8 மணி முதல் 11 மணி வரை செயல்பட்டு வந்தது. இப்பகுதிநேர நூலகம் 1-12-2003 முதல் ஊர்ப்புற நூலகமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்நூலகம் காலை 9 மணி முதல் மதியம் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 6.30 மணி வரையிலும் செயல்படுகிறது.



**22—**

**இட ஒதுக்கீடு**

**வினா எண் 6977—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழக நிருவாகத்தை நடத்திடும் செனட், சிண்டிகேட், அகடமிக் கவுன்சில் ஆகிய குழுக்களில் அரசு அறிவித்துள்ள இட ஒதுக்கீடு கடைப்பிடிக்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், இட ஒதுக்கீடு பட்டியல் விவரம் வெளியிடப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**23—**

**ஆரம்பப் பள்ளி**

**வினா எண் 7821—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சியிலுள்ள இராமகிருஷ்ணனூரில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளி புதியதாக ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2005 ஏப்ரல் 13

24—

### தொடக்கப் பள்ளிகள்

**வினா எண் 7955—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விருத்தாசலம் தொகுதி, காணாதுகண்டான், கொட்டாரக்குப்பம் ஆகிய ஊர்களில் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*விருத்தாசலம் தொகுதி, காணாதுகண்டான், கொட்டாரக்குப்பம் ஆகிய ஊர்களில் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க அரசாணை (நிலை) எண் 134, பள்ளிக் கல்வித் துறை, நாள் 23-8-2002-ல் ஆணைகள் வழங்கப்பட்டு 16-9-2002 முதல் பள்ளிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.*

25—

### ஓய்வூதியத் தொகையை உயர்த்துதல்

**வினா எண் 8895—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நலிவுற்ற நாடகக் கலைஞர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா மற்ற மாவட்டங்களுக்கு வழங்கியதுபோல் சேலம் மாவட்ட நாடகக் கலைஞர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) நலிவுற்ற நாடகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியத் தொகையை உயர்த்தித்தர அரசு பரிசீலிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) நலிவுற்ற நாடகக் கலைஞர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்ற நிலையான அரசாணை எதுவும் இல்லை.*



2005 ஏப்ரல் 13]

*(ஆ) நலிவுற்ற நாடகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியத் தொகையை உயர்த்தி வழங்குவது குறித்த கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

26—

### ஓய்வூதியம்

**வினா எண் 8949—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மொழிப்போர் போராட்டக் காலங்களில் குறைந்த நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டதாக ஓய்வூதியம் மறுக்கப்பட்ட மொழிப்போர் தியாகிகள் எத்தனை பேர்?*

*(ஆ) அவர்களது தீரச் செயலைக் கொண்டு ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) மொழிப்போர் போராட்டக் காலங்களில் குறைந்த நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டதாக ஓய்வூதியம் மறுக்கப்பட்ட மொழிப்போர் தியாகிகள் 647 பேர் ஆவார்கள்.*

*(ஆ) அவர்களது தீரச் செயலைக் கொண்டு ஓய்வூதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.*

27—

### பாண்டுரங்க சுவாமி கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 10091—திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், விட்டிலாபுரம் கிராமத்திலுள்ள பல்லவர் கால பாண்டுரங்கசுவாமி கோயில் இடிந்து விழுந்து விடும் நிலையிலுள்ளதால் இதைப் புதுப்பிக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், விட்டிலாபுரம் கிராமத்திலுள்ள பல்லவர் கால பாண்டுரங்கசுவாமி கோயில் சிதைந்துள்ள கற்பகிரகத்தை விட்டிலாபுரம் பாண்டுரங்கன் கைங்கர்ய சபா நன்கொடையாக திரட்டியுள்ள ரூ.4,00,000/- தொகையைக் கொண்டு சீர்செய்யும் பணி விட்டிலாபுரம் பாண்டுரங்கன் கைங்கர்ய சபா மூலமும் தொல்லியல் துறையின் மேற்பார்வையிலும் நடைபெற்று வருகிறது.

**28—**

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 10132—திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பேரூர் தொகுதிக்குட்பட்ட கணேசபுரம், இடையர்பாளையம் ஆகிய இடங்களிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

சர்வ சிக்சா அபியான் திட்டத்தின்கீழ் இவ்விரண்டு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு 23-1-2002 முதல் செயல்பட்டு வருகின்றன.



2005 ஏப்ரல் 13]

**29—**

## ஆரம்பப் பள்ளி

**வினா எண் 10172—திரு. பி.எஸ். அருள்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புவனகிரி தொகுதி, அரிராஜபுரம் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அத்தகைய கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. அரிராஜபுரம் கிராமத்தில் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியும், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான நிதியுதவிபெறும் தொடக்கப் பள்ளியும் ஏற்கெனவே இயங்கி வருகின்றன.

**30—**

## நுழைவுத் தேர்வு

**வினா எண் 10248—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அண்ணாமலை பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் மாணவர்கள் சேர்க்கையின்பொழுது நுழைவுத் தேர்வு நடத்துவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பெண்கள் பட்டியல் சம்பந்தப்பட்டவர்களுக்குத் திறந்த முறையில் வெளியிடப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இதுசம்பந்தமாக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நுழைவுத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு மதிப்பெண் பட்டியல் அஞ்சல் மூலமாக சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு நேரடியாக அனுப்பப்படுகிறது. மேலும், பல்கலைக்கழக அறிவிப்புப் பலகையிலும் மாணவர்கள் அறியும் வகையில் திறந்த முறையில் வெளியிடப்படுகிறது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**31—**

## ஆரம்பப் பள்ளி

**வினா எண் 10403—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், கூந்தலூர் ஊராட்சி, செம்பியன் கூந்தலூர் கிராமத்தில் ஆரம்பப் பள்ளிகள் தொடங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

குடவாசல் ஒன்றியம், கூந்தலூர் ஊராட்சி, செம்பியன் கூந்தலூர் என்ற கிராமத்தில் 2001-2002 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஆரம்பப் பள்ளி தொடங்கப்பட்டுள்ளது.

**32—**

## இணையதளத்தின் பயன்கள்

**வினா எண் 12001—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) இணையதளத்தினை மாணவர்கள் அதன் சிறப்புப் பயன்களைத் தெரிந்துகொள்ள பள்ளிகளில் பாடத்திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்நிலைப் பிரிவில் பதினோராம் வகுப்பிற்கான புதிய பாடத்திட்டத்தில் இணையதளத்தினைப் பற்றிய விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**33—**

## நூலகக் கட்டடம்

**வினா எண் 12028—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூரில் பொது நூலகக் கட்டடம் கட்ட அரசு ரூ.4 இலட்சம் ஒதுக்கீடு செய்தும், அதற்கான இடம் ஒதுக்குவதற்கு காலதாமதத்தைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் கிளை நூலகத்திற்கு 'ஏ' வகை கட்டடம் ரூ.3.08 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு, நூலகம் புதிய கட்டடத்தில் 11-1-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

34—

## கல்விக் கட்டணம்

**வினா எண் 12178—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் தொழில் கல்வி கல்லூரிகளில் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தைவிட கூடுதலாக வசூல் செய்வதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அப்புகார்களின் உண்மைநிலை அறிய தொழில்நுட்பக் கல்வி இயக்குநரின் அறிக்கை பெறப்பட்டது. பெரும்பாலான புகார்களுக்குத் தகுந்த ஆதாரம் இல்லை. ஒரு கல்லூரியைப் பொறுத்தவரையில், இப்புகார் உண்மை எனக் கண்டறியப்பட்டதால், மாணவர்களின் விருப்பப்படி, அவர்கள் அக்கல்லூரியிலிருந்து வேறு கல்லூரிகளுக்கு மாற்றப்பட்டனர். கல்லூரிகளில் நிர்ணயிக்கப்பட்டதைவிட அதிகக் கட்டணம் வசூலிப்பதைத் தடுக்கும் வகையில், டி.எம்.ஏ. பாய் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைவிட கூடுதலாக கல்லூரிகள் கட்டணம் வசூலிக்கக் கூடாது எனவும், அவ்வாறு வசூலித்தால், சட்டப்படி அக்கல்லூரிகள் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாகும் எனவும் அரசு ஆணையிட்டுள்ளது.

35—

## நாமக்கல் கவிஞரின் கவிதைகள்

**வினா எண் 12252—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



நாமக்கல் கவிஞரின் கவிதைகளைப் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாடமாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் நாமக்கல் கவிஞருடைய "சுதந்திரப் பொங்கல்" குறித்த பாடலும், 10 ஆம் வகுப்பில் "மொழி வாழ்த்து" என்னும் பாடலும் இடம் பெற்றுள்ளன.

கல்லூரிகளில் பாடநூல்களை நிர்ணயம் செய்வதும், பாடங்களை நிர்ணயம் செய்வதும் பல்கலைக்கழகங்களாகும். பல்கலைக்கழகங்களில் நிர்ணயம் செய்யப்பட்ட புத்தகங்களே கல்லூரிகளில் பாடமாக தேர்வு செய்யப்பட்ட புத்தகங்களே கல்லூரிகளில் பாடமாக வைக்கப்படுகின்றன. சில பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பிற்குரிய தமிழ் அடித்தள படிப்பில் "நாமக்கல் கவிஞர்" பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

36—

## தமிழில் பொறியியல் பாட நூல்கள்

**வினா எண் 13314-ஆ—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகப் பொறியியல் பாடநூல்களைத் தமிழில் அச்சிட்டு வெளியிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தற்போது பொறியியல் பாடநூல்கள் தமிழில் அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 13

37—

**நிலுவைத் தொகை**

**வினா எண் 17819—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வணிக வரித் துறை மூலம் வசூலிக்க வேண்டிய நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு?

(ஆ) எந்தெந்த ஆண்டு நிலுவை உள்ளன?

(இ) நிலுவையை வசூல் செய்வதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) தமிழ்நாட்டில் வணிக வரித் துறைமூலம் வசூலிக்கப்படவுள்ள வரி பாக்கி 1-4-2003 அன்று ரூ.8,751.26 கோடி ஆகும். 31-12-2003 அன்று பழைய வரி பாக்கி ரூ.6,807.32 கோடி ஆகும். தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்திற்கு உரிய திருத்தங்களைக் கொண்டு வந்து சிறப்பு வரி விதிப்பு முறை தவிர்க்கக்கூடிய வழக்குகள் மற்றும் முதல் முறையீடு நிலையில் வழங்கப்பட்ட நீண்டகால தடை ஆணைகளை முடிவுக்குக் கொண்டு வருவது பற்றி ஆராய்தல். மேல்முறையீட்டு உதவி ஆணையர் அவர்களிடம் நிலுவையில் உள்ள முறையீடுகளை ஆய்வு செய்து நடத்தி விரைவில் முடிவுக்குக் கொண்டு வருதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல், தள்ளுபடி பிரேரணை கருத்துரு நடைமுறைகளை மறு ஆய்வு செய்தல், புலனாய்வுத் துறை முகமைகளைக் கொண்டு கண்டுபிடிக்க இயலாத வணிகர்களைக் கண்டறிந்து மேல்நடவடிக்கை தொடருதல், தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் தண்டத்தொகை விதிக்கும் ஏற்பாட்டினைக் கடுமை வாய்ந்ததாக மாற்றியமைத்தல், சுய வரிவிதிப்பு முறையினைக் கட்டுப்படுத்தும் வகையில் மாற்றி அதிக அளவில் இணக்கம் செய்ய ஏற்படுத்துதல், முறையீடுகளில் தகராறுகளைக் களைய சமாதானத் திட்டம் கொண்டு வருதல், சமாதானத் திட்டத்தின்கீழ் வராத ஒரு



2005 ஏப்ரல் 13]

சில இனங்களில் நிலுவைகளை இனம் கண்டு தீர்வு ஆணையம்மூலம் தீர்வுகளைப் பெறுதல் போன்ற செயல்களின்மூலம் நிலுவையை வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

38—

**அரசுக் கல்லூரி**

**வினா எண் 19076—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதியில் அரசுக் கல்லூரி மிக அவசியம் என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானிசாகர் தொகுதி, கோவை, ஈரோடு ஆகிய இரு நகரங்களில் மையப் பகுதியில் அமைந்துள்ளது. கோவை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் 51 கல்லூரிகளும், ஈரோடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதியில் 23 கல்லூரிகளும் பவானிசாகர் தொகுதியின் தேவையினை நிறைவு செய்து வருவதால், பவானிசாகரில் புதிதாக அரசுக் கல்லூரி தொடங்கும் அவசியமில்லை.

39—

**அரசு கலைக் கல்லூரி**

**வினா எண் 19103—திரு. ஜி. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகையூர் தொகுதியில் அரசினர் கலைக் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தேவையின் அடிப்படையில் நிதி நிலைமைக்கேற்ப அந்தந்த பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நெருக்கடியில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. பல்கலைக்கழகங்களின் நிதிநிலைமை சீரானபின், முகையூர் தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைத் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். அரசின் நிதியுதவியின்றி சுயநிதி கல்லூரிகளைத் திறக்க தனியார் முகமைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றால் தகுதி அடிப்படையில் அவை பரிசீலிக்கப்படும்.

**40—**

## அனைவருக்கும் கல்வி திட்டம்

**வினா எண் 19852—திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைவருக்கும் கல்வி (Sarva Shiksha Abhiyan) என்ற திட்டத்தை அமல்படுத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டு, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) சர்வ சிக்ஷா அபியான் என்னும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

1. அனைத்துப் பள்ளி வயது குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல்.



2. 2007-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஐந்தாண்டு பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்.

3. 2010-க்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் எட்டாண்டு பள்ளிக் கல்வியை அளிக்கச் செய்தல்.

4. தரமான ஆரம்பக் கல்வியை வழங்குதல்.

5. ஆண், பெண் பேதம்/சமூக ஏற்றத்தாழ்வு பாகுபாடின்றி சமச்சீரான தொடக்கக் கல்வியை 2007-க்குள் அடைதல்; 2010-க்குள் நடுநிலைக் கல்வியை அடைதல்.

6. 2010-க்குள் பள்ளி இடைநிற்றலை அறவே தடுத்தல்.

இத்திட்டத்தின்கீழ் புதிய தொடக்கப் பள்ளிகள் துவங்குதல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல், அங்கன்வாடிகள் மழலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல், பள்ளி வசதியில்லாத குடியிருப்புகளில் கல்வி உறுதியளிப்பு மையங்கள், இணைப்பு மையங்கள் மற்றும் உறைவிடப் பள்ளி முகாம்கள், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வட்டார வள மையங்கள், குழு வள மையங்கள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், கழிவறை மற்றும் குடிநீர் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற இனங்கள் அடங்கும்.

**41—**

## அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 20481—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரணமல்லூர் தொகுதியில் அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை. தேவையின் அடிப்படையில் கலைக் கல்லூரிகளைப் பல்கலைக்கழகங்கள் உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கும். தற்போதுள்ள நிதி நிலைமையில் பல்கலைக்கழகங்களால் புதிய கல்லூரிகளைத் துவக்க

[2005 ஏப்ரல் 13

இயலாது. மேலும் அரசின் நிதி உதவியின்றி சுய நிதிக் கல்லூரிகள் திறப்பது குறித்து தனியார் கல்வி முகமைகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால் அவை, தகுதியின் அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

42—

### அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம்

**வினா எண் 20538—திரு. எஸ். நடராஜன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதியில் அரசு பல்தொழில்நுட்பப் பயிலகம் ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

43—

### ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 20901—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*வந்தவாசி தொகுதி, அமுதூர் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள 9 இடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

வந்தவாசி தொகுதி, அமுதூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடம் - 2.



2005 ஏப்ரல் 13]

நெசவு ஆசிரியர் பணியிடம் - 1. ஆக மொத்தம், 3 பணியிடங்கள் மட்டுமேயாகும். நெசவு ஆசிரியர் பணி நியமனத்திற்குத் தடையாணை உள்ளதால் நிரப்பிட இயலாது. மேலும், இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடங்கள் படிப்படியாக இளநிலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களாக தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவின்படி 2004-2005 ஆம் கல்வி ஆண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் தேர்வு செய்யப்பட்டவர்கள் பட்டியல் பெற்று, இந்தப் பள்ளியில் உள்ள 2 இளநிலை பட்டதாரி ஆசிரியர் காலிப் பணியிடங்களை நிரப்பும் நடவடிக்கையில் உள்ளது.

44—

### பொது நூலகம்

**வினா எண் 23559—திரு. வி.ஆர். ராஜாங்கம்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியத்தில் கச்சைக்கட்டியில் பொது நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, வாடிப்பட்டி ஒன்றியம், கச்சைக்கட்டி கிராமத்தில் புதிய நூலகம் திறப்பதற்கான கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் இன்னும் பூர்த்தி செய்யப்படாததால் நூலகம் திறக்கப்படவில்லை.

1. பகுதிநேர நூலகம் செயல்பட வாடகையில்லா இலவச கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை மதுரை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தருதல் வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்படவேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.

**45—**

## தொழில்நுட்பக் கல்லூரி

**வினா எண் 25496— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதிக்குள் தொழில்நுட்பக் கல்லூரி (Polytechnic) அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—,**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**46—**

## புதிய பாடங்கள்

**வினா எண் 25610—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக் கல்லூரியில் புதியதாக பி.எஸ்ஸி. கணினி அறிவியல் பாடம் கொண்டு வரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**47—**

## பாட நூல்கள்

**வினா எண் 25620—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பாட நூல்கள் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை மாற்றப்படுகிறது?

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் மாற்றும் யோசனை அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) பொதுவாக ஐந்திலிருந்து ஏழு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றப்படுகிறது.

(ஆ) 2003-2004 ஆம் கல்வியாண்டில், 6, 9 ஆம் வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களுக்கும், 10 ஆம் வகுப்பு தமிழ்ப் பாடத்திற்கு மட்டும் புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 2004-2005 ஆம் கல்வியாண்டு முதல் 7, 11 வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களும், 10 ஆம் வகுப்பு தமிழ் தவிர அனைத்துப் பாடங்களுக்கும் புதிய பாட நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. 2005-2006 ஆம் கல்வியாண்டு முதல் 8 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு அனைத்துப் பாடங்களும் புதிதாக எழுதி அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

[2005 ஏப்ரல் 13

**48—**

**விரிவுரையாளர்கள்**

**வினா எண் 26720—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலும் காலியாகவுள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் கொள்கை முடிவிற்கேற்ப அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளும் 16-10-2002 முதல், பல்கலைக்கழகங்களின் இணைவு பெற்ற உறுப்பு கல்லூரிகளாக மாற்றப்பட்டன. அதைத் தொடர்ந்து பணியிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களின் குறைகளைக் களைவதுபற்றி பரிசீலிப்பதற்கு அரசு அமைத்த உயர் மட்டக் குழு அளித்த பரிந்துரைகளை அரசு ஏற்று, அரசாணை எண் (நிலை) 279, உயர் கல்வித் (கே2) துறை, நாள் 1-10-2002-ல் தகுந்த ஆணைகளை வெளியிட்டுள்ளது. அவ்வரசாணையில் பல்கலைக்கழகங்களின் சட்டங்கள் உரியவாறு திருத்தப்பட்டு, பல்கலைக் கழகங்களின் உறுப்பு கல்லூரிகளில் பணியாற்றும் 16-10-2002 அன்று வரை பணியில் உள்ள ஊழியர்கள் அனைவரும் அரசு ஊழியர்களாகவே தொடர்ந்து இருப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 16-10-2002-க்குப் பிறகு இணைவு பெற்றுள்ள கல்லூரிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களை பல்கலைக்கழகங்களே நிரப்புதல் வேண்டும். இருப்பினும், காலிப் பணியிடங்களை காலதாமதமின்றி நிரப்பும் நோக்குடன் அது குறித்த நிலவரத்தை அரசு ஆய்வு செய்து தேவையான பணியிடங்களுக்குத் தற்காலிகமாக கௌரவ விரிவுரையாளர்களை அக்காலிப் பணியிடங்களில் பணியமர்த்தியுள்ளது. அவர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.



2005 ஏப்ரல் 13]

**49—**

**நிதியுதவி**

**வினா எண் 27158—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நூலக வசதி, கணினி வசதி மற்றும் கூடுதலாக கட்டடம் கட்டி நிதியுதவி அளிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இப்போதுள்ள நூலகக் கட்டடத்தை சீரமைக்கவும், பழுதுபார்க்கவும் 2003-2004 ஆம் நிதியாண்டில் அரசு சிறப்பு நல்கையாக ரூ.6,35,000/- ஒப்பளிப்பு செய்து வழங்கியது. இத்தொகையைக் கொண்டு பொதுப் பணித் துறை வழி மேற்கண்ட பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்நிறுவன நூலகத்தில் கணினி வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. கூடுதலாகக் கட்டடம் கட்ட நிதியுதவி அளிக்கும் கருத்து ஏதும் இப்போது எழவில்லை.

**50—**

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**வினா எண் 27367—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் புதிதாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தேவையின் அடிப்படையில், நிதி நிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்குகின்றன. தற்போதுள்ள நிதி நெருக்கடியில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. எனவே, பெருந்துறையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அரசால் துவக்க இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**51—**

**விற்பனை வரி நிலுவை**

**வினா எண் 30064—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் அரசுக்குச் செலுத்த வேண்டிய விற்பனை வரி நிலுவை எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனம் 31-12-2002 வரை அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, தண்டத்தொகை, வட்டி, மத்திய விற்பனை வரி ஆகியவை ரூ.100.46 கோடியாகும். இப்பாக்கித் தொகையானது 1989-1990 ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2002 வரையுள்ள காலத்திற்குரியதாகும்.

(ஆ) இந்நிறுவனம் தமிழக அரசு நிறுவனமாகும். இந்நிறுவனம் இலாபகரமாக இயங்கவில்லை. டிசம்பர் 2002-க்குரிய வரியான ரூ.2.90 கோடியினை 20-1-2003 அன்று செலுத்தியுள்ளது. அக்டோபர் 1999 முதல் நவம்பர் 2002 முடிய உள்ள காலத்திற்கு வரி பாக்கித் தொகையான ரூபாய் 88,46,89,684/-ஐ 1-7-2003 முதல் 48 மாத சம தவணைகளாக பிரித்து செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அந்நிறுவனம் அதன்படி வரி பாக்கியினை செலுத்தவில்லை. இது தொடர்பாக அந்நிறுவனத்திற்கு ஒரு தாக்கீது 26-2-2004 அன்று அனுப்பப்பட்டது. டிசம்பர் 2002 முதல் திருவாளர்கள் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் அவர்கள் மாதாந்திர நமூனாப்படி முறையாக வரி செலுத்தி வருகிறார்கள்.





**52—**

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**வினா எண் 31013—திருமதி வி. சிவகாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தேவையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களே உறுப்புக் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதி நிலைமையில் பல்கலைக்கழகங்களால் உறுப்புக் கல்லூரிகளைத் துவக்க இயலாது. தாராபுரத்தில் சுய நிதி அடிப்படையில் கல்லூரி அமைக்கக் கோரும் விண்ணப்பங்களுக்கு அரசு முன்னுரிமை அளிக்கும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**53—**

**இயல் இசை நாடக மன்றம்**

**வினா எண் 31116—திரு. ராதாரவி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ) இயல் இசை நாடக விழாக்களையும், கலை நிகழ்ச்சிகளையும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின்மூலம் நடத்திட அரசின் ஆய்வில் கருத்துரு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை.*

*(ஆ) எழவில்லை.*

**54—**

### தொல்பொருள் அருங்காட்சியகம்

**வினா எண் 31795—திரு. என்.கே. பெருமாள்:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி அல்லது விளாத்திகுளத்தில் தொல்பொருள் அருங்காட்சியகம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அல்லது விளாத்திகுளத்தில் தொல்பொருள் அருங்காட்சியகம் அமைப்பது குறித்து பரிசீலனை ஏதும் இல்லை.*



2005 ஏப்ரல் 13]

**55—**

### வணிக வரி நிலுவை

**வினா எண் 33306—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2002 மார்ச் 31 முடிய மாவட்ட வாரியாக வணிக வரி நிலுவை எவ்வளவு?*

*(ஆ) இதனை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.*

### விவர அறிக்கை

*தமிழ்நாட்டில் 2002 ஆம் ஆண்டு மார்ச் 31 முடிய மொத்த வணிக வரி நிலுவை ரூ.7,909.40 கோடி ஆகும்.*

*மாவட்டம் வாரியாக 30-9-2002 வரை நிலுவையாக இருந்த வணிக வரிகள் பற்றி புள்ளிவிவரங்கள்:-*

*மாவட்டம்:*

| **1. சென்னை (வடக்கு) கோட்டம்** | **(ரூபாய் கோடியில்)** |
|---|---|
| சரகம்-1 | 156.62 |
| சரகம்-2 | 56.04 |
| சரகம்-3 | 75.77 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-3 | 290.30 |
| **மொத்தம்** | **578.73** |

| 2. சென்னை (தெற்கு) கோட்டம் | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| சரகம்-7 | 361.59 |
| சரகம்-10 | 285.11 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-4 | 1,288.46 |
| காஞ்சிபுரம் | 172.81 |
| **மொத்தம்** | **2,107.97** |
| **3. சென்னை (கிழக்கு) கோட்டம்** | |
| சரகம்-5 | 197.00 |
| சரகம்-6 | 488.23 |
| சரகம்-9 | 81.48 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-1 | 80.47 |
| **மொத்தம்** | **847.18** |
| **4. சென்னை (மையம்) கோட்டம்** | |
| சரகம்-4 | 231.68 |
| சரகம்-8 | 260.19 |
| சரகம்-11 | 401.26 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-2 | 540.22 |
| **மொத்தம்** | **1,433.35** |
| **5. திருச்சி (நகரம்)** | |
| திருச்சி | 85.39 |
| கரூர் | 38.46 |
| தஞ்சாவூர் | 8.51 |
| கும்பகோணம் | 12.01 |
| புதுக்கோட்டை | 21.69 |
| **மொத்தம்** | **166.06** |



| 6. வேலூர் | (ரூபாய் கோடியில்) |
|---|---|
| வேலூர் | 79.10 |
| திருவண்ணாமலை | 45.82 |
| கடலூர் | 57.39 |
| விழுப்புரம் | 39.75 |
| **மொத்தம்** | **222.06** |
| **7. மதுரை** | |
| மதுரை (கிழக்கு) | 84.86 |
| மதுரை (மேற்கு) | 305.47 |
| திண்டுக்கல் | 101.49 |
| சிவகங்கை | 40.74 |
| **மொத்தம்** | **532.56** |
| **8. திருநெல்வேலி** | |
| திருநெல்வேலி | 75.70 |
| நாகர்கோவில் | 74.98 |
| தூத்துக்குடி | 76.48 |
| விருதுநகர் | 78.49 |
| சிவகாசி | 88.12 |
| **மொத்தம்** | **393.77** |

[2005 ஏப்ரல் 13

| **9. கோயம்புத்தூர்** | **(ரூபாய் கோடியில்)** |
|---|---|
| சரகம்-1 | 138.68 |
| சரகம்-2 | 174.72 |
| சரகம்-3 | 146.33 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-1 | 161.16 |
| விரைவுவழி வரி விதிப்பு வட்டம்-2 | 114.19 |
| பொள்ளாச்சி | 50.57 |
| திருப்பூர் | 145.08 |
| நீலகிரி | 101.66 |
| **மொத்தம்** | **1032.39** |
| **10. சேலம்** | |
| சேலம் | 136.62 |
| நாமக்கல் | 174.15 |
| ஈரோடு | 175.32 |
| தருமபுரி | 109.04 |
| **மொத்தம்** | **595.13** |
| **ஒட்டுமொத்தம்** | **7,909.20** |

1-7-2002 முதல் 30-10-2002 முடிய சமாதானத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நிலுவையாக இருந்த ரூ.56 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. ரூ.14.46 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது. தவிரவும், 31-3-2003 முடிய, நிலுவையாக இருந்த தொகையில் ரூ.157.03 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது. நிலுவையைக் குறைக்க தீர்வுக் குழு (Settlement Commission) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. வரி நிலுவையைக் குறைக்க வணிக வரி அலுவலர்கள் அடங்கிய சிறப்புக்



2005 ஏப்ரல் 13]

குழு அமைக்கப்பட்டுள்ளது. வணிக வரி அலுவலர்களின் வரி வசூல் பணி ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அரசும் நிலுவை வரி வசூலில் இலக்கு நிர்ணயம் செய்து வசூல் பணியினை மாதந்தோறும் ஆய்வு செய்து வருகிறது. இந்தச் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் வரி நிலுவை குறைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**56—**

### அரசு பொறியியற் கல்லூரி

**வினா எண் 35273—திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில், அரசு பொறியியற் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது தூத்துக்குடி மாவட்டத்தில் 4 பொறியியல் கல்லூரிகள் இருப்பதால் மேலும் புதியதாக கல்லூரி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழவில்லை.

**57—**

### மகளிர் கல்லூரி

**வினா எண் 35619—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஏற்காடு தொகுதியில் பெண்களுக்கென கல்லூரி துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**58—**

### தனியார் கலை அறிவியல் கல்லூரிகள்

**வினா எண் 36619—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் கலை அறிவியல் கல்லூரிகள் எத்தனை நடைபெற்று வருகின்றன?

(ஆ) கல்லூரிகளில் வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு பின்பற்றப்பட்டு வருகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 133 அரசு நிதியுதவி பெறும் தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 247 சுய நிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் உள்ளன.

(ஆ) அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளரின் நியமனம் அரசு இட ஒதுக்கீட்டு முறையில் நடைபெறுகிறது. அரசு உதவிபெறும் தனியார் சிறுபான்மைக் கல்லூரிகளில் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியாளர்களுக்கான இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை. சுய நிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படுவதில்லை.

**59—**

### ஊதிய உயர்வு

**வினா எண் 37485—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) சென்னைப் பல்கலைக்கழகத்தில் அஞ்சல்வழிக் கல்வித் துறையில் பணியாற்றும் தற்காலிக பணியாளர்களுக்கு வழங்கப்படும் ரூபாய் 70-ஐ 120 ஆக உயர்த்தித் தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**60—**

### அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி

**வினா எண் 37622—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரத்தில் அறிவியல் மற்றும் கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேவையின் அடிப்படையில் தனது உறுப்புக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களே துவக்கும். எனவே, சீர்காழி நகரத்தில் உறுப்புக் கல்லூரியை துவக்குவது குறித்து பாரதிதாசன் பல்கலைக்கழகம் பரிசீலிக்கும். எனினும், தற்போதைய நிதி நெருக்கடி காரணமாக பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் அங்கு தனது உறுப்புக் கல்லூரியை துவக்க இயலாது.

[2005 ஏப்ரல் 13

61—

## முதல் நிலை நூலகம்

**வினா எண் 37623—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழியிலுள்ள இரண்டாம் நிலை நூலகத்தினை முதல் நிலை நூலகமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொது நூலகத் துறையில் செயல்படும் நூலகங்களிலுள்ள நூல்களின் எண்ணிக்கை மற்றும் ஆண்டு நூல் இரவல் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நூலகங்கள் ஏ, பி, சி மற்றும் டி என நான்கு தரங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றிற்கான பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 'ஏ' கிரேடு நூலகம் தரம் உயர்த்த நூலகத்தில் 20,000 நூல்கள் இருக்க வேண்டும். ஆண்டுக்கு 25,000 நூல்கள் இரவலாக அளிக்கப்படவேண்டும். சீர்காழி கிளை நூலகத்தில் நூலிருப்பு 23,045 ஆக இருப்பினும், ஆண்டு சராசரி நூல் இரவல் 12,924 மட்டுமே உள்ளது. முதல் நிலை நூலகமாக தரம் உயர்த்த ஆண்டு இரவல் 25,000-க்கு மேல் இருத்தல் வேண்டும். மேலும் இந்நூலகத்தை முதல் நிலை நூலகமாகத் தரம் உயர்த்த, முதல் நிலை நூலகர்-1, இரண்டாம் நிலை நூலகர்-1, மூன்றாம் நிலை நூலகர்-3, அலுவலக உதவியாளர்-1, காவலர்-1 மற்றும் பைண்டிங் உதவியாளர்-2 ஆகிய கூடுதல் பணியிடங்கள் தோற்றுவிக்க வேண்டும். தற்பொழுது புதிதாக பணியிடங்கள் தோற்றுவிப்பதில் தடையாணை உள்ளதாலும் சீர்காழியிலுள்ள கிளை நூலகத்தை முதல் நிலை நூலகமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறு தற்பொழுது இல்லை.



2005 ஏப்ரல் 13]

62—

## திம்மராசன் கோட்டை

**வினா எண் 38737—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு, திம்மராசன் கோட்டை சுவர்களும், அகழியும் பழுதடைந்துள்ளதை சீர்செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு, திம்மராசன் கோட்டை, கோட்டை சுவர்களும், அகழியும் தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னம் அல்ல என்பதால் தொல்லியல் துறையால் பழுதுபார்த்தல் பணிகள் இங்கு மேற்கொள்ள இயலாது.

63—

## புதிய பாடப் பிரிவுகள்

**வினா எண் 38884—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரிலுள்ள மகளிர் கலைக் கல்லூரியில் உயிர் வேதியியல், நுண்ணுயிரியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய புதிய பாடப் பிரிவுகள் தொடங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தேவையின் அடிப்படையில் கலைக் கல்லூரிகளில் புதிய பாடப் பிரிவுகளைத் துவக்குவது பல்கலைக்கழகங்கள் பரிசீலிக்கும். புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் வேதியியல், நுண்ணுயிரியல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பாடப் பிரிவுகளைத்

[2005 ஏப்ரல் 13

துவக்குவது குறித்தான கருத்துரு அக்கல்லூரியிலிருந்து பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் பெறப்படவில்லை.

64—

## பொறியியல் கல்லூரி

**வினா எண் 38920—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கியிலுள்ள பல்தொழில்நுட்பப் பயிலகக் கல்லூரியைப் பொறியியல் கல்லூரியாக மாற்றும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கியிலுள்ள பல்தொழில்நுட்பக் கல்லூரியைப் பொறியியல் கல்லூரியாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

65—

## பெண்கள் கலைக் கல்லூரி

**வினா எண் 39130—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் பெண்கள் கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.



2005 ஏப்ரல் 13]

66—

## கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**வினா எண் 39257—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

67—

## தெருக் கூத்து

**வினா எண் 39337—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குறைந்து வரும் தெருக்கூத்தினை மீண்டும் புத்துணர்வூட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

குறைந்து வரும் தெருக்கூத்தினை மீண்டும் புத்துணர்வூட்ட அரசு பல்வேறு நிலைகளில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாட்டில் பாரம்பரிய பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆர்வத்தைப் பெருக்குதல், தெரு நாடகங்கள் உள்ளிட்ட பண்பாட்டு மரபுகளுக்கு புத்துயிரூட்ட அரசு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டு நிதி ஒப்பளிப்பு வழங்கி மாவட்டக் கலை மன்றங்கள் மூலம் தெருக்கூத்து கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

68—

## நூலகம்

**வினா எண் 41329—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமத்திற்கு ஒரு நூலகம் என்பதை கட்டாயமாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எவ்வாறு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமத்திற்கு ஒரு நூலகம் என்பதை கட்டாயமாக்க இயலாது. தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 1,000 மக்கள் தொகைக்கு மேலுள்ள ஊர்களில் ஒரு பகுதிநேர நூலகமும், 5,000 மக்கள் தொகைக்கு மேல் 50,000 மக்கள் தொகைக்குள் உள்ள ஊர்களில் ஊர்ப்புற/கிளை நூலகங்கள் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. புதிய நூலகம் திறப்பதற்கு தொடரும் செலவினம் மற்றும் தொடரா செலவினங்கள் என பல்வேறு செலவினங்கள் உள்ளன. விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் தொகை இருப்பின் அத்துடன் அவ்வூர் பொதுமக்கள் ஆர்வமுடன் முன்வந்து நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் முதற்கட்டமாக அக்கிராமத்தில் பகுதிநேர நூலகம் திறக்க இயலும்.

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. எதிர்காலத்தில் நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.



4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் நன்கொடையாக வழங்கப்பட வேண்டும்.

5. தலா ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

69—

## மாணவர் விடுதி

**வினா எண் 41435—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு மன்னர் கலைக் கல்லூரி மாணவர்களுக்கென மேலும் ஒரு விடுதி தொடங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

70—

## மாணவியர் விடுதி

**வினா எண் 41436—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரிக்கு மேலும் மாணவியர் விடுதி தொடங்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

71—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 43063—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், மூட்டாம்பட்டி ஊராட்சி, ஆரணிப்பட்டியிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், குண்றாண்டார்கோவில் ஒன்றியம், மூட்டாம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த ஆரணிப்பட்டி கிராமத்திலுள்ள தொடக்கப் பள்ளி 2002-2003 ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி 16-9-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

72—

## உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 43065—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதி, குண்றாண்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

2003-2004 ஆம் கல்வியாண்டில் 40 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, அரசாணை (நிலை) எண் 84, பள்ளிக் கல்வி, நாள் 20-6-2003 மற்றும் அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி, நாள் 7-8-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, புதுக்கோட்டை தொகுதி, குண்றாண்டார்கோவில் ஒன்றியம், தெம்மாவூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 110, பள்ளிக் கல்வி, நாள் 7-8-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



73—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 43614—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, புதுப்பாளையம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, புதுப்பாளையம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

74—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 43616—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

75—

## அரசுக் கலைக் கல்லூரி

**வினா எண் 44458—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, எட்டயபுரத்தில் பாரதியின் பெயரால் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இனி வருங்காலங்களில் தேவையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களே புதிய கலைக் கல்லூரிகளைத் தங்களது உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கும். எட்டயபுரத்தில் மனோ கல்லூரி என்ற ஒரு கல்லூரியை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் துவக்கியுள்ளதால், எட்டயபுரத்தில் பாரதியின் பெயரால் அரசு கலைக் கல்லூரி அமைக்கும் திட்டம் இல்லை என அப்பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.



2005 ஏப்ரல் 13]

76—

## கிளை நூலகம்

**வினா எண் 45083—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், ஒக்கூரில் கிளை நூலகம் அமைக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் கிளை நூலகம்/ஊர்ப்புற நூலகம் திறக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒக்கூர் கிராமத்தில் மக்கள் தொகை 1,367 மட்டுமே உள்ளதால் அவ்வூரில் கிளை நூலகம் அமைக்க சாத்தியக்கூறு இல்லை. எனினும் அக்கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவேற்றி தரும்பட்சத்தில் ஒரு பகுதிநேர நூலகம் திறக்க இயலும்.

1. வாடகையற்ற இலவசக் கட்டடம்.
2. 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான காலிமனை நூலக ஆணைக் குழுவின் பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தர வேண்டும்.
3. ரூ.2,000/- மதிப்பில் தளவாடங்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.
4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.
5. 2 புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

77—

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 46812—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், நாட்டுமங்கலம் ஊராட்சி, கொன்னக்காடு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் கருத்துரு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஒன்றியம், நாட்டுமங்கலம் ஊராட்சி, கொன்னக்காடு தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**78—**

## பொது நூலகம்

**வினா எண் 48968—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை நகராட்சி 2-வது வட்டத்தில் பொது நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை நகராட்சி 2-வது வட்டத்தில் நூலகம் திறக்கக்கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் இதுவரை ஒரு நூலகம் திறக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததால் நூலகம் திறக்கப்படவில்லை.

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்படவேண்டும்.



2. வருங்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாக 5 சென்ட் முதல் 10 சென்ட் வரையிலான இலவச காலிமனை மாவட்ட நூலக ஆணைக் குழு பெயருக்கு பத்திரப்பதிவு செய்து தர வேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்க வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.

**79—**

## அரசு மகளிர் கல்லூரி

**வினா எண் 49040—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோட்டில் அரசு மகளிர் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

தேவையின் அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த பல்கலைக்கழகங்களே புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்கும். தற்போதுள்ள நிதிநிலையில், புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களால் துவக்க இயலாது. அரசின் நிதி உதவியின்றி சுயநிதி கல்லூரிகளைத் திறக்க தனியார் முகமைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றால் தகுதி அடிப்படையில் அவை பரிசீலிக்கப்படும்.

**80—**

## அரசு தொழில்நுட்பக் கல்லூரி

**வினா எண் 49049—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

ஈரோட்டில் அரசு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

**81—**

## அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 50046—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை. அரசின் நிதி உதவியின்றி சுயநிதி அடிப்படையில் கல்லூரி திறப்பது குறித்து தனியார் கல்வி முகமைகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டால் தகுதியின் அடிப்படையில் அவை பரிசீலிக்கப்படும்.

**82—**

## நடுநிலைப் பள்ளி

**வினா எண் 50056—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் ஒன்றியம், பொரும்பூர் ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், பொரும்பூர் ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 113, பள்ளிக் கல்வித் துறை, நாள் 20-8-2004-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**83—**

## மகளிர் கல்லூரி

**வினா எண் 51050—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஆழியார் நகரில் மகளிர் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தேவையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கும். தற்போதைய நிதி நெருக்கடியில் அவற்றால் உறுப்புக் கல்லூரிகளைத் துவக்க இயலாது. பல்கலைக்கழகங்களின் நிதி நிலைமை சீரானபின் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைத் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும். அரசின் நிதி உதவியின்றி சுயநிதிக் கல்லூரிகள் துவக்குவது குறித்து தனியார் முகமைகளிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும்.

[2005 ஏப்ரல் 13

**84—**

**அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி**

**வினா எண் 53429—திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராசிபுரம் தொகுதியில் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. தேவையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களே தங்களது உறுப்புக் கல்லூரிகளைத் துவக்கும். ஆண்டகளூர் கேட்டில் உள்ள அரசு கலைக் கல்லூரியும் காக்காவேரியில் உள்ள முத்தாயம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் இராசிபுரம் தொகுதி மாணவியரின் கல்வித் தேவையினைப் பூர்த்தி செய்ய வாய்ப்பு உள்ளது என பெரியார் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ள நிலையில், மகளிருக்கென ஒரு கலைக் கல்லூரியை பெரியார் பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்த வாய்ப்பில்லை. தனியார் முகமைகளிடமிருந்து அரசின் நிதியுதவியின்றி கலைக் கல்லூரியோ, தொழில்நுட்பக் கல்லூரியோ தொடங்க விண்ணப்பங்கள் பெறப்பட்டால் பரிசீலிக்கப்படும்.

**85—**

**அரசு கலைக் கல்லூரி**

**வினா எண் 53630—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளத்தில் அரசு கலைக் கல்லூரி பயிலகம் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**86—**

**மகளிர் கலைக் கல்லூரி**

**வினா எண் 54781—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரில் அரசு மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**87—**

**திருமலை நாயக்கர் மகால்**

**வினா எண் 55360—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதியிலுள்ள மன்னர் திருமலை நாயக்கர் மகாலில் செம்மை செய்யும் பணி நிறைவு பெற்றவுடன் மின் அலங்காரம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை தொல்லியல் சின்னங்கள் சட்டத்தின்படி, பாதுகாக்கப்பட்ட வரலாற்றுச் சின்னமாகும். இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க சின்னங்களில் மின் அலங்காரம் செய்வது மரபில் இல்லாததாகும். இவ்வாறாக, நிரந்தரமான முறையில் மின் அலங்காரம் செய்ய வேண்டுமாயின், அவற்றினை அமைப்பதற்காகவும், கட்டடப் பகுதிகளில் ஆணி போன்ற பொருட்களை பொருத்த வேண்டியிருக்கும். திருமலை நாயக்கர் அரண்மனை பழைய கட்டடமானதாலும், இதுபோன்ற அமைப்புகளை மிகவும் பெரிய அளவில் துளைகளிட்டு ஏற்படுத்த வேண்டியிருப்பதாலும் இந்நிகழ்வு சின்னத்திற்கு ஒரு வகையில் சேதத்தை ஏற்படுத்தும். மேலும் திருமலை நாயக்கர் அரண்மனையில் சுற்றுலாத் துறை மூலமாக தினமும் இரவில் ஒளி, ஒலிக் காட்சி நடைபெற்று வருகிறது. இதன்மூலம் அரண்மனையின் உள் பகுதி யாவும் மின் விளக்குகள் மூலம் ஒளியூட்டப்பட்டு வருகின்றன. இக்காட்சிகள் மூலமே பொது மக்கள் அரண்மனையின் மின் அலங்காரத் தோற்றத்தினை கண்டுகளித்து வருகின்றனர். ஆதலால், திருமலை நாயக்கர் அரண்மனையில் செம்மை செய்யும் பணி நிறைவு பெற்றவுடன், மின் அலங்காரம் செய்வதற்கான சாத்தியக்கூறு எழவில்லை.

*(ஆ)* தேவை எழவில்லை.

**88—**

### மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

**வினா எண் 57087—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகை மாவட்டம், சீர்காழி தொகுதியில் மகளிர் கலை மற்றும் அறிவியல் சுயநிதித் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கைவிளாஞ்சேரி என்னுமிடத்தில் விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் சுய நிதிக் கல்லூரி 2004-2005-ல் தொடங்க அரசாணை எண் 487, உயர் கல்வித் துறை, நாள் 9-9-2004-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**89—**

### நூலகர்கள் நியமனம்

**வினா எண் 58566—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் கிளை நூலகங்களில் உள்ள காலிப் பணியிடங்களில் தினக்கூலி அடிப்படையில் பயிற்சி பெற்ற நூலகர்களை நிரப்ப அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பொது நூலகத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் மாவட்ட நூலக ஆணைக் குழு நூலகங்களில் கூடுதல் பணிகளைச் செய்ய போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில், நூலகர்களுக்கு உதவ தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையிலே பணியாளர் நியமனம் தேவைப்படின், நூலகவியல் பயிற்சி பெற்றவர்களை பணி அமர்த்த மாவட்ட நூலக அலுவலருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**90—**

### கலைக் கல்லூரி

**வினா எண் 58814—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியில் கலைக் கல்லூரி தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

91—

## கோவை பாரதியார் பல்கலைக்கழகம்

**வினா எண் 62448—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, பாரதியார் பல்கலைக்கழகம் கோவை பாரதியார் பல்கலைக்கழகம் என்று திருத்தம் செய்து அறிவிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாரதியார் பல்கலைக்கழகம், கோவை, நீலகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கியதாகும். பல்கலைக்கழகத்தின்கீழ் 85 உறுப்புக் கல்லூரிகள் உள்ளன. ஆகவே, பாரதியார் பல்கலைக்கழகம் என்பதனை குறுகிய வளைவுக்குள் உள்ளடக்கும் பொருள் பொதிந்த "கோவை பாரதியார் பல்கலைக்கழகம்" என்று பெயர் மாற்றம் செய்ய எடுக்கும் நடவடிக்கை பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளை மிகவும் குறைந்த எல்லைக்குள் அடக்குவதாக அமையும். ஆகவே இந்தப் பெயர் மாற்றம் தேவையற்றது.



92—

## அரசு கலைக் கல்லூரி

**வினா எண் 64087—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் அரசு கலைக் கல்லூரி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

இல்லை.

93—

## கோவையில் கோளரங்கு

**வினா எண் 67339—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் கோளரங்கு பணிகள் எப்போது துவங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகரில் நவீன வசதிகள் பொருந்திய கோளரங்கம் மற்றும் அறிவியல் தொழில்நுட்பக் காட்சிக்கூடங்கள் அடங்கிய ஒரு மண்டல அறிவியல் மையத்தினை அமைப்பதென திட்டமிடப்பட்டு, விளாங்குறிச்சி கிராமத்தில் 5.91 ஏக்கர் நிலப்பரப்பு தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டப் பணியாக, நிலத்தினை சமம் செய்தல் மற்றும் சுற்றுச்சுவர் எழுப்புதல் ஆகிய பணிகள் ரூ.13 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 13

இத்திட்டத்தின் தொடர் பணியாக, ரூ.300 இலட்சம் செலவில் கோளரங்க கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, தேசிய அளவில் கட்டடக் கலையில் முன்னோடிகளாகத் திகழும் நிறுவனங்களிடமிருந்து வரைபட மாதிரிகள் பெறப்பட்டு, கோத்தாரி & அசோசியேட்ஸ், கொல்கத்தா அவர்களின் வரைபடம், இதற்கென அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ரூ.600 இலட்சம் மதிப்பீட்டில், கோளரங்கக் கருவிகளை ஜப்பான் அரசிடமிருந்து, கலாச்சார பண்பாட்டு மானியமாக பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அறிவியல் தொழில்நுட்பக் காட்சிக்கூடங்களை ரூ.745 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பொருட்டு, நிதி ஆதாரங்களைப் பெறுவதற்காக மத்திய அரசின் அறிவியல் தொழில்நுட்பத் துறை அணுகப்பட்டுள்ளது.

நிதி ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றவுடன் கோளரங்கப் பணிகள் துவங்கும்.

94—

### புதிய கட்டடம்

**வினா எண் 70644—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவையில் அரசு இசைக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

கோவையில் அரசு இசைக் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டிக் கொடுப்பது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

95—

### பால் விற்பனை நிலையம்

**வினா எண் 47431—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஆழியார் நகரில் பால் விற்பனை நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை ஆழியார் நகரில் தனியாக பால் விற்பனை நிலையம் ஏற்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

96—

### பால் சேகரிப்பு மையம்

**வினா எண் 53300—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு பேரூராட்சியில் பால் சேகரிப்பு மையம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

பேரணாம்பட்டு பேரூராட்சியில் பால் சேகரிப்பு மையம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்புகள் ஏதுமில்லை.

97—

### ஆவின் பால் விற்பனை

**வினா எண் 54729—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தனியார் பால் விற்பனை நிலையங்களோடு, ஆவின் பால் போட்டிபோட முடியாத நிலையில் விற்பனையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், ஆவின் பால் விற்பனையை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) பால் விற்பனையில் தனியார் நிறுவனங்களைவிட ஆவின் நிறுவனம் முன்னணியில் உள்ளது.

(ஆ) பால் விற்பனையை அதிகரிக்க மேலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**98—**

## நிதியுதவி

**வினா எண் 10336—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு நூற்பாலையில் பழுதடைந்துள்ள உதிரி பாகங்களை மாற்ற நிதியுதவி வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் கூட்டுறவு நூற்பாலை நட்டம் அடைந்து 31-3-2004-லிருந்து செயல் இழந்துள்ளது. எனவே நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை தனியார்மயமாக்க அரசு கொள்கையளவில் முடிவு எடுத்துள்ளபடியால், சேலம் கூட்டுறவு நூற்பாலைக்கு பழைய உதிரி பாகங்களுக்குப் பதிலாக புதிய உதிரி பாகங்கள் வாங்கி மாற்ற நிதி உதவி வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**99—**

## பட்டு உற்பத்தி

**வினா எண் 13158—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் பட்டு கிடைக்காததால் பட்டு நெசவாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை களைய அரசிடம் திட்டம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களுக்குத் தேவையான பட்டினை தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர்கள் இணையம் (டான்சில்க்) மற்றும் அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மூலம் கொள்முதல் செய்து, உற்பத்தி செய்து வருகின்றன. இதனால் தமிழகத்தில் பட்டு கிடைக்காமல் பட்டு நெசவாளர்கள் எவ்வித பாதிப்புக்கும் ஆளாவதில்லை.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

**100—**

## தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை

**வினா எண் 23342—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலையின் நலிவை நீக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

தென்னிந்திய விஸ்கோஸ் தொழிற்சாலை, புதுதில்லியிலுள்ள தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியத்தை (Board for Industrial and Financial Reconstruction) நலிவுற்ற நிறுவனங்களின் (சிறப்பு விதி) சட்டம் 1985-ன்கீழ் 26-12-2001-ல் அணுகியது. இந்நிலையில் கோவை, தென்னிந்திய விஸ்கோஸ் ஆலையை சீரமைத்து மீண்டும் இயக்க புதுதில்லி தொழிலியல் மற்றும் நிதிசீரமைப்பு வாரியத்தின் மூலமாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவ்வாறு சீரமைக்க வாய்ப்புகள் கண்டறியப்படாததையடுத்து, இந்த நிறுவனத்தைக் கலைக்க (Wound up) சென்னை உயர் நீதிமன்றத்திற்கு

[2005 ஏப்ரல் 13

மேற்காணும் வாரியமானது பரிந்துரை செய்தது. அதனை ஏற்று வழக்கு சி.பி. எண் 17/2004-ல் கடந்த 25-8-2004 அன்று சென்னை உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் மேற்காணும் ஆலையை கலைத்துவிட ஆணையிடப்பட்டு, கலைத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, கலைத்தல் அலுவலரையும் நியமித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தென்னிந்திய விஸ்கோஸ் ஆலையை கலைக்கும் நடவடிக்கைகளை சென்னை உயர் நீதிமன்ற கலைத்தல் அலுவலர் தற்சமயம் மேற்கொண்டு வருகிறார்.

**101—**

### ஏற்றுமதி ரக உற்பத்தி

**வினா எண் 26937—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கைத்தறி நெசவாளரின் எத்தனை கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி ரக உற்பத்தியை செய்ய ஈடுபடுத்தப்பட்டுள்ளன?

(ஆ) ஏற்றுமதி ரகங்கள் உற்பத்தி செய்வதால், நெசவாளர்களுக்கு கூலி உயர்வு மற்றும் அரசு உதவிகள் கிடைக்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 5 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுமதி ரக உற்பத்தியைச் செய்ய ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

(ஆ) ஆம்.

**102—**

### மானியம்

**வினா எண் 38388—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மத்திய கூட்டுறவு வங்கிகளில் வழங்கப்படும் காசுக்கடனுக்கு வழங்கப்பட்டு வந்த 3 சதவீதம் மானியம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசாணை (நிலை) எண்.85, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை நாள் 8-8-2002-ல் வட்டி மானியத் திட்டம் 30-9-2002 வரை மட்டுமே செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, 1-10-2002 முதல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வட்டி மானியத் தொகை வழங்கப்படுவதில்லை.

**103—**

### நிதியுதவி

**வினா எண் 38393—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் பெண்கள் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்துவதற்காக தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

104—

## கைத்தறித் துணி கொள்முதல்

**வினா எண் 43659—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி நகரத்தில் 10-க்கும் மேலான கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டு விட்டதால் நெசவாளர்கள் தயாரிக்கும் கைத்தறி துணிகளை அரசே கொள்முதல் செய்து மேலைநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அலுவலகம் ஒன்றினை திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

ஆரணி நகரத்தில் 10-க்கும் மேலான கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் மூடப்பட்டு விட்டதால் நெசவாளர்கள் தயாரிக்கும் துணிகளை அரசே கொள்முதல் செய்து மேலைநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய அலுவலகம் ஒன்றினை திறப்பதற்கு வாய்ப்பில்லை.

105—

## நூற்பாலைகள்

**வினா எண் 62650—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் நூற்பாலைகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்தில் மூடிக்கிடக்கும் நூற்பாலைகளை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.



106—

## மீனவர்களுக்கு இழப்பீடு வழங்குதல்

**வினா எண் 5044—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1996-2001 வரை இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த மீனவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஊனமுற்றவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) 1996-2001 வரை இலங்கை இராணுவத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்த மீனவர்கள் 42 பேர்.

(ஆ) ஊனமுற்றவர்கள் 69 பேர்.

(இ) நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

107—

## மீன் விற்பனை அங்காடி

**வினா எண் 27205—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 1-வது தொகுதியில் கூட்டுறவுச் சங்கம் மூலம் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 1-வது தொகுதியில் மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது, அரசின் பரிசிலனையில் இல்லை.

[2005 ஏப்ரல் 13

108—

### கடற்கரைப் பூங்கா

**வினா எண் 34279—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையார் மீன்பிடித் துறைமுகத்தை கடற்கரை பூங்காவாக ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம் பழையார் மீன்பிடித் துறைமுகம் அமைந்துள்ள பகுதியில் அரிய வகை கடல்வாழ் உயிரினங்கள் இல்லை. பழையார் மீன்பிடித் துறைமுகத்தை கடற்கரை பூங்காவாக ஏற்படுத்தித் தரும் திட்டம் ஏதுமில்லை.*

109—

### நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு

**வினா எண் 35993—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், வேட்டங்குடி ஊராட்சி, கூழையார் கிராமத்தில் 'சிவா' இறால் பண்ணைக்கு கடல்நீரை விளைநிலம் மூலமாக கொண்டு வருவதால் விளைநிலம் களர் நிலமாக பாதிக்கப்பட்டு உப்புநீராக மாறுவதை தடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியத்தைச் சேர்ந்த வேட்டங்குடி ஊராட்சிக்குட்பட்ட கூழையாறு கிராமத்தில்*



2005 ஏப்ரல் 13]

*611, 612, 613 மற்றும் 614 ஆகிய சர்வே எண்களில் திரு. சி. சிவக்குமார் என்பவர் நடத்திவரும் 'வெஸ்பா அக்வா பார்ம்' என்ற இறால் பண்ணை இந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் (Aquaculture Authority) உரிமம் பெற்றுள்ளது. இப்பண்ணைக்குத் தேவையான கடல் நீர் கிராமத்திலுள்ள உப்பனாற்றின் வழியே கொண்டு வரப்பட்டு பயன்படுத்தப்படுகிறது. கடல்நீர் எந்த நிலப்பகுதி மூலமும் கொண்டு வரப்படவில்லை. இப்பண்ணையைச் சுற்றி கழிவுநீர் வடிவதற்கேற்ப வாய்க்காலும் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அருகிலுள்ள நிலங்கள் களர் நிலங்களாக மாறுவதற்கு வாய்ப்பில்லை.*

110—

### மீனவர்களுக்கு காலனி வீடுகள்

**வினா எண் 37621—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி ஒன்றியம் நாயக்கர்குப்பம் மீனவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், நாயக்கர்குப்பம் மீனவர்களுக்கு வீடுகள் கட்டி வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

111—

### உவர்நீர் இறால் பண்ணை

**வினா எண் 54330—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் செங்கற்பட்டு, திருக்கழுக்குன்றம் வட்டங்களில் உவர்நீர் இறால் பண்ணைகள் அரசு அனுமதியுடன் இயக்கப்படுகின்றனவா?*

*(ஆ) அனுமதியில்லாமல் உள்ள உவர்நீர் இறால் பண்ணைகள்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) இந்தியாவில் உள்ள உவர்நீர் இறால் பண்ணைகளை வரைமுறைப்படுத்த உச்ச நீதிமன்றம் உத்தரவுப்படி இந்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் விண்ணப்பங்களை பரிசீலித்து இறால் பண்ணைகளுக்கு உரிமம் வழங்குகிறது.

(ஆ) உரிமம்/அனுமதி பெறாத பண்ணைகளின் பட்டியல் விவரம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டு அதில் தெரிவித்துள்ள இறால் பண்ணைகளின்மீது உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி இறால் வளர்ப்பு செய்வதை மட்டுமே நிறுத்த வேண்டும் என தெரிவித்து அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும்படி காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**112—**

## பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 1602—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுற்றுலா முக்கியத்துவம் உள்ள காஞ்சிபுரம், வேடந்தாங்கல், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், திருப்போரூர் - முட்டுக்காடு - சிங்கப்பெருமாள்கோயில் -திருக்கச்சூர் - வல்லக்கோட்டை - திருப்பெரும்புதூர் பகுதிகளை இணைத்து பேருந்துகள் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் காஞ்சிபுரம்-மாமல்லபுரம்-முட்டுக்காடு ஆகிய இடங்களுக்குச் செல்ல தினசரி சுற்றுலாவை நடத்தி வருகிறது. வேடந்தாங்கலுக்கு பருவ காலங்களில் மட்டும் சுற்றுலா நடத்தப்படுகிறது. திருக்கழுக்குன்றம், திருப்போரூர்-சிங்கப்பெருமாள் கோயில்-திருக்கச்சூர்-வல்லக்கோட்டை-திருப்பெரும்புதூர் ஆகிய இடங்களுக்கு செல்ல சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்கு/வேண்டுகோளுக்கு ஏற்ப சுற்றுலா நடத்தப்படும்.



**113—**

## நட்சத்திர ஓட்டல்கள்

**வினா எண் 8827—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரியில் சுற்றுலாத் துறை மூலம் நட்சத்திர ஓட்டல்கள் அமைக்க அரசிடம் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியில் சுற்றுலாத் துறை மூலம் நட்சத்திர ஓட்டல் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**114—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 11371—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், குட்லாடம்பட்டி அருவியை சுற்றுலாத் தலமாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், குட்லாடம்பட்டி அருவியை சுற்றுலாத் தலமாக்க எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**115—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 34608—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

தமிழ்நாட்டில் புராதன சிற்ப, ஓவிய கலையழகுடைய எத்தனை கோயில்கள் நடப்பாண்டில் சுற்றுலாத் தலமாக்க அரசு கருதியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் புராதன சிற்ப, ஓவிய கலையழகுடைய கோயில்கள் நடப்பாண்டில் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது தொடர்பான எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**116—**

## சிறுவர் விளையாட்டுப் பூங்கா

**வினா எண் 47111—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள சுற்றுலா மையங்களில் பொழுதுபோக்கு வசதி, மின் அலங்கார வசதியுடன் கூடிய சிறுவர் விளையாட்டுப் பூங்கா சிறப்புடன் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள சுற்றுலா மையங்களில் பொழுதுபோக்கு வசதி, மின் அலங்கார வசதியுடன் கூடிய சிறுவர் விளையாட்டுப் பூங்கா சிறப்புடன் அமைப்பது குறித்து எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**117—**

## சுற்றுலா மையம்

**வினா எண் 51634—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) சுதந்திர போராட்ட தியாகி வீரன் அழகு முத்துக்கோன் நினைவிடத்தை சுற்றலா மையமாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுதந்திர போராட்ட தியாகி வீரன் அழகு முத்துக்கோன் நினைவிடத்தை சுற்றுலா மையமாக மாற்றியமைக்கும் எவ்வித செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**118—**

## குழந்தைத் தொழிலாளர்கள்

**வினா எண் 17746—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் நகரில் தங்க நகைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்களை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் நகரில் தங்க நகைகள் உற்பத்தி செய்யும் நான்கு தொழிற்சாலைகள் 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்சாலைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் எவரும் பணிபுரியவில்லை.

2. 1948 ஆம் வருட தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 67-ன்கீழ் தொழிற்சாலைகளில் 14 வயது பூர்த்தியடையாத குழந்தைத் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்துவது தடை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை ஆய்வாளர்களின் ஆய்வின்போது குழந்தைத் தொழிலாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டிருப்பது கண்டறியப்படுமானால், சம்பந்தப்பட்ட தொழிற்சாலை நிருவாகத்தினர்மீது உடனுக்குடன் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 13

**119—**

**தனி வாரியம்**

**வினா எண் 24443—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கைவண்டி மற்றும் சுமை தூக்குவோர்களுக்கு தனி வாரியம் அமைக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அத்தகைய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**120—**

**கட்டுமானத் தொழிலாளர்கள்**

**வினா எண் 30073—திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்களை காப்பதற்காக உருவாக்கப்பட்ட நல வாரியத்தில் எத்தனை தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள்?

(ஆ) இதுவரை அவர்கள் பெற்றிருக்கும் பயன்கள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் 31-07-2004 வரை 5,69,041 தொழிலாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டுள்ளனர்.

(ஆ) இவர்களில், 33,851 தொழிலாளர்களுக்கு ரூ.12,24,24,855 நலத்திட்ட உதவிகளாக வழங்கப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 13]

**121—**

**வேலைவாய்ப்பகப் பதிவு**

**வினா எண் 33324—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பெயரை பதிந்துகொண்டு அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் நிரந்தரமாக பணிபுரியும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் பெயர்களை நீக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிதி உதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஏற்படும் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணி காலியிடங்களுக்கு வேலைவாய்ப்பகங்கள் பட்டியல்கள் அனுப்பும்போது பட்டியல்களுடன் அதன் முகப்புக் கடிதத்தில் பேட்டிக்கு வந்தவர்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரத்தை தேர்வு முடிவுபெற்ற 15 நாட்களுக்குள் அனுப்பிவைக்கும்படி வேலையளிப்போருக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறான விவரங்கள் பெறப்பட்டவுடன் தெரிவு செய்யப்பட்டவர்களின் பதிவேட்டை உயிர் பதிவேட்டிலிருந்து உடனடியாக நீக்கம் செய்யப்படுகிறது.

**122—**

**தொழிற்பயிற்சிக் கல்வி நிறுவனம்**

**வினா எண் 33389—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதியில் தொழிற்பயிற்சி கல்வி நிறுவனம் (ஐ.டி.ஐ) அரசு துவங்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை.

*(ஆ)* எழாது.

**123—**

**கூடுதல் இடங்கள்**

**வினா எண் 33867— திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொழிற் பயிற்சி மையத்தில் (ஐ.டி.ஐ) ஒவ்வொரு பாடப்பிரிவிலும் கூடுதல் இடங்களை அரசு ஏற்படுத்த முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**124—**

**மாலைநேர வகுப்புகள்**

**வினா எண் 34470—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலத்தில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் மாலைநேர வகுப்புகள் துவங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை,

*(ஆ)* எழாது.



2005 ஏப்ரல் 13]

**125—**

**யோகா பயிற்சி**

**வினா எண் 35516—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் யோகா பயிற்சி அளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இத்திட்டம் தற்போது பரிசீலனையில் உள்ளது.

**126—**

**தொழிற்சங்கங்கள்**

**வினா எண் 36114— திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் தொழிற்சங்கங்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளை பலப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* தமிழகத்தில் தொழிற்சங்கங்கள் மற்றும் அவற்றின் நடவடிக்கைகளை பலப்படுத்த தனிப்பட்ட திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

*(ஆ)* எழவில்லை.

[2005 ஏப்ரல் 13

**127—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 36121— திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி, திண்டுக்கல் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் பொறியியல் கருவி, குளிர்சாதனப் பெட்டி, கண்ணாடி, பீங்கான் போன்ற தொழில்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டவர்களுக்கு அரசு என்னென்ன வழிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருகிறது?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிண்டி, திண்டுக்கல் மற்றும் விருத்தாசலம் ஆகிய இடங்களில் பொறியியல் கருவி, குளிர்சாதனப் பெட்டி, கண்ணாடி, பீங்கான் போன்ற தொழில்களில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள், அவர்கள் எந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார்களோ, அந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொடர்புடைய தொழில்களில் வேலைக் காலியிடம் பெறப்பட்டால் தகுதிக்குட்பட்டு அவர்கள் பரிந்துரை செய்யப்படுவார்கள். அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பில் ஆர்வமிருப்பின் மாவட்ட தொழில் மையம் போன்ற நிறுவனங்களை அணுகி பயன் பெறலாம்.

**128—**

## அனைவருக்கும் வேலையளிக்கும் திட்டம்

**வினா எண் 38535—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவேண்டி பதிவு செய்துள்ளவர்களில் மலைவாழ் மக்கள் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் வேலையளிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலைவேண்டி பதிவு செய்துள்ளவர்களில் மலைவாழ் பதிவுதாரர்களின் எண்ணிக்கை 2,467 ஆகும்.

(ஆ) இல்லை.

**129—**

## பணத்தைச் செலுத்த நடவடிக்கை

**வினா எண் 39423—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழிலாளர்களிடம் சம்பளத்தில் பிடித்தம் செய்த பின்னரும், பொது வைப்புநிதி மற்றும் இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்கு பணத்தை கட்டாமல் உள்ள தொழிற்சாலைகள் எத்தனை?

(ஆ) இவைமீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-7-2004 நாளின்படி பொது வைப்புநிதி கட்டாமல் உள்ள நிறுவனங்கள் 1,385. தொழிலாளர் நல ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் பணம் கட்டாமல் உள்ள நிறுவனங்கள் 271.

(ஆ) இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 406 மற்றும் 409-ன்படி பிடித்தம் செய்து பணம் செலுத்தாத இந்நிறுவனங்கள்மீது நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் துறை அதிகாரிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் நிறுவனங்கள்மீது குற்றவியல் வழக்கு தொடர வருங்கால வைப்பு நிதி ஆணையரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

[2005 ஏப்ரல் 13

130—

## முத்தரப்புக் குழுக்கள்

**வினா எண் 39426—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நலிவுற்ற ஆலைகளை ஆய்வு செய்வதற்கும், மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்குண்டான நிலைமைகளைப் பரிசீலிப்பதற்கும் அரசால் அமைக்கப்பட்டுள்ள முத்தரப்புக் குழுக்கள் இயங்குகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 29 மாவட்டங்களில், 25 மாவட்டங்களில் மூடப்பட்டுள்ள/நீண்டகாலமாக இயங்காமல் உள்ள நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்குவதற்கான வாய்ப்புகளை ஆராயும்பொருட்டு முத்தரப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அக்குழுக்களின் கூட்டம் நடைபெற்று வருகிறது. இக்கூட்டங்களில் மூடப்பட்டுள்ள நிறுவனங்களை மீண்டும் திறந்து இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும், அவ்வாறு திறக்க இயலாத நிலையில் உள்ள நிறுவனங்களின் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகைகளைப் பெற்றுத் தருவது குறித்தும் விவாதிக்கப்படுகிறது. முத்தரப்புக் குழுக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகள் தொடர்பாக அரசிற்கும் அறிக்கை அனுப்பப்படுகிறது.

131—

## உதவித் தொகை

**வினா எண் 41719—திரு. பி.கே.டி. நடராஜன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) தென்னைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பதிவு செய்துகொண்ட தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தின் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

132—

## இந்தியா மீட்டர்ஸ் தொழிற்சாலை

**வினா எண் 43388—திரு. து. நெப்போலியன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை பாடியிலுள்ள இந்தியா மீட்டர்ஸ் தொழிற்சாலையை மீண்டும் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சென்னை அம்பத்தூரில் உள்ள இந்தியா மீட்டர்ஸ் நிர்வாகத்தின்கீழ் 131 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். போதுமான அளவில் ஆர்டர்கள் இல்லாத காரணத்தினாலும், மிகுந்த நஷ்டம் ஏற்பட்டதாலும், உற்பத்தி இல்லாத நிலையில் அதிகப்படியான தொழிலாளர்கள் பணி செய்து வந்ததாலும், நிலையாணைகளின்படி 25 ஆண்டுகள் பணி முடித்த 96 தொழிலாளர்களுக்கு நிர்வாகம் பணி ஓய்வு அறிவித்தது. இதற்கிடையில் 123 தொழிலாளர்கள் நிர்வாகத்தை அணுகி இழப்பீட்டுத் தொகை பெற விருப்பம் தெரிவித்தனர். 7 பேர் இசைவு கடிதம் அளிக்கவில்லை. எனவே, ஆலையை மீண்டும் இயக்கும் நிலை இல்லை. மேலும், 27-1-2003 முதல் இந்நிறுவனத்தின் இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இயக்கம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை இரத்து செய்து, மீண்டும் நிறுவனத்தை திறப்பது மற்றும் நிறுவனம் மூடப்பட்ட நாட்களுக்கு சம்பளம் அளிப்பது தொடர்பான தாவா சென்னை தொழிற் தீர்ப்பாயத்தில் நிலுவையில் உள்ளது.

[2005 ஏப்ரல் 13

**133—**

**பயிற்சி மையம்**

**வினா எண் 43461—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை அண்ணா நகரிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஐ.ஏ.எஸ். பயிற்சி மையம் இயங்குவது போன்று அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பயிற்சி மையங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**134—**

**நவினமயம்**

**வினா எண் 48789—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு வட்டத்தில் இயங்கும் அரசு தொழிற் பயிற்சி நிறுவனத்தை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இதுகுறித்து தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) எழாது.



2005 ஏப்ரல் 13]

**135—**

**மாதிரி மருத்துவமனை**

**வினா எண் 49614—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அயனாவரம் தொழிலாளர் நல மருத்துவமனையை "மாதிரி" மருத்துவமனையாக மாற்றுவதற்கு புதுடெல்லி தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை "மாதிரி" மருத்துவமனையாக மாற்றுவதற்கு புதுடெல்லி தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் அனுமதி வழங்கவில்லை.

**136—**

**நிதி உதவி**

**வினா எண் 51176—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிலாளர்கள், தொழில் செய்யும்போது விபத்தினால் இறக்க நேரிட்டால் அல்லது காயங்களினால் அங்க அவயங்களை இழக்க நேரிட்டால், அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவிகள் வழங்கப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்**

(அ) மற்றும் (ஆ) தொழிலாளர்கள் தொழில் செய்யும்போது விபத்தினால் இறக்க நேரிட்டால், அல்லது காயங்களினால் அங்க அவயங்களை இழக்க நேரிட்டால் அவர்களது குடும்பங்களுக்கு நிதி உதவி ஏதும் தொழிலாளர் நலத் துறையால் வழங்கப்படுவதில்லை.

137—

### மருத்துவமனை துவக்குதல்

**வினா எண் 56944—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் நடப்பு (2004-2005) ஆம் நிதியாண்டில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை புதியதாக துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழியில் புதியதாக தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் தொடங்க 2004-2005 ஆம் ஆண்டில் கருத்துரு எதுவும் அரசிடம் பெறப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

138—

### தனி வாரியம்

**வினா எண் 56945—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் உள்ள தங்க நகை செய்யும் தொழிலாளர்களுக்கு தனி வாரியம் அமைத்துக் கொடுக்க சாத்தியமில்லை.



139—

### தொழிற்பயிற்சிப் பள்ளி

**வினா எண் 56946—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

140—

### தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 61896—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலை வட்டத்தில் தொழிற் பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

141—

### குடிநீர் வசதி

**வினா எண் 79—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் கொணவக்கரை ஊராட்சியில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அப்பற்றாக்குறையை நீக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கொணவக்கரை ஊராட்சியிலுள்ள 33 குடியிருப்புகளில் 28 குடியிருப்புகளுக்கு போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 5 குடியிருப்புகளுக்கு அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

**142—**

## அடுக்குமாடி வீடு

**வினா எண் 270—திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மன்னார்குடி நகராட்சி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு தற்போது தடை விதித்துள்ளது. தடை உத்தரவு விலக்கிக்கொள்ளப்பட்டபின் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**143—**

## ஆரம்பப் பள்ளிகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 506—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2005 ஏப்ரல் 13]

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி ஆரம்பப் பள்ளிகளை பழுதுபார்க்க அரசு மானியத்துடன் கூடிய கடன் வழங்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) எடப்பாடி நகராட்சி ஆரம்பப் பள்ளி (2000–2001) ஆம் ஆண்டு கல்வி வளர்ச்சி நிதியில் ரூ.1.00 இலட்சம் செலவில் பழுதுகள் சரிபார்க்கப்பட்டுள்ளன. தற்போது படித்துக்கொண்டிருக்கும் மாணவர்களுக்கு போதுமான இட வசதியும், கட்டட வசதியும் உள்ளது.*

**144—**

## நடைமேடை

**வினா எண் 601—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருநெல்வேலி மாநகராட்சி பகுதிக்குட்பட்ட காஷ்மீர்–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் மேரி சார்ஜெண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முன்பாக நடைமேடை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட காஷ்மீர்–கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலையில் மேரி சார்ஜெண்ட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முன்பாக நடைமேடை அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது.*

[2005 ஏப்ரல் 13

**145—**

**பேரூராட்சி**

**வினா எண் 1389—திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், வட்டார தலைமையிடமாக உள்ள செந்துறை ஊராட்சியைப் பேரூராட்சியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை ஒன்றியம், வட்டார தலைமையிடமாக உள்ள செந்துறை ஊராட்சியைப் பேரூராட்சியாக வகை மாற்றம் செய்வதற்கான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**146—**

**ஆழ்குழாய்க் கிணறு**

**வினா எண் 3409—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டியிலுள்ள நடுமேட்டுக்குப்பம் என்ற கிராமத்தில் உள்ள தெருவில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், புதியதாக ஆழ்குழாய்க் கிணறு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரிய காட்டுப்பாளையம் ஊராட்சியிலுள்ள நடுமேட்டுக்குப்பம் குடியிருப்பிற்கு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மார்ச் 2002-ல் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**147—**

**அரசிதழில் பதிவு செய்தல்**

**வினா எண் 3763—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகரத்தில் நீண்ட காலமாக அழைக்கப்பட்டுவரும் காமராஜபுரம் என்ற பெயர் அரசிதழில் பதிவு பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குச் சொந்தமான கட்டடங்கள், சாலைகள், தெருக்கள், பேருந்து நிலையங்கள் முதலியவற்றிற்கு பெயர் வைப்பது அல்லது பெயர் மாற்றுவது போன்ற தீர்மானங்களைத் தவிர்க்க வேண்டும் என்ற அரசாணை அமலில் உள்ளதால், புதுக்கோட்டை நகரத்தில் நீண்டகாலமாக அழைக்கப்பட்டுவரும் காமராஜபுரம் என்ற பெயர், அரசிதழில் பதிவு பெறாமல் உள்ளது.

**148—**

### நவீன கழிப்பிடம்

**வினா எண் 3895—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி ஒன்றியம், சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதியில் பெண்களுக்கென தண்ணீர் வசதியுடன் கூடிய நவீன கழிப்பிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சுந்தரபாண்டியபுரம் பேரூராட்சிப் பகுதியில் 2002–2003 ஆம் ஆண்டில் பெண்களுக்கான தண்ணீர் வசதியுடன் கூடிய நவீன கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.*

**149—**

### தார்ச் சாலை

**வினா எண் 3997—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ஆவூடையானூர் அரியப்புரம் நெடுஞ்சாலையில் லட்சுமிபட்டி (பருத்திவிளை) விலக்கில் இருந்து லட்சுமிபட்டி செல்லும் சாலையைத் தார்ச் சாலையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியம், ஆவூடையானூர் அரியப்புரம் நெடுஞ்சாலையில் லட்சுமிபட்டி (பருத்திவிளை) விலக்கில் இருந்து லட்சுமிபட்டி செல்லும் சாலையை தார்ச் சாலையாக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**150—**

### தார்ச் சாலை

**வினா எண் 3998—திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தென்காசி-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் செட்டியூர் விலக்கில் இருந்து செட்டியூர் செல்லும் வயல்காடு சாலையை பழுதுநீக்கி தார்ச் சாலையாக அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) தென்காசி-திருநெல்வேலி நெடுஞ்சாலையில் செட்டியூர் விலக்கில் இருந்து செட்டியூர் செல்லும் வயல்காடு சாலையை பழுதுநீக்கி தார்ச் சாலையாக அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் ஏதும் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

[2005 ஏப்ரல் 13

151—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 4642—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சவுரிபாளையம் கவுண்டன்வளவு என்ற குக்கிராமத்திற்கு குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், செட்டிமாங்குறிச்சி ஊராட்சிக்குட்பட்ட சவுரிபாளையம், கவுண்டன்வளவு, சவுரிபாளையம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும்.

இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 97 வழியோர ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் சவுரிபாளையம் குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலம் சவுரிபாளையம் கவுண்டன்வளவிற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

152—

## ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தல்

**வினா எண் 4726—திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள பெரிய ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

153—

## குடிநீர் வசதி

**வினா எண் 5061—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், ஜக்கனாரை கேரி பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், ஜக்கனாரை ஊராட்சியிலுள்ள ஜக்கனாரை பகுதியின் மேல்கிரியில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஊராட்சி மூலம் குழாய் நீட்டிப்பு செய்து ஜக்கனாரை கேரி பகுதிக்கு தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

154—

## குடிநீர் வசதி

**வினா எண் 5062—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், குஞ்சப்பனை கிராமத்தில் புதிய திறந்தவெளி கிணற்றின் மூலம் ஆதிவாசி மக்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், குஞ்சப்பனை குடியிருப்புக்கு ஒரு திறந்தவெளிக் கிணறு அமைத்து, குடிநீர்த் திட்டம் 2002-ல் நிறைவேற்றப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**155—**

**புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5380—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, முக்கூடல் தேர்வுநிலை பேரூராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், முக்கூடல் பேரூராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் மூலம் ஒதுக்கீடு செய்த தொகை ரூ.5.00 இலட்சத்தில், இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடிக்கப்பட்டு, அனைத்து தெருக்களிலும் குடிநீர்க் குழாய் பதிக்கப்பட்டு, 27-9-2003 ஆம் தேதி முதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டுள்ளது.



**156—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 5534—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கூடலூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியத்தைச் சார்ந்த கூடலூர் கிராமத்திற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**157—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 5536—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, நல்லூர் கிராமத்திலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், புதிய ஆழ்குழாய்க் கிணறும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் ஒன்றியம், நல்லூர் கிராமத்திற்கு திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 1 இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் 1996 ஆம் ஆண்டிலும், திறந்தவெளி கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர்

கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் 1999 ஆம் ஆண்டிலும் முடிக்கப்பட்டு, ஊராட்சியின் பராமரிப்பில் செயலில் உள்ளது. தற்போது நல்லூர் மற்றும் 74 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் 7/2003-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, நல்லூர் கிராமக் குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், புதிய ஆழ்துளைக் கிணறும் தேவையில்லை.

**158—**

## ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 5548—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வழூர் அகரம் கிராமத்தில் ஒரு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், வழூர் ஊராட்சி, அகரம் குடியிருப்பிற்கு ஆழ்குழாய்க் கிணற்றை நீராதாரமாகக் கொண்டு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் தற்போது குடிநீர் வழங்கப்படுவதால், மேலும் ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை.

**159—**

## குடிநீர் வசதி

**வினா எண் 5558—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வீரம்பாக்கம் காலனியில் ஆழ்துளைக் கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஒன்றியம், வீரம்பாக்கம் ஊராட்சி, வீரம்பாக்கம் குடியிருப்பிற்கு புதிய ஆழ்துளைக் கிணறு நீராதாரத்துடன் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மக்கள் பயனில் உள்ளது.

**160—**

## தூர்வாரும் பணி

**வினா எண் 6062—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, கருக்கை கிராமத்தில் உள்ள சாமியார் குளத்தை தூர்வாரி ஆழப்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, கருக்கை கிராமத்தில் உள்ள சாமியார் குளம் தூர்வாரி ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

**161—**

## தார்ச் சாலை

**வினா எண் 6130—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடா கடற்கரைச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், காரங்குடா கடற்கரைச் சாலையைத் தார்ச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

**162—**

## குடிநீர் வசதி

**வினா எண் 6943—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கூடலூர் கிராம மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க ஆழ்துளைக் கிணறும், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், கூடலூர் ஊராட்சி குடியிருப்பில் ஆழ்துளைக் கிணறு ஒன்றை நீர் ஆதாரமாகக் கொண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் பயனில் உள்ளது.

**163—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 7109—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதியில் டி.பி. பாளையம் ஊராட்சியில் அதிகம் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதால் நிரந்தரத் தீர்வு காண கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டி.பி. பாளையம் ஊராட்சியில் உள்ள பெரும்பாலான குடியிருப்புகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் கையிறைப்பான்கள் மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை செயல்படுத்த இயலாது.

**164—**

## பாதாள சாக்கடை

**வினா எண் 7176—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் குறித்த ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**165—**

## கிருஷ்ணா நீர்

**வினா எண் 7348—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பம்மல், அனகாபுத்தூர், சிட்லபாக்கம் மற்றும் உள்ளகரம்–புழுதிவாக்கம் பேரூராட்சிகளுக்கும், பொழிச்சலூர் மற்றும் கவுல்பசார் ஊராட்சிகளுக்கும் கிருஷ்ணா நீர் வழங்கும் திட்டம் எப்போது அமல்படுத்தப்படும்?

[2005 ஏப்ரல் 13

(ஆ) அதன் இன்றைய நிலை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை பெருநகரின் அருகில் அமைந்துள்ள ஆலந்தூர், பம்மல், அனகாபுத்தூர், உள்ளகரம்-புழுதிவாக்கம், போரூர், வளசரவாக்கம், செயின்ட் தாமஸ் மவுண்ட் கண்டோன்மென்ட், மதுரவாயல், பொழிச்சலூர், கவுல்பசார், இராமாவரம் மற்றும் மீனம்பாககம் ஊரகப் பகுதிகளுக்கு அரசாணை (3டி) எண் 13, நாள் 27-5-1999-ல் கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் 314 இலட்சம் லிட்டர் வழங்க குடிநீர் வசதி மேம்பாட்டுப் பணிகள் ரூ.26.54 கோடி திட்ட மதிப்பீட்டில் 1999 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு 2000 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் சிட்லபாக்கம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

(ஆ) தற்சமயம் சென்னையில் நிலவும் கடுமையான வறட்சி காரணமாக, ஆலந்தூர் நகராட்சிக்கு 6 நாட்களுக்கு 30 இலட்சம் லிட்டர் என்கிற விகிதத்தில் தேவைக்கேற்ப ஆலந்தூர் பகுதிக்கு பகிர்ந்து குடிநீர் அளிக்கப்படுகிறது. ஆலந்தூர் நகராட்சியிலுள்ள பிற பகுதிகளான பக்தவச்சலம் நகர், நங்கநல்லூர், நியூ காலனி, ஆதம்பாக்கம் முதலியவற்றிற்கு தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தால் பாலாறு குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. கண்டோன்மென்ட் பகுதிக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் 8 இலட்சம் லிட்டர் வீதம் குடிநீர், சென்னை குடிநீர் வாரியத்தால் வழங்கப்படுகிறது. உள்ளகரம் புழுதிவாக்கம் பகுதிக்கு லாரிகள் மூலம் தினமும் 1.70 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. வளசரவாக்கம் பகுதிக்கு 1.2 இலட்சம் லிட்டர், மதுரவாயல் பகுதிக்கு 2 இலட்சம் லிட்டர் இராமாவரம் பகுதிக்கு 3 இலட்சம் லிட்டர் வீதம் தினமும் குடிநீர் குழாய்கள் மூலம் வழங்கப்படுகிறது. மற்ற பகுதிகளான பம்மல், அனகாபுத்தூர், போரூர், பொழிச்சலூர், கவுல்பசார் மற்றும் மீனம்பாக்கம் பகுதிகளுக்கு சென்னை குடிநீர் வாரியத்தால் குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. இப்பகுதிகளுக்கு தற்காலிக ஏற்பாடாக சம்பந்தப்பட்ட பேரூராட்சிகள் அல்லது ஊராட்சிகளாலும் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தாலும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**166—**

## குடிநீர் வசதி

**வினா எண் 7413—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சி 1-வது வார்டு, கீழ பாம்பன்குளம் சின்னாக்காலனி மற்றும் 9-வது வார்டு பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினை உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி பேரூராட்சி, 1-வது வார்டு, பாம்பன்குளம் பகுதி மக்களுக்கு அருகில் முத்துசாமிபுரத்தில் 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி பணிகள் நிறைவு பெற்று கூடுதல் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது எனவும், 9-வது வார்டு பகுதி மக்களுக்கு அருகில் அழகியநம்பிபுரம் வரை வாழைத்தோப்பு கிணற்றில் இருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**167—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 7418—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் நகரிய பேருந்து நிலையம் வசதியில்லாமல் உள்ளதால் புதிதாகப் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ)* பவானிசாகர் பேருந்து நிலையப் பணிக்கு டுபிட்கோவினால் சுயநிதி கடனுதவி அனுமதிக்கப்பட்டு தற்போது பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**168—**

**அடிப்படை வசதிகள்**

**வினா எண் 7868—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சமயநல்லூர் தொகுதியில் கிழக்கு ஒன்றியத்தில் பாறைமலையான்பட்டி கிராமத்திற்கு சாலை, குடிநீர், மின்வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், பாறைமலையான்பட்டி கிராமத்தில் இணைப்புச் சாலை அமைக்கப்பட்டு அவ்விணைப்புச் சாலைக்கு மெட்டல் சாலை வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி கிராமத்தில் 6 மின் விளக்குகள் அமைக்கப்பட்டு, மின் வசதியும் செய்து தரப்பட்டுள்ளது.

**169—**

**புதிய கழிவுநீர்க் குழாய்கள்**

**வினா எண் 9645—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 7–வது வட்டம், கார்ப்பரேஷன் காலனியில் சந்துக்களில் போடப்பட்டுள்ள கழிவுநீர்க் குழாய்களை மாற்றித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை ஆர்.கே. நகர் தொகுதி, 7–வது வட்டம், கார்ப்பரேஷன் காலனியில் சந்துக்களில் போடப்பட்டுள்ள கழிவுநீர்க் குழாய்கள் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன.

**170—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 10282—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், நல்லநாயகபுரம்பட்டம் ஆதிதிராவிடர் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், அகரவட்டாரம் ஊராட்சி, நல்லநாயகபுரம்பட்டம் ஆதிதிராவிடர் தெரு என்பது நல்லநாயகபுரம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 13

171—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10446—திரு. எம்.எஸ். சுந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட நவல்பூர், பிஞ்சி, ஜெயராம் நகர் பகுதிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், இராணிப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட நவல்பூர், பிஞ்சி, ஜெயராம் நகர் பகுதிகளுக்கு முறையே 4.00 இலட்சம் லிட்டர், 3.00 இலட்சம் லிட்டர் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் பணிகள் அனைத்தும் 16–6–2003 அன்று முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

172—

## குடிநீர் வசதி

**வினா எண் 10526—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அம்பலவாணன்பேட்டை ஊராட்சியில் தற்போது மிகக் குறைவான கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தேக்கத் தொட்டி உள்ளதால், கூடுதலாக ஒரு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியம், அம்பலவாணன்பேட்டை ஊராட்சிக்குட்பட்ட அம்பலவாணன்பேட்டை குடியிருப்பிற்கு தற்போது மக்களின் பங்களிப்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் மக்கள் பயனில் உள்ளது.

173—

## குடிநீர் வசதி

**வினா எண் 10529—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை ஊராட்சி, கிருஷ்ணன் கோயில் மண்டபம் பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த அன்னதானம்பேட்டை ஊராட்சியிலுள்ள கிருஷ்ணன் கோயில் மண்டபம் பகுதிக்கு மக்கள் பங்கேற்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 1/2004–ல் முடிக்கப்பட்ட 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

53-53—34a

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
185281
சென்னை-600 008
நகல்

**174—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர்**

**வினா எண் 10611—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட செம்மண்கூடல் ஊராட்சியிலுள்ள கச்சுவழியானூர், ரங்கநாதபுரம், கந்தம்பிச்சனூர், காரியாம்பட்டி, செம்மண்கூடல் காலனி, எல்லாயூர் ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு மேட்டூர் முதல் காடையாம்பட்டி வரையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உடனடியாக கிடைக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், செம்மண்கூடல் ஊராட்சியிலுள்ள கச்சுவழியானூர், ரங்கநாதபுரம், கந்தம்பிச்சனூர், காரியாம்பட்டி, செம்மண்கூடல் காலனி, எல்லாயூர் ஆகிய குடியிருப்புகளுக்குக் காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஓமலூர் ஒன்றியத்தில் 121 வழியோரக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் காவிரி நீர் வழங்கப்பட்டு வருகிறது.

**175—**

**குடிநீர்**

**வினா எண் 10725—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், பைங்காட்டூர் ஊராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பைங்காட்டூர் ஊராட்சியில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது.

**176—**

**ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 10947—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், காங்கேயநகரம் ஊராட்சி, 46. ஆலடிக்கருப்பூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், காங்கேயநகரம் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் 2003–2004 ஆம் நிதியாண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 46. ஆலடிக்கருப்பூர் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டித் தரப்படவில்லை.

**177—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா எண் 10976—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், காங்கேயநகரம் ஊராட்சி ஆலடிக்கருப்பூர் மாதாகோயில் தெருவிற்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தருவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், காங்கேயநகரம் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் 2003–2004 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆலடிக்கருப்பூர், மாதாகோவில் தெருவிற்குத் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.

**178—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 12245—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட பரமகவுண்டனூர், மன்னாத கவுண்டனூர், நாப்பாளையம் ஆகிய இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட பரமகவுண்டனூர், மன்னாத கவுண்டனூர், நாப்பாளையம் பகுதிகளில் இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி அப்பகுதி மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், பரமகவுண்டனூரில் மின் பவர் பம்பு பயன்படுத்தி தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்கப்படுகிறது. அங்கு குடிநீர்த் தட்டுப்பாடு ஏதுமில்லை.

**179—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 12689—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஊராட்சியில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், சொர்ணக்காடு ஊராட்சியைச் சேர்ந்த படப்பனார்வயல், சின்னப் படப்பனார்வயல், ரயிலடி காலனி, பட்டத்தாரணி, சொர்ணக்காடு மற்றும் ஆதி திராவிடர் காலனி ஆகிய ஆறு குடியிருப்புகளுக்கு ஏற்கெனவே குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்புகளுக்கு புதிய குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**180—**

## தூர்வாரும் பணி

**வினா எண் 13223—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சி விளம்பரப்படுத்திய கிணறைத் (ஆழ்குழாய்) தூர் எடுத்து ஆழப்படுத்தும் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மீண்டும் பணி எப்போது துவங்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆவடி நகராட்சிப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் ஆழப்படுத்தும் பணி எதுவும் நகராட்சியில் நடைபெறவில்லை. இதற்கான பணிகள் செய்ய விளம்பரம் எதுவும் கொடுக்கப்படவில்லை.

**181—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 13231—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொப்பம்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட சிக்கமநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள பொட்டிக்காம்பட்டி, பாறைவலசு, குப்பணதேவன்பட்டி, சிக்கமநாயக்கன்பட்டி, ராஜாக்கவுண்டன்புதூர் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றித் தரப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் மாவட்டம், தொப்பம்பட்டி ஒன்றியத்திற்கு உட்பட்ட சிக்கமநாயக்கன்பட்டி ஊராட்சியிலுள்ள பொட்டிக்காம்பட்டி, பாறைவலசு, குப்பணதேவன்பட்டி, சிக்கமநாயக்கன்பட்டி, ராஜாக்கவுண்டன்புதூர் ஆகிய ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

**182—**

## நகராட்சிப் பூங்கா

**வினா எண் 13945—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில், நேதாஜி நகரில் உள்ள நகராட்சிப் பூங்கா 6 வருடங்களாகப் பூட்டியே உள்ளதால் இதனை உபயோகப்படுத்துகின்ற வகையில் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி, நேதாஜி நகர் பூங்கா பகுதியில் வழிநடைப் பாதை உள்ளது என குடியிருப்பவர்களால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. அவ்வழக்கு முடிவுற்று தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**183—**

## வீட்டு மனைகள் அங்கீகாரம்

**வினா எண் 14972—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் நகர்ப் பகுதியில் வீட்டுமனைக்கான அங்கீகாரம் வழங்குவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க மாவட்ட அளவில் அங்கீகாரம் வழங்கி, அங்கீகாரம் இல்லாத மனைகள் உருவாவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மனைப் பிரிவு ஒப்புதலை எளிமைப்படுத்தியும், மண்டல அளவிலும், உள்ளூர் திட்டக் குழுமம் அளவிலும் புதுநகர் வளர்ச்சிக் குழும அளவிலும் ஒப்புதல் வழங்கும் அதிகாரம், அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 20–9–2002–ன்படி அளிக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாணையின்படி உள்ளூர் திட்டப் பகுதிகளில் அமையும் மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் 5.00 ஏக்கர் வரை மனைப் பிரிவிற்கு ஒப்புதல் அளிக்க சம்பந்தப்பட்ட உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர்-செயலருக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டது. இதேபோல் ஏனைய நகர்ப் பகுதிகளுக்கு மண்டல

நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நகர்ப் பகுதிகளில் வீட்டுமனைக்கான அங்கீகாரம் வழங்குவதில் தாமதம் தவிர்க்கப்படுகிறது.

**184—**

### நீராடும் குளங்கள்

**வினா எண் 15130—திரு. அ. சிவபெருமாள்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை—கோவில்பட்டி சாலையில் அமைந்துள்ள பாறையாலான நீர் நிறைந்துள்ள இடத்தை பொதுமக்கள் நீராடும் குளமாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதி, கழுகுமலை—கோவில்பட்டி சாலையில் அமைந்துள்ள பாறையாலான நீர் நிறைந்துள்ள இடத்தை பொது மக்கள் நீராடும் குளமாக மாற்றுவதற்கு கழுகுமலை பேரூராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லை. ஆகவே, இப்பணி செய்ய வழிவகை இல்லை.

**185—**

### அடையாள அட்டை

**வினா எண் 15355—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் அரசு அடையாள அட்டை வழங்கிட முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் உள்ளாட்சி மன்ற அமைப்புகளின் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர், துணைத் தலைவர் மற்றும் அனைத்து உறுப்பினர்களுக்கும் அரசு அடையாள அட்டை வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

**186—**

### காலனி வீடுகள்

**வினா எண் 15548—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், படுகையில் காலனி வீடுகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஊராட்சி ஒன்றியம், அதம்பார் ஊராட்சியில் 78 தொகுப்பு வீடுகள் இதுவரை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அதில் படுகை கிராமத்திற்கு 28 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**187—**

### தொகுப்பு வீடுகள்

**வினா எண் 15560—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேதனிபுரம் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர் தெருவிற்குத் தொகுப்பு வீடுகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேதனிபுரம் ஊராட்சியில், 2002-2003 ஆம் ஆண்டில் 10 ஆதி திராவிடர்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**188—**

## மேல்நிலை தொட்டி

**வினா எண் 15622—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், திருத்தணி ஒன்றியம், கார்த்திகேயாபுரம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் மேல்நிலைத் தொட்டி அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருத்தணி ஒன்றியம் கார்த்திகேயாபுரம் ஊராட்சியில் உள்ள கார்த்திகேயாபுரம் குடியிருப்பிற்கு தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் புதிய சிறு மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே இக்குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

**189—**

## திருமண மண்டபம்

**வினா எண் 16445—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கோவை மாநராட்சி, 35–வது வார்டு, காமராஜபுரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ரூ.13 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம் எப்பொழுது பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் உபயோகத்திற்கு அளிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காமராஜபுரத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடம் சமுதாயக் கூடம் ஆகும். அக்கட்டடம் திருமண மண்டபம் அல்ல. அச்சமுதாயக் கூடம் மத்திய நீர் ஆணையத்திற்கு ரூ.33 ஆயிரத்திற்கு மாத வாடகைக்கு விடப்பட்டிருந்தது. எனினும், அந்நிறுவனம் கட்டடத்தைக் காலி செய்து விட்டதால் தற்பொழுது கட்டடம் காலியாக உள்ளது. அச்சமுதாயக் கூடத்தின் வாடகை அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது எனவும் அதனைக் குறைத்து நிர்ணயிக்குமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அதற்கான வாடகை நிர்ணயம் செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**190—**

## சமுதாய நலக் கூடமும் பயணிகள் நிழற்குடையும் அமைத்தல்

**வினா எண் 16471—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட ஆர்.சி. நந்தன்குளம் பகுதியில் சமுதாய நலக் கூடமும், பயணிகள் நிழற்குடையும் அமைத்துக் கொடுத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட ஆர்.சி. நந்தன்குளம் பகுதியில் சமுதாய நலக் கூடமும், பயணிகள் நிழற்குடையும் அமைத்துக் கொடுத்திட பேரூராட்சியில் போதுமான நிதி வசதியில்லை.

[2005 ஏப்ரல் 13

**191—**

**புதிய வீராணம் திட்டம்**

**வினா எண் 16682—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அறிவித்த சென்னைப் பெருநகருக்கு குடிதண்ணீர் கொண்டுவரும் புதிய வீராணம் திட்டம் நடைமுறையில் இருக்கின்றதா?

(ஆ) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு எவ்வளவு செய்யப்பட்டுள்ளது?

(இ) இத்திட்டத்தினால் ஏற்கெனவே வீராணம் ஏரியை நம்பியிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படுவார்களா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-I (புதிய வீராணம் திட்டம்) நிறைவேற்றப்பட்டுவிட்டது. வீராணம் ஏரியிலிருந்து நாள் ஒன்றுக்கு 190 மில்லியன் லிட்டர் வீதம் நீர் எடுக்கப்பட்டு, வடக்குத்து சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, நாளொன்றுக்கு 180 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட நீர் குழாய்கள் மூலம் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, தற்சமயம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வீதம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இந்த ஆண்டில் ரூ.77.22 கோடி அரசு முதலீடாக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிதித் தேவையினை சென்னைக் குடிநீர் வாரியம் தேசிய நிதி நிறுவனங்களிடமிருந்து கடனாகப் பெற்றுத் திட்டத்தினைப் பூர்த்தி செய்தது. இத்திட்டத்தினால் ஏற்கெனவே வீராணம் ஏரியை நம்பியிருக்கும் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள்.



2005 ஏப்ரல் 13]

**192—**

**பயணிகள் விடுதி**

**வினா எண் 17196—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சி, பேருந்து நிலையத்தில் பயணிகள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் ஏதுமில்லை.

**193—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 17704—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, தோப்புக்கொல்லை கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஜனவரி 2003–ல் அமைத்துக் கொடுக்கப்பட்டு தற்சமயம் மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

194—

### தையல் பயிற்சி மையங்கள்

**வினா எண் 18693—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் மேலும் தையல் பயிற்சி மையங்கள் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில் தொண்டு நிறுவனங்கள் மூலம் அதிக எண்ணிக்கையில் தையற் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

195—

### பொது நூலகம்

**வினா எண் 18879—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5—வது வட்டம், வ.உ.சி. நகரில் காலியாக உள்ள இடத்தில் பொது நூலகம் அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 5—வது வட்டம், வ.உ.சி. நகரில் காலியாக உள்ள இடத்தில் பொது நூலகம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.



196—

### குடிநீர்ப் பாதுகாப்பு

**வினா எண் 18886—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 8—வது வட்டத்தில் 15—க்கும் மேற்பட்ட தெருக்களில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து வருவதைக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி, 8-வது வட்டத்தில் 15-க்கும் மேற்பட்ட தெருக்களில் குடிநீருடன் கழிவுநீர் கலந்து மாசு அடைவது தடுக்கப்பட்டு சரி செய்யப்பட்டுவிட்டது.

197—

### குடிநீர் வசதி

**வினா எண் 18889—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 4—வது வட்டம் செரியன் நகர், அசோக் நகர், தனபால் நகர், தேசிய நகர் ஆகிய இடங்களில் பழுதுபட்டுள்ள தெருக் குழாய்களைச் சரிசெய்து பொது மக்களுக்குக் குடிநீர் கிடைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி, 4—வது வட்டம், செரியன் நகர், அசோக் நகர், தனபால் நகர், தேசிய நகர் ஆகிய இடங்களில் பழுதுபட்டிருந்த தெருக் குழாய்கள் சரி செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.

[2005 ஏப்ரல் 13

198—

## பெரியார் பூங்கா

**வினா எண் 18895—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் தொகுதி, 5–வது வட்டம், கிராஸ் ரோடு, தந்தை பெரியார் பூங்காவைச் சீரமைத்து அழகுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆர்.கே. நகர் தொகுதி, 5–வது வட்டம், கிராஸ் ரோடு, தந்தை பெரியார் பூங்கா சீரமைத்து, அனைத்து வசதிகளும் செய்யப்பட்டு நவீன முறையில் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

199—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 18976—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஆஞ்சநேய நகர், ஈச்சம்பாடி, புதுப்பட்டி ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட ஆஞ்சநேய நகர், ஈச்சம்பாடி, புதுப்பட்டி ஆகிய 2 பகுதிகளுக்கு 2 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி தற்போது போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

200—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 18977—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், வீரப்பரெட்டி கண்டிகை, சித்தப்பனூர் மற்றும் ஸ்ரீகாளிகாபுரம் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், வீரப்பரெட்டி கண்டிகை, சித்தப்பனூர் மற்றும் ஸ்ரீகாளிகாபுரம் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

[2005 ஏப்ரல் 13

## பட்டியல் 18

1—

### எம்.ஜி.ஆர். சிலை

**வினா எண் 43967—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை உலகனேரியில் அமையும் சென்னை உயர் நீதிமன்ற கிளை வளாகத்திலோ, முன்புறமோ எம்.ஜி.ஆர். சிலை நிறுவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

2—

### வாடிக்கையாளர்களைப் பாதுகாத்தல்

**வினா எண் 45985—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை நகரக் கூட்டுறவு வங்கி தனது உரிமத்தை இழந்திருப்பதால், வாடிக்கையாளர்களைப் பாதுகாக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

ஆம்.



2005 ஏப்ரல் 13]

3—

### ஸ்ரீகெங்கையம்மன் கோயில் கட்டுதல்

**வினா எண் 19965—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு பேரூராட்சியில் உள்ள ஸ்ரீகெங்கையம்மன் கோயிலைக் கட்டி முடிக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அருள்மிகு கெங்கையம்மன் திருக்கோயில் திருப்பணி வேலைகள், கிராமப்புற திருப்பணி நிதியுதவி திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் நிதியாண்டில் ரூ.25,000/– நிதியுதவி பெறப்பட்டு திருப்பணி வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இத்திருக்கோயிலுக்கு பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமித்த பின்னர் அறங்காவலர் குழு ஒப்புதலுடன் குடமுழுக்கு விழாவுக்கு நாள் நிர்ணயம் செய்யப்படும்.

4—

### புதியதாக கம்பிடை ஊர்திகள்

**வினா எண் 50008—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு நடக்க இயலாதவர்கள் மலை மீது சென்று தரிசனம் செய்ய உதவும் வகையில் "புதியதாக கம்பிடை ஊர்திகள்" அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் மாவட்டம், பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் அமைக்கப்பட்டுள்ள 'ரோப்கார்' திட்டம் கடந்த 3–11–2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, அதுமுதல் பொது மக்கள் பயன்பாட்டிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**5—**

## பிரசாத விற்பனை

**வினா எண் 54981—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் ஆலயத்தில் பிரசாதம் விற்பனை செய்யும் உரிமம் பொது ஏலத்தில் விடாமல் கோயில் நிர்வாகம் எடுத்து நடத்தினால் வருவாய் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில் பழக்க வழக்கங்கள் தென்னாச்சார்ய சம்பிரதாயப்படி மாறாமல் இருந்து வருவதாலும், மரபுகள் தொடர்ந்து கடைபிடிக்கப்பட வேண்டும் என்பதாலும், பொது ஏலம்மூலம் கணிசமான தொகை வருமானமாகக் கிடைப்பதாலும், திருக்கோயில் பிரசாதம் செய்யும் பணியினைக் கோயில் நிர்வாகம் ஏற்று நடத்தினால் இலாபம் இருக்காது என்பதாலும், பொது ஏல முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**6—**

## தூர்வாரும் பணி

**வினா எண் 58669—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலத்தில் உள்ள அருள்மிகு கைலாசநாதர் கோவிலின் குளத்தைத் தூர்வாரி தெப்பம் விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம் 1999–2000 ஆம் ஆண்டில் தூர்வாரப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. தெப்ப உற்சவம் தை மாதத்தில் நடைபெறுவது வழக்கம். வரும் தை மாதம் (ஜனவரி 2006), தேரோட்டம் நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, தெப்ப உற்சவம் நடத்தப்பட உள்ளது.

**7—**

## சலுகைகள் வழங்குதல்

**வினா எண் 22862—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசு அளித்து வரும் சலுகைகளை அந்தந்த மாவட்டாட்சியர்களே அளிக்க அதிகாரமளிக்கும் வகையில் எளிதாக்கப்படுமா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

முதியோர், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசால் அளிக்கப்பட்டு வரும் முதியோர் உதவித் தொகை அனைத்து இனங்களுக்கும் ஒப்பளிப்பு செய்யும் அதிகாரம் வட்டாட்சியர் அந்தஸ்தில் பணிபுரியும் நலிந்தோர் நலத் திட்ட வட்டாட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**8—**

**பேருந்து மனையை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 38420—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட சென்னையில் உள்ள சுங்கச்சாவடி பேருந்து மனையை விரிவுபடுத்தும்படி கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வட சென்னையில் உள்ள சுங்கச்சாவடி பேருந்து மனையை விரிவுபடுத்தும்படியான கோரிக்கை ஏதும் மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் பெறப்படவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**9—**

**பணிமனை விரிவாக்கம்**

**வினா எண் 40894—திரு. எஸ்.எஸ். ரமணிதரன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கோபிச்செட்டிப்பாளையத்திலுள்ள அரசு போக்குவரத்துப் பணிமனையில் பேருந்துகள் நிற்க பணிமனையை விரிவாக்கித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோபிச்செட்டிப்பாளையத்திலுள்ள அரசு போக்குவரத்துப் பணிமனையில் பேருந்துகள் நிற்க பணிமனை விரிவாக்கத்திற்காக ஆறு ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்நில எடுப்பு சம்பந்தமாக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினர் அதிக ஈட்டுத் தொகை கோரி கோபி சார்பு நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு (LAOP Case) நிலுவையில் உள்ளது. எனவே, இவ்வழக்கின் முடிவினைப் பொறுத்தும், போக்குவரத்துக் கழகத்தின் நிதிநிலைமையைப் பொறுத்தும் பணிமனையினை விரிவாக்கும் திட்டம் பரிசீலிக்கப்படும்.

**10—**

**உற்பத்தித் திறனை அதிகரித்தல்**

**வினா எண் 50850—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

இல்லை.

**11—**

**குளோபல் வார்மிங்**

**வினா எண் 25829—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளோபல் வார்மிங் காரணமாக விரைவில் எதிர்காலத்தில் நெல் மற்றும் கோதுமை வேளாண்மை பெரிய அளவில் பாதிக்கப்படும் என்று அறிவியலார் கூறி வருவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தவிர்க்க எடுத்து வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நன்கு அறியும். இது சம்பந்தமான ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழு பல திட்டங்களை உருவாக்கியுள்ளது. மேலும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் புவியின் வெப்பம் அதிகரிக்கக் காரணமாயுள்ள வாயுக்களை வளிமண்டலத்தில் வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றது.

**12—**

### நெற்களம்

**வினா எண் 35814—திரு. என். ரெங்கநாதன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் நெற்களம் ஒன்று அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தற்போதைய நிதிநிலைக்கு ஏற்றவாறு பூம்புகார் தொகுதி, காளஹஸ்தினாபுரத்தில் வேளாண்மை விற்பனைக் குழு மூலமாக நடப்பு நிதியாண்டில் உலர்களம் அமைக்க ஆய்வு செய்யப்படும்.

**13—**

### மாணவர் விடுதி

**வினா எண் 40759—திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவாடனை தொகுதி, கண்ணங்குடி ஒன்றியம், கண்ணங்குடியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவர்களுக்கு விடுதி ஒன்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**14—**

### கால்நடை துணை மருத்துவமனை

**வினா எண் 3850—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், பனவடலிசத்திரத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

மாநில திட்டக் குழு/வேளாண்மை/99, நாள்: 2-7-1999-ன்வழி புதியதாக கால்நடை கிளை நிலையமோ அல்லது பார்வைக் கிளை நிலையமோ துவக்க தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், பனவடலிசத்திரம் கிராமத்தில் கால்நடை துணை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

**15—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 41351—திரு.ச. ராமராஜ்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போடிநாயக்கனூர் தொகுதி, ராசிங்கபுரத்தில் கால்நடை பராமரிப்பு மருத்துவமனை அமைத்திட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், ராசிங்கபுரத்தில் செயல்பட்டு வந்த கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி மேற்படி கிளை நிலையம் தரம் உயர்த்தப்பட்டு 23-2-2004 முதல் கால்நடை மருந்தகமாகச் செயல்பட்டு வருகிறது

**16—**

## நோய்த் தடுப்புப் பிரிவு

**வினா எண் 50091—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புப் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்கள், மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகள் மூலம் வெறிநாய்க் கடி நோய்க்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதால் தனியே அங்கு ஒரு வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புப் பிரிவு துவக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



**17—**

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 53377—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, திம்மநத்தம் பகுதியில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி, திம்மநத்தம் பகுதியில் கால்நடைகளின் எண்ணிக்கை 10,000-க்கும் குறைவாக உள்ளதாலும், 3 கி.மீ. அருகில் பாப்பாபட்டி மற்றும் உத்தமநாயக்கனூர் ஆகிய இடங்களில் கால்நடை கிளை நிலையங்கள் செயல்படுவதாலும் தற்போது திம்மநத்தம் பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை.

**18—**

## கால்நடைத் தீவன தொழிற்சாலை

**வினா எண் 60271—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதியில், அனுப்பானடி பகலவன் நகர்ப் பகுதியில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) கால்நடை தீவன உற்பத்தி நிலையங்கள் யாவும் தற்போது ஆவின் நிறுவனத்தின்கீழ் செயல்பட்டு வருவதால், கால்நடை பராமரிப்புத்

[2005 ஏப்ரல் 13

துறைக்குத் தேவைப்படும் கால்நடைத் தீவனம் அனைத்தும் ஆவின் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கு, தப்பலூர் என்ற இடத்தில் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் ஆலை உள்ளது. எனவே, மதுரை கிழக்குத் தொகுதியில் அனுப்பானடி பகலவன் நகர் பகுதியில் கால்நடைத் தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை துவங்குவதற்கான பிரேரணை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

**19—**

### கால்நடை மருத்துவமனை

**வினா எண் 63531—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, அங்களகுறிச்சி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி அங்களகுறிச்சி கிராமத்திலுள்ள கால்நடைகள் 10,000—த்திற்கும் குறைவாக உள்ளது. இதன் அருகில் 6 கி.மீ. தூரத்தில் சம்பாளப்பட்டி மற்றும் சோமந்துரை சித்தூர் கால்நடை கிளை நிலையங்களும், 4 கி.மீ. தூரத்தில் மலையாண்டிப்பட்டினம் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகின்றன. அரசு தற்போது துறையின்கீழ் செயல்பட்டுவரும் கால்நடைக் கிளை நிலையங்களை மட்டுமே கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதால், வால்பாறை தொகுதி அங்களகுறிச்சி கிராமத்தில் நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.



2005 ஏப்ரல் 13]

**20—**

### தடுப்பணைகள்

**வினா எண் 32144—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், விலங்குகள் சரணாலயத்தில் யானைகள் நீர் குடிக்க தடுப்பணைகள் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி வடக்குக் கோட்டம் மற்றும் முதுமலை வன உயிரினச் சரணாலயப் பகுதிகளில் 2002–2003 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் செலவில் நான்கு தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன.

**21—**

### உயிரியல் பூங்காவை விரிவுபடுத்துதல்

**வினா எண் 47631—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) நிலம் பற்றிய வகையில் இழப்பீட்டுத் தொகை அனைவருக்கும் வழங்கப்பட்டு விட்டனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை விரிவாக்கம் செய்யும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இழப்பீட்டுத் தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

**22—**

## அரசு அனுமதி

**வினா எண் 17218—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரியல் எஸ்டேட் நடத்துபவர்கள் அரசிடம் அனுமதி பெற்று நடத்த வேண்டும் என்ற முறை தமிழகத்தில் அமல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

ரியல் எஸ்டேட் நடத்துபவர்கள் அரசிடம் அனுமதி பெற்று நடத்த வேண்டும் என்ற முறை தமிழகத்தில் அமல்படுத்தப்படும் நோக்கம் ஏதும் தற்போது இல்லை.

**23—**

## கணினிமயம்

**வினா எண் 3451—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தை கணினிமயமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தில் கணினிமயமாக்கும் திட்டத்தை அரசு படிப்படியாகச் செயல்படுத்தி வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**24—**

## கவுன்சிலிங் முறை

**வினா எண் 10245—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நடத்திடும் பொறியியல் கல்லூரியில் மற்ற பொறியியல் கல்லூரிகளில் அரசு கடைபிடித்திருக்கும் கவுன்சிலிங் முறையைக் கொண்டுவர முடியுமா?

(ஆ) அப்படிக் கொண்டுவர என்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மாணவர் சேர்க்கைக்கு அரசு கடைபிடித்து வரும் கவுன்சிலிங் முறை அரசு பொறியியல் கல்லூரிகள்/அண்ணா பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரிகளுக்கு மட்டுமே பொருந்தும். நிகர்நிலைப் பல்கலைக்கழகங்கள், திருச்சி தேசிய அறிவியல் கல்லூரி, இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (தன்னாட்சி மற்றும் உடனுறைப் பல்கலைக்கழகம்) இவற்றிலும் பி.இ./பி.டெக். பாடப்பிரிவுகள் நடத்தப்படுகின்றன. இவை அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றவை அல்ல. இக்கல்வி நிறுவனங்களில் அகில இந்திய நுழைவுத் தேர்வு வாயிலாகவோ அல்லது தனித்தனியாக நுழைவுத் தேர்வுகள் நடத்தியோ மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தன்னாட்சி பெற்ற உடனுறைப் பல்கலைக்கழகமாக இருப்பதாலும், அங்கு நடத்தப்பெறும் பி.இ./பி.டெக். பட்ட வகுப்புகள் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றவை அல்ல ஆதலாலும், அங்கு அரசு கடைபிடித்துவரும் கவுன்சிலிங் முறையைக் கொண்டுவர இயலாது.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**25—**

**உதவித் தொகை**

**வினா எண் 48638—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) +2 பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும், முதலாவதாக வரும் மாணவர்களின் மேல்படிப்பு செலவை அரசே ஏற்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும (ஆ) +2 பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களையும் மாவட்ட அளவில் முதல் இடத்தையும் பெறும் மாணவ மாணவியர்களுக்கு உயர் கல்விக்காக உதவித் தொகை வழங்கும் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது.

**26—**

**தேர்ச்சி விகிதத்தை உயர்த்த திட்டம்**

**வினா எண் 50000—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளியிறுதித் தேர்வில் (எஸ்.எஸ்.எல்.சி.) தேர்ச்சி பெறுவோர் சதவிகிதம் தொடர்ந்து 70%, 71% அளவிலேயே உள்ளதை 90–95 சதவிகித அளவிற்கு உயர்த்த முனைப்பு கற்பிப்புத் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை உயர்த்த ஒரு தனித் திட்டம் இல்லை என்றாலும், மாணவர்களுக்குப் பள்ளி நேரம் முடிந்தவுடன்



2005 ஏப்ரல் 13]

சிறப்பு வகுப்பு நடத்தியும், ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்குக் கல்வித்தரம் உயர பல முயற்சிகள் எடுத்தும் வருகின்றனர்.

**27—**

**நூலகம்**

**வினா எண் 50037—செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தின் மாவட்ட தலைநகர்களில் பெண்களுக்கான தனி நூலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) இந்நூலகங்களில் இணையதளம் போன்ற வசதிகள் செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்தின் மாவட்ட தலைநகரங்களில் பெண்களுக்கான தனி நூலகம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழு அலுவலகம் மற்றும் கன்னிமாரா பொது நூலகத்தில் இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மற்ற 28 மாவட்டங்களிலும் இணையதளம் அமைப்பது குறித்து பரிசீலனையில் உள்ளது.

**28—**

**வட்டியை இரத்து செய்தல்**

**வினா எண் 10354—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் சேலம் கூட்டுறவு நூற்பாலை பெற்றுள்ள கடனுக்குரிய வட்டியை முழுமையாக இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் சேலம் கூட்டுறவு நூற்பாலை பெற்றுள்ள கடனுதவி ரூ.7,04,00,000/-. அதில் ரூ.5.60 கோடி அசலும் ரூ.1.44 கோடி வட்டியும் அடங்கும். மத்திய கூட்டுறவு வங்கிகளில் கூட்டுறவு நூற்பாலைகள் பெற்ற கடனுக்காக ரூ.76.57 கோடி அரசு ஒப்பளிப்பு செய்தது. அதில் சேலம் கூட்டுறவு நூற்பாலை சார்பாக ரூ.7,04,00,000/- சேலம் கூட்டுறவு வங்கிக்கு செலுத்தப்பட்டுவிட்டது. எனவே சேலம் கூட்டுறவு நூற்பாலை பெற்ற கடனுக்கு வட்டியும் சேர்த்து கட்டப்பட்டுவிட்டது.

**29—**

## பாதாளச் சாக்கடை

**வினா எண் 1051—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

(ஆ) அதற்கான மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான திட்டம் ரூ.99.65 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, 29-10-2002 அன்று நடைபெற்ற தொழில்நுட்ப நிலைக் குழுக் கூட்டத்தின் பரிசீலனைக்குப்பின் ஒப்புதல் பெறப்பட்டது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம், புதுடெல்லி, செப்டம்பர், 2003-ல் தேசிய நதி நீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நிதி உதவி பெற திட்டம் முன் சாத்தியக்கூறு அறிக்கைகளை அனுப்புமாறு



அறிவுறுத்தியதன்பேரில், வேலூர், சத்துவாச்சாரி பாதாளச் சாக்கடைத் திட்டம் முன் சாத்தியக்கூறு அறிக்கை, உறுப்பினர் செயலர், தமிழ்நாடு சுற்றுச்சூழல் கட்டமைப்பு, சென்னை அவர்களால் 10 மற்றும் 11-வது ஐந்து ஆண்டுத் திட்டத்தின்மூலம் நிதி உதவி பெற மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்ட உத்ராஞ்சல் மாநிலத்திலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி பயிலகம், ரூர்க்கி-க்கு (III, Roorkee) அனுப்பப்பட்டுள்ளது. அதன் ஒப்புதலை எதிர்நோக்கி ஆய்வுப் பணிகள் தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**30—**

## அடிப்படை வசதிகள்

**வினா எண் 2707—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகராட்சி 1 முதல் 8 வார்டுகளுக்கு குடிநீர், கழிவுநீர்க் கால்வாய், மின்வசதி ஆகியவை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாநகராட்சியில் 1 முதல் 8 வரையில் உள்ள வார்டுகளில் குடிநீர் இணைப்பு உள்ள பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு வைகை அணையிலிருந்து 2-வது குழாய்மூலம் குடிநீர் வழங்க வகை செய்யும் திட்டம் ஆய்வில் உள்ளது. அதேசமயம் குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகளுக்கு லாரிமூலமாக குடிநீர் வழங்கப்படுகின்றது. மேலும் மதுரை மாநகராட்சி 1 முதல் 5 வரையுள்ள வார்டுகளில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. 6 முதல் 8 வரை உள்ள பகுதிகளில் பாதாளச் சாக்கடை ஏற்கெனவே இயங்கி வருகிறது. மின்வசதியைப் பொறுத்தவரையில், அனைத்துப் பகுதிகளுக்கும் தெரு விளக்குகள் சீராகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

[2005 ஏப்ரல் 13

31—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 4166—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி கிராமம், குப்பனூர் பகுதியில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி கிராமம், குப்பனூர் பகுதியில் பூலாம்பட்டி பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

32—

## குடிநீர் வசதி

**வினா எண் 4328—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தெங்குமரஹாடா கிராம குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க ஆழ்துளைக் கிணறு அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியம், தெங்குமரஹாடா ஊராட்சியில் தெங்குமரஹாடா குடியிருப்பிற்கு குடிநீர்த் திட்டம் 12/2002–ல் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.



2005 ஏப்ரல் 13]

33—

## திண்காரை சாலை

**வினா எண் 4341—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கோபாலசமுத்திரம் நகரப் பேரூராட்சியில் 13–வது வார்டு பழனி ஆண்டவர் கோவில் தெருவில் திண்காரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோபாலசமுத்திரம் சிறப்பு சிற்றூராட்சியில் 10–வது வார்டு பழனி ஆண்டவர் கோவில் தெரு 2001–2002 ஆம் ஆண்டு 11–வது நிதிக் குழு மானியத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாற்றப்பட்டு 21-6-2002 முதல் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே இச்சாலையை சிமென்ட் சாலையாக மாற்ற வேண்டிய அவசியம் இல்லை.

34—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 4674—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, பாச்சாலியூர் பள்ளிக்கு அருகில் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாளபுரம் ஊராட்சி, பாச்சாலியூர் பள்ளிக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த்

திட்டத்தின்கீழ் கொங்கணாபுரம் ஒன்றியத்தைச் சார்ந்த 107 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் காவிரி குடிநீர் 31–3–2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**35—**

**பாதுகாக்கப்பட்ட குடிநீர்**

**வினா எண் 6743—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, மகாதேவிமங்கலம் கிராமத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசிடம் செயல் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கிடைக்கும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியம், மகாதேவிமங்கலம் ஊராட்சியைச் சார்ந்த மகாதேவிமங்கலம் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம், மூன்று கையிறைப்பான்கள் மற்றும் ஒரு சிறு மின்விசைத் திட்டம் ஆகியவை மூலமாக தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**36—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 6749—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி தொகுதி, ஒலக்கூர் ஒன்றியம், பட்டணம் ஊராட்சி, இந்திரா நகர் பகுதிக்குக் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது குடிநீர் வழங்கப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், ஒலக்கூர் ஒன்றியம், பட்டணம் ஊராட்சியைச் சார்ந்த பட்டணம் குடியிருப்பின் ஒரு பகுதியான இந்திரா நகருக்கு பட்டணம் குடியிருப்பில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு மூலமாகவும், சிறுமின்விசைத் திட்டம் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**37—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 10070—திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதியிலுள்ள மாமண்டூர் காலனி, மாமண்டூர், திருவாதநல்லூர், வாடப்பாடி, நேத்தம்பாக்கம், காட்டேரி, தசராப்பேட்டை, கணிகிலுப்பை, சத்திய விஜய நகரம், புதுப்பேட்டை ஆகிய கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க வாழப்பந்தல் ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற அரசு உடனடியாக பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், இந்நிதியாண்டிலேயே நிறைவேற்றப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரணி தொகுதியிலுள்ள மாமண்டூர் காலனி, மாமண்டூர், திருவாதநல்லூர், வாடப்பாடி, நேத்தம்பாக்கம், காட்டேரி, தசராப்பேட்டை, கணிகிலுப்பை, எஸ்.வி. நகரம், புதுப்பேட்டை ஆகிய கிராமங்களுக்கும் மற்றும் இதர வழியோர கிராமங்களுக்கும் வாழப்பந்தல் அருகே செய்யாற்றை நீராதாரமாகக் கொண்டு ரூ.273.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் இத்திட்டத்திற்குத் தேவையான

[2005 ஏப்ரல் 13

நீராதாரம் அங்கு கிடைக்காததால் இத்திட்டம் கைவிடப்பட்டது. எனினும், சட்டமன்ற உறுப்பினரால் குறிப்பிடப்பட்டுள்ள 10 குடியிருப்புகளுக்கும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தனித்தனி மின்விசைத் திட்டங்கள் மூலம் குடிநீர் வசதி செய்யப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

**38—**

**புதிய பி.பி.எல். சர்வே**

**வினா எண் 10285—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள உண்மையான ஏழைகள் இல்லையென்பதால், வசதியுள்ளவர்களை நீக்கிவிட்டு புதியதாக பி.பி.எல். சர்வே எடுக்க அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் கணக்கெடுப்பு (பி.பி.எல். சர்வே) மகளிர் மேம்பாட்டுத் திட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் பணிக்காக எடுக்கப்பட்டது அல்ல.

**39—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 10633—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட தொளசம்பட்டி ஊராட்சியிலுள்ள கரியங்காடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு மேட்டூர் முதல் காடையாம்பட்டி வரை செல்லும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், தொளசம்பட்டி ஊராட்சியிலுள்ள கரியங்காடு குடியிருப்புக்கு காடையாம்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஓமலூர் (தெற்கு) ஒன்றியத்தைச் சார்ந்த 121 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அங்கு ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டி மூலம் 8/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**40—**

**புதிய மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி**

**வினா எண் 10674—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சியில் மலையனூர் பகுதிக்கு மேட்டூர் முதல் காடையாம்பட்டி வரையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மவாட்டம், ஓமலூர் வட்டம், முத்தநாயக்கன்பட்டி ஊராட்சி, மலையனூர் பகுதிக்கு அல்லையனூர் குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாக இருப்பதால், மேட்டூர் முதல் காடையாம்பட்டி வரையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**41—**

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

**வினா எண் 12265—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை, நிதிநிலை நலிந்த நிலையிலுள்ள பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை என்பதால் அத்திட்டத்தை நிதிநிலை நலிவடைந்த நிலையிலுள்ள பேரூராட்சிகளுக்கு விரிவுபடுத்த வாய்ப்பில்லை.

**42—**

## குடிநீர்த் திட்டங்கள்

**வினா எண் 12552—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாம்பரம் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திலுள்ள கிராமங்களிலும் மற்றும் பேரூராட்சிகளிலும் கடந்த 1999–2001–ல் குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் எத்தனை திட்டங்கள் எடுக்கப்பட்டன?

*(ஆ)* அவற்றில் எத்தனை திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன?

*(இ)* எத்தனை திட்டங்கள் முடிக்கப்படவில்லை?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ)* மற்றும் *(இ)* தாம்பரம் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திலுள்ள கிராமங்களிலும் மற்றும் பேரூராட்சிகளிலும் 1999 முதல் 2001 வரை மொத்தம் 34 குடிநீர்த் திட்டங்கள் எடுக்கப்பட்டு அனைத்துத் திட்டங்களும் முடிக்கப்பட்டுவிட்டன.

**43—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 12622—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, L.N. புரத்தில் வேதாந்தம் நகர், முத்தையா நகரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஜனவரி 2003–ல் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

**44—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 15611—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், இலுப்பூர் காலனியில் தனியாக ஒரு நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், இலுப்பூர் ஊராட்சியில் இலுப்பூர் கிராமத்தில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இலுப்பூர் காலனிக்கு குழாய் நீட்டிப்பு மற்றும் ஒரு கையிறைப்பான் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. 2002–2003 ஆம் ஆண்டில் சிறு மின் விசைத் திட்டம் செயலாக்கப்பட்டு பொதுமக்கள் பயனில் உள்ளது. தேவை மற்றும் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் எதிர்காலத்தில் தனி மேல்நிலைத் தொட்டி அமைப்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**45—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

**வினா எண் 18977—திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், வீரப்பரெட்டி கண்டிகை, சித்தப்பனூர் மற்றும் ஸ்ரீகாளிகாபுரம் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், வீரப்பரெட்டி கண்டிகை, சித்தப்பனூர் மற்றும் ஸ்ரீகாளிகாபுரம் கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.



**46—**

## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 19058—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் பகுதி கடலோரப் பகுதியாக உள்ளதால், குடிநீர் உப்பு கலந்த நீராக உள்ளதனால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேலூர் வேளாங்கண்ணி ஊரகப் பேரூராட்சி மற்றும் ஐந்து ஒன்றியங்களில் அடங்கிய 890 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.98.85 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் செயல்படுத்த பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்கண்ட திட்டம் ஜூலை 2005–ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**47—**

## கடனுதவி

**வினா எண் 19061—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகராட்சிக்குரிய சி.பி. இராமசாமி நினைவு மண்டபத்தினைச் சுற்றியுள்ள பகுதியில் வணிக வளாகம் கட்ட நகராட்சிக்கு அரசு கடனுதவி வழங்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் நகராட்சியின் பராமரிப்பிலுள்ள சர். சி.பி. இராமசாமி ஐயர் நினைவு மண்டபத்தினைச் சுற்றியுள்ள பகுதியை வருவாய் ஈட்டும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனையுடன் வருவாய்த் துறையால் நகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே, இப்பகுதியில் வணிக வளாகம் கட்ட இயலாது.

**48—**

## புதிய ஒன்றியம்

**வினா எண் 19211—திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடத்தூரை மையமாக வைத்து தனி ஒன்றியம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மொரப்பூர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து கடத்தூரை மையமாக வைத்து தனி ஒன்றியம் அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**49—**

## குடிதண்ணீர் வழங்குதல்

**வினா எண் 19222—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு உட்பட 10 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆண்டிப்பட்டி, சேடப்பட்டி, உசிலம்பட்டி பகுதிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு உட்பட 10 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க, திட்டம் விரைவில் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**50—**

## குடிநீர் வசதி

**வினா எண் 19376—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், ஆனங்கூர் கிராம மக்கள் குடிநீரின்றி அவதிப்படுவது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், ஆனங்கூர் ஊராட்சியிலுள்ள ஆனங்கூரில் தற்போது கையிறைப்பான் திட்டம் மூலமும் தனி மின் விசைத் திட்டத்தின் மூலமும் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிய குடிநீர்த் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

**51—**

### பாதுகாக்கப்பட்ட குடிநீர்

**வினா எண் 19456—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆர்.கே. நகர் தொகுதி, 13–வது வட்டம், பாலசுப்பிரமணி தெரு, ஜெயராம் நாடார் தெரு, முத்தியால் மேஸ்திரி தெரு, பரசுராம் முதல் தெரு, தர்மராஜா கோயில் தெரு ஆகிய இடங்களில் குடிநீரில் கழிவுநீர் கலப்பதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகளைக் களைய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆர்.கே. நகர் தொகுதி, 13–வது வட்டம், பாலசுப்பிரமணி தெரு, ஜெயராம் நாடார் தெரு, முத்தியால் மேஸ்திரி தெரு, பரசுராம் முதல் தெரு, தர்மராஜா கோயில் தெரு ஆகிய இடங்களில் குடிநீரில் கழிவுநீர் கலந்து வருவது சரி செய்யப்பட்டுவிட்டது.

**52—**

### கடனா நதி திட்டம்

**வினா எண் 19911—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழப்பாவூர் பேரூராட்சிக்கு கடனா நதி திட்டம் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் பேரூராட்சிக்கு கடனா நதி திட்டம் மூலம் செப்டம்பர் 2003 முதல் குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.



**53—**

### குடிதண்ணீர் வழங்குதல்

**வினா எண் 19913—திரு. பி.ஜி. இராஜேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குளம் தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், ரெட்டியார்பட்டி வெங்கடேஸ்வரபுரத்திற்கு தாமிரபரணி குடிதண்ணீர் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் யூனியனிலுள்ள ரெட்டியார்பட்டி என்ற வெங்கடேஸ்வரபுரத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள 1,00,000 லிட்டர் கொள்ளளவு நீர்த்தேக்கத் தொட்டியிலும், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியிலும் தாமிரபரணி தண்ணீர் ஏற்றப்பட்டு, குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 2001 ஆம் ஆண்டு புதிதாக கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கு ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீர் ஏற்றப்பட்டு வருகிறது. இந்த நீர்த்தேக்கத் தொட்டியில் தாமிரபரணி தண்ணீர் ஏற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

**54—**

### புதிய ஊராட்சி

**வினா எண் 20198—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பத்துகாணியில் புதிய ஊராட்சி உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மிக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பத்துகாணியில் புதிய ஊராட்சி அமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**55—**

**கடைகள் கட்டுதல்**

**வினா எண் 20309—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடங்களில் கடைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது பணி துவங்கும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடங்களில் கடைகள் கட்டும் திட்டம் தற்பொழுது இல்லை.*

**56—**

**மாநகராட்சி வருமானம்**

**வினா எண் 20324—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2005 ஏப்ரல் 13]

*(அ) சேலம் மாநகராட்சி, கடைகள் கட்டி வாடகைக்கு விடப்பட்டுள்ளதில் ஆண்டு வருமானம் எவ்வளவு?*

*(ஆ) கடைகள் மூலம் மாநகராட்சிக்கு வரவேண்டிய நிலுவைத் தொகைகள் எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாநகராட்சியில் கடைகள் வாடகைக்கு விடப்பட்டுள்ளதின் மூலம் பெறப்படும் ஆண்டு வருமானம் ரூ.211.46 இலட்சம்.*

*(ஆ) கடைகளில் இருந்து பெறப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் ரூ.89.64 இலட்சம்.*

**57—**

**குப்பைகளை அகற்றுதல்**

**வினா எண் 20347—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியின் மையப் பகுதியில் குப்பைமேடு உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) இதனால் அப்பகுதியில் உள்ள மக்களுக்குச் சுகாதாரம் பாதிக்கப்படுவதையும் அறியுமா ?*

*(இ) ஆம் எனில், இதனை அப்புறப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ) மற்றும் (இ) சேலம் மாநகராட்சியில் எருமாபாளையம் என்னுமிடத்தில் குப்பைமேடு உள்ளது. தற்போது திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டு*

பொதுமக்களுக்கு பொதுச் சுகாதாரம் பாதிப்பு உள்ளதால் கிருமிநாசினிகள் தெளித்தல் மற்றும் அங்குள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தல் மூலம் தற்காப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பொதுச் சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**58—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 20566—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூருக்காக தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருவதால், கிளங்காடு, பாலமார்த்தாண்டபுரம், ஆயக்கடி, குத்துக்கல் வலசை, கே.ஆர். காலனி, சீவந்தி நகர் ஆகிய கிராமங்களை இத்திட்டத்தில் சேர்ப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர், புளியங்குடி நகராட்சிகள் சுரண்டை, சாம்பவர் வடகரை பேரூராட்சிகள் மற்றம் 84 வழியோர கிராமங்களுக்கான தாமிரபரணி நதியினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்ட வடிவமைப்பில் உபரியாக குடிநீர் அளவு ஏதும் இல்லாததனால் வினாவில் கூறியுள்ள கிராமங்களுக்கு கடையநல்லூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**59—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 20616—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், சின்னப்புலியூர் மற்றும் வைரமங்கலம் ஆகிய ஊராட்சிகளுக்கு கூட்டுக் குடிநீர்த் (ஆற்றுநீர்) திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியம், சின்னப்புலியூர், வைரமங்கலம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 21 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் அனைத்து பணிகளும் 11/2003–ல் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**60—**

## காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 20622—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சியை ஒட்டிய கிராமங்களும் பயன்பெறும் வகையில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரிவாக்கம் செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சியை ஒட்டி 55 குடியிருப்புகள் உள்ளன. இந்த 55 குடியிருப்புகளில் 16 குடியிருப்புகளில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து விரிவாக்கம் செய்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. 12 குடியிருப்புகளில் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 27 குடியிருப்புகளுக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து மேலும் விரிவாக்கம் செய்து குடிநீர் வழங்கும் கருத்துரு தற்போது பரிசீலனையில் இல்லை.

**61—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 20900—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, புலிவாய் ஊராட்சிக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் செயலாக்கத்திலிருந்த, ரூ.949.50 இலட்சம் மதிப்பீட்டிலான தெள்ளார் மற்றும் வந்தவாசி ஒன்றியங்களைச் சேர்ந்த நல்லூர் மற்றும் 74 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு தற்போது மக்கள் பயனில் உள்ளது. வந்தவாசி ஒன்றியத்தைச் சேர்ந்த புலிவாய் ஊராட்சியில் இரண்டு குடியிருப்புகளே உள்ளன. இவ்விரு குடியிருப்புகளுக்கு இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, தனியே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் அவசியம் இல்லை.

**62—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 20909—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, தென் எலப்பாக்கம் மதுரா அண்ணா நகர் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், அனக்காவூர் ஒன்றியத்தைச் சேர்ந்த தென் எலப்பாக்கம் ஊராட்சியிலுள்ள மதுரா அண்ணா நகர் குடியிருப்பிற்கு தனி மின்விசைத் திட்டம் 9/2002-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

**63—**

### புதிய குழாய்கள்

**வினா எண் 21124—திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் கழிவு நீர்க் கால்வாய் கட்டி புதிய அடிகுழாய்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ஆயக்குடி பேரூராட்சியில் 12,696 கி.மீ. நீளமுள்ள கழிவு நீர்க் கால்வாய்கள், 68 அடிகுழாய்க் கிணறுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நிதி வசதியின்மையால் மேற்கொண்டு பணிகள் செய்யும் உத்தேசம் இல்லை.

**64—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21854—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, ஆச்சாரஅள்ளி ஊராட்சி, ஆச்சாரஅள்ளி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், ஆச்சாரஅள்ளி குடியிருப்பின் மக்கட்தொகை மிகக் குறைவு (217). எனவே, இக்குடியிருப்பிற்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட இயலாது.

**65—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 21872—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, பழனிகவுண்டன் கொட்டாய் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சியைச் சார்ந்த பழனிகவுண்டன் கொட்டாய் குடியிருப்பில் 2002–2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**66—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 22466—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திம்மனந்தல் கிராமத்திற்கு ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கிடங்குடையான்பட்டு ஊராட்சியிலுள்ள திம்மனந்தல் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் 1/2004-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**67—**

## தொகுப்பு வீடுகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 22490—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதி, திருவைகாவூர், ஆதனூர், ஓலைப்பாடி ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள் பழுதுபட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைச் செப்பனிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**68—**

### ஒன்றியங்களைப் பிரித்தல்

**வினா எண் 22667—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரிய ஒன்றியங்களாக உள்ள திருவரங்குளம், அறந்தாங்கி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரிய ஒன்றியங்களாக உள்ள திருவரங்குளம், அறந்தாங்கி ஒன்றியங்களை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**69—**

### குடிநீர் வசதி

**வினா எண் 22736—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, மாற்றப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட காடவள்ளி ஏரி கிராமத்திற்கு ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், மாற்றப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த காடவள்ளி ஏரி என்கிற பகுதி போயர் காலனி குடியிருப்பில் ஆங்காங்கே பரவலாக அமைந்துள்ள பகுதியாகும். இந்தக் கிராமக் குடியிருப்பில் 30,000 லிட்டர்கள் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம்மூலம் போதிய அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புக்கு ஆழ்துளைக் கிணறு அமைப்பது பற்றி பரிசீலனையில் இல்லை.

**70—**

### நெற்களம்

**வினா எண் 23089—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, வெண்மந்தை ஊராட்சிக்கு நெற்களம் ஒன்று அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வெண்மந்தை ஊராட்சிக்கு நெற்களம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**71—**

### குடிநீர் மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 23335—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், விடையூர் கிராமம், அம்பேத்கர் நகரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர், அம்பேத்கர் நகருக்கு 2001–2002 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மார்ச் 2002 ஆம் ஆண்டு ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**72—**

## குடிநீர் வசதி

**வினா எண் 23630—திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு பயனாளிகள் பத்து சதவிகித பங்குத் தொகை கட்ட வேண்டியுள்ளதை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிக்கு விலக்களிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முன்னர் செயல்படுத்தப்பட்ட அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது இது புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்படுகிறது. இதன்கீழ் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ராஜீவ் காந்தி குடிநீர்த் திட்டத்தின்கீழ் பயன்பெறுவதற்கு பயனாளிகள் பத்து சதவிகித பங்குத்



தொகை கட்ட வேண்டியுள்ளதை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிக்கு விலக்களிக்க வழிவகையில்லை.

**73—**

## தடுப்பு அணை

**வினா எண் 23636—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், நடுஹட்டி ஊராட்சி, பெட்டாலா பகுதியில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தடுப்பு அணை அமைத்து குழாய்கள் அமைத்துக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியத்தைச் சேர்ந்த பெட்டாலா குடியிருப்புகளுக்குத் தற்போது போதிய குடிநீர் வழங்கப்பட்டு வருவதால், புதிய குடிநீர்த் திட்டம் பரிசீலனையில் இல்லை.

**74—**

## அரசு அனுமதி

**வினா எண் 23651—திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள வட்டவளைவில் (ரவுண்டானா) முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் சிலையை அமைக்க அரசின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதால் அவ்விடத்தில் வேறு பணிகள் நடைபெறாமல் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊட்டியில் மத்திய பேருந்து நிலையம் அருகிலுள்ள வட்டவளைவில் (ரவுண்டானா) முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களின் சிலை வைக்க அனுமதி கேட்டுள்ள இடத்தில் வேறு பணிகள் நடைபெறுவது அரசின் கவனத்திற்கு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**75—**

## கடல்நீரைக் குடிநீராக்குதல்

**வினா எண் 23653—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரு டி.எம்.சி.-க்கு மற்ற குடிநீர்த் திட்டங்களினால் ஆகும் செலவைக் காட்டிலும் குறைவான செலவு இருக்குமெனில் கடல் நீரைக் குடிநீராக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடல் நீரின் உவர் தன்மை 35,000 பி.பி.எம்.-க்கு மேல் அதிகமாக இருப்பதன் காரணமாக, உவர் நீரை நன்னீராக்கும் கலன்கள் அமைக்கும் குடிநீர்த் திட்டங்களுக்கு, மற்ற குடிநீர்த் திட்டங்களைவிட நிர்மாணிக்கும் செலவும் பராமரிக்கும் செலவும் மிக அதிகமாக உள்ளது.

**76—**

## குழாய் இணைப்பு

**வினா எண் 24226—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சியின் 70 சதவிகிதம் பகுதிகளில் வைகை அணையிலிருந்து குடிநீர் வழங்கப் பெறுவதால் மீதமுள்ள 30 சதவிகிதம் பகுதிக்கு, குழாய் இணைப்பு கொடுத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாநகராட்சியின் 70 சதவிகிதம் பகுதிகளில் வைகை அணையிலிருந்து குடிநீர் வழங்கப் பெறுவதால் மீதமுள்ள 30 சதவிகிதம் பகுதிகளுக்கு வைகை 3-வது குடிநீர்த் திட்டம் மூலமாக குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**77—**

## உலக வங்கி கடன் உதவி

**வினா எண் 25004—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் திட்டம் இந்த நிதியாண்டில் நிறைவேற்றப்படுமா?

(ஆ) அதற்கு உலக வங்கி கடன் உதவி கோரப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகருக்கு வீராணம் ஏரியிலிருந்து குடிநீர் கொண்டு வரும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-I (புதிய வீராணம் திட்டம்) நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இந்தத் திட்டத்திற்கு உலக வங்கியிடமிருந்து கடனுதவி கோரப்படவில்லை. உள்நாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றும், அரசு நிதி உதவியுடனும் திட்டப் பணிகள் செயலாக்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 13

78—

**பேரூராட்சியாக்குதல்**

**வினா எண் 25254—திரு. ப. சிதம்பரம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட உக்கரம் ஊராட்சியை பேரூராட்சியாக உயர்த்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* இல்லை.

79—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 25455—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியத்தில் முள்ளூர் ஊராட்சியிலுள்ள முள்ளூர் கடை வீதியில் ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* புதுக்கோட்டை மாவட்டம், முள்ளூர் ஊராட்சியிலுள்ள முள்ளூர் கடை வீதி என்பது ஒரு தனி குடியிருப்பு



2005 ஏப்ரல் 13]

அல்ல. இது முள்ளூர் குடியிருப்பைச் சார்ந்த ஒரு பகுதியாகும். முள்ளூர் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது.

80—

**நினைவு மண்டபம்**

**வினா எண் 25830—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசனுக்கு மரியாதை செய்யும் முறையில் பொருத்தமான இடத்தில் சிலை அமைக்கவும், நினைவு மண்டபம் உருவாக்கவும் அரசின் திட்டம் உள்ளதா ?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* இல்லை

*(ஆ)* எழவில்லை.

81—

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 25868—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தமிழகத்தில் அரசால் ஆதி திராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படும் தொகுப்பு வீடுகளுக்கு வழங்கப்படும் தொகையை ரூ.34,000/–லிருந்து ரூ.40,000/– ஆக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு சாதாரண நிலப் பகுதியாக இருப்பின் ஒரு வீட்டிற்கு ரூ.20,000/– என்றிருப்பதை ரூ.25,000/– எனவும், கடின வகை நிலப் பகுதியாக இருப்பின் ஒரு வீட்டிற்கு ரூ.22,000/– என்றிருப்பதை ரூ.27,500/– என்றும் 1–4–2004 முதல் உயர்த்தி மத்திய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், மாநில அரசு சிமெண்ட் கான்கிரீட் மேற்கூரை அமைக்க ஒரு வீட்டிற்கு ரூ.9,000/– கூடுதலாக அளிக்கிறது. இதனையும் சேர்த்து சாதாரண நிலப் பகுதியாக இருப்பின் ஒரு வீட்டிற்கு ரூ.34,000/– எனவும், கடின நிலப் பகுதியாக இருப்பின் ஒரு வீட்டிற்கு ரூ.36,500/– எனவும் உயர்த்தி 1–4–2004 முதல் வழங்கப்படுகிறது.*

**82—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26065—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளி ஊராட்சி, ஆரல்குந்தி மந்திரி கவுண்டர் கொட்டாய் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) மேற்குறிப்பிட்ட பகுதியின் தற்போதைய மக்கட்தொகை 30 மட்டுமே என்பதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.*



**83—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26066—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி ஏர்கொல்லப்பட்டி, மாதேஸ்வரன் கோயில் அருகில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, ஏர்கொல்லப்பட்டி, மாதேஸ்வரன் கோயில் குடியிருப்பில் திறந்தவெளிக் கிணறு ஒன்று பயனில் உள்ளது (கோயில் அருகில்). இக்குடியிருப்பின் மக்கள் பரவலாக விவசாய இடங்களில் குடியிருப்பதால், கோயில் அருகில் உள்ள கிணற்றிலும், விவசாயக் கிணற்றிலும் குடிநீர் எடுத்து வருகின்றனர். மக்கட்தொகை குறைவாக உள்ளதால், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

**84—**

### குடிநீர் இணைப்பு

**வினா எண் 26203—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி கிராமம், கே. வடுகப்பட்டியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு காவிரி குடிநீர் இணைப்புக்காக செய்ய வேண்டிய வேலையை அரசு செய்து தருமா?*

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த கே. வடுகப்பட்டி குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் காவிரி ஆற்றுநீர் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வருகிறது.

**85—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 26208—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சி, கெண்டையக்காடு மற்றும் புதுஏரிமேடு பகுதியில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளுக்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட இராயணம்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதி கெண்டையக்காடு ஆகும். இராயணம்பட்டி குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், குடிநீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய் மூலம் இப்பகுதிக்கு 3/2003 முதல் வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

மேலும், கோரணம்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஏரிக்காடு குடியிருப்பின் ஒரு பகுதி புது ஏரி ஆகும். இப்பகுதிக்கு ஏரிக்காடு குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், குடிநீர் ஏற்றப்பட்டு பகிர்மானக் குழாய் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதியில் ஒரு சிறு மின்விசைத் திட்டமும் பயனில் உள்ளது.

எனவே, இப்பகுதிகளுக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

**86—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 26209—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கோரணம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கோல்காரன் வளவில் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளதால், அங்கு ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில், கோரணம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கோம்பைக்காடு குடியிருப்பின் ஒரு பகுதி கோல்காரன்வளவு ஆகும். கோம்பைக்காடு குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், காவிரி நீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்மூலம் இப்பகுதிக்கு வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, இப்பகுதிகளுக்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லை.

[2005 ஏப்ரல் 13

87—

### நெற்களம்

**வினா எண் 26533—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, அதியகுப்பம் காலனிக்கு நெற்களம் ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, அதியங்குப்பம் காலனிக்கு நெற்களம் 2002–2003 ஆம் நிதியாண்டில் கட்டி முடிக்கப்பட்டது.

88—

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26580—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, கீழ்கொவளைவேடு ஊராட்சி, கிருஷ்ணாபுரம் பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் ஒன்றியம், கிருஷ்ணாபுரம் குடியிருப்புப் பகுதி விளாநல்லூர் ஊராட்சியைச் சார்ந்ததாகும். இக்குடியிருப்பிற்கு தற்போது 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் ஒரு சிறு மின்விசைத் திட்டத்தின்மூலம்



2005 ஏப்ரல் 13]

போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது செயலிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு இக்குடியிருப்பின் மக்கட்தொகைக்குப் போதுமானதாக உள்ளதால், புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் எழவில்லை.

89—

### தனி அலுவலக அறை

**வினா எண் 26606—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றியங்களில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனி அலுவலக அறை தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஊராட்சி ஒன்றிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனி அலுவலக அறை தரும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

90—

### வ.உ.சி. மார்க்கெட்

**வினா எண் 27206—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் மக்கள் நெரிசலுடன் உள்ள வ.உ.சி. மார்க்கெட்டை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியின் நிதிநிலை சீராக இல்லாததால் மேற்கண்ட திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

91—

## திருமணிமுத்தாறு அழகுபடுத்தும் திட்டம்

**வினா எண் 28612—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், திருமணிமுத்தாறு அழகுபடுத்தும் திட்டம் சேலம் மாநகராட்சிமூலம் செயல்படுத்த அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், திருமணிமுத்தாறு அழகுபடுத்தும் திட்டம் சேலம் மாநகராட்சி மூலம் செயல்படுத்த ரூ.5.40 இலட்சம் செலவில் அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

92—

## குடிநீர் வசதி

**வினா எண் 28625—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அழகப்பசமுத்திரம் கிராமத்திலுள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பழுதுநீக்கி மக்கள் குடிநீர் வசதிக்காக உதவி செய்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த அழகப்பசமுத்திரம் ஊராட்சியிலுள்ள அழகப்பசமுத்திரம் குடியிருப்பில், பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டப் பணிகள் 1/2003-ல் முடிக்கப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.



93—

## பேருந்து நிலையம்

**வினா எண் 29422—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி பேரூராட்சியில் நவீன வசதிகளுடன்கூடிய ஒரு பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செஞ்சி பேரூராட்சியில் நவீன பேருந்து நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

94—

## தூர்வாரும் பணி

**வினா எண் 29671—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, ஈராய்ச்சி பாசனக் கண்மாயை தூர்வாரி மராமத்து செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி தொகுதி ஈராய்ச்சி பாசனக் கண்மாய் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

95—

## புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30148—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், மங்கனூர் ஊராட்சிக்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், மங்கனூர் ஊராட்சியில், மங்கனூர் மற்றும் மங்கனூர் ஆதி திராவிடர் காலனி என இரு குடியிருப்புகள் உள்ளன. மங்கனூர் குடியிருப்பில் 1989 முதல் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் பயனில் உள்ளது. மற்றொரு குடியிருப்பான மங்கனூர் ஆதி திராவிடர் காலனியில் 2003–2004 ஆம் ஆண்டில் ரூ.4.90 இலட்சம் செலவில் 10,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் "சுவஜல்தாரா" திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டுவரப்பட்டு தற்போது ஊராட்சியின் பராமரிப்பில் உள்ளது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் அவசியம் இல்லை.

96—

## குடிநீர் வசதி

**வினா எண் 30203—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், மூக்கம்பட்டி ஊராட்சியில் மேலத்தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மூக்கம்பட்டி ஊராட்சியைச் சார்ந்த மூக்கம்பட்டி மேலத்தெரு என்பது மூக்கம்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பிற்கு 2 கையிறைப்பான்கள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிமூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தற்போது புதிய திட்டம் அமைக்கும் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

97—

## புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30206—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை தாலுகா, புதுநகர் கிராமத்திற்குப் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், புதுநகர் ஊராட்சியைச் சார்ந்த புதுநகர் குடியிருப்பிற்கு தற்போது 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிமூலம்

போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் புதிதாக மேல்நிலைத் தொட்டி அமைப்பதற்கான திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**98—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 30209—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வைத்தூர் ஊராட்சி, வைத்தூரில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோவில் ஒன்றியம், வைத்தூர் குடியிருப்பில் 4 கையிறைப்பான் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டுகளில் தகுதி மற்றும் தேவை அடிப்படையில் நிதிநிலைமைக்கேற்ப புதிய திட்டம் மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**99—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30422—திரு. இ.ர. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரவக்குறிச்சி தொகுதியில் நிலவும் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைக் களைய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரவக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**100—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 30511—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியம், மகாதேவி மங்களம் கிராமத்தில் குடிநீர் வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் செய்திடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) விழுப்புரம் மாவட்டம், வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த மகாதேவி மங்களம் கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் மூலமும், மூன்று கையிறைப்பான்கள் மூலமும் தற்போது போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

(ஆ) எழவில்லை.

**101—**

**புதிய குழாய்**

**வினா எண் 30512—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி பேரூராட்சிக்கு வரும் அனந்தபுரம்—செஞ்சி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் பயன்படுத்தப்பட்டு உள்ள சிமெண்ட் குழாய் பழுதடைந்துள்ளதை நீக்கி புதிய குழாய் பொருத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திட்டம் ஏதும் இல்லை. நீர் ஏற்றும் சிமெண்ட் குழாய்கள் நீர் அழுத்தத்தின் காரணமாகவும், இதர காரணங்களாலும் ஏற்படும் பழுதுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் வாயிலாக உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**102—**

### விவசாயக் களம்

**வினா எண் 30730—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் விவசாயக் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி, அங்குசெட்டிப்பாளையம் ஊராட்சியில் விவசாயக் களம் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

**103—**

### விவசாயக் களம்

**வினா எண் 30747—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சியில் விவசாயிகளுக்கு விவசாயக் களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?



*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* பண்ருட்டி தொகுதி, லட்சுமிநாராயணபுரம் ஊராட்சி, கந்தன்பாளையம் கிராமத்தில் களம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**104—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30869—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை ஒன்றியம், தென்னங்குடி பஞ்சாயத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில், தென்னங்குடி பஞ்சாயத்து உள்ளது. தற்போதுள்ள *30,000* லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**105—**

### மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 30902—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* திருவப்பூர், சௌராஷ்டிரா பெரிய தெரு, கீழத்தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூர் சௌராஷ்டிரா தெரு, பெரிய தெரு, கீழத்தெரு புதுக்கோட்டை நகராட்சியைச் சேர்ந்த ஒரு பகுதியாகும். இப்பகுதிகளுக்கு காவேரி குடிநீர்த் திட்டத்தின் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருவதால் தனியே மேல்நிலைத்தொட்டி கட்டும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.*

**106—**

### குடிநீர் வரி

**வினா எண் 31129—திரு. ராதாரவி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்த வேண்டிய வரியை குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தாவிடில் கூட்டு வட்டி போட்டு வசூல் செய்வதற்குப் பதிலாக, குறிப்பிட்ட தொகையை அபராதமாக வசூலிக்குமாறு மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சென்னைக் குடிநீர் வாரியத்தின் கட்டண விதிமுறைகளின்படி குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை காலதாமதமாகச் செலுத்தும் நுகர்வோரிடமிருந்து மேல் வரி மட்டும் வசூலிக்கப்படுகிறது. குறிப்பிட்ட தொகையை அபராதமாக வசூலிக்கும் திட்டம் எதுவும் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*





**107—**

### சுகாதார மையம்

**வினா எண் 31151—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி பெரியதாக உள்ளதால் வினோபா நகர் அல்லது ஆர்.கே. நகர் வடக்குப் பகுதியில் சுகாதார மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் வட்டம் 3, 7 மற்றும் 11-ல் ஏற்கெனவே 3 சுகாதார மையங்கள் இருப்பதால் வினோபா நகர் அல்லது ஆர்.கே. நகர் வடக்குப் பகுதியில் சுகாதார மையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.*

**108—**

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 31702—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாநகராட்சி களாம்பட்டி பிரதான சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சேலம் மாநகராட்சி களாம்பட்டி பிரதான சாலை ரூ.4.95 இலட்சம் மதிப்பீட்டில் செப்பனிடப்பட்டு பொதுமக்களின் உபயோகத்தில் உள்ளது.*

109—

## இலவச தொகுப்பு விடுகள்

**வினா எண் 32671—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டம் அத்திப்பாடி ஊராட்சியிலுள்ள அத்திப்பாடியில் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், அத்திப்பாடி ஊராட்சிக்கு 1999–2000 ஆம் ஆண்டில் 30 தொகுப்பு வீடுகளும் 2000–2001 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகளும் ஆதி திராவிடர் இன மக்களுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

110—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 32718—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எண் 2, கரியமாணிக்கம் ஊராட்சியில் குருவம்பட்டி தெற்குப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், நெ. 2 கரியமாணிக்கம் ஊராட்சியில் உள்ள குருவம்பட்டி தெற்குப்



பகுதி, குருவம்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்புக்கு நெ. 2 கரியமாணிக்கம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் ஒரு இலட்சம் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மூலம் முழுமையான அளவு குடிநீர் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே இப்பகுதிக்குத் தனியாக மேல்நிலைத் தொட்டி அமைக்கும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

111—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 32887—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலுப்பையூரணி கிராமத்தில் சவரத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட இலவசப் பட்டா நிலத்தில் அவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், இலுப்பையூரணி கிராமத்தில் வசிக்கும் சவரத் தொழிலாளர்களுக்கு 2002–2003 ஆம் ஆண்டில் ஒரு தொகுப்பு வீடும் 2003–2004 ஆம் நிதியாண்டில் 7 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

112—

## மக்களை இனம் காணும் பணி

**வினா எண் 33855—திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களை இனம் காணுவதற்காக, அரசு நிர்ணயித்துள்ள இலக்கணங்கள் யாவை?

[2005 ஏப்ரல் 13

(ஆ) இந்த அடிப்படையில் மாவட்டவாரியாக ஆண்டுதோறும் கணக்கெடுப்பு நடக்கிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறுமை கோட்டிற்குக்கீழ் வரும் மக்களை இனம் காணுவதற்காக மத்திய அரசு நிர்ணயித்துள்ள 13 இலக்கணங்களின்படி ஐந்தாண்டுக்கொரு முறை BPL கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

**113—**

## தனி மருத்துவமனை

**வினா எண் 34510—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் மகளிருக்கென அனைத்து சிகிச்சை வசதிகளுடன், 100 படுக்கை வசதிகளுடன்கூடிய தனி மருத்துவமனை மாநகராட்சி சார்பில் ஏற்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் சென்னை மாநகராட்சி சார்பில் மகளிருக்கென புதிதாக தனி மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**114—**

## மகாகவி பாரதியார் சிலை

**வினா எண் 34564—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் பொது இடத்தில் மகாகவி பாரதியாருக்கு சிலை வைக்க அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**115—**

## குடிநீர்த் திட்டச் செலவு

**வினா எண் 34625—திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்விழாவை முன்னிட்டு கெலமங்கலம் பேரூராட்சியில் குடிநீர்த் திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

(ஆ) அத்திட்டம் முடிக்கப்பட்டுள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கெலமங்கலம் பேரூராட்சிக்கு (தற்போது ஊராட்சியாக மாற்றப்பட்டுள்ளது) பொன் விழா ஆண்டுத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டம் ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை.

**116—**

## கட்டட வசதி

**வினா எண் 34724—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் உமையாள்பதி தெருவிலுள்ள சுய உதவிக் குழுவிற்கு, சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் உமையாள்பதி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

**117—**

## குப்பைகளை நீக்குதல்

**வினா எண் 34742—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்குப் பின்புறம் குப்பைக் கூளங்கள் பல ஆண்டுகளாக தேங்கிக் கிடப்பதை அகற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மண்டலம்-2, வார்டு-22-ல் உள்ள அரசு ஸ்டான்லி மருத்துவமனை வளாகத்தின் பின்புறம் வைக்கப்பட்டிருந்த குப்பை சேகரிக்கும் பெட்டகம் (Hydrocon bin) பழுதுபட்டிருந்தது. இதனால் குப்பைகள் மருத்துவமனையின் பின்புறம் தேங்கி இருந்தன. இப்பழுதுபட்ட குப்பை சேகரிக்கும் பெட்டகத்தை 15 நாட்களில் சரிப்படுத்தி மீண்டும் ஸ்டான்லி மருத்துவமனை பின்புறம் குப்பை கொட்டும் இடத்திலேயே வைக்கப்பட்டது. அங்கு 15 நாட்களாக தேங்கி கிடந்த குப்பைக் கூளங்கள் கனரக வாகனம் (Lorry) மூலமாக மூன்று நடையில் அகற்றப்பட்டன.



**118—**

## குடிநீர்த் தொட்டி

**வினா எண் 34870—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதி, அதிராம்பட்டினம் பேரூராட்சியில் கரையூர் தெருவில் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**119—**

## கட்டட வரன்முறை

**வினா எண் 34883—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூரில் அமல்படுத்தும் கட்டட வரன்முறைச் சட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கட்டட வரன்முறைச் சட்டத்துக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குகள் நடைபெற்று வருவதால் நீதிமன்றத் தீர்ப்பின் தன்மையைப் பொறுத்து அதன் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**120—**

## ஆழ்துளைக் கிணறுகள்

**வினா எண் 35200—திரு. எஸ். நடராசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாட்ராம்பள்ளி மூக்கனூர் ஊராட்சியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மூக்கனூர் ஊராட்சியில் 2003–2004 ஆம் ஆண்டில் 6 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன.*

**121—**

## தனிக் கட்டடம்

**வினா எண் 35330—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம் வைத்தூர் ஊராட்சியில் இயங்கிவரும் பல மகளிர் குழுவினர் கூடுவதற்கு வசதியாக தனிக் கட்டடம் கட்டித் தந்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவில் ஒன்றியம், வைத்தூர் ஊராட்சியில் பல மகளிர் குழுவினர் கூடுவதற்கு வசதியாக 2002–2003 ஆம் ஆண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டம் மூலம் ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

**122—**

## தனி ஊராட்சி

**வினா எண் 35395—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், ஆத்தங்கரை விடுதி ஊராட்சியில் உள்ள தெற்குவாண்டான் விடுதியை தனி ஊராட்சியாக ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஒன்றியம், ஆத்தங்கரை விடுதி ஊராட்சியில் உள்ள தெற்குவாண்டான் விடுதியை தனி ஊராட்சியாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) வினா எழவில்லை.*

**123—**

## சாலை வசதி

**வினா எண் 35660—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் 2001–2003 ஆம் ஆண்டு சாலைகளை செப்பனிடவும் கழிவுகளை அகற்றவும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) சென்னை நகரை சிங்கார நகரமாக்க அரசிடம் சிறப்புத் திட்டங்கள் உள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சென்னை நகரில் 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் ஆண்டு நிதியாண்டில் சாலைகளைச் செப்பனிட (வலுப்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல்) ரூ.116.17 கோடியும் சாலைக் கழிவுகள் மற்றும் திடக் கழிவுகளை அகற்ற 2001–2002 மற்றும் 2002–2003 ஆம் நிதியாண்டில் ரூ.261.85 கோடியும் செலவிடப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை நகரை எழில்மிகு நகரமாக மாற்ற பேருந்து சாலைகளில் இரப்பர் கலந்த தார்ச்சாலை அமைத்தல், உட்புறச் சாலைகளை மேம்படுத்துதல், கான்கிரீட் சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்வாய்கள் அமைத்தல், கால்வாய்களில் தூர்வாருதல், அதி நவீன கட்டணக் கழிப்பிடம் கட்டுதல், பூங்காக்கள் மற்றும் சிறு மேம்பாலங்களுக்கு அடியில் உள்ள காலியிடங்களில் பசுந்தளிர் அமைத்தல், சாலை நடுவேயுள்ள மையத் தடுப்புச் சுவர்ப் பகுதியில் செடிகளை அமைத்து பசுமையாக்குதல், குப்பை அகற்றும் பணியினை தனியார் வசம் ஒப்படைத்தல், நகர எல்லைக்குள் கால்நடைகளை வளர்ப்பதற்குத் தடை விதித்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



**124—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 36512—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகள் கட்டுவதற்கு அரசு அனுமதி அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி, இத்திட்டத்தின்கீழ் நியாயவிலைக் கடைகள் கட்ட வழிவகை இல்லை.

**125—**

## புதிய கிணறு

**வினா எண் 36629—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, குணசீலம் ஊராட்சி காவேரி ஆற்றின் கிணற்றில் குடிநீர் குறைவாக உள்ளதால், புதிய கிணறு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, குணசீலம் ஊராட்சி, காவேரி ஆற்றில் குடிநீர் குறைவாக உள்ளதால், புதியதாக கிணறு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**126—**

## குடிநீர் குழாய்

**வினா எண் 37402—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாநகராட்சி பொதுக் குடிநீர்க் குழாய் பகிர்மானத்துக்கான பணிகளை உடனடியாகத் துவக்க அரசு உத்தரவு வழங்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாநகராட்சி, சிறுவாணி மற்றும் பில்லூர் அணையை பிரதான நீராதாரமாகக் கொண்டு குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. சிறுவாணி அணையில் நீரின் கொள்ளளவு மிகவும் குறைவாக இருப்பதால் பில்லூர் திட்ட நீரைப் பகிர்ந்தளிக்க வேண்டிய சூழ்நிலையில் குடிநீர் பொதுக் குழாய் பகிர்மானத்துக்கான பணிகளைத் துவக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**127—**

## குடிநீர் வசதி

**வினா எண் 37751—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, ஜமீன் இளம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட இ.நல்லாக்கவுண்டம்பாளையம் கிராமத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, ஜமீன் இளம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட இ.நல்லாக்கவுண்டம்பாளையத்தில் 2002–2003 ஆம்



2005 ஏப்ரல் 13]

ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் ஒரு ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**128—**

## இலவச தொகுப்பு வீடுகள்

**வினா எண் 37880—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், எக்கூர் ஊராட்சியில் ஆதி திராவிடர் மக்களுக்கு இலவசமாக தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை ஒன்றியம், எக்கூர் ஊராட்சியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு 1994–1995 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகளும், 1996–1997 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகளும், 1997–1998 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகளும், 1998–1999 ஆம் ஆண்டில் 1 தொகுப்பு வீடும், 2001–2002 ஆம் ஆண்டில் 8 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2003–2004 ஆம் ஆண்டில் மேற்படி ஊராட்சியில் வசிக்கும் இருளர் இன மக்களுக்கு 17 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**129—**

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 38042—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம் கீழ்மத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த கீழ்மத்தூரில் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், கீழ்மத்தூர் ஊராட்சி, கீழ்மத்தூரில் பிறபடுத்தப்பட்டவர்களுக்கு இதுவரையில் 45 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**130—**

### கோட்டங்களை அதிகரித்தல்

**வினா எண் 38306—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாநகராட்சியிலுள்ள 60 கோட்டங்களை 72 ஆக அதிகரிக்க அரசின் கருத்துரு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் 60 கோட்டங்கள் 72 ஆக உயர்த்துவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் இல்லை.*

**131—**

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 38899—திரு. அ.இரா. மலையப்பசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பெரியசோளிபாளையம் ஊராட்சி, சிறுகிணத்துப்பாளையம் காலனி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*



*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஒன்றியம், பெரியசோளிபாளையம் ஊராட்சி, சிறுகிணத்துப்பாளையம் காலனி மக்களுக்கு 1998–1999 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 15 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.*

**132—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 39707—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினத்தில் ஒரு நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புதுப்பட்டினத்தில் நியாய விலைக் கடை கட்டடம் கட்ட நிதி வசதி இல்லை.*

*(ஆ) இவ்வினா எழாது.*

**133—**

### ஒளி விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 40463—திரு. த. ஆறுமுகம்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

திருவொற்றியூர் நகரம், 39-வது பகுதி, மாணிக்கம் நகர்-அம்பேத்கர் நகர் இணைக்கும் சுரங்கப் பாதையில் ஒளி விளக்குகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவொற்றியூர் நகரம், 39-வது பகுதி, மாணிக்கம் நகர்-அம்பேத்கர் நகர் இணைக்கும் சுரங்கப் பாதையில், வட்டம் 39-ல், குழல் விளக்குகளும் 250 வோல்ட் மெட்டல் அலாய் விளக்கும் அமைக்கப்பட்டு அவை தற்போது நல்ல நிலையில் எரிந்து வருகின்றன.

**134—**

### தொகுப்பு விடுகள்

**வினா எண் 40830—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, சோளிங்கர் ஒன்றியம், இளையநெல்லூர் ஊராட்சியில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், சோளிங்கர் ஒன்றியம், இளையநல்லூர் ஊராட்சி, வானியகாட்டூர் கிராமத்தில் 2003-2004 ஆம் நிதியாண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 5 தொகுப்பு வீடுகள் அருந்ததியர் இன வகுப்பினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**135—**

### பேரூராட்சியில் இணைப்பு

**வினா எண் 41362—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) அரூர் தொகுதி, பெரியார் நகரத்தை ஊத்தங்கரை பேரூராட்சியில் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட பெரியார் நகரை, ஊத்தங்கரை பேரூராட்சியுடன் (சிறப்பு சிற்றூராட்சியுடன்) இணைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**136—**

### குடிதண்ணீர் வசதி

**வினா எண் 41443—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் ஊராட்சி, தவசித் தேவர் காலனி பகுதிக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் ஊராட்சியைச் சார்ந்த தவசித் தேவர் காலனியில் 1999 முதல் பயன்பாட்டில் உள்ள கருமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நீராதாரமாகக் கொண்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**137—**

### குடிநீர் வசதி

**வினா எண் 41444—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் பஞ்சாயத்து, மும்மூர்த்தி நகர் பகுதியில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் ஊராட்சியைச் சார்ந்த மும்மூர்த்தி நகர் குடியிருப்பு, முழுமையாக குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். மேலும், அங்கு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. எனவே, கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**138—**

## காய்கறி மற்றும் மீன் அங்காடி

**வினா எண் 41887—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரிலுள்ள காய்கறி மற்றும் மீன் அங்காடியை சீர் செய்து சுகாதாரமான முறையில் நடத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு நகரிலுள்ள காய்கறி மற்றும் மீன் அங்காடி சுகாதாரமான முறையில் செங்கற்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**139—**

## இலவச தொகுப்பு விடுகள்

**வினா எண் 42080—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) அரூர் தொகுதி, காட்டேரி ஊராட்சி ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவசமாக தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், காட்டேரி ஊராட்சி ஆதிதிராவிட மக்களுக்கு 1999-2000 ஆம் நிதியாண்டில் 10 தொகுப்பு வீடுகளும், 2002-2003 ஆம் நிதியாண்டில் 10 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**140—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42082—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், பெரிய கொட்டக்குளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், பெரியகொட்டக்குளம் ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு 2001-2002 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

141—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42083—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், மகனூர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு, இலவசமாக தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், மகனூர்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு 1999-2000 ஆம் நிதியாண்டில் 25 தொகுப்பு வீடுகளும் 2001-2002 ஆம் நிதியாண்டில் 10 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

142—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42084—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், கீழ்மத்தூர் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியம், கீழ்மத்தூர் ஆதி திராவிட மக்களுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் 10 தொகுப்பு வீடுகளும், 2002-2003 ஆம் ஆண்டில் 5 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

143—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42249—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளைப் பழுது பார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

144—

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 42907—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

இராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா ஒன்றியம், படியம்பாக்கம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் தாழ்த்தப்பட்ட மற்றும் இதர இனத்தவருக்கு என குறிப்பிட்டு தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர்களுக்கென்று தனியே தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. 2003-2004 ஆம் நிதியாண்டில் வாலாஜா ஒன்றியம், படியம்பாக்கம் கிராமத்தில் 5 ஆதிதிராவிட வகுப்பினருக்கும், 5 இதர வகுப்பினருக்கும் ஆக மொத்தம் 10 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**145—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 43179—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை ஊராட்சியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த வெங்கடாம்பேட்டை ஊராட்சியிலுள்ள வெங்கடாம்பேட்டை குடியிருப்பில் கூடுதலாக பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் 2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 13]

**146—**

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 43189—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சியைச் சேர்ந்த நடுக்காட்டுப்பாளையம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பெரியகாட்டுப்பாளையம் ஊராட்சியிலுள்ள நடுக்காட்டுப்பாளையம் குடியிருப்பிற்குக் கூடுதலாக 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மக்கள் பங்களிப்புடன்கூடிய 'சுவஜல்தாரா' திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்டு 10/2003-ல் மக்கள் பயனுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**147—**

## காந்தி சிலை

**வினா எண் 43587—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை கிழக்கு தொகுதி, காந்திப் பொட்டல் ராயலு அய்யர் மருத்துவமனை அருகிலுள்ள காந்தி சிலையை புனர் நிர்மாணம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை கிழக்கு தொகுதி, காந்திப் பொட்டல் ராயலு அய்யர் மருத்துவமனை அருகிலுள்ள காந்தி சிலையை புனர் நிர்மாணம் செய்ய மாநகராட்சியால் இயலாது.

**148—**

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 43596—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஜல்லிபட்டி ஊராட்சிக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஜல்லிபட்டி ஊராட்சியில் 2002-2003 ஆம் ஆண்டு வரை மொத்தம் 125 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்படி ஊராட்சிக்கு 10 தொகுப்பு வீடுகள் அனுமதிக்கப்பட்டு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**149—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 43626—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, ஆயிப்பேட்டை கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைத்துக் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழூர் ஊராட்சியிலுள்ள ஆயிப்பேட்டை குடியிருப்பிற்குக் கூடுதலாக மக்கள் பங்கேற்புடன்கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் 2003 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.

**150—**

**தொகுப்பு விடுகள்**

**வினா எண் 44300—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா ஒன்றியம், படியம்பாக்கம் ஆதிதிராவிடர் காலனியில் வசிக்கும் ஏழை மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வாலாஜா ஒன்றியம், படியம்பாக்கம் ஊராட்சியில் 2003-2004 ஆம் நிதியாண்டில் 5 ஆதிதிராவிடர் மற்றும் 5 இதர இனத்தவர் ஆக மொத்தம் 10 பயனாளிகளுக்குத் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**151—**

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு விடுகள்

**வினா எண் 45023—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆளப்பிறந்தான் ஊராட்சியில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆளப்பிறந்தான் ஊராட்சியில் 2003-2004 ஆம் நிதியாண்டில் பிற்படுத்தப்பட்ட இனத்தவர் குடும்பங்களுக்கு 4 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**152—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 45030—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஆயிங்குடி ஊராட்சி, ஆயிங்குடி ஆதிதிராவிட காலனி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியம், ஆயிங்குடி ஆதிதிராவிட காலனி மக்களுக்கு 1985 ஆம் ஆண்டில் 25 தொகுப்பு வீடுகளும், 2003-2004 ஆம் ஆண்டில் 5 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.



**153—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 47509—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, கொழுமம் கிராமம், குளத்துப்பாளையத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மடத்துக்குளம் ஒன்றியம், கொழுமம் ஊராட்சி, குளத்துப்பாளையம் குடியிருப்புக்கு தற்போது அங்குள்ள இரு 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டிகளுடன்கூடிய தனி மின்விசைத் திட்டங்கள் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**154—**

## சாலையைப் புதுப்பித்தல்

**வினா எண் 47962—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டை சாலையை உடனடியாகப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, தண்டையார்பேட்டை சாலை என்கின்ற திருவொற்றியூர் நெடுஞ்சாலை 2004-2005 ஆம் நிதியாண்டில் புதுப்பிக்கப்படும்.

155—

## பேருந்து நிலையம்

**வினா எண் 48022—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் பொதுப் பணித் துறையின் தங்கும் விடுதி உபயோகமில்லாமல் இருப்பதால், அவ்விடத்தில் பேருந்து நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறையில் பொதுப் பணித் துறையின் தங்கும் விடுதி உபயோகமில்லாமல் இருப்பதால், அவ்விடத்தில் பேருந்து நிலையம் ஏற்படுத்தக் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

156—

## இருவழிச் சாலை

**வினா எண் 48180—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சிச் சாலையை இருவழிச் சாலைகளாக அமைக்க உத்தேசிக்கப்பட்ட திட்டத்தினை விரைவாகச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் இருவழிச்சாலை அமைக்க போதுமான அகலமுள்ள சாலைகளில் இருவழிச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

157—

## தொகுப்பு வீடுகள்

**வினா எண் 48427—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, கோடிமங்கலம் ஆதிதிராவிட தெருவிற்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குத்தாலம் தொகுதி, கோடிமங்கலம் ஊராட்சியில் 2003-2004 ஆம் ஆண்டில், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 50 தொகுப்பு வீடுகளும், இதர வகுப்பினருக்கு 6 தொகுப்பு வீடுகளும் கட்டித் தரப்பட்டுள்ளன.

158—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 48567—திரு. டி.பி. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், பனைக்குளம் கிராமத்திற்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஒன்றியம், பனைக்குளம் ஊராட்சியில் உள்ள பனைக்குளம் குடியிருப்பில், 1993 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்துவரும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டம் மூலம் அத்தியாவசியத் தேவைக்குப் போதுமான குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்போதைய மக்கள் தொகைக்கு ஏற்ப மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கொள்ளளவு உள்ளதால், புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

**159—**

## புதிய பேருந்து நிலையம்

**வினா எண் 48603—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, வந்தவாசி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வந்தவாசி நகராட்சியால், வந்தவாசி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**160—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 48777—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருவாசி-பாச்சூர் இடையேயான பங்குனி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தர அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் இந்தப் பாலம் எஸ்.ஜி.ஆர்.ஒய்.-1 திட்டத்தின்கீழ் ரூ.10 இலட்சம் ஒதுக்கீட்டில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

**161—**

## கழிவுநீரை வெளியேற்றுதல்

**வினா எண் 49284—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, பச்சப்பட்டி ஏரியில் கழிவுநீர் தேங்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அக்கழிவு நீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆம். சேலம் மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டம் அமல்படுத்தியவுடன், ஏரியில் கழிவுநீர்க் கலப்பதைத் தடுக்க இயலும்.

[2005 ஏப்ரல் 13

**162—**

## குடிநீர் வசதி

**வினா எண் 49415—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கோபாலசமுத்திரம் ஊராட்சி, சாமியம் தென்றல் நகருக்கு குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், கோபாலசமுத்திரம் ஊராட்சி, மேலவல்லம் முஸ்லீம் தெரு குடியிருப்பைச் சார்ந்த தென்றல் நகர் என்ற பகுதிக்கு, மேலவல்லம் முஸ்லீம் தெரு குடியிருப்பிலுள்ள, 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் 3/2004-ல் செயலாக்கப்பட்டு தேவையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**163—**

## கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

**வினா எண் 50016—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் உதவியுடன் நகர நீர் வழிகளில் விடப்படும் கழிவு நீரை இடைமறித்து, மடைமாற்றி அமைத்து, சுத்திகரிப்பு செய்ய, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கொள்ளளவைக் கூடுதலாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், இதற்காக எவ்வளவு நிதி வழங்கப்பட்டுள்ளது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர நீர் வழிகளில் சுத்திகரிக்கப்படாத கழிவு நீர் கலப்பதைத் தடுக்கும் முகமாக, சென்னை மாநகர நதிகள் பாதுகாப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டு மாநகர நீர் வழிகளில் கலக்கக்கூடிய நீரை இடைமறித்து பெருங்குடி (நாளொன்றுக்கு 54 மில்லியன் லிட்டர்), கோயம்பேடு (60 மில்லியன் லிட்டர்), நெசப்பாக்கம் (40 மில்லியன் லிட்டர்) மற்றும் கொடுங்கையூர் (110 மில்லியன் லிட்டர்) ஆகிய இடங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு கழிவு நீர் சுத்திகரிப்புச் செய்ய பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2004 ஆம் ஆண்டுக்குள் முடிக்க திட்டமிடப்படும்.

**164—**

## பேருந்து நிலையத்தைச் சீரமைத்தல்

**வினா எண் 50086—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் பேருந்து நிலையத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, புதிய பேருந்து நிலையத்தின் ஒரு தளத்தை 2000-2001 ஆம் ஆண்டில் 11-வது நிதிக் குழுவின் மானியமாக ரூ.15.00 இலட்சமும், நகராட்சி பங்குத் தொகையாக ரூ.5.00 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.20.00 இலட்சத்தில் சிமென்ட் தளமாக அமைக்கப்பட்டுள்ளது. எஞ்சிய நகரப் பேருந்துப் பகுதியில் ரூ.4.74 இலட்சம் 11-வது நிதிக் குழுவின் மானியம் பெறப்பட்டு தார்த் தளமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பேருந்து நிலையம் இரண்டு பகுதிகளாக சீரமைக்கப்பட்டுள்ளது.

[2005 ஏப்ரல் 13

**165—**

## கொசுக்களை ஒழித்தல்

**வினா எண் 50102—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் கொசுக்களை அழிக்கவும் அதனால் பரவும் நோய்களைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியால் கொசுக்களை ஒழிப்பதற்கு பிளைடேக்ஸ் (fly tax) மருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொசுப்புகை மருந்து அவ்வப்போது அடிக்கப்பட்டு, கொசு ஒழிப்புப் பணி சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது.

**166—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 50543—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கோரிகாடு பகுதிக்கு, குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதி, கோரிகாடு பகுதிக்கு, சட்டமன்ற உறுப்பினர் திரு. மு. கார்த்தி அவர்கள் வழங்கிய



2005 ஏப்ரல் 13]

அபிவிருத்தித் திட்ட நிதி ரூ.2,40,000/-ல் புதியதாக பகிர்மானக் குழாய்கள் அமைக்கப்பட்டு 12 பொதுக் குடிநீர்க் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**167—**

## விபத்துக்களைத் தடுத்தல்

**வினா எண் 50681—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநகரில் குடிநீர் விநியோகிக்கும் லாரிகளால் அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது, ஏறத்தாழ 4,300 லாரிகளை சென்னைப் பெருநகர் உபயோகத்திற்கும், வெளியூர்களிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதற்கும் உபயோகப்படுத்துகின்றன. இதில் 7,500 லாரி நடைகள் மூலம் சென்னைக்கு நீர் கொண்டுவரப்படுகிறது. 10,000 லாரி நடைகள் மூலம் உள் விநியோகம் தொட்டிகள் நிரப்பியும், நேரடியாகவும் வழங்கப்படுகின்றன. இவ்வளவு அதிக எண்ணிக்கையில் லாரி நடைகள் உள்ளதால் விபத்துக்களைக் கட்டுப்படுத்த ஒப்பந்தத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படும் லாரிகளுக்கு பல நிர்ணயக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு கடுமையாக பின்பற்றப்படுகின்றன.

**168—**

## பூங்கா

**வினா எண் 50746—திரு. வி.கே. இலட்சுமணன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான 32 ஏக்கர் பரப்பில் இருந்த பழைய உரக்கிடங்கை பூங்காவாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஆம். கோவை மாநகராட்சிக்குச் சொந்தமான 32 ஏக்கர் நிலப்பரப்பில் இருந்த பழைய உரக்கிடங்கின் ஒரு பகுதியில் பூங்கா மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**169—**

### ஊராட்சி ஒன்றியம்

**வினா எண் 53358—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட, துத்திப்பட்டு ஊராட்சியினைச் சுற்றியுள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து துத்திப்பட்டு ஊராட்சி ஒன்றியமாக ஒருங்கிணைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டு ஊராட்சி ஒன்றியம், வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட துத்திப்பட்டு ஊராட்சியினைச் சுற்றியுள்ள ஊராட்சிகளை ஒன்றிணைத்து துத்திப்பட்டு ஊராட்சி ஒன்றியமாக அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**170—**

### சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 53425—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் குளத்தில் கோவை மாநகராட்சியின் கழிவுநீர் கலந்து சுற்றுப்புறச்சூழல் மற்றும் படகு இல்லம் பாதிப்படைவதைத் தடுத்து சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சிங்காநல்லூர் குளத்தில் கலந்து வரும் கழிவுநீரினை சுத்திகரிக்கச் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குப் பதிலாக கழிவுநீரை குளத்தில் கலக்காதவண்ணம் தடுத்து வெளிப்புறம் உள்ள கால்வாயில் செல்லுமாறு வழிவகை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**171—**

### செயற்கை மழை

**வினா எண் 53508—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலுக்குள் காற்றைச் செலுத்தி செயற்கை மழை பெய்ய வைக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலுக்குள் காற்றைச் செலுத்தி செயற்கை மழையை உருவாக்கும் மூன்று விதமான சோதனை முறை பற்றிய விவரங்கள், திரு. மோகன சுகுமார், ராணிப்பேட்டை அவர்களிடமிருந்து பெறப்பட்டன. ஆனால் கடலுக்குள் காற்றைச் செலுத்தி செயற்கை மழையை பெய்ய வைக்கும் விவரம் தற்போது புழக்கத்தில் இல்லை. மேலும், அடர்த்தியான கரும் மேகங்களில் சில்வர் அயோடைடு பொடியினை தெளித்து மேகத்தை குளிர்வித்து மழை பெய்வித்த முறை தான் தெரியவந்து முயற்சி எடுக்கப்பட்டது. திரு. மோகன சுகுமார் தெரிவித்துள்ள மழையை உருவாக்க கூறிய வழிமுறைகள் நன்மதிப்பு

பெற்ற ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் பரிசோதிக்கப்பட்டு, நடைமுறையிலும், பொருளாதார ரீதியிலும் செம்மையாக செயல்படுத்த இயலும் என்று உறுதிசெய்யப்பட்ட பின்னரே அச்சோதனை முறைகளை மக்களின் நலனுக்காக செயல்படுத்த இயலும்.

**172—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 53740—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் வால்பாறை பேரூராட்சி மூலமாக பேருந்து நிலையம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடத்தில் வால்பாறை பேரூராட்சி மூலமாக பேருந்து நிலையம் கட்ட அரசிடம் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**173—**

## கோளரங்கம்

**வினா எண் 54028—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவை மாநகராட்சி, 10-வது வார்டு ஜி.வி. குடியிருப்பு பகுதியில் மத்திய அரசின் நிதி உதவியோடு அமைக்க உள்ள கோளரங்க திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கோவை மாநகராட்சி மூலம் கோளரங்கம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

**174—**

## ஊக்கத் தொகை

**வினா எண் 31120—திரு. ராதாரவி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் உடல் ஊனமுற்றோருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். திட்டம் உள்ளது.

(ஆ) அரசாணை நிலை எண் 142, கல்வித் துறை, நாள் 3-3-1994-ன்படி தற்போது மனவளர்ச்சி குன்றிய, வாய் பேச இயலாத மற்றும் காது கேளாதோர் சர்வதேச அளவில் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் பெற்றால் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது:

| | | |
|---|---|---|
| முதலிடம் | - | ரூ.50,000/- |
| இரண்டாமிடம் | - | ரூ.30,000/- |
| மூன்றாமிடம் | - | ரூ.20,000/- |
| பங்குபெறுதல் | - | ரூ. 1,000/- |

175—

## பயிற்சி அளித்தல்

**வினா எண் 35187—திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரர்களை உருவாக்கிட பயிற்சி அளிக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். திட்டங்கள் உள்ளன.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கிரிக்கெட் விளையாட்டில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களை தகுதி அடிப்படையில் 8, 9, 11 வகுப்புகளில் தேர்வு செய்து தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்பட்டு வரும் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசன் விளையாட்டுப் பள்ளியில் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கு என்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற, கிரிக்கெட் பயிற்றுநர் மூலம் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்பொழுது பள்ளி மாணவர்களிடையே கிரிக்கெட் விளையாட்டின்மீது ஏற்பட்டுள்ள ஆர்வத்தை வளர்க்கும் வகையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், 'கிரிக்கெட் அகாடமி' ஒன்றை சென்னையில் அசோக் நகர், அரசினர் மேல்நிலைப்பள்ளி, புதூரில் தொடங்கியுள்ளது. மேற்படி அகாடமியில் மாணவர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்களுக்கு என்.ஐ.எஸ். பயிற்சி பெற்ற பயிற்றுநர்கள் மூலம் விஞ்ஞான ரீதியில் பயிற்சியளிக்கப்படுகிறது. விடுமுறைக் காலங்களில் சிறப்புப் பயிற்சி முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

176—

## விளையாட்டுப் போட்டிகள்

**வினா எண் 35951—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) முதலமைச்சர் நிவாரண நிதியை அதிகரிக்க கலை உலக நட்சத்திரங்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து விளையாட்டுப் போட்டிகள் (கிரிக்கெட்) நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) முதலமைச்சர் நிவாரண நிதியை அதிகரிக்க கலை உலக நட்சத்திரங்களும் சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து விளையாட்டுப் போட்டிகள் (கிரிக்கெட்) நடத்த அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) நிகழ்வு எழவில்லை.

177—

## விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம்

**வினா எண் 36941—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கள்ளிப்பாளையம் (மோகனூர் ஒன்றியம்) கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, கள்ளிப்பாளையம் (மோகனூர் ஒன்றியம்) கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

[2005 ஏப்ரல் 13

**178—**

## விளையாட்டு மையம்

**வினா எண் 48872—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி நகரில் விளையாட்டு சாதனங்களுடன் கூடிய விளையாட்டு மையம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் விளையாட்டு சாதனங்களுடன் கூடிய விளையாட்டு மையம் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**179—**

## கால்பந்து போட்டி

**வினா எண் 58756—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் பெண்கள் கால்பந்துப் போட்டி நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் விளையாட்டினை ஊக்குவிக்க வெவ்வேறு துறையினர் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளுடன் பெண்களுக்கான கால்பந்துப் போட்டிகளை நடத்தி வருகின்றனர். கோவை மாவட்டம், வால்பாறையில் பெண்கள் கால்பந்துப் போட்டிகளை தனியாக நடத்திடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**180—**

## ஓடு தளம்

**வினா எண் 59717—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாநகரில் உள்ள சிதம்பரம் பூங்கா நேரு விளையாட்டு மைதானத்தில் ஓடு தளம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாநகரில் உள்ள சிதம்பரம் பூங்கா நேரு விளையாட்டு மைதானத்தில் 400 மீ. தட கள ஓடுபாதையுடன், கால்பந்து, வளைகோல்பந்து ஆடுகளம், வெளி விளையாட்டு மைதானம் மற்றும் பல்வகை உடற்பயிற்சி மையம் ஆகிய விளையாட்டு வசதிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிலை எழவில்லை.

# இணைப்பு – II

*(52 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## உடுக்குறியிடாத வினாக்கள்*

## பட்டியல் 19

**1—**

### மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 62877—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலை வட்டம், திருமூர்த்தி மலையை மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* உடுமலை வட்டம், திருமூர்த்தி மலையானது, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பகுதியின்கீழ் ஏற்கெனவே சேர்க்கப்பட்டுள்ளது. தற்போது, இத்திட்டத்தின்கீழ், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆலந்துறை நீர்பிரி முகடு பகுதியில் (Alandhurai Watershed) பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நீர்பிரி முகடில் மேற்கொண்ட பணிகள் முடிந்த பின்னரே, திருமூர்த்தி மலைப் பகுதியில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**2—**

### மேம்பாட்டுத் திட்டப் பணிகள்

**வினா எண் 62878—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

* இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.





உடுமலை வட்டம், உடுமலை, அமராவதி வனப்பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் கடந்த மூன்று ஆண்டுகளில் எந்தெந்தப் பகுதிகளில் நடைபெற்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்:**

உடுமலை வட்டம், உடுமலை, அமராவதி வனப்பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த மூன்று ஆண்டில் கீழ்க்கண்ட பணிகள் செயற்படுத்தப்பட்டன:—

| ஆண்டு | அமராவதி சரகம் பணிகளின் விவரங்கள் |
|---|---|
| *2001–2002* | 1. தளிஞ்சி சாலை மேம்படுத்தப்பட்டது. |
| | 2. கல்லாபுரம்–மாந்தரை சாலை பராமரிப்பு. |
| | 3. மஞ்சம்பட்டி மற்றும் நபலோடை பகுதிகளில் வேட்டைத் தடுப்பு காவலர்களின் முகாம் நடத்தப்பட்டது. |
| | 4. அமராவதி சரகம் தீ தடுப்புக் கோடுகள் அமைக்கப்பட்டன. |
| *2002–2003* | 1. மஞ்சம்பட்டி முதல் மூங்கில் பள்ளம் வரை (17 கி.மீ.) தீ தடுப்புக் கோடு வெட்டப்பட்டது. |
| | 2. மாந்தரை சாலை முதல் கல்லாபுரம் வரை சாலை மேம்பாடு செய்யப்பட்டது. |
| *2003–2004* | 1. அமராவதி கீழாவையல் டிரெக்கிங் ஷெட் தரை பகுதியில் டைல்ஸ் பதிக்கப்பட்டது. |
| | 2. அமராவதி சரகம் வனவர் குடியிருப்பு மற்றும் ஓய்வு விடுதி மேம்பாடு செய்யப்பட்டது. |
| | 3. அமராவதி சரகம் முதலைப் பண்ணையில் மோட்டார் பொருத்தப்பட்டது. |

[2005 ஏப்ரல் 13

**உடுமலை சரகம்**

| ஆண்டு | பணிகளின் விவரங்கள் |
| --- | --- |
| 2001–2002 | 1. புங்கன் ஓடை முதல் காமனூத்து வரை (5 கி.மீ.) சாலை பராமரிக்கப்பட்டது. |
| | 2. சின்னார் முதல் கோடந்தூர் கோயில் வரை (5 கி.மீ.) சாலை பராமரிக்கப்பட்டது. |
| | 3. உடுமலை சரகம் தீ தடுப்புக் கோடுகள் வெட்டப்பட்டது. |
| | 4. உடுமலை சரகம் மாறுப்பட்டி வாட்டர் ஷெட் தடுப்பணை கட்டுதல். |
| 2002–2003 | 1. குழிப்பட்டி முதல் குருமலை வரை சாலை மேம்பாட்டுப் பணி. |
| | 2. உடுமலை சரகம் தீ தடுப்புக் கோடு வெட்டப்பட்டது. |
| 2003–2004 | 1. திருமூர்த்தி மலை, பஞ்சலிங்கம், கோடந்தூர் சுற்றுலா பயணிகள் வரும் பகுதிகளில் சுகாதார வசதி செய்யப்பட்டது. |
| | 2. கோடந்தூர் ரோடு மற்றும் புங்கன் ஓடை காமனூத்து சாலை மேம்படுத்தப்பட்டது. |
| | 3. உடுமலை சரகத்தில் வேட்டை தடுப்பு முகாம் நடத்தப்பட்டது மற்றும் மழைநீர் சேமிப்பு குழி வெட்டப்பட்டது. |

**3—**

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 33908—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதியில் இயங்கும் நியாய விலைக் கடைகள் மொத்தம் எத்தனை?

(ஆ) பகுதி நேரக் கடைகள் எத்தனை?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) செங்கல்பட்டு தொகுதியில் மொத்தம் 154 நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன.

(ஆ) அவற்றில் 43 பகுதி நேர கூட்டுறவு நியாய விலைக் கடைகளாகும்.

**4—**

## சங்கத்தின் உறுப்பினர்

**வினா எண் 34444—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், வேலூர் கந்தசாமி கவுண்டர் கல்வி நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவுச் சிக்கன நாணயச் சங்கத்தின் உறுப்பினர் எத்தனை பேர்?

(ஆ) இச்சங்கத்தின் 2000–2001, 2001–2002–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுகள் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், வேலூர் கந்தசாமி கவுண்டர் கல்வி நிறுவனங்களின் பணியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 16–6–2004 தேதியில் 322 உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஆ) இச்சங்கத்தில் 2000–2001, 2001–2002, 2002–2003 மற்றும் 2003–2004 ஆண்டுகளில் வரவு செலவு விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | வரவு | செலவு |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2000–2001 | 66.65 | 60.83 |
| 2001–2002 | 128.14 | 122.12 |
| 2002–2003 | 297.11 | 297.11 |
| 2003–2004 | 209.32 | 209.32 |

5—

### நியாய விலைக் கடை செப்பனிடல்

**வினா எண் 57077—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, சவரங்காடு மஸ்தர் அரிசி மண்டி மற்றும் சிறுகுன்றா எஸ்டேட்டில் உள்ள ரேஷன் கடையையும் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை வட்டம் – சவரங்காடு மற்றும் சிறுகுன்றா நியாய விலைக் கடைகளை காட்டு யானைகள் தொடர்ந்து நான்கு முறை தாக்கியதில், சிறுகுன்றா எஸ்டேட்டிற்கு சொந்தமான கட்டடங்கள் முழுவதும் சேதமடைந்து விட்டன. மேற்படி இரு இடங்களை எஸ்டேட் நிர்வாகம் தலைமை அலுவலகத்தில் அனுமதிபெற்று சரி செய்து தருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அடிக்கடி காட்டு யானைகள் மேற்படி நியாய விலைக் கடையை அரிசியின் வாசனையினை மோப்பம் பிடித்து தாக்குவதால் அருகிலுள்ள தொழிலாளர் குடியிருப்பில் உள்ள தொழிலாளர்களின் உயிருக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியுள்ளது என எஸ்டேட் நிர்வாகம் தெரிவித்துள்ளது. எனினும் தொழிலாளர்களுக்கு ரேஷன் பொருட்கள் வழங்குவதற்கு சிந்தாமணி நியாய விலைக் கடைக்கு எஸ்டேட் லாரியை அனுப்பி, ரேஷன் பொருட்களை எடுத்து வந்து எஸ்டேட் தொழிலாளர்களுக்கு தங்கு தடையின்றி வழங்கப்பட்டு வருகின்றது.*





6—

### சொசைட்டியின் கிடங்கை புதுப்பித்தல்

**வினா எண் 64359—திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உடுமலை வட்டம், மார்க்கெட்டிங் சொசைட்டியின் கிடங்கு பழுதடைந்துள்ளதை புதுப்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலை மார்க்கெட்டிங் சொசைட்டியின், விதை பெருக்குத் திட்டத்திற்காக 1983–84 ஆம் ஆண்டு அரசின் நிதியுதவி பெற்று கிட்டங்கி கட்டப்பட்டது. விதை பெருக்குத் திட்டம் தோல்வியடைந்துவிட்டதால், விதை உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதனால் இக்கிட்டங்கி சங்கத்தால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. இக்கிட்டங்கிக்காக அரசிடமிருந்து பெற்ற கடன் மற்றும் வட்டித் தொகையினை திருப்பிச் செலுத்தும்பொருட்டு கட்டடம், கிட்டங்கி மற்றும் காலி இடங்களை விற்பனை செய்ய இச்சங்க நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்வதால், மேற்படி சங்கத்தின் கிட்டங்கியினை புதுப்பிக்கும் வாய்ப்பு இல்லை.*

7—

### திருக்கோயிலுக்குக் கட்டடம்

**வினா எண் 59674—திரு. நா. சந்திரமோகன் :** *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2005 ஏப்ரல் 13

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் காந்தி நகரிலுள்ள கன்னி அம்மன் கோயிலுக்கு கட்டடம் கட்டித்தர, அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், கடவாசல் காந்தி நகரிலுள்ள கன்னி அம்மன் திருக்கோயில் ஆதிதிராவிடர் வாழும் பகுதியில் உள்ளது. இதன் நிர்வாகம் கிராமப் பொது மக்கள் பொறுப்பில் உள்ளது. இத்திருக்கோயில் துறை கட்டுப்பாட்டில் இல்லாத, நிதி வசதியில்லாத திருக்கோயிலாகும். அரசால் அறிவிக்கப்பட்ட நலத் திட்டங்களின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள 250 திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் திருப்பணி நிதியுதவியாக ஒரு ஆலயத்திற்கு தலா ரூ.25,000/– வழங்கப்பட்டு வருகிறது. 2003–2004 ஆம் நிதியாண்டில் மட்டும் சிறப்பு இனமாக 6,000 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டங்கள் மூலமாக, சீர்காழி தொகுதியில் மட்டும் 33 திருக்கோயில்களுக்குத் திருப்பணி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிதியுதவி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியுள்ள நிலையில், சீர்காழி தொகுதியில் உள்ள எல்லா திருக்கோயில்களுக்கும் ஒட்டுமொத்தமாக ஒரே நேரத்தில் நிதியுதவி வழங்க இயலாது என்பதால், மேற்காணும் திருக்கோயிலுக்கு நிதியுதவி வழங்க இயலாத நிலை உள்ளது.

**8—**

## குளங்களைத் தூர்வாருதல்

**வினா எண் 61543—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

அறந்தாங்கி தொகுதி, கீழச்சேரி ஊராட்சியில் ஆராவயல் ஐயனார் கோயில், விளானூர் ஊராட்சியில் வங்க நகரம் காமாட்சியம்மன் கோயில் மற்றும் திருப்புனவாசல் ஊராட்சி ஐயனார் கோயில் ஊரணிகளை மராமத்து செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், கீழச்சேரி ஊராட்சி, ஆராவயல் அருள்மிகு ஐயனார் கோயிலும், குட்டையும் அரசு புறம்போக்கில் உள்ளதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இக்குளம் மே 2004–லிலும், வங்க நகர் அருள்மிகு காமாட்சியம்மன் திருக்கோயில் திருக்குளம் 2004 ஆம் ஆண்டிலும், திருப்புனவாசல் அருள்மிகு ஐயனார் கோயில் குளம் 2004 ஆம் ஆண்டிலும் ஊரக வளர்ச்சித் துறை மூலம் சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் தூர் வாரப்பட்டு, தற்போது நீர் நிறைந்து பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளன.

**9—**

## குளங்களைத் தூர்வாரி படித்துறை அமைத்தல்

**வினா எண் 61546—திரு. ப. அரசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பாக்குடி, ஸ்ரீ காத்தாயி அம்மன் கோயில், விஜயபுரம் ஊராட்சி, கண்ணா ஊரணி, காளிகோயில் மற்றும் சுப்பிரமணியபுரம் ஊராட்சி, சித்தக்கண்ணி பிள்ளையார் கோயில் மற்றும் பிள்ளையார் கோயில் குளங்களை மராமத்து செய்து படித்துறை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, பாக்குடி, அருள்மிகு ஸ்ரீ காத்தாயி அம்மன் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகைக்குட்படாத சிறிய ஆலயமாகும். இத்திருக்கோயில்

திருக்குளத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலமாக மராமத்துப் பணி நடைபெறுகிறது. விஜயபுரம் ஊராட்சி, கண்ணா ஊரணி, காளிகோயில், சம்பூர்ண கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ், ஏப்ரல் 2003-ல் ஊரக வளர்ச்சித் துறை மூலம் தூர் வாரப்பட்டு, தற்போது நீர் நிறைந்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. சுப்பிரமணியபுரம் ஊராட்சி சித்தக்கண்ணி பிள்ளையார் கோயில் குளத்தின் கீழ்க்கரையிலும், தெற்கு கரையிலும், படித்துறை கட்டப்பட்டுள்ளது. இக்குளம் ஊராட்சி பராமரிப்பில் உள்ளது. குளத்தில் தற்போது நீர் நிறைந்து கிராம மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

**10—**

### கருணை இல்லங்கள்

**வினா எண் 65751—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாமக்கல் மாவட்டத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் கருணை இல்லங்கள் எங்கெங்கு செயல்பட்டு வருகின்றன?

*(ஆ)* இதனால் பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ)* நாமக்கல் மாவட்டத்தில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் சார்பில் கருணை இல்லங்கள் செயல்படவில்லை.

*(ஆ)* எழவில்லை.

**11—**

### கழிப்பறை வசதி

**வினா எண் 51240—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ)* சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், பெருமங்கலம், புங்கனூர், வைத்தீஸ்வரன் கோயிலில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சீர்காழி தொகுதியில் மேற்படி இடங்களில் முழு சுகாதார இயக்கத்தின்கீழ் அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

*(ஆ)* இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

**12—**

### கழிப்பறை வசதி

**வினா எண் 51245—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி தொகுதி, நெப்பத்தூர், எடக்குடி, வடபாதி, கதிராமங்கலம், திட்டை மற்றும் தில்லைவிடங்கள் முதலிய இடங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு கழிப்பறை வசதி செய்ய அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* சீர்காழி தொகுதியில் மேற்படி இடங்களில் முழு சுகாதார இயக்கத்தின்கீழ் அங்கன்வாடி மையங்களில் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

*(ஆ)* இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

[2005 ஏப்ரல் 13

13—

## சுய தொழில் தொடங்க கடன்

**வினா எண் 22586—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001–2002 ஆம் நிதியாண்டில் பாரதப் பிரதமர் நிதியுதவி திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க கடன் கோரி வந்த மனுக்கள் எத்தனை?*

*(ஆ) அவற்றில் கடன் வழங்க தேர்வு செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் பாரதப் பிரதமரின் நிதியுதவி திட்டத்தின்கீழ் சுய தொழில் தொடங்க கடன் கோரி 105 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன.*

*(ஆ) அவற்றில் 80 நபர்களுக்கு வங்கிகளில் கடனுதவி வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அவர்களில் வங்கிகளால் 34 நபர்களுக்கு ரூ.11.39 இலட்சத்திற்கான தற்காலிக ஒப்புதல் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் 28 நபர்களுக்கு வங்கிகளால் ரூ.9.87 இலட்சம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.*

14—

## தொழில்நுட்பப் பூங்காக்கள்

**வினா எண் 64801—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் மகளிர் தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்தில் மகளிர் தொழிற் பூங்காக்கள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைக்க அரசு நிலங்கள் ஏதும் கைவசம் இல்லை. 20–க்கும் குறையாமல் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள் முன்வைப்புத் தொகையுடன் முன் வந்தால், மாவட்ட தொழில் மையம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை பெற்று தகுதியான புறம்போக்கு நிலம் தேர்வு செய்யப்பெற்று தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

15—

## வேலைவாய்ப்பை உருவாக்குதல்

**வினா எண் 65791—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலை வட்டத்தில், மலைப் பகுதியில் மல்பரி சாகுபடி திட்டத்தில், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) தளிஞ்சி, தோடந்தூர் மலை வாழ் மக்கள் பகுதியில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP) நீலகிரி மாவட்டத்தில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் உடுமலைப்பேட்டை பகுதியில் மாநிலத் திட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் மல்பரி சாகுபடி மற்றும் வேலைவாய்ப்புகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளதால், உடுமலைப்பேட்டை வட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் மல்பரி சாகுபடி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

[2005 ஏப்ரல் 13

(ஆ) தளிஞ்சி, தோடந்தூர் பகுதிகளில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் மூலம் செயல்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**16—**

## பட்டுப்புழு வளர்க்கும் பயிற்சி

**வினா எண் 66053—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் இரண்டாவது தொகுதியில் உள்ள பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு அரசு மூலம் பட்டுப்புழு வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் 2-வது தொகுதி உட்பட சேலம் மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களிடையே பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்வதற்கு ஏதுவாக மல்பரி பயிர் சாகுபடி செய்திட பாசன வசதியுடன் கூடிய தோட்டம் இருக்குமானால், அவர்களுக்குப் பட்டு வளர்ப்புத் தொழில் மேற்கொள்ளத் தேவையான பயிற்சிகள் அனைத்தும் உடனடியாக வழங்கப்படும்.

**17—**

## சமையல் எரிவாயு

**வினா எண் 16587—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் வாழும் மலைவாழ் மக்களின் நலன் கருதி சமையல் எரிவாயு இணைப்புக் கடன் திட்டத்தின்கீழ் வட்டியில்லாமல் சமையல் எரிவாயு வழங்க அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

இல்லை.

**18—**

## கட்டடம் கட்டும் திட்டம்

**வினா எண் 21105—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரில் சாலையோரத்தில் காலணி செய்யும் மற்றும் பழுதுபார்க்கும் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் நிலையான இடமின்றி சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு கட்டடம் கட்டித் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(இ) எப்போது அரசு கட்டித் தரும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) நாமக்கல் நகரில் அருந்ததியர் சமூகத்தைச் சார்ந்த சுமார் 50 குடும்பங்கள் சாலையோரங்களில் போக்குவரத்திற்கு இடையூறாக வசித்து வருகின்றனர். இவர்களுக்கு மாற்று இடங்களில் வீடுகள் அமைக்க போதிய அரசு நிலம் கிடைக்கப்பெறாததாலும், வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்ட பெறப்படும் கடன் தொகை ரூ.16,000/-ஐ திரும்பச் செலுத்தவும், முன்பணமாக ரூ.4,000/- செலுத்தவும் இக்குடும்பங்கள் முன்வராததாலும் கட்டடம் கட்டும் திட்டம் செயல்படுத்த இயலவில்லை.

**19—**

## ஆதிதிராவிடர்களுக்குக் கடன் உதவி

**வினா எண் 41967—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2001–2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் போக்குவரத்து, ஸ்டோரேஜ் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் ஆட்டோ வாங்க வங்கி மூலம் எத்தனை ஆதிதிராவிடர்களுக்கு கடன் வழங்கப்பட்டது?*

*(ஆ) அரசு அளித்த மானியத் தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) 2001–2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் போக்குவரத்து, ஸ்டோரேஜ் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திட்டத்தின்கீழ் ஆட்டோ வாங்க 2 ஆதிதிராவிடப் பயனாளிகளுக்குக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.*

*(ஆ) பயனாளிகளின் பங்குத் தொகை உட்பட தாட்கோ மானியம் ரூ.47,500/– விளிம்புத் தொகை ரூ.55,000/– மற்றும் வங்கிக் கடன் ரூ.1,58,750/– ஆக மொத்தம் ரூ.2,75,000/– கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.*

**20—**

## தடுப்புச் சுவர் கட்டுதல்

**வினா எண் 49425—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை தொடக்கப் பள்ளிக்கு தடுப்புச் சுவர் கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிடர் நலத் துறை தொடக்கப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2002–2003 மற்றும் 2003–2004 ஆம் நிதியாண்டுகளில் சாலையோரமாக 280 சதுர அடி நீளத்திற்கு சுற்றுச் சுவர் கட்டப்பட்டும், வாயிலுக்கு இரும்பு கேட் ஒன்றும் பொருத்தப்பட்டும் உள்ளது.*

**21—**

## புதிய வகுப்பறை கட்டுதல்

**வினா எண் 56014—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, மாதானம் மற்றும் கொண்டல் ஊராட்சிகளில் இயங்கிவரும் அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் புதிய வகுப்பறை கட்ட அரசு முன் வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டு புதிய வகுப்பறை கட்ட கூரைக் கட்டடப் பள்ளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு கட்டுமானப் பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டு விட்டதால், நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, மாதானம் மற்றும் கொண்டல் ஊராட்சிகளில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 2004–2005 ஆம் ஆண்டில் புதிய வகுப்பறைகள் கட்ட வாய்ப்பில்லை.*

[2005 ஏப்ரல் 13

**22—**

### டிராக்டர் வழங்குதல்

**வினா எண் 59231—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பகுதியில் வசிக்கும் மலை ஜாதி மக்களுக்கு விவசாயம் செய்ய டிராக்டர் வாங்கித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, டாப்சிலிப் பகுதியில் வசிக்கும் தகுதியுள்ள பழங்குடியின மக்களுக்கு விவசாயம் செய்ய டிராக்டர் வாங்கித் தர தாட்கோ நிறுவனம் தயாராக உள்ளது. ஆனால், இதற்கான விண்ணப்பங்கள் எதுவும் வரப்பெறவில்லை.

**23—**

### ஆய்வுக்கூடங்கள் அமைத்தல்

**வினா எண் 63778—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மாதானம் மற்றும் காரைமேடு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு ஆய்வுக்கூடங்கள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மாதானம் மற்றும் காரைமேடு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வுக்கூடங்கள் அமைக்க தலா ரூ.10.00 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு செய்து முறையே 2-5-2003 மற்றும் 23-8-2004-ல் ஏற்கெனவே ஆணையிடப்பட்டு கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**24—**

### மருத்துவர் நியமனம்

**வினா எண் 38570—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் ஊராட்சி, கால்நடை மருத்துவமனைக்கு உதவி மருத்துவர் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கோமாபுரம் பஞ்சாயத்து யூனியனில் கோமாபுரம் கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர் பதவி ஏற்கெனவே நிரப்பப்பட்டு அங்கு கால்நடை உதவி மருத்துவர் பணிபுரிந்து வருகிறார்.

**25—**

### மருத்துவமனையை தரம் உயர்த்துதல்

**வினா எண் 47131—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*(அ)* சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் மற்றும் குன்னம் ஊராட்சியிலுள்ள கால்நடை கிளை மருத்துவமனையை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 8–12–2004 நாளிட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அரசு ஆணை (நிலை) எண் 148–ல், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. நாகை மாவட்டம், மயிலாடுதுறை கோட்டம், குன்னம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் ஏதும் செயல்படாத நிலையில், அங்கு கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த வாய்ப்பு ஏதுமில்லை.

**26—**

## வெறிநாய் தடுப்பு ஊசி போடுதல்

**வினா எண் 50092—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தில் நாய்கள் அதிகமாக பெருகிவிட்டதால், கிராமங்களில் வீடு வீடாகச் சென்று வெறிநாய் தடுப்பு ஊசி போட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியத்தில் கிராமங்களில் வீடு வீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு, வெறி நாய் தடுப்பு ஊசி போடும் பணி மேற்கொள்ள தற்போது சாத்தியக்கூறுகள்



2005 ஏப்ரல் 13]

இல்லை. இந்நோய்க்கு, அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை கிளை நிலையங்களில் தேவையான சிகிச்சையளிக்கப்படுகிறது.

**27—**

## ஆடு வளர்ப்போர் சங்கம்

**வினா எண் 61486—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் பயன்பெறுவதற்காக ஆடு வளர்ப்போர் சங்கம் தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஏதும் செயல்படாமல் உள்ள நிலையில் தற்போது தமிழ் நாட்டில் பிற்படுத்தப்பட்டோர் பயன்பெறுவதற்காக ஆடு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**28—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 66486—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையார் அணைக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, சோலையார் அணைக்கு அருகில் கால்நடை மருத்துவமனையோ/ கால்நடை மருந்தகமோ செயல்படவில்லை. எனவே, கால்நடை உதவி மருத்துவரை நியமனம் செய்ய சாத்தியக்கூறு இல்லை. மேலும், சோலையார் அணையில் கால்நடை கிளை நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அங்கு ஒரு கால்நடை ஆய்வாளர் நிலை-2 பணிபுரிந்து வருகிறார்.

**29—**

### தண்ணீர்த் தொட்டி

**வினா எண் 36635—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை காடுகளில் வன விலங்குகள் குடிக்க தண்ணீர்த் தொட்டிகள் கட்டுவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓசூர், தருமபுரி, ஈரோடு, சத்தியமங்கலம், கோயம்புத்தூர் வனக் கோட்டங்கள் மற்றும் இந்திரா காந்தி வன உயிரின சரணாலயம் ஆகிய பகுதிகளில் ரூ.76.10 இலட்சம் ஒதுக்கீடு செய்து 79 ஆழ்குழாய்க் கிணறுகள் மற்றும் 79 தண்ணீர்த் தொட்டிகள் அமைத்து, அதன்மூலம் வன விலங்குகளுக்கு காடுகளிலேயே குடி தண்ணீர் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.



2005 ஏப்ரல் 13]

**30—**

### தூர் வாருதல்

**வினா எண் 41408—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கோவிந்தாபுரத்தில் உள்ள அங்குத்தி சுனையை தூர் வாரும் கருத்துரு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) அரூர் தொகுதி, கோவிந்தாபுரம் அங்குத்தி சுனையானது பாறைகளின் நடுவே சிறு, சிறு சுனைகளாக உள்ளதாலும், அவற்றில் நீர் தேங்கி கீழே வழிந்து சென்றுவிடுவதாலும், அவற்றைத் தூர் வாருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததால் சுனையைத் தூர் வாரும் கருத்துரு ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**31—**

### மரங்கள் நடுதல்

**வினா எண் 45477—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியிலுள்ள சோலைக்காட்டுப் பகுதிகளில் வனத்தைப் பெருக்க மரங்கள் நட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் நிதியுதவியுடன் வன வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்தப்படும் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 2003–2004 முதல் 2006–2007 வரை ஐந்தாண்டுகளுக்கு மொத்தம் 1,341 ஹெக்டேர் பரப்பளவில் காடு வளர்ப்புப் பணிகளை மேற்கொள்ள ஆனைமலை வன வளர்ச்சி முகமை, இந்திரா காந்தி வன உயிரின உய்விடக் கோட்டம், பொள்ளாச்சி, கோவை மாவட்டத்திற்கு ரூ.232.01 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்பளிப்பும், அதில் ரூ.45.32 இலட்சம் 2003–2004 ஆம் ஆண்டிற்கு விடுவித்தும் மத்திய அரசு ஆணைகள் வழங்கியதன் அடிப்படையில் சோலைக்காட்டுப் பகுதியைப் பொறுத்தவரையில் பல இன நாற்றுகள் 210 ஹெக்டேரிலும், மூங்கில் நாற்றுகள் 175 ஹெக்டேரிலும், மூலிகை மற்றும் மருத்துவ தாவரம் 62 ஹெக்டேரிலும் நாற்றங்கால்கள் எழுப்பப்பட்டு மொத்தம் 447 ஹெக்டேருக்கு நடவுப் பணிகள் முடிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்திட்டத்தின்கீழ் சோலைக்காட்டுப் பகுதியும் பயனடைகிறது.

**32—**

## மிருகக்காட்சி சாலை

**வினா எண் 51355—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, டாப்சிலிப் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியில் மிருகக்காட்சி சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் ஏற்கெனவே இந்திரா காந்தி வன உயிரின சரணாலயத்தில், இந்திரா காந்தி வன உயிரியல் பூங்கா உள்ளதால் அப்பகுதியில் மிருகக்காட்சி சாலை ஏற்படுத்த தற்பொழுது அவசியம் எழவில்லை.

**33—**

## சுற்றுலாப் பயணிகள்

**வினா எண் 54390—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் உள்ள புல்மலை, வால்பாறை சரகத்தில் தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளைப் பார்க்க அனுமதிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசின் தேசிய விலங்காக அறிவிக்கப்பட்ட வரையாடு அதிகமாக வாழும் இடமாக உள்ளதாலும், தேசிய பூங்காவாக உள்ள வால்பாறை புல்மலை பகுதியை அதன் இயற்கைத் தன்மை மாறாமல் பாதுகாக்க வேண்டியுள்ளதாலும் சுற்றுலாப் பயணிகளை அனுமதிப்பதில்லை.

**34—**

## பறவைகள் சரணாலயம்

**வினா எண் 55752—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பறவைகள் சரணாலயம் அமைப்பது குறித்து திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**35—**

**சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுத்தல்**

**வினா எண் 57123—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியின்கீழ் மூவர்க்கரையை சுற்றி இறால் பண்ணை அமைந்துள்ளதால், குடிநீர் உப்பு நீராக மாறுவதையும், சுற்றுச்சூழல் மாசுபடுவதையும் அரசு அறியுமா?

(ஆ) அவ்விறால் பண்ணையை அப்புறப்படுத்த அரசு முன்வருமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) இறால் பண்ணைகளை முறைப்படுத்தும் அதிகாரம் தேசிய இறால் வளர்ப்புக் குழுமத்திற்கு (National Aquaculture Authority) மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. எனவே, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சியின்கீழ் உள்ள மூவர்க்கரையை சுற்றி அமைந்துள்ள இறால் பண்ணைகளால் குடிநீர் உப்பு நீராக மாறுவது குறித்த பிரச்சினைகள் தொடர்பாக தக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் மேற்படி குழுமம் கேட்டுக்கொள்ளப்பட்டது.



2005 ஏப்ரல் 13]

**36—**

**நிவாரணம்**

**வினா எண் 62655—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை, சிறுகுன்றா சிங்கோனா பகுதியில் காட்டு எருமை தாக்கி தேயிலை தோட்டத் தொழிலாளியைக் கொன்றுவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காட்டு எருமை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கிட வழிவகைகள் இல்லாததால், காட்டு எருமை தாக்கி இறந்த தேயிலை தோட்டத் தொழிலாளி திரு. பாஸ்கரன் என்பவருக்கு நிவாரணம் வழங்க இயலவில்லை.

**37—**

**காடு வளர்ப்பு**

**வினா எண் 62882—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டம், அமராவதி, திருமூர்த்தி மலைப் பகுதியில் சதுப்புநிலக் காடுகள் வளர்க்கும் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டம், அமராவதி, திருமூர்த்தி மலைப் பகுதியில் (கடல் சாரா பகுதி) சதுப்புநிலக் காடுகள் வளர்க்கும் சாத்தியமில்லை.

[2005 ஏப்ரல் 13

**38—**

## மூங்கில் மரத் தோட்டம் வளர்த்தல்

**வினா எண் 62884—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலை வட்டத்தில் வனத் துறை மூலம் மூங்கில் மரத் தோட்டம் வளர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

உடுமலை வட்டத்தில் உள்ள உடுமலை மற்றும் அமராவதி சரகத்தில் 2004–2005 ஆம் ஆண்டு முதல் 2006–2007–வரை காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் வன வளர்ச்சி முகமை மூலம் மூங்கில் மரத் தோட்டங்கள் எழுப்பப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் உடுமலை சரகத்தில் 35 ஹெக்டேரும், அமராவதி சரகத்தில் 25 ஹெக்டேரும் ஆக மொத்தம் 60 ஹெக்டேரில் மூங்கில் தோட்டம் உருவாக்கப்பட உள்ளது. அதன்படி மூன்று நிதியாண்டில் மொத்தம் 180 ஹெக்டேரில் மூங்கில் தோட்டம் எழுப்பப்பட உள்ளது. முதல் கட்டமாக 2004–2005 ஆம் ஆண்டில் 60 ஹெக்டேர் பரப்பளவுக்கு நடவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**39—**

## வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம்

**வினா எண் 1345—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டம் செயல்படுத்தி இந்த நிதியாண்டில் எத்தனை குடும்பங்களுக்கு வீடு வழங்க உள்ளன?

(ஆ) அதன் விவரங்களை அரசு தெரிவிக்குமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசு வீட்டுமனை விரைவு ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் 2001–2002 ஆம் ஆண்டிலிருந்து நடப்பாண்டுவரை வழங்கியுள்ள மனைகள் மற்றும் வீடுகள் பற்றிய விவரம் பின்வருமாறு:—

| ஆண்டு | மனைகள் | வீடுகள் | அடுக்குமாடி வீடுகள் |
|---|---|---|---|
| 2001–2002 | 2,133 | 1,802 | 1,192 |
| 2002–2003 | 4,632 | 1,282 | 611 |
| 2003–2004 | 2,858 | 645 | 395 |
| 2004–2005 | 3,254 | 603 | 557 |
| **மொத்தம்** | **12,877** | **4,332** | **2,755** |

**40—**

## அரசு ஊழியர் குடியிருப்பு ஒதுக்கீடு

**வினா எண் 21097—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சரவணம்பட்டி அரசு ஊழியர் குடியிருப்புகளில் ஏ, பி, சி, டி–பிரிவுகளில் சுமார் 30 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை உடனடியாக ஒதுக்கீடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சரவணம்பட்டி அரசு ஊழியர் குடியிருப்புகளில் ஏ, பி, சி மற்றும் டி பிரிவுகளில் மொத்த

[2005 ஏப்ரல் 13

வீடுகள் 138; அவற்றில் ஒதுக்கீடு செய்யப்பட்டவை 123; காலியாக உள்ளவை 15; தற்போது 4 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, பரிசீலனையில் உள்ளன. பரிசீலனைக்குப்பின் பதிவுமூப்பின் அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்படும். மேலும், இக்குடியிருப்புகளுக்கு விண்ணப்பித்து உரிய ஊதியத் தகுதி இல்லாததால் ஒதுக்கீடு பெறாத விண்ணப்பதாரர்களுக்கு புனைவியல் வாடகை வசூலிப்பதன் பேரில் ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**41—**

## விடுகட்ட கடன் வழங்குதல்

**வினா எண் 32991—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள நடுத்தர மக்களுக்கு வீடுகட்ட கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை தாலுகா, நடுப்பட்டி கிராம மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், இப்பகுதி மக்கள் வீடு கட்ட கடன்பெற ஊத்தங்கரை வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தை அணுகினால் கடனை திருப்பிச் செலுத்தும் திறன் மற்றும் தகுதியின் அடிப்படையில் வீடு கட்ட ரூ.2.00 இலட்சம் வரை கடன் வழங்க அச்சங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**42—**

## விடுகட்டக் கடன் வழங்குதல்

**வினா எண் 38949—திரு. ப. அரசன் :** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

அறந்தாங்கி தொகுதியிலுள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 31–3–2003 வரை வீடுகட்ட கடன் வழங்கியுள்ள நபர்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதியில் உள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் 31–03–2003 வரையில் 5,383 நபர்களுக்கு வீடுகட்ட ரூ.1,126.54 இலட்சம் கடன் வழங்கியுள்ளன.

**43—**

## வட்டி தள்ளுபடி

**வினா எண் 43219—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியிலுள்ள கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறச் சங்கங்களிலிருந்து வீடு கட்ட கடன் உதவி பெற்றவர்கள் தங்களது அசல் தொகையில் பாதிக்குமேல் கட்டியும், அபராத வட்டி, கூட்டு வட்டி என்று வட்டியுடன் கட்ட வேண்டியுள்ளதால், கூட்டு வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து அசல் பாக்கியுள்ள தொகைக்கு உண்டான சாதாரண வட்டியை மட்டும் சேர்த்துக் கட்ட அனுமதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெற்று தவணை தவறியவர்கள் 31–10–2004–க்குள் சங்கத்திற்கு முழுமையாக செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் தள்ளுபடி செய்யப்படும் என அரசு ஏற்கெனவே சலுகை அளித்துள்ளது. எனவே, மேற்கொண்டு கால அவகாசம் நீட்டிப்பது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 ஏப்ரல் 13

44—

## மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 31618—திரு. க. பாரமலை:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த எ. முக்குளம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த எ. முக்குளம் அரசினர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரும் கருத்துரு எதுவும் இதுவரை பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் பெறப்பட்டால் தரம் உயர்த்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட நெறிமுறைகளை அப்பள்ளி பூர்த்தி செய்யும்பட்சத்தில் அரசின் நிதி நிலைக்கேற்ப அப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த பரிசீலிக்கப்படும்.

45—

## நூலகம்

**வினா எண் 36687—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், பாலக்கொல்லை பஞ்சாயத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், பாலக்கொல்லை பஞ்சாயத்தில் உள்ள மக்கள் ஒரு நூலகம் திறக்க



2005 ஏப்ரல் 13]

நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நியந்தனைகளை பூர்த்தி செய்யாததால் நூலகம் அமைக்க இயலவில்லை:—

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்படவேண்டும்.

2. வருங்காலத்தில் நூலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை இலவசமாக வழங்கப்படவேண்டும்.

3. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்படவேண்டும்.

4. ரூ.2,000/- மதிப்புள்ள தளவாடச் சாமான்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

5. ரூ.1,000/- வீதம் செலுத்தி 2 புரவலர்கள் சேர்க்கப்படவேண்டும்.

46—

## மேல்நிலை தேர்வு மையம்

**வினா எண் 39188—திரு. சோ. இராசேந்திரன் :** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் மேல்நிலைப் பள்ளியை அரசு பொதுத் தேர்வு எழுத தேர்வு மையமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மார்ச் 2005 மேல்நிலைத் தேர்வுக்கு எட்டயபுரம், இராஜா மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலைத் தேர்வு மையமாகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

47—

## கல்வித் தரத்தை மேம்படுத்துதல்

**வினா எண் 46111—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

*2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற +2 தேர்வில் தமிழ்நாட்டில் மாணவர்கள் தேர்ச்சி விகிதம் குறைந்துள்ளதால் இதை அதிகரிக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற +2 தேர்வில் தேர்ச்சி விகிதம் குறைந்ததை சரிசெய்ய அரசு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது:—*

*1. தினசரி பள்ளி நேரம் முடிந்தவுடன் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ஒரு மணி நேரம் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.*

*2. கல்வியில் பின்தங்கிய மாணவர்களின் பட்டியல் தயார் செய்யப்பட்டு அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

*3. கடினமாகக் கருதும் பாடப் பகுதிகளுக்கு தீவிர பயிற்சியும், பொதுத் தேர்வுக்கு முன்னர் மாவட்ட அளவில் மூன்று திருப்புதல் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.*

*4. இந்த நடவடிக்கையினால் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாணவர் தேர்வு விகிதம் 1.1% அதிகரித்துள்ளது.*

**48—**

## ஆசிரியர் நியமனம்

**வினா எண் 47441—திரு. ஐ. கணேசன் :** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் விவசாய சம்பந்தமான பாடப் பிரிவு தொடங்கி, ஆசிரியரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*1999–2000 ஆம் கல்வி ஆண்டில் கூடுதலாக 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் +1 மற்றும் +2 நிலையில் வேளாண்மைத் தொழிற்பாடப் பிரிவு தொடங்க அரசாணை வெளியிட்டுள்ளபோதும், சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதுமான நீர் வசதி இல்லாததாலும், கிணறு தூர்ந்த நிலையில் உள்ளதாலும், பள்ளி அமைந்துள்ள பகுதி வறட்சிப் பகுதியாக உள்ளதாலும், விவசாய சம்மந்தமான பாடப் பிரிவு தொடங்க இயலவில்லை.*

**49—**

## தேர்ச்சி சதவிதத்தை அதிகரித்தல்

**வினா எண் 49357—திரு. ஐ. கணேசன் :** *மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*2002–2003 ஆம் கல்வி ஆண்டில் சேலம் மாவட்டத்தில் +2 தேர்வில் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

*2003 மார்ச்/ஏப்ரல் மேல்நிலைத் தேர்வில் சேலம் மாவட்ட சராசரியினை ஒப்பிடும்போது 2002–ஐவிட 2003 ஆம் ஆண்டில் 1.5% தேர்ச்சி குறைந்துள்ளது. 2004 ஆம் ஆண்டு தேர்ச்சி விகிதத்தினை அதிகரிக்க கீழ்க்கண்டவாறு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது:—*

*1. ஐம்பது விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ள பள்ளிகளை தொடர்ச்சியாக சிறப்புக் கவனம் செலுத்தி கண்காணித்து மார்ச் 2004 தேர்வில் மாவட்டத்தில் 50 சதவீதத்திற்கும் குறைவான தேர்ச்சி பள்ளிகள் ஏதும் இல்லை என்ற நிலையை எட்டுவதற்கும் மாவட்ட சராசரி தேர்ச்சி சதவீதத்தை உயர்த்தும்பொருட்டும் முதன்மைக் கல்வி அலுவலரும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் பள்ளிகளைப் பகிர்வு செய்து ஆய்வுகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு அதன்படி பள்ளிகள் அடிக்கடி*

பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டன. மேலும், மேற்படி பள்ளிகளை குறைந்தது மாதம் இருமுறை பார்வையிட்டு, செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து தொடர் கண்காணிப்பு அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டது.

2. இப்பணியின் முன்னேற்றம் குறித்து ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமையன்று ஆய்வு அலுவலர்களின் கூட்டத்தை கூட்டி முன்னேற்றம் குறித்து மேலாய்வு செய்யப்பட்டது. தேர்ச்சி சதவீதம் 50–க்கும் குறைவாக உள்ள பள்ளித் தலைமையாசிரியர்கள் கடந்த ஆண்டைவிட வரும் ஆண்டுகளில் மேல்நிலைத் தேர்வில் அதிக விழுக்காடுகள் பெற ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொண்டனர்.

3. மாலை நேர சிறப்பு வகுப்புகளும், சாத்தியப்படும் இடங்களில் பள்ளியிலேயே இரவு நேரத்தில் படிக்க மாணவர்களுக்கு வசதி செய்தும் கொடுக்கப்பட்டது.

4. ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ள பள்ளிகளுக்கு மாற்றுப் பணியில் ஆசிரியர்கள் நியமித்தும் ஆணை வழங்கப்பட்டது.

5. 2003 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 12,957. தேர்ச்சி விகிதம் 70.93%. 2004 ஆம் ஆண்டு தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை 15,655. தேர்ச்சி விகிதம் 77.33%. 2003 ஆம் ஆண்டைவிட 2004 ஆம் ஆண்டு தேர்ச்சி விகிதம் அதிகரித்து உள்ளது.

**50—**

## சலங்கை, தட்டுக்கழி வழங்குதல்

**வினா எண் 50106—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் இயங்கும் மாவட்ட அரசு இசைப் பள்ளியில் பரதநாட்டியம் கற்கும் மாணவிகளுக்கு சலங்கை மற்றும் தட்டுக்கழி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் இயங்கும் மாவட்ட அரசு இசைப் பள்ளியில் பரதநாட்டியம் கற்கும் மாணவிகளுக்கு சலங்கை மற்றும் தட்டுக்கழி ஆகிய கருவிகள் ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) சீர்காழி மாவட்ட அரசு இசைப்பள்ளி தொடங்கப்பட்ட 1999 ஆம் ஆண்டில், சலங்கை–1, தட்டுப்பலகை–1 (மற்றும்) தட்டுக்குச்சி–8 வழங்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டில் சலங்கை–3, தட்டுப்பலகை–1, தட்டுக்குச்சி–10 வழங்கப்பட்டன.

**51—**

## நாதஸ்வரம் மற்றும் தவில் வழங்குதல்

**வினா எண் 50108—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள அரசு இசைப் பள்ளியில் பாட்டு, தேவாரம், நாதஸ்வரம் பயிலும் மாணவர்களுக்கு சுருதிப்பெட்டி, நாதஸ்வரம் மற்றும் தவில் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி நகரில் உள்ள அரசு இசைப் பள்ளியில் பாட்டு, தேவாரம், நாதஸ்வரம் பயிலும் மாணவர்களுக்கு சுருதிப்பெட்டி, நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய இசைக் கருவிகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) சீர்காழி மாவட்ட அரசு இசைப் பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டான 1999 ஆம் ஆண்டில் சுருதிப் பெட்டி–3, குழித்தாளம்–1, நாதஸ்வரம்–10, தவில்–5 மற்றும் 2004 ஆம் ஆண்டில் சுருதிப்பெட்டி–2, நாதஸ்வரம்–3 ஆகிய இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

[2005 ஏப்ரல் 13

**52—**

### நூலகம்

**வினா எண் 64643—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பொன்பேத்தி, கிருஷ்ணாஷிப்பட்டினம், வெள்ளூர், பெருமருதூர் மற்றும் விளானூரில் நூலகம் அமைத்துத் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, பொன்பேத்தி, கிருஷ்ணாஷிப்பட்டினம், வெள்ளூர், பெருமருதூர் மற்றும் விளானூர் ஆகிய இடங்களில் நூலகம் அமைத்துத் தரும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. மேலும் அவ்விடங்களில் நூலகம் திறக்கக் கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. அப்பகுதியிலுள்ள பொது மக்கள் அந்தந்த பகுதிகளில் பகுதிநேர நூலகம் திறக்க கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்தால் அவ்விடங்களில் பகுதிநேர நூலகங்கள் திறக்க இயலும்.

1. நூலகம் இயங்க வாடகையில்லா இலவசக் கட்டடம் வழங்கப்பட வேண்டும்.

2. சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை இலவசமாக நூலக ஆணைக் குழுவிற்கு பத்திரப்பதிவு செய்து வழங்கப்பட வேண்டும்.

3. தலா ரூ.1000/– வீதம் நன்கொடையாக செலுத்தி 2 பேர் புரவலர்களாக சேர வேண்டும்.

4. நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ.15/– ஆண்டு சந்தா ரூ.5/– ஆக மொத்தம் ரூ.20/– வீதம் செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாக சேர வேண்டும்.

5. ரூ.2000/– மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்க வேண்டும்.



2005 ஏப்ரல் 13]

**53—**

### சீரான குடிநீர் வழங்குதல்

**வினா எண் 287—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000–2001 ஆம் ஆண்டு மே மாதம் முடிய எவ்வளவு மேல்நிலைத் தொட்டிகள் குடிநீருக்காக அரசு கட்டி உள்ளது?

(ஆ) இவற்றில் எத்தனை மேல்நிலைத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றி பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 2000–2001 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் 5,940 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளும், நகரப் பகுதிகளில் 91 மேல்நிலைத் தொட்டிகளும் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் ஊரகப் பகுதியில் 5,938 மேல்நிலைத் தொட்டிகளும் நகரப் பகுதிகளில் 91 மேல்நிலைத் தொட்டிகளும் பயனில் உள்ளன.

**54—**

### மானியக் கடன்

**வினா எண் 1343—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைநீரைச் சேகரிக்கும் முறைகளில் பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு மானியக் கடன் அளிக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) வினா எழவில்லை.

**55—**

## குடிநீர் வசதி

**வினா எண் 10517—திரு. கோ. இரவிராஜ்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் கிராம ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குடிநீர் வசதி பெற எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் ஊராட்சி ஒன்றியம், நடுநிலைப் பள்ளியுடன் இணைந்துள்ள சத்துணவு கூடத்திற்கு 2001–2002 ஆம் நிதி ஆண்டிலேயே 500 லிட்டர் கொள்ளளவுள்ள தொட்டி அமைத்து தற்போது நடுநிலைப்பள்ளி மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவற்றிற்கு போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.*

**56—**

## துவக்கப் பள்ளிக்குக் கட்டடம்

**வினா எண் 11162—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், ஈச்சப்பாடி கிராமத்தில் இயங்கிவரும் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2002–2003 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி திட்டத்தின்கீழ் இப்பணி எடுத்து கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.*



**57—**

## புதிய மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி

**வினா எண் 13285—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இண்டூர் கிராமத்தில் பழுதடைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிக்குப் பதிலாக நடப்பாண்டில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், இண்டூர் குடியிருப்பில், ஆறு கையிறைப்பான்கள் மற்றும் 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டம் பயனில் உள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் பழுதுகள் சரி செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. எனவே, புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பற்றி பரிசீலனையில் இல்லை.*

**58—**

## ஆழ்துளைக் கிணறுகள்

**வினா எண் 13382—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி மிகவும் வறட்சிப் பகுதியாக உள்ள கிராமங்களில் போதுமான குடிநீர் வசதியில்லையென்பதால் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதியில் 2002–2003-ல் புதியதாக 90 கைப்பம்புகள், ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் 31 புதிய கைப்பம்புகளும், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் 34 கைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன. பெண்ணாகரம் தொகுதியில்தான் 2002–2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் மாவட்டத்திலேயே அதிகப்படியான ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.*

**59—**

## குடிநீர் வசதி

**வினா எண் 15600—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கொப்பூர் கிராம அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் குடிநீர் வசதியில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உயர்நிலைப் பள்ளிக்கு எப்போது நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியத்தைச் சார்ந்த கொப்பூர் கிராம அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு 2002–2003 ஆம் நிதியாண்டில் 1,000 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.*



2005 ஏப்ரல் 13]

**60—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 15634—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் வட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் அம்பேத்கர் நகர் பகுதிக்கு புதிய மேல்நிலைத் தொட்டி அமைத்து குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கடம்பத்தூர் ஒன்றியம், விடையூர் ஊராட்சி, அம்பேத்கர் குடியிருப்பிற்கு ஒரு கையிறைப்பான், குழாய் நீட்டிப்பு மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் ஆகியவைமூலம் தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, இக்குடியிருப்பிற்குப் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.*

**61—**

## மேல்நிலை தொட்டியை சீர் செய்தல்

**வினா எண் 15640—திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பொன்பாடி, மதுரா, சிவராமபுரம் கிராமத்தில் குடிநீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு உபயோகத்தில் இல்லாதது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மேல்நிலை தொட்டியை சீர் செய்ய எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொன்பாடி ஊராட்சியில் அடங்கிய சிவராமபுரம் கிராமத்தில் எவ்வித மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் இல்லை. எனவே, நீர்த்தேக்கத் தொட்டி உபயோகத்தில் இல்லை என்ற நிலை எழவில்லை. மேலும் பொன்பாடி ஊராட்சியைச் சேர்ந்த ராஜீவ் காந்தி நகரில் கட்டப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் மூலம் சிவராமபுரம் கிராமத்திற்குக் குடிநீர் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

**62—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 19891—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், தாவக்கம்பை ஆதிதிராவிடர் காலனியில் குடிநீர்த் தட்டுப்பாடு இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், குடிநீர்த் தட்டுபாட்டை நீக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி ஒன்றியம், நடுஹட்டி ஊராட்சியிலுள்ள தாவக்கம்பை குடியிருப்பின் ஒரு பகுதி தாவக்கம்பை ஆதிதிராவிடர் காலனி ஆகும். இக்குடியிருப்பிற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் அமைக்கப்பட்ட தடுப்பு அணையிலிருந்து தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 13]

**63—**

**ஊதிய உயர்வு**

**வினா எண் 21191—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள அனைத்து கிராம குடிநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் பராமரிப்பவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடைமுறையிலுள்ள அரசாணையின்படி குடிநீர் பராமரிப்பு பணியாளர்களுக்கு தொகுப்பு ஊதியம் மட்டும் வழங்கப்பட்டு வருகிறது. எனவே அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்க விதிகளில் இடமில்லை.

**64—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 21606—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், பொந்தனூரில் மேல்நிலைத் தொட்டி கட்டி 5 வருடமாகியும் உபயோகப்படுத்தாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்த மேல்நிலைத் தொட்டிக்கு நீரேற்றி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மகுடஞ்சாவடி ஒன்றியம், கன்னந்தேரி ஊராட்சியைச் சார்ந்த பொந்தனூர் குடியிருப்பில் உள்ள 30,000 லிட்டர்

[2005 ஏப்ரல் 13

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 1998-1999 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டு 8/1999 முதலே பயனுக்கு கொண்டு வரப்பட்டது.

பொந்தனூர் குடியிருப்புக்கென 1998 இல் அமைக்கப்பட்ட ஆழ்துளைக் கிணற்றில் நீர் போதுமானதாக இல்லாததால் அதே ஊராட்சியைச் சேர்ந்த கன்னந்தேரி குடியிருப்பிலுள்ள ஆழ்துளைக் கிணற்றில் இருந்து பொந்தனூரில் உள்ள மேல்நிலைத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வழங்கப்பட்டு வந்தது.

மேலும் 10/2003 முதல் பொந்தனூர் குடியிருப்பிற்கு காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்ட இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள 175 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**65—**

### கைபம்பு அமைத்தல்

**வினா எண் 21877—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, கொத்தமல்லிகாரன் கொட்டாய் பகுதியில் கைபம்பு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சி, கொத்தமல்லிகாரன் கொட்டாய் குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 105 ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான் திட்டங்கள் செயலில் உள்ளன. இக்குடியிருப்பிற்கு தற்போது செயலில் உள்ள கையிறைப்பான்களே போதுமானவையாகும்.



2005 ஏப்ரல் 13]

**66—**

### சிறிய குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 21888—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி ஆதிதிராவிடர் காலனிக்கு சிறு தொட்டி (Mini Tank) ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஒன்றியம், பாகல அள்ளி ஊராட்சியில் உள்ள குடியிருப்பின் பெயர் பாகல அள்ளி பழைய ஆதிதிராவிடர் காலனி ஆகும். இக்குடியிருப்பிற்கு மூன்று கையிறைப்பான்கள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் விசைத் திட்டம் ஆகியவை மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**67—**

### சிறு தொட்டி அமைத்தல்

**வினா எண் 21920—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாகல அள்ளி ஊராட்சி, பட்டகப்பட்டியில் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பதால் இங்கு சிறு தொட்டி (Mini Tank) ஒன்று அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாகல அள்ளி ஊராட்சி, பட்டகப்பட்டி குடியிருப்பின் தற்போதைய மக்கள் தொகை 530 ஆகும். இக்குடியிருப்பில் நான்கு கையிறைப்பான் திட்டங்களும் மற்றும் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டம் ஒன்றும் செயலில் உள்ளன. இக்குடியிருப்பின் மக்கட் தொகைக்கு தற்போது செயலில் உள்ள திட்டமே போதுமானதாகும்.*

**68—**

## ஆழ்துளைக் கிணறு

**வினா எண் 22441—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், பக்கநாடு கிராமம், கூப்புக்காடு சன்னாசி மினியப்பன் கோயில்காடு ஆகிய பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளதால், அங்கு ஒரு ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டம், எடப்பாடி ஒன்றியத்தில் பக்கநாடு ஊராட்சிக்கு உட்பட்ட சமாதிப்பாட்டன் கோயில் வளவின் ஒரு பகுதி கூப்புக்காடு ஆகும். இப்பகுதிக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் சமாதிபாட்டன்கோயில் வளவில் உள்ள 30,000 லிட்டர் குடிநீர்த் தொட்டி மூலம் தற்போது காவிரி ஆற்றுநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சன்னாசி மினியப்பன் கோயில்காடு என்பது பக்கநாடு ஊராட்சிக்கு உட்பட்ட மேட்டுத் தெரு குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இப்பகுதிக்கு மேட்டுத் தெருவில் உள்ள 30,000 லிட்டர் குடிநீர்த் தொட்டிமூலம் தற்போது காவிரி ஆற்றுநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் கருத்துரு பரிசீலனையில் இல்லை.*



**69—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 22443—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சியைச் சேர்ந்த காளியாகோயில் அருகில் நாடார்வளவு, தயாளங்காடு மற்றும் ஒருவாப்பட்டி குறுக்குப்பட்டியான்வளவு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர்ப் பற்றாக்குறை உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்க ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சிக்கு உட்பட்ட காளியாகோயில், புளியம்பட்டியின் ஒரு பகுதி ஆகும். இராசிபுரம் எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், புளியம்பட்டியில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இப்பகுதிக்கு 03/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

2) தயாளங்காடு, வெடிகாரன்பாளையம் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இராசிபுரம் எடப்பாடி கூட்டுக் குடிநீர் திட்டத்தின்கீழ், வெடிகாரன்பாளையத்தில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் இப்பகுதிக்கு 03/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

3) ஒருவாப்பட்டி குடியிருப்பில் உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம், இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், 3/2000 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 13

இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. பராமரிப்பிற்கு உரிய தொகையை ஊராட்சி மன்றம் வாரியத்திற்கு செலுத்தினால், பற்றாக்குறையின்றி குடிநீர் வழங்க ஏதுவாய் இருக்கும். எனவே, புதிய குடிநீர்த் திட்டங்கள் இப்பகுதிகளுக்குத் தேவையில்லை.

**70—**

## குடிநீர் பற்றாக்குறை

**வினா எண் 22944—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி கஞ்சா குடிகாடு பகுதி மக்கள் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், சித்தூர் ஊராட்சி, புளியம்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதி கஞ்சா குடிகாடு. இதற்கு இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் நாயக்கர் தெருவில் (ஒண்டிபனை) அமைந்துள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**71—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 26215—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி கிராமம், பாலப்பட்டி செங்கான் வளவில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித்தர அரசு அனுமதி வழங்கியுள்ளதா?*



2005 ஏப்ரல் 13]

*(ஆ) ஆம் எனில், அங்கு இந்நிதியாண்டில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பாலப்பட்டி செங்கான் வளவில் இராசிபுரம் எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தொட்டி கட்ட அரசு அனுமதி வழங்கியது. ஆனால் உள்ளூர் பிரச்சினை காரணமாக மேற்கண்ட இடத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டவில்லை. எனினும், பாலப்பட்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலைத் தொட்டிமூலம், இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், பகிர்மானக் குழாய் வழியாக செங்கான் வளவு பகுதி மக்களுக்கு குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**72—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26657—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், எர்ரபையன அள்ளி ஊராட்சியில் தாசன் கொட்டாய் பகுதி, எம்.கே.எஸ். நகர் பகுதி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், எர்ரபையன அள்ளி ஊராட்சியைச் சார்ந்த தாசன் கொட்டாய் மற்றும்

[2005 ஏப்ரல் 13

எம்.கே.எஸ். நகர் ஆகிய இரு குடியிருப்புகள் ஒவ்வொன்றுக்கும் தலா இரு கையிறைப்பான்கள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. இக்குடியிருப்புகளின் மக்கட்தொகை மிகக் குறைவாக இருப்பதால் வாரிய நெறிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க இயலாது.

**73—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 26662—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், நாகர் கூடல் ஊராட்சியில் பரப்பட்டி கழனி காட்டூர் பகுதி ஆகிய கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நல்லம்பள்ளி ஒன்றியம்–பண்டஅள்ளி ஊராட்சி–பரப்பட்டி குடியிருப்பிற்கு இரண்டு கையிறைப்பான்கள் மற்றும் குழாய் நீட்டிப்பு மற்றும் ஒரு சிறு மின்விசைத் திட்டம் ஆகியவை மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

நல்லம்பள்ளி ஒன்றியம் நாகர் கூடல் ஊராட்சி, கழனிகாட்டூர் குடியிருப்பிற்கு நான்கு கையிறைப்பான்கள் மற்றும் திறந்தவெளிக் கிணறு மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. எனவே, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் கருத்துரு தற்போது இல்லை.

**74—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26664—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

(அ) தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், சோமண அள்ளி ஊராட்சியில் கோரப்பள்ளிகாடு, சோமண அள்ளி காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

1. கோரப்பள்ளி–புதூர். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் மற்றும் ஒரு சிறு மின் விசைப்பம்பு திட்டம் மக்கள் பயனில் உள்ளது. மேலும் சென்ற நிதியாண்டில் (2002–2003) 30,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனில் உள்ளது.

2. சோமன அள்ளி காலனி. இக்குடியிருப்பில் ஒரு சிறு மின் விசைப்பம்பு திட்டம் செயலில் உள்ளது. மேலும் 60,000 லிட்டர் கொள்ளளவு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய தனி மின் விசைப்பம்பு திட்டத்திலிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புக்கு தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.

**75—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 26666—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கோணங்கி அள்ளி ஊராட்சியில் முருகானந்தபுரம் பகுதி மற்றும் தித்தியோப்பன அள்ளி ஊராட்சி, சஞ்சிவிராயன்கோயில் அருகே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஒன்றியம், கோணங்கி அள்ளி ஊராட்சியில் உள்ள முருகானந்தம் பகுதி (எ) கோணங்கி அள்ளி கொட்டாய் குடியிருப்பிற்கு ஒரு சிறு மின்விசைத் திட்டம்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் (2004–2005) நடப்பு நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டம் செயல்படுத்த பரிசீலிக்கப்படும்.

பெண்ணாகரம் ஒன்றியம், தித்தியோப்பன அள்ளி ஊராட்சி, மன்னேரி குடியிருப்பின் ஒரு பகுதியான சஞ்சிவிராயன்கோயில் பகுதியின் மக்கள் தொகை 45 ஆகும். இப்பகுதிக்கு உள்ளாட்சி அமைப்பின் மூலம் ஒரு திறந்த வெளிக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது இப்பகுதி அடங்கிய மன்னேரி குடியிருப்பிற்கு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**76—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 27269—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் ஊராட்சி, கூடலூர் அருந்ததியர் தெருவுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் ஊராட்சியைச் சேர்ந்த கூடலூர் புதுவளவு குடியிருப்பின் ஒரு பகுதி கூடலூர் அருந்ததியர் தெருவாகும்.



2005 ஏப்ரல் 13]

கூடலூர் புதுவளவு குடியிருப்புக்கு இருப்பாளி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் மகுடஞ்சாவடி ஒன்றியத்தைச் சேர்ந்த 175 வழியோர குடியிருப்புகள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தின் மூலமாக ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து பகிர்மானக் குழாய்கள் மூலம் காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டத் தேவையில்லை.

**77—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 27270—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் ஊராட்சி, தேவராயம்பாளையத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கூடலூர் ஊராட்சி, தேவராயம்பாளையம் குடியிருப்பிற்கு அதே ஊராட்சியிலுள்ள கூடலூர் மேட்டுவளவு என்ற குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து 8/2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே அங்கு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**78—**

## மேல்நிலைத் தொட்டி

**வினா எண் 27271—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், கடலூர் ஊராட்சியிலுள்ள மேட்டுக்காடு அருகில் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டி, குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், கடலூர் ஊராட்சியில் உள்ள மேட்டுக்காடு குடியிருப்புக்கு எர்ணாபுரம் ஊராட்சியில் உள்ள சந்தைப்பேட்டை குடியிருப்பில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குழாய் நீட்டிப்பு செய்து காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டத் தேவையில்லை.

**79—**

## குடிநீர் வசதி

**வினா எண் 27273—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் உப்பாரப்பட்டியிலுள்ள ஆழ்துளைக் கிணறுக்கு மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், சமுத்திரம் ஊராட்சிக்குட்பட்ட உப்பாரப்பட்டியில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் காவிரி குடிநீர் 3/2003 முதல் வழங்கப்பட்டு



2005 ஏப்ரல் 13]

வருகிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு நீராதாரத்திற்குத் தனியாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டத் தேவை இல்லை.

**80—**

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 27275—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, சிட்டாங்காடு, மேல்நிலைத் தொட்டியிலிருந்து கோணங்காட்டுப்பகுதி வரை குடிநீர் குழாய் பதித்து, அப்பகுதி மக்களின் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், தங்காயூர் ஊராட்சி, சிட்டாங்காடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, கோணங்காட்டுப்பகுதி வரை, இராசிபுரம்–எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**81—**

## குடிநீர் வசதி

**வினா எண் 27278—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சியில் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதால், அக்கரைப்பட்டி மீன்முட்டு வட்டம் மற்றும் வி. மேட்டுப்பாளையம் சத்தி சாமிகோயில் அருகிலும் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம், கொங்கணாபுரம் ஒன்றியம், வெள்ளாலபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட அக்கரைப்பட்டி மீன்முட்டு வட்டம், அக்கரைப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இக்குடியிருப்பில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 30,000 லிட்டர் கொள்ளளவு உடைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு, இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், காவிரி குடிநீர் ஏற்றப்பட்டு, இப்பகுதிக்கு குழாய் நீட்டிப்பு மூலம் 3/2003 முதல் வழங்கப்படுகிறது.

கொங்கணாபுரம், வெள்ளாலபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட வி. மேட்டுப்பாளையம், சத்தி சாமிகோயில், வெள்ளாலபுரம் குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இக்குடியிருப்பில், இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ், வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம், கட்டப்பட்டுள்ள 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு, இப்பகுதிக்கு 3/2003 முதல் வழங்கப்படுகிறது.

**82—**

## கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**வினா எண் 27373—திரு. கே.எஸ். பழனிசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதி, கருமாண்டி, செல்லிபாளையம், பெருந்துறை இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டச் செயல்பாடுகள் எந்த நிலையிலுள்ளது?

(ஆ) அந்தத் திட்டத்தை உடனே செய்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னிமலை, பெருந்துறை, கருமாண்டி, செல்லிபாளையம், சித்தோடு, நசியனூர் மற்றும் 44 வழியோர கிராம குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர் திட்டம் ரூ. 23.04 கோடி திட்ட அமைப்புச் செலவிலும், ரூ.92 இலட்சங்கள் ஆண்டு பராமரிப்புச் செலவிலும் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண் 42, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 26-5-2003 ஆம் நாளிட்ட அரசாணையில் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு 25-2-2004-ல் பணியேற்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**83—**

## வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

**வினா எண் 28980—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் 2001–2002-ல் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை, குன்றாண்டார் கோவில் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளிட்ட புதுக்கோட்டை தொகுதியில் 2001–2002 ஆம் ஆண்டில், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பாலம், சிறுபாலம் அமைத்தல், சாலை மேம்பாடு செய்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், சிமெண்ட் ரோடு, மெட்டல் ரோடு, தார்ச் சாலை அமைத்தல், கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல், சிறுபாசனக் குளம் அமைத்தல், ஊரணி ஆழப்படுத்துதல், நிழற்குடை அமைத்தல், சமையற்கூடம் கட்டுதல், நூலகக் கட்டடம் கட்டுதல், வரத்துவாரி அமைத்தல் போன்ற பணிகள் ரூ.97,30,379 செலவில் மேற்கொள்ளப்பட்டன.

[2005 ஏப்ரல் 13

**84—**

**படித்துறை கட்டுதல்**

**வினா எண் 29244—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியிலுள்ள அரியலூர் குளத்தைத் தூர்வாரி படித்துறை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மாதானம் ஊராட்சியிலுள்ள அரியலூர் குளத்திற்கு 2004–2005 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய்–2, திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் படித்துறை கட்டி பணி முடிக்கப்பட்டுவிட்டது.

**85—**

**குளம் தூர் வாருதல்**

**வினா எண் 29362—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், புதுத்துறை கன்னிக்கோயில் தெருவிலுள்ள குளத்தைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?



2005 ஏப்ரல் 13]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புதுத்துறை ஊராட்சி, கன்னிக்கோயில் தெருவில் உள்ள குளம் 2002–2003 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் ரூ. 1.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது.

**86—**

**நெல் உலர் களம்**

**வினா எண் 29468—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சியாளம் ஊராட்சியில், சியாளம் கிராமத்தில் நெல் உலர் களம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் சியாளம் கிராமத்தில் நெல் உலர் களம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

**87—**

**குடிநீர் வழங்குதல்**

**வினா எண் 29478—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், பள்ளிப்பேட்டை ஆதி திராவிடர் காலனி தெருவிற்கு மேல்நிலை நிர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரப்பாக்கம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், பள்ளிப்பேட்டை ஊராட்சி, பள்ளிப்பேட்டை ஆதி திராவிடர் காலனிக்கு தற்பொழுது ஒரு கையிறைப்பான் மற்றும் குழாய் நீட்டிப்பின்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்குப் பொது மக்கள் பங்களிப்புடன் கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**88—**

## ஊரணி மராமத்து செய்தல்

**வினா எண் 29719—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, ராசப்பட்டி வெங்கடேசபுரம் கிராமத்திலுள்ள 2–வது ஊரணியை மராமத்து செய்யும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த ராசப்பட்டி ஆர். வெங்கடேசபுரம் கிராமம், 2–வது ஊரணி ஆழப்படுத்தும் பணி 2002–2003 ஆம் ஆண்டு சம்பூர்ண



2005 ஏப்ரல் 13]

கிராமின் ரோஜ்கார் யோஜனா திட்டத்தின்கீழ் ரூ.2,65,356/– மதிப்பீட்டில் வேலை 1–7–2003 அன்று முடிக்கப்பட்டுள்ளது.

**89—**

## குளங்களைச் சீரமைத்தல்

**வினா எண் 30592—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், வலியான்பட்டியில் குளங்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியம், வாலியம்பட்டி ஊராட்சியில் உள்ள வாலியம்பட்டி குடிநீர் ஊரணி 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். சிறப்புக்கூறு திட்டத்தின்மூலம் ரூ. 60,000/– மதிப்பீட்டில் சீரமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

**90—**

## சிமெண்ட் களம் அமைத்தல்

**வினா எண் 30779—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை கிராமத்தில் தானியக் கதிர் அடிக்க சிமெண்ட் களம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை ஊராட்சியில் 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.எஸ்.ஒய்–1 திட்டத்தின்கீழ் ரூ. 60,000/– மதிப்பீட்டில் தானியக் களம் அமைக்கப்பட்டுள்ளது.

**91—**

## மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்

**வினா எண் 31339—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சி, திருவாலியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருவாலி ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

**92—**

## குட்டையை தூர் வாருதல்

**வினா எண் 34060— டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பெரியக்கோட்டை ஊராட்சியில் மோகனூர் கிராமத்தில் உள்ள குட்டையை தூர்வாரி ஆழப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பெரியக்கோட்டை ஊராட்சி, மோகனூர் கிராமத்தில் உள்ள குட்டை 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் ஆழப்படுத்தப்பட்டுள்ளது.

**93—**

## விளம்பரப் பலகைகள் வைத்தல்

**வினா எண் 38309—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி எல்லையில் அனுமதி பெறாமல் விளம்பரப் பலகைகள் வைத்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை எண் 47, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 26–6–2003–ல் விளம்பரப் பலகைகள் தொடர்பாக உரிமம் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி அனுமதியற்ற விளம்பரப் பலகைகளை அகற்றிடவும், வரப்பெறும் விண்ணப்பங்களை முறையாக ஆய்வு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் சேலம் மாநகராட்சி ஆணையர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

[2005 ஏப்ரல் 13

**94—**

### பாதாள சாக்கடைத் திட்டம்

**வினா எண் 38595—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி, கொல்லம்குட்டை ஏரி சாக்கடை நீரால் துர்நாற்றம் ஏற்பட்டு, சுகாதாரக் கேடு ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி கொல்லம்குட்டை ஏரியில் கலக்கின்ற சாக்கடை நீரை மதகுகள் வழியாக வெளியேற்ற துப்புரவுப் பணியாளர்கள்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், சாக்கடை நீரை ஏரியில் கலக்காமல் வெளியேற்றவும் பாதாள சாக்கடைத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**95—**

### சாலை செப்பனிடல்

**வினா எண் 38629—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி எல்லையில் உள்ள எஸ்.எம்.பி. லிவ் ஓ கம்பெனி அருகிலுள்ள சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி எல்லையில் உள்ள எஸ்.எம்.பி. லிவ் ஓ கம்பெனிக்கு அருகிலுள்ள சாலைக்காக ரூ.6.10 இலட்சத்தில் மதிப்பீடு



2005 ஏப்ரல் 13]

வரவழைக்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணியை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**96—**

### சாக்கடை மற்றும் சாலை வசதி

**வினா எண் 38630—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 32–வது கோட்டம், திப்புசுல்தான் மார்க்கெட் பின்புறம் உள்ள குடியிருப்புகளுக்கு சாக்கடை மற்றும் சாலை வசதிகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சீரமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, 32–வது கோட்டம், திப்புசுல்தான் மார்க்கெட் பின்புறம் உள்ள குடியிருப்புகளில் சாக்கடை மற்றும் சாலை அமைக்க சேலம் 1–வது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 2.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது. இப்பணி நடப்பு நிதியாண்டில் செய்து முடிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**97—**

### சாலை சீரமைப்புப் பணி

**வினா எண் 38631—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி, 36–வது வட்டம், பாட்டப்பன் காடு சாலை சீரமைக்கப்படாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், வரும் ஆண்டில் சாலை சீரமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டை மண்டலப் பகுதியில் உள்ள கோட்டம் 36–ல் உள்ள பாட்டப்பன் காடு பகுதியில் சேலம் 1–வது தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி நிறைவேற்ற ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டு பணி விரைவாக நடைபெற்று வருகிறது. 2004–2005 ஆம் நிதியாண்டிற்குள் பணி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.*

**98—**

**மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்**

**வினா எண் 40622—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன் ஊராட்சியிலுள்ள சின்னகொட்டாய் மேடு, கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சியில் 2002–2003 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் மட்டுமே கட்டப்பட்டு வருவதால் மேலும் ஒரு சுய உதவிக் குழு கட்டடம் தாண்டவன்குளம் ஊராட்சி கொட்டாய்மேடு கிராமத்தில் கட்டிக் கொடுக்க இயலாது.*



**99—**

**மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்**

**வினா எண் 40632—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எடமணல் ஊராட்சியிலுள்ள சஞ்சீவராயன் கோயில் என்ற இடத்தில் 2003–2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.*

**100—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 41356—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரூர் தொகுதி, அப்பிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு குடிநீர் வருவதில்லை என்பதை அரசு அறியுமா?*

*(ஆ) குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஊத்தங்கரை ஒன்றியம், கெங்கபோராம்பட்டு ஊராட்சி, அப்பிநாயக்கன்பட்டி குடியிருப்பிற்கு இரு கையிறைப்பான்கள், ஒரு சிறு மின்விசைத் திட்டம் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய தனி மின் விசைத் திட்டம் ஆகியவை மூலம் தற்போது குடிநீர் வழங்கப்படுகின்றது.

**101—**

### சமையல் அறை

**வினா எண் 41642—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், முத்துகோன்பட்டியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சமையல் அறை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளூர் ஊராட்சி, முத்துகோன்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சமையல் அறை கட்டடப் பணியை 2003–2004 ஆம் நிதியாண்டில் எடுத்துச் செய்திட வாய்ப்பில்லை.

**102—**

### குடிநீர் வசதி

**வினா எண் 43868 —திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2005 ஏப்ரல் 13]

நாமக்கல் மாவட்டம், கொந்தளம் ஊராட்சி 5–வது பகுதி பெரிய தோட்டம் மற்றும் மோகனூர் ஊராட்சி ஒன்றியம், அரியூர் ஊராட்சி, கோவில்பட்டி கிராமம் ஆகிய பகுதி மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை ஒன்றியம், கொந்தளம் ஊராட்சி, 5–வது வார்டு, நெட்டையம்பாளையம், பெரிய தோட்டம் குடியிருப்பிற்கு, தனி மின் விசைத் திட்டம் மற்றும் கொந்தளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மோகனூர் ஒன்றியம், அரியூர் ஊராட்சி, கோவில்பட்டி குடியிருப்புக்கு தனி மின் விசைத் திட்டத்தின்மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

**103—**

### குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 43880—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், செங்கப்பள்ளி தெருவிற்கு குடிநீர்த் தொட்டி கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஊராட்சி ஒன்றியம், செங்கப்பள்ளி ஊராட்சி, செங்கப்பள்ளி குடியிருப்பில் 1989 ஆம் வருடம் தனி மின் விசைத் திட்டம் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நீர்த்தேக்கத் தொட்டியே போதுமானதாகும்.

[2005 ஏப்ரல் 13

104—

## குடிநீர் வழங்குதல்

**வினா எண் 43882—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மூர்த்திபட்டி கிராமத்திற்கு சுகாதாரமான குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், சங்கரான்பட்டி ஊராட்சியிலுள்ள மூர்த்திபட்டி அருந்ததியர் காலனியில் செயல்படுத்தப்பட்டுள்ள குடிநீர்த் திட்டத்தின் நீரேற்று குழாயிலிருந்து மூர்த்திபட்டி குடியிருப்பிற்கு குழாய் நீட்டிக்கப்பட்டு, அக்குடியிருப்பில் ஏற்கெனவே உள்ள 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

105—

## குடிநீர் வசதி

**வினா எண் 43907—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், உத்திகாபாளையம் கிராம மக்களுக்கும், துவக்கப் பள்ளிக்கூடத்திற்கும் தேவையான குடிநீர் வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2005 ஏப்ரல் 13]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், உத்திகாபாளையம் குடியிருப்புக்கு காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்ட ஆர்.புதுப்பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் 2002-2003 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட சிறு மின் விசைத் திட்டம் மூலம் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.*

*உத்திகாபாளையம் துவக்கப் பள்ளிக்கூடத்திற்கு 750 லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது.*

106—

## குடிநீர் வசதி

**வினா எண் 43955—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி மக்களுக்கு குடிநீர் வசதி செய்து தர நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், பிராந்தகம் ஊராட்சியிலுள்ள வெள்ளக்கல்பட்டி குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டம் மற்றும் சிறு மின்விசைத் திட்டம் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

[2005 ஏப்ரல் 13

107—

## பள்ளிக்குச் சுற்றுச் சுவர்

**வினா எண் 44297—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுப்புறச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு 2003–2004 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, மேற்கூறிய பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க இயலாது.

108—

## சுய உதவிக் குழுவினருக்குக் கட்டட வசதி

**வினா எண் 44821—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சி, முடவன்குளம் கிராமம் மற்றும் புதுக்குறிச்சி காலனி, ரோஜா சுய உதவிக் குழுவினருக்குக் கட்டட வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

முதற்கட்டமாக, ஒரு ஊராட்சிக்கு ஒன்று என்ற வீதத்தில் புதுக்குறிச்சி கிராமத்தில் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடம் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து கட்டித் தரப்பட்டு



2005 ஏப்ரல் 13]

உள்ளது. எனவே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் ஊராட்சியிலுள்ள முடவன்குளம் கிராமம் மற்றும் புதுக்குறிச்சி காலனி, ரோஜா சுய உதவிக் குழுவினருக்கு கட்டடம் கட்டித் தர வாய்ப்பில்லை.

109—

## பன்றிகளை ஒழித்தல்

**வினா எண் 44857—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் 11, 38, 39, 40, 44 வட்டங்களில் பன்றிகள் தொல்லை அதிகம் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியில் உள்ள வார்டு எண் 11, 38, 39, 40 மற்றும் 44 ஆகிய பகுதிகளில் இருந்த சுமார் 1,869 பன்றிகள் சுடப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அப்பகுதிகளில் தீவிர கவனம் செலுத்தி எவ்விதப் புகாருக்கும் இடம் அளிக்காமல் உடனடியாகப் பன்றிகளைச் சுட்டு அப்புறப்படுத்த சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

110—

## வறட்சி நிவாரணத் திட்டம்

**வினா எண் 46261—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் குளங்களைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதியில் நடப்பு நிதியாண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்பு நிவாரண (சிறப்புக்கூறு) திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட 28 ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் குறைந்தது ஒரு ஊராட்சிக்கு ஒரு ஊரணி என 40 ஊரணிகள்/குளங்கள் தூர்வார அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

**111—**

**மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்**

**வினா எண் 48349 —திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், ஸ்ரீதேவிமங்கலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கட்டட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், ஸ்ரீதேவிமங்கலம் ஊராட்சியில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுவிற்காக மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

**112—**

**குடிநீர்க் குழாய் இணைப்பு**

**வினா எண் 48485 —திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கபிலர்மலை தொகுதி, மோகனூர் அரசினர் பெண்கள் பள்ளிக்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி, குழாய் இணைப்பு அமைத்துத் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் பேரூராட்சியில் அமைந்துள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு அங்குள்ள ஆழ்துளைக் கிணற்றிலிருந்து குடிநீர் வழங்கப்படுகிறது.

**113—**

**கிணறு தூர்வாருதல்**

**வினா எண் 54167—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர் 25-வது பகுதி, துரைசாமி நகரில் உள்ள முருகன் கோவில் நீர்வளம் கிணறுத் தூர்வாரி சுத்தம் செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி 25-வது பகுதி, துரைசாமி நகரில் உள்ள முருகன் கோவில் கிணறு தனியாருக்குச் சொந்தமானதாகும். ஆகவே, இக்கிணற்றை மாநகராட்சியால் தூர்வார இயலாது.

**114—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 54172—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2005 ஏப்ரல் 13

(அ) சேலம் மாநகர் 28-வது பகுதி, சந்தைப்பேட்டை மெயின்ரோடு முதல் பெரியார் நகர் வரை தார்ச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி 28-வது கோட்டம், சந்தைப்பேட்டை மெயின் ரோடு முதல் பெரியார் நகர் வரையுள்ள சாலை அமைக்க ரூ.1.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி நிறைவேற்றவும் இப்பணி 2004-2005 ஆம் நிதியாண்டிற்குள் செய்து முடிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**115—**

**வகுப்பறைகள் கட்டித் தருதல்**

**வினா எண் 55163—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சியில் நிம்மேலி மற்றும் தொழுதூர் தொடக்கப் பள்ளிகளுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் வகுப்பறைகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கீழ்சட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி நெப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 100 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். இப்பள்ளிக்கென பக்கா கட்டடம் ஒன்று உள்ளது. கூடுதலாக ஒரு கட்டடம் தேவைப்படுகிறது. ஆனால், கட்டடம் கட்ட போதுமான இட வசதி



2005 ஏப்ரல் 13]

இல்லாததால் கூடுதல் கட்டடம் கட்ட இயலாது. தொழுதூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் 51 மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். ஒரு பக்கா கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் ஏதும் தேவையில்லை.

**116—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி**

**வினா எண் 57213—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, பாண்டிக்குடி மேற்குப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஒன்றியத்தில் உள்ள பெரியாளூர் ஊராட்சியில் உள்ள பாண்டிக்குடி குடியிருப்பில் 10,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய மின்விசைத் திட்டம் மற்றும் ஒரு சிறு மின்விசைத் திட்டமும் உள்ளன. இது இக்குடியிருப்பின் மக்கட்தொகைக்குப் போதுமானது.

**117—**

**குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள்**

**வினா எண் 57220—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி பிராமணவயல் ஊராட்சி, பிராமணவயல் கிராமம், நீர்விளங்குளம் மற்றும் கூத்தனூரில் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் அமைத்துத் தரும் எண்ணம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில், பிராமணவயல் ஊராட்சியிலுள்ள பிராமணவயல் மற்றும் கூத்தனூர் குடியிருப்புகள் மற்றும் இடையாத்தூர் ஊராட்சியிலுள்ள நீர்விளங்குளம் ஆகிய குடியிருப்புகளில் மேல்நிலைத் தொட்டிகள் அமைக்க கருத்துரு பரிசீலனையில் இல்லை. ஆயினும், திணையாக்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மேல்நிலைத் தொட்டிகள் இல்லாமல் பொதுக் குழாய்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது.

**118—**

**குடிநீர் வசதி**

**வினா எண் 57750—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேற்பனைக்காடு கிழக்கு, நெய்வதளி, மருதங்குடி, பிடாரிகாடு மற்றும் மாங்குடி தொடக்கப் பள்ளிக்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மேற்பனைக்காடு கிழக்கு மற்றும் நெய்வதளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளுக்கு 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மருதங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சின்டெக்ஸ் தொட்டி (சிறு மின்விசைத் திட்டம்) அமைக்கப்பட்டு, குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. பிடாரிகாடு மற்றும் மாங்குடி தொடக்கப் பள்ளிகளுக்கு 500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**119—**

**மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம்**

**வினா எண் 59349—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நெம்மேலி ஊராட்சியில் உள்ள நெம்மேலி கிராமத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நெம்மேலி ஊராட்சியில் உள்ள அரூர் கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு ஊராட்சிக்கு ஒரு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் மட்டுமே தற்போது கட்டிக் கொடுக்கப்பட்டு வருவதால், மேற்படி ஊராட்சியில் நெம்மேலி கிராமத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்டிக் கொடுக்க இயலாது.

**120—**

**தடுப்புச் சுவர்**

**வினா எண் 61740—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி ஒன்றியம், மங்கைமடம் ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்கு தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2005 ஏப்ரல் 13

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், மங்கைமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க ரூ.1.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். ஒன்றிய பொது நிதியில் போதுமான நிதி ஆதாரம் இல்லாததாலும், இப்பணியினைச் செய்திட திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லாததாலும் தடுப்புச் சுவர் கட்டிக் கொடுக்க இயலாது.

**121—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 62210—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முசிறி தொகுதி, கொணலை ஊராட்சி, கொணலை வடக்குத் தெருவில் புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஒன்றியம், கொணலை ஊராட்சியில் கொணலை வடக்குத் தெரு, கொணலை குடியிருப்பின் ஒரு பகுதி ஆகும். இக்குடியிருப்பில் தற்போது பொது மக்கள் பங்களிப்புடன் கூடிய "சுவஜல்தாரா" திட்டத்தின்கீழ் 60,000 லிட்டர் மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய தனி மின்விசைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2005 ஏப்ரல் 13]

**122—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 63508—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, அழகியமணவாளம் ஊராட்சி, திருவரங்கப்பட்டி கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், அழகியமணவாளம் ஊராட்சிக்குட்பட்ட திருவரங்கப்பட்டி குடியிருப்பில், 1995-இல் கட்டப்பட்ட 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலைத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும், தற்போதைய மக்கள் தொகைக்கு இது போதுமானது.

[2005 ஏப்ரல் 13

## இணைப்பு–III

*(88 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கவன ஈர்ப்பு*

### விதி 55-ன்கீழ் அனுமதிக்கப்பெற்று அவற்றிற்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் அளிக்கப்பட்ட விவர அறிக்கைகளுடன் பேரவைமுன் வைக்கப்பெற்ற கவன ஈர்ப்பு

### (1 முதல் 79 வரை)

**1. வேலூர்–காட்பாடி, பழுதடைந்த பழைய நெடுஞ்சாலைப் பாலத்தைப் பாலாற்றின் குறுக்கே புதுப்பித்துக் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூரில் மாநில நெடுஞ்சாலையான பழைய பாலார் சாலையில் பழைய பாலம் உள்ளது. இது சுமார் 100 வருடங்களுக்கு முன்னதாகக் கட்டப்பட்டது. இதனருகிலேயே மாநில நெடுஞ்சாலையான கடலூர்–சித்தூர் சாலையில் புதிய பாலம் 1977–ல் கட்டி முடிக்கப்பட்டு, போக்குவரத்து இடையூறின்றி இப்புதிய பாலத்தின் மூலம் நடைபெற்று வருகிறது.

1996 ஆம் ஆண்டில் பெய்த மழையில் பழைய பாலம் சேதமடைந்துவிட்டதால் புதிய பாலத்திலேயே தற்போது போக்குவரத்து நடைபெற்று வருகிறது. வேலூர் பொறியியல் கல்லூரி, காட்பாடி இரயில்வே ஜங்ஷன் மற்றும் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்குச் செல்ல மேற்கண்ட பாலத்தைப் பயன்படுத்த வேண்டியுள்ளதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு காலதாமதமாகிறது. எனவே, பழைய பாலத்தினை திரும்பக் கட்டுவதற்கு பொருளாதாரம் மற்றும் பன்மாநில திட்டத்தின்கீழ் (E & I Scheme) மத்திய அரசிடமிருந்து ரூ.16.94 கோடி நிர்வாக ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் கிடைத்ததும், பழைய பாலம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

* இப்பட்டியலில் உள்ள கவன ஈர்ப்புகளுக்கான விவர அறிக்கைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2005 ஏப்ரல் 13]

**2. நீலகிரி மாவட்டம், குன்னூர், பழுதடைந்த பழத்தோட்டம் கிராம நெடுஞ்சாலைப் பாலத்தை மீண்டும் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. கா. கந்தசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் மாவட்ட இதர சாலையான உபதலை சோகத்தொரை சாலையில் கி.மீ. 1/8–ல் அமைந்துள்ளது. பழுதடைந்துள்ள பாலத்தினை திரும்பக் கட்டுவதற்கு ரூ.23.70 இலட்சத்திற்கான மதிப்பீடானது, மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2005–2006 ஆம் ஆண்டின்கீழ் தயாரிக்கப்பட்டு, இயக்குநர், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இக்கருத்துரு 2005–2006 ஆம் ஆண்டு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, அரசின் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் பரிசீலனையில் உள்ளது. பரிசீலனைக்குப் பிறகு, அத் துறையால் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். மத்திய திட்டக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் தக்க ஆணைகள் வெளியிடப்படும்.

**3. நாகப்பட்டினம் மாவட்டம், புதுப்பட்டினம்–பழையார், பழுதடைந்த நெடுஞ்சாலைப் பாலத்தைப் பக்கிங்காம் கால்வாய்க்குமேல் புதிதாகக் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பழுதடைந்துள்ள பாலம் மாவட்ட இதர சாலையான புதுப்பட்டினம்–பழையார் சாலையில் கி.மீ. 3/2–ல் உள்ளது. இப்பாலத்தைத் திரும்பக் கட்ட தோராயமாக ரூ.285.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி, தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை.

[2005 ஏப்ரல் 13

**4. புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு கண்மாயைச் சீர்செய்தல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டம், கவிநாடு மேல வட்டம் கிராமம், கவிநாடு கண்மாயின் பாசனப் பரப்பு 1768.94 ஏக்கர் ஆகும். இக்கண்மாயின் கரைகள் மிகவும் வலுவிழந்து உள்ளதாலும், இக்கண்மாய்க்கு வரும் நீர் வரத்து வாய்க்கால்கள் மற்றும் வயல்களுக்குச் செல்லும் வாய்க்கால்கள் தூர்ந்து மேடிட்டு உள்ளதாலும், மதகுகள் கலிங்குகளில் பழுது பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், இக்கண்மாயை நபார்டு திட்டத்தின்கீழ் சீர்செய்து மேம்படுத்துவதற்கு ரூ.115.96 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து விரைவில் நபார்டுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**5. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் முதல் இராப்பூசல் மற்றும் இருந்திராப்பட்டி வரை செல்லும் சாலைகளைச் செப்பனிடல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

**இலுப்பூர் முதல் இராப்பூசல் வரை**

இச்சாலையின் சரியான பெயர் இராப்பூசல் சாலை எனும் 12.40 கி.மீ. (கி.மீ. 0/0 – 12/4) நீளமுடைய மாவட்ட இதர சாலையாகும். இதில், கி.மீ. 7/0 – 8/0 வரையிலான 1.00 கி.மீ. நீளத்தினை ரூ.5.04 இலட்சம் மதிப்பில் "மாண்புமிகு முதலமைச்சரின் சாலை புதுப்பித்தல் திட்டத்தின்" கீழ், 2003–2004 ஆம் ஆண்டில் பணி மேற்கொள்ளப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மற்றப் பகுதிகளில் கி.மீ. 4/4 – 7/0 வரையிலான 2.60 கி.மீ. நீளமுடைய பகுதிகளை ரூ.11.00 இலட்சத்திலும், கி.மீ. 0/0 – 1/0, 8/0 – 9/0, 10/0 – 12/4 ஆகிய 4.40 கி.மீ. நீளமுடைய சாலையினை ரூ.14.50 இலட்சம் மதிப்பிலும், 1999–2000 ஆம் ஆண்டு இதர மாவட்ட சாலைகள் பழுதடைந்த பகுதி மேம்பாட்டுத் திட்டம் கட்டம் 2–ல்



2005 ஏப்ரல் 13]

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சாலையில் கி.மீ. 1/0 – 3/0, 9/0, 11/0 ஆகிய பகுதிகளில் தார் தளம் புதுப்பிக்க தோராயமாக ரூ.13.50 இலட்சம் தேவைப்படும்.

2. வரும் காலங்களில் அரசின் நிதி நிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்துச் செய்யத்தக்கவாறு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதுவரை இச்சாலைப் பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் தார் நொடிகள் பராமரிப்பு நிதியின்கீழ் செப்பனிடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவகையில் பராமரிக்கப்படுகிறது.

**2. இலுப்பூர் முதல் இருந்திராப்பட்டி வரை**

இச்சாலை 7.60 கி.மீ. (கி.மீ. 0/0 – 7/6) நீளமுடைய மாவட்ட இதர சாலையாகும். இதில் கி.மீ. 2/0 – 7/6 வரையிலான 5.60 கி.மீ. நீளத்தினை ரூ.29.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசு ஆணை (நிலை) எண் 303, நெடுஞ்சாலை (எச். டபிள்யூ) துறை, நாள் 22–12–2004–ல் நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தம் கோரி, ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது. மற்றப் பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் தார் நொடிகள் உடனுக்குடன் செப்பனிடப்பட்டு போக்குவரத்திற்கு ஏற்றவாறு காலமுறையில் பராமரிக்கப்படுகிறது.

**6. திருச்சிராப்பள்ளி மாவட்டம், இடையாற்றுமங்கலம் மற்றும் கல்லணை கிளிகூட்டிற்கு இடையே கொள்ளிடம் ஆற்றில் தரைப்பாலம் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. எஸ்.எம். பாலன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

இடையாற்றுமங்கலம் (தண்ணீர்ப்பந்தல்) கிராமத்திற்கும், கல்லணை கிளிகூட்டிற்கும் இடையே கொள்ளிடம் ஆற்றில் தரைப்பாலம் கோரப்பட்டுள்ள இடம் திருச்சிராப்பள்ளி (நெ) கோட்டத்தின் இலால்குடி உட்கோட்ட பராமரிப்பிற்குட்பட்ட இதர மாவட்டச் சாலையான சிறுதையூர்–கொள்ளிடம் கரை சாலையில்

[2005 ஏப்ரல் 13

கி.மீ. 0/0 – 3/8–ன் முடிவில் உள்ளது. இவ்வாற்றின் குறுக்கே தரைமட்டப் பாலம் அமைக்கத் தோராயமாக ரூ.330 இலட்சம் தேவைப்படும். இப்பணி அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு திட்டத்திலும் இடம் பெறவில்லை.

2. கொள்ளிடம் ஆற்றில் தற்போது பாலம் கட்டக் கோரும் இடத்திலிருந்து ஆற்றின் மேல் படுகையில் 15 கி.மீ. தூரத்தில் திருச்சியில் சென்னை–திருச்சி–திண்டுக்கல் சாலை கி.மீ. 312/2–ல் ஒரு பாலமும், ஆற்றின் கீழ்ப்படுகையில் சுமார் 20 கி.மீ. தூரத்தில் பெரம்பலூர்–மானாமதுரை சாலையில் திருமானூரில் ஒரு பாலமும் உள்ளது. மேலும் பெரும் பொருட் செலவில் இப்பாலம் அமைப்பதால் செலவுக்கும் பயனுக்கும் இடையேயான விழுக்காடு மிகவும் குறைவாகும். எனவே, பெரும் பொருட் செலவில் இப்பாலம் அமைக்க அவசர அவசியம் ஏதுமில்லை.

**7. புதுக்கோட்டை நகரம், காமராஜபுரம் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

புதுக்கோட்டை நகரம், காமராஜபுரம் பகுதி நகரளவை எண் 256, 257, 258, 262, 273, 280 (நத்தம் புறம்போக்கு) மற்றும் 260, 261 (வாய்க்கால் புறம்போக்கு) ஆகியவற்றில் மொத்தம் 150 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் 1444 ஆக்கிரமிப்புதாரர்களுக்கு பட்டா வழங்குவது குறித்து கருத்துரு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

**8. புதுக்கோட்டை–சேதுபாவாசத்திரம் சாலை அன்னவாசல் முதல் இலுப்பூர் வரை மேம்பாடு செய்தல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

**அறிக்கை**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியானது, அரசு மாநில சாலையான முசிறி–குளித்தலை–புதுக்கோட்டை–ஆலங்குடி–பேராவூரணி–சேதுபாவாசத்திரம் சாலையில் கி.மீ. 70/350 – 84/6 வரை உள்ள பகுதியாகும். இப்பகுதியை மத்திய சாலை நிதி உதவித் திட்டத்தில் ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் மேம்பாடு செய்ய அரசு ஆணை (நிலை) எண் 277, நெடுஞ்சாலைத் (எச்.வி. 1) துறை, நாள் 1–11–2004–ல் நிர்வாக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. விரிவான மதிப்பீடு ரூ.197.50 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு, வேலை உத்தரவு 24–2–2005 அன்று வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை முடிக்க 6 மாத காலம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணியைத் தொடங்கத் தேவையான பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**9. நாகப்பட்டினம் மாவட்டம், கொண்டல்–தேனூர் ஊராட்சி சாலையில் போக்குவரத்துப் பாலம் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

மேற்கண்ட பாலம் கட்டப்பட வேண்டிய சாலையானது கொண்டல்–தேனூர் ஊராட்சி சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 0/6–ல் பள்ளியாறு நீர் வழிப்பாதையின் அகலம் 24 மீ. ஆகும். இச்சாலையில் பாலம் கட்ட ரூ.27.00 இலட்சத்திற்கு பிரதம மந்திரியின் ஊரகச் சாலை (PMGSY) திட்டத்தின்கீழ் செயல்படுத்த மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, விரைவில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு பணியினைத் தொடங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**10. கடலூர் மாவட்டம், பண்ருட்டி, திருவதிகை மதுரா ஏ. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து சம்பவம் மற்றும் நிவாரணம்**

**உறுப்பினர்: திரு. தி. வேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

[2005 ஏப்ரல் 13

அறிக்கை

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், திருவதிகை மதுரா ஏ. ஆண்டிக்குப்பம் கிராமத்தில் 2–3–2005 அன்று பிற்பகல் 3–00 மணியளவில் திரு. அருணாசலம் குமாரர் பாலா என்பவரது வீட்டில் சமையல் செய்யும்போது தற்செயலாக தீ விபத்து ஏற்பட்டு, அதில் 54 கூரை வீடுகள் முழுவதுமாக சேதமடைந்துள்ளன. இத்தீ விபத்தில் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த வீமராஜன் என்பவரின் மகள் மாதங்கி (வயது 10) மற்றும் கோபால் என்பவரின் மகள் ஜோதிகா (வயது 2 1/2) ஆகிய இரு குழந்தைகளும் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு ஸ்தலத்திலேயே பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்படி தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 54 குடும்பங்களுக்கும் நிவாரணமாக தலா ரூ.2000/– வீதம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 5 கிலோ அரிசி, ஒரு வேட்டி, புடவை வழங்கப்பட்டுள்ளது. மேலும், பண்ருட்டி அனைத்து வியாபாரிகள் சங்கம், பண்ருட்டி அரிமா சங்கம், பண்ருட்டி ஆரிய வைசிய நலச் சங்கம் மற்றும் கேபிள் டி.வி. ஆப்பரேட்டர் சங்கம், பாண்டிச்சேரி கிறிஸ்துவ சங்கம், பண்ருட்டி தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகிய தொண்டு நிறுவனங்களும் அரிசி, பாத்திரங்கள், போர்வை, வேட்டி, புடவை, பாய் மற்றும் உணவு ஆகியவற்றை வழங்கியுள்ளன. இத்தீ விபத்தில் கால்நடைச் சேதம் ஏதுமில்லை. பொருட் சேதம் ரூ.27,00,000/– என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இத்தீ விபத்தில் இறந்துவிட்ட இரு சிறுமியரின் வாரிசுதாரர்களுக்கு கருணைத் தொகையாக தலா ரூ.15,000/– வீதம் 11–3–2005 அன்று கடலூர் கோட்டாட்சியரால் வழங்கப்பட்டது. மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 18–3–2005–ன் அறிவிப்பின்படி கூடுதலாக தலா ரூ.35,000/– வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**11. புதுக்கோட்டை ஒன்றியம், பெருங்களூர் கிராமப் பாசனக் குளத்தைத் தூர் வாருதல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியத்தைச் சார்ந்த பெருங்களூர் கிராமத்தில் வில்வியக்குளம் உள்ளது. இது பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள குளமாகும். இதன் பாசனப் பரப்பு 53.44.0 ஹெக்டேர். இக்கண்மாயின் கரை 1220 மீ. நீளம் உள்ளது. இக்குளம் சுமாரான நிலையில் உள்ளது. வெள்ள அபாயம் ஏதும் இல்லை. இக்கண்மாயையும் வரத்து வாரியையும் தூர் வாருவதற்கு ரூ6.00 இலட்சம் நிதி செலவாகும். வரும் நிதி ஆண்டில் Sampoorna Gramin Rozgar Yojana திட்டம் அல்லது பராமரிப்பு தலைப்பின்கீழ், நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி செயலுக்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

**12. மதுரை காமராஜபுரம், சம்பக்குளம் போன்ற பகுதிவாழ் மக்களுக்குப் பட்டா வழங்கல்**

**உறுப்பினர்: திரு. என். நன்மாறன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

அறிக்கை

**மதுரை காமராஜபுரம்:–**

மதுரை காமராஜபுரம் பகுதி என்பது மதுரை தெற்கு வட்டம், கிழக்கு மதுரை கிராமம், நகர நில அளவை எண் 2597/1–ல் அமைந்துள்ளது. இதன் மொத்தப் பரப்பளவு 33.92 ஏக்கர் ஆகும். இது வருவாய் ஆவணங்களில் "பெரிய கண்மாய்ப் புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்ட பகுதியாகும். இதில் 1,266 நபர்கள் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். ஆட்சேபகரமான அரசு புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பு செய்து குடியிருந்து வரும் நபர்களின் ஆக்கிரமிப்பை வரன்முறை செய்யும் திட்டத்தின்கீழ் அரசாணை (நிலை) எண் 168, வருவாய், நாள் 27–3–2000–ன்படி, தகுதியுள்ள 8 நபர்களுக்கு மட்டும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. இலவச வீட்டுமனை பெறத் தகுதியற்ற இதர ஆக்கிரமிப்பாளர்கள் நிலக்கிரையம் செலுத்த முன்வராத காரணத்தினால், வீட்டுமனைப் பட்டா வழங்கப்படவில்லை. மேற்கூறிய திட்டத்தின் செயலாக்கம் 31–3–2001 உடன் முடிவடைந்துவிட்டதால் தற்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது.

[2005 ஏப்ரல் 13

**முத்துராமலிங்கபுரம்:—**

முத்துராமலிங்கபுரம் பகுதி, மதுரை தெற்கு வட்டம், மாடக்குளம் புல எண் 385/1ஏ 3–ல் உள்ள பட்டா நிலமாகும். இப்பட்டா எண் 725, "Rev. W.W.Wallace" அமெரிக்கன் போர்டு கமிஷனர்களின் அட்டர்னி மற்றும் 8 நபர்களின் பெயரில் கூட்டாக தாக்கலாகியுள்ளது. மேற்கூறிய பட்டா நிலத்தில் ஒரு சிலர் வீடுகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். தென்னிந்திய திருச்சபை நிர்வாகத்தினருக்கும் ஆக்கிரமிப்பாளர்களுக்கும் இடையே மதுரை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு எண் 1153/1985–ன்படி வழக்கு நடைபெற்று வருவதாலும், வழக்கு நிலுவையில் உள்ளதாலும், இவ்விடத்தில் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இயலாது.

**பாண்டியன் நகர்:—**

பாண்டியன் நகர் பகுதி, மதுரை தெற்கு வட்டம், கோச்சடை கிராமப் புல எண் 42–ல் 0.87 ஏக்கர் மற்றும் ஆரப்பாளையம் கிராமப் புல எண் 29–ல் 0.87 ஏக்கர் விஸ்தீரணமும் கொண்ட பகுதியாகும். கிராமக் கணக்குகளின்படி இப்புலங்கள் "ஜெயில் புதை குழி" என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது சிறைத் துறைக்குச் சொந்தமானதாகும். இதில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து வீடுகள் கட்டியுள்ளனர். சிறைத் துறையினர் வீட்டுமனைப் பட்டா வழங்க சம்மதம் தெரிவிக்கவில்லை என்பதால், ஆக்கிரமிப்பாளர்களின் கோரிக்கை 7–6–2001 ஆம் நாளிட்ட அரசுக் கடித எண் 60600/நிமு. 1(2)/2002–ன்படி ஏற்கப்படவில்லை என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறைத் துறைக்குச் சொந்தமான நிலமாதலால், தற்போது இப்பகுதியில் பட்டா வழங்க இயலாது.

**சோலை அழகுபுரம்:—**

சோலை அழகுபுரம் பகுதி என்பது, மதுரை தெற்கு வட்டம், மேலமதுரை கிராமம், வார்டு எண் 4, பிளாக் எண் 43, புல எண் 2011/1–ல், 2 ஏக்கர் 21960 சதுர அடி பரப்பில் அமைந்துள்ளது. மேற்படி புலம் "கண்மாய் நீர்பிடி" என கிராமக் கணக்குகளில் தாக்கலாகியுள்ளது. சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நீதிப் பேராணை மனு எண் 3781/2004–ல் 2–2–2005 அன்று 12 வாரங்களுக்குள் நடைமுறை சட்ட விதிகளுக்குட்பட்டு பட்டா வழங்க வேண்டும் என்று வழங்கப்பட்ட தீர்ப்புரையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



2005 ஏப்ரல் 13]

**சம்பக்குளம்:—**

சம்பக்குளம் பகுதி, மதுரை வடக்கு வட்டம், தல்லாகுளம், உட்கடை சம்பக்குளம் கிராமம் புல எண் 95/1, "நத்தம் புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்ட 3.05 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட பகுதியாகும். இதில் சுமார் 100 நபர்கள் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்து வெகுகாலமாக வசித்து வருகிறார்கள். நகர நில அளவையின்கீழ் மேற்படி புல எண் 95, நத்தம் காலியிடம் என வரையறுக்கப்பட்டு, 43 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளன. நகரளவை தனி அலுவலரால் நில அளவைகள் மற்றும் எல்லைகள் குறித்து, சட்டப் பிரிவு 13–ன்கீழ் இப்புலங்கள் குறித்த அறிக்கை வெளியிட்ட பின்னர் இப்புலத்தில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

**13. கிருஷ்ணகிரி மாவட்டம், அங்குத்து சுனை நீருக்குத் தடுப்பணை கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்கரைப்பேட்டை பகுதியில் உள்ள ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் அங்குத்து சுனையில் இருந்து வரும் தண்ணீரை சிறிய தடுப்பணை கட்டி பல ஏரிகளுக்குத் திருப்பிவிடும் திட்டத்திற்காக ரூ.60 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நபார்டு வங்கியின் நிதி உதவி பெற அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் நிதி உதவி கிடைக்கப் பெற்றதும் இப்பணி செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினால் சுமார் 1500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

**14. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, உப்பனாற்றில் கடல்நீர் மேலேறிச் செல்வதைத் தடுத்தல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

*நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், வெள்ளப்பள்ளம் கிராமம் அருகில் வெள்ளப்பள்ளம் உப்பனாற்றில் கடல் நீர் மேலேறி சீர்காழி நகர் வரை சென்று குடிநீரை உவர் நீராக மாற்றுவதைத் தடுக்க ஏற்கெனவே திட்டக் குழுமம் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. ஆய்வு முடிவுற்று திட்டக் குழுமம் மூலம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசிற்கு அனுப்பப்படும்போது, அதன்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

**15. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருவாலி ஏரியைத் தூர் வாரிச் சீர் செய்தல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

*திருவாலி ஏரி, திருநகரி வாய்க்காலில் 14.25 கி.மீ. முதல் 19.05 கி.மீ. வரை உள்ள இடைப்பட்ட தூரமாகும். இந்த ஏரி நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகா, திருவாலி கிராமத்தில் அமைந்துள்ளது. இதன் கொள்ளளவு 17 மீ. கன அடியாகும். இந்த ஏரிக்கான நீர்வரத்து பழவாற்றிலிருந்து பிரியும் திருநகரி வாய்க்கால் மூலம் கிடைக்கிறது. இதன்மூலம் 5047 ஏக்கர் பாசனம் நடைபெற்று வருகிறது. இந்த ஏரி முறைப்படுத்தப்பட்ட ஏரி ஆகும். இந்த ஏரியில் குறிப்பிட்ட பருவத்தில் தண்ணீரைத் தேக்கி பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்த ஏரியைத் தூர் வாரி சீர் செய்ய ரூ.180.00 இலட்சத்திற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைமைக்கு ஏற்ப, மேற்கண்ட ஏரியைத் தூர் வாரி சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

**16. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்ட வலதுபுறக் கால்வாயை நவீனப்படுத்தல் மற்றும் பொம்மசமுத்திரம், திண்டல் ஏரி வரை புதிய கால்வாய் அமைத்தல்**

**உறுப்பினர்: திரு: கா.பூ. முனுசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**



### அறிக்கை

*கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம் வலதுபுறக் கால்வாய் நவீனப்படுத்தும் பணி மற்றும் பொம்மசமுத்திரம், திண்டல் ஏரி மற்றும் அதன் கீழுள்ள 31 ஏரிகள் பயன்பெறும் வகையில் புதிய கால்வாய் அமைக்க வேண்டி ரூ.706.32 இலட்சம் மதிப்பில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நபார்டு வங்கியின் ஒத்திசைவு பெறப்பட்டுள்ளது. இத்திட்டப் பணி செயல்முறைக்கு விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். இத்திட்டம் முடிக்கப்பட்டவுடன் மொத்தம் 857 ஹெக்டேர் நிலம் கூடுதலாக பாசன வசதி பெறும்.*

**17. வடசென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் புதிய துணை மின்நிலையம் அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. பி.கே. சேகர்பாபு**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

*சென்னை மாவட்டம், கோட்டை — தண்டையார்பேட்டை வட்டம், தண்டையார்பேட்டை கிராமம், புல எண் 3912/45, 48, 49 மற்றும் 50 பிளாக் எண் 72–ல், 31 மனை 667 ச. அடி நிலம் வடக்கு வியாசர்பாடி வ.உ.சி. நகரில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியம் கோரியதன்பேரில், சென்னை மாவட்ட ஆட்சியரால் நில நிர்வாக ஆணையருக்கு நில உரிமை மாற்ற செயற்குறிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டன. சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் பிரஸ்தாப நிலங்களில் 28 மனை 1612 ச. அடி நிலங்களை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய பரிந்துரை செய்துள்ளார். பிரஸ்தாப புலங்களில், தண்டையார்பேட்டை கிராமம், புல எண் 3912/49–ல் 6 மனை 1828 ச. அடி நிலம் மாநகராட்சி (தனி) என்றும், மற்றொரு புலமான புல எண் 3912/45, 48 மற்றும் 50–ல் உள்ள நிலங்கள் பொதுப் பணித் துறையின் பெயரில் பதிவாகி உள்ளதாலும், சென்னை மாநகராட்சி மற்றும் பொதுப் பணித் துறையிடம் மேற்படி புலங்களை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய இசைவு கோரப்பட்டுள்ளது. இன்னும் இசைவு பெறப்படவில்லை. மேற்படி துறைகளிடமிருந்து இசைவு பெறப்பட்டதும், பிரஸ்தாப புலங்களை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

[2005 ஏப்ரல் 13

**18. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், இராமநதி நீர்த்தேக்கத் திட்டத்தினை முழு பாசன வசதிக்கேற்ப சீரமைத்தல்**

**உறுப்பினர்: திரு. எம். சக்திவேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

இராமநதி நீர்த்தேக்கம், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மேலக் கடையம் கிராமத்தில் 8 கி.மீ. மேற்கு திசையில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கத் திட்டம் 1974 ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. இராமநதி நீர்த்தேக்கத்தின் முழுநிறை நீர்மட்டம் 84.00 அடியாகும். அதன் உபரி நீர் வழிந்தோடும் மட்டம் 69.00 அடியாகும். தற்பொழுது இராமநதியின் முழுநிறை மட்டம் வந்தபின் அதன் உபரி நீர் வழிந்தோடி வழியாக 69.00 அடி மட்டத்தில் திறந்து விடப்பட்டு இராமநதியில் சென்று தாமிரபரணியில் கலக்கிறது. இராமநதியின் உபரி நீர் 100 கன அடிக்கு மேல் செல்லும் காலத்தை கடந்த 18 வருடங்களாக கணக்கில் கொண்டதில் சராசரியாக 132 மில்லியன் கன அடி உபரி நீர் சென்றுள்ளது. அதில் 90 கன அடி உபரிநீரை ஜம்புநதியின் இரண்டாவது அணைக்கட்டு நாராயணபேரி கீழ் உள்ள பாசனப் பரப்பு மற்றும் மடத்தூர் வடக்கு மற்றும் தெற்கு குளங்களின் பாசன இடைவெளி மற்றும் பாசன உறுதி செய்ய 6 தினங்களுக்கு (அதாவது 48 மில்லியன் கன அடி) கொண்டு செல்ல ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கால்வாய் இராமநதி அணையிலிருந்து நாராயணபேரி அணைக்கட்டு வரையிலும், பத்மநாமபேரி கண்மாயிலிருந்து அனந்தபத்மநாயக்கர் குளம் வரையிலும் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒத்திசைவு வழங்கியுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சக்திவேல் முருகன் அவர்கள் உபரி நீரை 82 அடி மட்டத்தில் கொண்டு செல்ல வேண்டியுள்ளார். அணையின் உபரி நீர் 69.00 அடியில் வெளியேற்றப்படுவதால் தொழில்நுட்பக் காரணங்களால் 82 அடி மட்டத்தில் புதிய கால்வாய் கொண்டு செல்ல இயலாது. எக்காரணம் கொண்டும் உபரி நீர் அணையின் முழுநிறை மட்டம் வருவதற்கு முன் திறக்கப்படுவதில்லை.



2005 ஏப்ரல் 13]

இதனால் இராமநதி பாசனப் பரப்பிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இராமநதி உபரி நீர் தாமிரபரணியில் கலந்து வீணாகக் கடலுக்குச் செல்வதை வறட்சிக்கு இலக்கான பகுதிக்குக் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இராமநதி நீர்த்தேக்கத்தின் மூலமாக 33 குளங்களும் மற்றும் நேரடிப் பாசனமும் சேர்ந்து 6669.91 ஏக்கர் பயன் பெறுகிறது. இந்த நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்பு உயரம் 84 அடியாகவும், கொள்ளளவு 152 மில்லியன் கன அடியாகவும் கொண்டதாக உள்ளது. 1992 ஆம் வருடம் பெய்த பெரு மழையினால் இராமநதி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 152 மில்லியன் கன அடியிலிருந்து 120 மில்லியன் கன அடியாகவும், நீர்ப்பிடிப்பு உயரம் 84 அடியிலிருந்து 67 அடியாகவும் குறைந்துள்ளது. அணையில் நிரம்பியுள்ள மணல் கலந்த மண், கற்கள் இவற்றின் கொள்ளளவு சுமார் 8,88,000 கன மீட்டர். இந்தக் கலவையில் சுமார் 35 விழுக்காடு மணல் இருக்கும் எனக் கருதப்படுகிறது. இந்த மணல் கலவை கட்டுமானத்திற்கு ஏற்றதாக இல்லை. இதனை விவசாயத் தேவைக்கும் மட்பாண்டம் மற்றும் செங்கல் சூளைக்கும் இன்னும் பிற தனியார் பயன்பாட்டிற்கும் மட்டுமே பயன்படுத்தலாம். மேற்கண்ட மண் மற்றும் மணல் கலந்த பகுதியினை அப்புறப்படுத்தினால்தான் அணையின் முழு கொள்ளளவு கிடைக்கப்பெற்று, முழுமையாக பாசனப் பயன்பெற ஏதுவாகும். போதிய பராமரிப்பு நிதி கிடைக்கப் பெற்றவுடன் மணலை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**19. திருச்சிராப்பள்ளி மாவட்டம், உய்யக்கொண்டான் மற்றும் இதர கால்வாய்ப் பாசனம் காவிரி நீர்வரத்து இல்லாததால் பாதிப்பு**

**உறுப்பினர்கள்: திரு. பா. பரணிகுமார்**
**திரு. கே.என். சேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

சேலம், நாமக்கல், கரூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள பணப் பயிர்களைக் காப்பாற்றவும், காவிரிக் கரையோர மாவட்டங்களின் குடிநீர்த் தேவைக்காகவும் மேட்டூர் அணையிலிருந்து வினாடிக்கு 900 கன அடி வீதம், 25-2-2005 மாலை 6-00 மணி முதல் தண்ணீர் திறந்து

[2005 ஏப்ரல் 13

விடப்பட்டுள்ளது. மேலும் 1-3-2005 மாலை 6-00 மணி முதல் காவிரியின் வலதுகரை வாய்க்கால்களுக்கு 7 நாட்களுக்கும், காவிரியின் இடதுகரை வாய்க்கால்களுக்கு 7 நாட்களுக்கும் தொடர்ந்து முறைப் பாசனமாக தண்ணீர் அளிக்கப்படுகிறது. இதன்மூலம் திருச்சி, நாமக்கல், கரூர் மற்றும் சேலம் மாவட்டங்களைச் சார்ந்த பயிர்கள் பயன்பெறுகின்றன.

உய்யக்கொண்டான் கால்வாயில் மைல் 24/4 வரை மட்டுமே பாசனமில்லாத காலத்தில் தண்ணீர் அளிக்க வேண்டும். இதன்படி 16-3-2005 அன்று வரை தண்ணீர் அளிக்கப்பட்டது. மேலும், திருச்சி மாநகர் மற்றும் பாய்லர் தொழிற்சாலைப் பகுதியின் குடிநீர்த் தேவைக்காகவும், தண்ணீர் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் நிலையில், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பயிர்களைச் சேதமின்றி பாதுகாக்க தண்ணீர் அளிக்கப்பட்டு வருகிறது.

## 20. பாபநாசம், காரையார்-முண்டந்துறை ஆற்றுப் பாலம் புதிதாக அமைத்தல்

**உறுப்பினர்: திரு. எம். சக்திவேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

மேற்கண்ட கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள பாலமானது, மாவட்ட இதர சாலையான பாபநாசம் மேல் அணை சாலையில் கி.மீ. 16/10 இல் உள்ள பாலமாகும். இப்பாலம் கடந்த 1992 இல் ஏற்பட்ட வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. எனவே காரையார், சேர்வலார் நீர்மின் நிலையங்களுக்கு இந்த இடத்தைக் கடந்து சென்று வருவதற்கு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக ஒரு தற்காலிகப் பாலம் அமைக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவ்விடத்தில் 30 மீட்டர் நீளத்தில் 3 கண்கள் கொண்ட உயர்மட்டப் பாலம் கட்டப்பட வேண்டும். இப்பணிக்கான செலவினத்தில் 50% தொகையினை பகிர்ந்துகொள்ள தமிழ்நாடு மின்சார வாரியம் முதலில் இசைவு அளித்தது. இதன் பிறகு, பத்தாண்டு கடந்த நிலையில், மேற்கண்ட பாலத்தினைத் திரும்பக் கட்டும் பணிக்கும் 2004-2005 ஆம் ஆண்டு விலை விகிதப்படி தோராயமாக ரூ.320.00 இலட்சத்தில் 50% செலவினத்தை தமிழ்நாடு



2005 ஏப்ரல் 13]

மின்சார வாரியம் பகிர்ந்துகொள்ள அதன் ஒப்புதல் தற்பொழுது கேட்கப்பட்டுள்ளது. இதற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், இப்பணிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## 21. வேலூர் மாவட்டம், திருப்பத்தூருக்குப் புறவழிச் சாலை அமைத்தல்

**உறுப்பினர்: திரு. டி.கே. இராஜா**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

திருப்பத்தூர் நகரில் ஒருபுறம் இரயில்வே இருப்புப் பாதைகளும், மற்றொருபுறம் விளைநிலம் பாசனத்திற்கான இரண்டு ஏரிகளும் உள்ளன. எனவே, திருப்பத்தூர் நகருக்கு புறவழிச் சாலை அமைத்தலுக்கு சாத்தியக்கூறு ஏதுமில்லை.

## 22. தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் இரயில்வே மேம்பாலப் பணியைத் துரிதப்படுத்துதல்

**உறுப்பினர்: திரு. பெ. பழனியப்பன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

### அறிக்கை

தருமபுரி மாவட்டம், மொரப்பூர்-ஜோலார்பேட்டை-சேலம் இருப்புப் பாதையில் இரயில்வே கி.மீ. 267/4-6-ல் உள்ள இருப்புப் பாதைக் கடவு எண் 100-க்குப் பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பணிக்கு ரூ. 9.50 கோடி மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. அணுகு சாலைகள் அமைக்கும் பணியை 1-5-2002 அன்று ரூபாய் 402.15 இலட்சம் மதிப்பில் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நெடுஞ்சாலைத் துறை அணுகு சாலை அமைக்கும் பணியில் இரயில்வே பகுதியில் போடப்பட வேண்டிய (இரு பகுதிகளிலும்) மேல் தளப் பணி தவிர, எல்லாப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுவிட்டன.

[2005 ஏப்ரல் 13

இரயில்வே துறையினரால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்ற தாமதமாகிறது. இரயில்வேயினால் மீதிப் பணிகள் செய்ய மறு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. இப்பணி இன்னும் ஆறு மாத கால அவகாசத்திற்குள் முற்றிலும் முடிவடைந்துவிடும்.

**23. பட்டுக்கோட்டை நகரில் புறவழிச் சாலை அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. என்.ஆர். ரங்கராஜன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

பட்டுக்கோட்டை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புறவழிச் சாலை அமைப்பது அவசியமாகும். இந்தப் புறவழிச் சாலையின் மொத்த நீளம் 9.20 கி.மீ. ஆகும். இதில் நகராட்சி சாலைகள் மற்றும் அரசு சாலைகளும் அடங்கும். மதுக்கூர்–பட்டுக்கோட்டை சாலை கி.மீ. 67/6–ல் பிரிந்து பட்டுக்கோட்டை–சேதுபாவாசத்திரம் சாலை கி.மீ. 1/6–ல் சேரும் இந்தப் புறவழிச் சாலையை மாநில நெடுஞ்சாலை தரத்திற்கு மேம்பாடு செய்யவும், பாலங்கள் கட்டவும் மற்றும் ஆறு சாலை சந்திப்புகள் மேம்பாடு செய்யவும் தோராயமாக ரூ.600 இலட்சம் தேவைப்படும். தற்போது இந்தப் புறவழிச் சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. வரும் நிதியாண்டுகளில், செய்யப்படவிருக்கும் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப இப்பணியினை நிறைவேற்ற தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**24. வீராணம் ஏரியின் கிளைப் பாசன வாய்க்கால்களைத் தூர்வாரிச் செப்பனிடுதல்**

**உறுப்பினர்: டாக்டர் பி. வள்ளல் பெருமான்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

புதிய வீராணம் திட்டத்தின் வீராணம் ஏரியின் பிரதான கரை 15 கி.மீ. நீளமுள்ளது. இந்த ஏரியிலிருந்து 28 வாய்க்கால்களும், எதிர்க் கரையில் 6 வாய்க்கால்களும், மொத்தம் 34 வாய்க்கால்கள் பிரிந்து சென்று சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்கோயில் வட்டங்களில் 44856 ஏக்கர்



2005 ஏப்ரல் 13]

நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. வீராணம் ஏரியின் அனைத்து வாய்க்கால்களையும் தூர் வாரி அதன் இரு கரைகளையும் அலைதாங்கி சுவர்கள் அமைத்தும், வாய்க்கால்களின் கடைமடைப் பகுதிகளுக்கு தண்ணீர் சென்று அடையத் தேவையான கல் கட்டடங்கள் கட்டி சீரமைக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.110.99 கோடி. இவ்வாய்க்கால்களைச் சீரமைக்க ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் முதல் கட்டமாக, 5 வாய்க்கால்களில் சீரமைக்கும் பணிகள் ரூ.9.45 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை மார்ச் 2006–ல் முடிவடையும்.

இரண்டாம் கட்டமாக, 13 வாய்க்கால்களைச் சீரமைக்க ரூ.9.45 கோடிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரசின் ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்பட்டபின் பணியை மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மூன்றாம் கட்டமாக, மீதமுள்ள 16 வாய்க்கால்களுக்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**25. கன்னியாகுமரி மாவட்டம், பழையாற்றிலிருந்து வெளியேறும் நீரை, ராதாபுரம் வாய்க்காலுக்குக் கொண்டுவருதல்**

**உறுப்பினர்: திரு. மு. அப்பாவு**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் அருகே பழையாற்றில் இருந்து, ராதாபுரம் வாய்க்காலுக்கு நீரேற்றம் (Pumping Scheme) செய்தல் குறித்து மதிப்பீடு ரூ.604.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 2800 ஏக்கர் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்றப்படும். இத்திட்டத்திற்கு 0.12 ஏக்கர் நிலம் மட்டும் கையகப்படுத்தப்பட வேண்டும். பயன் செலவு விகிதம் 0.50:1. மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு எதிர்பார்க்கப்படுகிறது.

2. கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை கால்வாய்க்கு இணையாக வெள்ளப் பெருக்கு, கால்வாய் வெட்டி வறண்ட ராதாபுரம்

[2005 ஏப்ரல் 13

பகுதியில் உள்ள 52 குளங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் திட்டத்திற்கு ரூ.78.90 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 1013 ஏக்கர் நன்செய் நிலங்களும், 6700 ஏக்கர் புன்செய் நிலங்களும் பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு 223.54 ஏக்கர் பட்டா நிலங்களும், 273 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும், 51.47 ஏக்கர் வன நிலங்களும் கையகப்படுத்தப்பட வேண்டும். பயன் செலவு விகிதம் 0.29:1. மாவட்ட ஆட்சியரின் ஒத்திசைவு கோரப்பட்டுள்ளது.

மேற்கண்ட இரு திட்டங்களுமே கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வறண்ட ராதாபுரம் கால்வாய்க்குத் தண்ணீர் கொண்டுவரும் திட்டமாகும். மேற்கண்ட இரு திட்டங்களுக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒத்திசைவு அளித்த பின்னர் அரசால் பரிசீலிக்கப்படும்.

**26. கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையின் பாசனக் கால்வாய்களைச் சீரமைத்துப் பாதுகாத்தல்**

**உறுப்பினர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயத்திற்குத் தேவையான நீர் ஆதாரத்தை சீராக விநியோகிப்பதற்காக பேச்சிப்பாறை நீர்ப் பாசனத் திட்டம் பயன்பட்டு வருகின்றது. பேச்சிப்பாறை அணையிலிருந்து நீர்ப் பாசனத்திற்காக அமைக்கப்பட்டுள்ள கால்வாய்களில் பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளை வருடாந்திரப் பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டின்கீழ் செய்யப்பட வேண்டும். கடந்த நிதியாண்டுகளில் பராமரிப்புப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மிகக் குறைந்த அளவாக இருந்தபடியினாலும், கிடைத்த நிதி ஆதாரத்தைக் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் பல்வேறு அவசர மற்றும் அத்தியாவசியப் பணிகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டுள்ள பாசனத் திட்டக் கால்வாய்களில் பல்வேறு இடங்களில் ஏற்பட்டுள்ள உடைப்புகளைச் சீர் செய்ய வரும் நிதியாண்டில் முன்னுரிமை அளித்து பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.



2005 ஏப்ரல் 13]

**27. கன்னியாகுமரி மாவட்டம், திற்பரப்பு அருவியின் பாசனக் கால்வாய்களைச் சீரமைத்தல்**

**உறுப்பினர்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கடந்த சில ஆண்டுகளாகவும், நடப்பு நிதி ஆண்டிலும், பாசனத் திட்டங்களின் பராமரிப்புப் பணி தலைப்பிலிருந்து மிகக் குறைந்த அளவிலேயே நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றது. இக்குறைந்த நிதி ஒதுக்கீட்டினை வைத்து மிகமிக மோசமான இடங்களை, முன்னுரிமை அடிப்படையில், சீர் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பாசனத் திட்டங்களைச் சீரமைப்பதற்கு வரும் நிதியாண்டில் சிறப்பு நிதி கோரி பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்தால் அடுக்கடுக்காக பகுதி பகுதியாய் சீர் செய்யும் பணிகளை மேற்கொள்ளலாம்.

**28. திருநெல்வேலி மாவட்டம், இராமநதி நீர்த்தேக்கம், சீரமைத்தல் மற்றும் மணல் திட்டை அப்புறப்படுத்துதல்**

**உறுப்பினர்: திரு. எம். சத்திவேல் முருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

இராமநதி நீர்த்தேக்கம், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், மேலக் கடையம் கிராமத்தில் 8 கி.மீ. மேற்கு திசையில் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கத் திட்டம் 1974 ஆம் வருடம் கட்டி முடிக்கப்பட்டது. இராமநதி நீர்த்தேக்கத்தின் முழுநிறை நீர்மட்டம் 84.00 அடியாகும். அதன் உபரி நீர் வழிந்தோடும் மட்டம் 69.00 அடியாகும். தற்பொழுது இராமநதியின் முழுநிறை மட்டம் வந்தபின் அதன் உபரி நீர் வழிந்தோடி வழியாக 69.00 அடி மட்டத்தில் திறந்து விடப்பட்டு இராமநதியில் சென்று தாமிரபரணியில் கலக்கிறது. இராமநதியின் உபரி நீர் 100 கன அடிக்கு மேல் செல்லும் காலத்தை கடந்த 18 வருடங்களாக கணக்கில் கொண்டதில் சராசரியாக 132 மில்லியன் கன அடி உபரி நீர்

[2005 ஏப்ரல் 13

சென்றுள்ளது. அதில் 90 கன அடி உபரி நீரை ஜம்புநதியின் இரண்டாவது அணைக்கட்டு நாராயணபேரி கீழ் உள்ள பாசனப் பரப்பு மற்றும் மடத்தூர் வடக்கு மற்றும் தெற்கு குளங்களின் பாசன இடைவெளி மற்றும் பாசன உறுதி செய்ய 6 தினங்களுக்கு (அதாவது 48 மில்லியன் கன அடி) கொண்டு செல்ல ரூ. 135 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கால்வாய் இராமநதி அணையிலிருந்து நாராயணபேரி அணைக்கட்டு வரையிலும் பத்மநாபபேரி கண்மாயிலிருந்து அனந்தபத்மநாயக்கர் குளம் வரையிலும் அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒத்திசைவு வழங்கியுள்ளார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். சக்திவேல் முருகன் அவர்கள் உபரி நீரை 82 அடி மட்டத்தில் கொண்டு செல்ல வேண்டியுள்ளார். அணையின் உபரி நீர் 69.00 அடியில் வெளியேற்றப்படுவதால், தொழில்நுட்பக் காரணங்களால் 82 அடி மட்டத்தில் புதிய கால்வாய் கொண்டு செல்ல இயலாது. எக்காரணம் கொண்டும் உபரி நீர் அணையின் முழுநிறை மட்டம் வருவதற்கு முன் திறக்கப்படுவதில்லை. இதனால் இராமநதி பாசனப் பரப்பிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. இராமநதி உபரி நீர் தாமிரபரணியில் கலந்து வீணாகக் கடலுக்கு செல்வதை வறட்சிக்கு இலக்கான பகுதிக்குக் கொண்டு செல்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இராமநதி நீர்த்தேக்கத்தின் மூலமாக 33 குளங்களும் மற்றும் நேரடிப் பாசனமும் சேர்ந்து 6669.91 ஏக்கர் பயன்பெறுகிறது. இந்த நீர்த்தேக்கத்தின் நீர்ப் பிடிப்பு உயரம் 84 அடியாகவும்; கொள்ளளவு 152 மில்லியன் கன அடியாகவும் கொண்டதாக உள்ளது. 1992 ஆம் வருடம் பெய்த பெருமழையினால் இராமநதி நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 152 மில்லியன் கன அடியிலிருந்து 120 மில்லியன் கன அடியாகவும், நீர்ப்பிடிப்பு உயரம் 84 அடியிலிருந்து 67 அடியாகவும் குறைந்துள்ளது. அணையில் நிரம்பியுள்ள மணல் கலந்த மண், கற்கள் இவற்றின் கொள்ளளவு சுமார் 8,88,000 கன மீட்டர். இந்தக் கலவையில் சுமார் 35 விழுக்காடு மணல் இருக்கும் எனக் கருதப்படுகிறது. இந்த மணல் கலவை கட்டுமானத்திற்கு ஏற்றதாக இல்லை. இதனை விவசாயத் தேவைக்கும் மட்பாண்டம் மற்றும் செங்கல் சூலைக்கும் இன்னும் பிற தனியார் பயன்பாட்டிற்கும் மட்டுமே பயன்படுத்தலாம். மேற்கண்ட மண் மற்றும் மணல் கலந்த பகுதியினை அப்புறப்படுத்தினால்தான் அணையின் முழு கொள்ளளவு கிடைக்கப் பெற்று, முழுமையான பாசனப் பயன் பெற ஏதுவாகும். போதிய பராமரிப்பு நிதி கிடைக்கப் பெற்றவுடன், மணலை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.



2005 ஏப்ரல் 13]

**29. தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்ட குமாரம்பட்டி அணைக்கட்டினைப் புதுப்பித்தல்**

**உறுப்பினர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், குமாரம்பட்டி கிராமத்தில் ஒட்டு அணைக்கட்டு என்கிற குமாரம்பட்டி அணைக்கட்டு பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டின் நீளம் 135 மீட்டர் ஆகும். இது வெகுகாலத்திற்கு முன்பு கட்டப்பட்ட மிகவும் பழமையான அணைக்கட்டாகும். இது முற்றிலும் இடிந்து சிறிது தூரத்திற்குத்தான் அணைக்கட்டு கட்டடம் ஆற்றின் குறுக்கே உள்ளது. பழமையான இவ்வணைக்கட்டின் பகுதிகள் அனைத்தும் சேதமடைந்துள்ளதால், இதன்மூலம் தண்ணீர் பெறப்படும் பாசனப் பகுதிகளுக்குத் தண்ணீர் நன்றாகச் சென்றடைவதில்லை. மிகவும் பழமை வாய்ந்த இவ்வணைக்கட்டு முற்றிலுமாக புதுப்பித்துக் கட்டப்பட வேண்டும். இவ்வாறு புதுப்பித்துக் கட்டப்பட்டால் வலதுபுற வாய்க்காலுக்குத் தண்ணீர் நன்றாகச் செல்லும். இதன்மூலம் 116 ஏக்கர் வரை பாசன வசதி பெறும். இத்திட்டத்திற்கு சுமார் ரூபாய் 100 இலட்சம் தேவைப்படும். இதற்கு விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளுடன் உரிய திட்ட மதிப்பீடு தயாரித்து, பின்னர் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

**30. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, பெருந்தோட்டம் ஏரியைத் தூர்வாரிச் சீர்செய்தல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

பெருந்தோட்டம் ஏரியானது, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தாலுகாவில் பெருந்தோட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி மூலம்

[2005 ஏப்ரல் 13

மறைமுகமாக 817 ஹெக்டேருக்கு நேரிடையாக பாசனம் நடைபெற்று வருகிறது. இந்த ஏரி முறைப்படுத்தப்பட்ட ஏரியாகும். இந்த ஏரிக்குத் தண்ணீர் காவிரி ஆறு இடது கரை மைல் 89/2-ல் பிரியும் மணிகர்ணையார் வாய்க்கால் மூலம் வருகிறது. இதன்மூலம் ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவத்தில் தண்ணீரைத் தேக்கி பாசனத்திற்குத் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஏரியைத் தூர் வாரி சீர் செய்ய ரூ. 250.00 இலட்சத்திற்கு கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. அரசின் நிதி நிலைக்கு ஏற்ப மேற்கண்ட ஏரியைத் தூர் வாரி சீர் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**31. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, ஆழியார் பழைய வாய்க்கால்களைப் புனரமைத்தல்**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் (பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆழியார் நகரில் உள்ள ஆழியார் பழைய வாய்க்கால்கள் மிகவும் பழமை வாய்ந்தனவாகும். 31-10-2004 இரவு மற்றும் 1-11-2004 காலையில் பெய்த கனமழையால் பள்ளிவிலங்கால் அணை சேதம் ஏற்பட்டு மற்றப் பகுதிகளில் பழுதுகள் மற்றும் மண்படிவு ஏற்பட்டுள்ளது. இதனால் பாசனத்திற்குத் தண்ணீர் வழங்குவதில் இடையூறுகள் எதுவுமில்லை. ஆழியார் பழைய வாய்க்காலின் ஐந்து பழைய வாய்க்கால் பாசன அமைப்பில் அமைந்துள்ள கால்வாய்கள் மற்றும் அவற்றின் கட்டமைப்புகளைப் புனரமைக்க மதிப்பீடு ரூ. 801 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கி நிதி உதவிக்காக அனுப்பிவைக்கப்பட்டது. நபார்டு வங்கி கடித எண் என்.பி./எஸ்.பி.டி./ஐ.டி.எப். 10/(தமிழ்நாடு) 72/ பி.எஸ்.சி./2004-05, நாள் 6-11-2004-ல் மேற்கண்ட பணிகளுக்கு ஒத்திசைவு வழங்கப்பட்டு அரசாணை (நிலை) எண் 52, பொதுப் பணி (டபிள்யூ2)த் துறை, நாள் 23-2-2005-ல் ஆட்சி ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் செயல்படுத்தப்பட்டு, வாய்க்கால்கள் புனரமைக்கப்பட்டு பாசன வசதி மேம்படுத்தப்படும். பரம்பிக்குளம் ஆழியார் திட்டத்தின் கீழுள்ள 5



2005 ஏப்ரல் 13]

கால்வாயை நபார்டு நிதியுடன் சீரமைக்க நிர்வாக ஒப்புதல் (Administrative Sanction) வழங்கப்பட்டுள்ளது.

**32. வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி போன்ற சிறப்பு ஊராட்சிப் பகுதிகளில் குடும்ப அட்டை வழங்காததால் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டத்தில் 7,60,000 குடும்ப அட்டைகள் நடப்பில் உள்ளன. புதிய குடும்ப அட்டை கோரி அரசு அறிவுரைகளின்படி 1-6-2004 முதல் 30-6-2004 வரை அங்கன்வாடி சிறப்பு மையங்களில் 2,50,141 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. இவற்றை விசாரணை செய்ததில் 1,64,929 விண்ணப்பங்கள் தகுதியானவையெனக் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றில் 22-3-2005 வரை 1,60,676 குடும்ப அட்டைகள் விநியோகம் செய்யப்பட்டுவிட்டன. 3,945 புதிய குடும்ப அட்டைகள் மட்டுமே விநியோகம் செய்ய வட்ட வழங்கல் அலுவலர்களிடம் நிலுவையில் உள்ளன. 306 குடும்ப அட்டைகள் பல்வேறு காரணங்களால் எல்காட் நிறுவனத்தால் அச்சிடப்படவில்லை.

2. வேலூர் நகரம், சத்துவாச்சாரி நகரம், அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் ஆகிய சிறப்பு ஊராட்சிப் பகுதியில் வரப்பெற்ற குடும்ப அட்டை கோரிய 20,541 விண்ணப்பங்களில் 14,938 விண்ணப்பங்களுக்கு புதிய குடும்ப அட்டை வழங்கிட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதில் 13,876 குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டன. 5,603 விண்ணப்பங்கள் தகுதியற்றவை எனத் தள்ளுபடி செய்யப்பட்டன. 1,062 புதிய குடும்ப அட்டைகள் அட்டைதாரர்களால் மையங்களில் பெறப்படாததால், வேலூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒப்புகைச் சீட்டினைத் தவற விட்டவர்கள் மற்றும் மையங்களில் குடும்ப அட்டைகள் பெற்றுக் கொள்ளாதவர்கள் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலகத்திற்குச் சென்று இது தொடர்பான விசாரணை செய்துகொள்ளலாம்.

[2005 ஏப்ரல் 13

3. குடும்ப அட்டை கோரி விண்ணப்பம் செய்து குடும்ப அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் (நிராகரிக்கப்பட்டவர்கள்) இதுகுறித்து சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலகத்தில் விசாரணை செய்து, அங்கேயே மேல் முறையீடு செய்துகொள்ளலாம். நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மேல் முறையீடு செய்வதற்கு 31-1-2005 அன்று கடைசி நாள் என வெளியான தவறான வதந்தியை நம்பி, வட்ட வழங்கல் அலுவலகத்தில் மேல் முறையீட்டு மனுக்களைக் கொடுத்துள்ளார்கள். 22-3-2005 வரை 58,543 மேல்முறையீட்டு மனுக்கள் வேலூர் வட்ட வழங்கல் அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளன. தற்போது வேலூர் நகரத்தில் எவ்வித பதற்ற நிலையும் நிலவவில்லை.

**33. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, கோட்டூர் அரசு மருத்துவமனைக்குப் பெண் மருத்துவர்களை நியமித்தல்**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வால்பாறை அரசு மருத்துவமனைக்கு மரு. டி. சிவசெல்வி என்பவரை நியமித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் இன்னும் பணியில் சேரவில்லை. உடனடியாக பணியில் சேரும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார். கோட்டூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட உதவி மருத்துவர்களின் பணியிடங்கள் – 3. தற்பொழுது அங்கு 3 ஆண் மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போதுள்ள ஆணைப்படி, கலந்தாய்வின் மூலம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருவதாலும், பெண் மருத்துவர் எவரும் கலந்தாய்வின்போது மேற்படி மருத்துவமனையில் பணிபுரிய விருப்பம் தெரிவிக்காததாலும், பெண் மருத்துவரை கோட்டூர் மருத்துவமனைக்கு நியமனம் செய்ய இயலவில்லை. காலிப் பணியிடம் ஏற்படும் காலத்தில் கலந்தாய்வின் மூலம் பெண் மருத்துவரை நிரப்பிட ஆவன செய்யப்படும்.



2005 ஏப்ரல் 13]

**34. தேன் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்படாததால், கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில் தேன் தேங்கியுள்ள நிலைமை**

**உறுப்பினர்கள்: திரு. டி. மணி**
**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திருமதி பா. வளர்மதி (ஊரகத் தொழில் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

ஒவ்வொரு வருடமும் தேன் பருவ காலத்தில் தேன் கிடைக்கும் அளவினைப் பொறுத்து பச்சைத் தேனின் கொள்முதல் விலையினை நிர்ணயம் செய்து அந்த வருடம் முழுவதும் அந்த விலைக்கு பச்சைத் தேன் கொள்முதல் செய்ய தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அனுமதி வழங்குகிறது.

2. இந்த ஆண்டும் (2005) தேன் பருவ காலத்தில் பச்சைத் தேன் கொள்முதல் விலையினை நிர்ணயம் செய்யும்பொருட்டு 10-02-2005 அன்று கூடி விவாதித்ததில், இந்த ஆண்டும் தேன் வரவு மிகவும் அதிகமாக இருப்பதால், அண்டை மாநிலமான கேரளாவிலிருந்து அதிக அளவில் பச்சைத் தேன் கொண்டு வரப்பட்டு மார்த்தாண்டம் பகுதியில் விற்பனை செய்யப்படுவதால், அம்மாநிலத்தின் (கேரளா) கதர் ஆணைக் குழுவினால், பச்சைத் தேன் எந்த விலையில் கொள்முதல் செய்யப்படும் என்ற விவரம் பெறப்படலாம் எனவும், மேலும் மார்த்தாண்டம் பகுதியில் பச்சைத் தேன் வரவு நிலவரம் குறித்தும் அறிந்து, அதன்பின் மீளவும் பச்சைத் தேன் கொள்முதல் விலை நிர்ணயம் செய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.

3. எனினும், இந்த இடைப்பட்ட காலத்தில், தேன் கொள்முதல் தடைபடாத வண்ணம், கிலோ ஒன்று ரூ.45/– என்ற விலையில் கொள்முதல் செய்யவும் வாரியம் அனுமதி வழங்கியுள்ளது.

4. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தில், இந்தத் தேன் பருவ காலத்தில் இதுவரை 1,32,000 கிலோ தேன், வாரியம் தற்காலிகமாக

[2005 ஏப்ரல் 13

நிர்ணயம் செய்யப்பட்ட விலையான ரூ.45/– (ரூபாய் நாற்பத்தைந்துக்கு) கொள்முதல் செய்யப்பட்டு, முன்பணமாக கிலோ ஒன்றுக்கு ரூ.25/– என அச்சங்கங்கள் வழங்கியுள்ளன. 11–03–2005 அன்று பச்சைத் தேனுக்கான கொள்முதல் விலை நிர்ணயம் செய்தவுடன், நிர்ணயம் செய்யப்படவிருக்கும் விலைக்கும் முன்பணமாகக் கொடுத்துள்ள விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையினை தேனீ உற்பத்தியாளர்களுக்கு மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் முறையாக வழங்கிவிடும்.

**35. நாமக்கல் தொகுதியில் கோழிமுட்டைகளைத் தேக்கிவைக்க குளிர்ப்பதனக் கிடங்கு நிறுவுதல்**

**உறுப்பினர்: திரு. கு. ஜெயக்குமார்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் (கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

இப்பொருள் குறித்து, நாமக்கல்லில் கோழி வளர்ப்பு, முட்டை உற்பத்தி, கோழித் தீவன உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சில விவசாயிகள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு மேலாண்மை இயக்குநர் மற்றும் அலுவலர்கள் ஆகியோருடன் கடந்த 26–10–2004 அன்று தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலகத்தில் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் நாமக்கல் பகுதியில் உற்பத்தியாகும் முட்டைகளை ஏற்றுமதித் தரத்துடன் சேமித்து வைக்கும்பொருட்டு குளிர்பதன வசதியுடன் கூடிய ஒரு கிடங்கு ஏற்படுத்தித் தர விவாதிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு நிறுவனத்தினரும் (NECC) குளிர்பதன வசதியுடன்கூடிய ஒரு கிடங்கு வசதியினை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

**36. வேலூர் தொகுதி, செங்காநத்தம் மற்றும் பாலமதி மலைகளுக்கிடையே உள்ள சாலையைப் புதுப்பித்தல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

**அறிக்கை**

வேலூர் மாவட்டத்தில், வேலூர் வனக் கோட்டத்தைச் சார்ந்த செங்காநத்தம் மலையிலிருந்து பாலமதி மலைக்கு வனப் பகுதியினூடே நடைபாதை மட்டுமே தற்போது உபயோகத்தில் உள்ளது. அந்த நடைபாதையினைச் சாலையாக மாற்றிப் புதுப்பிக்க வன நிலம் தேவைப்படுவதால், வனப் (பாதுகாப்பு) சட்டம் 1980 பிரிவு 2–ன்கீழ் மைய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இதுகுறித்து சம்பந்தப்பட்ட பயனீட்டாளரிடமிருந்து கருத்துரு கிடைக்கப்பெறின் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்

**37. வாணியம்பாடி தொகுதி, ஜவ்வாது மலையில், மந்தாரக்குட்டை போன்ற கிராமங்களில் தடுப்பணைகள் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

2001–2002–ல் இயற்கைச் சூழல் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவலூர் கிராமப் பகுதியில் இரண்டு நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. 2002–2003–ல் காடுபடு சிறுபொருட்கள் திட்டத்தின்கீழ் காவலூர் கிராமப் பகுதியில் நான்கு தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:–

(அ) காவலூரை அடுத்த 3 கி.மீ. தூரத்தில் ஜர்பன்தா கிராமத்தில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பு அணைகள் கட்டுதல்.

(ஆ) காவலூர் மற்றும் மந்தாரக்குட்டை கிராமங்களுக்கிடையே அமைந்துள்ள ஜவ்வாது, பூங்குளம் மற்றும் ஆலங்காயம் காப்புக் காடுகளில் 7 தடுப்பு அணைகள் கட்டப்பட்டுள்ளன.

(இ) பீமகுளம் சுமார் 20 குடியிருப்புகளை மட்டுமே கொண்டதால் குறிப்பிட்ட வரையறைகளுக்குப் பொருந்தாத காரணத்தினால் இக்கிராமம் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்படவில்லை. இருப்பினும், இதனை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்

[2005 ஏப்ரல் 13

பகுதி–2–ல் ஜர்பன்தா கிராமத்துடன் இணைத்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) ரெட்டியூர் கிராமம் நீர்ப்பிடிப்புத் திட்டக் கோட்பாடுகளுக்குப் பொருந்தி வருவதால், இதனை தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி–2–ல் (ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு முன்னேற்றத் திட்டம்) எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(உ) மந்தாரக்குட்டை கிராமத்தில் வன வளர்ச்சி முகமை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தடுப்பணைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. காவலூர், மந்தாரக்குட்டை, பீமகுளம், ரெட்டியூர் ஆகிய கிராமங்களுக்கு மிகவும் அருகில் உள்ள கீழ்க்கண்டுள்ள 14 கிராமங்களில் தடுப்பு அணைகள் அமைப்பதால், குறிப்பிட்ட நான்கு கிராமங்களிலும் மண் மற்றும் ஈரப்பசைகள் வெகுவாக பாதுகாக்கப்படும். எனவே, திருப்பத்தூர் வன வளர்ச்சி முகமையில் தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்க்காணும் 10 கிராமங்களில் அணைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது:–

1. மந்தாரக்குட்டை
2. ஜர்பன்தா
3. உமயப்பாநாயக்கனூர்
4. வசந்தபுரம்
5. கோட்டாவூர்
6. துரிஞ்சிகுப்பம்
7. கிருஷ்ணபுரம்
8. அருணாச்சலம் கொல்லகொட்டாய்
9. கல்லாரப்பட்டி கொல்லகொட்டாய்
10. நாயக்கனூர் (பழையூர்)

2005–2006 ஆம் ஆண்டு அயல்நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் பகுதி–2–ல், கீழ்க்காணும் 4 கிராமங்களில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தடுப்பு அணைகள் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது:—



2005 ஏப்ரல் 13]

1. கிளானூர்
2. கோட்டையூர்
3. புதூர்
4. அருணாச்சலம் கொல்லகொட்டாய்

மேலும், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்–1–ன்கீழ் வாணியம்பாடி தொகுதியைச் சார்ந்த கீழ்க்காணும் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு, தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு | கிராமம் |
|---|---|
| 1997–1998 | நீலிக்கொல்லை<br>ஆர்.எம்.எஸ். புதூர் |
| 1998–1999 | நாச்சர்குப்பம்<br>இராணிப்பேட்டை<br>கோமுட்டேரி<br>பங்கூர் |
| 1999–2000 | சின்னகோமேஸ்வரம்<br>102 ரெட்டியூர்<br>காலரப்பட்டி |
| 2000–2001 | சி. குஜனி<br>மல்லிகுட்டை |
| 2001–2002 | தார்வாசி |
| 2002–2003 | நாயக்கனேரி |
| 2003–2004 | சோளக்கொல்லைமேடு<br>பனங்காட்டேரி |
| 2004–2005 | நன்னேரி |

[2005 ஏப்ரல் 13

## 38. கோவை மாவட்டம், வால்பாறையில் மரங்கள் வெட்டப்படுவதாகப் புகார்

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் (வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்)**

### அறிக்கை

வால்பாறை வட்டம், ஆனைமலைக் குன்றுகள் கிராமத்தில் இடம் பெற்றுள்ள தனியார் தோட்டங்களில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் நீதிப் பேராணை எண் 202/95 (உரிமையியல்) 12-12-1996 நாளன்று இடைக்காலத் தீர்ப்பின்படி, தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் வழிகாட்டுதலுக்கு உட்பட்டு எரிபொருள் இனமான தைல மரங்களும் காப்பி மற்றும் தேயிலை வளர்ப்புத் தோட்டத்தில் நிழல் குறைப்பிற்காக சில்வர் ஓக் மரங்களும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும்,.கோவை மாவட்ட வனக் குழுவின் தலைவரால் வெட்டிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்பேரில், மாவட்ட வனக் குழுவால் தனியார் வனங்களில் நிழற் குறைப்பிற்காக, சில்வர் ஓக் மரங்களை வெட்ட நிலுவையில் உள்ள மனுக்கள் பகுதி பகுதியாக முடிவு செய்யப்பட்டு ஆணை வழங்கப்படுகிறது.

வால்பாறை பகுதியில் கடந்த மழை காலமான மே 2004 முதல் நவம்பர் 2004 வரை சராசரியாக 2768 மி.மீ. மழை அளவு பதிவாகி உள்ளது. தனியார் வனங்களில் மரங்கள் வெட்ட மாவட்ட வனக் குழு எப்பொழுதெல்லாம் ஆணை பிறப்பிக்கின்றதோ, அப்போதெல்லாம் இதன் விவரம் வால்பாறை வட்டாட்சியர் அலுவலக தகவல் பலகையில் வெளிப்படையாக பொது மக்கள் பார்வைக்கு வெளியிடப்படுகிறது. தனியார் வனங்களில் மரங்கள் வெட்டப்படுவது தொடர்பாக குறிப்பிட்ட நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி, பொது மக்களிடமிருந்து புகார் மனுக்கள் பெறப்படுவதில்லை. இருப்பினும், பெறப்பட்ட புகார் மனுக்கள் தொடர்பாக விசாரித்திடும்போது கிடைத்த தவறான தகவல்கள் அடிப்படையில்தான் புகார் மனுக்கள் அனுப்பி வைக்கப்பட்டன என மனுதாரர்களே தெரிவித்துள்ளனர்.



2005 ஏப்ரல் 13]

## 39. கோவை மாவட்டம், வால்பாறை திரு தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மைதானத்தில் செல்லும் கழிவுநீரைத் தடுத்தல்

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் (கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்)**

### அறிக்கை

கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, வால்பாறை நகராட்சிப் பகுதியில் செயல்பட்டுவரும் தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் அருகில் "கூட்டுறவு குடியிருப்பு" ஒன்று அமைந்துள்ளது. சுமார் 400 வீடுகள் உள்ள அக்குடியிருப்பிலிருந்து வெளிவரும் ஒட்டுமொத்தக் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்கள் அனைத்தும் ஊருக்கு வெளியே தொலைவிலுள்ள இடத்திற்குக் கழிவுநீர்க் குழாய்கள் மூலம் பள்ளி விளையாட்டு மைதானத்தின் வழியாகக் கொண்டு செல்லும் பணி வால்பாறை நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணி முழுமையாக முடிவடையாமல் இருப்பதால், கழிவுநீர் பள்ளி விளையாட்டு மைதானத்திற்குள் வந்து விடுகிறது. அதனால், விளையாட்டு மைதானத்தைப் பள்ளியில் படிக்கும் மாணவியர்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை இருந்து வருகிறது. பொதுமக்களுக்கும், பள்ளிக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படாதவண்ணம், வால்பாறை நகராட்சிக்கு வெளியில், பொதுமக்கள் பயன்படுத்தாத இடத்திற்குக் கழிவுநீர் மற்றும் கழிவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் பணியை வால்பாறை நகராட்சி உடனடியாகச் செய்ய வேண்டும். மேற்படி கழிவுநீர் அகற்றும் பணி முழுமையாக முடிவடையும் பட்சத்தில் மேற்படி பிரச்சினை எழ வாய்ப்பில்லை. எனவே, மேற்படி தூய இருதய மகளிர் மேல்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தை மாணவிகள் முழுமையாகப் பயன்படுத்தும்வகையில், முடிவடையாத நிலையிலுள்ள கழிவுநீர்க் குழாய் அமைக்கும் பணியை விரைவில் முடிக்குமாறு பள்ளிக் கல்வித் துறை, நகராட்சி நிர்வாகத் துறைக்குத் தெரிவித்து, விரைவில் மேற்படிப் பணியை முழுமையாகச் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2005 ஏப்ரல் 13

**40. புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரடிப்பட்டி நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் (கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

*அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகளான வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி ஆகியவை செய்து தரப்பட்டு வருகின்றன. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்தில் 2004-2005-ல் 3 வகுப்பறைக் கட்டடங்கள் 47 எண்ணிக்கையும், கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் 150 எண்ணிக்கையும் அனுமதிக்கப்பட்டுள்ளன. அதனில் கந்தர்வக்கோட்டை ஒன்றியத்திற்கு மட்டும் 3 வகுப்பறைக் கட்டடங்கள் 3 எண்ணிக்கையும் (காட்டுநாவல், வேம்பன்பட்டி, சோளகம்பட்டி), இரு வகுப்பறைக் கட்டடங்கள் 4 எண்ணிக்கையும் (கல்லாக்கோட்டை, மூக்கு உடையான்பட்டி, குளவாய்ப்பட்டி மற்றும் கீரவாழ்ந்தான் விடுதி ஆகிய இடங்களில்) அளிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.*

*வீரடிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் மாணவர்கள் எண்ணிக்கை 138 ஆக உள்ளது. இம்மாணவர்களுக்கு தற்போது ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் வேய்ந்த கட்டடத்திலும், ஓட்டுவில்லைக் கட்டடத்திலும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் மேற்படி வீரடிப்பட்டி பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாத காரணத்தால் 2004-2005 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் கட்ட இயலவில்லை. இட வசதி பெற்றபின், வரும் கல்வி ஆண்டில் வகுப்பறைக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*

**41. தமிழ்நாட்டில், விசைத்தறி நெசவாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தினால் ஜவுளி உற்பத்தி பாதிப்பு**

**உறுப்பினர்: திரு. பி.கே. சேகர்பாபு**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் (கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

**அறிக்கை**

*தமிழ்நாட்டில் ஈரோடு மாவட்டத்திற்குட்பட்ட ஈரோடு மற்றும் சென்னிமலை பகுதிகளைச் சேர்ந்த விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் தனியார் விசைத்தறியாளர்கள் எவரும் வேலைநிறுத்தம் ஏதும் மேற்கொள்ளவில்லை.*

*2. எனினும், கோவை மாவட்டத்திற்குட்பட்ட திருப்பூர், அவிநாசி மற்றும் இதர பகுதிகளைச் சேர்ந்த கூலிக்கு நெசவு செய்யும் விசைத் தறியாளர்கள் கூலி உயர்வு கேட்டு 16-01-2005 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் மேற்கொண்டு வந்தனர். இவர்களது வேலைநிறுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, 28-01-2005 தேதியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்கள் மாவட்ட ஆட்சியர், கோவை, தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் மற்றும் இதர துறை அலுவலர்கள் முன்னிலையில் விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் மற்றும் கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையின் முடிவில் சோமனூர் பகுதி விசைத்தறி நெசவாளர்களுக்கு 23 சதவிகிதமும், பல்லடம், திருப்பூர், மங்கலம் கண்ணம்பாளையம் உள்ளிட்ட பகுதி விசைத்தறி நெசவாளர்களுக்கு 19 சதவிகிதமும் தற்போது வழங்கப்பட்டு வரும் கூலியிலிருந்து உயர்த்தி வழங்குவதற்கு விசைத்தறி ஜவுளி உற்பத்தியாளர்கள் ஒப்புக்கொண்டதன் பேரில், கூலிக்கு நெசவு செய்யும் விசைத்தறி உரிமையாளர்கள் சங்கம் தங்களது வேலைநிறுத்தப் போராட்டத்தினைத் திரும்பப் பெற்றுக்கொண்டுள்ளனர். இந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் கோவை மாவட்டத்தில் 30-01-2005 முதல் விசைத்தறிக் கூடங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன.*

**42. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்திற்குப் படகு நிறுத்தும் தளம் அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன் வளத் துறை அமைச்சர்)**

[2005 ஏப்ரல் 13

## அறிக்கை

தமிழ்நாட்டில் உள்ள கடற்கரைப் பகுதி பெங்களூரில் உள்ள மத்திய கடல் பொறியியல் மற்றும் மீன்வள மையத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, அதனடிப்படையில் மீன்பிடித் துறைமுகமோ அல்லது மீன் இறங்கு தளமோ அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் கிராம கடற்கரைப் பகுதியில் ஆண்டுதோறும் இயற்கையாக மண்மேடு ஏற்படுகிறது. இதனால் மீனவர்கள் தங்களது படகுகளை கரைக்குக் கொண்டுவர மிகுந்த சிரமத்திற்குள்ளாகிறார்கள்.

இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண ஏதுவாக, அரசால் ரூ.1.98 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு மாதிரி ஆய்வுப் பணி, பூண்டி நீரியல் மற்றும் நீரேற்று ஆய்வு மையத்திற்கு வழங்கப்பட்டது. மேலும், பூண்டி நீரியல் மற்றும் நீரேற்று ஆய்வு மையம் கேட்டுக்கொண்டபடி, பாத் மெட்ரிக் சர்வே மற்றும் நியூமரிக்கல் மாதிரி ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ள ஏதுவாக, கூடுதலாக ரூ.6.02 இலட்சம் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

ரூ.6.02 இலட்சத்திற்கு செலவின அனுமதி அரசால் வழங்கப்பட்ட பின்னர், பூண்டி நீரியல் மற்றும் நீரேற்று ஆய்வு மையம் மூலம் மேற்படி மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அவ்வறிக்கையின் அடிப்படையில் திருமுல்லைவாசல் கடற்பகுதியில் ஏற்படும் மண் மேட்டிற்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்ட பிறகே, இக்கிராமத்தில் உள்ள மீனவர்களின் பயன்பாட்டிற்காக மீன் இறங்கு தளம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.

### 43. நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கீழமூவர்கரை மீனவர் கிராமத்திற்குப் படகு நிறுத்தும் தளம் அமைத்தல்

**உறுப்பினர்: திரு. நா. சந்திரமோகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் (மீன் வளத் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

## அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதிக்குட்பட்ட தென்னாம்பட்டினம் ஊராட்சியில் உள்ள கீழமூவர்கரை கிராமம் சுமார் 1,500 மக்கள் தொகையைக் கொண்டதாகும். இக்கிராமத்தில் சுமார் 150 பாரம்பரிய கட்டுமரங்களும் 4 மீன்பிடி விசைப்படகுகளும் உள்ளன.

பொதுவாக ஒரு கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அல்லது மீன் இறங்குதளம் அமைப்பதற்குமுன் பல தொழில்நுட்ப ஆய்வுகள் நடத்தப்பட்டு, ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் சாத்தியக்கூறு இருப்பின், திட்டம் நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழகத்தில் புதிதாக மீன் இறங்கு தளங்கள் அமைப்பது தொடர்பாக பெங்களூரிலுள்ள மீன் துறைக்கான பொறியியல் ஆய்வு மைய இயக்குநர் மீன் துறை அலுவலர்களுடன் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளை நேரில் ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் 9 இடங்களுக்கு திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை பெறும்பொருட்டு மாநில அரசுக்கு கருத்துரு அனுப்பிவைத்துள்ளார். பெங்களூர் சைசெப் இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்ட இடங்களில் தென்னாம்பட்டினம் ஊராட்சிக்குட்பட்ட கீழமூவர்கரை கிராமம் இடம் பெறவில்லை.

மேலும், சீர்காழி தொகுதியில் பழையார் என்னுமிடத்தில் இத்துறையால் அமைக்கப்பட்ட மீன்பிடித் துறைமுகத்தை மீனவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். சீர்காழி தொகுதிக்குட்பட்ட கிராமங்களிலுள்ள மீனவர்களின் பயன்பாட்டிற்காக பூம்புகார் கிராமத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய மீன்பிடித் துறைமுகம் அமைத்திட ஏதுவாக சென்னை என்.ஐ.ஓ.ட்டி. ஆய்வு மையம் மூலம் மாதிரி ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கீழமூவர்கரை மீனவர் கிராமத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான விசைப் படகுகள் மட்டுமே உள்ள நிலையில், இங்கு மீன்பிடித் துறைமுகம் அல்லது மீன் இறங்கு தளம் அமைக்க தொழில்நுட்பப் பொருளாதார ரீதியாக சாத்தியக்கூறுகள் இல்லை.

[2005 ஏப்ரல் 13

**44. கன்னியாகுமரி மாவட்டம், இராஜாக்கமங்கலம் ஒன்றியம், சுனாமியால் பாதிக்கப்பட்ட சொத்தவிளை கடற்கரையை மீண்டும் சுற்றுலாக் கடற்கரையாக்குதல்**

**உறுப்பினர்கள்: திரு. டி. மணி**
**திரு. ஜே. ஹேமச்சந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. அ. மில்லர் (சுற்றுலாத் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

சொத்தவிளை பீச் நாகர்கோவிலிலிருந்து 12 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியிலிருந்து மேற்குக் கடற்கரைச் சாலை வழியாக 12 கி.மீ. தொலைவிலும் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், புத்தாளம் சிறப்பு சிற்றூராட்சியில் சொத்தவிளை பீச் உள்ளது. மாவட்டத்தில் உள்ள இயற்கைக் கடற்கரைகளில் இதுவும் ஒன்று. ஆழமற்ற மிதமான கடல் அலைகளும், மணற்பாங்கான அமைப்பும் கொண்ட சொத்தவிளை பீச் உள்ளூர் சுற்றுலாப் பயணிகளைப் பெரிதும் கவர்கிறது.

2. சுனாமி ஏற்படுவதற்கு முன் சொத்தவிளை கடற்கரைப் பகுதியில் கீழ்க்காணும் வசதிகள் மாவட்ட நிர்வாகத்தால் செய்யப்பட்டிருந்தன:—

1. குடிநீர் வசதி
2. நிழற்குடை
3. காட்சிக் கோபுரம்
4. சிறுவர் பூங்கா
5. கழிப்பறை வசதி
6. குப்பைத் தொட்டி
7. நிலச் சீரமைப்பு

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் 26-12-2004 அன்று ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் சுற்றுலாத் துறைக்கு/தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான சொத்து கீழ்க்கண்டவாறு சேதமடைந்துவிட்டது:—



2005 ஏப்ரல் 13]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் சிலைப்பகுதி | 43.20 | சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் சுற்றுலாத் துறையைச் சேர்ந்தது |
| காட்சிக் கோபுரம், கன்னியாகுமரி | 6.30 | |
| கன்னியாகுமரி முக்கடல் சங்கமிக்கும் பகுதி | 20.00 | |
| வட்டக்கோட்டை கடற்கரைப் பகுதி | 10.00 | மாவட்ட நிர்வாகத்தைச் சேர்ந்தது |
| முட்டம் கடற்கரைப் பகுதி | 10.00 | |
| தெக்குறிச்சி கடற்கரைப் பகுதி | 10.00 | |
| சொத்தவிளை கடற்கரைப் பகுதி | 5.00 | |
| மொத்தம் | 104.50 | |

4. கன்னியாகுமரி மாவட்டம், புத்தாளம் சிறப்பு ஊராட்சிக்குட்பட்ட சொத்தவிளை சுற்றுலா கடற்கரைப் பகுதி 26-12-2004 அன்று கடலோர கிராமங்களில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் முற்றிலும் சேதமடைந்துவிட்டது. மீண்டும் சுற்றுலாத் தலமாக மாற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 26-12-2004 அன்று தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்ட இழப்பீட்டைச் சரிக்கட்ட ரூ.535.50 இலட்சம் நிதியுதவி கோரி மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திற்கு கருத்துரு இத்துறையின்மூலம் ஜனவரி 2005-ல் அனுப்பப்பட்டுள்ளது. இக்கருத்துருவில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.104.50 இலட்சமும் அடங்கும்.

5. சுனாமியால் சுற்றுலாத் தலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களைச் சீர்செய்ய, மைய அரசின் நிதியுதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2005 ஏப்ரல் 13]

தொழிற் சங்கங்கள் மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை நேரில் அணுகி இப்பிரச்சினையில் தலையிட்டு இடைக்கால நிவாரணம் பெற்றுத்தரக் கோரியதன் அடிப்படையில், 12–1–2004 அன்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, பொங்கல் பண்டிகை வருவதை முன்னிட்டு அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ரூ. 1000/– இடைக்கால நிவாரணம் வழங்க அறிவுரை வழங்கினார். மாண்புமிகு அமைச்சரின் அறிவுரைப்படி அனைத்துத் தொழிலாளர்களுக்கும் ரூ.1000/– இடைக்கால நிவாரணம் நிர்வாகத்தால் வழங்கப்பட்டது.

நிர்வாகம் பி.ஐ.எப்.ஆர். முன்பு நலிவுற்ற தொழிற்சாலை என அறிவிக்க வேண்டி மனு தாக்கல் செய்துள்ளது.

ஆலையை மூடிவிட முன் அனுமதி கோரி பிரிவு 25–O–ன்கீழ் அரசிற்கு நிர்வாகம் மனுச் செய்தனர். அரசு, இம்மனுவினை நிராகரித்து அரசாணை (டி) 10.58, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (அ2) துறை, நாள்: 5–12–2002–ல் அரசாணைகள் பிறப்பித்துள்ளது. நிர்வாகம் செய்த மறு ஆய்வு மனுவும் அரசால் நிராகரிக்கப்பட்டது.

தொழிற் தகராறு சட்டப் பிரிவு 25–O–வின்கீழ் முன் அனுமதி பெறாமல் தொழிற்சாலையை மூடியதற்கும் மற்றும் தொழிற் தகராறு சட்டப் பிரிவு 12(3)–ன்கீழ் 25–7–1997 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின் ஷரத்து 25.7–ன்படி ஷரத்துகள் 15, 16, 17, 19, 20 மற்றும் 21–களில் குறிப்பிட்டுள்ளபடி டூர் அலவன்ஸ், யூனிபார்ம், யூனிபார்ம் தையற்கூலி, காலணிகள் மற்றும் சாக்ஸ், பெயின்டிங், Pre-treatment epoxy, Welding ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காட்டன் கோட், பண்டிகை முன்பணம், ஹமாம் சோப், தேங்காய் எண்ணெய் வழங்குதல் போன்ற பயன்களை வழங்காததற்கும், நிர்வாகத்திற்கெதிராக குற்றவியல் வழக்குத் தொடர அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**46. வால்பாறை, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைக் கூடுதலாக தேயிலை பறிக்குமாறு நிறுவனங்கள் வற்புறுத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. ப. அண்ணாவி (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)**

[2005 ஏப்ரல் 13

## அறிக்கை

வால்பாறையில் உள்ள தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் மற்றும் ஊக்கத் தொகை தமிழ்நாடு தோட்ட நிறுவன அதிபர் சங்கங்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்தன. இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்கள் பறிக்க வேண்டிய குறைந்தபட்ச தேயிலையின் அளவு ஒரு ஹெக்டேரில் கிடைக்கக்கூடிய மகசூலின் அடிப்படையில் 12 கிலோ முதல் 16 கிலோவாக நிர்ணயம் செய்யப்பட்டது.

ஊதிய உயர்வு மற்றும் ஊக்கத் தொகை குறித்த ஒப்பந்தங்கள் 31–12–2000 உடன் முடிவடைய இருந்த நிலையில், தமிழ்நாடு தோட்ட அதிபர் சங்க நிர்வாகிகள், தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் ஊதியத்தைக் குறைக்கப் போவதாகவும், தேயிலை பறிப்பின் அளவினை அதிகரிக்கப் போவதாகவும், இதன் அடிப்படையில் ஊக்கத் தொகை மாற்றி அமைக்கப்படும் என்றும், தொழிற் தகராறு சட்டப் பிரிவு 9 A–யின்கீழ் அறிவிப்புச் செய்தனர். இதனைத் தொழிற் சங்கங்கள் ஆட்சேபித்தன.

நிர்வாகத்தினர்கள் அளித்த மேற்கண்ட பிரிவு 9 A அறிவிப்பு தொடர்பாக தொழிற் தாவாவில் சமரசப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. இப்பேச்சுவார்த்தைகளில் உடன்பாடு காண வாய்ப்பில்லாததால், அரசு இத்தாவாவினை சென்னை, தொழிற் தீர்ப்பாயத்தின் தீர்வுக்கு விட்டு அரசாணை (டி) எண் 799, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்: 19–09–2002–ல் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், இத்தாவாவினை விரைவில் தீர்க்க இதனை சிறப்பு தொழிற் தீர்ப்பாயத்திற்கு மாற்றி, அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்தாவா தற்போது, சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் முன்னிலையில் நிலுவையில் உள்ளது. தொழிற் தாவா சிறப்பு தொழிற் தீர்ப்பாயம் முன்பு நிலுவையில் உள்ள நிலையில், தாவாவில் கவரப்பட்ட தோட்ட நிறுவனங்கள் ஏதும், ஏற்கெனவே இருந்த பணி நிலைகளை தொழிலாளர்களுக்குப் பாதகமாக மாற்றவோ அல்லது உத்தேசித்துள்ள பணி நிலைகளில் மாற்றத்தினையோ செய்யக் கூடாது. வால்பாறையில் உள்ள தோட்ட நிறுவனங்களுக்கும் சிறப்புத் தொழில் தீர்ப்பாயத்தின் முன்னிலையில் உள்ள தாவாவில் கவரப்பட்டதால், அந்த நிறுவனங்களும் ஏற்கெனவே இருந்த பணிநிலைகளை மாற்றக் கூடாது.



2005 ஏப்ரல் 13]

4. வால்பாறையிலுள்ள தோட்ட நிறுவனங்களில் பெரும்பாலானவை, தொழிலாளர்களை 25 முதல் 35 கிலோ வரை இலை பறிக்க வற்புறுத்துவதாக முறையீடுகள் பெறப்பட்டு, கோவை, தொழிலாளர் துணை ஆணையர் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. நிர்வாகங்கள் தரப்பில் தொழிலாளர்கள் ஊக்கத் தொகை அதிகமாக பெற தொழிலாளர்கள் அவர்களாகவே முன்வந்து, அதிக உற்பத்தி செய்கின்றனர் எனத் தெரிவித்துள்ளனர். தொழிலாளர்களுக்கு ஊக்க ஊதியத் தொகை குறித்த பிரச்சினை சிறப்புத் தீர்ப்பாயத்தில் நிலுவையில் இருந்து வருகின்ற நிலையில், ஊக்க ஊதியத் தொகை குறித்து பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள இயலாது என்றும், நிர்வாகங்களின் இந்நடவடிக்கை பணி நிலைமைகளுக்கு மீறிய செயல் என்றால், இதுகுறித்து சிறப்புத் தீர்ப்பாயத்தின்முன் தொழிற் தகராறு சட்ட விதிகளின்படி தீர்வு காணலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

5. தொழிலாளர்களை 25 கிலோ முதல் 35 கிலோ வரை இலை பறிக்க வற்புறுத்துவது தொழிலாளர்களின் பணிநிலையை மாற்றங்கள் செய்வதற்கு ஒப்பாகும். இதுகுறித்து சிறப்புத் தொழிற் தீர்ப்பாயம் முன்பு புகார் மனு தாக்கல் செய்யலாம். மேலும் உற்பத்தி குறைவிற்காக பிடித்தம் செய்யப்பட்ட தொகையை திருப்பியளிக்கக் கோரி கேட்பு மனுவும் தாக்கல் செய்யலாம். வால்பாறையில் உள்ள சில தோட்ட நிறுவனங்கள் நிர்வாகங்களுக்கு எதிராக ஏற்கெனவே நடைமுறையில் உள்ள உற்பத்தி அளவிற்கு அதிகமாக இலை பறிக்க வேண்டும் என்று நிர்வாகம் வலியுறுத்தி வருவதாக சிறப்புத் தொழிற் தீர்ப்பாயம் முன்பு சில தொழிற் சங்கங்கள் புகார் செய்துள்ளன.

6. இதற்கிடையில் தோட்ட நிறுவனங்களில் நிர்வாகத்தினருக்கும், தொழிற் சங்கங்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பரிசீலித்து வந்த சென்னை சிறப்புத் தொழிற் தீர்ப்பாய நடுவர் வயது முதிர்வு காரணமாக பதவியிலிருந்து 21–01–2005 அன்று ஓய்வு பெற்றுவிட்டார். இவருக்குப் பதிலாக சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரிடமிருந்து நீதிபதிகளின் பெயர்ப் பட்டியலைப் பெற்று நடுவர் ஒருவரை நியமனம் செய்ய அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. சிறப்பு நீதிமன்றத்திற்குப் புதியதாக நடுவர் நியமனம் செய்யப்பட்டதும் இப்பிரச்சினைகளில் தீர்வு காண இயலும்.

[2005 ஏப்ரல் 13

**47. திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், மருகூர் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம் கொண்டுவருதல்**

**உறுப்பினர்: திரு. பி.எம். நரசிம்மன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

*திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், ஆதிவராகபுரம் ஊராட்சி, மருகூர் கிராமத்தின் மக்கள் தொகை 210. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு வரப்பெற்ற நிதியில் மூன்றாம் தவணை வரையிலான ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் நான்காம் தவணை வறட்சி நிவாரணத் தொகை ஒதுக்கீடு பெறப்பட்டதும் ஆதிவராகபுரம், மருகூர் கிராமத்திற்கு புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தால் மருகூர் கிராமம், ஆதிவராகபுரம் கிராமங்கள் பயனடையும்.*

**48. திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், திருநாதராஜபுரம் கிராம மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம் கொண்டுவருதல்**

**உறுப்பினர்: திரு. பி.எம். நரசிம்மன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

*திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு ஒன்றியம், திருமால்ராஜுப்பேட்டை ஊராட்சி, திருநாதராஜபுரம் கிராமத்தின் மக்கள் தொகை 1000. அப்பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறு வறட்சியால் வற்றிவிட்டது. வறட்சி நிவாரணத் திட்டம் 2004–2005 ஆம் ஆண்டு மூன்றாம் தவணை வரையிலான வரப் பெற்ற நிதி ஒதுக்கீடு முழுவதும் ஊராட்சிகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டது. எனவே, மீண்டும் வறட்சி நிவாரணத் தொகை நான்காம் தவணை ஒதுக்கீடு*



2005 ஏப்ரல் 13]

*பெறப்பட்டதும் திருமால்ராஜுப்பேட்டை, திருநாதராஜபுரம் கிராமத்திற்கு புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தால் திருநாதராஜபுரம் கிராமம், திருமால்ராஜுப்பேட்டை கிராமங்கள் பயனடையும்.*

**49. திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியம், எம்.ஜி.ஆர். நகர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீராதாரம் கொண்டு வருதல்**

**உறுப்பினர்: திரு. பி.எம். நரசிம்மன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

*எஸ்.வி.ஜி.புரம் (சந்தானவேணுகோபாலபுரம்) எம்.ஜி.ஆர். நகரில் மக்கள் தொகை 378. அப்பகுதியில் உள்ள ஆழ்துளைக் கிணறு வறட்சியால் வற்றிவிட்டது. வறட்சி நிவாரணம் 2004–2005 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டில் ரூ.40,000/– மதிப்பீட்டில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. தற்போது நிலத்தடி நீரை ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி பணி 10 தினங்களில் முடிவு பெறும். இத்திட்டத்தினால் சமத்துவபுரம் எம்.ஜி.ஆர். நகர் கிராமங்கள் பயனடைகின்றன.*

**50. அவினாசி–அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் விரைவுபடுத்தல்**

**உறுப்பினர்: திரு. வி.கே. லட்சுமணன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

*மேம்பாட்டு ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர், நிதித் துறை, செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, செயலர், பொதுப் பணித் துறை மற்றும் தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை ஆகியோர் 3–1–2003 அன்று கலந்துகொண்ட ஆய்வுக் கூட்டத்தில் பின்வரும் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.*

[2005 ஏப்ரல் 13

1. அவிநாசி–அத்திக்கடவு பகுதியில் அடங்கிய பெரும்பாலான பகுதிகளுக்கு குடிநீர்த் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதால், பவானி ஆற்றின் உபரி நீரை குடிநீருக்காக குளம் குட்டைகளை நிரப்ப திருப்பிவிட வேண்டியதில்லை.

2. திட்டப் பகுதியில் நிலத்தடி நீரை செறிவூட்ட பிரதம மந்திரியின் கிராமோத்ய யோஜனா திட்டத்தின்கீழ் அண்ணா பல்கலைக்கழகம் கண்டறிந்த இடங்களில் செயல்படுத்தலாம்.

3. அவிநாசி–அத்திக்கடவு பகுதிகளுக்கு நீர்ப் பாசனம் தொடர்பாக நிலத்தடி நீரை மேம்படுத்த மட்டும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால், காவிரி நீர் ஒதுக்கீடு குறித்தான நடவடிக்கையை காவிரி நதிநீர் ஆணையத்தின் இறுதி அறிக்கை பெறப்பட்டபின் மேற்கொள்ளலாம்.

இதனடிப்படையில் நீர் செறிவூட்டு கட்டமைப்புகள் அமைக்க அண்ணா பல்கலைக்கழகத்தால் கண்டறியப்பட்ட 218 இடங்களில் பொதுப் பணித் துறை மற்றும் வேளாண்மைத் துறையினரால் 133 இடங்களில் கட்டமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பிரதம மந்திரியின் கிராமோத்ய யோஜனா திட்டத்தின்கீழ் 80 இடங்களில் நீர்த்தடுப்பு கட்டமைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 இடங்களில் கட்டமைப்புகள் தேவையின்மையின் காரணமாக பணிகள் கைவிடப்பட்டன.

இத்திட்டப் பகுதியில் அடங்கிய கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களைச் சார்ந்த 7 ஒன்றியங்களிலுள்ள மொத்தம் 2114 ஊரக குடியிருப்புகளில் 1508 குடியிருப்புகளுக்கு ரூ.110.72 கோடி செலவில் ஆற்று நீராதாரத்துடன் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள 606 குடியிருப்புகளுக்கு ஆற்று நீராதாரத்துடன் குடிநீர் வழங்கும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இவற்றுள் 166 குடியிருப்புகளுக்கு களப் பணிகள் துவங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 440 குடியிருப்புகளுக்கு களப் பணிகள் துவக்க ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.



2005 ஏப்ரல் 13]

**51. வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூரில் குடிநீர்ப் பிரச்சினை**

**உறுப்பினர்: திரு. டி.கே. இராஜா**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு அரசாணை எண் 144, நாள்: 17–10–2002–ல் ரூ.116.70 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டத்தில் உள்ளது. இத்திட்டத்தில் 27,167 மக்கள் பயன்பெறும்வண்ணம் நாளொன்றுக்கு 20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்குமாறு திட்டம் வடிவமைக்கப்பட்டது.

கடந்த காலங்களில் வேலூர் மாவட்டத்தில் மழை பொய்த்துவிட்டதனால் ஜோலார்பேட்டை நகராட்சிக்கு தினசரி 7.4 இலட்சம் லிட்டர் குடிநீர் (ஆற்று நீராதாரத்தில் 5.00 இலட்சம் லிட்டர், 28 கைப்பம்பில் 1.92 இலட்சம் லிட்டர், 5 சிறு மின் விசைத் திட்டத்தில் 0.48 இலட்சம் லிட்டர்) விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மேலும், எதிர்வரும் வறட்சியைச் சமாளிக்க 100 கைபம்புகள், 15 சிறு மின் விசைத் திட்டங்கள் ஏற்படுத்தவும், லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யவும், ரூ.103 இலட்சத்தில் கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யத் திட்டம், தீட்டப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம், அரசாணை எண் 272, நாள்: 31–12–1996–ல் ரூ.410.50 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு வாரியத்தின் மூலம் 2001–2002–ல் நிறைவேற்றப்பட்டு நகராட்சி வசம் திட்டம் 9/2002–ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் மூலம் 63,304 மக்கள் பயன்பெறும்வண்ணம் நாளொன்றுக்கு 57.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டது.

[2005 ஏப்ரல் 13

தற்போது வேலூர் மாவட்டத்தில் கடந்த 5 ஆண்டுகளில் பருவ மழை பொய்த்துவிட்டதனால் இத்திட்டத்தின்மூலம் 6.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே பெற முடிகிறது. இதர வகைகளில் 150 கையிறைப்பான்கள் மூலம் 2.25 இலட்சம் லிட்டர், 27 சிறு மின்விசைத் திட்டங்கள் மூலம் 3.60 இலட்சம் லிட்டர் குடிநீர் தற்போது கிடைக்கிறது. ஆக மொத்தம், தற்போது 11.85 இலட்சம் லிட்டர் குடிநீர் இந்நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியை நீக்க திருப்பத்தூர் நகராட்சியில் புதிதாக 180 கைப்பம்புகளும், 30 சிறு மின்விசைத் திட்டங்களும், மேலும் லாரிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்ய ரூ.156.00 இலட்சத்திற்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இதன்மூலம் கூடுதலாக குடிநீர் தினசரி வழங்கப்படும்.

### 52. வேலூர், ஆற்காடு சாலை, சி.எம்.சி. மருத்துவமனை எதிரில் தேங்கியுள்ள கழிவுநீரை அகற்றுதல்

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

#### அறிக்கை

வேலூர் ஆற்காடு சாலையில் அமைந்துள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கானார் தூர்ந்துவிட்ட காரணத்தினால் சாக்கடை நீர் ரோட்டில் வழிந்தோடி சுகாதாரக் கேடு ஏற்பட்டதையடுத்து, கானார் அடைப்பை எடுப்பதற்கு வேலூர் நகராட்சி மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தற்போது சாக்கடை நீர் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. கானார் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளும்போது இந்த கானார் பல ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டுள்ளதால், கானார் பக்க சுவர் மற்றும் மேல் மூடு சிலாப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால், கானார் முழுவதும் தூர் வாரி மீண்டும் சீரமைக்கும் பணியினை மேற்கொள்வது குறித்து வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நெடுஞ்சாலைத் துறை மற்றும் நகராட்சி அலுவலர்களுடன் நேரடி ஆய்வு செய்து, இப்பணிக்கு மதிப்பீடு தயார் செய்து, இப்பணியை உடனடியாக நகராட்சி மூலம் மேற்கொள்ள



2005 ஏப்ரல் 13]

அறிவுறுத்தியதன்படி, ரூ.10.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இருந்து நிதியை எதிர்நோக்கி அவசர அவசியத்தைக் கருதி, இப்பணியை நகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் (Section 15) மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி தொடங்கப்பட்டுவிட்டது. இப்பணி விரைவில் வேலூர் நகராட்சியால் முடிக்கப்பட்டுவிடும்.

### 53. சேலம், எடப்பாடி தொகுதி, காளியம்மன் கோயில் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

#### அறிக்கை

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் 2001 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 48,804 ஆகும். எடப்பாடி நகராட்சிக்கு காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தினமும் 5.5 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வடிவமைக்கப்பட்டு 1999–லிருந்து குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்பொழுது எடப்பாடி நகராட்சியின் நிதி பற்றாக்குறை காரணமாக தினமும் 36 இலட்சம் லிட்டர் மட்டும் தேவைக்கேற்ப குறைத்துக்கொண்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 74 லிட்டர் வீதம் குடிநீர் சீராக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் எடப்பாடி நகராட்சி பகுதியில் சேலம் மெயின் ரோடில் அமைந்துள்ள காளியம்மன் கோவில் பகுதி மக்களுக்கு வெள்ளாண்டி வலசு பகுதியில் கட்டப்பட்டுள்ள 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்தும், பூலாம்பட்டி ரோடில் அமைந்துள்ள காளியம்மன் கோவில் பகுதி மக்களுக்கு ஆலச்சம்பாளையம் பகுதியில் கட்டப்பட்டுள்ள 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்தும் காவிரி நீர் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 74 லிட்டர் வீதம் எந்தவித தட்டுப்பாடுமின்றி தினமும் சீராக அருகிலேயே வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே இப்பகுதிக்குப் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தேவையில்லை.

[2005 ஏப்ரல் 13

**54. வேலூர் மாவட்டம் முழுவதும் வறட்சியால் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை**

**உறுப்பினர்: திரு. துரைமுருகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டத்தில் பருவமழை குறைவின் காரணமாக ஏற்பட்ட வறட்சியைப் போக்க கடந்த ஆண்டு வேலூர் மாவட்டத்தில் ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 142 தனி மின்விசைத் திட்டங்கள், 770 சிறு மின்விசைத் திட்டங்கள், 917 கையிறைப்பான் திட்டங்கள், 115 தடுப்பணைகள் மற்றும் புராதன நீராதாரங்களை சீரமைக்கும் திட்டப் பணிகள் ஆகியவை சுமார் ரூ.18.00 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது தவிர, மேல்விஷாரம், ஜோலார்பேட்டை, காவேரிப்பாக்கம், பணப்பாக்கம், வாலாஜாப்பேட்டை நகராட்சி, வேலூர், சத்துவாச்சாரி நகராட்சிகள் மற்றும் 12 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் மேல்விஷாரத்தில் பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. ஜோலார்பேட்டை, வேலூர் மற்றும் சத்துவாச்சாரி ஆகிய நகராட்சிகளுக்கு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் முடிவுறும் தருவாயில் உள்ளது.

இது தவிர, வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் 2002–2003, 2003–2004, 2004–2005 ஆகிய ஆண்டுகளில் ரூ.1013.75 இலட்சங்களுக்கு வறட்சி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடிநீர்த் தட்டுப்பாட்டு நிலை தவிர்க்கப்பட்டது.

2004–2005 ஆம் ஆண்டில் 11–வது நிதிக் குழு மற்றும் ஊரக வளர்ச்சிக் குழுமம் ஆகியவற்றின்மூலம் முறையே ரூ.258.87 இலட்சம், ரூ.291.38 இலட்சம் நிதி, வளர்ச்சி நிவாரணப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ரூ.255.93 இலட்சம் மதிப்பீட்டில் கையிறைப்பான் திட்டங்கள், சிறு மின்விசைத் திட்டங்கள் மற்றும் நீராதாரம் அமைத்தல் போன்ற 3973 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



2005 ஏப்ரல் 13]

வேலூர் மாவட்டத்தில் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக நகரகப் பகுதிகளில் 4368 பணிகளுக்கு ரூ.23 கோடி மதிப்பீட்டில் கருத்துருவும், ஊரகப் பகுதிகளில் 2493 பணிகளுக்கு ரூ.15.25 கோடி மதிப்பீட்டில் கருத்துருவும் பெறப்பட்டுள்ளது.

உடனடி நிவாரணமாக ஊரகப் பகுதிகளில் 71 சிறு மின்விசைத் திட்டங்களும், 76 புதிய கையிறைப்பான்களும், 51 குடியிருப்புகளுக்கு புதிய நீராதாரம் தோற்றுவித்தல் ஆகிய 198 பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சிய தேவைப்படும் பகுதிகளில் வறட்சி நிலையைச் சமாளிக்கும் வகையில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், இம்மாவட்டத்திற்கு நிரந்தரத் தீர்வாக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் பற்றிய கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

**55. கோவை மாவட்டம், வால்பாறை நகராட்சி மூலமாகத் திருமண மண்டபம் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வால்பாறை நகராட்சி பகுதியில் தற்போது மூன்று தனியார் திருமண மண்டபங்கள் பயன்பாட்டில் உள்ளன. எனினும், பொதுமக்களுக்குப் பயன்படும்வண்ணம் நகராட்சிப் பொறுப்பில் திருமண மண்டபம் அமைப்பதற்கு வால்பாறை வட்டாட்சியர் அலுவலகம் அருகில் உள்ள வால்பாறை நகராட்சிக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் திருமண மண்டபம் அமைத்திட சட்டமன்ற உறுப்பினர் நிதி அல்லது பாராளுமன்ற உறுப்பினர் நிதி கோரப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேற்காண் இடத்தில் திருமண மண்டபம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2005 ஏப்ரல் 13

## 56. வேலூர் தொகுதி, அல்லாபுரம், தொரப்பாடி, சேண்பாக்கம் ஊராட்சிகளில் குடிநீர்ப் பிரச்சினை

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

### அறிக்கை

அல்லாபுரம் மற்றும் தொரப்பாடி சிறப்பு கிராம ஊராட்சிகளின் கூட்டுக் குடிநீர்த் திட்டம் கடந்த 31–5–2002–ல் முடிக்கப்பட்டு முழுமையாக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தைப் பராமரிப்பதற்காக சிறப்பு கிராம ஊராட்சியிடம் ஒப்படைக்கும் பொழுது அல்லாபுரத்திற்கு 21 இலட்சம் லிட்டர் குடிநீரும், தொரப்பாடிக்கு 6 இலட்சம் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டது. ஆனால், தொடர்ந்து ஐந்து வருடமாக பருவமழை பொய்த்ததன் காரணமாக பாலாற்றில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் குறைந்துவிட்டதனால், அல்லாபுரம் சிறப்பு கிராம ஊராட்சிக்கு அங்கு உள்ள ஆழ்துளைக் கிணறு, சிறுமின்விசை திட்டத்தின்மூலம் தினமும் 2.00 இலட்சம் லிட்டர் குடிநீரும், தலைமையிடத்திலிருந்து தினமும் 50,000 லிட்டர் குடிநீரும், இது தவிர வேலூர்–சத்துவாச்சாரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இருந்து தினமும் 3.00 இலட்சம் லிட்டர் குடிநீரும், ஆக மொத்தம் அல்லாபுரம் சிறப்பு கிராம ஊராட்சிக்கு நாள் ஒன்றுக்கு 5,50,000 லிட்டர் குடிநீர் 8–3–2005 முதல் வழங்கப்பட்டு வருகிறது. தொரப்பாடி சிறப்பு கிராம ஊராட்சிக்கு தற்சமயம் நாள் ஒன்றுக்கு 1,50,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் உள்ள தொரப்பாடி சிறப்பு கிராம ஊராட்சிக்கு தனியாக நீர் ஆதாரம் ஏற்படுத்தும்பொருட்டு துரிதப்படுத்தப்பட்ட நகரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் (AUWSP) ரூ.16.66 இலட்சத்திற்கு 4–3–2005–ல் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. விரைவில் இத்திட்டம் துவங்கப்படவுள்ளது.

சேண்பாக்கம் சிறப்பு கிராம ஊராட்சிக்கு ரூ.80.32 இலட்சம் செலவினத்தில் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு 12/2000–ல் சிறப்பு கிராம ஊராட்சி வசம் இக்குடிநீர்த் திட்டம் ஒப்படைக்கப்பட்டது.



2005 ஏப்ரல் 13]

மேற்படி ஊராட்சிக்கு, பாலாற்றில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு நீர் உறிஞ்சு கிணறுகள் மூலமாக 3.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மேலும் 85 கையிறைப்பான்களும் மற்றும் 7 சிறு மின்விசைத் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. இச்சிறப்பு கிராம ஊராட்சிக்கு 5.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. நபர் ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு ஒரு முறை 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

## 57. எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் பகுதியில் கூடுதலாகக் குடிநீர் விநியோகம் செய்தல்

**உறுப்பினர்: திரு. ஐ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

### அறிக்கை

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் பஞ்சாயத்தின் மக்கட்தொகை 8038 ஆகும். இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்திலுள்ள 175 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலிருந்து வைகுந்தம் பகுதியிலுள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் ஜூன் 2004 முதல் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. மகுடஞ்சாவடி அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வந்ததால், இத்திட்டத்தின்கீழ் பதிக்கப்பட்ட பிரதான குழாயை மாற்றியமைக்க வேண்டியிருந்ததால், தற்காலிகமாக குடிநீர் முழுமையாக வழங்க இயலாமல் இருந்தது. அப்போது உள்ளாட்சி அமைப்பின் பராமரிப்பில் உள்ள குடிநீர்த் திட்டங்களின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டது. தற்போது பிரதான குழாய் மாற்றியமைக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு அனைத்து (29) மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும் குடிநீர் ஏற்றப்பட்டு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் 01–03–2005 முதல் சீராக வழங்கப்பட்டு வருகிறது.

**58. வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஒன்றியம், காவலூர்-மந்தாரக்குட்டை பழுதடைந்த சாலையைச் சீர்செய்தல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் மாவட்டம், ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 291 மக்கள்தொகையுடைய மந்தாரக்குட்டை என்னும் கிராமத்திற்கு வாகனங்கள் செல்லக்கூடிய சாலை வசதி இல்லை. ஆயினும் அக்கிராமத்திற்குச் செல்ல இரு இயற்கையான மண்வழிப் பாதைகள் உள்ளன. அந்த இரு வழிகளும் வாகனங்கள் செல்ல ஏதுவான சாலைகள் அல்ல. இந்த ஊருக்கு இரண்டு வழிகள் இருந்தாலும் ஒரு வழி வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதால் ஊராட்சி ஒன்றியத்தால் சாலை அமைக்க வாய்ப்பில்லை. மற்றொரு வழி, போளூர்—ஜமுனாமுத்தூர்—ஆலங்காயம் சாலை கி.மீ. 57/6–ல் பிரிந்து மந்தாரக்குட்டை கிராமம் வழியாக ஜரபெண்டா செல்லும் 8.00 கி.மீ. நீளமுள்ள வழி மண் வழியாகும். அதில் 0/0–1/3 மற்றும் கி.மீ. 2.7–4/4 ஆகிய இரு பகுதிகளும் ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளாகும். மீதமுள்ள பகுதிகள் வனத் துறையைச் சார்ந்தவை ஆகும். இந்த 8 கி.மீ. நீளமுள்ள சாலை ரூ.128 இலட்சம் செலவில் பாரதப் பிரதமரின் சாலை மேம்பாட்டுத் திட்டடத்தில் (PMGSY) தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதற்கட்டமாக திட்டப்பகுதி 5–ல் (Phase V) முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள ரூ.47 இலட்சம் செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

**59. வேலூர் நகர் முழுவதும் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினை**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகரர்ட்சி மற்றும் 12 வழியோர கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.19.22 கோடிக்கு அரசு ஆணை எண் 106,





நாள் 11–8–2000 அன்று அனுமதி வழங்கப்பட்டு 10–12–2001 முதல் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் வேலூர் மற்றும் சத்துவாச்சாரி நகராட்சிகளுக்கு நாள் ஒன்றுக்கு முறையே 113 இலட்சம் லிட்டர் மற்றும் 48 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வேலூர் நகராட்சியின் மக்கள்தொகை 2001 ஆம் ஆண்டின் மறு ஆய்வின்படி 1,77,413 ஆகும். இத்திட்டத்தில உள்ள பொன்னை தலைமையிடம், கருகம்புத்தூர் தலைமையிடம் ஆகிய இரண்டில் பொன்னை தலைமையிடத்தைச் சார்ந்த தெங்காலில் அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டு, வேலூர் நகராட்சிக்கு புதிய மற்றும் பழைய மேல்நிலை குடிநீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு 45.00 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், வேலூர் நகராட்சிக்கு பாலாறு தலைமையிடத்தில் தற்போது புதிதாக கட்டப்பட்ட 6.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து நகராட்சியின் பழைய நீர்த்தேக்கத் தொட்டியுடன் குழாய் மூலம் இணைக்கப்பட்டு கூடுதலாக 30.00 இலட்சம் லிட்டர், ஆக மொத்தம் வேலூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு 75.00 இலட்சம் லிட்டர் குடிநீர் 26–1–2005 முதல் இத்திட்டத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இதுதவிர, மேலும் நகராட்சியின் பழைய தலைமையிடங்களான ஓட்டேரியிலிருந்து 9.00 இலட்சம் லிட்டரும், பழைய பாலாறு தலைமையிடத்திலிருந்து 5.00 இலட்சம் லிட்டரும், நகராட்சியிலுள்ள 635 கைப்பம்புகள், 52 சிறு மின்விசைத் திட்டங்கள் மூலம் 21 இலட்சம் லிட்டரும் ஆக மொத்தம் 110 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் வேலூர் நகராட்சியில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 56 லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், தற்சமயம் செயலாக்கத்திலுள்ள கருகம்புத்தூர் தலைமையிடத்திலிருந்து பாலாறு தலைமையிடத்திற்கு 740 மீட்டர் நீளத்திற்கு பிரதான குழாய் பதிக்கப்படும் பணி மார்ச் 2005–க்குள் முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படவுள்ளது. இதனால் கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

[2005 ஏப்ரல் 13

**60. வேலூர், சி.எம்.சி. மருத்துவமனையைச் சுற்றித் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல்**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் நகரிலுள்ள சி.எம்.சி. மருத்துவமனையைச் சுற்றியுள்ள முக்கிய சாலைகளான ஆற்காடு ரோடு, காட்பாடி ரோடு, ஆபீசர்ஸ் லைன் ஆகிய பகுதிகள் தூய்மைப் பகுதிகளாக 2003-ல் அறிவிக்கப்பட்டு, தொடர் துப்புரவுப் பணி செய்யப்பட்டு தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், காந்தி ரோடு பகுதிகளும் இவ்வாறே தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. சி.எம்.சி. மருத்துவமனை எதிரில் உள்ள கழிவு நீர்க் கால்வாயில் உள்ள தூர் அகற்றப்பட்டு, தற்போது ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கால்வாய் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மேற்சொன்னவாறு சி.எம்.சி. மருத்துவமனையைச் சுற்றியுள்ள பகுதிகள் சுகாதாரமாகவும், சாக்கடை நீர் தேங்காமலும் வேலூர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**61. வேலூர் நகராட்சி, சதுப்பேரி உரக் கிடங்கினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

வேலூர் நகராட்சிக்குட்பட்ட சதுப்பேரியில் தற்போது இயங்கிவரும் உரக் கிடங்கை மாற்றியமைக்கும்பொருட்டு சாத்துப்பாளையம் கிராமம் சர்வே எண் 5/1, 5/2, 5/3 மற்றும் 6/7-ல் 4,175 ஹெக்டேர் (10.31 ஏக்கர்) பரப்பளவுள்ள நிலம் புதியதாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. புதிய உரக் கிடங்கிற்காக நிலம் வாங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு எண் 63034/99/ஜி1, நாள் 12-4-2001-ல் ரூ.9.00 இலட்சம் வேலூர் நகராட்சிக்கு நிதி ஒதுக்கப்பட்டு



2005 ஏப்ரல் 13]

பெறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் உரக் கிடங்கு அமைக்க சென்னை, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரிய உறுப்பினர்—செயலர் கடித எண் 26482/2002, நாள் 8-4-2004-ல் மறுப்பில்லா சான்றும் நகராட்சியால் பெறப்பட்டுள்ளது. இந்த நிலத்தினை தனிப்பட்ட பேச்சுவார்த்தை மூலம் கிரயம் பெறும் பொருட்டு வேலூர் வட்டாட்சியர் கடித ந.க. எண் பி1/ 8497/2004, நாள் 31-12-2004-ல் மேற்படி நிலத்திற்கான விலை நிர்ணயம் செய்ய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார். வேலூர் மாவட்ட நிர்வாகத்தால் விலை நிர்ணயம் செய்து ஆணை பெறப்பட்டவுடன், தனிப்பட்ட பேச்சுவார்த்தைமூலம் கிரயம் பெற்று மேற்குறிப்பிட்ட இடத்தில் நகராட்சியால் உரக் கிடங்கு அமைக்கப்படும்.

தற்போது சதுப்பேரியிலுள்ள உரக் கிடங்குப் பகுதியை சுற்றுச்சூழல் பாதிக்காதவண்ணம் மருந்துகள் தெளித்து சுகாதார முறையில் வேலூர் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**62. சென்னை, தியாகராயநகர் தொகுதி, 125-வது வார்டு, பக்தவத்சலம் தெருவில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. ஜெ. அன்பழகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

தியாகராயநகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள மேற்கு மாம்பலம் பகுதியில், 123 மற்றும் 125 ஆகிய வட்டங்கள் அடங்கியுள்ளன.

இப்பகுதியில் 84 தெருக்கள் உள்ளன. மக்கள்தொகை சுமார் 87,000 ஆகும். இப்பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக அசோக் நகரில் 11-வது நிழற்சாலையில் 4 இலட்சம் லிட்டர் கொள்ளளவுடைய குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. இதன்மூலம், 21 தெருக்களுக்கு குடிநீர் குழாய் மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 15 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 63 தெருக்களுக்கு ஜனவரி 2005 வரை, புதிய வள்ளுவர் கோட்டம் மேல்நிலை குடிநீர்த் தொட்டியிலிருந்து, ஒரு நாள் விட்டு ஒரு நாள் சுமார் 70 இலட்சம் லிட்டர் குடிநீர் குழாய்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

ஜனவரி 2005-க்குப் பிறகு, மேற்கண்ட 63 தெருக்களுக்கும் சூளைமேடு குடிநீர் விநியோக நிலையத்திலிருந்து, இரண்டாவது சென்னை திட்டத்தின்கீழ் பதிக்கப்பட்ட புதிய குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இப்பகுதியில், மொத்தமுள்ள 84 தெருக்களில், 81 தெருக்களுக்குப் போதுமான அளவு குடிநீர்க் குழாய்கள்மூலம் ஒரு நாள் விட்டு ஒரு நாள் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 3 தெருக்களில், 50 விழுக்காடு தெருக்களுக்கு மட்டும் குழாய்கள் மூலமும், குடிநீர் சென்றடையாத கடைநிலைப் பகுதிகளுக்கு 30,000 லிட்டர் குடிநீர் தினமும் லாரிகள் மூலமும் வழங்கப்பட்டு வருகிறது. இப்பகுதியில் சராசரியாக நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதம் குடிநீர் குழாய் மூலம் வழங்கப்படுகிறது. குடிநீர் வராத வீடுகளுக்கு மேம்பாட்டுப் பணிகள் தனியாக மேற்கொள்ளப்பட்டு, ஒரு மாதத்திற்குள் முடித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

எனவே, இப்பகுதியில் மேலும் தனியாக ஒரு மேல்நிலைத் தொட்டி அமைக்கத் தேவையில்லை.

**63. கோவில்பட்டி நகராட்சி, குடிநீர் முறையாக விநியோகிக்கப்படாமை**

**உறுப்பினர்: திரு. சோ. இராசேந்திரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கோவில்பட்டி நகராட்சியின் தற்போதைய மக்கட்தொகை 87,458. நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் தற்பொழுது தேவைப்படும் குடிநீரின் அளவு 78.70 இலட்சம் லிட்டர் ஆகும்.

கோவில்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தலைமைப் பணியிடம் தாமிரபரணி ஆற்றில் சீவலப்பேரி அருகில் அமைந்துள்ளது. தலைமைப் பணியிடத்தில் உள்ள நீர் சேகரிப்பு கிணறு மூலமாக குடிநீர் உந்தப்பட்டு ராஜாபுதுக்குடி, சாலைப்புதூர், சவலாப்பேரி, கோவில்பட்டி நீருந்து நிலையங்கள் மூலமாக தொடர் நீருந்து முறை மூலமாக சுமார் 50.14 கி.மீ. தூரம் நிறுவப்பட்டுள்ள நீருந்து குழாய்கள் மூலம் கோவில்பட்டி



நகராட்சிக்கு சராசரியாக தினமும் 60 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1976 முதல் செயல்பட்டு வருகிறது.

13-11-2004 அன்று தாமிரபரணி ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக ஆற்றில் நிறுவப்பட்டுள்ள 450 மி.மீ. இரும்புக் குழாய்களில் பழுது ஏற்பட்டு, 14-11-2004 அன்று முதல் குடிநீர் வழங்குதலில் தடை ஏற்பட்டது. தாமிரபரணி ஆற்றில் நீர்வரத்து குறையாத காரணத்தினால் தற்காலிக நடவடிக்கையாக, கயத்தார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குரிய 200 மி.மீ. இரும்புக் குழாய்கள் இரண்டு இணைக் குழாய்களாக சுமார் 1,096 மீட்டர் நீளத்திற்கு நிறுவப்பட்டு, 30-11-2004 முதல் மீண்டும் குடிநீர் அனைத்துப் பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டது. இத்தற்காலிக முறையில் கோவில்பட்டி நகராட்சிக்கு சராசரியாக 40 இலட்சம் லிட்டர் குடிநீர் 29-1-2005 வரை வழங்கப்பட்டது. இதன்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 46 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

தாமிரபரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு குறைந்த பின்னர் 450 மி.மீ. இரும்புக் குழாய்களில் பழுது 30-1-2005-ல் சரி செய்யப்பட்டு நடைமுறையில் உள்ள குடிநீர்த் திட்டக் குழாய்கள் மூலம், தற்போது சுமார் 55 இலட்சம் லிட்டர் குடிநீர் 5-2-2005 முதல் கோவில்பட்டி நகராட்சி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 63 லிட்டர் குடிநீர் கிடைக்கின்றது.

**64. சேலம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், சில ஊராட்சிகளில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. இ. கணேசன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், கனககிரி, கன்னந்தேரி மற்றும் அ. புத்தூர் ஊராட்சிகளில், கீழ்க்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 13

| வ. எண் | ஊராட்சியின் பெயர் | குடிநீர் ஆதாரங்களின் விவரம் |
|---|---|---|
| 1. | கன்னநந்தேரி ஊராட்சி | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி 1<br>மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 6<br>சிறு மின்விசைப் பம்புகள் 6 |
| 2. | அ.புத்தூர் ஊராட்சி | தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி 1<br>மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 13<br>மினி டேங்குகள் 3 |
| 3. | கனககிரி ஊராட்சி | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் 9<br>மினி டேங்குகள் 3 |

மேற்கண்ட குடிநீர் ஆதாரங்கள் மூலம் காவிரி குடிநீர்த் திட்டம், கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் மூலம் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**65. கிராம ஊராட்சிகளின் மின்கட்டண பாக்கிக்கான வட்டியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்துதல்**

**உறுப்பினர்: திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகளின் மின் கட்டண நிலுவை பாக்கியினை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் செலுத்த வேண்டும் என்று மின்சார வாரியம் கேட்டுக்கொண்டதன்பேரில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், கிராம ஊராட்சிகள் மின்சாரக் கட்டணத்தை உரிய காலத்தில் செலுத்தவும், காலதாமதத்தினால் மின்சார வாரியத்தால் விதிக்கப்படும் அபராத வட்டியைத் தவிர்க்கும் பொருட்டும், கிராம ஊராட்சிகளின் அனைத்து வருவாய்களையும் பெருக்கி, மின் கட்டண நிலுவையைச் செலுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டது. மேலும், கிராம ஊராட்சிகள் மின் கட்டணத்தை உரிய காலத்தில் நிலுவையின்றி செலுத்துவதற்குரிய நடைமுறையை ஏற்படுத்துவதற்கும், ஊராட்சிகளின் காலதாமதத்தினால் மின்சார வாரியத்திற்கு செலுத்தப்படும் 18 சதவிகித



2005 ஏப்ரல் 13]

அபராத வட்டியைத் தவிர்ப்பதற்காகவும், பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் வசதி மற்றும் மின் விளக்கு வசதி வழங்குவதற்கும், ஊராட்சித் தலைவர்களுக்கு உதவும்பொருட்டும், மேலும் போதிய நிதி வசதி இருந்தும், மின்சார வாரியத்திற்கு நிலுவை வைப்பதும், அதன் விளைவாக 18 சதவிகிதம் வட்டி செலுத்த நேருவதையும் தவிர்க்கவும், ஊராட்சிகளின் நிர்வாக அலுவலரான ஊராட்சித் தலைவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**66. புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஊராட்சி, காட்டுநாவல் பகுதியில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் காட்டுநாவல் ஊராட்சி, கந்தர்வக்கோட்டை, பெருங்கிராமத்திற்கு 1.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

காட்டுநாவல், துளுக்கம்பட்டி மற்றும் செட்டிகாடு ஆகிய கிராமங்களைக் கொண்ட காட்டுநாவல் ஊராட்சியின் மக்கள்தொகை 2,790 ஆகும்.

காட்டுநாவல் கிராமப் பள்ளி அருகில் ஒரு கையிறைப்பானும், ஆதி திராவிடர் பழைய தெருவில் ஒரு கையிறைப்பானும் உள்ளது.

காட்டுநாவல் குறும்பக்குடி சாலையில் 6,000 லிட்டர் கொள்ளளவுள்ள ஒரு மேல்நிலைத் தொட்டி விசையிறைப்பான் மற்றும் ஆதி திராவிடர் பழைய தெருவில் 15,000 லிட்டர் கொள்ளளவு உள்ள ஒரு விசையிறைப்பானும் உள்ளது.

ஆதி திராவிடர் காலனி மேற்கிலும், காட்டுநாவல் கல்யாண மண்டபம் அருகிலும் தலா 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 சிறு மின்விசை இறைப்பான்கள் உள்ளன.

துளுக்கம்பட்டி கிராமத்தில் ஒரு கையிறைப்பானும், 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட விசையிறைப்பானும், 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட சிறு மின்விசை இறைப்பானும் உள்ளது.

[2005 ஏப்ரல் 13

செட்டிகாடு கிராமத்தில் ஒரு கையிறைப்பானும், 1,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட விசையிறைப்பானும் உள்ளது.

மேற்கூறிய குடிநீர் ஆதாரங்கள் மூலமாக ஏற்கெனவே, நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் குடிநீருக்குக் குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், மூன்று குக்கிராமங்களிலும் ஏற்கெனவே இருந்த கையிறைப்பான்கள் மூன்றினை சிறு மின்விசை இறைப்பான்களாக மாற்ற தமிழ்நாடு குடிநீர் வாரியம் மூலம் தற்போது வேலை நடைபெற்று வருகிறது.

தற்போதுள்ள வசதிகள் காட்டுநாவல் பகுதி மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் வகையில் உள்ளன.

## 67. சென்னைக்கு வரும் கிருஷ்ணா நதி நீரின் அளவு குறைதல்

**உறுப்பினர்கள்: திரு. ஜே. ஹேமச்சந்திரன்**
**திரு. டி. மணி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

### அறிக்கை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1–10–2004 அன்று மாண்புமிகு ஆந்திரப் பிரதேச முதல்வர் அவர்களை ஹைதராபாத்தில் சந்தித்து கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்கீழ் கண்டலேறு அணையிலிருந்து சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்காக தண்ணீர் திறந்துவிட உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டார்கள்.

2. 2002, நவம்பர் மாதம் 23 ஆம் தேதி அன்று கண்டலேறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு 28–11–2004 முதல் 7–3–2005 வரை வினாடிக்கு 22 கன அடி வீதம் மொத்தம் 2716 டி.எம்.சி. தண்ணீர் மட்டும் தமிழக எல்லையில் வந்து சேர்ந்தது. 7–3–2005 அன்று நிலவரப்படி கண்டலேறு அணையில் 6.40 டி.எம்.சி. நீர் இருப்பு இருந்தது.

3. இதுவரை கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடும் தண்ணீர் அளவில் 30 முதல் 32 விழுக்காடுகள் வரைதான் தமிழக எல்லையில் வந்து சேருகிறது. மீதமுள்ள தண்ணீர் கண்டலேறு முதல் தமிழக எல்லை வரையில் ஆந்திர மாநிலத்தில் நெல்லூர் மற்றும் சித்தூர் மாவட்டப் பகுதிகளில் விவசாயத்திற்காகவும், மற்றும் காளஹஸ்தி, திருப்பதி நகரங்களுக்கு குடிநீருக்காகவும் எடுத்துக்கொள்ளப்படுகிறது.



2005 ஏப்ரல் 13]

4. கண்டலேறு அணையிலிருந்து திறந்து விடப்படும் நீர் தமிழக எல்லைக்குள் வந்து சேரும்முன், அதிக அளவில் ஆந்திரப் பகுதி விவசாயத்திற்கு நீர் எடுப்பதால், 30 முதல் 32 விழுக்காடு நீர் மட்டும் தமிழக எல்லையில் சேருவதை நினைவூட்டி, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் ஆந்திர அரசின் தலைமைச் செயலாளருக்கு 20–12–2004 மற்றும் 5–1–2005 ஆகிய தேதிகளில் இரண்டு கடிதங்களை அனுப்பி, தமிழக எல்லையில் வந்து சேருவதற்கு முன்பு ஆந்திர விவசாயிகள் அதிக அளவு தண்ணீர் எடுப்பதைத் தடுக்க நடவடிக்கை எடுத்து, தமிழக எல்லையில் கூடுதல் அளவு தண்ணீர் வந்து சேர ஆவன செய்யும்படிக் கேட்டுக்கொண்டார்கள். தொடர்ந்து, தமிழக எல்லையில் தண்ணீர் வந்து சேருவது போதிய அளவு அதிகரிக்காததால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதல்வர் அவர்களுக்கு 1–2–2005 அன்று எழுதிய கடிதம் மூலம் கண்டலேறு அணையிலிருந்து தமிழக எல்லையில் 2004 ஆம் ஆண்டில் 1.341 டி.எம்.சி. தண்ணீர் மட்டும் வந்துள்ளது என்றும், மேலும் 2 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு அனுப்புமாறும் கேட்டுக்கொண்டார்கள்.

5. ஆந்திர அரசு, முதலில் குறைந்தபட்சம் 3 டி.எம்.சி. அளவு தண்ணீர் தமிழக எல்லையில் கிடைக்க உறுதியளித்தது. ஆனால், 7–3–2005 வரை 2.716 டி.எம்.சி அளவே கிடைத்துள்ளது. 7–3–2005–ல் கண்டலேறு நீர்த்தேக்கத்தில் உள்ள 6.40 டி.எம்.சி. நீர் இருப்பைக் கொண்டு, கணிசமான அளவு கூடுதல் தண்ணீர் புவிசர்ப்பு விசைமூலம் தமிழக எல்லையில் கிடைக்க வாய்ப்பில்லை. மேலும், ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்தில் 88.85 டி.எம்.சி. (133 டி.எம்.சி. அதற்குமேல் இருந்தால் சோமசிலா நீர்த்தேக்கத்திற்கு நீர் செல்லும்) சோமசிலா நீர்த்தேக்கத்தில் 6.39 டி.எம்.சி. (21.5 டி.எம்.சி. அதற்கு மேல் இருந்தால் கண்டலேறு நீர்த்தேக்கத்திற்கு நீர் செல்லும்) மட்டும் 7–3–2005 அன்று நீர் இருப்பு இருந்தது.

6. பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஆகிய மூன்று ஏரிகளிலும் சேர்த்து மொத்த கொள்ளளவான 7.412 மில்லியன் கன அடியில், 7–3–2005 அன்று 2,364 மில்லியன் கன அடி நீர் இருந்தது. கடந்த ஆண்டு இதே நாளில், அதாவது 7–3–2004–ல், இந்த மூன்று ஏரிகளிலும் சேர்த்து 143 மில்லியன் கன அடி நீர் இருந்தது. சென்னை நகரின் குடிநீர் விநியோகத்திற்கு ஒரு பகுதி நீரை உபயோகப்படுத்தப்படும் ஆதாரமான செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த கொள்ளளவான 3,645 மில்லியன் கன அடியில் 7–3–2005 அன்று 196 மில்லியன் கன அடி நீர் இருந்தது.

[2005 ஏப்ரல் 13

மற்றுமொரு ஆதாரமாக, சென்னை நகருக்கு வடக்கில் மேற்பரப்பு நீர்த்தேக்கங்களுக்கு அருகில் ஆரணியாறு, கொசத்தலையாறு நீர்ப்படுகையில் அமைந்துள்ள கிணற்றுத்தளப் பகுதிகளிலிருந்து சென்னை நகரின் குடிநீர் விநியோகத்திற்காக நீர் எடுக்கப்படுகிறது. அக்டோபர்-டிசம்பர் 2004-ல் பொழிந்த மழையினால், நிலத்தடி நீர்மட்டம் உயர்வடைந்தது. இந்தக் கிணற்றுத் தளங்களிலிருந்து நாளொன்றுக்கு 85 முதல் 90 மில்லியன் லிட்டர் வரை நீர் எடுக்கப்படுகிறது.

7. மேற்பரப்பு நீர் ஆதாரங்களில் இருக்கின்ற நீரைக் கொண்டும், தெலுங்கு கங்கைத் திட்டத்தின்மூலம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து பெறப்பட்ட நீரைக் கொண்டும் மற்றும் புதிய வீராணம் திட்டத்திலிருந்து பெறப்படும் நீரைக் கொண்டும், சென்னை நகருக்கு சராசரியாக 540 மில்லியன் லிட்டர் நீர் ஒருநாள் விட்டு ஒருநாள் குழாய் மூலம் வழங்கப்படுவதுடன், மணலியிலுள்ள தொழிற்சாலைகளுக்கு தினமும் 45 மில்லியன் லிட்டர் நீரும், மொத்தமாகக் குடிநீர் பெறும் நுகர்வோர்களுக்கு தினமும் 15 மில்லியன் லிட்டர் நீரும் வழங்கப்பட்டு வருகிறது. சென்னை நகரில் மொத்தமுள்ள 15,089 தெருக்களில், சுமார் 90 சதவிகிதப் பகுதிகளுக்கு குழாய்கள்மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஒருநாள் விட்டு ஒருநாள் குடிநீர் வழங்கப்படுவதால் குழாய்களின்மூலம் குடிநீர் பெறப்படாத பகுதிகளுக்கு, நடை ஒன்றுக்கு 9,000 லிட்டர் கொள்ளளவுடைய 2,650 லாரி நடைகள் மூலம் நகரின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 5,000 குடிநீர்த் தொட்டிகள் நிரப்பப்பட்டும், மற்றும் 1,100 தெரு விநியோகம் மூலமாகவும் தினமும் 30 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒருநாள் விட்டு ஒருநாள் குழாய்களின் மூலம் குடிநீர் வழங்கும் முறை அமல்படுத்துவதற்கு முன்னர் 13,000 லாரி நடைகள் மூலம் சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது.

சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் ஏரிகளிலுள்ள நீர் இருப்பு, நிலத்தடி நீர் ஆதாரம், வீராணம் திட்டத்திலிருந்து பெறப்படும் நீர் ஆகியவை கூர்ந்து கண்காணிக்கப்பட்டு, சென்னை நகர மக்களின் குறைந்தபட்சத் தேவைக்குத் தேவையான அளவு குடிநீர் வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுதுள்ள நீர் இருப்பு நிலவரம் மற்றும் கோடை மழை, தென்மேற்கு பருவ மழை ஆகியவற்றை எதிர்நோக்கி, சென்னை நகருக்கு வழங்கும் குடிநீர் அளவு தொடர்ந்து இந்த ஆண்டு வடகிழக்குப் பருவ மழை வரை தட்டுப்பாடின்றி வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2005 ஏப்ரல் 13]

**68. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, மண்ணம் பகுதியில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. கோவை தங்கம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

கோவை மாவட்டம், வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆழியார் நகர், மண்ணம் பகுதியில் பாலாற்றின் குறுக்கே பாலம் கட்ட பாலாற்றில் பகுதி II திட்டத்தின்கீழ் கட்ட போதிய வாகனப் போக்குவரத்து (Traffic Intensity) இல்லாததால், இவ்விடத்தில் ஒரு தரைப்பாலம் ரூ.32 இலட்சம் செலவில் 2005-2006 ஆம் ஆண்டில் சட்டமன்றத் தொகுதி வளர்ச்சி நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**69. திருநெல்வேலி மாவட்டம், பனகுடி சிறப்புநிலை சிற்றூராட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர் நிதி வழங்கியும், குடிநீர்த் திட்டம் நிறைவேறாமை**

**உறுப்பினர்: திரு. மு. அப்பாவு**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

பனகுடி, வடக்கு வள்ளியூர் சிறப்பு சிற்றூராட்சி மற்றும் 142 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அரசாணை எண் 156, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 7-11-2000 மூலம் ரூ.1,670.60 இலட்சங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு, பின்பு செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தற்போது பனகுடி, வடக்கு வள்ளியூர் சிறப்பு சிற்றூராட்சிகள் மற்றும் 95 வழியோர கிராமங்களுக்கான பணிகள் நிறைவுற்று, சோதனை ஓட்டம் மூலம் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[2005 ஏப்ரல் 13

சிறப்பு சிற்றூராட்சிப் பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விதிகளின்படி 60 சதவிகித மக்கள் தொகை வீட்டு இணைப்பு மூலமாகவும், 40 சதவிகித மக்கள் தொகை பொது நல்லிகள் மூலமாகவும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன்படி பனகுடி சிறப்பு சிற்றூராட்சியில் ஏற்கெனவே உள்ள 10.5 பொது நல்லிகளையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, புதியதாக 15 பொது நல்லிகள் கூடுதலாக அமைத்துக் கொடுப்பதற்கு இந்தத் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மதிப்பீட்டில் உள்ளபடி 15 பொது நல்லிகளும் அமைக்கப்பட்டுள்ளன. புதியதாக அமைக்கப்பட்டுள்ள பகிர்மானக் குழாய்கள் (42.30 கிலோ மீட்டர்) மற்றும் 120 பொது நல்லிகள் மூலம் சோதனை ஓட்டம் அடிப்படையில் பொதுமக்களுக்கு தற்போது தாமிரபரணி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சோதனை ஓட்டம் முடிவடைந்த பிறகு பனகுடி சிறப்பு சிற்றூராட்சியிடம் மேற்படித் திட்டம் ஒப்படைக்கப்படும். அதன் பின்பு கூடுதலாக வீட்டு இணைப்புகள் வழங்குவதற்கு சிறப்பு சிற்றூராட்சி மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதைத் தவிர, மேலும் கூடுதலாக பொதுநல்லிகள் அமைப்பதற்கு வாரிய விதிகளின்படியும், திட்ட வடிவமைப்பின்படியும், மதிப்பீட்டின்படியும், வழங்கப்படும் திட்ட நீராதார வடிவமைப்பு அளவின்படியும் சாத்தியக்கூறுகள் இல்லை.

என்வே, பனகுடி சிறப்பு சிற்றூராட்சிப் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் நிதி வழங்கியும், 180 பொது நல்லிகள் அமைப்பதற்கு தொழில்நுட்ப அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**70. சென்னை, தியாகராயநகர் தொகுதி, ரங்கராஜபுரம் இரயில்வே கேட் பகுதியில் மேம்பாலம் கட்டுதல்**

**உறுப்பினர்: திரு. ஜெ. அன்பழகன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

ரங்கராஜபுரம் இரயில்வே கேட் பகுதியில் மேம்பாலம் கட்ட வரைபடம், மதிப்பீடுகள் முதலியவை தயாரித்து இரயில்வே துறையின்



2005 ஏப்ரல் 13]

ஒப்புதலுக்காகவும் மற்றும் திட்ட மதிப்பீட்டுத் தொகை பகிர்விற்கும் (50:50) கோரிக்கை 2–2–2005 அன்று அரசால் இரயில்வே துறையினருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரயில்வே துறையினர் இரயில்வே பகுதியின் வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு முதலியவை சென்னை மாநகராட்சியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளனர். இது சம்பந்தமாக மாநகராட்சி பொறியியல் துறையினர் இரயில்வே பொறியியல் துறை வல்லுனர்களுடன் கலந்து ஆய்வு செய்து, இரயில்வே துறையினர் கேட்டுக்கொண்டதன்படி திருத்தங்கள் செய்து மீண்டும் இரயில்வே துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இரு தரப்பு வரைபடங்களும், மதிப்பீடுகளும் பரிமாற்ற ஒப்புதல் பெறப்பட்டு இத்திட்டம் விரைவில் செயலாக்கப்படவுள்ளது. இரயில்வே பணித் திட்டத்தில் அகலப் பாதை மாற்றுத் திட்டத்தில் (gauge conversion) இப்பணி இடம்பெற்றுள்ளது.

**71. திருச்சி மாவட்டம், மணப்பாறையிலிருந்து செவலூர் செல்ல பாலம் அமைத்தல்**

**உறுப்பினர்: திரு. அ. பாப்பாசுந்தரம்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**அறிக்கை**

மணப்பாறை நகராட்சி, மணப்பாறையிலிருந்து செவலூர் செல்லும் சாலையில் மான்பூண்டி ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட நகர்மன்றத் தீர்மான எண் 284, நாள் 8–9–2004–ல் நிறைவேற்றப்பட்டு திருச்சி கோட்டப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறையிலிருந்து பணி மதிப்பீடு விவரம் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்விவரம் கிடைக்கப்பெற்றவுடன் அப்பணிக்குத் தேவையான நிதியை அரசின் நிதி உதவி அல்லது கடனாகவோ பெற்று நெடுஞ்சாலைத் துறைமூலம் பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**72. வேலூர் நகராட்சி, விடுதிகளைக் கட்டிக்கொண்டு, விடுகளுக்கான வரிகளைச் செலுத்துவதால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பு**

**உறுப்பினர்: திரு. சி. ஞானசேகரன்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

[2005 ஏப்ரல் 13

அறிக்கை

வேலூர் நகராட்சியில் 138 லாட்ஜ் / மேன்சன் / மன்ஜில் உள்ளன. அவற்றுக்கு சொத்து வரி, லாட்ஜுக்குரிய வரி விகிதத்தில் வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள இவ்வாறான கட்டடங்கள் தற்போது நடைபெற்று வரும் சொத்துக்கள் சர்வேயின்மூலம் கண்டறியப்பட்டு பொது சீராய்வின்போது அதற்கேற்றவாறு வரி விதிக்கப்படும்.

**73. புதுக்கோட்டை நகராட்சி, திருவப்பூர் பகுதி, கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பயனுக்கு வராமை**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

அறிக்கை

புதுக்கோட்டை நகராட்சி திருவப்பூர் பகுதியில் 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2003–2004–ன்கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையிலான இப்பணிக்கு 22–12–2003–ல் நகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 31–1–2004–ல் பணியேற்பு ஆணை வழங்கப்பட்டு, இப்பணிகள் அனைத்தும் 30–9–2004–ல் நகராட்சியால் முடிக்க உத்தேசிக்கப்பட்டது. தற்பொழுது கட்டுமானப் பணிகள் முடிந்து குழாய் மற்றும் வால்வுகள் பொருத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மீதமுள்ள இதரப் பணிகள் அனைத்தும் 15–4–2005–க்குள் நகராட்சியின் மூலம் முடிக்கப்பட்டு, 1–5–2005 முதல் மக்களின் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**74. கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்திநாயக்கன்பட்டி பவர் ஸ்டேஷன்–கொட்டுக்காரன்பட்டி தார்ச் சாலையைப் புதுப்பித்தல்**

**உறுப்பினர்: திரு. வே. கிருஷ்ணமூர்த்தி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**



2005 ஏப்ரல் 13]

அறிக்கை

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கேத்திநாயக்கன்பட்டி பவர் ஸ்டேஷன் முதல் கொட்டுக்காரன்பட்டி வரையிலான தார்ச் சாலை, 1990–1991 ஆம் ஆண்டின் பொது நிதியின்கீழ் தார்ச் சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இதன் நீளம் 2.00 கி.மீ ஆகும். இதனைப் புதுப்பிக்க வேண்டுமெனில் ரூ.8.00 இலட்சம் தேவைப்படும். 2003–2004 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த ஊரக சாலைப் பராமரிப்புத் திட்டம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளைப் பராமரித்தல் நடப்பு ஆண்டில் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு விட்டது. எனவே, மேற்படி சாலையினை நெடுஞ்சாலைத் துறை மூலம் எதிர்வரும் நிதியாண்டில் (2005–2006) முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**75. புதுக்கோட்டை ஒன்றியம், கள்ளுக்காரன்பட்டி–புதூர் பழுதடைந்த சாலையைத் தார்ச் சாலையாக்கல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

அறிக்கை

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கள்ளுக்காரன்பட்டி முதல் புதூர் சாலை வரை (1.320 கி.மீ.) மெட்டல் சாலையமைக்க ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் எஸ்.ஜி.ஆர்.ஓய். சிறப்பு மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வேலைக்கு 10–3–2005 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இச்சாலையின் முழு நீளம் 3.800 கி.மீ. ஆகும். இதனை முழுவதுமாக தார்ச் சாலையாக அமைத்திட ரூ.19.30 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**76. புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியம், மேட்டுச் சாலையில் பயணிகள் நிழற்குடை அமைத்தல்**

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

[2005 ஏப்ரல் 13

### அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், மேட்டுச் சாலையில் பொதுமக்கள் நலன் கருதி பயணிகள் நிழற்குடை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக அமைக்க வேண்டியுள்ளதால், ஊராட்சி ஒன்றிய தீர்மானம் பெற்று ஊராட்சி ஒன்றியத்தின் நிதி ஆதாரத்தின் அடிப்படையில் நிழற்குடை அமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 77. மதுரை மேற்குப் பகுதி, பாதாளச் சாக்கடைப் பணியினைத் துரிதப்படுத்துதல்

**உறுப்பினர்: திருமதி வளர்மதி ஜெபராஜ்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

### அறிக்கை

மதுரை மேற்கு தொகுதியில் மொத்தம் 231 தெருக்கள் உள்ளன. அவற்றில் ஏற்கெனவே 176 தெருக்களில் குழாய் பதிப்புப் பணிகள் முடிந்துவிட்டன. மீதமுள்ள 55 தெருக்களில் தற்சமயம் 8 தெருக்களில் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன. மிகவும் ஆழத்தில் குழாய் பதிப்புப் பணி நடந்து வருகிறது. பணி முடிந்த தெருக்கள் அனைத்தும் மதுரை மாநகராட்சியிடம் சாலை அமைப்புக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தெருக்களில் குழாய் பதிப்புப் பணி 30–9–2005–க்குள் முடிக்கப்பட்டு சாலை சீரமைப்பிற்காக மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்படும்.

## 78. புதுக்கோட்டை நகராட்சி, பேருந்து நிலையக் கழிவறை கட்டப்பட்டும் பயனுக்கு வராமை

**உறுப்பினர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் (செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்)**



V24;3:1 905 N05.53

2005 ஏப்ரல் 13]

### அறிக்கை

புதுக்கோட்டை நகராட்சி பேருந்து நிலையத்தில் 2001–2002 ஆம் ஆண்டு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பொதுக் கழிவறை கட்டப்பட்டு 2004, ஆகஸ்ட் முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 79. தமிழ்நாடு, பொங்கல் பண்டிகையின்போது நடைபெறும் ஜல்லிக்கட்டு விளையாட்டினால் உயிரிழப்புகளும் உடற்காயங்களும் ஏற்படுதல்

**உறுப்பினர்: திரு. கா. கந்தசாமி**

**அமைச்சர்: மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்)**

### அறிக்கை

ஜல்லிக்கட்டு எனும் வீர விளையாட்டு, பொங்கல் பண்டிகை மற்றும் திருவிழாக் காலங்களில் சில ஊர்களில் அவ்வூர் முக்கிய பிரமுகர்களின் ஒப்புதலுடன் நடத்தப்படும் ஓர் உள்ளூர் திருவிழா விளையாட்டாகும். இந்த உள்ளூர் திருவிழா விளையாட்டான ஜல்லிக்கட்டினை நடத்த சம்பந்தப்பட்ட காவல் துறையின் முன் அனுமதி பெற்று இவ்விளையாட்டு நடத்தப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையின்போது ஜல்லிக்கட்டு எனும் வீர விளையாட்டு சில ஊர்களில், குறிப்பாக மதுரை மாவட்டத்தில் உள்ள அலங்காநல்லூர் போன்ற ஊர்களில், முக்கிய பிரமுகர்களின் ஒப்புதலுடன் ஓர் உள்ளூர் திருவிழாவாக நடத்தப்படுகிறது. இவ்வுள்ளூர் விளையாட்டுப் போட்டி தமிழர்களின் பாரம்பரிய மற்றும் கலாச்சார வீர விளையாட்டாக பொங்கல் பண்டிகையின்போது நடத்தப்பட்டு வருகின்றது. இதில் விருப்பம் உள்ள ஆண்கள் மிக உற்சாகத்துடன் உயிரிழப்பு மற்றும் உடல் காயம் ஏற்படுவதைப் பொருட்படுத்தாமல் ஈடுபடுகின்றனர். இந்நிகழ்ச்சி நடைபெறும்போது உரிய பாதுகாப்பை காவல் துறை வழங்குகிறது. மேலும் காயமடைந்தவர்களுக்கு உரிய முதலுதவி சிகிச்சை அளிப்பதற்கு ஆம்புலன்ஸ் உடன் மருத்துவ உதவிக் குழுவும் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினரும் உட[illegible]பணியில் ஈடுபடுகின்றனர்.

பணக் 185281. சென்னை-600 009

அரசு மைய அச்சகம், சென்னை – 600 079.

**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Special Commissioner and Commissioner of
Stationery and Printing, Chennai-600 002.